2987

T. N. L. A. Debates
OFFICIAL REPORT

VOL: 43 No: 1 and 2

May 6th and 7. 1987

V211, 31 N87
N87·43·1-2
136532

வெளியீடு 2-5-1988

Issued 2-5-1988

2487

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, மே 6 1987- தொகுதி 43 எண் 1

**Wednesday, May 6 1987- Vol 43 No 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat Fort St. George,
Madras-600 009

விலை ரூ.3.00 காசுகள்]

[Price Rs-3.00 paise

N87.42.1

136532

600 008.

## உள்ளடக்கம்.

6–5–1987.

| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் Personnel of the Govt. of Tamil Nadu. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | iv–vii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் .. .. .. | viii–xv |
| 1. இரங்கல் குறிப்பு— | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு .. .. | 1–2 |
| 2. வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. | 2–37 |
| 3. அறிவிப்பு— | |
| பேரவை விதிகள் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம் | 38 |
| 4. தகவல் கோரல்— | |
| (அ) குறைந்த விலையில் பம்பு செட்டுகளைத் தருவதாக ஒரு நிறுவனம் வெளியிட்டுள்ள விளம்பரம் குறித்து .. .. .. | 38–39 |
| (ஆ) மதுரை மாவட்டம், குடகனார்பட்டியில் மின்சாரத்திற்குக் கூடுதல் சர்சார்ஜ் விதித்திருப்பது குறித்து .. .. | 39 |
| 5. கவன ஈர்ப்பு— | |
| (அ) கோவை மாவட்டம், நல்லூர் கிராமத்தில் தொழிலாளர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் .. | 40–42 |
| (ஆ) ''டாசல்'' நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்குதல் .. .. .. | 42–45 |
| (இ) தமிழகத்தில் கனிமங்களுக்கான சுரங்கக் குத்தகைகளைப் புதுப்பிக்காததால் பாதிப்பு. | 46–70 |
| (ஈ) குறிஞ்சிப்பாடி விவசாய விற்பனைக் கூடத்தில் போதுமான இடவசதியின்மை .. | 51–52 |

பக்கங்கள்

(உ) புகளூர் காகித ஆலைக்குப் பணியாளர்கள் நியமிக்கும் முறை .. .. .. 52–54

(ஊ) தூத்துக்குடி துறைமுகத்தை ஆழப்படுத்தும் பணியில் தாமதம் .. .. .. 54–58

(எ) பழவேற்காடு ஏரியில் மண் மூடிவிட்டதால் பாதிப்பு .. .. .. .. 58-59

(ஏ) முதியோர் உதவித் தொகை மற்றும் சலுகைகள் தாமதமின்றி வழங்கல். 59-63

(ஐ) காவிரியின் கடைமடைப் பகுதியில் சிமிண்ட் பலகைகள் சரிந்து வாய்க்காலில் விழுவதால் பாதிப்பு .. .. .. 63–66

(ஒ) நெல்லை மாவட்டம் வள்ளியூரிலுள்ள கொடுமுடியாறு நீர்த்தேக்கப் பணிகள் நிறுத்தம் 66–68

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரி விதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவு, 1987 .. .. .. .. .. 68

(ஆ) வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன் வடிவு, 1987 .. 68–77

7. வரவு-செலவுத் திட்டம், 1987–88, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி). 77–134

(அ) கோரிக்கை எண். 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும்.

(ஆ) கோரிக்கை எண். 33—வீட்டு வசதி.

(இ) கோரிக்கை எண். 34—நகர்ப் பகுதி வளர்ச்சி.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு .. 77,78,80,81

*திரு. ஆர். கோவிந்தசாமி .. .. .. 82–86

திரு. எல்ல. இராசமாணிக்கம் .. .. 86–90

*திரு. ஆ. நடராசன் .. .. .. 90–96

திரு. வே. குப்புசாமி .. .. .. 96–97

திரு. கு. ரமணி .. .. .. 97–106

*திருமதி பா. வளர்மதி .. .. .. 106–111

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் .. .. 111–116



பக்கங்கள்

*திரு. மா. சின்னராசு .. .. .. 117–122

திரு. கே. பாலாஜி .. .. .. 122–126

*திரு. பொ. உத்திராபதி .. .. 126–129

*திரு. ஜி. கே. ஜெ. பாரதி .. .. 129–134

8. அரசினர் தீர்மானம்— விதி 32-ஐத் தளர்த்தல் .. .. 134–135

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 135–136

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும். 2987

### ஆளுநர்—திரு. சுந்தரலால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் .. .. | மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன். |
| 2. நிதி அமைச்சர் .. .. | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். |
| 3. உணவு அமைச்சர் .. | மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். |
| 4. தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. க. இராசாராம். |
| 5. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம். |
| 6. கல்வி மற்றும் சட்ட அமைச்சர். | மாண்புமிகு திரு. சி. பொன்னையன். |
| 7. போக்குவரத்துத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. சு. முத்துசாமி. |
| 8. வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு. |
| 9. சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. வி. விசுவாமிநாதன். |
| 10. மதிய உணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன். |
| 11. வணிக வரித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. த. இராமசாமி. |
| 12. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எ. அருணாசலம். |
| 13. பொதுப் பணித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன். |

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU
## GOVERNOR—THIRU SUNDARLAL KHURANA
## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. The Chief Minist r | Hon. Dr. M.G. Ramachandran. |
| 2. The Minister for Finance | Hon. Dr. V. R. Nedunchezhian. |
| 3. The Minister for Food | Hon. Thiru S. Ramachandran. |
| 4. The Minister for Industries and Agriculture. | Hon. Thiru K. Rajaram. |
| 5. The Minister for Health | Hon. Thiru P. U. Shanmugam. |
| 6. The Minister for Education and Law. | Hon. Thiru C. Ponnaiyan. |
| 7. The Minister for Transport | Hon. Thiru S. Muthusamy. |
| 8. The Minister for Housing and Handlooms. | Hon. Thiru S. Thirunavukkarasu. |
| 9. The Minister for Tourism, Prohibition and Electricity. | Hon. Thiru V.V. Swaminathan. |
| 10. The Minister for Noon Meal, Social W fare and Khadi | Hon. Thiru R. Soundararajan. |
| 11. The Minister for Commercial Taxes. | Hon. Thiru T. Ramasamy. |
| 12. The Minister for Adi. Dravidar Welfare | Hon. Thiru A. Arunachalam. |
| 13. The Minister for Public Works. | Hon. Thiru K. K. S. S. R. Ramachandran. |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. மா. சின்னராசு

டாக்டர் கே. சமரசம்

திரு. கே. குப்புசாமி

திரு: செ. செம்மலை

திரு. டி. ஆர். வேங்கடரமணன்.

### செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி.

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

(அகர வரிசைப்படி).

| | |
|---|---|
| பள்ளிகொண்ட பெருமாள், திரு. பெ., பி.ஏ., பி.எல். | கூடுதல் செயலாளர். |
| பத்மநாப நம்பியார், திரு. பி. எம்., பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர். |
| சீனிவாசன், திரு.சா., பி.எஸ்ஸி. | முதுநிலை குழு அலுவலர். |
| சீதாராமன், திரு. வெ., பி.காம்., பி.ஜி.எல். | துணைச் செயலாளர். |
| டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்ஸி., பி.எல். | துணைச் செயலாளர். |
| ஜானகிராமன், திரு. செ. சு., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர். |
| சீனிவாசன், திரு. கு. அ., பி.ஏ. | குழு அலுவலர். |
| இராமச்சந்திரன் திரு. ஆர். கே., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| கனகசபாபதி, திரு. பெ. ச., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| கேசவராம், திரு., பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| தியாகராஜன், திரு. கே., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| பாலகிருஷ்ணன், திரு. ப., பி.காம். | சார்புச் செயலாளர். |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| ஜான், திரு. வ. சா., பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| ஜேக்கப் ஆர்தர், திரு. டி., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| ஜோசப், திரு. மா. கு., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ. | தலைமை நிருபர் (குழுக்கள்) |
| நம்பி ஐயங்கார், திரு. எஸ். .. | தலைமை நிருபர் (பேரவை). |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி).

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **அ** | |
| 1. அண்ணாதாசன், திரு.எம். .. | திருவரம்பூர் |
| 2. அப்துல் சமத் திரு. அ.கா.அ. .. | திருவல்லிக்கேணி |
| 3. அப்துல் மஜீத், திரு. எச். .. | வாணியம்பாடி |
| 4. அரங்கநாயகம், திரு. செ. .. | தொண்டாமுத்தூர் |
| 5. அரிக்குமார், திரு. இரா. .. | பெரணமல்லூர் |
| 6. அருணாசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ.) |
| 7. அருணாசலம், திரு. எ. .. | வரகூர் (செ.வ.) |
| 8. அன்பழகன், திரு. கே. .. | ஒப பூர் |
| 9. அன்பழகன், திரு. தி. .. | நாட்ராம்பள்ளி |
| 10. அன்பழகன், திரு. பொ. .. | இளையான்குடி |
| **ஆ** | |
| 11. ஆண்டி அம்பலம், திரு. மெ... | நத்தம் |
| 12. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி, திரு. .. | ஆண்டிமடம் |
| 13. ஆறுமுகம், திரு. அ. .. | வந்தவாசி |
| 14. ஆறுமுகம், திரு. எச். ஜி. .. | பென்னாகரம் |
| 15. ஆறுமுகம் , திரு. ஆர். எஸ். .. | ஒட்டபிடாரம் (செ.வ.) |
| 16. ஆறுமுகம், திரு. எ. எஸ். ஏ. .. | விருதுநகர் |
| 17. ஆறுமுகம், திரு. மு. .. | சேலம்-2. |
| 18. ஆனந்த கிருஷ்ணா, திரு.ஜி. .. | பூந்தமல்லி |
| 19. ஆனந்தன், திரு. மு. .. | உளுந்தூர்பேட்டை |
| **இ** | |
| 20. இரகுபதி, திரு. கோ. .. | காட்பாடி |
| 21. இரத்தினம், திரு. எம். வி. .. | பொள்ளாச்சி |
| 22. இரத்தினவேலு, திரு. செ. .. | முசிறி |
| 23. இராசமாணிக்கம், திரு. ஆர். .. | அரூர் (செ.வ.) |
| 24. இராசமாணிக்கம், திரு. எல்ல. .. | தாம்பரம் |
| 25. இராசரத்தினம், திரு. எப். எம். ... | கொளச்சல் |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | இ—தொடர்ச்சி | |
| 26. இராசரத்தினம், திரு. எம். | .. | விழுப்புரம். |
| 27. இராசாங்கம், திரு. மு. | .. | திருவிடைமருதூர். |
| 28. இராசாம்பாள், திருமதி நு. | .. | தலைவாசல்(செ.வ. |
| 29. இராசாராம், திரு. க. | .. | பனமரத்துப்பட்டி |
| 30. இராசாராமன், திரு. எஸ். | .. | பாபநாசம் |
| 31. இராசேந்திரன், திரு. எஸ். என். | .. | தூத்துக்குடி. |
| 32. இராமச்சந்திரன், டாக்டர், எம். ஜி. | .. | ஆண்டிப்பட்டி |
| 33. இராமச்சந்திரன், திரு. கே. எஸ். எம். | .. | போடிநாயக்கனூர் |
| 34. இராமச்சந்திரன், திரு. கே. கே எஸ். எஸ். ஆர். | .. | சாத்தூர் |
| 35. இராமச்சந்திரன், திரு. ச... | .. | பண்ருட்டி |
| 36. இராமச்சந்திரன், திரு. சோ. மா. | .. | அண்ணா நகர் |
| 37. இராமச்சந்திரன், திரு. ப. ந. | .. | பட்டுக்கோட்டை |
| 38. இராமசாமி, திரு. எஸ். என். | .. | சாத்தான்குளம் |
| 39. இராமசாமி, திரு. த. | .. | இராமநாதபுரம் |
| 40. இராமலிங்கம், டாக்டர், கே. பி. | .. | ராசிபுரம் |
| 41. இளங்கோவன், திரு. ஈ. வே. கி. ச. | .. | சத்தியமங்கலம் |
| | ஈ | |
| 42. ஈஸ்வரன், திரு. ஆர். | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| | உ | |
| 43. உச்சி, திரு. கே. | .. | கூடலூர் |
| 44. உத்திராபதி, திரு. பொ. | .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| | எ | |
| 45. எத்திராசன், திரு. கி. | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | க | |
| 46. கணபதி, திரு. கே. ஆர். | .. | சிதம்பரம் |
| 47. கதிர்வேலு, திரு. மா. | .. | ராணிப்பேட்டை |
| 48. கந்தசாமி, திரு. கா. வே. | .. | கிணத்துக்கடவு |
| 49. கந்தசாமி, திரு. பி. | .. | பொங்கலூர் |
| 50. கல்லன், திரு. கே. | .. | உதகமண்டலம் |
| 51. கலிதீர்த்தான், திரு. சோ. | .. | சங்கராபுரம் |
| 52. காளிமுத்து டாக்டர், கா. | .. | மதுரை கிழக்கு |
| 53. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | .. | ஆயிரம் விளக்கு |
| 54. கிருஷ்ணசாமி, திரு. வி. இரா. | | அணைக்கட்டு |
| 55. கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. | .. | கும்பகோணம் |
| 56. கிருஷ்ணராஜ், திரு. ஜி. | .. | சேலம்-1. |
| 57. குப்புசாமி, திரு. கே. | .. | ஒட்டன் சத்திரம் |
| 58. குப்புசாமி, திரு. வே. | .. | செய்யாறு |
| 59. குமரகுருபர ராமநாதன், திரு. | | விளாத்திகுளம் |
| 60. குமரி அனந்தன், திரு. | .. | ராதாபுரம் |
| 61. குமாரதாஸ் டாக்டர், தே. | .. | கிள்ளியூர் |
| 62. கோமதி சீனிவாசன், திருமதி | | வலங்கைமான் (செ.வ.) |
| 63. கோவிந்தசாமி, திரு. ஆர். | .. | குடியாத்தம் |
| 64. கோவிந்தசாமி, திரு. ச. | .. | எடப்பாடி |
| 65. கோவேந்தன், திரு. எம். ஆர். | | பேராவூரணி |
| | ச | |
| 66. சங்கரலிங்கம், திரு. ச. | .. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 67. சண்முகம், திரு. இரா. | .. | திருத்தணி |
| 68. சண்முகம், திரு. என். | .. | சோளிங்கர் |
| 69. சண்முகம், திரு. ப. உ. | .. | மேல்மலையனூர் |
| 70. சண்முகையா பாண்டியன், திரு:எம். | .. | ஆலங்குளம் |
| 71. சந்திரசேகரன், திரு. ஆ. | .. | சோழவந்தான் |
| 72. சந்திரசேகர், திரு. மு. | .. | முகையூர் |
| 73. சம்சுல் ஆலம், திரு. வி. எஸ். டி. | .. | பாளையங்கோட்டை |
| 74. சமரசம், டாக்டர் கே. | .. | காவேரிப்பட்டிணம் |
| 75. சரோஜா, திருமதி இரா. | .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 76. சாமிக்கண்ணு, திரு. தா. | .. | செங்கம் (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| (1) | (2) |

ச—தொடர்ச்சி

| | |
|---|---|
| 77. சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 78. சிந்தன், திரு. வி. பி. .. | வில்லிவாக்கம் |
| 79. சிவக்குமார், திரு. ஆர். .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 80. சிவக்குமார், திரு. எம். .. | கூனூர் (செ.வ.) |
| 81. சிவஞானம், திரு. ந. .. | திருவோணம் |
| 82. சிவப்பிரகாசம், திரு. சீ. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 83. சிவராமன், திரு. எஸ். .. | சின்னசேலம் |
| 84. சிவராஜ், திரு. சு. .. | ரிஷிவந்தியம் |
| 85. சின்னக்குழந்தை, திரு. மு. .. | ஆரணி |
| 86. சின்னசாமி, திரு. வே. கு. .. | பாவானிசாகர் |
| 87. சின்னசாமி, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி |
| 88. சின்னராசு, திரு. மா. .. | மேட்டுப்பாளையம் |
| 89. சுந்தரதாஸ், திரு. மா. .. | விளவன்கோடு |
| 90. சுப்பராயன், திரு. கே. .. | திருப்பூர் |
| 91. சுப்பிரமணிய ஆதித்தன், திரு. எஸ். ஆர். | திருச்செந்தூர் |
| 92. சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை |
| 93. சுப்பிரமணியன், திரு. வீ. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 94. சுப்புராயர், திரு. சி. .. | கம்பம் |
| 95. சுவாமிநாதன், திரு. வி. வி. .. | புவனகிரி |
| 96. செங்காளியப்பன், திரு. ஆர். | சிங்காநல்லூர் |
| 97. செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச் செட்டிப் பாளையம் |
| 98. செங்கோட்டையன், திரு. பெ. | கபிலர்மலை |
| 99. செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம் |
| 100. செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.) |
| 101. செல்லப்பா. திரு. வி. கோ. .. | கடலூர் |
| 102. சேகர், திரு. கே. பி. கே. .. | பொன்னேரி (செ.வ.) |
| 103. சொர்ணலிங்கம், திரு. கா. .. | திருவாடானை |
| 104. சோலைராசு, திரு. க. .. | மருங்காபுரி |
| 105. சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 106. சௌரிராஜன் டாக்டர் கே. .. | தியாகராயநகர். |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |

ஞ

| | |
|---|---|
| 107. ஞானசுந்தரம், திரு. சா. .. | மன்னார்குடி |

ட

| | |
|---|---|
| 108. டேனியல் ராஜ், திரு. எஸ். .. | ஸ்ரீவைகுண்டம் |

த

| | |
|---|---|
| 109. தங்கமணி, திரு. மு. .. | மாயூரம் |
| 110. தங்கமணி, திரு. கே. எம். .. | திண்டிவனம் |
| 111. தங்கராசு, திரு. ஏ. .. | குறிஞ்சிப்பாடி |
| 112. தங்கராசு, திரு. செ. .. | மங்களூர் (செ.வ.) |
| 113. தங்கவேல் ராஜ், திரு. பி.எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 114. தங்கவேலு, திரு. வி. .. | வால்பாறை (செ.வ.) |
| 115. தமிழ்மணி, திரு. .. | திருப்போரூர் (செ.வ.) |
| 116. தமிழரசன், திரு. கு. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 117. தனபால், திரு. ப. .. | சங்கரி (செ.வ.) |
| 118. தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 119. தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாசலம் |
| 120. திருஞானம், திரு. பி. ஆர். .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 121. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி |
| 122. திருமலைசாமிக் கவுண்டர், திரு. சு. .. | உடுமலைப்பேட்டை |
| 123. தீர்த்தகிரி கவுண்டர், திரு.டி. | மொரப்பூர் |
| 124. தீர்த்தராமன், திரு. ப. .. | பாலக்கோடு |
| 125. துரை அன்பரசன், திரு. .. | நெல்லிக்குப்பம் |
| 126. துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | தஞ்சாவூர் |
| 127. துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு |
| 128. துரைசாமி, திரு. சைதை சா. | சைதாப்பேட்டை |
| 129. துரைராசு, திரு. எஸ். பி. .. | காரைக்குடி |
| 130. துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில் |
| 131. தெய்வநாயகம், திரு. எ. .. | மதுரை சென்ட்ரல் |
| 132. தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ந** | |
| 133. நடராசன், திரு. ஆ. .. | பேரூர் |
| 134. நரசிம்ம பல்லவன், திரு. க. | உத்திரமேரூர். |
| 135. நரசிம்மன், திரு. பு. மு. .. | பள்ளிப்பட்டு |
| 136. நல்லமுத்து, டாக்டர் க. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 137. நல்லுசாமி, திரு. என். .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 138. நாச்சிமுத்து, திரு. கே. பி. .. | மேட்டூர் |
| 139. நாராயணன், திரு. பு. கோ. .. | பவானி |
| 140. நெடுஞ்செழியன், டாக்டர். .. இரா. | ஆத்தூர் |
| **ப** | |
| 141. பஞ்சவர்ணம், திரு. வி. எஸ். .. | அருப்புக்கோட்டை |
| 142. பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர் |
| 143. பரமசிவம், திரு. பா. ந. .. | பல்லடம் |
| 144. பழனி, திரு. த. .. | ஆற்காடு |
| 145. பழனிச்சாமி, திரு. கா. செ. .. | காங்கேயம் |
| 146. பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர் |
| 147. பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி |
| 148. பாண்டுரங்கன், திரு. மு. .. | அச்சரப்பாக்கம் |
| 149. பாப்பா சுப்பிரமணியன், திரு... | குத்தாலம் |
| 150. பாரதி, திரு. ஜி. கே. ஜெ. .. | திருவொற்றியூர் |
| 151. பாரமலை, திரு. க. .. | மானாமதுரை (செ.வ.) |
| 152. பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி |
| 153. பாலகிருஷ்ணன், திரு. வி. .. | சிவகாசி |
| 154. பாலச்சந்திரன், திரு. வை. .. | பத்மநாபபுரம் |
| 155. பாலசுப்பிரமணியன், திரு. க. .. | சீர்காழி (செ.வ.) |
| 156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 157. பாலசுப்பிரமணியன், திரு. .. வேடசந்தூர் வி. பி. | வேடசந்தூர் |
| 158. பாலாஜி, திரு. கே. .. | காஞ்சிபுரம் |
| 159. பாலுச்சாமி, திரு. ஏ. .. | பரமக்குடி (செ.வ.) |
| 160. பாலுச்சாமி, திரு. அ. .. | நிலக்கோட்டை (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ப—தொடர்ச்சி.** | |
| 161. பிரணவநாதன், திரு. ஆ. .. | கடலாடி |
| 162. பிரேம்குமார், திரு. ஆ. .. | திண்டுக்கல் |
| 163. புருசோத்தமன், திரு. எஸ். .. | அரியலூர் |
| 164. புஷ்பராசு, திரு. த. .. | திருமயம் |
| 165. பெரியசாமி, திரு. அ. .. | தாராபுரம் (செ.வ.) |
| 166. பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் |
| 167. பெருமாள், திரு. தெ. .. | கடையநல்லூர் |
| 168. பெருமாள் பிள்ளை, திரு. .. கோ. | கன்னியாகுமரி |
| 169. பொன் முத்துராமலிங்கம், திரு. | மதுரை (மேற்கு) |
| 170. பொன்னம்மாள், திருமதி .. ஏ. எஸ். | பழனி (செ.வ.) |
| 171. பொன்னுசாமி, டாக்டர், அ. | பெருந்துறை |
| 172. பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு |
| **ம** | |
| 173. மணவாளன், திரு. எஸ். பி. | திருப்பத்தூர் |
| 174. மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம், (செ.வ.) |
| 175. மலர் மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி-1 |
| 176. மனோகரன், திரு. கி. .. | புரசைவாக்கம். |
| 177. மனோகரன், திரு. தி. நா. கோ. அ. | திருநாவலூர் |
| 178. மாசிலாமணி, டாக்டர், ந. | ஜெயங்கொண்டான் |
| 179. மாதவன், திரு. செ. .. | திருப்பத்தூர் |
| 180. மாதையன், திரு. யு. பி. .. | அந்தியூர் (செ.வ.) |
| 181. மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.) |
| 182. மாரிமுத்து, திரு. மு. .. | திருப்பரங்குன்றம். |
| 183. மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம் |
| 184. முகம்மது கனி, திரு. ஜே. .. | புதுக்கோட்டை |
| 185. முகம்மது சலீம், டாக்டர் த. | பெரியகுளம் |
| 186. முசிறிபுத்தன், திரு. பி. .. | குளித்தலை |
| 187. முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு |
| 188. முத்துராமலிங்கம், திரு. பி. கே. எம். | உசிலம்பட்டி |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ம—தொடர்ச்சி.** | |
| 189. முத்துவேல், திரு. கே. .. | முதுகுளத்தூர் |
| 190. முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி |
| 191. முருகானந்தம், திரு. டி. என். | செஞ்சி |
| 192. முனிரத்தினம், திரு. இரா. சா. .. | கும்மிடிப்பூண்டி |
| **ய** | |
| 193. யசோதா, திருமதி டி. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| **ர** | |
| 194. ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம் |
| 195. ரமணி, திரு. கு. .. .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 196. ரவீந்திரன், திரு. ஏ. எஸ். .. | திருவண்ணாமலை |
| 197. ராமஜெயம், திரு. ம. நா. .. | வானூர் (செ.வ.) |
| 198. ராமன், திரு. கி. .. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 199. ராஜாபாபு, திரு. ஜெ. .. | போளூர் |
| 200. ரெங்கசாமி, திரு. ஆர். .. | கோவில்பட்டி |
| 201. ரெத்தினராஜ், திரு. எஸ். .. | நாகர்கோவில். |
| **ல** | |
| 202. லட்சுமி, திருமதி பி. .. | அவினாசி (செ.வ.) |
| **வ** | |
| 203. வடிவேல், திரு. கு. .. | கரூர் |
| 204. வளர்மதி, திருமதி பா. .. | மயிலாப்பூர் |
| 205. விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார். |
| 206. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி | வீரபாண்டி |
| 207. வீராணம்பலம், திரு. க. வே. | மேலூர் |
| 208. வீரய்யன், திரு. கோ. .. | நாகப்பட்டினம் |
| 209. வீரப்பன், திரு. ஆர். எம். .. | திருநெல்வேலி |
| 210. வீராசாமி, திரு. தா. .. | ஒரத்தநாடு |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **வ—தொடர்ச்சி.** | |
| 211. வெங்கடரெட்டி, திரு. டி. .. | ஒசூர் |
| 212. வெங்கடாசலம், திரு. அ. .. | ஆலங்குடி |
| 213. வெங்கடாசலம், திரு. கி. .. | லால்குடி |
| 214. வெங்கடாசலம், திரு. டி. எம். .. | பரகூர் |
| 215. வேங்கடரமணன், திரு. டி. ஆர். .. | தென்காசி |
| 216. வேணுகோபால், திரு. எஸ். | டாக்டர் ராதாகிருஷ்ண நகர். |
| 217. வேணுகோபால், திரு. கே. வி. .. | தல்லி |
| 218. வேலு, திரு. கூடலூர் இ. வி. .. | தண்டராம்பட்டு. |
| 219. ஜான் வின்சென்ட், திரு. மு. .. | நாங்குநேரி |
| 220. ஜெகதீசன், திரு. ஆனூர் பு. கோ. .. | செங்கல்பட்டு |
| 221. ஜெகதீசன், திரு. சு. .. | அரவக்குறிச்சி |
| 222. ஜெயச்சந்திரன், திரு. சா. .. | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 223. ஜெயராமன், திரு. வே. இரா. .. | தேனி |
| **ஹ** | |
| 224. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. | திருவட்டாறு |
| 225. பிரான்சிஸ், திரு. ஜி. கே. .. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி .. தலைமை வழக்கறிஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**1987, மே 6, புதன்கிழமை.**

**சித்திரை 23, பிரபவ திருவள்ளுவர் ஆண்டு 2018**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை''

இல்லறத்தில் வாழ்பவனாகச் சொல்லப்படுகின்றவன் அறத்தின் இயல்பை உடைய மூவர்க்கும் நல்வழியில் நிலைபெற்ற துணையாவான்.

## இரங்கல் குறிப்பு.

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஆர். சிதம்பரபாரதி அவர்கள் 30-4-1987ம் தேதியன்றும், அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. என். எஸ். வரதாச்சாரி 1-5-1987 ஆம் தேதியன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிதம்பரபாரதி அவர்கள் 1958 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரை அன்றைய இராமநாதபுரம் மாவட்டம் மானாமதுரை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. என். எஸ். வரதாச்சாரி அவர்கள் 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரையும் இருமுறை, சென்னை நகரம் தெற்கு பொது நகர்ப்புறத் தொகுதியிலிருந்து இருமுறை அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். திரு. இராஜாஜி அவர்கள்

[பேரவைத் தலைவர்] [1987 மே 6

அமைச்சரவையில் பேரவைச் செயலாளராகவும் (Parliamentary Secretary) சீரியமுறையில் பணியாற்றியுள்ளார். சென்னை மாநகராட்சி உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார், சுதந்திரப் போரில் ஈடுபட்டு மூன்று முறை சிறைத் தண்டனை பெற்றார்.

அன்னாரின் மறைவு குறித்து அவர்களை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும், இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்).

## 2. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிடாத வினாக்கள்.

### இலவச வீட்டு மனைப்பட்டாவிற்கு வருமான வரம்பு.

607(*வினா எண். 10058) திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இலவச வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்கான வருமான வரம்பு ரூ. 3,500 என்று இருப்பதை உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்கு ஆண்டு வருமான வரம்பு ரூ. 3,500 என்று இருப்பதை உயர்த்துவது குறித்து அரசு ஆய்வு செய்து மேற்படி வருமான வரம்பை உயர்த்தத் தேவையில்லை என்று முடிவெடுத்துள்ளது.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு ரூ. 3,500 என்று வரம்பு நிர்ணயிக்கப்பட்டு நீண்ட நாள் ஆகிறது. இப்பொழுது உயர்ந்திருக்கக்கூடிய விலைவாசியைக் கருதி, கடன் நிவாரணம் ... ரூ. 4,800 வரம்பாக நிர்ணயிக்கப் பட்டு ... வரை உள்ளவர்களுக்குக் கடன் நிவாரணம் வழங்க அரசு சட்டம் இயற்றியுள்ளது. அதை யொட்டி ... ரூ. 4,800 வரை ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு ... பட்டா வழங்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 5 நபர்களைக் கொண்ட குடும்பத்தினருக்கு மாதம் ரூ. 200 வரை இருந்தால் வழங்கலாம் என்று இருந்தது. 5 நபர்களுக்கு மேலே இருந்தால் ரூ. 250 வரையிலே இருந்தால் வழங்கலாம் என்று இருந்தது. ஏழைகளுக்குத்தான் இலவச வீட்டு மனைப்பட்டா வழங்க வேண்டுமென்பது நம்முடைய அரசினுடைய கொள்கை, அதுவும் வீடற்ற ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா ஒப்படை செய்வதுதான் அரசினுடைய கொள்கை. அந்தத் தன்மையினுடைய அடிப்படையிலே, (line of Poverty) ஏழ்மைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களுக்கு அளிக்க வேண்டுமென்ற தன்மையின் அடிப்படையில், இப்பொழுது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3,500 வருமானம் உள்ளவர் தான் வறுமைக்கோட்டுக்குக் கீழே வருகின்ற தன்மை இருக்கிறது 1984 ஆம் ஆண்டுதான் இந்த ரூ. 3,500 என்ற வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஏழ்மைக் கோட்டினுடைய வரம்பு, ஓரளவுக்கு உயர்த்தப்படுமானால், அப்பொழுது வேண்டுமானால் உயர்த்தலாமே தவிர, ஏழ்மைக் கோட்டினுடைய வரம்பினுடைய அடிப்படையை வைத்துத்தான் வீட்டுமனைப் பட்டா ஒதுக்குவதற்கும் நாம் வரம்பு கட்டியிருக்கிறோம்.

திரு. ப. நன். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீட்டுமனைப் பட்டாக்களைப் பெறுகின்ற ஏழை எளியவர்கள், பிறகு அந்த நிலச் சொந்தக்காரர்களிடமே விற்று விடுகிறார்கள். காரணம், அந்த நிலங்களுக்கு மையத்தில் 5 சென்ட், 3 சென்ட், என்று நிலங்களுக்குப் பட்டாக்களைக் கொடுக்கும்போது அந்த நிலச் சொந்தக்காரர்களிடம் நிலத்தைக் கொடுத்துவிட்டு பணம் பெற்றுக் கொண்டு திரும்பவும் பட்டா சேருகிறார்கள், அந்த நிலச் சொந்தக்காரர்கள் திரும்பவும் அந்த நிலத்தைப் பெறாத வகையிலும், பட்டா கொடுக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் நிலப்பட்டா வழங்கப்படாத வகையிலும் வீட்டு மனைப்பட்டா சம்பந்தமான சட்டம் திருத்தி அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும்போதே 10 ஆண்டு காலத்திற்கு அதை யாருக்கும் விற்கக் கூடாது என்ற அடிப்படையிலே தான் வழங்குகிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று அதை விற்கிறார்கள் என்றால் முறைப்படி விற்கிறார்கள் என்பது அல்ல, பினாமி என்ற முறையிலே அவர்களுடைய பெயரிலே அது இருக்கும். அவர்கள் அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள் என்ற அளவில் தான் இருக்கும். 10 ஆண்டு காலத்திற்கு விற்கக் கூடாது என்று இருக்கிறது. காரணம் பட்டாக்களைப் பெற்றவர்கள் அவற்றை விற்றுவிட்டு மறுபடியும் பழைய நிலைக்குப் போகக்கூடாது என்பதுதான் அரசினுடைய நோக்கம்,

[1987 மே 8

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு அவர்களே, 1971ஆம் ஆண்டிற்குப் பிறகு பேரவைத் தலைவர் பட்டா கொடுப்பதிலே மறு சட்டம் குடியிருப்பு மனைப் தினாலே 1971ஆம் ஆண்டுக்குப் கொண்டுவராத காரணத் களுக்கு குடியிருப்பு மனை கிடைக்க பின்னாலே ஏழை எளியவா் கிறது. 1971ஆம் ஆண்டுக்குப் பிறகு வாய்ப்பு இல்லாமல் இருக் வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? மறு சட்டம் கொண்டு வரு ணத்தினாலே பல இடங்களிலே பட்டா கிடைக்காத கார வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். புறம்போக்கு இடங்களிலே புறங்களிலே உள்ள ஏழை எளியவர்களுக்கு எனவே கிராமப் அரசே வீட்டுமனைகளை வழங்குவதற்கு குடியிருப்பதற்கு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கேள்வி ஏழை எளியவர் களுக்கு வீட்டு மனைகள் ஒதுக்குவது பற்றியதுதான. பட்டா வழங்குவதைப் பற்றியதல்ல. பட்டா வழங்குவதைப் பற்றிய தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம். வீட்டு மனை கள் வழங்குவதற்கான சட்ட திட்டங்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அதற்கு 7, 8 முறைகளை வைத்திருக்கிறோம். யாருக்கு பிரி பரலெஸ், முன்னுரிமை தரவேண்டுமென்று எல்லாம் இருக்கிறது. அந்த அடிப்படையில் வழங்கி வருகிறோம்.

திரு. ரா. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு மனைகள் கொடுப்பதிலே குறிப்பாக தஞ்சை போன்ற மாவட்டங்களிலே நஞ்சை நிலம் அதிகமாக இருக்கிறது. கோர்ட்டிற்குப் போய் தடை வாங்கிவிடுகிறார்கள். அதனால் பெரும்பான்மையான விவசாயத் தொழிலாளர்களுக்கு மனை கிடைப்பதில்லை. அதனால் அரசாங்கக் கடன்கள், மற்றச் சலுகைகள் பெற முடியவில்லை. பட்டா இருந்தால்தான் அவை எல்லாம் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு மனைகள் வழங்கப்படுகிற போதும் பட்டாக்கள் கொடுக்கிற போதும் தடையாணை வாங்குவதன் மூலம் அவர்கள் பாதிக்கப் படாத அளவுக்கு சட்டதிருத்தம் செய்து பாதுகாப்பு அளிக்கப் படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவருக்குப் பட்டா வழங்கு வது என்றால் நிலத்தினுடைய உரிமையை வழங்குகிறோம் என் பதுதான் பொருள். பட்டா வழங்கியதற்குப் பிறகு கடன் முத லியவைகள் பெறுவதற்கு அவர்கள் உரிமை பெற்றிருக்கிறார் கள். தடையாணை யார் எப்படிப் பெறமுடியும் என்று புரிய வில்லை. அதிலே ஏதாவது சிக்கல்கள் இருக்குமானால் தனியாக அதைப்பற்றி ஆராயலாம்.

திரு.தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுக் காலமாக தொடர்ந்து குடியிருந்து வருகிறவர்களுக்கு வீட்டுமனை வருமான வரம்பு பாராமல் இலவசமாக வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?



1987 மே 6]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஏழை எளியவர்களுக்குத்தான் கொடுக்கவேண்டும். ஆகவே அதிலே வருமான வரம்பு பார்க்கத் தான் வேண்டும். வருமான வரம்பு பார்த்தால் தான் ஒருவர் ஏழை என்பதை அறிய முடியும். மக்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது. நிலத்தினுடைய அளவும் குறுகிக்கொண்டே போகிறது. நிலத்தினுடைய மதிப்பும் ஏறிக் கொண்டே போகிறது. இதையெல்லாம் கணக்கில் எடுத்து, இருக்கிற நிலத்தை உரியவர்களுக்கு, தேவையானவர்களுக்கு வழங்குகிற அவசியம் வருகிறபோது அவர்களுடைய வருமானம், குடும்பத்திலே இருக்கிறவர்களுடைய வருமானம் ஆகியவற்றை யெல்லாம் ஆராய்ந்து பார்த்து உள்ளபடியே ஏழைஎளியவர்கள் தானா என்று பார்த்து வழங்கவேண்டும். அந்த அடிப்படையில் தான் இந்த விதிமுறைகளையெல்லாம் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்படுகிறது.

## சேலம் இரும்பு ஆலைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்தல்.

608—(*வினா எண். 10202) திரு. ச. கோவிந்தசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சேலம் இரும்பு ஆலைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப் பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடு கட்ட நிலம் ஒதுக்கப்பட்டு நீண்ட காலமாகியும் சுமார் 80 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்காமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : சேலம் இரும்பு ஆலைத் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைத்திற்கும் வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டு விட்டன.

திரு. ச. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்டவர்களுக்கு வீட்டுமனை வழங்கப் பட்டிருந்தாலும் அந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு எல்லாம் திருமணமாகி சில கடந்த ஆண்டுகளாக தனியாக அவர்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். எனவே அவர்களுக்கு காலியாக இருக்கிற அந்த நிலங்களை ஏன் பட்டா போட்டுக் கொடுக்கக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

[1987 மே 6

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அந்த சேலம் இரும்பு உருக்காலைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்தபொழுது, அங்கேயிருந்த குடும்பங்களை வேறிடங்களுக்கு அகற்றும்பொழுது, அவர்களுக்கு வேறு பட்டா நிலம் தர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் நிலப்பட்டா வழங்கப்பட்டு விட்டது. ஆனால், வீட்டிலே இருப்பவர்களுக்கு வயதாகி, திருமணமாகி, அவர்கள் தனியாகப் போய் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பட்டா வழங்க வேண்டுமென்று கோருவது நியாயம் ஆகாது, அப்படியே வாரிசுதாரர்களுக்கு எல்லாம் பட்டா வழங்கிக் கொண்டே போக வேண்டுமென்று சொல்வது சரியாகாது, ஆனால் அப்படிப்பட்டவர்கள் ஏழைகளாக இருந்து உள்ளபடியே மனைப்பட்டா பெறுவதற்குரிய உரிமைதாரர்களாக இருந்து அந்த வகையிலே வந்தால் நிலம் ஆர்ஜிதம் செய்ததால் பாதிக்கப்பட்டார்கள்; ஆகவே, பட்டா வேண்டும், நிலம் வழங்க வேண்டுமென்று ஒரு தடவை அந்தக் குடும்பத்தினருக்குத் தரலாமே தவிர, அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேரும் பிரிந்து பிரிந்து செல்லும்போது, பட்டா வழங்குவது என்பது இயலாது. இருந்தாலும், ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அது பற்றி விசாரணை நடந்து வருகிறது. மனைப்பட்டா பெறுவதற்குரிய தகுதி இருந்தால் அவர்களுக்கு வழங்கலாம். அவர்களுக்குத் தகுதி இல்லையென்றால் வழங்குவதற்கு இயலாது.

**திரு. த. புஷ்பராசு;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் குறிப்பாக, ஆதி திராவிட மக்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள், 10 ஆண்டுகள், 20 ஆண்டுகள், 50 ஆண்டுகள் கூட ஒரே இடத்தில் வீடு கட்டி வசித்தும் அவர்களுக்கு இன்னும் வீட்டு மனைப்பட்டா கொடுக்கப்படவில்லை, பல காரணங்களைச் சொல்லி அதைத் தள்ளி வருகிறார்கள். ஆகவே அரசாங்கம் ஒரு முடிவெடுத்து, குறிப்பிட்ட ஆண்டு வரை குடியிருந்தவர்கள் அனைவருக்கும் வீட்டுமனைப்பட்டா வழங்க வேண்டுமென்ற ஒரு உத்தரவைப் பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,, அப்படி ஒட்டுமொத்தமாக ஒரு உத்தரவிட இயலாது, நத்தம் புறம்போக்காக இருந்து, வேறு எந்த வகையிலும் பயன்படுத்த இயலாது என்று இருந்தால், அவர்கள் சொல்கிறபடி அந்த இலவச வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்கு என்று பட்டியல் வைத்திருக்கிறோமே, அந்தப் பட்டியல் முன்னுரிமைப்படி வருவார்களானால் அப்படிப்பட்டவர்களுக்கு நாம் தரலாம். குறிப்பாக, ஓடைப்புறம்போக்கு குளத்துப் புறம்போக்கு, சாலைப் புறம்போக்கு, ஏரிப் புறம் ஆகியவற்றில் போக்கு 50 ஆண்டுகளாக இருந்தாலும் சரி, 100





ஆண்டுகளாக இருந்தாலும் சரி, ஆக்கிரமிப்பார்களானால் அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் பட்டா வழங்க வேண்டுமென்ற முடிவு எடுத்தால் அதனால் பாதிக்கப்படுவர்கள் பொது மக்களாகவும் ஊர் மக்களாகவும் தான் இருப்பார்கள். ஆகவேதான் அதிலே நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டியிருக்கிற .

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலைக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டபொழுது எதிர்காலத்தில் அந்த நிறுவனத்திற்கு மேலும் இடம் வேண்டுமென்று சொல்லி, அதை ஒட்டியுள்ள கிட்டத்தட்ட 0 கிராமங்களை banned area என்று அறிவித்து, அந்தக் கிராமங்களிலே நிலப் பட்டாக்கள் மட்டுமல்ல, வீட்டு மனைப் பட்டாக்கள் கூட இதுவரையில் வழங்கப்படாமல் இருந்து வருகிறது. அரசினுடைய இலவச வீடுகள் கட்டும் திட்டத்தில் ஆதி திராவிடர்களுக்கு கூட அங்கு வீடுகள் கட்ட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. சென்ற ஆண்டு இதே மன்றத்தில் மாண்புமிகு நிதி அமைச்சருடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வந்த நேரத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, சேலம் ஸ்டீல் அத்தாரிடிக்குச் சொல்லி, அந்தத் தடை ஆணையை நீக்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யலாம் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். எனவே, அப்படிப்பட்ட நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி எடுக்கவில்லையென்றால், உடனடியாக அந்த 10 கிராமங்களுக்கும்— இனிமேல் சேலம் உருக்காலை நிறுவனத்திற்கு நிலம் தேவைப்படாத சூழ்நிலையில்—உள்ள தடையாணையை நீக்கி, அந்த 10 கிராமங்களில் வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்குண்டான ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் தான் அதுபற்றி விரிவான விளக்கங்களை நான் சொல்ல முடியும். ஆனாலுங்கூட சேலம் உருக்காலை உருக்காலையாக இருக்க வேண்டுமென்று எல்லா தரப்பினரும் வற்புறுத்தி வருகிறோம். அது இப்பொழுது உருக்காலையாக இல்லாமல் உருட்டாலையாகத் தான் இருக்கிறது. ஆக, உருட்டாலை உருக்காலையாக மாறுகின்றபொழுது, அதனுடைய பரப்பளவு விஸ்தரிக்கப்படுகின்ற பொழுது இடர்ப்பாடு ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் திட்டவட்டமாக, எதிர் காலத்திலே அதை விரிவாக்கம் செய்கின்ற பொழுதும் இருக்கின்ற இடம் தங்களுக்குப் போதும் என்று தொழிற்சாலையிலே சொல்லி விடுவார்களானால், வரையறுத்த இடங்களுக்கு அப்பாற்பட்ட இடங்களை மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று, பட்டா வழங்குவதற்கு இருக்கின்ற தடையினை நீக்கி, பட்டா வழங்கலாம். மற்றவற்றை நாம் செய்யலாம். அதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கின்ற நிலை வருகின்றபொழுது நாம் உருக்காலை

யாகத்தான் மாற்றவேண்டும். அதற்காகத்தான் அடிக்கல் நாட்டப்பட்டது. துவக்கப்பட்டது; அடிக்கல்லிலே அதை உருக்காலையாகத்தான் வைத்திருக்கிறார்கள்.

அது உருக்கு ஆலையாக வரவேண்டும் என்பதைப்பற்றி இன்னும் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். எல்லா தரப்பினரும் வற்புறுத்தி வருகிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட அடிக்கடி வற்புறுத்தி வருகிறார்கள். இதை எல்லாம் திட்டவட்டமாக தெளிவாக இந்த திட்டத்தினுடைய அடிப்படையில் நாம் முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருப்பதன் காரணமாக, இவ்வளவு இடம் போதும் என்று ஒரு முடிவுக்கு வந்துவிடுவார்களேயானால் எஞ்சிய பகுதியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் தடையை நீக்கிவிட்டு அவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு முயற்சி எடுக்கலாம்.

திரு. ச. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சேலம் உருக்கு ஆலை திட்டத்தால் பாதிக்கப்பட்ட அந்த குடும்பங்களுக்கு நிலம் வழங்குவதில் தகுதியானவர்கள் தானா என்ற அடிப்படையில் பரிசீலனைச் செய்து வழங்கலாம் என்றும் அதற்கான ஆய்வு நடைபெறுகிறது என்றும் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். நீண்ட காலமாக 1983-லிருந்து இந்த கோரிக்கை இருந்து வருகிறது. எனவே, அதை விரைவாக முடிக்க அரசு ஆவன செய்யுமா I என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்கு ஆலை திட்டத்திற்கு நிலம் ஆர்ஜிதம் செய்ததில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 3,002. இவற்றில் புனர் வாழ்வு திட்டத்தின் கீழ் வீட்டு மனை பெற தகுதி உடைய குடும்பங்கள் 2,375. ஆனால் மேற்கண்ட நபர்களுக்கு சேலம் மாவட்டத்தில் எட்டமுட்டாம்பட்டி, திருமலைகிரி மற்றும் எடங்காயாலை ஆகிய கிராமங்களில் ஏற்படுத்தப்பட்ட 3,160 வீட்டு மனைகளில் இதுவரை 2,528 நபர்களுக்கு நாளது வரை வீட்டு மனை பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நிர்ணயித்தது 2,325 ஆக இருந்தாலும் 2,528 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. மிகுதியுள்ள 632 வீட்டு மனைகள்-உப தொழிலுக்கு நிலம் எடுத்ததில் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு என்று வீட்டு மனை பட்டா ஒதுக்கப்படுவதற்காக வைக்கப்பட்டிருக்கிறது. அதைத் தவிர அந்த இடங்களில் தான்ஆக்கிரமித்து இருக்கிறார்கள். உருக்கு ஆலைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்ததால் பாதிக்கப்பட்டவர்களா என்று அதில் ஆக்கிரமித்துள்ளவர்களைக் கேட்டால் உண்மையான விவரங்களைத் தர மறுக்கிறார்கள் |சிலபேர். அதிலே சிலபேர் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் ஏற்கனவே பாதிக்கப்பட்டு பட்டா வழங்கப்பட்டவர்கள் திருமணம் செய்து கொண்டு தனியாக பிரிந்து வாழ்கிறவர்கள் இருக்கிறார்கள், அப்படி 88 நபர்கள் மட்டும் பட்டா கேட்டிருக்கிறார்கள்: அவர்களைப் பொறுத்து தான் இந்த விசாரணையும், மற்றவைகளும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.



தகுதியுள்ள நபர்கள் என்ற நிலைமை ஏற்படுமானால் அதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை வந்த பிறகு தக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் இரும்பு ஆலைக்குச் சொந்தமான இடத்தில் விமான தளம் அமைக்கின்ற செயற் குறிப்பு இருக்கிறதா? அப்படி இருந்தால் எத்தனை ஏக்கரா நிலம் அந்த இடத்தில் ஒதுக்கீடு செய்வதற்கு முயற்சிஎடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான குறிப்பு இருக்கிறது. ஆனால் விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போடவேண்டும். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்தான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும். ஆனால் அங்கே ஒரு விமான தளம் அமைப்பதற்கான முயற்சி நடைபெறுகிறது. எந்த இடம், எவ்வளவு ஏக்கர், எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் பற்றி தனியாகச் சொல்லலாம்.

## தமிழ்நாட்டில் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்.

609—(*வினா எண். 12334) திரு. க. பாரமலை: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவு சங்கங்கள் மொத்தம் எத்தனை பதிவு செய்யப்பட்டுள்ளன?

(ஆ) அவற்றில் செயல்படுபவை எத்தனை ?

(இ) தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவு சங்கம் மறு ஒப்பந்தம் (Sub-Contract) கொடுப்பது சம்பந்தமாக புகார் ஏதும் அரசிற்கு வந்துள்ளதா ?

(ஈ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 216, (ஆ) 130, (இ) ஆம்.

(ஈ) 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 65-ன்கீழ் விசாரணைக்கு ஆணையிடப்பட்டு, விசாரணை அறிக்கை பெறப்பட்டு ஒபலூர் சரக துணைப் பதிவாளரின் பரிசீலனையில் உள்ளது.

[1987 மே 6

610—(*வினா எண் 12507)—திரு. சா. ஜெயச்சந்திரன்:
மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்
பாரா—

தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவு சங்கம் தற்போது டெண்டர்
இல்லாமல் ரூபாய் 25 ஆயிரம் வரை வேலை செய்ய அனுமதி
அளித்துள்ளதை 50 ஆயிரமாக உயர்த்த அரசு நடவடிக்கை
எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசின் பரிசீலனையில்
உள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம் சைதாப்பேட்டை தாலுக்காவை பிரித்தல்.

611—(*வினா எண் 12479) திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா:
மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை தாலுக்
காவை பிரிந்து, ரெட்ஹில்ஸ்-ஐ தலைமையிடமாகக் கொண்ட
ஒரு வட்டம், தாம்பரத்தை தலைமையிடமாகக் கொண்ட
வட்டம் அமைக்க திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சைதாப்பேட்டை தாலுக்கா இன்றைக்கு 10
பேரூராட்சி மன்றங்களும், 4 முனிசிபாலிட்டிகளும், 4 முனிசிபல்
டவுன்ஷிப்புகளும்,3 பஞ்சாயத்துக்களும், ஒரு கண்டோன்மெண்டும்
அடங்கிய ஒரு பெரிய பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதிக்கு
இன்றைக்கு இருக்கின்ற தலைமையிடம் சென்னையில் இருக்கி
றது. அந்த அலுவலகத்தில் உட்கார கூட இடம் இல்லை.
நெரிசலாக இருக்கிறது. ஆகவே, அங்கே அதிகமான
வேலை இருந்தும் ஒரு வேலையும் நடப்பது இல்லை.



1987 மே 6]

(முற்பகல் 10-20)

இன்றைக்கு பெரும் பகுதி, சென்னை நகரத்தோடு சேர்ந்து
விட்டதால், அந்தத் தாலுக்காவைப் பிரித்து, இரண்டு தாலுக்கா
காக்களை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் மக்கள் மத்தியில்
இருக்கிறது. எனவே இனிமேலாவது அந்தத் தாலுக்காவை
இரண்டாகப் பிரித்து, இரண்டு தாலுக்காக்களாக ஆக்குவதற்கு
அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
அவைத்தலைவர் அவர்களே வருவாய்த்துறை மானியக்கோரிக்கை
வந்தபோது, நான் பதிலுரை கூறுகின்ற போது கிட்டத்தட்ட 8
வட்டங்களைப் பிரிப்பதற்கான ஒரு முன்னுரிமை அரசினுடைய
பரிசீலனையில் இருந்து வருகிறது, என்று குறிப்பிட்டேன்.
அதிலே சைதையை இரண்டாகப் பிரிக்கின்ற செயற்குறிப்பு
இல்லை என்று நான் குறிப்பிட்டேன். ஆனால் சைதாப்
பேட்டை பெரிய வட்டமாக இருப்பதன் காரணமாகவும், அதை
இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று கோரிக்கையை சிலர் தந்
திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை பற்றிய முழு விவரங்களை
யும் ஆராயும் படியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் அது
பற்றிய முழு விவரக் குறிப்புகள் வந்து சேரவில்லை.

திரு. எல்ல. இராமமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த சைதை வட்டம்
சுமார் 20 இலட்சம் மக்கள் வாழக்கூடிய ஒரு பகுதியாக, புற
நகர்ப் பகுதியாக இருப்பதால் இந்தத் தாலுக்காவை இரண்டாகப்
பிரித்து, தாம்பரத்திலே ஒரு அலுவலகமும், ரெட்ஹில்சிலே ஒரு
அலுவலகமும் அமைக்கஅரசு தீவிரமாக பரிசீலிக்குமா என அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
அவைத் தலைவர் அவர்களை, அதைத்தான் முதலிலே நான்
குறிப்பிட்டேன். அது பற்றிய செயற்குறிப்புகள் வந்து,
முதலிலே இரண்டாகப் பிரிக்க நாம் ஒத்துக் கொள்ள வேண்டும்.
இப்போது சைதாப்பேட்டை சென்னை மாநகரத்திற்குள்ளேஇருக்
கிறது. ஆனால் சைதாப்பேட்டை வட்டம் சென்னை மாநகரத்
திற்கு அப்பால் இருக்கிறது. ஆக இரண்டாகப் பிரிக்கும் போது
தான் தலைநகர் செங்கற்பட்டு மாவட்டத்திற்குள்ளோ, அந்த
வட்டத்திற்குள்ளோ அடங்க வேண்டுமென்ற விருப்பமும்,
உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் வரும். முதலிலே இரண்
டாகப் பிரிக்கின்ற செயற்குறிப்பு வந்ததற்குப் பிறகு, மைய
இடமாகப் பார்த்து, வசதி வாய்ப்புகள் ஒரு வட்டத்தினுடைய
தலைநகருக்கு அமைப்பான தகுதி ஆகியவற்றை எல்லாம் கண
கிட்டுப் பார்த்து, சில இடங்கள் தேர்ந்தெடுக்கப்படும். ஆகவே
கோரிக்கைககள் வந்திருக்கின்றன. அவை ஆராயப்பட்டு வரு
கின்றன. அதற்குப் பிறகு செயற்குறிப்புகள் போடப்பட்டு,
அவை பற்றி ஆராய வேண்டும்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைர் அவர்களே, சைதை வட்டத்தை இரண்டாகப் பிரிக்கின்ற ஆய்வுக் குறிப்பு இல்லை என்று அமைச்சர் பெருமகனார் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்று சைதை வட்டம் என்பது மிகப் பெரிய வட்டம். அதற்கு அருகிலே உள்ள திருவொற்றியூர் நகராட்சி அதிலே அடங்கியிருக்கிறது. அம்பத்தூர் நகரியமும் உள்ளே அடங்கியிருக்கிறது. ஆலந்தூர் நகராட்சியும் இருக்கிறது. இவை எல்லாவற்றையும் சென்னையோடு சேர்த்து விட்டால், அந்த சைதை வட்டத்தினுடைய மிகப் பெரும் வளர்ச்சி பரப்பு சரியாகிவிடும் என்று எண்ணுகின்றேன். ஆகையால் சென்னையோடு சேர்க்கின்ற திட்டத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரதி அவர்கள் ஒரு புதிய கரடியைக் கிளப்பியிருக்கிறார்கள். ஆக சைதை வட்டம் பெரிய வட்டம் என்று இரண்டு உறுப்பினர்கள் வாதிட்டார்கள். அது பெரிய வட்டமல்ல என்ற அளவிற்கு இந்த நகராட்சிகளை எல்லாம் பிரித்து சென்னையோடு சேர்த்து விட்டால் அது சிறிய வட்டமாகிவிடும். அதற்குப் பிறகு அதை இரண்டாகப் பிரிக்க வேண்டிய அவசியமே ஏற்படாது. ஆகவே இந்த மூன்றையும் சேர்த்து வைத்து ஆராயலாம்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாம்பலம் கிண்டி தாசில்தார் அலுவலகம் என்று அழைக்கப்படுவதை மாம்பலம்-சைதாப்பேட்டை அலுவலகம் என்று மாற்றியமைக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பெயரில் ஒன்றுமில்லை, ஆனால் இங்கே அதற்கான திட்டவட்டமான, தெளிவான முயற்சிகள் ஏற்பட்டதற்குப் பிறகு, தக்க பெயர்களைப் பின்னால் வைத்துக் கொள்ளலாம்.

### குமரி மாவட்டத்தில் 1983, 1984 மற்றும் 1985 ஆகிய ஆண்டுகளில் கட்டிய மீனவர் குடியிருப்புகள்.

612—*வினா எண். 10003) டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் 1983, 1984, 1985 ஆம் ஆண்டுகளில் எந்த எந்த மீனவர் கிராமங்களுக்கு மீனவர்களுக்கான குடியிருப்புகள் எவ்வளவு கட்டப்பட்டுள்ளன.



(ஆ) கட்டப்பட்டுள்ள எல்லா குடியிருப்புகளுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 1983–84 ஆம் ஆண்டில் மட்டிலும் ஆரோக்கியபுரம் கிராமத்தில் 150 வீடுகள் வாணிக்குடியில் 29 வீடுகளும் மீனவர்களுக்கு கட்டி வழங்கப்பட்டுள்ளது. 1984–85, மற்றும் 1985–86–ல் வீடுகள் கட்ட அனுமதி வழங்கவில்லை.

(ஆ) புதிய திட்டத்தின் கீழ் கடல் மீனவர்களுக்கு 248 சதுர அடி பரப்புள்ள வீடுகள் இனாமாக கட்டிக் கொடுக்கப்படுகின்றன. எனவே இந்த வீடுகளுக்காக மீனவர்கள் கிரயம் செலுத்தவில்லை. இத்திட்டத்தின் கீழ் மின் வசதி தேவைப்படின் அவர்கள் சொந்த செலவில் மின் இணைப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

டாக்டர் தே. குமாரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் குடும்பங்கள் எத்தனை? அவர்களில் எத்தனை பேர்களுக்கு வீட்டு வசதி அமைத்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் எவ்வளவு மீனவர் குடும்பங்கள் இருக்கின்றன என்பதற்கு என்னிடம் புள்ளிவிவரம் கிடையாது. ஆனால் கன்னியாகுமரியைப் பொறுத்தவரையில் 1975–76-லிருந்து 1,558 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன.

திரு. எப். எம். இராசரத்தினம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு குமரி மாவட்டத்திற்கு கடலோரத்தில் வாழ்கின்ற மீனவர்களுக்கு குடியிருப்பு கட்டுவதற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது? மேலும் இயற்கையினுடைய சீற்றத்தால், கடல் அரிப்பால், புயலால், அடிக்கடி பாதிக்கப்படுவது கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக் கூடிய மீனவர்களும் கடலோர குடிசைகளும் தான். எனவே இவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்கின்ற உத்தேசம் ஏதேனும் உண்டா? மேலும் 3 ஆண்டுகளுக்கு முன்பு என்னுடைய தொகுதியில் வாணியக்குடி என்ற பகுதியில் 100 வீடுகள் தீயினால் சேதம் அடைந்தன. அதில் 29 வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டிருக்கின்றன. மீதி 71 வீடுகள் கட்டி கொடுக்கப்பட வேண்டியிருக்கின்றன. அதே போல மூன்று மாத காலத்திற்கு முன்னால் ராஜாக்க மங்கலத் துறை என்ற மீனவர்கள் பகுதியில், 29 வீடுகள் தீயினால் சேதம் அடைந்தன. அவற்றை இந்த ஆண்டில் கட்டிக் கொடுக்கின்ற உத்தேசம் உண்டா?

[1987 மே 6

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஒட்டு மொத்தமாக தன்னுடைய தொகுதியைப் பற்றிய கேள்வி களை கேட்டிருக்கிறார். தனியாக கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

டாக்டர் தெ. குமாரதாஸ் : தலைவர் அவர்களே, கன்னியா குமரி மாவட்டத்தில் வீடு இல்லாத மீனவர்களுடைய கணக்கை எடுத்து, ஒரு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயித்து, அந்த நிர்ண யிக்கப்பட்ட காலத்திற்குள்ளாக அந்தப் பகுதியில் உள்ள மீனவர் களுக்கு வீடுகளைக் கட்டித் தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மீனவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரை முழுவதும் இருக்கிறார்கள். உள்நாட்டிலும் இருக்கிறார்கள். நிதி ஆதாரத்தை பொறுத்துத்தான் ஆங்காங்கு வீடுகள் கட்டிக் கொடுக் கப்படும்.

திரு. வை. பாலச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு கன்னியாகுமரியில் நடைபெற்ற சில வேதனையான சம்பவங்களை முன்னிட்டு, நீதிபதி வேணுகோபால் கமிஷன் நியமிக்கப்பட்டு, அது பரிந்துரைகள் கொடுத்திருக்கிறது. அதிலே 29 ஆவது பரிந்துரையாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர் கள் கடலோரப் பகுதியில் மட்டும் தனித்து வாழ்வதை தவிர்த்து எல்லோரும் உள்ளூரில் சேர்ந்து வாழ்வதற்கான ஏற்பாடுகள் செய்து ஒருமைப்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லி யிருக்கிறார்கள். புதிதாக வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற போது கடலோரப் பகுதியில் கட்டிக் கொடுக்காமல், உள்ளூரிலே எல்லா மக்களோடும் சேர்ந்து வாழ்கின்ற அளவிற்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசாங்கம் ஒரு கொள்கை முடிவு எடுக்குமா?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி வீடு கட்டினால் மீனவர்கள் போய்வர வேண் டிய பிரச்சினை இருக்கிறது. மீனவர்கள் கடலோரப் பகுதியில் இருக்க விரும்புகிறார்கள், உள்ளே வர மறுக்கிறார்கள். இது தான் உண்மை நிலை. இது உறுப்பினர்களுக்கே தெரியும். இரு சாராரும் சகஜமாக வாழ்வதற்கு உறுப்பினர் போன்றவர்கள் உதவி செய்வார்களானால் அரசு பாராட்டும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, இந்த மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் கடலோரப் பகுதியில் வசிக்கக் கூடிய மீனவர்களுக்கு மட்டுமா? உள்நாட்டில் இருக்கக் கூடிய பெரிய கண்மாய்களில், குளங்களில், ஆழமான பகுதிகளில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கும் இது விஸ் தரிக்கப்படுமா? ஒரு வீட்டிற்கு எவ்வளவு பணம் கொடுக்கின்றோம். அவர்களுக்கு வீட்டு மனை இல்லைவிட்டால் அதையும் அரசாங்கம் வாங்கிக் கொடுத்து அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வழி வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1987 மே 6]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கடலோரத்தில் இருக்கின்ற மீனவர்களுக்குத் தான் கட்டிக் கொடுக்கின்றோம். நிதியாதாரத்தைப் பொறுத்துக் கட்டிக் கொடுக்கின்றோம். ஒரு வீட்டிற்கு எவ்வளவு பணம் என்று கேட்டார்கள். 248 சதுர அடியில் ஒவ்வொரு வீடும் கட்டப்படுகிறது. அதற்குண்டான செலவு ரூ. 16,000.

திரு. எஸ். வேணுகோபால் : தலைவர் அவர்களே; இராய புரம் காசிமேட்டில் கடந்த 2, 3 மாதங்களுக்கு முன்னாள் தீயி னால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இது வரையில் வீடு கட்டிக் கொடுக்காமல் இருக்கிறார்கள். அந்த மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அவர்கள் வந்து என்னைப் பார்த்தார்கள். பூமி அரசுக்கு சொந் தம் இல்லை. அது தனியாருக்கு சொந்தம். எனவே சிக்கல் இருக்கிறது. குடிசை மாற்று வாரியம் எடுத்துக் கொள்ள முடிய வில்லை. தனிப்பட்டவர்களுடைய நிலத்தை எடுத்துக் கொள்ள சட்டம் இல்லை. சட்டம் இயற்றும் போது அதைப்பற்றி யோசிக்கலாம்.

(முற்பகல் 10-30)

திரு. கோ. பெருமாள் பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்கரை ஓரங்களில் வீடுகளைக் கட்டு கின்ற நேரத்தில் அதனுடைய கூரைகள் கம்பியினாலும், சிமென் டினாலும் சேர்த்து செய்யப்பட்ட கூரைகளாக அமைக்கப்படு வதால், கடற்கரை ஓரத்தில் இருக்கின்ற உப்புத் தண்ணீர் பட்டு, உப்புக் காற்று பட்டு, அவைகள் வெகு விரைவிலேயே இடிந்து போகும் சூழ்நிலை இருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சின்னமுட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதிலே கூட பல வீடுகளில் இன்றைக்கு அதனுடைய கூரைகள் எல்லாம் இடிந்து விழுந்திருக்கின்றன. ஆகவே, கடற்கரை ஓரங்களில் கட்டுகிறபோது ஒரு மாற்றுத் திட்டத்தை உருவாக்கி, இதுபோன்ற கடல் உப்பு நீரால் பாதிக் கப்படாத அளவுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரும்பு போட்டுக் கட்டும்போது இந்தச் சங்கடம் இருக்கத்தான் செய்யும். அதைத் தவிர்க்கும்போது தான் இதைப்பற்றிப் பரிசீலிக்கமுடியும்.

[1987 மே 6

## தலைஞாயிறு, வேதாரண்யம் ஒன்றிய கடலோரப் பகுதிகளில் மீனவர் வழிகாட்டி விளக்குகள்.

613—(*வினா எண் 11903) திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைஞாயிறு, வேதாரண்யம் ஒன்றியத்தின் கடலோரப் பகுதிகளில் மீனவர் வழிகாட்டி விளக்குகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தலைஞாயிறு பஞ்சாயத்து ஒன்றியப் பகுதியில் வானவன்மாதேவி என்னுமிடத்தில் வழிகாட்டி விளக்கு இயங்கி வருகிறது. வேதாரண்யப் பஞ்சாயத்து ஒன்றியப் பகுதியில் ஆற்காட்டுத் துறை கிராமத்தில் வழிகாட்டி விளக்கு அமைக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, இப்போது இரண்டு இடங்களில் வழிகாட்டி விளக்குகள் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவை சரியாக இயங்கவில்லை. அதோடு, வெள்ளப்பள்ளம், வானவன்மாதேவி, கோடியக்கரை ஆகிய பகுதிகளில், வானவன் மாதேவியில் அந்த விளக்கு இருக்கிறது. வெள்ளப்பள்ளத்திலேயும் கோடியக்கரையிலேயும் அது இல்லை. எனவே, உடனடியாக எரியாத விளக்குகளை எரிய வைக்கவும், எரிகிற மாதிரி இரண்டு விளக்குகளை அந்தப் பகுதிகளுக்கு அமைக்க உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, எங்கு விளக்கு எரியவில்லையோ அதுபற்றி புகார் எழுதிக் கொடுத்தால் அது நிச்சயமாக கவனிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் அதுபோன்ற விளக்குகள் தஞ்சை மாவட்டத்தில் 17 இடங்களில் எங்கெங்கு அமைப்பது என்று முடிவு எடுக்கப்பட்டு, 7 இடங்களில் இப்போது கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மீதி 10 இடங்களில் வேலை நடந்து வருகிறது. அதிலே மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற ஊர் இல்லை.

## திண்டுக்கல்லில் கள்ளர் சீரமைப்பு விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள்.

614—(*வினா எண் 12304) : திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகரில் உள்ள கள்ளர் சீரமைப்பு இரு விடுதிகளுக்கு (1 ஆண், 1 பெண்) சொந்த கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1987 மே 6]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ஆ. பிரேம்குமார் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த கள்ளர் சீரமைப்பு விடுதிகள் வாடகைக் கட்டிடத்தில்தான் இயங்கி வருகின்றன. அங்கு சௌகரியம் இல்லாத நிலையில் மாணவர்கள் கஷ்டப்படும் சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, இவற்றைக் கருத்தில் கொண்டு இந்த வருடமாவது தனிப்பட்ட முறையிலே கட்டிடம் கட்டிக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு விடுதிகள் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது. அப்போது அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. ஆ. பிரேம்குமார் : பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல், இலங்கைப் பகுதியிலிருந்து துளுவ நாட்டிலிருந்து துளுவ வெள்ளாளர் என்ற ஒரு வகுப்பினர் இங்கே தமிழகத்தில் வந்திருக்கிறார்கள். அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்கள். அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற பொருட்டு, அவர்களை, 'மோஸ்ட் பேக்வேர்டு கிளாஸ்' லிஸ்டிலே சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, துளுவ வெள்ளாளர்கள் இலங்கைப் பகுதியிலிருந்து வந்தவர்கள் என்று சொல்வதை மாற்றிக் கொள்ளவேண்டும். தமிழகத்திலே இருக்கிறவர்கள் இருக்கிறார்கள். மிக பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் அவர்களைச் சேர்ப்பது இப்போது இயலாத காரியம். (இப்போது அதற்குச் சட்டம் இல்லை).

## அருப்புக்கோட்டை தொகுதி, கல்லூரணியிலுள்ள பிற்பட்டோர் நலத்துறை மாணவர் விடுதி.

615—(*வினா எண் 12330) திரு. வி. எஸ். பஞ்சவர்ணம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, கல்லூரணியில் உள்ள பிற்பட்டோர் நலத்துறை மாணவர் விடுதியினை நார்த்தம் பட்டிக்கு மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அருப்புக்கோட்டை தொகுதி கல்லூரணியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மாணவர் விடுதி எதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. எஸ். பஞ்சவர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதி கல்லூரணியில் இருக்கின்ற அந்த பிற்பட்டோர் நல மாணவர் இல்லம் நார்த்தம்பட்டி முத்துராமலிங்கபுரத்தில் ஒரு மேல்நிலைப்பள்ளி இருக்கிறது—அங்கே படிக்கின்ற மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு வாய்ப்பு வசதி இல்லாமல் இருக்கிறது. கல்லூரணியில் ஒரு மானேஜ்மென்ட் மாணவர் இல்லம் இருக்கின்றது. ஆகவே, அமைச்சர் கருணைகூர்ந்து அரசு அந்த நார்த்தம்பட்டிக்கு அந்த மாணவர் இல்லத்தை மாற்றிக் கொடுக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நார்த்தம்பட்டி என்ற கிராமத்தைச் சுற்றி ஆதி திராவிட மாணவர் விடுதியும், பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதியும் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற இடத்தில் அதை இப்போது மாற்றுவதற்கு அரசிடம் யோசனை இல்லை.

திரு. வி. எஸ். பஞ்சவர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்று, அருப்புக்கோட்டைத் தொகுதியில் இருக்கின்ற மல்லாங்கிணறு, காரியாபட்டி, நரிக்குடி, திருச்சுழி ஆகிய இடங்களில் இருக்கின்ற மாணவர் இல்லங்களில் இடம் போதாத காரணத்தால், அரசு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிருபைகூர்ந்து கூடுதலாக அந்தப் பகுதி மக்கள், பிற்பட்ட பகுதி மக்கள் படிப்பதற்கு உதவியை செய்து கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற மாணவர் எண்ணிக்கையைப் பார்த்தும், பிற்படுத்தப்பட்ட மாணவர் எண்ணிக்கையைப்பார்த்தும் அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அருப்புக்கோட்டைத்தொகுதி கல்லூரணியில் இருக்கக் கூடிய பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை விடுதியை நார்த்தம்பட்டிக்கு மாற்றச் சொல்லி கோரிக்கை வந்திருக்கிறது. கல்லூரணியிலிருந்து நார்த்தம்பட்டி 100 கெஜம் தூரத்தில்தான் இருக்கிறது. கல்லூரணியில் இருப்பதை ஏன் மாற்றவேண்டும் என்று இந்தக் கேள்வி வந்தது என்பதை அறியவிரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியைப் போட்டது பற்றி நான் பதில் சொல்வதற்கில்லை. கேள்வி கேட்கிறார்கள். ஆனால் நார்த்தம்பட்டியிலேயே ஒரு பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி துவக்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

## கோவை மாவட்டம், வாலங்குளம் பகுதியிலுள்ள குடிசைவாசிகள்.

616—(*வினா எண். 8224) திரு. ஆ. நடராசன், திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரம், வாலங்குளம் பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட குடிசைவாசிகள் தற்போது எங்கே குடியமர்த்தப்பட்டு உள்ளார்கள் ?

(ஆ) எத்தனைக் குடும்பங்கள் இவ்வாறு மாற்றப்பட்டன ?

(இ) அவர்களுக்கு அரசு அளித்துள்ள நிவாரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கோவை மாநகரம், வாலங்குளம் பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட குடிசைவாசிகள் கோயமுத்தூர் வட்டம், மதுக்கரை அருகாமையில் கருணாபுரம் என்னுமிடத்தில் தற்போது குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

(ஆ) 477 குடும்பங்கள் அவ்வாறு குடியமர்த்தப்பட்டுள்ளன.

(இ) ஆக்கிரமிப்புதாரர்கள் வெளியேற்றம் செய்து கருணாபுரத்தில் குடியமர்த்தப்பட்டனர். அவர்களது குடியமர்த்தும் மறுவாழ்விற்காக ஒரு குடிசைக்கு ரூ. 500 வீதம் 477 குடிசைகளுக்கு மொத்தமாக ரூ. 2,38,500 சேரன் போக்குவரத்துக் கழகத்தினரால் வழங்கப்பட்டது. ரூ. 15,000 செலவில் ஆழ் நீர் குடிதண்ணீர் குழாயும் அமைத்து தரப்பட்டது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே குடியமர்த்தப்பட்ட குடிசைவாழ் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை. சேரன் போக்குவரத்துக் கழகப் பணி மனைக்காக

அந்த இடம் எடுத்துக்கொள்ளப்பட்ட காரணத்தால் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக அங்கே இருக்கிற மக்களுக்கு அடிப்படை வசதிகளான பள்ளி, தெருவிளக்குகள், பாதை வசதிகள் போன்றவற்றை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கே அந்த நிலைமை நன்றாகத் தெரியும். மிக மோசமான இடத்தில்—சுகாதாரமேயில்லாத இடத்தில்—அவர்கள் ஏற்கனவே குடியிருந்தார்கள். அந்த இடம்கூட அரசாங்கத்திற்குச் சொந்தமானது. அதைக்கூட ஆக்கிரமிப்பு என்ற வகையில் சேர்த்துக் கொள்ளலாம். அப்படிப்பட்ட இடத்திலிருந்து அவர்கள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இருந்தாலும் சேரன் போக்குவரத்துக் கழகம் ஆக்கிரமிப்பை அகற்றி அதை எடுத்துக் கொண்டிருந்தாலும்—அவர்களையெல்லாம் வீணாக விட்டுவிடக்கூடாது என்று கருதிதான் அவர்களுக்கு ஒரு இடத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பார்த்து குடிசை ஒன்றுக்கு ரூ. 500 வீதம் செலவுக்கும் கொடுத்து, அங்கே ஆழ்குழாய் கிணறு ஒன்றையும் குடிதண்ணீர் வசதிக்காக செய்து கொடுத்திருக்கிறது. ஏற்கனவே சொன்னபடி சேரன் போக்குவரத்துக் கழகம் ரூ. 2,38,500 செலவழித்திருக்கிறது. ஓரளவுக்குப் போதுமான அளவுக்குத்தான் அது செய்து கொடுத்திருக்கிறது. இதற்கு மேலும் அவசியமா என்பதைப் பற்றி ஆலோசிக்கலாம்.

திரு. ஆர். செங்காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலாங்குளத்தில் இருந்தவர்களை, சேரன் போக்குவரத்துக் கழகத்திற்காக இடம் தேவைப்படுகிறது என்ற காரணத்திற்காக வெளியேற்றி இருக்கிறார்கள். அப்படி வெளியேற்றப்பட்டவர்களுக்கு குடிசை ஒன்றுக்கு ரூ. 500 உதவி கொடுக்கப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றையதினம் விலைவாசி இருக்கிற நிலையில் ரூ. 500 எப்படி ஒரு வீடு கட்டுவதற்குப் போதுமானதாக இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு அவர்களுக்கு அடிப்படை வசதி செய்து தருவதற்கும் அத்துடன் வீட்டிற்கு அதிகப்படியான தொகை அளிக்கவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் முதலிலேயே சொன்னேன். அந்த இடம் அரசாங்கத்திற்குச் சொந்தமான இடம். ஆக்கிரமிப்பு என்ற நிலையில்தான் அது இருந்தது. அவர்களுக்குச் சொந்தமான நிலமில்லை. அதன் காரணமாக அவர்களை ஆக்கிரமிப்பிலிருந்து அரசாங்கம் வெளியேற்றினாலும்கூட முடிந்த அளவுக்கு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றுதான் செய்யப்பட்டிருக்கிறது. வாலாங்குளத்திலேயே இருந்திருந்தால் நிரந்தரமாக அவர்களுக்கு என்றைக்குமே ஒரு



தீர்வு கிடைத்திருக்காது. காரணம் அவர்களே அங்கே நல்ல வீடுகளைக் கட்டிக் கொள்ள முடியாது. மேலும் ஒவ்வொரு முறையும் தண்ணீர் வருகிற போது அவர்கள் எவ்வளவு சிரமப்பட்டார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே நன்கு தெரியும். இன்றைக்கு ஓரளவுக்குச் சுகாதாரமான இடம், ஒரு நிரந்தரமானநல்ல இடம கிடைக்க, வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேலும் அரசாங்கம் கை கொடுப்பது என்பது சிரமமாக இருக்கும், இப்போதிருக்கிற நிதிப் பிரச்சினை காரணமாக.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இரண்டாண்டுக் காலமாக மக்கள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இந்த 2 ஆண்டுக் காலமாகவும் அவர்களுக்கு நிலப்பட்டா வழங்கப்படாத காரணத்தால் அவர்கள் தங்களுக்கு என்று சொந்தமான வீடுகட்டிக்கொள்ள இயலவில்லை. சொந்தப் பட்டா இருந்தால்தான் வீட்டு வசதி வாரியம் மூலமாகக் கடன் வாங்க வசதியாக இருக்கும். எனவே அதற்கு அரசு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி மாவட்டஆட்சித்தலைவரிடம் பேசி விரைவான நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும். இப்படி அவர்களுக்கே கடன் கிடைக்கிற வாய்ப்பு இருப்பதால் ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கும் இது வாய்ப்பாக இருக்கும் என்றுகூட நான் கருதுகிறேன்.

## கிண்டி-அம்பத்தூர் பகுதிகளிலுள்ள டெவலப்மெண்ட் பிளாட்டுகள்.

617—(*வினா எண். 9418) திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிண்டி-அம்பத்தூர் தொழிற்பேட்டையில் சிட்கோவிற்கு சொந்தமான தொழிற்கூட கட்டிடங்களையெல்லாம் சொந்த மாக்கி தந்ததுபோல், டெவலப்மெண்ட் பிளாட்டுகளுக்கு முழுத்தொகை கட்டியவர்களுக்கு விற்பனை பத்திரங்களை வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எண். 383, தொழில்துறை, தேதி 19–3–1982-ன் மூலம் அரசிற்குச் சொந்தமான தொழிற்கூட கட்டிடங்களைச் சொந்தமாக்கிக் கொடுக்கும் திட்டம் அமுலாக்கப்பட்டது. ஆனால் மேம்படுத்தப்பட்ட மனைகளுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்தப்படவில்லை. இதுகுறித்து அரசு

ஆய்வு செய்து மேம்படுத்தப்பட்ட மனைகள் தற்போதுள்ள குறிப்
பிட்ட நிபந்தனைகளுடன் கூடிய அனுபோக பாத்தியதை
உரிமையிலேயே ( Conditional assignment basis )
தொடர்ந்து இருக்கலாம் என அரசு ஏற்கனவே முடிவு எடுத்
துள்ளது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அனுபோக பாத்திய உரிமை பெற்றவர்களுக்கு
விற்பனைப் பத்திரங்கள் தரப்பட வேண்டும் என்பதுதான்
இந்தக் கேள்வியின் நோக்கம். விற்பனைப் பத்திரங்களை
வழங்குவதில் அரசுக்கு என்ன சிரமம் இருக்கிறது என்பதை
அறிய விரும்புவதோடு தொழிற்கூடங்களுக்கு வழங்கியதைப்
போல், மேம்படுத்தப்பட்ட மனைகளுக்கும் வழங்குவதற்கு
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்
வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.40).

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தொழில் கூடமாக கட்டப்பட்டது அந்த
குறிப்பிட்ட பணிக்கான டிசைன் செய்யப்பட்டு கட்டி விட்டோம்.
எனவே அதை மாற்ற வாய்ப்பு இருக்காது. கட்டாயமாக
தொழிலை ஆரம்பிக்க முடியும். எனவே முழுமையாக பணத்தைக்
கட்டும்போது சொந்தமாக உரிமையாளர்களுக்கேக் கொடுத்து
விடுகிறோம்.

மேம்படுத்தப்பட்ட மனைகளைப் பொறுத்த வரையில் குறிப்
பிட்ட தொழிலுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்ற அந்த
தொழிலை ஆரம்பிக்க மட்டுமே அவர்கள் கட்டிடங்களைக்
கட்ட வேண்டும். வேறு எந்தப் பணிக்காகவும் பயன்படுத்தக்
கூடாது. தொழிலை ஆரம்பிக்கிறோம் என்று சொல்லி
நிலத்தை அரசாங்கத்திடமிருந்து வாங்கி விற்று விடக்கூடாது
என்பதற்காகத்தான் அவர்கள் அனுபவ பாத்தியமாக வைத்துக்
கொள்ளலாம் என்று வைத்திருக்கிறோம். கட்டிடங்கள் கட்டி
தொழிலை ஆரம்பித்த பின்பு மனுச் செய்தால் அதிலே ஏதாவது
முடிவு எடுக்கலாம் என்ற உணர்வோடு, அந்தத் தொழில்
வர வேண்டும் என்பதற்காகத்தான், அவர்களே அதை பயன்
படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கட்டுப்பாட்டை
அரசாங்கம் விதிக்கிறது.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாவட்டத்திலேயே இருக்கின்ற தொழில்
பேட்டைகளில் உள்ள எல்லா தொழிற் கூடங்களையும் வாட
கைக்கு விடுகிறார்கள். தொழிலைத் துவங்குகிறவர்கள்,
குறைந்த வாடகைக்கு எடுக்கிறவர்கள், ஒரு சில ஆண்டுகளுக்கு
தொழிலை செய்து விட்டு மீண்டும் மூடி விடுகிறார்கள்.





பத்தாண்டுக் காலம் கூட மூடிக்கிடக்கிறது. இதனால் மற்றவர்
களும் துவக்க முடியவில்லை. ஏற்கனவே அவர் வாடகை கட்டிக்
கொண்டிருப்பதால் மற்றவர்களால் தொழிலை துவக்க முடிய
வில்லை. எனவே குறிப்பிட்ட கால வரையறைக்கு, இத்தனை
ஆண்டுக் காலத்திற்குள் புரொடக்ஷன் செய்ய வேண்டும்
என்றும் அப்படிச் செய்யவில்லை என்றால் ரத்து செய்து வேறு
ஒருவருக்கு மாற்றப்படும் என்ற நிலையை உருவாக்க இந்த
அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த முறை இருக்கிறது.
குறிப்பிட்ட காலத்திற்கு மேலும் பயன் படுத்தப்படாமல் இருந்
தால், நோட்டீசை முறையாகக் கொடுத்து அவர்களைக் காலி
செய்ய வேண்டும் என்ற முறையை வைத்திருக்கிறோம். சில
இடங்களில் வாடகையைக் கொடுத்துக் கொண்டே வைத்துக்
கொண்டிருப்பார்கள். ஏதாவது பணச் சூழ்நிலை காரணமாக
அல்லது தொழில் நசிந்து விடுவதன் காரணமாக வாடகையை
கொடுத்துக் கொண்டே பூட்டி வைத்திருப்பார்கள். அதுவும்
தவறு. தொழில் வளர்ச்சி அடைய வேண்டும் என்றுதான்
கொடுக்கிறோம். கொடுத்து விட்டு பூட்டி
வைப்பது என்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. எதிர்
காலத்திலே குறிப்பிட்ட காலத்தில் தயார் செய்து ஆரம்பிக்க
முடியாத சூழ்நிலை இருந்தால் அவர்களுக்கு நோட்டீஸ்
கொடுத்து முறைப்படி, சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு தலைவர் அவர்
களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல அந்த
மேம்படுத்தப்பட்ட மனைகளில் தொழில் செய்கிறவர்களுக்கு
மாத்திரம்தான் விற்பனை பத்திரம் கொடுக்கப்படும் என்று
ஒரு வரையறையை நிர்ணயம் செய்து வேறு எந்தக் கார
ணத்தைக் கொண்டும் அந்த இடத்தைப் பயன்படுத்தக்
கூடாது என்ற கட்டுப்பாட்டின் கீழ் விற்பனை பத்திரம் வழங்க
நடவடிக்கை எடுப்பார்களா என்பதோடு அந்தப் பகுதியில்
இருக்கின்ற தொழிலாளர்கள் குடியிருப்புகள் அவர்களுக்கே
சொந்தமாக்கித் தரப்பட வேண்டும் என்று பல முறை கேட்கப்
பட்டபோது மன்றத்திலே அந்தக் குடியிருப்புகள்
இவர்களுக்கு சொந்தமாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.
ஆனால் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சொந்த
மாக்கி தரும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னபடி மேம்
படுத்தப்பட்ட மனைகளில் அவர்கள் தொழிற்சாலையை
அமைத்து வேலைகள் துவக்கப்பட்டிருந்தால் அதிலே தடை
இருப்பதற்கு வாய்ப்பில்லை. நாம் என்னதான் திட்டங்கள்
போட்டு உரிமையைக் கொடுத்தாலும் அதற்குப் பிறகு அரசாங்க

நிர்வாகத்தை வைத்துக் கொண்டு அவர்கள் என்ன செய்கிறார்
கள் என்று அவர்களை பின் தொடர்ந்து செல்வது சிரமமான
காரியாமக இருக்கிறது. இப்போது ஒரு புதிய கட்டுப்பாட்டைக்
கொண்டு வர வேண்டும் என்று கருதுகிறோம். மனை கொடுத்த
குறிப்பிட்ட காலத்திற்குள் பணியைத் துவக்காமல் இருந்தால்
அதைக் கான்சல் செய்வது நல்லது என்று கருதுகிறோம். யாருக்கு
அவசியம் இருக்கிறதோ அவர்களுக்கு ஒதுக்குவது நியாயமாக
இருக்கும் என்று கருதுகிறோம். எனவே இந்த அடிப்படையிலே
நடவடிக்கை எடுக்கப்படும்.

குடியிருப்புகளைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கான
விவரம் என்னிடத்திலே இல்லை. ஏற்கெனவே சட்டமன்றத்
திலே தெரிவிக்கப்பட்டிருக்குமேயானால் அதற்கேற்ப முறை
யான நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கும்.

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அம்பத்தூர், கிண்டி மற்றும் உள்ள தொழிற் கூடங்
களை விற்கும் போது என்ன விலையில் விற்கப்படுகிறது ? மார்க்
கெட் ரேட்டிலா அல்லது வேறு விலையிலா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, விற்கப்படுகிற விலையில் குறிப்புகள்
இப்போது என்னிடத்திலே இல்லை. ஏற்கெனவே ஆரம்பக்
காலத்திலே ஒரு முறையைக் கடைப்பிடித்து, அதாவது சீட்டு
குலுக்கி அல்லது வேறு வழியிலேயோ செய்திருக்கக் கூடும்.
இப்போது சில இடங்களில் காலியாகும் போது அரசாங்கத்
திடம் மனு போட்டு அவர்கள் பெறுகிறார்கள். சமீபத்திலே
ஒரு கூடத்தைக் கொடுத்தது எனக்கு நினைவு இருக்கிறது.
அரசாங்கத்திலேயே ஒரு முடிவு எடுத்து என்ன தொகை ஆகி
யிருக்கிறதோ அந்தக் காஸ்ட்டுக்கே கொடுக்கும் நிலையை எடுத்
திருக்கிறார்கள். தொழில் வளர்ச்சியடைய வேண்டும் என்
பதற்காக சில நஷ்டங்களை ஏற்றுக் கொண்டு இப்படிப்பட்ட
நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

காவேரிப்பட்டினம் — காக்கங்கை ரோட்டில் ஆற்றின் குறுக்கே
பாலம்.

618—(*வினா எண்: 12848) திரு. டி. எம். வெங்கடாசலம்:
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா
வுக்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் — காக்கங்கை ரோட்டில் நடுப்பட்டி
மாடஹள்ளி அருகில் உள்ள ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட
அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?



விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு
பாலப் பணிகளும் ''பணித் தொகுப்பு பட்டியலில்'' சேர்க்கப்
பட்டுள்ளன. அரசின் நிதி நிலைமைக்கேற்ப எதிர் வரும்
ஆண்டுகளில் பாகம் 2 திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய பரி
சீலிக்கப்படும்.

திரு. டி. எம். வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, பட்டியலில் சேர்த்திருந்தாலும், இந்த
ஆண்டிலேயே எடுத்து, செயல் படுத்துவார்களா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, ஒரு பாலத்திற்கு 30 இலட்சம் ரூபாயும்,
இன்னொரு பாலத்திற்கு 10 இலட்சம் ரூபாயும், ஆக மொத்தம்
40 இலட்சம் ரூபாயாகிறது. எனவே இந்த ஆண்டு பட்டியலில்
சேர்க்க வாய்ப்பில்லை. ஏற்கெனவே அந்தப் பட்டியல் அமைக்
கப்பட்டு விட்டதால், இவ்வளவு தொகையை எடுத்து, செலவு
செய்ய வாய்ப்பில்லை. வருங்காலத்தில் இது பற்றி பரி
சீலிக்கலாம்.

திரு. டி. எம். வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, பார்ட் 2 ஸ்கீம் பட்டியல் பற்றி இன்னும்
முடிவெடுக்கப்படவில்லை என்றும், என்னுடைய தொகுதியிலே
உள்ள குன்னத்தூர் பாலத்தை முதன்மையாக வைத்திருக்கி
றோம் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து கடிதம்
வந்திருக்கிறது. அதற்கு 35 இலட்சம் ரூபாய் கேட்டு, முன்னு
ரிமை கொடுத்து வைத்திருக்கிறார்கள். அதை இந்த ஆண்டே
பட்டியலில் சேர்த்துக் கொள்வார்களா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, இப்போது அந்தக் குறிப்பு இங்கே இல்லை.
உங்களுக்குக் கடிதம் வந்திருந்தால், அதன் அடிப்படையிலே,
நிதி நிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் ே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, நெடுஞ்சாலை, தேசிய நெடுஞ்சாலை,
அதைப் போல நம்முடைய அரசுக்குச் சொந்தமான நெடுஞ்
சாலைத் துறை ஆகியவற்றில் கட்டப்படுகின்ற பெரும்பான்மை
யான பாலங்கள் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் முடிக்கப்
படாததால் வாகனங்கள் போக்குவரத்திற்குத் தடையாக
இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? காண்ட்ராக்டர்கள்
ஒரு பாலத்தை கட்டி முடிப்பதற்குக் கால தாமதமாகச் செய்தால்
மன்னிக்கலாம். 2 பாலங்களைத் தாமதம் செய்யும்போது,
அவர்கள் பெயர்களை லிஸ்டில் வைத்திருக்கலாமா ? இது
குறித்து அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியதுபோல எல்லாப் பாலங்களிலும் காலதாமதம் ஏற்படுவதில்லை. சிலர் அதிகமான பணிகளை ஏற்றுக் கொண்டு விடுவதால், சில பணிகளில் கால தாமதம் ஏற்படுகிறது. அவர்களுக்கு நோட்டீஸ் எல்லாம் கொடுக்கப்படுகிறது. அவர்களை வெளியே அனுப்ப வேண்டுமென்று அரசு முடிவெடுத்தால், காண்ட்ராக்டர்கள் கிடைக்காமல், அதிகமான சலுகைகளை அளித்து, 10 இலட்சம் ரூபாய் வேலையை, 15 இலட்சம் ரூபாய்க்கு போட்டியில்லாமல் விடக் கூடிய நிலைமை ஏற்படும். கால தாமதம் இல்லாமல் அவர்கள் செய்ய பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கிறது.

## திருச்சி, புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் முசுக்கொட்டை செடி வளர்ப்பு.

619—(*வினா எண். 13127) திரு. எஸ். இராசாராமன், திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் தலா 200 ஏக்கர் நிலத்தில் முசுக்கொட்டைச் செடி வளர்ப்பதற்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 1986–87ஆம் ஆண்டில் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் முறையே, 250, 150, 200 ஏக்கர் நிலத்தில் புதிதாக முசுக்கொட்டைச் செடி பயிரிட திட்டமிடப்பட்டு தற்போது திருச்சி மாவட்டத்தில் 250 ஏக்கர் நிலத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 152 ஏக்கர் நிலத்திலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 210 ஏக்கர் நிலத்திலும் புதிதாக முசுக்கொட்டை செடி பயிரிடப்பட்டுள்ளது.

திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், அறிவிக்கும்போது திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங்களில் செயற்படுத்த இருப்பதாகச் சொன்னார்கள். எந்தெந்த ஊர்களிலே இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட இருக்கின்றன என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த மாவட்டத்திலே 5 தொகுதிகள் இருக்கின்றன. அந்த 5 தொகுதிகளுக்குள்ளேதான் வரும். எந்தெந்த ஊர் என்ற பட்டியல் என்னிடம் இல்லை.

## மதுரை—எர்ணாகுளம் சாலை.

620—(*வினா எண். 13805) திரு. சி. சுப்புராயர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை-எர்ணாகுளம் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இத்திட்டம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. சுப்புராயர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எனது கம்பம் தொகுதி கேரளாவின் எல்லையில் உள்ளது. எனது தொகுதியில் உள்ள அனைத்து முக்கிய விவசாயப் பொருள்களும் எர்ணாகுளத்திற்குச் சென்று ஏற்றுமதியாகிறது. மதுரையிலிருந்து கம்பம் வழியாக எர்ணாகுளம் செல்லும் பாதையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசோடு பேசி முயற்சி எடுக்கலாம்.

திரு. சி. சுப்புராயர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எனது தொகுதியின் எல்லையில் கேரளாவுக்குச் செல்லும் பாதை மலைப் பாதையாக இருக்கிறது. அடிக்கடி மழை பெய்வதால் சாலைகள் மோசமாகிவிடுகின்றன. எனவே உத்தமபாளையத்திலிருந்து குமுளிவரை செல்லும் சாலைக்கு தனியாக நிதி ஒதுக்கி, சரி செய்ய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா ?

[1987 மே 6

(முற்பகல் 10–50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மழை பெய்த காரணத்தினாலே வருத்தப்படுகின்றாரோ என்ற எண்ணம் வந்து விடக்கூடாது. மழை தேவையாக இருக்கின்றது ஆனால் அங்கே பாதைகள் சரியாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்பதில் அரசாங்கம் தனி கவனம் செலுத்திக்கொண்டு இருக்கிறது. மலைப் பகுதிகளில் உள்ள பாதைகளில் அரசு கவனம் செலுத்தி அவற்றை சீரமைக்க இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ள பாதைகள் அங்கே இருக்குமானால் அவைகளைப் பற்றி கடிதம் எழுதி கேட்கிறபோது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நெல்லை மாவட்டம் பால் உற்பத்திச் சங்கங்கள்.

621—(*வினா எண். 4417) திரு. தெ. பெருமாள்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்திலுள்ள பால் உற்பத்திச் சங்கங்கள் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்துடன் இணைக்கப் பட்டு விட்டனவா ?

(ஆ) இல்லையெனில், அவை எப்பொழுது இணைக்கப் படும் ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருநெல்வேலி மாவட்ட பிரிவினைக்கு முன் அம் மாவட்டத்தில் மொத்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை 660 ஆகும். இவற்றில் நாங்குநேரி மற்றும் ராதாபுரம் தாலுக்காக்களில் உள்ள 81 சங்கங்கள், கன்னியாகுமரி மாவட்ட பால்வள உற்பத்தியாளர்கள் கூட்டு றவு ஒன்றிய விவகார எல்லையில் உள்ளன. மிகுதியுள்ள 579 சங்கங்களில், 305 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. திருநெல்வேலி



1987 மே 6]

மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்துடன் இணைக்கப்பட்ட சங்கங்களின் மாவட்ட வாரியான விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| (1) நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் | .. | 188 |
| (2) வ. உ. சிதம்பரனார் மாவட்டம் | .. | 117 |
| மொத்தம் | .. .. | 305 |

(ஆ) மிகுதியுள்ள 274 சங்கங்களில் 169 பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் செயல்படவில்லை. செயல் படும் 105 சங்கங்களும் புதிய வழித்தடங்கள் மாவட்ட ஒன்றி யத்தால் ஆரம்பிக்கப்பட்டவுடன் இணைக்கப்படும்.

திரு. தெ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்திலே இருக்கின்ற பால் உற்பத்தியாளர் சங்கங்களில் சில சங்கங்கள் சில ஒன்றி யங்களிலே இணைக்கப்படாமல் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் இணைக்கப்படும் போக்குவரத்து வழித்தடங்கள் சரியாக ஆனவுடன் இணைக்கப்படும் என்று சொன்னார்கள். அது இந்த ஆண்டு இணைக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயல்பட்டுவரும் 105 பால் உற் பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களிலும், பால் உற்பத்தி மிகக்குறை வாக உள்ளதால் ஒன்றியத்திற்கு பால் அனுப்பாததால் திருநெல் வேலி மாவட்ட உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்துடன் இணைக்கப்படவில்லை. அந்த அம்சங்கள் பூர்த்தி செய்யப் பட்டவுடனே இவ்வாண்டு இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தெ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் வழித்தடங்கள் போக்குவரத்து வசதிகள் இல்லாததால் போகமுடியாமல் இருக்கின்றன. அதை சீர் செய்ய வேண்டும். அந்தந்த கிராமங்களில் உடனடியாக பால் எடுத்துப் போகமுடியாத சூழ்நிலைகள் உற்பத்தியாகின்ற அதனால் சில பால் உற்பத்தியாளர்கள் மிகவும் இருக்கின்றன. ஆகவே அந்த தடங்களை உடனடி கஷ்டப்படுகின்றார்கள். வசதி செய்து அதை எடுக்க ஆவன யாக நீக்கி போக்குவரத்து அறிய விரும்புகிறேன். செய்வார்களா என்பதை

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவன செய்ய நடவடிக்கை எடுக் கப்படும்.

திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் கோவில்பட்டிக்கு பக்கத்திலேயிருக்கின்ற கிராமப்புறங்களில் இருந்து பால் வாங்க மறுக்கிறார்கள். இதை அரசு அறியுமா ? அப்படி அறியுமானால் என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி தகவல் இல்லை. தனியாக வினா போட்டால் பதில் அளிக்கலாம்.

### மதுரை அழகர் கோவிலிலுள்ள முன் மண்டபம்

622—(*வினா எண். 5434)—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அழகர் கோவிலின் முன்பகுதியில் இடிந்து விழக்கூடிய சூழ்நிலையில் உள்ள மண்டபம் அறநிலையத் துறை நிர்வாகத்தின்கீழ் உள்ளதா ?

(ஆ) இல்லையெனில், இதனை பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன். : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் அழகர் கோயிலின் முன் பகுதியில் இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ள மண்டபம் தற்போது அறநிலையத்துறை நிர்வாகத்தின் கீழ் இல்லை.

(ஆ) மேற்படி மண்டபத்தை மராமத்து செய்து பாதுகாக்க 1979-ம் ஆண்டு தொல்பொருள் ஆய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மதுரை அழகர் கோயில் முன் பகுதியிலுள்ள மண்டபத்தைச் சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்க ரூ. 5,000-க்கு (ரூபாய் ஐயாயிரத்துக்கு மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பாதுகாப்பு வேலி அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவிருக்கிறது. மேலும் அபாயகரமாக உள்ள மண்டபத்தின் பகுதிகளைப் பிரித்து கட்டுவதற்காக ஆகும் செலவினம் குறித்தும் மதிப்பீட்டினைத் தயாரித்து அனுப்புமாறு தொல்பொருள் ஆய்வுத் துறை மதுரை இளநிலைப் பொறியாளரிடம் கேட்கப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீடு கிடைக்கப்பெற்றவுடன் உரிய பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாகவே அந்த கோபுரம் அந்த நிலையிலேதான் உள்ளது. நான் 2 வருடங்களுக்கு முன்பாக அங்கே சென்று பார்த்தேன். அப்படியே இருந்தது. இப்போது



கடந்த 2 மாதத்திற்கு முன்பும் பார்த்தேன். அப்படியே இருக்கிறது. எப்போது இந்தக் கடிதம் எழுதப்பட்டது, அதிலே ஏற்படுகின்ற காலதாமதத்தைத் தவிர்த்து உடனடியாக அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கட்டடத்திலே உள்ள அபாயத்தைச் குறித்து விரைவில் மதுரை இளநிலைப் பொறியாளரிடம் மதிப்பீடு பெற்று கட்டுமானப் பணியினை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் ஊராட்சி அருள்மிகு தேனபுரீஸ்வரர் ஆலயம்.

623—(*வினா எண். 9238) திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் சட்டமன்ற தொகுதியில், மாடம்பாக்கம் ஊராட்சியில் உள்ள அருள்மிகு தேனபுரீஸ்வரர் ஆலயத்தில் உள்ள விக்கிரகங்கள் அண்மையில் களவாடப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், விவரமென்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாடம்பாக்கம் அருள்மிகு தேனபுரீஸ்வரர் திருக்கோயில் பழமை வாய்ந்தது, தொன்மை வாய்ந்தது. அந்தக் கோயிலிலுள்ள சிலைகள் திருடப்பட்டதாக ஒரு பகுதியினரும், திருடப்படவில்லை என இன்னொரு பகுதியினரும் பிரச்சினையை உண்டுபண்ணி, இரண்டு வழக்குகள் இன்றைய தினம் அதுபற்றி நீதிமன்றத்தில் நடைபெறுகின்ற நிலையில் ஊர் அமைதி கெட்டிருக்கும் நிலையில், சிலை திருட்டு நடக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் இங்கே அறிவித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் அந்தக் கோயிலுக்கு பல ஏக்கர் நிலங்கள் இருப்பதாக அறிகிறேன். அந்தக் கோயிலுக்குச் சொந்தமாக எவ்வளவு ஏக்கர் நிலம் இருக்கிறது என்பதையும்,அவை யார் யாரிடம் இருக்கிறது என்பதையும் அறிய விரும்புவதோடு. அற நிலையத் துறையின் மூலமாக தமிழகம் முழுமையும் இருக்கின்ற கோயில்களைப் பொறுத்தவரையிலும் கூட அதுபற்றிய விவரங்களைக் கண்டறிந்து அந்தந்த கோயில்

களிலேயே அறிவிப்பு பலகை மூலம் பொது மக்களுக்கு அறிவிப்பு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற் கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 23–12–1978 அன்று ஆணை யாளர் சமர்ப்பித்த அறிக்கையின்படி ஏற்கனவே அங்கே 21 சிலைகள் இருந்தது. அப்படியே இருப்பதாக தகவல் கொடுக்கப் பட்டிருக்கிறது. தற்போதுள்ள அறங்காவலர் திரு. பஞ்சாட் சரம் என்பவர் 1–10–1983 அன்று திரு. ஜி. ஆதிகேசவலு என்கிற அறங்காவலரிடமிருந்து முழு பொறுப்பையும் ஏற்றுகொண் டார். அவர் பொறுப்பேற்ற பிறகு ஏற்கனவே சிலைக்ள் இருந் தாகவும், அவை களவு போய் விட்டதாகவும் தனியாக வழக்கு தொடுத்திருக்கிறார். அந்த வழக்கு தவிர சட்டப்படி ஏற்கனவே இருந்த 26 சிலைகளும் இருந்துகொண்டிருக்கின்றன. அந்தக் கோயிலுக்குச் சொந்தமான 84.32 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆண்டு வருமானம் 34 ஆயிரம் ரூபாய் ஆகும்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அழகர்கோயில் உட்பட பல்வேறு கோயில் ஊழியர்கள் தங்கள் ஊதியம் பற்றி அரசுக்கு முறையீடு செய்திருக்கிறார்கள். அவர்களுடைய , கோரிக்கை நிறை வேற்றப்படாததால் இன்றைய தினம் அவர்கள் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் என்று ஆரம்பித்திருக்கிறார்கள். எம்.எல்.ஏ.—க் களிடமும் அவர்களுடைய ஊதியம் பற்றி முறையிட்டிருக்கி றார்கள். அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த அவையில் இதுபற்றி விளக்கமாக பதிலளித்திருக்கிறேன். மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாடம்பாக்கம் அருள்மிகு தேனுபுரீஸ்வரர் ஆலயத்திலுள்ள விக்கிரகங்கள் திருடப்பட்டன என்று ஒரு சாராரும், திருடப்படவில்லை என்று இன்னொரு சாராரும், சொல் கிற நிலையில், திருட்டு நடைபெறவில்லை என்று ஆணையாளர் அறிக்கை தந்த பிறகு, அங்கேயுள்ள ஓர் அறங்காவலர் நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கிறார் என்றால், முறையாக அவர் அனுமதி பெற்று தான் நீதிமன்றத்திற்கு சென்றாரா அல்லது அவராகவே சென்றாரா என்று அறிய விரும்புகிறேன். மேலும் அவராக சென்றிருக்கிறார் என்றால் அவர் மீது அரசு மேற் கொண்ட நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி பிற்பாடு அவைக்கு தகவல் அறிவிக்கிறேன்.



வாலாஜா தாலுகா திருப்பார்கடல் ஸ்ரீரங்கநாதர் ஆலயம்.

624—(*வினா எண். 9558) திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜா தாலுகாவில் திருப்பார்கடலில் அமைந் துள்ள வரலாறு சிறப்புமிக்க ஸ்ரீரங்கநாதர் ஆலயத்தின் மதில் சுவரும் கோபுரமும் பழுதடைந்து விழுந்துவிடும் நிலையில் உள்ளது என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அருள்மிகு ஸ்ரீரங்கநாதர் ஆலயம் நல்ல நிலையில் உள்ளது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தகவல் தப்பான தகவல். அந்த ஆலயத்தின் மதில் சுவர் எல்லாம் இடிந்து, கோபுரம் சாய்கிற அளவில் இருக்கின்ற நிலையில் தமிழகம் முழுவதும் இருக்கின்ற பக்தகோடிகள் இந்த ஸ்ரீரங்கநாதர் கோயிலுக்கு வருகிறார்கள். ஸ்ரீரங்கநாதர் போல இங்கு திருப்பாற்கடலில் எழுந்தருளி யிருக்கின்ற மிக புராதனம் மிக்க ஆலயமாக இந்த திருக் கோயில் இருக்கிறது. அதோடு அரியும் சிவனும் ஒரே விக்கிர கத்திலே இருப்பது புராதனமான ஒன்று, அவ்வளவு வரலாறு சிறப்புமிக்க ஆலயம் இது. இப்படிப்பட்ட நிலையில் ஆலயத் தின் மதில் சுவரும் கோபுரமும் பழுதடைந்து விழுந்து விடும் நிலையில் ஆலயம் உள்ளதால் இந்த ஆலயத்தை புதுப்பித்து, மதில் சுவர் எழுப்பி, சரி செய்து, கும்பாபிசேகம் நடத்த உரிய நிதியை அரசு ஒதுக்கி தேவையான நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அருள்மிகு ஸ்ரீரங்கநாதர் கோயிலை பற்றித்தான் கேட்கின்றார் என்று நினைக்கிறேன். அங்கே அருள்மிகு பிரசன்ன வெங்கடேச

பெருமாள் கோயில்தான் பழுதடைந்திருக்கிறது. அதைப்பற்றி தான் இங்கே குறிப்பிடுகிறார் என்ற கருதுகிறேன். மேற்படி திருக்கோயிலில் பழுதடைந்துள்ள சுவரை மாற்றுவதுடன் திருப்பணி குழு அமைத்து திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மின்வாரியத்தால் விவசாயிகளின் மின் பாக்கிக்கு விதிக்கப்படும் வட்டி விகிதம்.**

625—(*வினா எண். 12012) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்வாரியத்திற்கு விவசாயிகள் கட்டவேண்டிய மின்பாக்கி தவணை தவறினால் விதிக்கப்படும் வட்டி விகித்தை குறைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 11.00.)

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** தலைவரவர்களே, இல்லை என்ற விவரத்தைச் சொன்னார்கள். விவசாயிகளுக்கு நம்முடைய அரசு நிறைய சலுகைகளைச் செய்திருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் இங்கே அவர்கள் கேட்காத பல சலுகைகள் எல்லாம் கூட வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த மின் கட்டணப்



பாக்கிக்கு 24 சதவீதம் வட்டி அல்லது அபராதம் என்ற வகையில் இருக்கிறது. இது 'உசூரியஸ் லோன் ஆக்ட்'படி தவறு என்பதை பல விவசாயிகள் உணர்ந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** அதைப்போல விவசாயிகள் கட்ட வேண்டிய மின் கட்டணம் என்றாலும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிக்கடன் என்றாலும் அவைகளுக்கு இந்த உசூரியஸ் லோன் ஆக்ட் அப்ளை ஆகும். 4 சதவீதம் முதல் 6 சதவீதத்திற்குமேல் அவைகளுக்கு வட்டி வாங்கக்கூடாது என்று கர்நாடக உயர்நீதி மன்றமும், ஆந்திரா உயர்நீதிமன்றமும், வேறு பல நீதி மன்றங்களும் சொல்லியிருக்கின்றன. பல்வேறு சலுகைகளை விவசாயிகளுக்கு வழங்கியிருக்கிறது. அரசாங்கம் மின் கட்டண பாக்கிக்காக இந்த 24 சதவீதம் வட்டி அல்லது அபராதம் என்று இருப்பதை கருணையுடன் குறைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே இதுபற்றி மின்துறை ஆய்வு செய்ய, மின் வாரியத்திற்கு அறிவுரை வழங்கப்படும்.

**குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை அமைத்தல்.**

626. (*வினா எண். 13887)—**திரு. கோ. பெருமாள் பிள்ளை, டாக்டர் அ. பொன்னுசாமி, திரு. ச. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி முனையில் திருவள்ளுவர் சிலை வைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்திற்கு அருகாமையில் இருக்கும் ஒரு சிறிய பாறையின் மீது ரூ. 432 இலட்சம் செலவில் செப்புத் தகட்டினால் ஆன திருவள்ளுவர் சிலை ஒன்றினை நிறுவ அரசு

முடிவெடுத்தது. கட்டுமான பணி மற்றும் சிலை அமைப்பது ஓர் தனி இனமாக இருப்பதால் நல்ல அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று, தகுதியுடையவர்களின் பட்டியல் தயார் செய்ய செய்தித் தாளில் விளம்பரம் செய்யப்பட்டது. அதன் தொடர்பாக இப்பணிகளைச் செய்ய சில நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று, விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கோ. பெருமாள் பிள்ளை : தலைவரவர்களே, திருவள்ளுவர் சிலை அமைப்பதற்கான பணி விரைவாக நடைபெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள் ; நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் வருகின்ற பயணிகள் கண்டுகளிக்கின்ற வகையில் திருவள்ளுவருக்கும், விவேகானந்தருக்கு சிலை அமைத்து, மண்டபம் கட்டியிருப்பதைப் போல சிலை அமைத்து மண்டபம் கட்டுகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, மண்டபம் அமைக்கிற கருத்துரு இல்லை. அமெரிக்காவில் சுதந்திர தேவி சிலை இருப்பதைப் போன்று தனியாக இருக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருதுகின்றார்கள்.

டாக்டர் அ. பொன்னுசாமி : தலைவரவர்களே, இப்போதெல்லாம் திருவள்ளுவருடைய உருவச் சிலையாக இருந்தாலும், உருவப் படமாக இருந்தாலும் நீண்ட தாடி வைத்து உருவாக்கப்படுகிறது. '' மழித்தலும் நீட்டலும் வேண்டா'' என்று உலகப் பொதுமறையாகிய தன்னுடைய பொய்யா மொழியில் சொல்லியிருக்கிறார். ஆகவே, அவருடைய கருத்துப்படி அவர் நீண்ட தாடி வைத்திருக்கமாட்டார். மழித்தலும் இல்லாமல், நீட்டலும் இல்லாமல் அதேநேரத்தில் இரேக்கர் போல் குறுந்தாடி வைத்திருக்கலாம். ஆகவே, திருவள்ளுவர் சிலையை அமைக்கும் போது நீண்ட தாடி இல்லாமல் அழகாகவும், கம்பீரமாகவும் குறுந்தாடியுடன் அமைக்க அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் எப்படி திருவள்ளுவர் சிலை இருக்கவேண்டுமென்று ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ச. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்படுவதுபோல தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் திருவள்ளுவர் சிலையை அமைக்க அரசு முன்வருமா ?



மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அப்படி ஒரு உத்தேசம் இல்லை.

திரு. எப். எம். இராசரத்தினம்: தலைவரவர்களே, குமரிமுனை சிறப்பான சுற்றுலா மையம் என்பதால் உலக நாடுகளிலிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகள் அனைவரும் தெரிந்து கொள்ளுகின்ற வகையில் திருக்குறளை உலக மொழிகளில் எல்லாம் குறித்து வைகவும், அதைப்போன்று திருவள்ளுவர் பற்றி அறிஞர் பெருமக்கள் தெரிவித்திருக்கின்ற கருத்துக்களை எல்லாம் தொகுத்து வைக்கவும் ஏற்பாடு செய்யப்படுமா ? அவற்றை எல்லாம் அங்கே தொகுத்து வைத்து ஒரு நூல் நிலையமும் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன். தலைவரவர்களே அங்கே திருக்குறளை எழுதி வைப்பதற்கான கருத்துக்கள் இருக்கின்றன.

திரு. ஜி. கே. ஜே. பாரதி: தலைநாயகர் அவர்களே, குமரிமுனையில் ஒரு அழகான வள்ளுவர் சிலையை அமைக்கவிருப்பது குறித்து பெருமகிழ்ச்சி அடைவதோடு அந்த சிலை நின்ற கோலத்தில் வைக்கப்படுகிறதா அல்லது அமர்ந்த கோலத்தில் வைக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் 1330 அருங்குறள்களையும் தொகுத்து ஆராய்ச்சி செய்ய ஒரு ஆராய்ச்சிக் கூடத்தையும் அமைத்து, முனைவர் பட்டத்தை பெற விரும்பும் மாணவர்களுக்கு அருமையான ஒரு தூண்டுகோலாக அது அமையும் வகையில் உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, சிலை நின்ற திருக்கோலத்தில்தான் இருக்கும். சிலையின் நெஞ்சு வரையில் 'லிஃப்டும்' நெஞ்சுக்குமேல் ஏணியும் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிட்டு பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்று என்பதைக் குறிக்கும்.]

## 3. அறிவிப்பு.

### பேரவை விதிகள் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 256-ன் கீழ் 1987-88 ஆம் ஆண்டிற்கு பின்வரும் உறுப்பினர்களை பேரவை விதிகள் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன் :—

1. மாண்புமிகு முதல் அமைச்சர்
2. மாண்புமிகு பேரவை முன்னவர்
3. மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர்.
4. மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர்
5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
6. மாண்புமிகு திரு. உ. சுப்பிரமணியன், எதிர்க்கட்சித் தலைவர்.
7. திரு. துரை கோவிந்தராசன், அரசு தலைமைக் கொறடா.
8. திரு. செ. செம்மலை
9. திரு. என். எஸ். வி. சித்தன்
10. திரு. டி. ஆர். வேங்கடரமணன்
11. திரு. மா. சின்னராசு
12. திரு. கி. மனோகரன்
13. திரு. கு. ரமணி
14. திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்
15. திரு. மா. சுந்தரதாஸ்
16. திரு. பொ. உத்திராபதி

பேரவை விதி 256-ன் கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவராவார்.

## 4. தகவல் கோரல்.

### (அ) குறைந்த விலையில் பம்பு செட்டுகளைத் தருவதாக ஒரு நிறுவனம் வெளியிட்டுள்ள விளம்பரம் குறித்து.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லிங்க் மார்க்கெட்டிங் சர்வீசஸ் என்ற நிறுவனம் விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் பம்ப் செட்டுகளைத் தருவதாக விளம்பரம் செய்திருக்கிறது. 9—3—1987



அன்று தினமலர் மதுரைப் பதிப்பில் ரூபாய் 15,000 பெறுமானம் உள்ள பம்ப் செட்டை மூன்றாயிரம் ரூபாய்க்கு விற்பதாக விளம்பரம் வந்திருக்கிறது. அதற்கான விண்ணப்ப பாரம் ரூபாய் 500 கொடுத்து வாங்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது அரசினுடைய ஆதரவோடு நடக்கின்றதா? இதைப் பொறுத்தவரையில் மீதிப் பணத்தை வெளிநாட்டு நிறுவனங்கள் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது சரிதானா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விளம்பரத்தை நானும் பார்த்தேன். இது பற்றி இலாக்காவினிடத்திலே தகவல் கேட்டிருக்கிறேன். அந்த விபரத்தை விரைவில் அவைக்கு அறிவிக்கிறேன்.

### (ஆ) மதுரை மாவட்டம் குடகனார்பட்டியில் மின்சாரத்திற்கு கூடுதல் சர்சார்ஜ் விதித்திருப்பது குறித்து.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டத்தைச் சேர்ந்த குடகனார்பட்டி என்ற கிராமத்தில் மின்சார வாரியத்தில் பழைய மின் கட்டண பாக்கிகளை ஒன் ப்ளஸ் ஒன் என்ற வீதத்தில் கட்டியிருக்கிறார்கள். அப்படி பழைய பாக்கியைக் கட்டிவிட்ட அனைத்து விவசாயிகளைப் பொறுத்தவரையிலும் அவர்கள் மேற்கொண்டும் கூடுதலாக சர்சார்ஜ் என்று கூறி பல்லாயிரக்கணக்கான ரூபாய் கட்ட வேண்டும் என்று சொல்லி நோட்டீஸ் விட்டிருக்கிறார்கள். இதை உடனடியாக நிறுத்தி வைக்கின்ற வகையில் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் இருக்கிறதா ? அல்லது வாரியத்திற்கு உடனடியாக அறிவுரை வழங்கி அதை நிறுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முற்படுவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதனை எனது கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். சம்பந்தப்பட்ட மதுரை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களை இங்கே வரச் சொல்லியிருக்கிறேன். ஏற்கெனவே கட்டப்பட்டிருந்தால் மீண்டும் ஏன் கேட்கப்பட்டது என்று கேட்டு, தவறாக இருந்தால் அதை ரத்து செய்யவும், மேற்கொண்டு கட்டவேண்டிய கட்டணத்தை வசூலிக்காமல் இருப்பதற்கும் மின்துறை ஆணை பிறப்பிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு:

(அ). கோவை மாவட்டத்தில் நல்லூர் இராமத்தில் தொழிலாளர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க வேண்டியதன் அவசியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. சுப்ப
ராயன், ஆ. நடராசன், ஆகியோர் ஒரே பொருள் குறித்து
கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில்
ஒருவர் மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்கு அதைக்
கொண்டு வருவார்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, "கோவை மாவட்டம், பல்லடம் வட்டம், நல்லூர்
கிராமத்தில் 7 வருடமாக வீடு கட்டிக் குடியிருந்து வரும் 177
ஏழைத் தொழிலாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்
படாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த
நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர்
அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை
வைக்கிறேன்:—

அறிக்கை.

கோவை மாவட்டம், பல்லடம் வட்டம், நல்லூர் கிராமம்
புல எண். 736/1-ஏ-யில் 3.10 ஏக்கர் விஸ்தீரணத்தில் உள்ள அரசு
நிலத்தில் 162 நபர்கள் ஓட்டுவில்லைக் கட்டிடங்கள் கட்டிக்
கொண்டு வசித்து வருகிறார்கள். அவர்கள் யாவரும் நெசவுத்
தொழில் போன்ற பல தொழில்களைச் செய்து கொண்டு வரு
கிறார்கள். மேற்படி நிலம் புஞ்சைத் தரிசு என்று வகைபாடு
கொண்டுள்ளது. மேற்படி நிலம் 1961-ம் ஆண்டு திருத்தப்பட்ட
தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு நிர்ணயம்)
சட்டத்தின் சட்டப் பிரிவு 18(1)-ன் கீழ் அரசினால் கையகப்
படுத்தப்பட்ட நிலமாகும். அந்த நிலம் திரு. மாரிமுத்து
பண்டாரம் என்பவருக்கு விவசாயத்திற்காக ஒப்படை செய்யப்
பட்டது. ஒப்படை விதிகளின்படி மேற்படி நிலத்தில் சாகுபடி
செய்யாமல் நிலத்தை வீட்டுமனைகளாக மாற்றி மனை ஒன்றுக்கு
ரூ. 1,000 என மாரிமுத்து பண்டாரம் விற்பனை செய்தது
தெரியவந்து அவருக்கு செய்த நில ஒப்படை ரத்து செய்யப்
பட்டது. ஒப்படை ரத்து செய்ததைத் தெரிந்து கொண்ட
பொது மக்கள் சிலர் அந்நிலத்தில் குடிசைகள் கட்டி ஆக்கிரமிப்பு
செய்துள்ளனர். மேற்படி அரசு கையகப்படுத்திய நிலத்தில்
வீடுகள் மூலம் ஆக்கிரமிப்பு செய்துள்ளது மிகுந்த ஆட்சேபணைக்
குட்பட்டது. மேற் குறிப்பிட்ட நிலம் தமிழ்நாடு நிலச் சீர்
திருத்தச் சட்டம் 1961-ன் கீழ் உபரி நிலமாக எடுக்கப்பட்ட
படியால் மேற்படி நிலத்தை தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (உபரி
நில விநியோக) விதிகள் 1965-ன் கீழ் பயன்படுத்துவது பற்றிய
செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.



திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பொதுவாக அரசு இயற்றுகிற சட்ட விதிகளும்,
சட்ட நடைமுறைகளும் மக்களுக்குத் துணை செய்ய வேண்டும்
என்ற நோக்கத்தோடுதான் இயற்றப்படுகின்றன. ஆனால்
நடை முறையில் இந்த சட்ட நடைமுறைகளும், சட்டத்தை
அமலாக்குகிற முறைகளும் மக்களுக்கு எதிராகப் போகிறபோது
அவற்றை மக்களுக்கு ஆதரவாகத் திருத்தி அமைத்துக் கொள்
வதுதான் மக்களின் தேவைகளைப் பூர்த்தி ஆக்குவதற்குரிய
பொருத்தமான நடைமுறையாக இருக்கும். அந்த அடிப்படை
யில், 177 ஏழைத் தொழிலாளர்கள் குடியிருந்து வரும்
அந்தப் பகுதியினைப் பொறுத்தவரையில் நில உச்சவரம்புச்
சட்டத்தின் கீழ் வருகின்ற உபரி நிலம் என்று அறிவிக்கப்பட்டு
இருந்தாலும் கூட நடைமுறையில் அது விவசாயத்திற்குப் பயன்
படுத்த வாய்ப்பே இல்லாத நிலைமையில் 7 வருட காலமாக
அங்கே ஓட்டு வீடு கட்டி குடியிருந்து வருகிற அந்தப் பகுதியைச்
சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கே உரிமையாக்குகிற முறை
யில் மனைப் பட்டா வழங்க அரசு முயற்சிக்குமா என்பதை நான்
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளியவர்களுக்குச்
சாதகமாகவும், வசதியாகவும் இருக்கத்தக்க வகையில்தான் சட்ட
முறைகள் இருக்கின்றன. அதே அளவில் ஏழைகளும் சட்டத்
திற்கு ஒத்துழைப்பு தரவேண்டும். ஏழைகளாக இருக்கிறோம்
என்று சொல்லி, விதிமுறைப்படி தரவேண்டும் என்று கேட்டு
விண்ணப்பித்து இருந்தால் நல்லது. ஒருவருக்கு ஒப்படை செய்
யப்பட்ட நிலம் என்பதைப் பொறுத்தவரையில் ஒப்படைக்கப்
பட்ட நோக்கத்தை அவர்கள் நிறைவேற்றவில்லை என்ற
காரணத்தினால் அரசாங்கம் மீண்டும் அதை எடுத்துக் கொண்டது.
அப்படி எடுத்துக் கொண்ட நிலத்தை அரசாங்கத்தினுடைய
அனுமதி இல்லாமல் அவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு அவர்க
ளாகவே வீடு கட்டிவிட்டார்கள். அது எந்த விதிக்கும் உட்
பட்டதாக ஆகாது. அது ஆட்சேபகரமானதுதான். அந்த
நிலம் 1961 ஆம் ஆண்டின் சட்டப் பிரகாரம் உபரி நிலமாக
எடுக்கப்பட்டுள்ளதால் மேற்படி நிலத்தை தமிழ்நாடு நிலச்
சீர்திருத்த உபரி நில விநியோக விதிகளின் கீழ் ஆராய்ந்து வரு
கிறார்கள். ஏற்கெனவே ஆக்கிரமித்து வீடு கட்டியிருக்கின்ற
நிலத்தைப் பொறுத்தவரையில் அவர்களுக்குப் பட்டா செய்
வதற்கு சட்டம் இடம் தருகிறதா என்பதைத்தான் ஆராய
வேண்டும். ஏனென்றால் அவர்களாகவே ஆக்கிரமித்து
விட்டார்கள். கேட்டு வாங்கி இருந்தால் அது வேறு. அவர்
களாக ஆக்கிரமித்தது தவறு. எனவே அதை எப்படித் தர
வேண்டும் என்பதைத்தான் நாம் கவனிக்க வேண்டும்.

(முற்பகல் 11–10)

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்னர், சம்பந்தப்பட்ட பகுதியில் வசிக்கக்கூடிய அந்த ஏழைத் தொழிலாளர்கள் ஒரு பள்ளத் திலே குடியிருந்தார்கள். மழை பெய்து வெள்ளம் வந்தபோது அரசு அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் அவர்கள் காட்டிய இடத்தில் தான் அப்போது குடி கொண்டார்கள். அப்படி 7 ஆண்டுக்காலம் சொந்தச் செலவில் வீடு கட்டிக் கொண்டு வாழ்ந்து வரும் அந்த ஏழைத் தொழிலாளர்களின் அந்தப் பகுதியை கோவை மாவட்ட ஆட்சித் தலைவரும், வருவாய்த்துறை அதிகாரியும் பார்வையிட்டுப் பரிசீலித்து இந்த இடம் வேறு எதற்கும் பயன்படாது, ஆகவே அவர் களுக்கே கொடுத்து விடலாம் என்று பரிந்துரை செய்திருப்ப தாக நான் கருதுகிறேன். எனவே இப்போதாவது மனிதாபி மான அடிப்படையில், வெறும் சட்டத்திட்டங்களின் நுணுக்கங் களையே பார்த்துக் கொண்டிருக்காமல், மனிதாபிமான அடிப் படையில் அவர்களுக்கே பட்டா போட்டு கொடுப்பதற்கும், அதை யும் நடைமுறையில் காலதாமதம் இல்லாமல் செய்வதற்கும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல கோவை மாவட்டத்தைச் சேர்ந்த வருவாய் துறை அதிகாரி அந்த நிலம் வேறு வகையில் பயன் படுத்த முடியாத நிலம், விவசாயம் கூட செய்ய முடியாது என் றும் எனவே அவர்களுக்கே மனைப் பட்டா வழங்கலாம் ஆட்சே பனை எதுவும் இல்லை என்றெல்லாம் சொல்லி பரிந்துரை செய் திருக்கிறார்கள். வருவாய் துறையின் சிறப்பு ஆணையாளர் அவர்களின் பரிந்துரையும் அரசுக்கு வந்திருக்கிறது. அவைகள் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. எந்த நிலையில் இருக்கிறது என்று இப்போது என்னால் சொல்ல இயலாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நியாயத்தின் அடிப்படையில், சட்டத்தின் அடிப்படையில் வழங்கா விட்டாலும் கருணையின் அடிப்படை யில் வழங்குங்கள் என்று சொன்னார்கள். நியாயத்தின் அடிப் படையில் இதை ஒப்புக் கொள்ள மாட்டேன். கருணையின் அடிப்படையில் வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

(ஆ). டாசல் நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்குதல்.

திரு. செ. செம்மலை: : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' டாசல் நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதால் இந்த நிறுவனம் மூடப்படவிருக்கிறது என்ற நிலை யில் அந்த நிறுவனத்தின்கீழ் இயங்கி வரும் தொழிற்கூடங்களில் பணியாற்றி வரும் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள



அச்சம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராமாராம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விளக்க அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தொழில் வணிகத் துறை மற்றும் டான்சி நிறுவனத்தின் கீழ் இயங்கி வந்த பீங்கான் தொழிற் பிரிவுகள், 1974 ஆம் ஆண்டு டாசல் நிறுவனம் நிறுவப்பட்டவுடன், அந்நிறுவனத் திற்கு மாற்றப்பட்டன. இப்பிரிவுகள் பெரும்பாலும் அவற்றின் ஆரம்ப காலத்திலிருந்தே தொடர்ந்து இழப்பில் இயங்கி வருகின்றன. இத்தொடர் இழப்பிற்கு, அதிக மூலதன முத லீடு, குறைந்த உற்பத்தித் திறன், அதிக உற்பத்திச் செலவு, மூலப் பொருட்கள் மற்றும் நிலக்கரி போன்ற இடுபொருட் களின் விலையேற்றம், அதிக தொழிலாளர்கள் எண்ணிக்கை மற்றும் அங்காடியில் மற்ற தனியார் நிறுவனங்களின் போட்டியால் டாசலின் உற்பத்திப் பொருட்களுக்கு ஏற்பட் டுள்ள தேவைக் குறைவு ஆகியவை சில முக்கியமான காரணங் களாகும். 31–3–1986 அன்றுள்ளபடி டாசல் நிறுவனப் பிரிவுகளின் இயக்கம் குறித்த விவரம் பின்வருமாறு :—

| பிரிவின் பெயர். | 31-3-1986 அன்றுவரை சேர்ந்துள்ள இழப்பு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. பீங்கான் தொழிலகம் (துப்புரவு சாதனங்கள் பிரிவு), விருத்தாசலம் .. .. .. | 89.41 |
| 2. சுற்குழாய் தொழிற்சாலை, விருத்தாசலம் .. | 31.91 |
| 3. இயந்திரச் செங்கற் தொழிற்சாலை, திருமழிசை. .. .. .. | 150.47 |
| 4. பீங்கான் தொழிற்பேட்டை மற்றும் சேவை மையம், விருத்தாசலம் .. .. | 68.22 |
| 5. கலை மட்பாண்ட நிலையம், விருத்தாசலம் | 42.47 |
| 6. பீங்கான் மையம், ஓமலூர் .. | 34.06 |
| சேர்ந்துள்ள மொத்த இழப்பு .. | [illegible] |

2. டாசல் நிறுவனப் பிரிவுகளின் இயக்கம் குறித்து ஆய்வு
செய்த பொது நிறுவனங்கள் குழு, தனது 1983–84 மற்றும்
1984–85 ஆம் ஆண்டுக்கான அறிக்கைகளில் பின்வருமாறு
பரிந்துரை செய்துள்ளது :—

(அ) அதிக இழப்புடன் வணிக ரீதியில் நிலைத்து
இயங்க இயலாத பிரிவுகளை மூடிவிடுவதுபற்றி அரசு ஆய்வு
செய்யலாம்;

(ஆ) அடிப்படையில் பயிற்சி மையங்களாக இயங்கும்
பிரிவுகளை துறையே ஏற்று நடத்தலாம் (அல்லது) அரசு
தக்க மானியம் அளிக்கலாம் ;

(இ) திருமழிசை இயந்திரச் செங்கற் தொழிற்சாலை,
டாசல் நிறுவனத்தின் நிதி ஆதாரத்தை பெருமளவில் குறைக்
கும் விதத்தில் இயங்கி வருவதால், மேற்கொண்டும் நிறுவனத்
திற்கு இழப்பு ஏற்படுவதை தவிர்க்கும்பொருட்டு இப்பிரிவின்
எதிர்காலம் குறித்து அரசு விரைந்து முடிவு எடுக்கவேண்டும்.

3. பத்தி 1-ல் குறிப்பிட்டுள்ள ஆறு பிரிவுகளில், விருத்தா
சலம் கலை மட்பாண்ட நிலையம் மற்றும் ஓமலூர் பீங்கான்
மையம் ஆகிய இரு பிரிவுகளில், நிலக்கரி பற்றாக்குறை மற்றும்
உற்பத்திப் பொருட்கள் குவிப்பு ஆகிய காரணங்களினால், ஏற்
கெனவே தற்காலிக நிறுத்திவைப்பு வேலை (Lay off) வழங்கப்
பட்டுள்ளது. துவக்கக் காலத்திலிருந்தே நலிவடைந்த பிரிவாக
இயங்கிவரும் திருமழிசை இயந்திரச் செங்கற் தொழிற்
சாலையில் பெரிய அளவில் இயந்திரங்களைப் பழுதுபார்க்கும்
பணியை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் உற்பத்தி நிறுத்
தம் செய்யப்பட்டுள்ளது. துப்புரவு சாதனங்கள் தொழிற்
சாலையில் ரூ. 70 இலட்சம் பெறுமான உற்பத்திப் பொருட்
கள் விற்பனையாகாமல் தேங்கியுள்ளன. இயந்திரச்
செங்கற் தொழிற்சாலை உள்ளிட்ட ஏனைய டாசல் நிறுவனப்
பிரிவுகளை பொருளாதார ரீதியில் நிலைத்து இயங்கச் செய்
யும் வகையில் எடுக்கப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.

4. மேற்கண்ட காரணங்களை கருத்தில்கொண்டு, ஆரம்
பத்திலிருந்தே இழப்பில் இயங்கிவருவதும், நிலைத்திருக்க
முடியாததுமான டாசல் நிறுவனப் பிரிவுகளை சீரமைக்கக்
கோரும் செயற்குறிப்பு ஒன்றினை டாசல் நிறுவனத் தலைவர்
மற்றும் நிர்வாக இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார். இச்
செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

*திரு. செ. செம்மலை : மாண்மிபுகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த நிறுவனம் மூடப்பட்டு விடுமோ என்ற
அச்சத்தைப் போக்குகிற வகையில் அமைச்சர் அவர்கள் அளித்
திருக்கிற அறிக்கையில் கண்ட விவரங்களும், மானியக் கோரிக்
கையில் அவரால் சொல்லப்பட்ட விவரங்களும் இன்றைக்கு
அந்தத் தொழிலில் பணி புரியக் கூடிய 4 ஆயிரம் தொழிலாளர்
களுக்கு மன நிம்மதி அளிக்கக் கூடியதாக இருக்கிறது.



என்றாலும் அந்த நிறுவனத் தலைவரிடமிருந்து அதைச் சீரமைப்
பதற்கான ஆலோசனை கேட்டு அரசுக்கு வந்திருப்பதாகவும்,
அது பரிசீலனையில் இருப்பதாகவும் இங்கே குறிப்பிடப்பட்
டிருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சரிடத்தில் கேட்டுக்
கொள்ள விரும்புவது அந்தப் பரிசீலனையை விரைவுபடுத்தி
எப்படி டான்சி நிறுவனத்தை சீரமைத்து நிலைத்து
நிற்கக் கூடிய நிறுவனமாக மாற்றினார்களோ, அது போல
இந்த நிறுவனத்தையும் நிலைத்து நிற்கச் செய்ய வேண்டும்.
கடந்த பத்து மாத காலம் லே-ஆப் என்ற நிலையில் மூடி
யிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் அல்லல் படுகிறார்
கள். அந்த சூழ்நிலைகளையெல்லாம் கருத்தில் கொண்டு துரித
நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம். தலைவர் அவர்களே,
விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப் போல ஏற்கெனவே
4 கோடியே 16 லட்சத்து 54 ஆயிரம் ரூபாய் வரையிலும்
இந்தத் துறையின் மூலம் அரசுக்கு நட்டம் ஏற்பட்டிருக்கிறது.
பல முயற்சிகள் மேற்கொண்டும் இந்த நட்டத்தைத் தவிர்க்க
முடியவில்லை. முயற்சிக்கலாம் என்று சொன்னார்கள்.
முயற்சிக்கலாமே தவிர, காப்பாற்ற முடியுமா என்பது சந்
தேகமாகவே இருக்கிறது.

திரு செ. செம்மலை. மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த அறிக்கையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது,
தனியார் நிறுவனங்கள் லாபகரமாக நடத்தப்படுகின்றன
என்று. அப்படி இருக்கும் போது ஏன் அரசு நிறுவனம், பொது
நிறுவனம் மட்டும் லாபகரமாக நடத்தப்பட முடியாது என்
பது கேள்வியாகவே இருக்கிறது. எனவே நான் விரும்புவ
தெல்லாம், இப்படி சீரமைக்கின்ற நிலமையில் அந்த நிறு
வனத்தை லாபகரமாக நடத்துவதற்கும், அந்தத் தொழி
லாளர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கும் ஒரு வல்லுநர்
குழுவை அமைத்து எப்படி அதை சீரமைப்பது என்பது குறித்து
ஆராய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவதற்கு அமைச்சர்
அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம். : தலைவர் அவர்களே,
நல்ல ஆய்வுகளைச் செய்து கொண்டு வருகிறார்கள். தனி
யார் துறையிலும் பல சங்கடங்களுக்கிடையில் தான் இந்தத்
தொழில் நடந்து கொண்டிருக்கிறது. தனியார் துறையில்
எல்லாவற்றையும் இயந்திரமயமாக்கி இருக்கிறார்கள். ஆனால்
நாம் அப்படிச் செய்யவில்லை. அது ஒரு காரணமாக இருக்
கிறது. தற்போது நடந்து கொண்டிருக்கும் ஆய்வுகளிலிருந்து
நல்ல முடிவை எதிர்பார்க்கலாமென்று சொல்ல முடியவில்லை.
இருந்தாலும் எதிர்பார்போம்.

(இ) கனிமங்களுக்கான சுரங்கக் குத்தகைகளைப் புதுப்பிக்காததால்
தொழிலாளர்கள் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் டி. ஆர்.
வேங்கடரமணன், எஸ்.பி. மணவாளன் ஆகியோர் ஒரே
பொருள் குறித்து கவன ஈர்ப்புத் திர்மானம் கொடுத்துள்ள
னர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு தொழில் மற்றும்
வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு
அதைக் கொண்டு வருவார்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவர் அவர்களே,
''தமிழகத்தில் பரவலாகவும் குறிப்பாக கோவை மாவட்
டத்தில் ஜிப்ஸம் மற்றும் ஏனைய கனிமங்களை வெட்டி
யெடுக்கும் உரிமங்கள் புதுப்பிக்கப்படாததால் கனிமப் பற்
றாக்குறை ஏற்பட்டுள்ளதும் அதைச் சார்ந்த தொழிலாளர்
கள் பாதிப்பும் குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம்
வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்
மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே,
பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

தமிழ்நாட்டில் தொழிலியல் கனிமங்களுக்காக வழங்கப்பட்ட
சுரங்கக் குத்தகைகள் நாளது தேதி வரை 424 ஆகும். அவற்றில்
35 சுரங்கக் குத்தகை ஜிப்ஸத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.
தமிழ்நாட்டில் கிடைக்கக் கூடிய பல தரப்பட்ட ஜிப்ஸத்தின்
மொத்த இருப்பு 18.20 மில்லியன் டன் என்று மதிப்பிடப்பட்
டுள்ளது. அவைகள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 15.37
மில்லியன் டன் ஜிப்ஸம் இருப்பும், கோயம்புத்தூர் மாவட்டத்
தில் 1.44 மில்லியன் டன் ஜிப்ஸம் இருப்பும் மற்றும், காமராஜர்,
இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் சிறிய அளவில்
அதாவது 1.39 மில்லியன் டன் ஜிப்ஸம் இருப்பும் உள்ளதாக
மதிப்பிடப்பட்டுள்ளது.

2. தமிழகத்தில் ஜிப்ஸத்திற்கான சுரங்கக் குத்தகை
மொத்தத்தில் 35 உள்ளன. மாவட்ட வாரியாக ஜிப்ஸம் சுரங்
கக் குத்தகை விவரம் வருமாறு:—

கோயம்புத்தூர் மாவட்டம்: 17, திருச்சிராப்பள்ளி மாவட்
டம்: 13, காமராஜர் மாவட்டம்: 2, திருநெல்வேலி மாவட்
டம்: 2, இராமநாதபுரம் மாவட்டம்: 1.

கிடைக்கக்கூடிய ஜிப்ஸத்தில் கணிசமான அளவு சிமெண்ட்
தொழிற் சாலைகளுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. சிமெண்ட்
உற்பத்தி செய்யும்போது சிமெண்ட் கிளிங்கர் கெட்டியாக



இறுகும் நேரத்தை முறைப்படுத்துவதற்கு ஜிப்ஸம் பயன்படு
கிறது. சிறிய அளவு ஜிப்ஸம் மாவுக் கலவை, சாக்குக் கட்டி
மற்றும் மண் வளத்தை பதனப்படுத்துவதற்கும் உபயோகப்
படுத்தப்படுகிறது.

3. தமிழ்நாட்டில் ஆண்டொன்றுக்கு சராசரி 36 இலட்சம்
டன் சிமெண்ட் உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே மாநிலத்
தில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு மொத்தத்தில்
ஆண்டொன்றுக்கு 1.4 முதல் 1.5 இலட்சம் டன் ஜிப்ஸம் தேவைப்
படுகிறது. 1980 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி, கோயம்புத்
தூர் மற்றும் இதர மாவட்டங்களில் ஜிப்ஸம் உற்பத்தி 86,000
டன் என்ற அளவில் இருந்தது. அந்த உற்பத்தி 1983–84ஆம்
ஆண்டில் 35,000 டன் என்ற அளவில் கணிசமாகக் குறைந்து விட்
டது. இந்த உற்பத்திக் குறைவுக்கு முக்கிய காரணம் சிமெண்ட்
தொழிற்சாலைகளில் நல்ல தரம் வாய்ந்த ஜிப்ஸம் உபயோகப்
படுத்துவதுதான். பெரும்பாலான சிமெண்ட் தொழிற்சாலைகள்
உப்பளங்களில் கிடைக்கக்கூடிய அதிகத் தூய்மையான ஜிப்ஸத்
தையே விரும்புகின்றன. சராசரியாக 50 சதவிகிதம் உப்பளங்
களில் கிடைக்கக்கூடிய ஜிப்ஸத்தையும், 30–35 சதவிகிதம்
திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய பொடிவகை
(vein type) வடிவ ஜிப்ஸத்தையும், மற்றும் கோயம்புத்தூர்
மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய உருளை வடிவ (nodular type)
ஜிப்ஸத்தையும் சிமெண்ட் தொழிற்சாலைகள் உபயோகப்படுத்
துகின்றன.

4. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 1980 ஆம் ஆண்டிலி
ருந்த சுரங்கக் குத்தகைகள் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அள
வுக்கு இன்றைய தேதியில் குறைக்கப்படவில்லை என்பதை இத்
தருணத்தில் குறிப்பிடலாம். கடந்த மூன்று ஆண்டு காலத்தில்
இரண்டு சுரங்கக் குத்தகை மட்டும் புதுப்பிக்கப்படவில்லை; அவை
களும் சட்ட ரீதியான வழிவகைகளை பூர்த்தி செய்யாததால்
தான் புதுப்பிக்கப்படவில்லை. ஜிப்ஸம் உள்ளிட்ட தொழிலியல்
கனிமங்களை வெட்டி எடுத்து அவைகளை நல்ல தொழில் திட்
டங்களுக்காகப் பயன்படுத்துவதற்கு தமிழக அரசு ஊக்கமும்
ஆக்கமும் அளித்து வருகிறது. உண்மையில் தமிழ் நாட்டிலிருந்து
சிறு அளவு ஜிப்ஸம் அண்டை மாநிலங்களில் உள்ள சிமெண்ட்
தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகிறது. எனவே சுரங்கக் குத்
தகைகள் புதுப்பிக்கப்படாததால் ஜிப்ஸம் உற்பத்தி குறிப்பாக
கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெரிய அளவில் பாதிக்கப்பட்
டுள்ளதென்பதற்கு ஆதாரம் இல்லை.

5. கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஜிப்ஸம் தவிர கிடைக்
கக் கூடிய முக்கியமான கனிமங்கள்: மதுக்கரை, எட்டிமடை மற்
றும் வாலையார் பகுதிகளில் கிடைக்கக்கூடிய படிவ வகை சுண்
ணாம்புக்கல், இப்பகுதிகளில் கிடைக்கக்கூடிய கணிசமான அளவு
சுண்ணாம்புக்கல் இருப்புக்கள் திருவாளர்கள் ஏ.சி.சி. சிமெண்ட்
நிறுவனத்திற்கு சிமெண்ட் உற்பத்தி செய்வதற்காக குத்தகைக்கு

விடப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டம் எட்டிமடை பகுதியில் ஒதுக்கமாக இருக்கக்கூடிய 5 இலட்சம் டன் படிவ வகை சுண்ணாம்புக்கல் இருப்பு தனியார் துறையில் சிறு சிமெண்ட் ஆலை நிறுவுவதற்காக சுரங்கக் குத்தகை வழங்கப்பட்டுள்ளது. எனவே கோயம்புத்தூர் மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய எல்லா சுண்ணாம்புக்கல் இருப்புகளும் தனியார் துறையில் துரிதமாக வெட்டியெடுக்கப்பட்டு வருகிறது.

இதர முக்கிய தொழிலியல் கனிமங்கள்:—

6. தமிழகத்தில் உள்ள முக்கியமான தொழிலியல் பெருங் கனிமங்கள் பின்வருமாறு:—லிக்னைட், சுண்ணாம்புக்கல், மேக்னசைட், பாக்ஸைட், குவார்ட்ஸ் அண்டு பெல்ஸ்பார்.

I. தென் ஆற்காடு, மற்றும் திருச்சி மாவட்டங்களில் 400 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் லிக்னைட் கிடைப்பதாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் 270 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 2,000 மில்லியன் டன்னுக்கு மேல் உள்ளாற்றலுடைய லிக்னைட் இருப்பு நெய்வேலி லிக்னைட் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

II. தமிழகத்தில் உள்ள சுண்ணாம்புக்கல் மொத்த இருப்பு 820 மில்லியன் டன். அவற்றில் 740 மில்லியன் டன் ஒதுக்கி வைக்கப்படாத இடங்களில் உள்ளன. ஒரு குறிப்பிடப் பட்ட அளவு 8 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு பகுதியில் உள்ள 84 மில்லியன் டன் சுண்ணாம்புக்கல் மட்டும் பொதுத் துறையில் வெட்டியெடுத்து உபயோகப்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

III. மேக்னசைட் மொத்த இருப்பு 48 மில்லியன் டன். அவற்றில் 30 மில்லியன் டன் ஒதுக்கி வைக்கப்படாத 20 சதுர கிலோ மீட்டர் பகுதியில் கிடைக்கின்றன. 10 முதல் 12 மில்லியன் டன் மேக்னசைட் ஒதுக்கி வைக்கப்பட்ட பகுதியான 35 சதுர கிலோ மீட்டர் பகுதிகளில் கிடைக்கிறது. சேலம் மாவட்டம் சாக் மலைப் பகுதியில் கிடைக்கக் கூடிய மேக்னசைட் இருப்பு மாதிரி நாட்டிலேயே வேறு எங்கும் இல்லை. எஃகுத் தொழில் சாலைகளுக்கு ஆதாரத் தேவையாக வெப்பந்தாக்கிக் கற்களாக மேக்னசைட் பயன்படுவதால் அதன் தேவை அதிகரித்து வருகிறது. எனவே தற்காலத்திலும் மற்றும் எதிர் கால சந்ததியினரும் முறையாகப் பயன்படுத்தும் வகையில் மேக்னசைட்டை சேமித்து வைப்பது மிக அவசியம். மேக்னசைட்டை இரசாயன முறையில் மேம்படுத்தி அதன் தரத்தை உயர்த்தி தொழிற் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதற்கான திட்டத்தை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது.

IV. சேலம் மற்றும் அண்ணா மாவட்டங்களில் கிடைக்கக் கூடிய பாக்சைட் இருப்புகள் தனியார் நிறுவனத்திற்கு அலுமினிய பாளங்கள் உற்பத்தி செய்வதற்காக குத்தகைக்கு விடப்பட்டு வருகிறது.



V. தமிழ்நாடு கனிம நிறுவனம் குவார்ட்ஸ் மற்றும் பெல்ஸ்பார் கனிமத்தை பயன்படுத்தி ஒரு தொழிற்சாலை அமைக்க உத்தேசித்து இருப்பதால் கீழ்க்கண்ட மாவட்டங்களில் கிடைக்கும் குவார்ட்ஸ் மற்றும் பெல்ஸ்பார் கனிமங்களை தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு ஒதுக்கி வைக்க அரசு முடிவு எடுத்துள்ளது:

சேலம், பெரியார், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், அண்ணா மாவட்டம்.

7. கனிமங்கள் இருக்கக்கூடிய பகுதிகளை ஒதுக்கி வைத்திருப்பதை விலக்கிக் கொள்வது சம்பந்தமாக மைய அரசு எஃகு மற்றும் சுரங்க அமைச்சகம் ஒரு குழுவை 1985–86ல் அமைத்தது. அக்குழு பல்வேறு ஆழ்ந்தாய்வுகளுக்குப்பின் தமிழ்நாட்டில் பலதரப்பட்ட தொழிலியல் கனிமங்களான, சுண்ணாம்புக்கல் டோலமைட், களிமண், குவார்ட்ஸ் மற்றும் பெல்ஸ்பார், மேக்னசைட் முதலியவைகளை பொது உபயோகத்திற்காக ஒதுக்கி வைத்திருப்பது நியாயமானதென்றும், அவ்வாறு ஒதுக்கி வைத்துள்ள பகுதிகளை விலக்கத் தேவையில்லை என்றும் முடிவெடுத்துள்ளது.

8. மேற்கண்ட சூழ்நிலையில் தமிழகத்தில் கனிமங்களுக்கான சுரங்கக் குத்தகைகளைப் புதுப்பிக்காததால் மூலப் பொருட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டு அதனால் வேலையில்லா பிரச்சினையை தோற்றுவித்தது என்ற கூற்றுக்கு ஆதாரம் இல்லை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: தலைவர் அவர்களே, 'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்' என்ற பாடலுடைய அழுத்தமும், உண்மையும் என்னைவிட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, தாம் வகிக்கிற பதவியின்காரணமாக அதிகமாகத் தெரியுமென்ற அடிப்படையில் கேட்கிறேன். இன்றைக்கு ஜிப்ஸம் உட்பட வீடு கட்டுவதற்காக ஆற்றிலிருந்து எடுக்கிற மணல் வரையில் எடுப்பதற்கு மிகக் கடுமையான விதிகளை வைத்துக் கொண்டு அங்கே இருக்கிற அதிகாரிகள் மக்களுக்கு பல தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். தமிழகத்தில் தற்போது வறட்சி இருக்கிற நேரத்தில் இந்தக் கனிமத் தொழில் வளர்ச்சி மூலமாகப் பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிற வசதியும், அதன் மூலமாகப் பல தொழில்கள் நடக்கக்கூடிய நிலையும் அந்த அதிகாரிகளின் செயல்பாடு காரணமாகத் தடைபட்டிருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு உடனடியாக அவற்றை நீக்குவதற்கு நல்ல மாற்று வழியைக் கண்டுபிடிக்க முயற்சிப்பார்களா? இந்த இரண்டு உரிமங்களைப் புதுப்பிக்காத காரணத்தால் எத்தனை தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழந்திருக்கிறார்கள் என்ற விவரத்தையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்' என்ற பாடல் நான் அமைச்சர் பதவிக்கு வருவதற்கு முன்பே தெரியும். சுரங்கத் தொழிலைப் பொறுத்தவரையில் எல்லா உதவிகளையும் கொடுத்துக் கொண்டுதான் வருகிறோம். தற்போது புதியதாக, அதிகமாக, கனிமங்களை எடுப்பதற்கில்லை. பலவற்றை 'டாமின்' நிறுவனம் மூலமாக எடுக்க முயற்சிகளை மேற்கொண் டிருக்கிறோம். ஆகவே சுரங்கத் தொழில் ஒழுங்காக நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. ஏதாவது குறைபாடு இருக்குமா னால் அதைக் கவனிக்க அரசு தயாராக இருக்கிறது.

**திரு. எஸ். பி. மணவாளன் :** தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் சிமெண்ட் தொழிலுக்குத் தேவையான சுண் ணாம்புக் கல்லைப் பொறுத்த வரையில் தமிழ் நாட்டில் சுண் ணாம்புக்கல் மொத்த இருப்பு 820 மில்லியன் டன் என்றும் அவற்றில் 740 மில்லியன் டன் ஒதுக்கி வைக்கப்படாத இடங் களில் உள்ளன என்றும் கூறப்பட்டிருக்கிறது. இவ்வளவு அதிக மாக சுண்ணாம்புக் கல் இருக்கிற போது அரசு ஏன் புதிய உரிமங் களைக் கொடுப்பதற்கும், பழைய உரிமங்களைப் புதுப்பிப்பதற் கும் கால தாமதம் செய்கிறது என்று அறிய விரும்புகிறேன். 28–4–1987 ஆம் தேதியன்று மாண்புமிகு அமைச்சர் அளித்த பதிலில் மத்திய அரசு அனுமதியளித்த ஆறு சிமெண்ட் ஆலைகளில் இரண்டு ஆலைகள் ஏற்கனவே உற்பத்தியைத் தொடங்கியுள்ளன என்று குறிப்பிட்டு இருக்கிறார். மீதியுள்ள நான்கு ஆலைகளுக்கு 'மைனிங் லைசென்ஸ்' வழங்கப்பட்டு விட்டதா? அது எப்போது வழங்கப்படும்? அடுத்து அரியலூர் அழகப்பா சிமெண்ட் தொழிற் சாலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டில் திறந்து வைத்தார்கள். இன்றுவரையில் 'மைனிங் லைசென்ஸ்' மாநில அரசால் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதற்குத் தனிப்பட்ட காரணம் ஏதேனும் உண்டா என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, பாரதப் பிரதமர் மறைந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கனிமப் பொருட்களை அளவோடு பயன்படுத்த வேண்டு மென்றும், இயற்கை தந்திருக்கிற செல்வத்தை வீணாக்கிவிட் டால் பல தொழில்களைக் காலப் போக்கில் வளர்க்க முடியாது என்றும் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதுதான் இந்த அரசினுடைய தலையாய கொள்கையாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். சிமெண்ட் ஆலைகளுக்கு தமிழகத் தில் முன்னுரிமை வழங்கிய வகையில் அவர்களுக்கு சுண்ணாம்புக் கல்லைத் தந்து கொண்டிருக்கிறோம். அழகப்பா ஆலையைப் பொறுத்தவரையில் ஒரு சிறிய பகுதி மட்டும் தான் அவர்களிடத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, அவர் களுக்குத் தேவையான கற்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.



(முற்பகல் 11–20)

(ஈ) குறிஞ்சிப்பாடி விவசாய விற்பனைக் கூடத்தில் போதுமான இடவசதியின்மை.

**திரு. ஏ. தங்கராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''குறிஞ்சிப்பாடியில் உள்ள விவசாய விளைபொருள் விற்பனை அங்காடியில் போதுமான இடவசதி இல்லாததால் விவசாயிகள் தங்களுடைய விவசாய விளை பொருள்களைக் கொண்டு வந்து விற்பனை செய்ய முடியாமல் படும் அவதியும், அந்த இடத்தை விரிவு படுத்த வேண்டிய அவசியமும் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக் கிறேன்:—

அறிவிக்கை.

தென் ஆற்காடு விற்பனைக் குழுவின் கீழ் குறிஞ்சிப்பாடி விற்பனைக்கூடம் 29–8–1973 முதல் சுமார் 1 ஏக்கர் நிலப்– பரப்பில், வாடகை இடத்தில் இயங்கி வருகிறது. விவசாயி கள் தங்கள் விளை பொருட்களைக் கொண்டு வந்து விற்க முடி யாமல் அவதிப்படும் நிலைமை இல்லை. இவ் விற்பனைக் கூடத்தில் அலுவலகக் கட்டிடம், பரிவர்த்தனைக் கூடங்கள், விவ சாயிகள் தங்கும் இடம் ஆகிய வசதிகள் தற்காலிகமாக அமைக்கப் பட்டுள்ளன.

மேலும் இவ் விற்பனைக் கூடத்திற்கு சொந்தமாக மேற்படி வசதிகளை அமைக்கும் பொருட்டு 5.87.5 ஹெக்டர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு கட்டிடங்கள், கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

**திரு. ஏ. தங்கராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் தற்போது நடைபெறுகிற இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் ஒரு ஏக்கர் நிலத்தில் வாடகை இடத்தில் இருக்கிறது. அதை விரிவு படுத்துகிற வகையில் 5 ஹெக்டர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு பல ஆண்டுக்காலம் ஆகிறது. ஆகவே இதை விரிவுபடுத்துவதற்கு இவ்வளவு காலதாமதம் ஏற்படுவதற்குஎன்ன காரணம்? இதற்குத் துறை காரணமா அல்லது வேலையை எடுத்தவர்கள் காரணமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, 5.87.5 ஹெக்டர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, கட்டு மானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. விரை வில் முடியும். விரைவிலே அது முடியவில்லை என்று சொன்னால், விரைவில் முடிப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள் ளும்.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுமான வேலைகள் நடைபெறுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். கட்டுமான வேலைகள் பிரிக்கப்பட்டு, பில்லர் வேலைகள், அதாவது கட்டிட வேலைகளைச் செய்வதற்கு ஒருவரையும், மேற்கூரை அமைப்பதற்கு ஒருவரையும் நியமித்து, கட்டிட வேலை முடிந்துவிட்டதாகவும், மேற்கூரை வேலையைச் செய்கிறவர்கள் காலதாமதம் செய்வதாகவும்—அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தெரியாமல் இருப்பதாகவும்—நான் கேள்விப்படுகிறேன். ஆகவே இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு, அங்கே இருக்கின்ற விவசாயிகள் நன்மையைக் கருதி உடனடியாக முடிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்** : தலைவர் அவர்களே, வேலை தாமதமாவதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். வேலை தாமதமாவதைத் தவிர்த்து, விரைவிலே அந்தக் கட்டுமானப் பணிகளை முடிப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

(உ) புகளூர் காகித ஆலைக்குப் பணியாளர்கள் நியமிக்கும் முறை.

திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''புகளூர் காகித ஆலையின் நிர்வாகம், பணியாளர்களை பணியில் அமர்த்த கடந்த இரண்டு வருடங்களாகச் செய்தித் தாளின் மூலம் விளம்பரப்படுத்தி முறையாக மனுச் செய்தவர்களுக்கு வேலை கொடுக்காததால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை**

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலையின் பல்வேறு பதவிகளுக்கு வேலை வாய்ப்பு நிறுவனம் மூலம் பணியாளர்கள் அமர்த்தப்படுகின்றனர். உயர் தகுதியும், அனுபவமும் உடைய நபர்கள் தேவைப்படும்போது முக்கிய நாளிதழ்களில் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. அவ் விளம்பரங்களின் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள், தகுதி வாரியாக வரிசைப்படுத்தப்பட்டு, விண்ணப்பதாரர்களுக்கு தேர்வுக் குழு மூலம் நேர்முகத் தேர்வு நடத்தப்படுகிறது. தேர்வுக் குழு பரிந்துரை செய்யும் நபர்கள் இந்நிறுவன பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.



2. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலை இம் மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள மிகவும் நவீன தொழில் நுட்பம் கொண்ட ஆலையாகும். எனவே இந்த ஆலையில் பணி புரிய திறமை வாய்ந்த நபர்களை தேர்ந்தெடுப்பதில் இந்நிறுவனம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. சில பதவிகளுக்கு முதலில் நாளிதழ்களில் விளம்பரம் செய்திருந்த போதிலும், தேசிய உற்பத்தி மன்றத்தினரால் நடத்தப்பட்ட மனித ஆற்றல் பற்றிய கருத்தாய்வின் மூலம் இந்த பதவிகள் நிரப்பப்பட தேவை யில்லை என்று பின்னர் தெரியவந்ததால் அப்பதவிகள் நிரப்பப் படவில்லை. சில பதவிகளுக்கு நேர்முகத் தேர்வுக்கு வந்த விண் ணப்பதாரர்கள் ஆலைக்கு எதிர்பார்க்கப்பட்ட திறன் பெற் றில்லையாதலால் அத்தகைய பதவிகளும் நிரப்பப்பட இயல வில்லை. இப்பதவிகள் உரிய காலத்தில் நிரப்பப்படும்.

3. இளநிலை செயலக அலுவலர், பயிற்சி இரசாயன பொறி யாளர் போன்ற ஆறு பதவிகளுக்கு நாளிதழ்களில் செய்யப்பட்ட விளம்பரங்களின் மூலம் விண்ணப்பங்கள் அனுப்பிய விண்ணப்ப தாரர்களில் போதிய தகுதியுடைய நபர்கள் இல்லாததால் இப் பதவிகளுக்கு நேர்முகத் தேர்வுகள் நடத்தப்படவில்லை. ஆலைப் பொறியாளர் (மைய ஆய்வுத் தீர்வை), உதவி வன அலுவலர் போன்ற 5 பதவிகளுக்கும் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. ஆனால் எந்த விண்ணப்பதாரரும் இப்பதவிகளுக்குத் தகுதி யுடையவர்களாக காணப்படவில்லை. எனவே இப்பதவிகள் நிரப் பப்படவில்லை. உற்பத்தி மற்றும் பயன் தொடர்பான உதவி இயந்திர பொறியாளர்கள் பதவிகளுக்கு நாளிதழ்களில் விளம் பரங்களின் மூலம் போதிய விண்ணப்பங்கள் வராததால் ஆலை யில் பணி புரிவோர்களுக்கே பதவி உயர்வு அளித்து இப்பதவி களை நிரப்பலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையில் எத்தனை தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள், என்ற விவரம் இந்த அறிக்கையில் இல்லை. தாழ்த்தப்பட்ட மலைவாழ், பிரிவின ருக்கு இட ஒதுக்கீடுக் கொள்கை அங்கே பின் பற்றப்படவில்லை. அங்கே செக்யூரிட்டி போர்ஸ் என்று சொல்லக்கூடியவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்புத் தரப்படவில்லை என்று புகார் வந்திருப்பதை அரசு அறியுமா? மேலும் கரூர், துறையூர், மணச்ச நல்லூர், திருவரம்பூர் ஆகிய பகுதிகளில் நரிக்குறவர்கள் அதிக மான அளவில் வாழ்ந்து வருகிறார்கள். அந்த நரிக்குறவர் களுக்கு இந்தக்காகித ஆலையில் வேலை கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆலை ஒரு இயந்திர மயமான ஆலை. அதிலே மிகக் குறைவான ஆட்கள்தான் இன்றைக்கு வேலை செய்கிறார்கள். ஆட்டோமேடிக் தொழிற்சாலை என்று சொல்லக்கூடிய ஆட்டோமேட்டிக் இன்டஸ்ட்ரியாக அது பணி

யாற்றிக் கொண்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
அங்கே போனால் பார்க்க முடியும். ஆகவே குறைந்தது 500
பேர்களுக்குத்தான் அங்கே வேலை தரப்பட்டிருக்கிறது என்று
கருதுகிறேன். அது பற்றிய புள்ளிவிவரங்கள் தற்போது என்னி
டத்திலே இல்லை. ஆதி திராவிட மக்களுக்கு வேலை தரப்பட
வில்லை என்ற ஒரு குறைபாட்டைச் சொல்லுகிறார்கள்.
இதைப்பற்றி விசாரித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத்
தபால் மூலமாக தகவல் தருகிறேன்.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சேஷசாயி, கங்கப்பா, போன்ற காகித ஆலைகளில்
இருந்து பயிற்சி பெற்றதாகப் பொய்ச் சான்றிதழ் பெற்ற
நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்
புகளூர் காகித ஆலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக ஒரு புகார்
வந்திருக்கிறது. அரசுக்கு இது பற்றிய செய்திகள் தெரியுமா?
அந்தப் புகாரை மேலும் ஆய்ந்து அப்படி பொய்ச் சான்றிதழ்
பெற்று, வேலையில் சேர்ந்தவர்களைக் கண்டுபிடித்து, பணி நீக்கம்
செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செயவார்களா? தக்க
தண்டனை தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்
பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் எதுவும்
என்னுடைய காதுக்கு இது வரை வர வில்லை. அது ஒரு வேளை
புகாராக இருக்குமோ என்று எனக்குத் தெரியாது. அப்படித்
தவறாக வேலையில் சேர்க்கப்பட்டிருப்பார்களேயானால் தக்க
நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ஊ) தூத்துக்குடி துறைமுகத்தை ஆழப்படுத்தும் பணியில் தாமதம்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள்
எஸ். என். இராசேந்திரன், இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே
பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர்.
அவர்களில் ஒருவர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்ச
ரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. எஸ். என். இராசேந்திரன் : : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, ''தூத்துக்குடி, புதுத்துறைமுகத்
தில் 40,000 டன் எடையுள்ள கப்பல்கள் வருவதற்கு தற்போ
துள்ள 27 அடி ஆழத்தை 30 அடி ஆழமாக்க 4 கோடி ரூபாய்
செலவில் ஒப்பந்தக்காரருக்குப் பணி கொடுக்கப்பட்டும், 7 ஆண்டு
களாகியும் பணி நடக்காதது குறித்தும், இது குறித்து மாநில
அரசு மைய அரசை வலியுறுத்துவது குறித்த'' அவசரப் பொது
முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத்
துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை

தூத்துக்குடியிலுள்ள புதிய துறைமுகத்தில் அணுகு கால்வாயினை 27 முதல் 30 அடி வரை ஆழப்படுத்துவதற்கான புதிய ஒப்பந்தங்கள் 1979–80 ஆம் ஆண்டில், பணிகளை பிரித்துக் கொடுப்பதன் அடிப்படையில், திருவாளர்கள் ஆந்திரா சிவில் கன்ஸ்டிரக்ஷன் கம்பெனிக்கும் திருவாளர்கள் டிரட்ஜிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா நிறுவனத்திற்கும் அளிக்கப்பட்டன. அவர்கள் ஒப்பந்தத்திற்கிணங்க பணியை செய்யத் தொடங்கினர். திருவாளர்கள் ஆந்திரா சிவில் கன்ஸ்டிரக்ஷன் நிறுவனம் 75 சதவிகிதப் பணியையும், டிரட்ஜிங் கார்ப்பரேஷன் நிறுவனம் 45 சதவிகிதப் பணியையும் முடித்துள்ளனர். திருவாளர்கள் டிரட்ஜிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா நிறுவனம் சுமார் 45 சதவிகிதப் பணியை முடித்த பின்னர் 1983ல் பணியை நிறுத்தி விட்டனர். அந்நிறுவனம் அப்பணியை மீண்டும் எடுத்துக் கொள்ளவில்லை. மேற்சொன்ன நிறுவனம் செய்து முடிக்காமல் விட்டுச் சென்ற எஞ்சிய பணியை எடுத்து முடிப்பதற்காக 1984ல் ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப்பட்டன. எஞ்சிய இப்பணிக்கான புதிய ஒப்பந்தம் இன்னும் எவருக்கும் அளிக்கப்படவில்லை. துறைமுகப் பொறுப்புக் கழக வாரியம் இந்த எஞ்சிய பணியை திருவாளர்கள் ஆந்திரா சிவில் கன்ஸ்டிரக்ஷன் நிறுவனத்திற்குஅளிக்கலாமென முடிவெடுத்திருந்தபோதிலும் இது தொடர்பாக நீதிமன்றத்திலுள்ள வழக்கு காரணமாக பணி ஆணை பிறப்பிப்பது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. நீதி மன்றத்திலுள்ள வழக்கு தற்போது முடிந்து விட்டது. மத்திய அரசின் இசைவைப் பெற்ற பின்னர் பணி ஆணை பிறப்பிக்கப்படும்.

திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1979–80ல் ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டு 8 ஆண்டுக்காலமாகியும் இன்னும் முடிவுறாமல் இருப்பதன் காரணமாகஅரசுக்குக் கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நமது, தமிழ் பெரியார், தமிழ் அண்ணா, தமிழ் காமராஜ் இன்னும் 7 கப்பல்கள் பூம்புகார் வழியாக தூத்துக்குடிக்கு கரி கொண்டுவருவதற்கு 40 ஆயிரம் டன் கொள்ளளவு உள்ள அந்தக் கப்பல்கள் 25 ஆயிரம் டன்னோடுமட்டும் தூத்துக்குடி துறைமுகத்துக்கு வருவதன்காரணமாகப் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 11 லட்சம் டன் அதிகமாகக் கொண்டுவரக்கூடிய அந்தக் கப்பல்களில் குறைவாகக் கொண்டு வரப்பட்டிருப்பதால், இதை விரைவுபடுத்தி நஷ்டத்தை ஈடுகட்டுவதற்கு விரைவிலே இந்த வேலையை முடிப்பதற்கு மைய அரசை நமது அரசு கேட்டுக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே இந்தப் பிரச்சினை இருக்கின்ற காரணத்தால் காலதாமதம் ஏற்படுகிறது என்று தெரிய வருகிறது. மைய அரசை இதிலே விரைவு படுத்த வேண்டுமென்று கேட்பதிலே நிச்சயமாக இந்த அரசாங்கம் எந்தத் தயக்கத்தையும் காட்டாது. மற்றும் ஒன்று, இன்றைக்கு ஹால்டியா துறைமுகத்திலிருந்து நிலக்கரி ஏற்றி தூத்துக்குடி துறைமுகத்திற்கு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தினுடைய சார்பாக இருக்கும் அந்தக் கப்பல்கள் இங்கே கொண்டுவந்து இறக்குகின்றன. எனவே ஹால்டியாவிலே எவ்வளவு ஆழம் நீர் இருக்கிறதோ அதற்கு ஏற்பத்தான் நாம் அதிலே நிலக்கரியை ஏற்றுகின்ற நிலை இருக்கிறது. எனவே ஹால்டியாவிலே அதனுடைய அளவைக் குறைக்கிற போது எடையையும் குறைத்துதான் ஏற்ற வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே தூத்துக்குடி துறைமுகத்தால் மட்டும் இது பாதிக்கப்படவில்லை. ஹால்டியா துறைமுகமும் இதோடு இணைந்து இருக்கிற காரணத்தால் இதிலே தற்போது சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆழப்படுத்த வேண்டுமென்ற நிலையைப் பொறுத்தவரை, மத்திய அரசாங்கத்தை மாநில அரசாங்கம் வலியுறுத்தும்.

திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலுள்ள வழக்கு தற்போது முடிந்துவிட்டது என்று அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, முடிந்த பிறகு அதை மீண்டும் ஏ.சி.சி. கம்பெனிக்கோ, டிரட்ஜிங் கம்பெனிக்கோ கொடுப்பதாகத்தான் இந்தக் குறிப்பிலே காட்டப்பட்டிருக்கிறது. ஆழப்படுத்துவது சம்பந்தமாக மைய அரசு பாரின் எக்சேஞ்சை அனுமதித்த காரணத்தினால் 'குளோபல் டெண்டர்' விட்டு, உலக ரீதியாக டெண்டர் விட்டு, விரைவிலே ஒப்பந்தக்காரர்களை முடிவுசெய்து இதைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் ஏ.சி.சி. கம்பெனிக்கு டெக்னாலஜி திறமை இல்லை; எபிசியன்சியும் கிடையாது. ஆகவேதான் ஏழாண்டுக்காலமாகியும் 75 சதவீதம்தான் முடித்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்கள் தொடங்கவே இல்லை. ஏ.சி.சி. கம்பெனிக்கு கொடுக்கலாம் என்று முடிவெடுத்து இருப்பதாக அறிக்கையிலே குறிப்பு காணப்படுகிறது. இந்தக் கம்பெனிக்கு எந்தவிதமான டெக்னாலஜியும் எபிசியன்சியும் இல்லாத காரணத்தால், 'குளோபல் டெண்டர்' விட்டு, சரியான ஒப்பந்தக்காரரை நியமிப்பதற்கு மைய அரசிடம் வலியுறுத்தி விரைவிலே ஏற்பாடு செய்வதற்கு நமது அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவ்வளவு நாள் காலதாமதம் ஏற்பட்டதற்கு நீதிமன்றத்திலே வழக்கு இருந்ததுதான் காரணம் என்று நான் குறிப்பிட்டேன். இப்போது அந்தத் தடை நீங்கி இருக்கிறது. அந்தப் பணியை அவர்கள் துவக்கலாம். ஏற்கெனவே கொடுக்கப்பட்ட அந்தக் கம்பெனிகளுக்கு கொடுக்க வேண்டுமென்று நாம் நினைப்பதற்குக் காரணம், அவர்கள் பெற்றிருக்கின்ற பணத்தைக் கொஞ்சம் சரி செய்து கொள்வதற்காகவும் இப்படிப்பட்ட நிலைமைகளைச் சரி செய்து கொள்வதற்காகவும், இருக்கலாம். புதிய பணியாகத் துவக்கப்படுமானால் 'குளோபல் டெண்டர்' விடுவது நியாயமாக இருக்கும். ஆனால் ஏற்கெனவே நடந்த பணியிலே மீதி இருப்பதைத்தான் இப்போது செய்ய வேண்டுமென்று வலியுறுத்துகிறபோது, ஏற்கெனவே அந்தப் பணியை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணியை மீண்டும் செய்து முடிப்பார்களேயானால் அவர்கள் ஏற்கெனவே பெற்றிருக்கிற பணத்தை அல்லது அவர்களுக்குள்ளே இருக்கின்ற அந்த அக்ரிமெண்டையெல்லாம் சரி செய்வதற்கு முறையாக இருக்கும் என்று அந்த முடிவை எடுத்து இருப்பார்கள் என்று கருதுகிறேன். 'குளோபல் டெண்டர்' என்று வருகிறபோது காலதாமதம் ஏற்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும். இருந்தாலும் நம்முடைய உணர்வுகளை மத்திய அரசுக்கு நாம் தெரிவிக்கலாம்.



(முற்பகல் 11-30)

திரு. ஆ. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது உள்ள ஒப்பந்தக்காரர்கள் அந்த வேலையைச் செய்வதற்கு வேண்டிய தகுதி இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே முன்னாள் அமைச்சர் அருமை அண்ணன் திரு எஸ். என். இராசேந்திரன் அவர்கள் சொன்னது போல் தற்போதுள்ள துறைமுகத்தை ஆழப்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டு புதிய டெக்னாலஜி முறையை பின்பற்றாததால் கால தாமதம் ஆகிறது. துறைமுகத்தை விஞ்ஞான முறையில் விரைவில் ஆழப்படுத்த டெக்னாலஜி முறையில் கைதேர்ந்த ஒப்பந்தக்காரர்களை அதாவது குளோபல் டெண்டர் விட்டு தூத்துக்குடி துறைமுகத்தை ஆழப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விசேஷ கவனத்தைச் செலுத்தி மத்திய அரசிடம் வற்புறுத்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய டெக்னாலஜி எப்படி இருக்கிறது என்ற குறிப்பு நம்மிடத்தில் இல்லை. மத்திய அரசிடம் அந்தப்பொறுப்பு இருக்கின்ற காரணத்தால் அவர்கள் இதைக் கவனிக்கிறார்கள். நமக்கு வேண்டியது எல்லாம் இதை ஆழப்படுத்த வேண்டும், விரைவாக முடிக்கவேண்டும் என்பதுதான் நம்முடைய கோரிக்கை. எனவே, அவர்களுக்கு இதில் ஆலோசனைகளை, எங்களுக்கு வேலையை விரைவாக முடிக்க வேண்டும் என்று சொல்லலாமே ஒழிய இவர்களுக்குத்தான் கொடுக்கவேண்டும் என்று சொல்வதற்கு நியாயம் இருக்க முடியாது. தாமதம் ஏற்படாமல் இந்தப் பணியைச் சீராக நல்ல முறையில் முடிக்கவேண்டும் என்று சொன்னால்

குபோபல் டெண்டர் வைத்து சிறந்தவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்பது தான் நம்முடைய கருத்து. இந்தக் கருத்தை அவர்களுக்குத் தெரிவிக்கலாமே ஒழிய, மத்திய அரசு தான் இதிலே நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(ஏ) பழவேற்காடு ஏரியில் மண் மூடிவிட்டதால் பாதிப்பு.

திரு. கே. பி. கே. சேகர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''பொன்னேரி தொகுதி, பழவேற்காடு ஏரியில் மண் மூடிவிட்டதால், மீன்பிடி படகு, கட்டுமரம் ஆகியவை செல்ல முடியாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

அறிக்கை.

செங்கை மாவட்டம், பொன்னேரி தொகுதி பழவேற்காடு ஏரி மண்மூடி போய்விட்டதால் அப்பகுதியில் இயந்திரங்கள் மூலம் தூர் வாரி ஆழப்படுத்தக் கோரி, ரூ. 91,000-க்கு தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வேலை துவங்கவுள்ளது. பழவேற்காடு பகுதியில் பக்கிங்காம் கால்வாயில் இயந்திரங்கள் மூலம் தூர் வாரி ஆழப்படுத்த ரூ. 5 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் அனுமதி வேண்டி மாவட்ட ஆட்சியருக்கு செயற்பொறியாளர், (பக்கிங் காம் கால்வாய்) அவர்களால் 13–10–1986-ல் அனுப்பப்பட்டு உள்ளது.

திரு. கே. பி. கே. சேகர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 91 ஆயிரம் ரூபாய்க்கு பாசனத் துறையினுடைய தலைமைப் பொறியாளர் அவர் களுடைய மதிப்பீடு தீட்டப்பட்டு இருப்பதாக இதில் கூறப்பட்டு இருக்கிறது. ஆனால் அந்தப் பணி தற்போது ஈ. ஈ. பி. கேனால் அவர்கள் மூலம் வேலை நடந்து கொண்டிருக்கிறது. அந்த வேலையை நான் நேற்று மாலை சென்று பார்த்தபோது அங்கே ஆட்கள் மூலம் மண் எடுப்பதால் அங்கே தோண்ட தோண்ட அந்த மண் சரிந்து மீண்டும் எடுக்கின்ற இடத்திலேயே விழுகிறது. ஆகவே 13–10–1986-ல் ஈ.ஈ. பி. கேனால் அவர்கள் செங்கை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதிய கடிதத்திலே 5 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு தேவை என்று எழுதியிருக்கிறார்கள். ஆகவே அந்த நிதி ஒதுக்கீட்டை இந்த நடப்பு நிதி ஆண்டிலே ஒதுக்கி 'டிரட்ஜர்' என்ற அந்த இயந்திரத்தின் மூலமாக அந்த மண் மேடாக போய் இருக்கிற அந்தப் பகுதியை ஆழப் படுத்தித் தருவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன்.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 91 ஆயிரம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலை துவங்கப்பட்டு இருந்தாலும், இன்னும் 5 லட்சம் ரூபாய் இந்த வேலை ஒழுங்காக முடிப்பதற்கு அவசியம் என்று கருதி நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குப் பரிந்துரை செய்யப்பட்டு இப்போது அந்தக் கோப்பு அங்கே இருப்பதாக அறிகிறேன். எனவே அதன் மூலமாக அந்த 5 லட்ச ரூபாயை விரைவாகக் கொடுத்து அந்தப் பணியைத் துவக்குவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கலாம். ஆனால் இந்த நிதி ஆண்டிலே செய்ய முடியுமா என்பது இப் போது, என்னிடத்திலே அந்த குறிப்பு இல்லாத காரணத்தால், சரியாகத் தெரியவில்லை. இருந்தாலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே பேசி அந்த நிலைமையைத் தெரிந்து உடனடியாக நடவடிக்கை எடுக்க இந்தத்துறை ஏற்பாடு செய்யும்.

(ஏ) முதியோர் உதவித்தொகை மற்ற சலுகைகள் தாமதமின்றி வழங்குதல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் கி. கிருஷ்ணமூர்த்தி, மு. இராசாங்கம் மற்றும் எஸ். இராசா ராமன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சரின் கவனத் திற்கு அதைக்கொண்டு வருவார்.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழக அரசு, தற்போது முதியோர், விதவை, ஊனமுற்றோர் உதவித் தொகை கோரி நிலுவை யிலுள்ள மனுக்கள் அனைத்திற்கும் அனுமதி அளித்து மனுதாரர் களுக்கு உதவித் தொகை வழங்கப் பெறும் என அறிவித்துள்ளதை செயல்படுத்துவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

முதியோர் உதவித்தொகை திட்டத்தில் அனைத்து [illegible] களின்கீழ் 1–5–1986-ல் மாநிலம் முழுவதும் மொத்தம் 23,039 தகுதிவாய்ந்த நபர்கள் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர். இவர்களுக்கு முதியோர் உதவித்தொகை மற்றும் பிற சலுகை கள் வழங்குவதால் ஓராண்டிற்கு கூடுதல் மொத்த செலவினம் ரூ. 1.9 கோடியாகும். இந்த 23,039 தகுதிவாய்ந்த நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை மற்றும் பிற சலுகைகள் அளிக்கத் [illegible]

கூடுதல் செலவினம் 1.9 கோடி வழங்க அரசு ஆணை எண் 649 (சமூகநலம்), தேதி 21–4–1987-ல் ஆணையிடப்பட்டது. 1–5–1986-ல் காத்திருப்போர் பட்டியலிலிருந்த இந்த 23,039 தகுதிவாய்ந்த நபர்களுக்கும் ஏற்கெனவே விசாரணைகள் முடிக்கப்பட்டுவிட்டதால் இவர்களுக்கு உதவித்தொகை மற்றும் பிற சலுகைகளும் காலதாமதம் இல்லாமல் அளிக்கப்பட்டுவிடுமென்று சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. முதியோர் உதவித்திட்டத்தை எவ்வாறு செயல்படுத்துவது மற்றும் பணியாளர்கள் எந்த மட்டத்தில் ஒப்பளிக்கப்பட வேண்டும் என்பது பற்றி ஆய்வு செய்வதற்கு அரசு கீழ்க்கண்ட அலுவலர்கள் கொண்ட குழு அமைத்தது :—

(1) இணைச் செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை.

(2) இணைச் செயலாளர்/துணைச் செயலாளர், நிதித் துறை.

(3) இணைச் செயலாளர், வருவாய்த்துறை.

(4) இணை ஆணையர், வருவாய் நிர்வாகம், சென்னை-5.

(5) இணைச் செயலாளர்/துணைச் செயலாளர், சமூகநலத் துறை, கூட்டம் நடத்துபவர்.

மேற்கண்ட குழு ஆய்வு செய்து கீழ்க்கண்ட பரிந்துரைகளைச் செய்தது:—

(1) வட்ட அளவில் முதியோர் உதவித்தொகை பெறுவோர் எண்ணிக்கை 500க்கு குறையாமல் இருப்பின் அவ்விடத்தில் ஒரு இளநிலை உதவியாளர் பணிக்கு ஒப்பளிப்பு அளிக்க வேண்டும்.

(2) 500க்கு மேல் 1,000க்குள்ளாக முதியோர் உதவித் தொகை பெறுவோர் எண்ணிக்கை உள்ள இடத்தில் கூடுதலாக ஒரு உதவியாளர் பணிக்கு ஒப்புதல் வழங்கவேண்டும்.

(3) மாவட்டத் தலைமையிடத்தில் உள்ள வட்டாட்சி அலுவலகத்தில், அடிக்கடி முக்கியமானவர்கள் வருவதால் வேலைப்பளு அதிகமாகும் பட்சத்தில் ஒரு வருவாய் அதிகாரி (உதவியாளர் பதவி)யினை நியமிக்கவேண்டும்.

(4) கோட்டாட்சியர்/மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சிறப்புப் பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

(5) வட்ட அளவில் முதியோர் உதவித்தொகை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த வருவாய் அதிகாரி, துணை தாசில்தார்கள், தாசில்தார்கள் ஆகியவர்களுக்கான பணியிடங்கள்



சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் மேலே காணும் 3,4,5-ல் காணப்படும் குழுவின் பரிந்துரைகளை ஏற்று கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்துள்ளார்:—

| | | |
|---|---|---|
| 1. 500 இனங்கள் வரை | .. | ஒரு இளநிலை உதவியர். |
| 2. 501–1200 இனங்கள் | .. | ஒரு இளநிலை உதவியர் மற்றும் ஒரு உதவியர். |
| 3. 1201–1800 இனங்கள் | .. | இரண்டு இளநிலை உதவியர் மற்றும் ஒரு உதவியர். |
| 4. 1801–2400 இனங்கள் | .. | மூன்று இளநிலை உதவியர்கள். மற்றும் ஒரு உதவியர். |

முதியோர் உதவித்திட்டத்தை அமுல் நடத்துவதற்கு புதிய இடங்களை ஒப்பளிப்பது பற்றி அரசு பரிசீலனை செய்து கீழ்க்கண்ட விதிமுறையினைக் கடைப்பிடித்து வருகிறது:—

| | | |
|---|---|---|
| 750 இனங்கள் வரை | .. | ஒரு இளநிலை உதவியர். |
| 751 முதல் 1500 வரை | .. | இரண்டு இளநிலை உதவியர்கள் |
| 1501 முதல் 2250 வரை | .. | இரண்டு இளநிலை உதவியர்கள் மற்றும் ஒரு உதவியர். |
| 2251 முதல் 3000 வரை | .. | மூன்று இளநிலை உதவியர்கள் மற்றும் ஒரு உதவியர். |

மேற்கண்ட அளவுகோலின்படி கூடுதல் பணியாளர்கள் தேவை குறித்த மேல் விவரங்களை அனுப்பும்படி சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கோரப்பட்டார். இது தொடர்பாக அரசு கோரிய மேல் விவரங்கள் மாவட்டாட்சியர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்றன என்றும் மாவட்டாட்சியர்களிடமிருந்து விவரங்கள் கிடைத்தவுடன் அரசுக்கு அனுப்பி வைக்கப்படுமென்றும் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். விவரங்கள் சேகரிக்கப்பட்டு உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

திரு. ஈ. [illegible]: [illegible] முதியோர் உதவித் தொகை [illegible] ... செய்து இருக்கிறார்கள். [illegible] இளநிலை உதவியாளர் [illegible]

களுக்கு ஒப்புதல் அளித்து இருக்கிறது. அதனால் கணவன் இழந்த
யோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர்களுக்கு உதவித்
தொகை வழங்குவதில் கால தாமதம் ஏற்பட்டு வயதானவர்கள்
பாதிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் பல தேதிகளில்
10 ஆம் தேதி முதியோர் உதவித் தொகை வருகிறது, 20 ஆம்
தேதி வருகிறது, 23 ஆம் தேதியும்—வருகிறது. ஒருசிலருக்கு
வரவில்லை. அதனால் அவர்கள் அல்லல்படுகிறார்கள். ஆகவே
300 நபர்களுக்கு ஒரு இளநிலை உதவியாளர் என்று போடுகின்ற
அளவில் இளநிலை உதவியாளர்களை நியமித்து, வயதானவர்
களுக்கு முறையான காலத்தில் அந்த உதவியைச் செய்ய
அரசு முன்வருமா? அவர்களுடைய கவலையைத் தீர்க்க
முடியுமா? விவர அறிக்கையிலே அதுபற்றிய விவரம்
இல்லாததால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதுபற்றி
அறிவிக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: பேரவை துணைத்
தலைவர் அவர்களே, வயதானவர்களுக்கு எந்தவிதமான குறை
யும் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் தமிழகத்தினுடைய
முதல்வர் அவர்கள் தாராள உள்ளத்தோடு ரூ. 190 இலட்சம்
அனுமதித்து இருக்கிறார்கள். அதற்குரிய ஆணை 21—4—1987
அன்று வெளியிடப்பட்டு இருக்கிறது. எத்தனை நபருக்கு ஒரு
இளநிலை உதவியாளர் தேவை என்பதை நன்றாக ஆய்வு செய்த
தற்கு பிறகு தான் 750 இனங்களுக்கு ஒரு இளநிலை உதவியாளர்
போதும் என்ற முடிவை அரசு எடுத்து இருக்கிறது. மேலும்
தற்போது தபாலிலே ஏதோ கோளாறு ஏற்பட்டு தாமதம் ஏற்
படுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.
அது குறித்து தலைமை தபால் அதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டு
உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று அரசு
கோரியிருக்கிறது.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, தபால் அலுவலகத்திலே கோளாறு இல்லை.
அனுப்புவதில் தாமதம் என்று தான் கூறினேன். இங்கே
ஆண்டும் அதற்கு முன்பும் மனுச் செய்தவர்களைப் பொறுத்த 1984 ஆம்
வரையிலும் கூட அங்கே சென்று இன்வெஸ்டிகேஷன் செய்து
அவர்களை தகுதியானவர்கள் லிஸ்டிலே சேர்ப்பதிலே தாமத
மாகி, பல நூற்றுக்கணக்கான பேர்கள் இன்னும் தகுதியானவர்கள்
லிஸ்டிலே சேர்க்கப்படாமல் இருக்கிறார்கள். தற்போது
அரசு தகுதியானவர்கள் பட்டியலில் உள்ள 23,039 பேர்
களுக்கு உதவித்தொகை அளிப்பதாக அறிவித்துள்ளது. ஏற்
கனவே உதவித் தொகை அளிப்பதிலே காலதாமதம், தற்
போது புதியதாக 23,039 பேர்களுக்கு உதவித் தொகை அளிப்
பதிலே பிரச்சினைகள் வரும் என்பதால் தேவையான நபர்
களை உடனடியாக நியமிக்க அரசு முன்வருமா? இந்த
விசாரணை என்ற பெயராலே, வில்லேஜ் அட்மினிஸ்ட்ரேட்டிவ்
ஆபீசர்ஸ், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், விசாரணை செய்து
தால் 1984-ல் மனு போட்டவர்கள் கூட தகுதியானவர்கள்



பட்டியலில் சேர்க்க முடியாமல் இருக்கிறது. இந்த வேலையை
அவர்கள் முறையாகச் செய்ய அவர்களுக்கு நேரம் இல்லை.
ஆகவே இந்த விசாரணைக்கு என்று தனியாக உதவியாளர்கள்
நியமிக்கப்படுவார்களா? இந்த முதியோர் உதவித் தொகை
யையே.......(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு கேள்வி
யாகக் கேளுங்கள். 3, 4 கேள்விகள் கேட்டால் பதில் சொல்ல
முடியாது.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: துணைத் தலைவர் அவர்களே,
வில்லேஜ் ஆபீசர்ஸ் மூலமாக உதவித் தொகையை வழங்க
ஒரு புதுத் திட்டம் வகுத்து அதைக் காலாகாலத்தில் கொடுப்ப
தற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: துணைத் தலை
வர் அவர்களே, மனுச் செய்கின்றவர்கள் சரியான முறையிலே
மனுச் செய்து விடுவார்களானால், உடனுக்குடன் அவர்களுடைய
மனுவைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்
பாக அமையும். சில நேரங்களில் அவர்கள் புகைப்படங்களை
அதிலே வைக்காமலும், சரியான விலாசத்தைத் தராமலும், சில
நேரங்களில் கொடுத்த விலாசங்கள் மாறிவிடுகின்ற காரணத்தி
னாலும் அவர்களுடைய மனுக்கள் உரிய நேரங்களில் கவனத்திலே
வரமுடியாமல் போய் விடுகிறது. ஆனால் கடந்த 1—5—1986
வரையில் எவ்வளவு மனுக்கள் நம்மாலே சீர்செய்யப்பட்டனவோ
அவ்வளவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. மற்றொன்று
வில்லேஜ் ஆபீசர்ஸ் மூலமாகப் பணம் வழங்க வேண்டுமென்று
மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற கருத்து ஏற்றுக்கொள்ளக்
கூடியதாக இல்லை. அப்படி ஏற்றுக்கொண்டால், அதன்
மூலமாகப் பல்வேறு தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு
உருவாகும்.

(ஐ) காவிரியின் கடைமடைப் பகுதியில் சிமெண்ட் பலகைகள் சரிந்து
வாய்க்காலில் விழுவதால் பாதிப்பு.

திரு. ம. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில், காவிரியின்
கடைமடைப் பகுதிகளில் வாய்க்கால்களை நவீனப்படுத்துதல்
என்ற பெயரில் கான்கிரீட் (சிமெண்ட்) கட்டைகள் அடுக்கி அவை
கள் வாய்க்கால்களில் சரியாகப் பொருந்தாமல் சரிந்து
வாய்க்கால்களில் நீர் செல்வதைத் தடை செய்வது குறித்த
அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு
பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

அறிக்கை.

தஞ்சை மாவட்டத்தில் காவிரியின் 'ஏ' பிரிவு வாய்க்கால்கள் நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு சிமெண்ட் பலகைகள் பொருத்தப்பட்டு வாய்க்கால்களில் லைனிங் வேலைகள் செய்யப்படுகின்றன. சில இடங்களில் இந்த சிமெண்ட் பலகைகள் வாய்க்கால் கரைகளிலிருந்து ஆடுமாடுகளை ஓட்டிச் செல்வதாலும் மக்கள் குளிப்பது, துணி துவைப்பது போன்ற செய்கைகளாலும் கீழே விழுந்து விடுகின்றன. இன்னும் சில இடங்களில் சிமெண்ட் பலகைகள் திருடப்படவும் செய்கின்றன. இம்மாதிரி சந்தர்ப்பங்களில் சில இடங்களில் சிமெண்ட் பலகைகள் வாய்க்கால்களில் விழுந்து நீர்ப்போக்கை பாதிக்கும் சாத்தியக்கூறுகள் ஏற்படுகின்றன. எனினும் அவ்வப்போது இத்துறை இவ்வாறு வாய்க்காலில் விழுந்துள்ள சிமெண்ட் கட்டைகளை அப்புறப்படுத்தி சீரான தண்ணீர் போக்கிற்கு வகை செய்வதுடன் கோடைக்காலங்களில் இவ்வாறு பாதிக்கப்பட்ட இடங்களை செப்பனிடவும் செய்கின்றன. இதற்கான தேவையான அறிவுரைகள் கள அதிகாரிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. இது போன்ற நிலைகள் குறைக்கப்பட வேண்டுமாயின் பொது மக்களின் மேலான ஒத்துழைப்பும் பாசனக் கால்வாய்களைச் செம்மையாகப் பாதுகாப்பதில் கவனமும் ஆர்வமும் தேவைப்படுகிறது.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காரைகட்டைகள் அடுக்குகின்ற நேரத்தில், அதிலே மாடுகள் செல்வது, குளிப்பது போன்ற காரணங்களால் கீழே இடிந்து விழுந்து விடுகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அண்மையிலே தஞ்சை மாவட்ட சுற்றுப்பயணத்தின்போது, அவர்களே ஒரு காரையைத் தூக்கிப்போட்டு தான் தாளாக்கியுள்ளதை கண்கூடாகப் பார்த்திருக்கிறார்கள். சப்-குவாலிட்டியின் காரணமாக அப்படி ஆகின்றதா என்பதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு, அப்படி லைனிங் செய்கின்ற நேரத்தில் இரண்டு பகுதிகளிலிருந்து விவசாயத்திற்காக வண்டியோ, டிராக்டரோ செல்வது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. எனவே லைனிங் செய்கின்றபோது வாய்க்காலில் ஒரு சிறிய ஆர். சி. சி. போட்டு வண்டி, மாடுகள் இவைகள் எல்லாம் அங்கே செல்வதற்கு வழி செய்ய அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு, குறிப்பாக பெரியார் ப்ராஜெக்டிலே செய்வதைப் போல— தஞ்சை மாவட்டத்திலே களிமண்ணாக இருப்பதால் அடிக்கடி கட்டைகள் எல்லாம் சரிந்து விடுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது—கான்க்ரீட்டாக செய்வதற்கு அரசு முன்வருமா என்பதோடு அப்படி இயலவில்லை என்றால் காரை கட்டை போடுவதற்கு முன்னாலே 9 அங்குல செங்கல் அளவிலே போட்டு வைக்கிறார்கள். அதுமாதிரிப் போடுவதற்கு அரசு முன்வருமா என்பதோடு பிளாக் போடுவதன் காரணமாக, நீங்கள் சொன்னது போல்........





முற்பகல் 11.40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதுவரையில் 4 கேள்விகள் ஆகிவிட்டன. எப்படி அவ்வளவையும் வரிசைப் படுத்திக் கொண்டு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல முடியும் என்று எதிர்பார்க்கிறீர்கள் ? (குறுக்கீடு) உங்கள் நோக்கம் நிறைவேறாமல் போய்விடும். இதுவரையில் 4 கேள்விகள். (குறுக்கீடு) இன்னொன்று மட்டும் கேளுங்கள்.

திரு. மா. மணிமாறன் : காரைக் கட்டைகள் 4 அங்குலம் இருக்கின்ற காரணத்தால் சரிவு எளிமையாக ஆகிவிடுகிறது. இதற்கு முன்னால் செங்கல் 9 அங்குல நீளம் கட்டிய காரணத்தால் தவறு செய்து எடுத்துப் போகமுடியாது. காரணம், கல்லை வரிசையாக அடுக்கி விடுகிறார்கள். ஆகவே, ஒரு கல்லை எடுக்க வேண்டுமென்றால், உடைத்தால் பல கற்கள் உடைந்து விடுகின்றன. பயன்படாமல் ஆகிவிடுகிறது. எனவே பிளாக்கை விட செங்கல்லை அடுக்கி விட்டால் உடைத்து எடுக்க முடியாது. ஆகவே, செங்கல்லை இதற்கு முன்னாலே 9 அங்குல அளவு செங்கல் அடுக்கி வந்தார்களே, அதுபோல் அடுக்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தஞ்சை மாவட்டம் போகிற நேரத்திலே நேரடியாக அப்படிப் பட்ட பகுதிகளை எல்லாம் பார்த்தேன். செங்கல்லிலே அங்கே அப்படிப்பட்ட கட்டிடங்கள் சைட் ரிவிட்மென்ட்கள் கட்டியிருக்கிறார்கள். இப்போது சிமெண்ட்டிலே ஸ்லாப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது ஏன் என்று கேட்கிற நேரத்தில் செங்கல் அந்தப் பகுதியிலே கிடைக்கவில்லை ; அதுவும் அதிகப் பணமாகிறது என்ற காரணத்தால் காரை சிமெண்ட்டிலே இப்போது கட்டிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதுகூட ஒரு அடி சரிவு வைத்துக் கட்டியதை, 1½ அடியாக இப்போது மாற்ற வேண்டும் என்று சொன்னால், உடைவது கொஞ்சம் குறையும் என்பதையும் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிமெண்ட் கான்கிரீட் போட வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அது உலக வங்கி உதவியுடன், அந்தக் காவிரி மாடர்னைசேஷனில், எப்படி பெரியார் மேம்பாட்டுத் திட்டத்திலே போடப்பட்டிருக்கிறதோ, அது போல், மெஷின் மூலமாகத்தான் கான்கிரீட் போடுவதாக அந்தக் குறிப்பிலே இருக்கிறது. ஆகவே, அந்தத் திட்டம் வருகிற நேரத்திலே சிமெண்ட்டிலே கான்கிரீட் போடப்படும். இப்போது உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல மாடுகள் செல்ல வசதியாக அந்தந்த இடங்களில் என்னென்ன உதவிகளைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிடப்படும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொறியியல் துறையிலே கணிக்கின்ற நேரத்திலே, 1 அடிக்கு, 1½ அடி சரிவு கொடுத்தால் சரியாக இருக்கும் என்று எல்லாம் சொல்கிறார்கள். ஆனால் சரிவு எவ்வளவுக்கு அதிகமாகிறதோ, சதுப்பு நிலமாகவும், களிமண்ணாகவும் இருக்கிற காரணத்தால், களிமண் ஆகி அது கரைகின்ற நேரத்தில் சரிவு அதிகமாகி பொட்டென்று கீழே வாங்கிக் கொள்கிறது. செங்குத்தாக இருந்தால் ஓரளவுக்கு அந்த மண் சரிந்தால் கூட, செங்குத்தாக நிற்பதற்கு ஏதுவாகும். இதைப் பொறியியல் துறையிலே வித்தியாசமாக உணருகிறார்கள். எனவே, பொறியியல் வல்லுநர்கள் இதை ஆராய்ந்து செங்குத்தாக இருப்பது நல்லதா, சரிவாக இருப்பது நல்லதா என்பதை மறு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் மட்டத்தில் இதை மறுபடியும் ஆய்வு செய்து, வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஓ) நெல்லை மாவட்டம் வள்ளியூரிலுள்ள கொடுமுடியாறு நீர்த் தேக்கப் பணிகள் நிறுத்தம்.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நெல்லை மாவட்டம் நாங்குநேரி, இராதாபுரம் வட்டம் வள்ளியூரிலுள்ள கொடுமுடி ஆறு நீர்த் தேக்கத் திட்டப் பணிகள் ஒட்டு மொத்தமாக நிறுத்தப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

அறிக்கை

திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம், நாங்குநேரி வட்டம், திருக்குரங்குடி கிராமத்தின் அருகில் ரூ. 1,560 இலட்சம் செலவில் ஒரு நீர்த் தேக்கம் கட்ட அரசு ஆணை எண். 1093 பொதுப் பணித்துறை, நாள் 24-4-1986ல் நிர்வாக ஒப்புதல் வழங்கியது. இத்திட்டத்திற்கு தேவைப்படும் 213.29 ஏக்கர் நன்செய், புன்செய் மற்றும் புறம்போக்கு நிலங்களுடன் 33.15 ஏக்கர் வனத்துறை நிலங்களும் தேவைப்படுகிறது.

2. இத்திட்டத்தில் வனத்துறை நிலங்களை கையகப்படுத்துவதற்கு அனுமதி வழங்குவது குறித்து வனத்துறையின் நடவடிக்கை எடுத்து வருகிற சூழ்நிலையில், மத்திய அரசின் அனுமதி இல்லாமல் களக்காடு வனப் பகுதியில் எவ்வித நடவடிக்கையும் இத்திட்டத்தின் தொடர்பாக மேற்கொள்ளக் கூடாது என்று



மத்திய அரசிடமிருந்து கடிதம் பெறப்பட்டதால் திட்டப் பணிகளை, தற்காலிகமாக, அதாவது வனத்துறை நிலங்களுக்கு மத்திய அரசின் அனுமதி கிடைக்கும் வரை, நிறுத்தி வைக்க அரசு முடிவு செய்துள்ளது.

3. கொடுமுடியாறு நீர்த்தேக்க திட்டத்திற்கு அனுமதிக்கப் பட்ட ஒரு கோட்டம் மற்றும் நான்கு உபகோட்டங்களின் பணியாளர்களை, மதுரை மாவட்டம், சண்முகா நதி நீர்தேக்கத் திட்டத்திற்கு மாற்றும்படியும் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் கோரப்பட்டுள்ளார்கள். வனத்துறை நிலங்களுக்கு மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெற விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்ற பின்னர், கொடுமுடியாறு திட்டப் பணிகள் மீண்டும் தொடரும்.

இந்த விவர அறிக்கை முன்பு இருந்த நிலையின் அடிப் படையில் தயாரிக்கப்பட்டதாகும். இதனைத் தொடர்ந்து இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றுவதற்கான வழி முறைகள் பரிசீலிக்கப்பட்டன. இந்தத் திட்டம் ஏற்கனவே 1975 ஆம் ஆண்டில் அரசால் அனுமதிக்கப்பட்டு, 1976 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்ட திட்டமாகையால், 1980 ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த வனப் பாதுகாப்புச் சட்டம், இந்தத் திட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இல்லை. எனவே, இத்திட்டத்திற்குத் தேவையான வன நிலங்களுக்கு தமிழ்நாடு வனத்துறையே அனுமதி அளிக்கலாம் என்ற அடிப் படையில் வனத்துறையின் அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் திட்டப் பணிகள் முழு வேகத்துடன் செயல் படுத்தப்படும்.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டமானது வள்ளியூர், ராதாபுரம் பகுதிகளைச் சேர்ந்த மக்களுடைய 25 ஆண்டுக் காலப் பிரச்சினையாக இருக்கிறது. அதன் மூலமாக 41 குளங்களும், கிட்டத்தட்ட 3500 வாட்டர் ரேட் புஞ்சை நிலங்களும் இதிலே பயன்பெறுகின்றன. இதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல 1976-லே மாண்புமிகு முதல்வர் அவர்களாலே அடிக்கல் நாட்டப்பட்டு, பிறகு இந்தப் பணிகளுக்கெல்லாம் கிட்டத்தட்ட அதிகமான தொகைகள் எல்லாம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதற்காக அஸ்திவாரம் கூட 40 அடி அகலம், 20 அடி ஆழத்திலே தோண்டப்பட்டு, முழுமையாக அதிகாரிகள் எல்லாம் நியமிக்கப்பட்டு, அவர்களுக்கு புதிய குடியிருப்புகள் கூடக் கட்டியிருக்கிறார்கள். இவ்வளவு தூரம் இருந்தும், அங்கு இயந்திரங்கள் எல்லாம் வரவழைக்கப்பட்டும் அவை இப்போது துருப்பிடிக்கின்ற நிலையிலே இருக்கின்றன. எனவே, மத்திய அரசிடத்திலே துரிதமாக நீங்கள் இந்தக் கோரிக்கையை எடுத்துச் சொல்லி, வன இலாகாவின் மூலமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற அந்த இடர்ப்பாட்டை நீக்கி, இந்தத் திட்டத்தை விரைவில் அமல் நடத்திக் கொடுக்க முடியுமா

என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை வேகமாக எடுக்க வேண்டும் என்று சொல்லித்தான் 1980 ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்டம் இந்தத் திட்டத்தைக் கட்டுப் படுத்தாது என்று சொல்லி, நான் சொல்கிற நேரத்தில், 1976-லே வேலை ஆரம்பித்ததாக உங்கள் மத்தியிலே தஸ்தாவேஜு இருந் தால் கொடுங்கள் என்று சொன்னார்கள். அதன்படி 13.83 ஏக்கர் வன நிலங்களை இப்போது நாங்கள் எடுத்திருக்கிறோம். அதற்கு 14 ஆயிரம் ரூபாயை அரசாங்கத்திற்கு, வனத் துறைக்குக் கூட பணமாகக் கட்டியிருக்கிறோம். ஏறத்தாழ ரூ. 32 இலட் சம் செலவிடப்பட்டுள்ளது என்கிற கணக்குகளையெல்லாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வனத்துறை அதிகாரிகளிடம் காட்டி யிருக்கிறார்கள். ஆகவே மிக வேகமாக உத்திரவு கிடைக்கும் என்று நம்பலாம்.

## 6. அரசினர் சட்டமுன் வடிவுகள்

(அ) இயக்கூர்திகள் மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரி விதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) வேளாண் விளைபொருள் சந்தைக (திருத்த) சட்ட முன்வடிவு 1987.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு **(சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 10/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

---

1987 ஏப்ரல் 24 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் சந்தைகள் சட்டத்தில் உள்ள குறை களை நிவர்த்திக்கும் வகையில் புதிய சட்டமாக இயற்றி, விரி வான சட்ட முன்வடிவாக ஏற்கெனவே பேரவையில் நிறைவேற் றப்பட்டிருக்கிறது.

அது குடியரசுத் தலைவரின் இசைவுக்காகக் காத்திருக்கிறது. அவரது இசைவு பெறப்பட்ட பின் அது சட்டமாக ஆகும். அந்தப் புதிய சட்டத்தின்கீழ் விதிகளைச் செய்வதற்கும், சந்தைக் குழுக்களை அமைப்பதற்கும் மேலும் சில காலம் ஆகும் என்பதால் இந்த மே மாதம் 10-ஆம் நாளுடன் அந்தக் கால அளவு முடி வடைவதால் தற்போது மேலும் ஓராண்டுக் கால அளவுக்கு நீட்டிப் பதற்காக இந்தச் சட்ட முன்வடிவு அவையில் வைக்கப்பட்டிருக் கிறது. எனவே, இது ஒரு தற்காலிக நிலை என்று கொண்டு இதில் விவாதத்திற்கு ஒன்றுமில்லை என்றே கருதுகிறேன். எனவே, இந்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு உறுப்பினர்கள் நிறை வேற்றித் தருமாறு வேண்டுகிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கடந்த மார்ச் மாதம்தான் பேசியிருக்கிறோம். எனவே இதில் விவாதம் தேவை யில்லை. மேலும் இரண்டு டிமாண்டுகள் இருக்கின்றன. காம்ப்ரெஹென்சிவ் பில்லை மார்ச் 13 ஆம் தேதிதான் நிறை வேற்றியிருக்கிறோம். வேண்டுமானால் ஆளுக்கு 2 நிமிஷம் பேசி முடித்துவிடலாம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டத்தைப்பற்றி பேசுவதை நான் வரவேற்கிறேன். ஜனநாயகத்தில் விவாதம் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுதான். அதிலே பிரச்சினையில்லை. ஆனால் ஜனாதிபதியிடம் அந்தச் சட்டம் ஒப்புதலுக்கு காத்துக் கொண் டிருக்கிறது. வந்துவிட்டால் அந்தச் சட்டத்தின்படியே அமுல் படுத்தலாம். அதிலே பிரச்சினையில்லை. டெல்லியில் இப்போது காலதாமதம் ஆகிறது என்பதைத் தவிர வேறு அல்ல. அதற்காக இது ஒரு தற்காலிகமான ஏற்பாடு, ஒரு சம்பிரதாய முறையில் கேட்கப்படுகிறதே தவிர வேறு ஒன்றுமில்லை. (குறுக்கீடு).

திரு. கு. ரமணி: நாங்களும் சம்பிரதாயமாகத்தான் பேச விரும்புகிறோம். (குறுக்கீடு).

திரு. கே. சுப்பராயன்: 2 நிமிஷத்தில் கருத்து சொல்ல முடியுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மார்ச் மாதத் தில்தான் நாம் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறோம். திரும்ப அதே கருத்துக்களைத்தான் சொல்லப் போகிறோம். ஆப்ஜெக்ட் அண்டு ரீசன்சைப் படித்துப் பாருங்கள். திரும்பவும் அதையே தான் சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நான் சொன்னேன். விட்டிருந்தால் திரு. ரமணி அவர்கள் பேசி முடித்திருப்பார்கள்.

திரு. கே. சுப்பராயன் : தற்காலிகம் என்று சொல்லிக் கொண்டே நிரந்தரமாக நீடிக்கலாமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் கவனிக்க வேண்டும். இதில் பேச்சுரிமை யைப் பறிக்கிற வேலையே கிடையாது. நான் தகவலைச் சொல்லுகிறேன்.

ஏற்கெனவே இந்தச் சட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப் பினர்களும் பேசி நாங்களும் பதில் சொல்லி நிறைவேறி அது டெல்லிக்குப் போயிருக்கிறது. திரும்பவும் அதைத்தான் பேச வேண்டும். ஆகவே, நேரத்தைக் கருதித்தானே தவிர வேறு ஒன்றுமில்லை.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விரிவான சட்டமாக ஏற்கெனவே இதை நிறை வேற்றிவிட்டோம். அது ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது என்பது உண்மை. அதற்காக இப்போது இந்தச் சட்டத்தில் ஒன்றுமில்லை, பேசுவதற்கு அவசியமில்லை என்று தயவு செய்து அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடாது. ஏனென் றால், இதில் நாங்கள் சொல்ல வேண்டியதிருக்கிறது. அதே மாதிரியாக, துணைத் தலைவர் அவர்களே, பேசக்கூடிய எங் களுக்கு இந்தச் சட்டத்தின் மீது விவாதிக்க வேண்டிய விஷயங்கள் சில இருக்கின்றன. நேரத்தைக் கருதி சுருக்கமாகச் செய்யலாம். அல்லது அதிகமாகச் செய்யலாம். சுருக்கமாகத்தான் பேசு கிறோம். அந்த முறையில் எங்களுக்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும்.

(முற்பகல் 11-50)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு சபையில் பேசிய கருத்தைத் திரும்ப பேசக்கூடாது என்று ஒரு கன்வென்ஷன் இருக்கிறது. அதற்காகத்தான் சொல்லுகிறேன்.

திரு. கு. ரமணி: பேசக்கூடாது என்று வரக்கூடிய கில்லட்டின் வரட்டும், அப்போது பார்த்துக் கொள்ளலாம். இப் போது இதைப் பற்றி நான் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்திலே ஒரு முக்கியமான பிரச்சினை இருக்கிறது.



1977-ஆம் வருடம் மே மாதம் 11 ஆம் தேதியிலிருந்து கோவை மார்க்கெட்டிங் கமிட்டியைக் கலைத்து ஒரு தனி அதிகாரியின் கையில் ஒப்படைத்திருக்கிறீர்கள். பல இலட்சக் கணக்கான, கோடிக்கணக்கான விவசாயிகளுடைய வர்த்தக சம்பந்தமான நடவடிக்கைகள் நடக்கக்கூடிய இடம் அது. அப்படிப் பட்ட இடத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்து அவர்கள் அந்தக் காரியத்தில் பங்கெடுத்துக்கொண்டு நடைபெற வேண்டிய நியாயமான நடவடிக்கை இல்லாமல் இருக்கிறது. இப் போது பத்து வருஷம் தாண்டியிருக்கிறது. இப்போது மறுபடியும் மே 10 ஆம் தேதி காலாவதி ஆகிறது என்பதால், ஏற்கெனவே நம்முடைய ஜனாதிபதியின் கையெழுத்துக்கு அனுப்பப்பட்டுள்ள Comprehensive Legislation இங்கே வந்து சேராத தால் இந்த Interrguum period-இல் எப்படியாவது சமாளிக்க வேண்டும் என்று இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் விவசாயிகளுடைய பிரச்சினைகளை, எங்களுடைய பிரச்சினை களை சொல்லும்போது '' மோட்டிவோடு '' சொல்லுவதாக நினைக்கக் கூடாது. தேர்தல் என்பதை தொடர்ந்து தள்ளிப் போட்டுக் கொண்டே போகிற பழக்கம் உங்களிடம் வளர்ந்து கொண்டேயிருக்கிறது. இது எங்களுக்குச் சரியென்று தோன்ற வில்லை. மார்க்கெட்டிங் கமிட்டி என்பது விவசாயிகளின் வாழ்க் கையில் முக்கியமான அங்கமாக அமைந்திருக்கிறது. அப்படிப் பட்ட நிலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டி வேண்டும் என்பது தான் பிரதான அம்சம். அந்தத் தேர்தலை தள்ளிப் போட்டுக் கொண்டே போவது உங்களுடைய நிலைமை. நாங்கள் முக்கியமான பிரச்சினை என்று சொல்லுவதற்கு இதுதான் கார ணம். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த விஷயம் தெரிந்த ஒன்றுதான். ஆகவே நான் கேட்க விரும்புகிறேன். நீங்கள் எப்போது இந்தத் தேர்தலை நடத்தப் போகிறீர்கள் ? இதற்காக குறிப்பிட்டு ஒரு தேதியைச் சொல்லாவிட்டாலும் இப் போது ஒரு வருஷத்திற்கு நீட்டிப்பு கேட்கிறீர்கள். நாளைக்கே ஜனாதிபதியின் அசென்ட் கிடைத்து சட்டம் வரலாம். அப்போது என்ன செய்வீர்கள். இதற்காக நீங்களே இதிலே குறிப்பிட் டிருக்கிறீர்கள். ரூல்ஸ் தயார் செய்ய நாங்கள் நீட்டிப்பு கேட் கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இங்கே ஒரு நல்ல அனுபவம் இருக்கிறது. உதாரணமாக விரிவான தொழிற் கூட்டுற வுச் சட்டத்தை, எல்லா கட்சிகளும் சேர்ந்து விவாதித்து, பல ஆலோசனைகள் கொடுக்கப்பட்டு, அதை அரசு தரப்பிலும் ஒத்துக் கொண்டு அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தோம். அந்தச் சட்டத்திற்குக் கூட ரூல்ஸ் போடாமல் '' கோல்ட் ஸ்டோரே ஜில் '' இப்போது இருக்கிறது. நிலைமை இப்படியிருந்தால் எப்படி ஒழுங்கான முறையில் சட்டங்கள் அமுலுக்கு வரும் ? அதுதான் எங்களுக்கு இருக்கக் கூடிய சந்தேகம், கவலை எல்லாம். அப்படிப்பட்ட நிலைமை இதற்கும் வரக்கூடாது. நீங்கள் எத் தனையோ காரியத்திற்காக டில்லிக்குப் போகிறீர்கள். அதைப் போல டில்லிக்குப் போய் இதை ascertain பண்ண வேண்டும். You can get the assent of the President. It is not a diffic. It problem.

(திரு. கு. ரமணி) [1987 மே 6

இதை நீங்கள் செய்ய முடியும். அதைச் செய்து நீங்கள் இந்தத்
தேர்தலுக்கு ஒரு பீரியடை சொல்லுங்கள். இந்தத் தேதியில்
நாங்கள் தேர்தலை நடத்தத் தயார் என்று நீங்கள் சொன்னால்
அதை நிச்சயமாக நாங்கள் வரவேற்போம். அந்த நிலை இல்லை.
நீங்கள்மறுபடியும் ஒரு வருஷம் நீட்டிப்பு கேட்கிறீர்கள். அதுதான்
எங்களுக்குள்ள சங்கடம். ஆறு மாதம், மூன்று மாதம் என்று
கேட்கவில்லை. அப்படியானால் ஜனாதிபதியின் அசெண்ட் வர
அவ்வளவு காலம் ஆகும் என்று எதிர்பார்க்கிறீர்களா? அப்படி
யானால் எங்கள் பாயிண்ட் கரெக்ட்தானே! ஆகவே பத்து வருஷம்
என்ற நிலைமை இனிமேல் இருக்கக் கூடாது. எப்போது முடிக்கப்
போகிறீர்கள் என்பதற்கு ஒரு குறிப்பிட்ட பீரியடை குறிப்பிட்டு
தேர்தலை நடத்தப் போகிறோம் என்று சொன்னால் இந்தச்
சட்டத்தை நிறைவேற்றலாம்.

*திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண் விளைபொருள்
சந்தைகள் சட்டத்திற்கு 11 ஆவது ஆண்டாக திருத்தம் கொண்டு
வந்து நீட்டிப்பைக் கேட்கிறீர்கள். இந்தச் சந்தைக் குழுவானது
தனது கடமைகளை ஆற்றுவதற்கு தகுதியற்றது என்ற முறையில்
24 (1)-ன்படி அரசு இந்தச் சந்தைகளைக் கலைத்திருக்கிறது.
ஆனால், கலைத்த நீங்கள், உங்கள் கடமையை சரியாகச் செய்ய
வில்லை என்று இந்த நேரத்தில் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.
காரணம், உங்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தின்படி 1977 ஆம்
ஆண்டு இதைக் கலைத்த நீங்கள், இன்னும் சந்தைகளுக்கு முறை
யாகத் தேர்தல் நடத்தவில்லை. ஒரு வருஷம்தான் நீட்டித்து
இந்தச் சட்டமுன்வடிவில் கேட்க முடியும். ஒரு வருஷம் நீட்டிப்
பதற்குத்தான் அதிகாரம் இருக்கிற காரணத்தால், ஒவ்வொரு
வருஷமாகக் கேட்கிறீர்கள் என்று சந்தேகப்படுகிறேன். இல்லா
விட்டால் இந்த மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த
வுடனே 5 வருஷங்களுக்கும் சேர்த்து கேட்டிருப்பீர்களோ என்று
அச்சப்படுகிறேன். இப்போது 11 ஆம் வருஷமாக நீட்டிக்கப்
படுகிறது. இது தேவையற்ற சட்டம் என்பது என் கருத்து.
விவசாயிகள் தங்கள் பொருள்களை முறையாக இந்தச்
சந்தைகளில் விற்பதற்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட
கமிட்டிகள் இல்லாததால் பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன.
அவர்களுடைய சரக்குகளுக்கு சரியான விலை கிடைக்கவில்லை.
முறையாக டெண்டர்கள் விடுவதில்லை. உடனடியாக அவர்
களுக்கு ரொக்கம் வேண்டுமென்றால், சரியான விலைக்கு செல்ல
தில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்தால் ......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சுருக்கமாகப்
பேசி முடியுங்கள். அடுத்து இரண்டு பெரிய மானியங்கள் இருக்
கின்றன. உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 5 நிமிடங்கள் பேசி
முடித்துக் கொள்ள வேண்டும்.



1987 மே 6]

திரு ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை ஆட்சேபணை செய்ய உரிமை கொடுத்திருக்கிறீர்கள். அதனால் பேசுகிறேன். இதில் ஒரு வருஷம் நீட்டித்துக் கேட்டிருக்கிறீர்கள். உடனடியாக இந்த வருஷமாவது இந்தத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்டமுன் வடிவை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டு, விடை பெறுகிறேன்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று சொல்லும் போது, இது ஒரு தற்காலிக ஏற்பாடு என்று சொன்னதிலே எனக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. ஆனால் அமைச்சரவர்களைப் பொறுத்த வரையில் அவருடைய தனிப்பட்ட உறுதிமொழிகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம், அங்கீகரிக்கலாம், ஆனால், இந்த அரசாங்கத்தின் கடந்த கால பல்வேறு துறைகள் சம்பந்தப்பட்ட நடைமுறை அனுபவங்களைப் பார்க்கின்றபோது, தற்காலிக ஏற்பாடு என்பது நிரந்தர ஏற்பாடாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் தற்காலிகமாகத்தான் இந்த ஏற்பாடு என்று சொல்வதை நிரந்தரமாகக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எப்படி இதை ஏற்றுக்கொள்ள முடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

நான் வலியுறுத்த விரும்புவது, கோவை விவசாயிகள் சந்தைக் குழு சம்பந்தப்பட்ட விஷயமல்ல. சட்ட விதிகளில் இருக்கிற சட்ட மரபுகளை மக்கள் அனுபவிப்பதற்கு உரிய ஜனநாயகத்தினுடைய சாளரங்களை நிரந்தரமாக நீங்கள் அடைத்துக் கொண்டிருப்பதால், ஜனநாயக மரபுகள் புழுங்கித் துடிக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இங்கே எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் குறிப்பிட்டது போல, அமைச்சரவர்கள் இந்த ஓராண்டுக் காலத்திற்குள் நிச்சயமாக விவசாயிகளின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்ற உறுதிமொழியைப் பேரவையில் அளிக்கத் தயாராக இருக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு ஓராண்டுக்கு நீட்டிக்க அனுமதி கேட்கிறார்கள். அதற்குள் இதை நிறைவேற்றுவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

இங்கே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், தகுதியற்ற நிலையை சந்தைக்குழு அடைந்துவிட்டதால் கலைத்துவிட்டோம் என்று சொல்லுகிறார்கள். 10 ஆண்டுக் காலத்திற்குள் தகுதியுள்ள சந்தைக் குழுவை அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் தகுதியற்றது அரசா அல்லது சந்தைக் குழுவா என்றக் கேள்வி எழுகிறது. 10 ஆண்டுகள் கழிந்திருக்கிறது. இன்றைக்குச் சட்டம் காத்திருக்கிறது. அதில் மாறுபட்ட கருத்தல்ல. குடியரசுத் தலைவரின் அனுமதிக்காக சட்டம் காத்திருக்கிறது. மழை நின்றாலும், தூவானம் நிற்காது என்று

சொல்லுவார்கள். சட்டம் வந்தாலும், விதிகள் இயற்றுவதில்
காலதாமதம் ஏற்படும். கூட்டுறவுத் துறையில் விதிகள் இயற்றப்
பட்டாலும், தேர்தல்கள் நடத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறதா
என்றால் இல்லை. எனவே, கடந்த கால அனுபவத்திலிருந்து
இந்த அரசைப் பொறுத்தவரையில், ஜனநாயக உரிமைகளைப்
பறிப்பது என்பதைத்தான் தன் தொடர்ச்சியான வாடிக்கை
யாகக் கொண்டிருக்கிறார்கள் என்பதால்தான், ஓராண்டுக்கு
நீட்டிப்பு என்பதை எங்களால் ஒப்புக்கொள்ள முடியவில்லை.
அமைச்சரவர்களிடம் இறுதியாகக் கேட்டுக் கொள்ள விரும்பு
வது, அமைச்சரவர்கள் மிகுந்த நம்பிக்கையோடு, பொறுப
போடு தற்காலிக ஏற்பாடு என்று சொன்னார்களே, அந்த
ஓராண்டுக் காலத்திற்குள் நிச்சயமாக சந்தைக் குழுக்களுக்கான
தேர்தல்கள் நடத்தப்படும் என்ற உறுதிமொழியை அளிக்கத்
தயாரா என்பதுதான்.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, தமிழ்நாடு வேளாண் விளைபொருள்
சந்தைகள் திருத்தச்சட்டமுன்வடிவை மாண்புமிகு வேளாண்மைத்
துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ளார்கள்.
10 ஆண்டுகள் முடிந்து, 11 ஆம் ஆண்டு தொடக்கத்தில் தனி
அதிகாரிகள் கையிலே ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள்
ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்றால், அதன் சிரமங்களை முன்
னாலேயே சொல்லியிருக்கிறோம்.

(நண்பகல் 12-00)

இதிலே என்னென்ன முறைகள் அங்கே நடந்துகொண்டிருக்
கின்றன என்பதைச் சுட்டிக் காட்டுகிறேன். தனி அதிகாரிகள்
இன்றைக்குவிவசாயிகளுக்கு நன்மைசெய்யவேண்டும். வேளாண்மை
பொருள்களை வாங்கி விற்கின்றவர்களை முடுக்கிவிடுகின்றார்கள்.
விலையை அவர்கள் குறைக்க வைத்து அவர்களிடம் கையூட்டு
பெற்று விவசாய விளை பொருள்களை மிகக் குறைந்த விலைக்கு
விற்க வைக்கின்றார்கள். இப்படி 10 ஆண்டுக் காலமாக விவசாய
பெருமக்கள் சிரமத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.
மார்க்கெட்டிங் சொசைட்டியிலே என்ன நடக்கிறது என்றால்,
உரத்தை எடுப்பதிலேகூட என்ன என்ன உயர்ந்த கம்பெனி
இருக்கின்றதோ அவர்களிடத்திலே பங்கீட்டைப் பெற்று, காசு
வாங்கிக் கொண்டு, பரிசுப் பொருள்களை வாங்கிக் கொண்டு
ஒவ்வொரு ஆண்டுக்கும் எவ்வளவு பணம் கூடுதலாக ஆகின்றதோ
அதற்குத் தகுந்தாற்போல் உரங்களை அவர்கள் விற்பதற்கு வழி
வகை செய்கிறார்கள். இதனால் ஏற்படுகின்ற தொல்லைகளை
எல்லாம் விவசாய பெருமக்கள் தான் அனுபவிக்க வேண்டியிருக்
கின்ற கால கட்டத்தில் இருந்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த
சட்டத் திருத்தம் டெல்லியிலேயிருந்து வர காலதாமதம் ஆகிறது





என்று சொல்கின்றார்கள். இதைப் பொறுத்தவரையில் நம்
முடைய அரசு நினைத்தால் 15 நாட்களிலே கூட ஒப்புதல்
வாங்கிவிட முடியும். கலைப்பதற்கு ஒரு மாதத்திற்குள் ஒப்பு
தலை வாங்கியிருக்கின்றார்கள். இதை அமைப்பதற்கு ஏறத்தாழ
3 மாதம் ஆகியும்கூட ஒப்புதல் வரவில்லை என்று சொல்கிறார்
கள். கலைப்பதற்கு உடனே ஒப்புதலை வாங்கியிருக்கின்ற
நீங்கள், அதை அமைப்பதற்குச் சிரமங்கள் இருக்கின்றன என்று
சொல்கின்றீர்கள். இத்தகைய சிரமங்களை உருவாக்கியதற்கு
அரசாங்கமே காரணமாக இருக்கிறதோ என்றுகூட சந்தேகப்பட
வேண்டியிருக்கின்றது. இன்னும் குறிப்பாக தமிழ்நாடு உள்ளாட்சி
நிர்வாகமாக இருந்தாலும் சரி, இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்க
நிர்வாகமாக இருந்தாலும் சரி, அந்தந்த நிர்வாகங்களில்
ஏற்படுகின்ற ஜனநாயக நெறி முறைகளின் குரல்வளையை இந்த
அரசாங்கம் நெரித்து விடுகிறது. அந்தப் பணியை தொடர்ந்து
இந்த அரசாங்கம் செய்து வருகிறது என்பதையும், இதிலேயும்
அந்த முத்திரையைப் பதிக்கிறது என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில்
சுட்டிக்காட்டி வெகு விரைவிலே தேர்தலை நடத்துகின்ற
பணியினை இந்த அரசாங்கம் செய்யவேண்டும் என்று கேட்டு
அமைகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, 1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்
விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவின் மீது
இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய
கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
இந்தச் சட்ட முன்வடிவிற்கான காரண காரிய விளக்க உரையிலே
1977-ஆம் ஆண்டிலேயிருந்து இந்தக் குழு கலைக்கப்பட்டிருக்
கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சுருக்கமாகச் சொல்ல
வேண்டுமென்றால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு
எந்த ஆண்டு ஆட்சிப் பொறுப்பு ஏற்றதோ அந்த ஆண்டில் இருந்து
இதுவரை 10 ஆண்டுக் காலமாக இவற்றிற்கான தேர்தல் நடை
பெறவில்லை. இதற்கு முன்னாலே இதைப்பற்றி பல்வேறு சமயங்
களிலேயும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும்
நிதிநிலை அறிக்கை வருவது போல துணை நிதிநிலை அறிக்கை
வருவதுபோல, நம்முடைய கூட்டுறவுத் துறை, மாநகராட்சி
களுக்கு, வேளாண் விளைபொருள் சந்தைக்கு தனி அதிகாரிகள்
பதவிகளுக்கு கால நீட்டிப்புக்காக சட்ட முன்வடிவு கொண்டு
வருவது என்பது வாடிக்கையாகவே இருக்கின்றது என்று எனக்கு
முன்னால் பேசிய உறுப்பினர்கள் எடுத்துச்சொன்னார்கள். ஒழுங்கு
முறை விற்பனைக் கூடம் என்பது விவசாயப் பெருமக்களுக்கு
நன்மைகளைப் பயக்கும் என்று கருதுகிறோம். அதற்கான குழு
இயங்க வேண்டும். அந்த குழுக்கள் 10 ஆண்டுக்காலமாக
இல்லாதது என்பது விவசாய பெருமக்களிடையே பெருத்த
தொல்லையை ஏற்படுத்தியுள்ளது. இப்போது கொடுக்கப்பட்டிருக்
கின்ற காரண காரிய விளக்கத்தில் குடியரசுத்தலைவர் அவர்களுக்கு
இந்தச் சட்ட முன்வடிவு போய் இருக்கின்ற காரணத்தினால்

ஓராண்டுக் காலம் கேட்கிறோம் என்று தெரிவித்திருப்பதிலே ஒரு நியாயம் இருக்கமுடியும். ஆனால் 10 ஆண்டுக்காலம் இதை நீட்டித்ததற்கு எந்த விதமான காரணமும் இல்லை என்பதை நான் வலியுறுத்திச்சொல்லிக்கொள்கிறேன். அந்த தனி அதிகாரி, இருக்கின்றஅந்த பகுதிக்குச் சொந்தக்காரராக இல்லாத காரணத் தினால் பல்வேறு முறைகேடுகள் நடைபெறுகின்றன. இந்த வேளாண் விளைபொருள்களை விற்கின்றபோது அந்தப் பகுதி விவசாயப் பெருமக்கள் பெருத்த அவதிக்குள்ளாகி இருக் கின்றார்கள் என்பதை சொல்லிக்கொள்கிறேன். இந்த விதிகள் அமைப்பதற்கு ஓராண்டுகாலம் அவசியம் என்று அவர்கள் சொல் கின்றார்கள். முன்னாலேபேசிய உறுப்பினர்கள் சொன்னதுபோல கூட்டுறவுசங்கங்கள் விதிகள்நிறைவேற்றப்படாமல் பலஆண்டுகள் காலம் கடந்து போய் இருக்கின்றது. ஆகவேதான், உங்கள் மூலமாக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன், தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் ''இனி ஒரு விதி செய்வோம் அதை எந்தநாளும் காப்போம்'' என்று பாடியது போல, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது எல்லாம், ''இன்று ஒரு விதி செய்வோம், இதை இந்த ஆண்டு காப்போம்'' என்பதுதான். நான் அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்வது எல்லாம் இந்த ஆண்டிலாவது காப்போம். நாவலர் அவர்கள் சொல்கிறார்கள். அவர்களே ஒத்துக்கொண்டிருக்கின்றார்கள். இந்த ஆண்டிலாவது காப்போம் என்ற முறையில் அமைச்சர்அவர்கள் பதில் அளிக்கின்ற போது, ஓராண்டுக் காலம் அதிகமாக இருந்தாலும் கூட, இந்த ஓராண்டிலாவது அந்தத் தேர்தல் நிச்சயமாக நடக்கும் என்ற உறுதியை அவர்கள் சொல்லி, இந்த பதவி நீட்டிப்பு என்பது இதுதான் இறுதியான முறையாக இருக்கவேண்டும் என்று நான் சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, தனி அதிகாரிகள்தலைமையிலே இந்த சொசைட்டிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மற்றபடி, குறைபாடுகள் ஒன்றும் இந்தச் சட்டத்தில் இல்லை. கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இந்த மாவட்டக் குழு மிக நன்றாகவே பணியாற்றிக் கொண்டிருக்கின்றது. எல்லோரும் ஓராண்டு எதற்காக எதற்காக என்று கேட்டார்கள். நான் ஏற்கெனவே சொன்னேன். ஓராண்டுக் காலம் என்று ஒரு சம்பிரதாயத்திற்காக கேட்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. எல்லோரும் தேர்தல் வந்துவிடுமா, தேர்தல் வந்து விடுமா என்று கேட்டார்கள்.எல்லாவற்றுக்கும் தேர்தலை நடத்திக் கொண்டு தான் இருக்கிறோம். ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்து தான் இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே மத்திய அரசினிடத்திலிருந்து, ஜனாதிபதியின் கையெழுத்தைப் பெற்று வந்தவுடன், சட்ட திட்டங்கள் எல்லாம் வகுக்கப்பட்ட பிறகு ஜனநாயக முறைப்படி அதுகுறித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. க இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1987) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### 7. வரவு–செலவுத் திட்டம், 1987–88 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

### (அ) கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும்

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 19,58,69,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

THIRU A.S.A. ARUMUGAM: Sir, To discuss Policy I move that—

"the allotment of a sum of Rs. 19,58,69,000/- under Demand No.26-Handlooms and Textiles be reduced by Rs.100/-''

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு 1985 ஆம் ஆண்டு முதல் அரசிடமிருந்து வரவேண்டிய ரிபேட் தொகை பட்டுவாடா செய்யாதிருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 19,58,69,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி பகுதியில், பெருந்தொழில்கள் இல்லாத நிலையில், வரும் காலங்களிலாவது, நவீன இழைகள் தயாரிக்கும் நூற்பாலை ஏற்படுத்துவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

''மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 19,58,69,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை பசுமலை மகாலட்சுமி மில்லை அரசே ஏற்று நடத்த வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

''மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 19,58,69,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கைத்தறி துணிக்கு ஆண்டு முழுவதும் ரிபேட் கொடுப்பதை பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

''மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 19,58,69,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண் 33—வீட்டுவசதி.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

''மானியக் கோரிக்கை எண் 33—வீட்டுவசதி என்ற தலைப்பின் கீழ் ரூ. 30,27,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—



''மானியக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 30,27,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோயில் பகுதியில் வீட்டு வசதி அளிக்கும் பொருட்டு அங்கு நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

''மானியக் கோரிக்கை எண் 33—வீட்டுவசதி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 30,27,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு வீட்டுமனை சொந்தமில்லாமல் இருப்பதால் அதில் அவர்கள் சொந்தமாக வீடு கட்டவோ அல்லது கடன் பெறவோ முடியாத நிலை இருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

''மானியக் கோரிக்கை எண் 33—வீட்டுவசதி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 30,27,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூர் அண்ணா காலனியிலுள்ள வீட்டு வசதி வாரியத் தொழிலாளர்கள் குறைந்த வாடகைக் குடியிருப்பு வீடுகளை அவரவர்களுக்கே தவணை முறையில் பணம் செலுத்தி உடமையாக்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

''மானியக் கோரிக்கை எண் 33—வீட்டுவசதி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 30,27,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பழைய வீட்டுவசதி குடியிருப்பு மராமத்து பணிகள் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

''மானியக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 30,27,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் செண்பகராமன் புத்தன்துறை, பொழிக்கரை, மனக்குடி, பள்ளம், கேசவன் புத்தன் துறை மற்றும் மீனவ கிராமங்களுக்கு தீ பிடிக்காத மீனவர் குடியிருப்புகள் கட்டவேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண். 33—வீட்டுவசதி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 30,27,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''.

(இ) கோரிக்கை எண் 34 – நகர்ப்பகுதி வளர்ச்சி

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

''மானியக் கோரிக்கை எண் 34— நகர்ப் பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ரூ. 34,20,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப் பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 34,20,78,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(பிற்பகல் 12-10)

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

'' மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப் பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 34,20,78,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் ''.

திரு. சோ. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

'' மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப் பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 34,20,78,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.





திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, திருப்பூர் நகர வளர்ச்சிக்கு பெரிதும் உதவ ஒரு விளையாட்டரங்கம் கட்ட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

'' மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப் பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 34,20,78,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையில் புதிய விசாலமான புறநகர் பேருந்து நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

'' மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப் பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 34,20,78,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் கொள்கைகளும், திட்டங்களும் புத்தகங்களாக ** அச்சிடப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன ; அவையிலே வைக்கப்பட்டிருக்கின்றன. அதை நான் படித்ததாக சபைக் குறிப்பிலும், பத்திரிக்கைக் குறிப்பிலும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை சொன்னதற்குப் பின்னால், உரையாற்றியதற்குப் /பின்னால், நான் ஏதாவது அரசின் சார்பில் தெரிவிக்க வேண்டியிருந்தால் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றையதினம் விவாதத்தில் பங்கு பெறுவதற்கு 16 மாண்புமிகு உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். நேரம் இப்பொழுது 12-11. எனவே பேசுகிற மாண்புமிகு உறுப்பினர்கள் சுருங்கச்சொல்லி விளங்க வைக்கிற முறையில் பத்தே மணித் துளிகளில் முடித்துக் கொள்ள வேண்டுகிறேன்.

---

**137–217ம் பக்கங்களில் இணைப்புகள் I.–IX.ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

* திரு. ஆர். கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, கைத்தறி, வீட்டு வசதி, மற்றும் நகர்ப் பகுதி
வளர்ச்சியினுடைய கோரிக்கைகளின்மீது பேசும் வாய்ப்பு அளித்
ததற்கு என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இந்த நாட்டிலே, தமிழகத்திலே விவசாயிகளுக்குத்தான் முத
லிடம்; 70 சதவீதமாக தமிழகத்திலே இருக்கிறார்கள் அதற்கடுத்த
படியாக, கைத்தறியிலே ஈடுபட்ட கைத்தறி நெசவாளர்கள்தான்
இரண்டாவது இடத்தைப் பெறுகிறார்கள் என்பதை இந்த நேரத்
திலே கூறிக்கொள்ளுகிறேன். எனவே, கைத்தறி நெசவாளர்கள்
தமிழகத்திலே கிட்டத்தட்ட 5.56 இலட்சம் பேர் இருக்கிறார்கள்.
அதிலே கைத்தறி சொஸைட்டியிலே இணைந்திருக்கின்றவர்கள்
3.89 இலட்சம் பேர் கூட்டுறவு இயக்கத்திலே இணைந்திருக்கிறார்
கள். மற்றவர்கள் தனியாரிடத்திலே தொழில் செய்து கொண்டு
வருகிறார்கள்.

ஆனால் இன்றைய நிலை என்ன என்று பார்க்கிறபொழுது
தமிழகத்திலே கைத்தறி சொசைட்டிகளுக்கு இன்றைய வரை
யிலும் தேர்தல் நடத்தவில்லை. அதனுடைய எதிரொலியாக
அங்கே சொசைட்டித் தலைவர்களாக நியமிக்கப்படுகின்றவர்கள்
அந்தத் தொழிலிலே ஈடுபடாத, அந்தத் தொழில் தெரியாத
வர்களாக நியமிக்கப்படுகின்றார்கள். அதன் விளைவாகப் பல
வேறு சொசைட்டிகள் நஷ்டத்திலே நடக்கக்கூடிய சூழ்நிலைக்கு
ஆளாக்கப்படுகின்றன. அந்தத் தொழிலே தெரியாதவர்கள்
அந்தக் கூட்டுறவு சொசைட்டிகளினுடைய தலைவர்களாக
இருக்கிறார்கள். இதையெல்லாம் மாற்றியமைக்க கூட்டுறவு
களுக்குத் தேர்தலை இந்த அரசு அனுமதிக்க வேண்டுமென்று
மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், அந்த சொசைட்டிகளுக்கு அங்கே
வழிகாட்டிகளாக இருக்கக்கூடிய அதிகாரிகள், அங்கே தெரியாத
வர்களுக்கு தவறான பாதைகளை விட்டு நல்ல பாதைகளைக்
கற்றுத் தர வேண்டும் என்பதை இந்த நேரத்தில் ஞாபகப்படுத்து
கின்றேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு அந்தக் கைத்தறி நெசவாளர்
களெல்லாம் துணி நெய்து பல கோடிக்கணக்கான ரூபாய்க்குத்
தமிழகத்திலே தேங்கிக் கிடந்தன. ஏதோ ஒரு காரணத்திற்காக
இப்பொழுது 15 நாட்களில் அவைகள் தீர்ந்துவிட்டதாக புள்ளி
விவரங்களைச் சொல்கிறார்கள். ஆனால், இன்றைக்கும் அந்தக்
கைத்தறி நெசவாளர்கள் நிலை என்னவென்று பார்க்கிறபொழுது
இன்றைக்கு சொஸைட்டிகளிலே கூலி கொடுக்கப் பணம் இல்லை.
அங்கே நூல் கிடைப்பதில்லை. இதற்கெல்லாம் என்ன கார
ணம் என்று கேட்டால் அரசு கொடுக்கக்கூடிய ரிபேட், 1984-85-ல்





கொடுக்கவில்லை.
கொடுக்கக்கூடிய ரிபேட்டுகள்கூட இன்றுவரை கொடுக்கவில்லை.
அதை நாங்கள் அதிக வட்டிக்குப் பேங்குகளிலே பெறவேண்டிய
சூழ்நிலை இருக்கிறது ; அவர்கள் அந்தந்த ஆண்டுக்கான ரிபேட்
டைக் கொடுத்துவிட்டால், நாங்கள் இந்த சொசைட்டிகளை
நடத்துவதற்கு ஏதுவாக இருக்கும் என்று கூறுகிறார்கள்.

இந்த சொசைட்டிகளிலே தேர்ந்தெடுக்கப்படாத தலைவர்
களும், உறுப்பினர்களும் இருக்கிற காரணத்தினால், அந்தத்
தொழிலிலே ஈடுபடாதவர்கள் இருக்கின்ற காரணத்தினால் அங்கே
அந்தத் தொழிலைச் சரிவர நடத்த இயலவில்லை என்றும் சொல்
கிறார்கள். இன்றைக்கு அந்தத் கைத்தறித் தொழில் நசுங்குகின்ற
நேரத்தில் சாயத்திற்குக்கூட வரியைப் போட்டிருக்கிறீர்கள்.

அது அந்த கைத்தறி சொசைட்டிகளை வெகுவாகப் பாதித்
திருக்கிறது. நூலுக்கும் வரி போட்டிருக்கிறீர்கள். அதுவும்
அவர்களைப் பாதித்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில்
நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. இரண்டு மாதங்கள் ரிபேட் கொடுத்து
வந்தார்கள் அதை இப்போது 30 நாளாக குறைத்திருக்கிறார்கள்.
அதனால் அந்தத் தொழில் மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே
ரிபேட்டை மேலும் 60 நாட்களாக அதிகப்படுத்தித் தரவேண்டு
மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நமது புரட்சித் தலைவர் அவர்கள் 125 கோடி ரூபாய்க்கும்
மேலாக விவசாயிகளுக்கு வரியைத் தள்ளுபடி செய்து இருக்கிறார்
கள். அது வரவேற்கத்தக்கதுதான். எப்படி அதைத் தள்ளிக்
கொடுத்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா ? 35
ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நாடு எப்படி இருந்தது ? ஆறு
அவுன்ஸ் அரிசி போட்டார்கள் என்று காங்கிரஸ்காரர்களைப்
பார்த்து கேலி செய்த நாடு இது. இந்த நாட்டினுடைய உணவுப்
பஞ்சத்தைப் போக்குகின்ற வகையில் நேரு அவர்களும், காம
ராஜர் அவர்களும் பல டேம்களைக் கட்டி இந்த நாட்டினுடைய
உணவுப் பஞ்சத்தைப் போக்கினார்கள். ஏராளமான உணவை
உற்பத்தி செய்து தன்னிறைவை உருவாக்கினார்கள். ஒரு ஸ்திர
மான நிலையை ஏற்படுத்தினார்கள். கைத்தறித் துறையிலும்
அப்படிப்பட்ட ஒரு நிலைமையை உண்டாக்க வேண்டாமா ?
எத்தனை நாட்களுக்குத்தான் இப்படிப்பட்ட நிலைமையில் கைத்
தறித் துறை இருந்துகொண்டிருப்பது? எனவே இந்தத் கைத்
தறித் துறைக்கு சரியான ஒரு பாதுகாப்பைத் தரவேண்டாமா
எத்தனை நாட்களுக்குத்தான் சப்பைக் கட்டிக்கொண்டு இருப்பது?
இன்றைக்குத் தமிழகத்தில் பல இலட்சம் கைத்தறி நெசவாளர்
கள் இருக்கிறார்கள் . அவர்களுக்கு எத்தனை நாட்களுக்குத்தான்
இப்படிப்பட்ட முறைகளில் உதவிக்கொண்டிருக்க முடியும்?
அவர்களுக்கு ஒரு நிரந்தரமான பாதுகாப்பை ஏற்படுத்த வேண்
டும். எப்படி உணவுப் பஞ்சத்தைச் சரிக்கட்டி தன்னிறைவு

அடைந்து, வெளிநாட்டுக்கு அரிசி அனுப்புகிற அளவுக்கு நிலைமையை ஏற்படுத்தினோமோ அதுபோன்று கைத்தறித் துறையிலும் ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அதிலே அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து அந்தத் துறை சற்று வேகமாக வளர்வதற்குரிய வகையில் வழிவகை செய்ய வேண்டாமா? 22 ரகங்கள் கைத்தறிக்கென்று அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அதைப் பொறுத்தவரையில் ஏதோ ஒரு காரணத்தால் சுப்ரீம் கோர்ட்டிலே வழக்கிலே இருக்கிறது. எனவே அதைப் பொறுத்தவரையில் மாநில அரசும், மத்திய அரசும் உரிய ஏற்பாடுகளைச் செய்து அந்த வழக்கினைத் துரிதப்படுத்தி அந்த 22 ரகங்களையும் கைத்தறித் துறைக்கே ஒதுக்கினால்தான் கைத்தறித் துறை ஓரளவுக்கு தலை தூக்க முடியும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, மத்திய, மாநில அரசுகள் பல கோடிக் கணக்கான ரூபாயை இந்தக் கைத்தறி நெசவுத் தொழிலுக்காக ஒதுக்கி இருக்கின்றன. இந்த வகையில் எத்தனை ஆண்டுகளுக்குத்தான் சரிக்கட்ட முடியும்? மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் வேகமாகத் தொழில் நடக்கவேண்டும் என்பதற்காகத்தான் விசைத்தறியைக் கொண்டு வந்தார்கள். ஆனால் தமிழகத்திலே உள்ள விசைத்தறியாளர்கள் என்ன செய்கிறார்கள். லைசென்ஸ் இல்லாதவர்கள் பல பகுதிகளில் தவறான வழிகளில் — அதாவது கைத்தறியிலே ஒரு லுங்கிக்கு 26 ரூபாய் ஆகிறது என்று சொன்னால் — பவர் லூமிலே நெய்து, சாயம் போட்டு எல்லா வேலைகளையும் செய்து முடித்து 10 ரூபாய்க்கு பஜாரிலே, கடைத்தெருவிலே விற்கிறார்கள். இப்படி நிலைமை இருந்தால் எப்படி கைத்தறி முன்னுக்கு வர முடியும் என்பதைத் தயவுசெய்து எண்ணிப்பாருங்கள். அடையாளம் தெரியாதவர்கள், அதிகாரிகளைக் கைவசம் வைத்துக்கொண்டு திருச்செங்கோடு, பள்ளிப்பாளையம் போன்ற பகுதிகளில் இப்படிப்பட்ட விசைத்தறிகளை நடத்துகிறார்கள். கைத்தறிக்காரர்கள் நசிந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் விசைத்தறிகாரர்கள் எல்லாம் உயர்ந்துக் கொண்டே போகிறார்கள். பேரம் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையைப போக்க வேண்டாயா? இது அரசினுடைய கடமை அல்லவா? ஆகவே இப்படிப்பட்ட கஷ்டங்களைப் போக்கியாக வேண்டும். இதற்கு ஒரு நிரந்தரமான ஏற்பாட்டைத் தேடியாகவேண்டும். நாமெல்லாம் கைத்தறிக்கு விரோதமானவர்கள் அல்ல. கைத்தறிக்கு ஆக்கம் கொடுத்திருக்கிறார்கள். மூதறிஞர் ராஜாஜி, காமராஜர் போன்றவர்கள் எல்லாம் மற்றும் அண்ணா, நாவலர் போன்றவர்கள் எல்லாம் கைத்தறித் துணிக்கு ஊக்கம் தந்தார்கள். அதையெல்லாம் நாம் பார்த்தோம். ஆனால் கைத்தறியாளர்கள் இன்று தெருவிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவ ஒரு சரியான திட்டத்தைத் தீட்ட வேண்டாமா? நாம் சொல்லிக்கொண்டிருந்தால் மட்டும் போதுமா? நடைமுறையில் அவற்றைச் செயல்படுத்த வேண்டாமா என்று கேட்க விரும்புகிறேன்.



இன்றைக்கு பல்வேறு சொசைட்டிகள் மூடப்பட்டு கிடக்கின்
றன. என்னுடைய பகுதியிலே அண்ணா சொசைட்டி என்று ஒன்று
இருக்கிறது. இந்தத் துறையின் முன்னாள் அமைச்சர் மாண்பு
மிகு திரு. வி. வி. சுவாமிநாதன் அவர்களுக்கு ரிப்போர்ட்
கொடுத்து, அதாவது 4 இலட்சம் ரூபாய் கையாடல் செய்ததைப்
பொறுத்த வரையில் நடவடிக்கை எடுத்து, சம்பந்தப் பட்டவர்
கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். அதை அவர்களும் அறிவார்கள்.
ஏன் இப்படிப்பட்ட இடர்ப்பாடுகள் வருகின்றன என்பதை அமைச்
சர் அவர்கள் கவனத்தில் கொண்டு நல்லதொரு நிலைமையை
உருவாக்க, தரமான துணிகளை நெய்ய அவர்களுக்கு உதவ
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு.......

(பிற்பகல் 12-20).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) : 8 நிமிடம் ஆகிவிட்டது. எல்லோருக்கும் பாரபட்சம் இன்றி 10 நிமிடம் கொடுக்க வேண்டும் என்று துணைத் தலைவர் சொல்லி விட்டுப் போயிருக்கிறார்கள். உங்களுக்கு இன்னும் இரண்டு நிமிடம் இருக்கிறது.

*திரு. ஆர். கோவிந்தசாமி : கைத்தறியிலே தரமான துணி
வகைகளை தயாரிக்க வேண்டும். எட்டு முழம் வேட்டி என்று
சொசைட்டியில் விற்கிறார்கள். அதை டோபிக்கு போட்டு திரும்ப
வாங்கும்போது 6 முழம்தான் இருக்கிறது. சேலை வாங்கினால்,
பிறகுசிற்றாடையாககாட்சியளிக்கிறது. அந்த அளவுக்கு சொசைட்
டிகளின் தரம் இருக்கிறது. அதை மாற்றி அமைக்க வேண்டு
மென்றால், அந்த மக்களுக்கு நல்ல ஆதரவு கொடுக்க வேண்டும்.

இப்போது நவீன பாலியஸ்டர் துணிகளும், வகை வகை
யான மில் துணிகளும் வெளி வருகின்றன. அத்தோடு போட்டி
போடும் வகையில் நம் சொசைட்டிகளில் நல்ல தரமான டிசைன்
களை போட்டு துணிகள் நெய்ய வேண்டாமா? அப்படி இல்லாததி
னால் அறியாத வயசுப் பிள்ளைகள் அதை திரும்பிப் பார்க்கவே
மாட்டேன் என்கிறார்கள். ஆகவே அந்த சொசைட்டிகளின்
தரத்தை மாற்றி அமைக்க வேண்டும். நம்முடைய தமிழ்நாட்டி
லேயே லுங்கியை அவ்வளவாக அணிவது இல்லை. ஆனால் வட
நாட்டிலே பெரும்பாலும் அணிகிறார்கள். அதுவும் மேற்கு வங்
காளம், கொரக்பூர், அஸ்ஸாம் போன்ற மாநிலங்களிலே பெரும்
பாலும் அணிகிறார்கள். அந்த இடங்களில் நம்முடைய அரசின்
சார்பிலே நம்முடைய தமிழகத்தின் சார்பிலே இந்தத் துறை
மூலமாக சொசைட்டிகளை நியமித்து அங்கே மார்க்கெட்டைப்
பிடிக்க வேண்டாமா?

தமிழ்நாட்டிலிருந்து அமெரிக்காவிற்கு கைத்தறித் துணிகள்
முதலில் போய்க் கொண்டிருந்தது. ஆனால் இப்போது செல்ல
வில்லை. ஏன் செல்லவில்லை. யாரிடத்திலே அந்த லைசன்ஸ்
இருக்கிறது. கோடிக் கணக்கில் பணம் வைத்திருப்பவர்களிடத்
தில்தான் அதற்கான உரிமம் இருக்கிறதே தவிர ஏழை எளியவர்
களிடமோ அல்லது இது போன்ற சொசைட்டிகளிடமோ இல்லை.

இங்கே பண்டிகை காலங்களில் ரிபேட் கொடுக்கிறார்கள். ரிபேட்டில் யார் வாங்குகிறார்கள். ஜவுளிக் கடைக்காரர்கள் வாங்கி அதிக விலைக்கு விற்கிறார்கள். சங்கு மார்க் போன்ற தரமான நிறுவனங்களின் லேபிளை ஒட்டி வட நாட்டில் விற்று விடுகிறார்கள். கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார்கள். இந்த நிலைமையை போக்கவேண்டும். அந்த மார்க்கெட்டுகளை இந்த சொசைட்டிகள் பிடிக்க வேண்டும் என்ற வகையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கேட்டுக் கொள்கிறேன்.

இந்த கைத்தறி நெசவாளர்களுக்கு வீட்டு வசதியே இல்லை. கொடுத்திருக்கும் கொள்கைக் குறிப்பில் கூட திருச்சி மதுரை, என்றுதான் கொடுத்திருக்கிறதே தவிர வட ஆற்காடு மாவட்டத்தை திரும்பியே பார்க்கவில்லை என்பதை வருத்தத்தோடு தெரித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியான குடியாத்தத்திலே நெசவுத் தொழிலை செய்யும் மக்கள் 30,000 பேர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதி மட்டும் இல்லை, எந்த வசதியுமே இல்லை. அவர்களுக்கு எந்த வித பாதுகாப்பும் இல்லை. எந்த இன்சூரன்ஸ் திட்டமும் இல்லை. அந்த திட்டங்களை செயல்படுத்தும் போது இவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 15 ஆண்டுகளுக்கு முன்னர் என்று நினைக்கிறேன். 50 ஏக்கர் 60 ஏக்கர் என்று நிலங்களை எடுத்தார்கள். நோட்டீசும் கொடுத்தார்கள். ஆனால் இன்னமும் கையகப்படுத்தவில்லை. ஏன் என்ன காரணம் என்றும் புரிய வில்லை. இங்கே வீட்டு வசதி வாரியம் வேலை செய்யவே இல்லை. மத்திய அரசு இதற்காக 100 கோடி ரூபாயைத் தருகிறார்கள். ஆனால் குடியாத்தம் நகரிலே எந்த ஒரு பலனும் இல்லை. அந்த ஏழைகளுக்கு வீட்டு வசதி கிடைக்கவில்லை. அங்கே ராஜீவ் காந்தியும், இங்கே புரட்சித் தலைவர் அவர்களும் என்ன நினைக்கிறார்கள் இந்த நாட்டிலே வாழக் கூடிய ஒவ்வொரு குடிமகனுக்கும் வீட்டு மனைப்பட்டா கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். இந்த மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும். இந்த நாட்டின் தரத்தை உயர்த்த வேண்டுமென்றும் வலியுறுத்தினார்கள். ஆனால் செயல் முறையில் அப்படி கட்டிக்கொடுக்கப்படவில்லையென்பதைக் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கைகள் எண். 26, 33 மற்றும் 34 ஆகியவற்றை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதியில் வீட்டு வசதி வாரியத்தால் வீடுகள் கட்டவிருந்த இடம் அப்படியே இருக்கிறதே தவிர வேலைகள் நடக்கவில்லையென்று கூறினார்கள். இது தமிழகம் பூராவும் இருக்கிறது என்பது ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு நிலை





தான் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் தமிழகத்தில் எத்தனையோ இடங்களில் 10 ஆண்டுக்காலமாக வீட்டு வசதி வாரியம் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு நோட்டீஸ் கொடுத்தவுடன் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை வாங்கி விடுகிறார்கள். அந்த நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு அரசு ஒரு குழுவை அமைத்து கண்டிப்பாக 1961-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வீட்டு வசதி வாரியம் இன்று வரையில் செயல்பட்டு வந்துள்ள விதங்களையெல்லாம் ஆராய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல இந்த நிலங்களை கையகப்படுத்துகிற நேரத்தில் கொஞ்சம் தாராளமாக நடந்து கொண்டால் இதில் இருக்கும் பிரச்சினை தீர்வதற்கு வழி ஏற்படுமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு ஏக்கர் நிலத்தை ஒரு நபரிடமிருந்து கையகப்படுத்துகிற போது அவருக்கு குறைந்த பட்சம் நிலத்தின் மதிப்பில் 25 சதவீதத்தை வீட்டு வசதி வாரியம் கொடுத்தால் இந்தப் பிரச்சினை தீருமென்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். ஏனென்றால் கலெக்டர் அவர்கள் நிர்ணயிக்கிற விலைக்கும் வெளி மார்கெட்டில் விற்கிற விலைக்கும், நாம் கொடுக்கிற விலைக்கும் நிறைய வித்யாசம் வருகிறது. இவற்றைப் போக்கவேண்டுமென்றால் யதார்த்தமான நிலையில் 25 சதவீதம் மதிப்பை நாம் கொடுத்துவிட்டால் கோர்ட்டிற்குப் போகிற நிலையை மாற்றியமைக்கலாம் என்பது என்னுடையதாழ்மையான கருத்தாகும். பெரிய வீடு கட்டும் திட்டங்களை துவங்கியிருக்கிற நாம் கொஞ்சம் நெளிவு சுளிவோடு நடந்து கொண்டால் இவற்றில் இருக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். இன்றைக்கு தமிழகம் பூராவும் 30 லட்சம் வீடுகளை மூன்றாண்டு காலத்தில், கட்டி முடிக்கவேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எண்ணியிருக்கிறார்கள், அதற்கேற்ற வகையில் செயல்படுகிறார்கள். இன்றைக்கு குடிசை மாற்று வாரியம் மூலமாக 46 நகரங்களில் இது போன்ற திட்டங்களை மேற்கொண்டு வருகிறார்கள். என்னுடைய தொகுதியான தாம்பரத்தில் 2,475 வீடுகள் கட்டுவதற்கு திட்டமிட்டு இன்றைய தினம் 1,420 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. குடிசை மாற்று வாரியம் ஏழை எளிய மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மிகப் பிரத்தியேக நிலையைக் கொண்டுள்ளது என்பதை அறிந்து குடிசை மாற்று வாரியத் தலைவர் அவர்களையும், அவர்களை நியமித்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், அதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், அதிகாரிகளையும் நான் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன். என்னுடைய தொகுதியில் தாம்பரம், திருவான்மியூர், கொட்டிவாக்கம், ஈஞ்சம்பாக்கம், நீலாங்கரை, உத்தண்டி ஆகிய பகுதிகளில் 1982-ம் ஆண்டிலிருந்து வீடுகளை தனியார் கட்டக்கூடாது என்று தடை விதித்து இருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-30)

அந்தத் தடை நல்ல நோக்கம் கொண்டதுதான். நான் மறுக்கவில்லை. மக்களுக்கு தண்ணீர் வினியோகிப்பதற்காக, அந்த இடத்திலே வீடுகள் கட்டக் கூடாது என்று தடையிருந்தது ஆனால் இன்றைய தினம் அந்தப் பகுதியில் வசதி படைத்தவர் கள், நல்ல அதிகாரத்திலே உள்ள சிலரோடு கூட்டு சேர்ந்து அங்கே பல கட்டிடங்களை எழுப்புவதும், உடனே சம்பந்தப்பட்ட சென்னைப் பெருநகர்க் குழுமம் நோட்டீஸ் கொடுத்தால், உடனே தடையாணை வாங்குவதும், இரவு பகலாக வீடுகளைக் கட்டி குடியேறுவதையும் நாம் காண்கிறோம். ஆனால் அதே நேரத் தில், 1976-லிருந்து 1982 வரை, சென்னை பெருநகர்க் குழு மத்தின் மூலமாக அனுமதித்த வரை படங்களில், நடுத்தர மக்கள் பலர் பிளாட்டுகளை வாங்கிவிட்டு, இன்றுவரையில் அதைக் கட்டி முடிக்க முடியாமல் இருக்கிறார்கள். அதற்கு ஒரு உயர்மட்டக் குழுவும் அமைத்தார்கள். அந்தக் குழு 7 மாதங்கள் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கையை அனுப்பியிருக்கிறது. அந்த அறிக்கையின் மீது அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, அந்தப் பகுதி மக்களுக்கு கருணையுடன் இந்தப் பிரச்சனையை பரிசீலனை செய்து, நடுத்தர மக்கள் வீடு கட்டுவதற்கு ஒத்து ழைப்பு கொடுக்க வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நமது சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தமிழகத்தில், குறிப்பாக சென்னைப் பகுதியில் அது ஆற்றிவருகிற பணி, இன்றைக்கு மாபெரும் திட்டங்களாக, வருங்கால சமு தாயம் வாழ்வதற்காக இன்றைய தினம் தொலை நோக்கோடு அவை போடுகின்ற திட்டங்கள் உண்மையிலேயே பாராட்டுக் குரியதாகும். இன்றைக்கு கொத்தவால் சாவடியில், கடந்த 50 ஆண்டு காலமாக எவ்வளவு ஜன நெருக்கடியில் அங்கே போய் வருகிற மக்கள் சாகிறார்கள் என்பது காலையிலே அங்கு சென்று வருபவர்களுக்குத் தான் தெரியும். அப்படிப்பட்ட கொத்தவால் சாவடியை கோயம்பேடுக்கு மாற்றும் மிகப் பெரிய திட்டத்தை இங்கே மனமாரப் பாராட்டுகிறவர்கள் யாரும் இல்லையே என்று நினைக்கிற நேரத்தில் வருத்தமாகத்தான் இருக்கிறது.

அதே போல் இரும்புக்கடைகள், ஜி. டி. 1, மெட்ராசில் இருந்த இரும்பு, எஃகுத் தொழிற்சாலையை சாத்தங்காடிலே சுமார் 30 கோடி ரூபாய்த் திட்டத்திலே அங்கே ஒரு மிகப் பெரிய சந்தையை, மார்க்கெட்டை அமைத்து, ஒரு ஏற்பாட்டைச் செய்கிறார்களே அதை ஏன் பாராட்டத் தவறுகிறார்கள் என் பதை இந்த நேரத்திலே நான் கேட்க விரும்புகிறேன்.



அதே நேரத்தில் சென்னைப் பெருநகரக் குழுமத்திற்கு ஒரு சங்கடமான நிலைமை இருக்கிறது. மிகப் பெரிய தொழிற் சாலைக் கட்டிடங்களை வரம்பு மீறிக் கட்டுவது அல்லது தொழிற் பேட்டைகளை கட்டுவது அல்லது கடைகளைக் கட்டுவது, இது போன்ற கட்டிடங்கள் இன்றைய தினம் நிறைய உருவாகிக் கொண்டு வருகின்றன. அவர்கள் பிளான் கூட வாங்காமல் கட்டு கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் சென்னை பெருநகரக் குழு மத்திற்கு அனுமதி கேட்கிற போது, அதைப் பரிசீலித்து நிரா கரித்து விடுகிறது குழுமம். அப்படி நிராகரித்தவுடன், அரசை அணுகுகிறார்கள். அங்கே, சட்டப்படி இருந்தால் கொடுக் கிறார்கள், இல்லையென்றால் மறுக்கிறார்கள். இந்த வியா பாரத்தைத் துறை சம்பந்தப்பட்ட வீட்டு உபயோகம் இல்லாத பிளானை வேண்டுமானால் அரசே பரிசீலித்து அவர்களுக்கு அப் பீலில் அனுமதி கொடுப்பதா, இல்லையா? என்பதை பரிசீலித்துக் கொள்ளட்டும். ஆனால் ஒரு வீட்டினுடைய பிளான் இரண்டு லட்ச ரூபாய்க்குக் கீழே இருக்கும் போது, உயர் வகுப்பினருக்கு, வீடுகள் கட்டுவதற்கு, அரசிலே 2½ லட்சம் ரூபாய் கடன் கொடுக்க லாம் என்ற நிலை இருக்கிறது. அந்த நிலையில் உள்ள வீடு களைக் கட்டுகின்ற சாதாரண மக்களுக்கு, அந்த பிளானில் உள்ள குறைபாடுகளைத் தீர்க்கின்ற அதிகாரத்தை இந்தச் சென்னைப் பெருநகரக் குழுமத்திற்கே வழங்க வேண்டும் என்று இந்த நேரத் தில் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல இன்றைக்கு அரசுத் துறையிலே வேலை செய் கின்ற எத்தனையோ நண்பர்கள் வீட்டு வசதிக்காக மனுவைப் போடுகின்ற நேரத்தில், இந்த ஆண்டு இல்லை, அடுத்த ஆண்டு போடுங்கள், வீடு கட்டுவதற்கு அடுத்த ஆண்டு, உங்களுடைய திட்டத்தை அனுப்புங்கள் என்று கூறுகிறார்கள். இன்றைக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், தேசியமயமாக்கப்படாத வங்கிகள் அத்தனையும், அசையாச் சொத்துகளுக்கு கோடிக் கணக்கிலே பணத்தை வாரி வழங்குகின்ற நேரத்தில், ஏன் வீடு கட்டுவதற்கு அரசுத் துறையில் உள்ளவர்கள் போட்டாலும், மற்றவர்கள் போட்டாலும், இந்தப் பணத்தைக் கொடுத்து உதவக் கூடாதா? அதுவும் இந்தச் சொத்துக்களின் மதிப்பு உயர்ந்து கொண்டே போகிற நேரத்தில், இந்த வருடம் ஆயிரம் ரூபாய் பெறக் கூடிய சொத்து, அடுத்த ஆண்டிலே 1,500 ஆக மதிப்பீடு செய்யப்படுகிறது. இப்படி உயர்ந்து கொண்டே போகின்ற இந்த நிலையில், வீடு கட்டுகின்றவர்களுக்கு தனிப் பட்ட வங்கிகளும், நேரடியாக கடன் கொடுப்பதற்கு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி ஒரு உத்தரவு போட்டு, வீடு கட்டும் மிகப் பெரிய திட்டத்தை இந்த ஆண்டில் சிறப்பாக முடித்துக் கொடுப்பதற்கு நமது அரசு முன் வர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல வீட்டுவசதி வாரியத்தில் இந்த ஆண்டுதான் 100 கோடியே 10 லட்ச ரூபாய்க்கு, மிகப் பெரிய அளவிலே வீடு கட்டும் திட்டத்தை எடுத்து இருப்பதாக அதன் தலைவர் திருப்பூர் மணிமாறன் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். உண்மை தான். ஆனால் நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல இந்த நிலத்திற்குரியவர்கள், அந்த நிலத்தை ஒப்படைத்தவர்களுக்கு நாம் இந்த வாய்ப்பை அளிக்க வேண்டும். அந்த வாய்ப்பை அளிப்பதன் மூலம் நிறைய நிலங்களை கையகப்படுத்தி வீடு கட்டும் திட்டத்தை உற்சாகப்படுத்த முடியும் என்பதை இந்த நேரத்திலே மீண்டும் ஒரு முறை நான் தெரிவித்துக் கொள்கிறேன். வீட்டுவசதித் துறையால் கட்டிக் கொடுக்கின்ற, வீடுகளுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக மேற்பார்வை கட்டணமாக 14 சதவீதம் வாங்குகிறார்கள். இப்போது 110 கோடி ரூபாய்க்கு குறைந்தது 15 கோடி ரூபாய் அளவிற்கு அவர்கள் மேற்பார்வை கட்டணமாக ''சூப்பர்விஷன் சார்ஜஸ்'' ஆக வசூல் செய்கிறார்கள். இந்த நிலை சரியில்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். சிமெண்டையும், ஸ்டீலையும் மார்க்கெட்டிலேயிருந்து வாங்குவதற்குக் கூட இவர்களுக்கு 14 சதவீதம் கொடுக்க வேண்டிய நிலை இருப்பதை தயவு செய்து அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். வேண்டுமானால், உழைப்பிற்கு, மனித உழைப்பிற்கு அவர்களுக்கு வேண்டிய 14 சதவீதத் தொகையைக் கொடுக்கலாம். அதற்கு மேல் உள்ள சிமெண்ட் வாங்குவதற்கும், ஸ்டீல் வாங்குவதற்கும், ஓடு வாங்குவதற்கும் மற்றும் சில பொருள்கள் வாங்குவதற்குக் கூட வீட்டுவசதி வாரியத்திற்கு 14 சதவீதம் கொடுப்பதன் மூலம் இன்றைக்கு வீட்டினுடைய விலை வாசி உயர்ந்து இருப்பதை தடுப்பதற்கு, இதை கொண்டு வருவதற்கு ஏதேனும் தடை இருந்தாலும், ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு முன் வரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இங்கேயுள்ள இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள், நடவடிக்கை எடுப்பதோடு, கொட்டிவாக்கத்திலிருந்து, திருவான்மியூரிலிருந்து உத்தண்டி வரையிலே உள்ள பிரச்சினைக்கு இந்தப் பதிலில், நல்ல ஒரு பதிலை அமைச்சர் அவர்கள் தர வேண்டுமென்று நான் கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே மாண்புமிகு வீட்டுவசதி, கைத்தறித் துறை அமைச்சர் அவர்களாலே கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மானியத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை உங்கள் முன்னாலே வைக்கிறேன். கடந்த ஆண்டு 30 லட்சம் வீடுகளை கட்டவிருப்பதாக அரசாங்கம் அறிவித்தது. அந்த நேரத்திலே உள்ளாட்சித் தேர்தல் நடைபெற இருந்த காரணத்தினாலே அந்த அறிவிப்பு தரப்பட்டதோ என்னவோ தெரியவில்லை. கடந்த ஆண்டு 10 லட்சம் வீடுகள் கட்டப்பட்டனவா ? எப்படி, எவ்வளவு கட்டப்பட்டன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் வீடுகள் கட்டப்படுகின்றன. ஆனால் இவைகளெல்லாம் 100, 150 கோடி ரூபாய் அளவிலே தான் கட்டப்படுகிறதே தவிர 10 லட்சம் வீடுகள் என்று சொன்னால் குறைந்தபட்சம் வீட்டு மதிப்பு 10 ஆயிரம் என்று கணக்கிட்டால் கூட ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படும். ஆனால் 10 ஆயிரம் ரூபாயில் வீடு கட்ட முடியுமா என்று நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வீட்டுவசதி வாரியத்தைப் பொறுத்த வரையில், பல இடங்களில் பொதுவாக விடப்பட்ட இடங்களிலெல்லாம் தனியார்கள் ஆக்கிரமிக்கப்படுகிற நிலைமைகள் இருக்கின்றன. சில இடங்களிலே வாரியமே லே-அவுட் போடுகிற நிலையையும் பார்க்கிறோம். அப்படி லே-அவுட் போடுகிற இடங்களில், அதை ஏலத்தில் விட்டால் அதிகமான விலைக்கு போகக் கூடிய நிலைமை இருக்கும். அதிலே தவறுகள் நடப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். வீட்டு வசதி வாரியத்திலே பணியாற்றக் கூடிய பணியாளர்களுடைய தேர்ந்த பெயர் பட்டியல் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15-க்குள் வெளியிட வேண்டுமென்று இந்த அரசு ஆணையிட்டுள்ளது. ஆனால் வீட்டு வசதி வாரியத்தில் இந்த ஆணையை நடைமுறைப்படுத்தாததால், ஜூன் 1 ஆம் நாளன்று தேர்ந்தெடுக்கப்பட்ட பெயர் பட்டியலைத் தரவேண்டுமென்று வீட்டுவசதித் துறை தாக்கீது அனுப்பியது. வாரிய நிர்வாகம் இது நாள் வரை குறிப்பிட்ட நாளிலே தேர்ந்த பெயர் பட்டியலை தயாரித்து வெளியிட வில்லை. வாரியத்தின் இத்தகைய போக்கை அரசு கண்டிக்க வேண்டும். இதனால் மூத்த நிலை பணியாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். தேர்ந்த பெயர் பட்டியல் வெளியிடாமல், தப்பாக தற்காலிக பதவி உயர்வு கொடுத்து வருகிறார்கள். பின், தற்காலிக பதவி நாட்களை கணக்கிலே எடுத்துக் கொண்டு, சீனியாரிட்டி கொடுத்து, அவர்களுக்கு பதவி உயர்வு கொடுத்து விடுகிறார்கள். ''சீனியாரிட்டி'' கொடுக்கும் போது அரசு ஆணை எண். 944, நிதித்துறை, நாள் 28-7-1970, இதனையும் அரசு ஆணை எண். 1077, பி. மற்றும் ஏ. ஆர். துறை, நாள் 10-11-1982 இவைகளுக்கு முரணாக பணி மூதுநிலை பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

(பிற்பகல் 12-40)

விதிமுறை மீறல்களை பணியாளர் முன்னேற்றச் சங்கம் பல முறை எடுத்துச் சொல்லியும் பல ஆண்டுகளாக வாரிய நிர்வாகத்துக்கும் வீட்டு வசதித் துறை செயலருக்கும் மனு கொடுத்தும் நேரில் [illegible] எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த வாரியத்திலே இத்தகைய போக்கை மாற்ற வேண்டும். [illegible] இருக்கக்கூடிய 4 சங்கங்களையும் அங்கீகாரம் செய்து [illegible] தோடு [illegible] வார்த்தை [illegible] பணியாளர்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக வீட்டு வசதி வாரியத்தினுடைய கட்டிடங்களின் தரம் மிகவும் குறைந்து இருப்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கக் கூடிய செல்வபுரம் கல்லாமேடு தெற்கு அவுசிங் யூனிட், அதே போல் வடக்கு அவுசிங்யூனிட் இவைகளில் செப்டிக் டாங்க் உடைந்து அதிலே குழந்தைகள் விழுந்து மரணம் அடையக்கூடிய நிலைமை இருக்கிறது. அதேபோல் வீடுகளிலிருந்து வரக் கூடிய குழாய்கள் உடைந்து மலத்திலே மக்கள் வாழக்கூடிய பரிதாபகரமான நிலைமை இருக்கிறது. வீடுகள் இடிந்து ஜன்னல் கதவுகள் எல்லாம் உடைந்து கிடக்கிறது. அவைகளை எல்லாம் மாற்றுவதற்கு முன்னால் அமைச்சர் அவர்கள் இதை நேரில் பார்த்திருக்கிறார்கள். மதிப்பீடு தயார் செய்தும் இன்னும் சரி செய்யப்படவில்லை. உடன் பழுதுப் பார்க்க வேண்டுகிறேன்.

அதேபோல் கோவை புதூரில் 300 ஏக்கர் நிலத்தில் அங்கே வீட்டு வசதி வாரியத்தினால் ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டப்பட்டன. அந்த வீடுகளில் வாழ்கின்ற மக்களுக்குத் தேவையான மயானம் கிடையாது. பாதைகள் மிக மிக மோசமாக இருக்கின்றன. அவைகளை உடனடியாக சரி செய்ய வேண்டும்.

குறிச்சி அவுசிங் யூனிட் வீடுகளின் விலைகளை உயர்த்துகிறார்கள். முதலிலே ஒரு விலையைச் சொல்லி பின்னாலே ஒரு விலையை உயர்த்துகிறார்கள். வீட்டு வசதி வாரியத்திலே பள்ளிகள் போன்றவைகளுக்கு இடம் ஒதுக்குகிற போது அதற்கு விலை கிரயம் வேண்டும் என்று சொல்லுகிற நிலைமை இருக்கிறது. அதை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல் மயானவசதியையும் அந்த குறிச்சிப் பகுதிக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிச்சிப் பகுதியிலே காந்திஜி கோ-ஆப்பரேட்டிவ் பில்டிங் சொசைட்டி, பழனியப்பா லே அவுட், ருக்மணி லே அவுட், மணி லே அவுட், ஏ.வி.ஜி. லே அவுட் இவைகள் எல்லாம் 12 ஆண்டுகளுக்கு முன்பு அரசால் அங்கீகரிக்கப்பட்ட லே அவுட்டுகள். இவைகள் அங்கே அமைக்கப்பட்டு ஆயிரக்கணக்கான பேர் அந்த லே அவுட்டுகளை 12 ஆண்டுகளுக்கு முன்னால் வாங்கியிருக்கிறார்கள். அதனை வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்த வேண்டும் என்ற முறையில் அதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதன் மூலம் ஏழை மக்கள், சாதாரண மக்கள், பஞ்சாலைத் தொழிலாளர்கள், என்ஜினியரிங் தொழிலாளர்கள் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே அதை கைவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நாடு வீட்டு வசதி சங்கத்திலுள்ள அனைத்து சங்கங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைபோல் வீட்டு வசதி சங்கங்களுக்கு ஒரே மாதிரியான சீரான பை-லா ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்



வீட்டு வசதி சங்கங்களுக்கு தேர்தல் நடத்தி நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. உடனடியாக தேர்தல் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன. சங்கங்களிலே பணியாளர்களுக்கு பாதுகாப்பு இல்லை, எனவே அவர்களை தலைமைச் சங்கத்திலே ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தலைமைச் சங்கத்தினுடைய கிளைகளை கோவை, மதுரை, சேலம், திருச்சி போன்ற பெரிய நகரங்களில் திறக்க வேண்டும என்று கேட்டுக் கொள்கிறேன். வீட்டு வசதித் துறையில் பணியாளர்களின் காலி இடங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவைகளை நிரப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

12 விதமான வீட்டு வசதி சங்கங்கள் இருக்கின்றன. அதனால் குழப்பம் ஏற்படுகிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. அதை 4, 5 விதமாகக் குறைக்கக் கருதப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் மூலம் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டு பல பேர் கடன் பெறுவதற்கு வாய்ப்பு இல்லை. உதாரணமாக கோவைக்கு அருகிலுள்ள மதுக்கரை நகரியத்தில் இருக்கக்கூடிய ஸ்ரீ சரஸ்வதி கிராமிய கூட்டுறவு வீட்டு வசதி சங்கம். அது கிராமிய கூட்டுறவு வீட்டு வசதி சங்கமாக இருப்பதால் 20 ஆயிரம் ரூபாய் வரை அனுமதிக்கப்படுகிறது. ஆனால் 8 ஆயிரம் ரூபாய் பங்கு செலுத்தியும் இதுவரை அதற்கு கடன் தருவதற்கு வீட்டு வசதி சங்கம் தயாராக இல்லை, காரணம் நீண்ட நாட்களாக கிராமிய கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படாத காரணத்தால் இந்த நிலை இருக்கிறது. அரசுக்கு செலுத்த வேண்டிய தொகைகள் எல்லாம் செலுத்தப்பட்டு விட்டது. அதே போல் நகரசபை தகுதியில் அந்த மதுக்கரை நகரியம் இருக்கிறது. எனவே நகர்ப்புற சங்கமாக மாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற வீட்டுத் வசதித் திட்டத்திற்கு தனியாக தலைமை நிதி நிறுவனம் அமைக்க பரிசீலிப்பதாக கூறி இருப்பது வரவேற்கத் தக்கது. காரணம் இந்த சங்கங்கள் இப்போது இருக்கிற தலைமை சங்கத்தோடு இருக்கிற காரணத்தால் கிராமப்புற மக்கள் வீடு கட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே இதற்கு என்று தனியாக ஒரு நிறுவனத்தை உருவாக்கி உதவுவது தேவையானது. நகரங்களில் வீடு கட்டும் சங்கங்கள் அமைத்து 20 ஆண்டுகளாக கடன் கொடுத்து நல்ல வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் கிராம வீட்டு வசதி சங்கத்திற்கு ரூ. 4,000, ரூ.6,000 என்ற அளவிலே கொடுக்கப் பட்டிருக்கிறது. அதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிங்காநல்லூரிலும், பீளமேட்டிலும், திருப்பூரிலும் தொழிலாளர் மலிவு வாடகைக் குடியிருப்புகள் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்டது. எஸ். ஐ. எச். எஸ்., என்று அந்த காலனியில் சிங்காநல்லூரில் மட்டும் 350 வீடுகள் இருக்கின்றன. 10க்கு12 அடி என்ற அளவுள்ளது. அந்த வீடுகளுக்கு ரூ. 15 வாடகை வசூல் செய்யப்பட்டு வந்தது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஒவ்வொரு வீட்டிற்கும், சிங்காநல்லூரில் ரூ. 174; பீளமேட்டில் ரூ. 227, திருப்பூரில் ரூ. 128 என்ற அளவிலே வாடகை வசூல் செய்ய நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை தவிர்த்து அந்த தொழிலாளர்களுக்கு அதை உரிமையாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்களுக்கு ஆளுக்கு ஒரு வீடு தருகிறோம், நெசவாளர் வீட்டு இளைஞர்களுக்கு அரசாங்கத்தில் வேலை வாய்ப்பு, நெசவாளி இறந்துவிட்டால் அவரது குடும்பத்திற்கு உதவித் தொகை தரப்படும் என்று வாக்குறுதிகள் தரப்பட்டன. அந்த வாக்குறுதிகள் கைத்தறித் துணி தேங்கியிருப்பதைப்போல தேங்கி இருக்கின்ற நிலைமையை பார்க்கின்றோம். 1986-87-ல் 794 கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளிலே உள்ளன என்று சொல்லப்பட்டிருக்கிறது. 794 வீடுகள் என்பது மிகவும் குறைவானது என்பதை சுட்டிக் காட்டுகிறேன். அதைப் போலவே டாக்டர் எம். ஜி. ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை என்று துவக்கப்பட்டிருக்கிறது. 1986-ம் ஆண்டு பிப்ரவரியிலே அரசு ஆணையிட்டுள்ளது. நான் உங்களைப் பார்த்து கேட்க விரும்புகிறேன். எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே இருந்த போது கலைஞர் பெயரை வைக்கிறார்கள். உயிரோடு இருக்கிறவர்களுடைய பெயரை வைக்கக்கூடாது என்று சொல்லி கலைஞர் பெயரிலே வைக்கப்பட்டிருந்த இடங்களிலெல்லாம் நீங்கள் பெயரை அகற்றினீர்கள். ஆனால் இப்போது முதலமைச்சர் அவர்களுடைய பெயரினை வைக்கப்பட்டிருக்கிறது. இது எப்படி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே மத்திய அரசாங்கம் 22 ரக ஒதுக்கீடுகளை கைத்தறிக்கு ஒதுக்கியது. உயர்நீதி மன்றத்திலே விசைத்தறியாளர்கள் ரிட் மனு தாக்கல் செய்து, தடை வாங்கினார்கள். 4—8—1986-லே மத்திய அரசு 5—11—1986 முதல் அமுல்படுத்தப் போவதாக ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தது. தமிழக அரசு உயர் நீதி மன்ற தடை உத்திரவை நீக்கவும், மேலும் தடை உத்திரவு பெறாமல் நடவடிக்கை எடுக்கவும் வேண்டுகிறேன். மத்திய அரசு புதிய ஜவுளி கொள்கையை அமுல்படுத்தினால் நெசவுத் தொழில் அழியக்கூடிய நிலைமை ஏற்படும். எனவே புதிய ஜவுளிக் கொள்கையை கைவிட மாநில அரசு முயற்சி எடுக்க வேண்டும். ஆண்டுக்கு 60 நாட்கள் ரிபேட் தரப்பட வேண்டும். கதருக்கு 90 நாட்கள் தரப்படுகிறது. மத்திய அரசு ஜவுளித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ராம் நிவாஸ் மிர்தா அவர்கள் ஒரு கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். இந்த ரிபேட்டுகள் எல்லாம் ரூ. 50 கோடியளவிலே வருகின்ற காரணத்தால் வேறு வழியிலே அதைச் செலவு செய்யலாம் என்ற அபாயகரமான கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். அதை செயல் படுத்தாமல் இருக்க மாநில அரசு முயற்சி செய்ய வேண்டும். தமிழ் நாடு அரசு நெசவாளர் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்து 6 ஆண்டுக் காலம் ஆகிவிட்டது.



உயர்நீதி மன்றத்திலே சட்டம் செல்லும் என்று தீர்ப்பு அளித்து 2 ஆண்டுக்காலம் ஆகிவிட்டது. ஆனாலும் சட்டத்தை நிறைவேற்ற இந்த அரசு முயற்சி எடுக்கவில்லை. அதைப்போலவே நெசவாளர்களுக்கு வேண்டிய சாயப் பொருள்களை தட்டுப்பாடு இன்றி கட்டுப்பாடு விலையிலே தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எல்லாத் தொழிலாளர்களுக்கும் குறைந்த பட்சம் ஒரு மாதம் போனஸ் தருவதைப் போல, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே பணியாற்றக் கூடிய நெசவாளர்களுக்கு ஒரு மாத போனஸ் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்திலே அமைத்த குறைந்த பட்ச கூலி நிர்ணய குழு பரிந்துரையை இந்த அரசு அமுலாக்கவில்லை. உடனடியாக அமுலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே கைத்தறி நெசவாளர்களுக்கான பாதுகாப்புச் சட்டத்தை கொண்டு வந்தோம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள். மதிப்பிற்குரிய தொழிலாளர் நல ஆணையாளர் இராஜா சுப்பிரமணியம் அவர்கள் தலைமையிலே கொடுக்கப்பட்ட அந்த அறிக்கையை அமுல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கைத்தறிக்கு உதவ செஸ் வரியை மத்திய அரசு விதித்தது. அதை பொது வரவில் சேர்த்து விட்டது. கைத்தறி வளர்ச்சி, நெசவாளர் குடும்பங்கள் வாழ கொடுத்து உதவிட வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 14 ஆண்டுக் காலமாக நெசவாளர் கூட்டுறவு சங்கத் தேர்தல் நடத்தப்படவில்லை. உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1972-ல் காஞ்சீபுரத்தில் முதன்முதலாக ஜரிகைத் தொழிற்சாலை தொடங்கப்பட்டது. குடந்தையிலே ஒன்று தொடங்கப்படும் என்று இந்த அரசால் அறிவிக்கப்பட்டும் அது தொடங்கப்படவில்லை. உடனடியாக தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விற்பனை வரி ஜரிகைக்கு விதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டு அரசாங்கத்திலே 4 சதவீதம், குஜராத் மாநிலத்திலே 2 சதவீதம் ஆக 6 சதவீதம் போடப்படுகிறது. பெரும் உற்பத்தியாளர்கள் நேரடியாகக் கொள்முதல் செய்கின்ற காரணத்தால் அவர்களுக்கு 2 சதவீதம் வரிதான் ஆகிறது. ஆனால் நெசவாளர்கள் 6 சதவீதம் வரி செலுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. 4 சதவீதம் வரியை தமிழக அரசு உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

விசைத் தறியில் உற்பத்தியாகும் துணிகள் கைத்தறி என்று முத்திரையிட்டு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதற்கு முத்திரைப் தரக் கட்டுப்பாட்டுக் குழு அமைத்து, அதில் அதிகாரிகள், உற்பத்தியாளர் பிரதிநிதிகள், அதைப்போல கைத்தறித் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளைச் சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆ. நடராசன்] [1987 மே 6

தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்—கோ-ஆப்
டெக்ஸ்—பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சரக்கு
கொள்முதல் செய்யும்போது சங்கங்களுக்கு இலாபம், ஜனதா
ரகங்களுக்கு 7 சதமானமும், லுங்கி, சேலை முதலிய ரகங்
களுக்கு 9 சதமானமும், பட்டுச் சேலைகளுக்கு 10 சதமானமும்
கொடுக்கிறது. கோ-ஆப்டெக்ஸ் அடைகிற லாபம்,
30-லிருந்து 35 சதமானம் ஆக உள்ளது. எனவே, அந்த
இலாபத்தைக் குறைத்து, நெசவாளர்களுக்கு வாழ்வு அளிக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்
பெற்றது).

திரு. வே. குப்புசாமி : பேரவை மாற்றுத் தலைவர்
அவர்களே, என்னை ஆளாக்கி சட்டமன்ற உறுப்பினராக்கிய
புரட்சித் தலைவர் அவர்களுக்கு முதற்கண் நன்றியையும்,
எனக்கு வாக்களித்து சட்டமன்றத்திற்கு அனுப்பிய என்
தொகுதி மக்களுக்கும் நன்றியையும் தெரிவித்து, என் முதல்
பேச்சைத் துவக்குகிறேன்.

இன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள
கைத்தறி மற்றும் வீட்டு வசதித் துறை மானியக் கோரிக்கையை
வரவேற்று ஒரு சில கருத்துக்களை எடுத்து வைப்பது என்
கடமை என்று நான் கருதுகிறேன்.

கைத்தறியைப் பொறுத்தவரை, கைத்தறியில் பணி
யாற்றுகின்ற நெசவாளர் குடும்பங்கள் நல்ல முறையில்
இருக்கவேண்டும் என்று தமிழ்நாட்டு பெர்னாட்ஷா அண்ணா
அவர்கள் நினைத்தார்கள். அதற்காக அவரே துணி மூட்டையைத்
தோளில் சுமந்து விற்று அதில் வரும் அதிக இலாபத்தை
நெசவாளர் குடும்பங்களுக்குக் கொடுத்து, நெசவாளர்களுக்கு
சோறு கொடுத்தார்கள் என்பது எல்லோரும் அறிந்த உண்மை.

அதுபோன்று இன்று தமிழகத்தின் விடிவெள்ளியாகத்
திகழும் புரட்சித் தலைவர் அவர்கள் நெசவுத் தொழிலுக்கு
முக்கியத்துவம் அளிக்கிற வகையில், அதிக நெசவாளர்
கூட்டுறவுச் சங்கங்களை ஆங்காங்கு உருவாக்கி, அந்தச்
சங்கங்களுக்கு நிதியுதவி தந்து, நெசவாளர்களின் குடும்பங்கள்
நல்ல முறையில் வாழ வழி வகுத்துள்ளார்கள்.

அவர்களுக்கு பல சலுகைகள் செய்து வருகிறார்கள்.
குறிப்பாக, எனது தொகுதியில் பல்லாயிரக்கணக்கான நெச
வாளர்கள் இருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் புரட்சித்
தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், ஆசிரியர்
களுக்கு எப்படி வீடு கட்டுவதற்கு ஒரு சங்கம் வைத்து வீடு
கட்டித் தருகிறார்களோ, அதுபோல், நெசவாளர்களுக்கும்
வீடு கட்டுகிற சங்கம் ஒன்று துவக்கி, பரவலாக, குறிப்பாக
எனது தொகுதியில் நெசவாளர்களுக்கு வீடு கட்டித் தர
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 மே 6] [திரு. வே. குப்புசாமி]

அடுத்து, நெசவாளர் குடும்பத்தில் படித்துள்ள இளை
ஞர்களுக்கு தமிழகத்தில் உள்ள பெரிய நெசவுத் தொழில்களில்
முதலில் வாய்ப்புக் கொடுத்து, முன்னுரிமை அளிக்குமாறு
கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் 18 சர்க்கரை ஆலைகள் வரும் என்று
சொல்கிறீர்கள்—தஞ்சை மாவட்டத்தில்—அடுத்து, என்
செய்யாறு தொகுதியைச் சொல்கிறார்கள். ஆக, என் தொகு
திக்கு ஒரு சர்க்கரை ஆலையை வழங்கக் கேட்டுக்கொள்
கிறேன்.

குடிதண்ணீர் இல்லாமல் என் தொகுதி மக்கள் அவதிப்
படுகிறார்கள், எனவே செய்யாற்றிலேயும், பாலாற்றிலேயும்
இருந்து ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ஏற்படுத்தி, அதன்
மூலமாக 50-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் அடையச்
செய்யுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அவையில் பேச
அனுமதித்த பேரவை மாற்றுத் தலைவர் அவர்களுக்கு என்
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர்
அவர்களே, மூன்று முக்கியமான கோரிக்கைகள் பேரில் இன்று
விவாதம் நடக்கிறது. இந்த விவாதத்தில் நான் சொல்ல
வேண்டிய விஷயங்கள் பூராவையும் சொல்லுவதற்குக் கால
அவகாசம் இல்லை. ஆகவே என் கையில் இருக்கிற குறிப்புகளின்
மீது மட்டும் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கைத்தறி சம்பந்தப்பட்ட வரையில் கைத்தறித் துணித்
தேக்கம் என்பதுதான் பிரதானமான பிரச்சினை. கொள்கை
விளக்கக் குறிப்பில் இந்த விஷயங்களை எல்லாம் கொடுத்திருக்
கிறார்கள். ''பண்டிகை கால விற்பனை தவிர மற்ற மாநிலங்
களில் ரூ. 84 கோடி மதிப்புள்ள ஆறுமாத உற்பத்தி பிரதம
கூட்டுறவு சங்கங்களிலும் கோ-ஆப்டெக்ஸ்களிலும் தேங்குவது
வழக்கம். இதனால் நூல் வாங்கப் பணம் இருக்காது''. இது
தான் இதனுடைய ஒட்டுமொத்தமான பிரச்சினை—சாராம்
சம். கிரக்ஸ்—தமிழகத்தில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் இருக்
கின்றன. அவற்றில் உற்பத்தியாகிற நூல் பெரும்பாலும்
மோட்டா ரக நூலே. அதைத்தான் கொடுக்க வேண்டியிருக்
கிறது. அதில் பாதி உற்பத்தி அவர்களுக்குக் கொடுத்தால்கூட
அதைக்கூட அந்தச் சங்கங்களால் வாங்க முடிவதில்லை. அப்
படிப்பட்ட நிலைமைதான் இருக்கிறது. ஆகவே நூல்
இல்லை— கைத்தறிகளுக்குக் கொடுப்பதற்கு கூட்டுறவு ஆலை
களில் நூல் இல்லை என்ற பிரச்சினையே இல்லை. அந்த
நூலைக் கொடுத்தாலும் வாங்க முடியாத பிரச்சினைதான்
இருக்கிறது. அந்த அளவுக்குத் தேக்கம். இதற்கு நாம் ஒரு
முடிவு கட்டியாக வேண்டும். இது கூட்டுறவுத் துறையில் உள்ள
நிலை.

கூட்டுறவுத் துறையில் அல்லாத திட்டத்துக்கு இதே அளவுக்கு இன்னும் கொஞ்சம் அதிகமாகவே கூட இருக்கலாம் — இங்கே நீங்கள் கொடுத்திருப்பதைப் பார்த்தால் மொத்தத்தில் கொஞ்சம் ஜாஸ்தியாகவே இருக்கிறது என்று நினைக்கிறேன் — இதற்குக் காரணமாக கூட்டுறவு சங்கங்களில் சேராமல் இருக்கிற கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்களும் கைத்தறி நெசவாளர்களே. அவர்கள் பின்னாலே கூட்டுறவுத் துறையில் சேரலாம் அல்லது சேராமல் இருக்கலாம். ஆனால் அவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. அந்தப் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காண்பது என்பதுதான் மிக முக்கியமான விஷயம்.

என்னைக் கேட்டால் அதற்குச் சில முக்கியமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்தே தீர வேண்டியிருக்கிறது. இப்போது சிலவற்றைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதில் முக்கியமானது மத்திய சர்க்காருடைய ரிபேட் கொடுக்கிற திட்டம். அதை 7வது ஐந்தாண்டு திட்டத்தோடு கைவிட வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்திருப்பதை திட்டவட்டமாக நாம் அனுமதிக்கக் கூடாது. நாம் மத்திய சர்க்காரை இது குறித்து வற்புறுத்தியாக வேண்டும். அதற்காக, கைத்தறி நெசவாளர்கள் தேவைப்பட்டால் பெரும் கிளர்ச்சியை, மற்ற சகோதர தொழிலாளர்களையும் பொதுஜனங்களையும் சேர்த்துக் கொண்டு செய்தாக வேண்டும். ஏனென்றால் 60, 45 ஆகி, 45,35 ஆகி கடைசியில் கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனதைப் போல் படிப்படியாக ஜீரோ போய் விடுவதாகப் போகிற நிலை இருக்கிறது. இந்த நிலைமையை — அபாயத்தை — நாம் அனுமதிக்கக் கூடாது. அதற்காக நாம் தொடர்ந்து போராடியாக வேண்டும். அது தொடர்ந்து கொடுக்கப்பட வேண்டும். காரணம் இது போட்டா போட்டியில் போட்டியிட்டு போராடக்கூடிய ஒரு அரங்கமல்ல — இந்தச் செக்டார் போட்டா போட்டியில் வரமுடியாது. கைத்தறியில் நாம் உற்பத்தி செய்கிற துணி வியாபாரமாவதே பண்டிகைக் காலங்களில் தான். அப்போதுதான் ஆசையோடு வாங்குவார்கள். இது கொள்கைக் குறிப்பிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இது போட்டா போட்டியில் நிற்க முடியாது. எனவே இந்தத் தொழிலை — புராதன தொழிலை — சர்க்கார் அழிந்து போகாமல் காப்பாற்ற வேண்டும். காரணம் கிராமங்களில் அதிகப்படியான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக் கூடிய பரம்பரைத் தொழில் என்கிற முறையில் நிச்சயமாகப் பாதுகாப்பைத் தந்தாக வேண்டும். அந்த வகையில் கொடுக்க வேண்டிய சலுகைகளைக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை மத்திய சர்க்காருக்குத் தெரிவித்து, நாட்டு மக்களுக்கும் எடுத்துச் சொல்லி, பாதுகாப்பைத் தேட இன்னும் அதிகமான முயற்சிகளை எடுக்க வேண்டியிருக்கிறது.





22 வகையான ரகத் துணிகள் அவர்கள் நெய்யலாம் என்று மத்திய சர்க்கார் தீர்மானித்து உத்தரவிட்டது. அதன் பேரில் சிலர் கோர்ட்டுக்குப் போய் தடை உத்தரவு வாங்கிவிட்டார்கள். கூட்டுறவு நெசவாளர் துணிகளை வைத்து வியாபாரம் நடத்துகிற வர்த்தகர்கள் மற்றும் மாஸ்டர் வீவர்கள் இன்னும் மற்றவர்கள் எல்லாம் சேர்ந்து அதைத் தடுத்து நிறுத்திவிடுகிறார்கள். ஆனால் கைத்தறியாளர்களுக்கு நிச்சயமாக அந்தச் சலுகை கிடைக்க வேண்டும். அப்போது தான் அவர்களுடைய உற்பத்திக்கு ஒரு உத்தரவாதம் வரும். விசைத் தறிகளிலும் மில்களிலும் உற்பத்தியாகிற ரகங்களோடு அவர்கள் போட்டியிட முடியாது. அதற்கு உத்திரவாதம் செய்து கொடுத்தால்தான் அவர்களால் சமாளிக்க முடியும்.

அடுத்து கைத்தறி நெசவாளர்களுக்கு இன்றைக்கு மிகப் பெரிய பிரச்சினை ஒன்று இருக்கிறது. எல்லாத் தொழிலாளர்களுக்கும் கஷ்டம் இருக்கிறது என்றாலும் இவர்களுடைய கஷ்டம் வேறு ஒரு விதமான கஷ்டம்.

1981ஆம் ஆண்டு இந்தச் சட்டமன்றத்திலே நாம் ஒரு நல்ல சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அந்தச் சட்டம் ஏற்கனவே தொழிலாளர் துறையில் இருக்கிற நான்கு அல்லது ஐந்து அடிப்படையான சட்டங்களுடைய நல்ல ஷரத்துகளை யெல்லாம் பரிசீலித்து அதிலிருந்து நல்ல விஷயங்களை மட்டும் எடுத்து உருவாக்கப்பட்ட சட்டம். ஆனால் அந்தச் சட்டம் இன்றுவரை அமுலுக்கு வரவில்லை. 1981ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. கூட்டுறவு சங்கங்களுக்கு அதிலிருந்து விதி விலக்குக் கொடுக்கப்பட்டிருப்பது ஒரு தவறான நடவடிக்கை என்பது என்னுடைய கருத்து. அரசு அதை மறுபரிசீலனை செய்து கைவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவுத் துறையில் உள்ள தொழிலாளர்களுக்குச் சலுகைகளைக் கொடுப்பதால் அதன் மூலமாக மற்றத் தொழிலாளர்களையும் இதற்கு ஆகர்ஷிக்கலாம் என்ற முறையில் அதைச் செய்திருக்கக் கூடும். அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு கொடுப்பது என்ற முறையில் — அந்த உணர்வில் கொடுத்திருக்கலாம். இருந்தாலும் பொதுவான சட்டம் ஒன்றைப் போட்டு அதிலிருந்து கூட்டுறவுத் துறையில் இருப்பவர்களுக்கு மட்டும் விதிவிலக்குக் கொடுப்பது என்பது அவசியமில்லாத ஒன்று. அதை மாற்ற வேண்டும் என்பது தான் என்னுடைய கருத்து.

(பிற்பகல் 1-00)

அதே மாதிரி பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் கூட்டுறவு அல்லாத பகுதியில் இருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினைகளை நாம் கணக்கிலே எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தச் சட்டத்தை அமுலாக்குவது என்பது முக்கியமான விஷயமாக இன்றைக்கு வந்திருக்கிறது. இதே மன்றத்திலே அதைப்

பற்றி பேசப்பட்டிருக்கிறது. யார் இதை அமுலாக்குவார்? இப்போது வைத்திருக்கக் கூடிய அத்தாரிட்டி — கைத்தறி துணி நூல் இயக்குநர், ஒரு தலைமை ஆய்வாளர். இவர்களே இதை அமுலுக்குக் கொண்டு வர கவனிப்பார்கள். சரகத்திற்குள்ள துணி நூல் கட்டுப்பாட்டு அலுவலர், கைத்தறி ஆய்வாளர் இந்தச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தச் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகளை முழுமையாகவோ அல்லது ஏதாவது ஒரு முறையிலோ அமுல்படுத்தும் பணியாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதிலே இரண்டு வகையான விஷயம். இந்தச் சட்டத்தின் கீழ் முழுமையாகவோ அல்லது ஏதாவது ஒரு முறையிலோ என்று எப்படி இந்த மாதிரி அரசாங்கம் விளக்கம் கொடுக்க முடியும்? ஏதாவது ஒரு முறையில் என்றால் என்ன முறை? Some how please inplement it என்று சொல்லுவது சரியாக இருக்க முடியாது. அதற்கான விதிமுறைகளை கறாராக வகுத்துக்கொண்டு செய்ய வேண்டும். இந்தச் சட்டம் ஒரு தொழிலாளர் நலச் சட்டம். இந்தச் சட்டத்தை ஹாண்ட்லூம் டைரக்டொரேட் அமுலாக்குவது என்ற முயற்சியை கைவிட்டுவிட்டு தொழிலாளர் நல இலாக்கா அமுலாக்கட்டும் என்று அவர்களிடம் கொடுப்பதுதான் சரியாக இருக்கும். இந்த மன்றத்திலே இதைப் பற்றி ஏற்கனவே விவாதித்திருக்கிறோம். இதற்கு முன்பு இருந்த தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள், ஒரு ஐந்தாறு மாத காலம் செயல்படுத்தி பார்க்கிறோம், அதற்குப் பிறகு ஒழுங்காக நடைபெறவில்லை என்றால் நாங்கள் எடுத்துக் கொள்கிறோம் என்று சொன்னார்கள். ஹாண்ட்லூம் டைரக்டொரேட்டுக்கு திறமையில்லை என்பதல்ல. தொழிலாளர் நலச் சட்டத்தை அமுலாக்குவது இவர்களுடைய முக்கியமான வேலையில்லை. அதற்கென்று ஸ்பெஷலைஸ் செய்திருக்கக் கூடிய தொழிலாளர் நல இலாக்காதான் இதை அமுலாக்க வேண்டும். ஆனால் இன்று வரை அந்தச் சட்டம் அமுலுக்கு வரவில்லை. இந்தச் சட்டத்தின் பேரில் ஐக்கோர்ட்டில் தடை வாங்கினார்கள். 27—4—1984-ல் தடையுத்தரவு கொடுக்கப்பட்டது. இதுவரை 1987 ஏப்ரல் வரையில் இந்தச் சட்டத்தை அமுலாக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்தச் சட்டத்தை அமுலாக்காததால் சில நன்மைகள் தொழிலாளர்களுக்குக் கிடைக்காமல் இருக்கின்றன. ஆகவே இதை அமுலாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாலைகளைப் பொறுத்த வரையில் மூடிக் கிடக்கும் பஞ்சாலைகளைத் திறக்க செய்திருக்கக் கூடிய முயற்சிகளைப் பற்றி குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன, இது பழைய கதை. எட்டு, ஒன்பது வருஷத்திற்கு முன்பு நடந்த சூழ்நிலை, இன்றைறக்குள்ள நிலைமை அல்ல. வசந்தா மில், ஜனார்த்தனா மில், அட்சயா மில், பவானி மில், ஸ்ரீஹரி மில்ஸ், இராதா கிருஷ்ணா மில்கள் இருக்கின்றன.





இதிலே ஒரு மில் மத்திய சர்க்கார் மந்திரிக்குச் சொந்தமானது. இது போன்று பல மில்கள் பற்றி சென்ற மாதம் நான் பேசும்போது பட்டியல் போட்டுச் சொன்னேன். அவற்றை பற்றி ஏதாவது நடவடிக்கை எடுத்ததா அரசாங்கம்? அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை. ஏற்கனவே கோவையில் பெரிய உண்ணாவிரதம் நடந்து, மறியல் நடந்து, கோட்டைக்குள் வந்து நிதியமைச்சரிடம் பேசி சில ஆலோசனைகள் சொல்லப்பட்டபோது விரைவாக இந்த மில்கள் திறக்கப்படும் என்ற நம்பிக்கை கொடுக்கப்பட்டது. ஆனால் நடக்கவில்லை. ஒரு மில்லில் சிறிய தகராறு என்ற முறையில் பவானி மில்லில் மட்டும்தான் பிரச்சினை தீர்க்கப்பட்டது. அதுவும் தொழிலாளர்கள் சம்பளத்தில் முதல் வருஷத்தில் 25 சதவீதம் வெட்டுவது என்றும், இரண்டாவது வருஷம், 20 சதவீதம் வெட்டுவது என்றும், மூன்றாவது வருஷம் 15 சதவீதம் வெட்டுவது என்றும் இப்படி தொழிலாளியின் சம்பளத்தை வெட்டி அதில் முதலாளி மில்லை ஓட்டுவது என்ற நிலை உருவாகியுள்ளது. அந்த மில்லை மிஸ் மேனேஜ் செய்த முதலாளிக்குத் தண்டனை கிடையாது. இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. மூடிக் கிடக்கும் மில்களைப் பொறுத்த வரையில் எடுக்கக் கூடாது என்பது மத்திய சர்க்காரின் கொள்கை. அந்தக் கொள்கை உதவிகரமான கொள்கையல்ல. இதனால் கஷ்டப்படுவது, சங்கடத்திற்குள்ளாவது உழைப்பாளி மக்கள். மில் மூடுவதற்கு அந்த உழைப்பாளிகள் பொறுப்பல்ல. இதற்கு ஒரு சவால் விட்டுச் சொல்ல முடியும். மில் திறக்கட்டும், மில்லின் மேனேஜ்மெண்டை வெளியேற்றிவிட்டு அரசாங்கத்தின் கண்ட்ரோலில் வரக்கூடிய அதிகாரிகளும், தொழிலாளர் பிரதிநிதிகளும் சேர்ந்து நடத்தினால் முதல் வருஷத்திலேயே லாபத்தைக் காட்டலாம். மிஸ்மேனேஜ்மென்ட் என்பதுதான் இதற்கு பேசிக் ரீசன். இதை நாடே ஒத்துக்கொண்டிருக்கிறது. பூட்டிய மில்களை எடுப்பதற்கு நமக்குச் சட்டம் இருக்கிறது. இதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். ரிலீப் அண்டர்டேக்கிங் ஆக்ட்டின்படி என்ன வேண்டுமென்றாலும் செயயலாம். ஆள் குறைப்புச் செய்யலாம், சம்பளத்தை வெட்டலாம், பஞ்சப்படியை குறைக்கலாம், because it is Relief undertaking Act. இருந்தாலும் தொழிலாளி பாடுபட்டு சிந்திய வியர்வையால் உருவாக்கப்பட்டது. அப்படி செய்யக்கூடாது, தப்பு. அப்படிச் செய்வதால் பெரிய கெடுதல் இருக்கிறது. இருந்தாலும் நாம் அதை எடுக்கச் சொல்கிறோம். பிராபர்டீசை நேஷனலைஸ் பண்ணச் சொல்லிக் கேட்கவில்லை. அதற்கு மத்திய அரசு ஒத்துக் கொள்ள மாட்டார்கள். இதை அவர்கள் தான் செய்ய வேண்டும். அவர்களை ஒத்துக் கொள்ள வைக்க வேண்டும். இன்றைக்குச் இந்தச் சட்டமன்றத்தில் பேசி செய்யக்கூடியதல்ல அது. நாட்டு மக்கள் செய்ய வேண்டிய வேலை. ஆகவே நிர்வாகத்தை எடுத்து, அந்த மில் மேனேஜ்மென்ட் பண்ணக் கூடிய முதலாளிகளிடம் ஒப்படைக்கக் கூடாது. அப்படி எடுத்து நடத்த ஆரம்பித்தால் நிச்சயமாக வெற்றி பெற

136532

முடியும். கோவையில் 10 மில்களை அந்த மாதிரி எடுத்து நடத்தி
அந்த மில்களெல்லாம் லாபகரமாக நிற்காமல் ஓடும் மில்களாக
இருக்கின்றன. அந்த முறையிலே மூடிக் கிடக்கும் மில்களைத்
திறக்க நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படியில்லாமல்,
பழைய கதையையே சொல்லிப் பிரயோசனமில்லை.

அடுத்து, வீட்டு வசதி வாரியம் பற்றி இருக்கும்படியான
பிரச்சினை. 1986–87-ல் தொடங்கி 3 ஆண்டுகளிலே 30 இலட்
சம் வீடுகளை நலிந்தோருக்கும். வறுமைக் கோட்டுக்குக் கீழே
உள்ளவர்களுக்கும் கட்டிக் கொடுப்பது இந்த அரசினுடைய
கொள்கை என்று நமது மதிப்பிற்குரிய மேன்மைதங்கிய கவர்னர்
அவர்கள் இந்த மன்றத்திலே எடுத்துச் சொன்னார்கள்.
இப்போது உருவாகி இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அது
முதல் வருடத்திலே 2,03,752 வீடுகள் கட்டப்பட்டதாக குறிப்
பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது 1987–88ல் 17,000
வீடுகள் கட்டப்போவதாகச் சொல்லப்படுகிறது. பல திட்டங்கள்
சொல்லப்பட்டிருக்கின்றன. நான் என்ன சொல்ல விரும்பு
கிறேன் என்றால், வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு,
நலிந்த பிரிவினருக்குப் பயன்படும் திட்டமாக இது செயல்படு
வதில் உரித்தான வேகமும் சொன்ன குறிக்கோளை நிறைவேற்றும்
படியான நிலைமையும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே ஆசை
வார்த்தைகளை சொல்லிப் பிரயோசனமில்லை. இதை நடை
முறைக்குக் கொண்டு வர என்ன சாத்தியம் என்று பார்த்துச்
செய்ய வேண்டும்.

அடுத்து குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும் வீடுகளின்
நிலைமை ரொம்ப பரிதாபகரமாக இருக்கிறது. மராமத்து
செய்யாமல் இருக்கிறது. குடிநீர் வசதி போதிய அளவுக்குக்
கிடைக்காமல் இருக்கிறது. சாக்கடைத் திட்டங்களே சில இடங்
களிலே அமுலில் இல்லை. வீடுகளை 2 அடுக்கு, 3 அடுக்கு
மாடிகளாகக் கட்டியிருக்கிறார்கள். ஒரு மாடிக்கும் இன்னொரு
மாடிக்கும் மத்தியிலே சாக்கடைத் தண்ணீர் வடிந்து போவதற்கு
கால்வாய்கூட வெட்டாமல் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்
பினர் திரு. பேரூர் நடராசன் அவர்கள் சொன்னார்கள். அந்தப்
பகுதியில் இருக்கக் கூடிய 3,000 வீடுகள், சாக்கடைவசதி இல்லா
மல் இருக்கின்றன என்ற நிலை இருக்கிறது. அதேமாதிரி துப்பு
ரவு செய்ய அங்கே ஆளில்லை. இந்த நிர்வாகத்திலே அதற்கு
ஆள் கிடையாது. நகராட்சி அல்லது மாநகராட்சி சம்பந்தப்
பட்ட லோக்கல் அத்தாரிட்டியிடம் ஒப்படைக்க வேண்டும்.
அப்படி ஒப்படைப்பதிலே தகராறு இருக்கிறது. சில பகுதிகளில்
ஒப்படைத்து, அவர்கள் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.
அவர்கள் கேட்கிற காரியங்களை வாரியம் செய்வதில்லை.
செய்ய வேண்டுமென்றால் அதற்கு பணமில்லை. முனிசிபாலிட்டி
கார்ப்பரேஷன் அதிகாரிகளுக்கும், வாரியத்தின் நிர்வாகத்திற்கும்
அங்கே போராட்டம். இதிலே சமரசம் செய்ய பல முயற்சி



களை எடுத்தோம். நடக்க மாட்டேன் என்கிறது. கோவையில் செல்வபுரத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. நடராசன் அவர்கள் சொன்னதுபோல, இது போன்ற பிரச்சினைகள் இருக்கின்றன. அங்கே அண்டர் கிரவுன்ட் சாக்கடை போட்டு. 10 சென்ட் நிலத்திலே டேங்க் போலச் செய்து, என்ஜின் வைத்து தண்ணீரை ரக் பண்ணி, கோவை நகர அண்டர் கிரவுன்ட் ட்ரெய்னேஜ் திட்டத்திலே இதை இணைக்க வேண்டும். ஆனால் இன்றைய வரைக்கும் அப்படி இணைக்காமல், அது பகிரங்கமாகத் திறந்து வைத்து, அதனால் ஏற்பட்ட கொசுத் தொல்லையால், மனிதன் அங்கே போக முடியாத நிலை இருக்கிறது. இதை கலெக்டரை அழைத்துச் சென்று, நேரடியாகக் காண்பித்தேன். முன்னால் இருந்த அமைச்சர் திரு. நல்லுசாமி அவர்களை அங்கே நேரடியாக அழைத்துச் சென்று, அந்த வட்டாரத்தைக் காண்பித்தேன். அங்கே கதவுகள் உடைந்து போகின்றன, சன்னல்கள் உடைந்து போகின்றன. மேல் மாடியில் குடியிருக்கிறவர்களுடைய கக்கூஸ் தண்ணீர் கீழே இருக்கிறவர்களின் தலையில் விழுகிறது. இப்படி பல ரிப்பேர் வேலைகள் தேவை. கேட்டால் பணமில்லை என்கிறார்கள். வீட்டிலே கட்டிலிலே படுத்துக் கொண்டிருக்கும்போது, மேலே உள்ள சீலிங், ஒழுங்காக கலவை இல்லாமல் சீலிங் போட்டதால், 1/2 இன்ச் கனத்திற்கு கீழே விழுந்திருக்கிறது. கலெக்டரிடம் இதையெல்லாம் காண்பித்தேன். கோவை மாநகரத்தில் இப்படி இருக்கிறது. அங்கே ரிப்பேர்கள் செய்ய வேண்டும். அறிஞர் அண்ணா ஹட்கோ காலனி என்று பெரிய வீடுகள் கட்டிய காலனி இருக்கிறது. இன்றையவரை அது முனிசிபாலிட்டியிடம் ஹேன்ட் ஓவர் செய்யப்படவில்லை. பலமுறை பேசப்பட்டது. அங்கே கமிஷனரிடமும், சம்பந்தப்பட்ட இன்ஜினியரிடமும் பேசியும் நடக்கவில்லை. நான் குடியிருக்கும் பகுதியில், சீத்தாபுதூர் பகுதியில் வி. கே. கிருஷ்ணமேனன் ரோட்டில் இருக்கும்படியான 200 வீடுகள் இன்னும் ஹேன்ட் ஓவர் ஆக வில்லை.

(பிற்பகல் 1-10.)

அந்த இடங்களிலே என்ன நடக்கிறது என்று கேட்டால் அந்த குடிசைமாற்று வாரியத்தினாலே கட்டப்பட்ட அந்த வீடுகளுக்குப் பக்கத்திலேயே சின்ன சின்ன குடிசைகள் மறுபடியும் முளைக்கின்றன. காளான் முளைக்கிற மாதிரி குடிசைகள் முளைக்கிறது. கன்னா பின்னா என்று கட்டுகின்றார்கள். அதை கட்டி தனியாக வாடகைக்கு விடுவது. அந்த வீட்டிலே குடியிருந்து கொண்டே இதிலே சம்பாதிப்பது. இது ஒரு கொடுமையான நடவடிக்கை. ஸ்லம் கிளியரன்ஸ் என்ற கொள்கையை வைத்திருக்கிறோமே அதைப் பாழ் அடிக்கிற நடவடிக்கை. அவர்கள் மீது தயவு தாட்சண்யம் காட்டக்கூடாது. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த மன்றத்திலேயே நான் பேசினேன். அப்புறம் சில சமூக விரோதிகளும் ரௌடிகளும் சேர்ந்து பர்ஸ்ட் யார் குடியிருந்தார்களோ அவர்களை வீட்டை விட்டு வெளியேற்றி அந்த வீட்டை காலி பண்ண வைத்து, அந்த வீட்டை விற்பது

அங்கே விற்பது என்றால் உண்மையான பத்திரம் எழுதியல்
ரூ. 5, ரூ. 10 என்று முத்திரைத் தாளில் எழுதிக் கொடுத்து அவர்
களை நம்ப வைத்து 3 வருடம், 5 வருடம் என்று இருந்துகொள்
என்று ஒப்படைத்து விட்டு போகின்றார்கள். அதற்கு ஒரு?
முடிவு கட்ட வேண்டும். 20 ஆயிரம், 30 ஆயிரம் என்று அதற்
காக வசூல் பண்ணப்பட்டிருக்கின்றது. இப்படியெல்லாம் நடக்
கிறது. வேண்டுமென்றால் பத்திரங்களைக்கூட இந்த சபை
யிலே கொண்டு வந்து காட்டுகிறேன். இதற்கும் முடிவு கட்ட
வேண்டும். சர்க்கார் பிராபர்ட்டியை யார் எடுத்து யார் விற்பது
இப்படிப்பட்ட அக்கிரமங்கள் நடப்பதைத் தடுக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப் பெற்றது). ஆகவே அந்த
மாதிரி நடவடிக்கையில் இந்த அரசு தீவிரமாக இருந்து செயல்பட
வேண்டும். இந்த குடிசை மாற்று வாரியத்தினுடைய நோக்
கத்தை நிறைவேற்றும்படியாக காரியங்கள் இருக்க வேண்டும்.
அங்கே இருக்கின்ற கட்டடங்களுக்குக்கீழே குடிசைகள்போட அனு
மதிக்கக் கூடாது. மற்ற தேவையான சுகாதாரவசதி, சாக்
கடை வசதி இவைகளையெல்லாம் ஏற்படுத்த வேண்டும். அதற்
குத் தேவையான பணத்தை ஒதுக்க வேண்டும். சுத்தம் சுகா
தாரம் இவைகளை எல்லாம் லோகல் போர்ட் இடம் ஒப்படைக்க
வேண்டும். அந்த முறையிலே அந்த காரியத்தை செய்ய வேண்
டும். அடுத்ததாக கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய வீட்டு
வசதி பற்றி குறிப்பிட்டேன். ஒரு வீடு கட்டுவதற்கு ரூ. 6,000
என்று திட்டம் போட்டு அதில் ரூ. 4,500 அவர்களுக்குக் கடனாக
கொடுக்கப்படுகிறது. பாக்கி ரூ. 1,500 அவர்கள் உழைப்பின்
முயற்சி செய்து கட்ட வேண்டும். பிரச்சினை என்னவென்று
கேட்டால், இதை மூன்று தடவைகளாக கொடுக்கிறார்கள்.
ரூ. 4,500ஐ மூன்று தடவைகளாக கொடுத்தால் நிச்சயமாக
அவர்கள் அந்த பணத்தை வைத்து வீடு கட்டப்போவதில்லை.
கொஞ்சம் கொஞ்சமாக அந்த பணம் செலவழிந்து தீர்ந்து போகும்.
கொடுக்கின்ற பணத்தை மொத்தமாக கொடுத்தால் மட்டும்
அதற்கு என்று செலவழித்து கட்டுவார்களா என்று கேட்பீர்கள்.
செலவழிக்கமாட்டார்கள் என்பதில்லை. அதற்காக செல
வழிக்கக் கூடியவர்கள் செலவழிப்பார்கள். அவர்களுக்கு மொட்டு
மொத்தமாகக் கொடுத்தால் அதை செய்ய முடியும். அதற்கு
வேண்டிய நடவடிக்கையை எடுக்கலாம். அது இல்லாமலேயே
பல பிரச்சினைகள் இந்த மன்றத்திலே வருகிறது. நான் என்ன
சொல்கிறேன் என்றால், இன்றைக்கு இருக்கின்ற பொருள்
களுடைய விலைவாசிகள் செங்கல், மரம், இரும்பு, சுண்ணாம்பு,
சிமெண்ட் இதையெல்லாம் கணக்கில் எடுத்தால் அந்த ஆறு
ஆயிரம் ரூபாய் எந்த மூலை? குறைந்தது பத்தாயிரம்
ரூபாயாவது உயர்த்த வேண்டும். காலி இடங்
களை எல்லாம் லே அவுட் போட்டு விற்கக் கூடியவர்கள்
பயங்கரமான அட்டகாசம் செய்து கொண்டிருக்கிறார்கள்.
இதற்குள்ளே வராதவர்கள் லட்சக்கணக்கான பேர்கள் இருக்கின்
றார்கள். அன் அப்ருவ்ட். லே அவுட் போடுவதற்கே அனு



மதிக்கக்கூடாது. போட்டு முடிக்கிற வரைக்கும் முனிசிபாலிட்டி
யில் எல்லாம் சும்மா இருக்கின்றார்கள். ஜனங்களுக்கு எப்படி
இருக்கிறது? ஜனங்களுக்கு இடம் கிடைத்தால் போதும் என்று
இருக்கின்றார்கள். பறந்து பறந்து வாங்குகிறார்கள். கடைசி
யிலே வரும்போது, விளக்கு இல்லை, ரோடு இல்லை. சாக்கடை
இல்லை என்று சொல்கின்றார்கள். அப்போது என்ன செய்ய
முடியும்? ஒன்றும் செய்ய முடியாது. அதன் பிறகு அது முனிசி
பாலிட்டிக்கு, கார்ப்பரேஷனுக்கு பிரச்சினையாக வந்து சேரும்.
அது ஒரு பயங்கரமான நிலைமை. அதற்காக ஒரு சட்டத்தைக்
கொண்டு வருவதாக முன்னாலே இருந்த அமைச்சர் அவர்கள்
இங்கே இதே அவையில் நான் பேசின காலத்திலே அவர்கள்
குறிப்பிட்டார்கள். என்ன அவர் குறிப்பிட்டார் என்று சொன்
னால், இப்படி அன் அப்ருவ்ட் லேஅவுட்டில் பக்கா வீடுகளாக
கட்டி இருக்கக்கூடிய வீடுகளை முனிசிபாலிட்டியிலே சார்ப்பரேஷ
னிலே மற்றும் லோகல் போர்ட்டிலே எடுத்துக் கொள்ளவேண்டும்.
அதற்கு ஒரு சட்டம் போட்டு எடுத்துக் கொள்வது, அங்கே விளக்
கும், ரோடும், சாக்கடையும், கழிப்பிடமும் குறைந்த பட்சம்
ஏற்படுத்துவது, அதற்கு என்ன செலவாகிறதோ அந்த செலவை
வீட்டு வரியிலே, அடிசனல் டாக்சாக, சட்டப் பூர்வமான வரியாக
போட்டு அதை வசூல் பண்ணுவது. அந்த பிரச்சினை தீர்கிற
வரைக்கும் என்ன செலவழிக்கப்படுகின்றதோ என்ன வரவு வர
வேண்டியிருக்கின்றதோ அதுவரைக்கும் வசூல் பண்ணி பிறகு
ரத்துக்கு என்ன நடவடிக்கையோ அதை எடுக்கலாம்.

அப்படி ஒரு சட்டம் கொண்டுவரவேண்டும் என்று இந்த
அவையிலே வாக்குறுதி சொல்லப்பட்டிருக்கிறது. நமது அமைச்சர்
அவர்கள் அதை கவனித்து அந்த நடவடிக்கையை எடுக்க
வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். (மணியடிக்கப்
பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரொம்ப நேரமாகிவிட்டது.

திரு. கு. ரமணி: இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துக்
கொள்கிறேன். நகர்ப்புற வளர்ச்சியிலே பெருநகரங்களிலே இருக்
கின்ற வீடுகளுக்கு சிறு சாக்கடை கொண்டுவரக்கூடிய கொள்கை
யெல்லாம் சரிதான். வீடு இல்லாத நெருக்கடி, சுகாதாரம்
எல்லாம் அழிந்து போகக்கூடிய நிலை இது ரொம்ப ஜாஸ்தி
ஏற்பட்டிருக்கிறது. என் தொகுதியிலே 5 ஆயிரத்திற்கு மேற்
பட்ட குடிசைகள் இருக்கின்றன. இன்றைக்கும் எந்த வசதியும்
பண்ணமுடியவில்லை. இந்த விஷயத்தைக் கவனித்து அதிலேயும்
ஒரு முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.
அந்த மாதிரி சட்டவிரோதமான குடியிருப்புகள் தயார் பண்ணி
அதிலே குடியிருந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கும்
ரோடு பிரச்சினை மற்ற பிரச்சினையெல்லாம் வருகிறது. இப்
போது சட்டத்தின் படி நடவடிக்கை எடுத்தால் அது சரியாக
இருக்கும்.

[திரு. கு. ரமணி] [1987 மே 6

நகர்ப்பகுதி வளர்ச்சிக்கு பலவிதமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். என் தொகுதியிலுள்ள முழு பகுதிகளுக்கும் பாதாள சாக்கடை திட்டத்தை நிறைவேற்றுவதற்கு திட்டம் கொண்டு வந்து நான்கு வருடங்கள் ஆகின்றன. கோடிக்கணக்கான ரூபாய் செலவிட்டு அன்டர் கிரவுன்ட் பைப் எல்லாம் போட்டு விட்டார்கள். ஆனால் 10,15 மைலுக்கு அப்பால் இந்த சாக்கடை நீரை பயன்படுத்தி பண்ணை வைக்க முயற்சிக்கும்போது அந்த ஊர் மக்கள் எதிர்த்ததன் காரணத்தால் அந்த நல்ல திட்டம் இன்றைக்கு வரை நிறைவேற்றப்படாமல் அப்படியே கிடக்கிறது. 'அன் அப்ரூவ்ட் லே அவுட்ஸ்' ஐ பொறுத்தவரையில் அரசு இன்னும் தீவிரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இன்றைக்கு நகர்ப் பகுதியை எடுத்துக்கொண்டால் ஏராளமான நிலம் காலியாக இருக்கிறது. ஏதோ தங்களுக்கு வீடு கட்டுவதற்கு தேவையான நிலத்தை வைத்திருக்கட்டும் அல்லது தொழிற்சாலைக்குத் தேவையான நிலத்தை வைத்திருக்கட்டும். ஆனால் மீதம் உள்ள நிலத்தை அரசாங்கம் அவசியம் ஒரு சட்டம் கொண்டு வந்து எடுக்கவேண்டும். அப்படி செய்யவில்லையென்றால் அரசு எவ்வளவுதான் திட்டங்கள் போட்டாலும் நகர்ப் பகுதியில் நல்ல முறையில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது. ஆகவே இந்த வகையில் புதிதாக சட்டம் கொண்டு வந்து நகர்ப் பகுதி வளர்ச்சியின் அபிவிருத்திக்கு ஆவன செய்ய வேண்டும், நகர்ப் பகுதி வளர்ச்சிக்கு அரசு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

*திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியான மைலாப்பூரிலுள்ள சீனிவாசபுரம் என்கிற குடிசை மாற்று வாரிய கட்டட பகுதியில் 22 வருடங்களாக மின் விளக்கு இல்லாமல் இருந்த நிலைமையை மாற்றி முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 1 லட்சத்து 58 ஆயிரம் ரூபாயை ஒதுக்கீடு செய்து அந்தப் பகுதிக்கு மின் விளக்கு திட்டத்தை ஏற்படுத்தித் தந்திருக்கின்ற, தமிழகத்தினுடைய ஒளி விளக்கு, எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு குறிப்பாக இந்த மானியக் கோரிக்கையின் மீது நான் பேசுகின்றபோது நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சென்னை மாநகரிலே, மயிலாப்பூர் பகுதியிலே தான் அதிகமான குடிசை மாற்று வாரிய கட்டடங்கள் இருக்கின்றன. குடிசை மாற்று வாரிய பணியினைப் பற்றி இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடும்போது இன்னும் 46 நகரங்களில் அதனை விரிவுபடுத்தப் போவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். இது மிக நல்ல திட்டம், நல்ல பணி, இருந்தாலும் கூட 46 நகரங்கள் என்பதை



1987 மே 6] [திருமதி பா. வளர்மதி]

விட தமிழ்நாட்டிலே இருக்கின்ற எல்லா மாவட்டங்களிலும் உள்ள மிகப் பெரிய நகரங்களில் எல்லாம் இத்திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காரணம் இன்றைக்கு இந்த நாட்டிலுள்ள ஏழையெளிய மக்கள் எல்லாம் அதிகமாக வாடகை கொடுத்து வெளியே தனியார் வீடுகளில் குடியிருக்கிற நிலை இருப்பதால் அதனை தவிர்க்க எப்படியாவது குடிசை மாற்று வாரிய வீடுகளை விரும்பிப் பெற்று குடியேற வேண்டுமென்று ஆர்வத்தோடு இருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டு இத்திட்டத்தை விரிவுபடுத்துகிறபோது தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்கெனவே போட்டிருக்கின்ற 30 லட்சம் வீடுகள் திட்டத்தோடு இந்தத் திட்டத்தையும் சேர்த்து விரிவுபடுத்தினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த 30 லட்சம் வீடுகள் பற்றிய திட்டத்தை தீட்டி தமிழக அரசு அறிவித்த உடனே சில பேர் '30 லட்சம் வீடுகளா? அது எப்படி வரும்?' என்றெல்லாம் கேட்டார்கள். ஆனால் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதற்கு சான்றாக, ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு முன்பே, நாடோடிமன்னன் என்கிற திரைப்படத்தின் மூலமாக, ஆளுக்கொரு வீடு கட்டுவோம் என்கிற புரட்சிகரமான கொள்கையை திட்டவட்டமாக சொல்லி, அன்றைக்கே அதை ஏழையெளிய மக்கள் மனதிலே பதிய வைத்து, அந்தக் கருத்தை நிலைநிறுத்தி விட்டதன் அடிப்படையில் இன்றைக்கு இந்த 30 லட்சம் வீடுகள் பற்றிய திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டிலே வாழ்கின்ற ஏழையெளிய மக்கள் நிச்சயமாக இந்த அரசைப் பாராட்டுவார்கள்.

அடுத்து, இன்றைக்கு குடிசை மாற்று வாரிய கட்டட பகுதிகள் சென்னை மாநகரில் பல இடங்களில் இருக்கின்றன. அடிப்படை வசதிகள் எல்லாம் இந்த கட்டடங்களில் இருக்கின்றன. அங்கே குடியிருந்தவர்கள் எல்லாம் தங்கள் வாடகைகளை ஒழுங்காக கட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால் சில அரசியல் வாதிகள் தேர்தல் காலத்திலே குடிசை மாற்று வாரிய வீடுகளுக்கு வாடகை கிடையாது, வாடகை இல்லை, என்று வாக்குறுதி சொன்ன காரணத்தினால், பொதுமக்களை வாடகை செலுத்த வேண்டாம் என்று தூண்டி விட்ட காரணத்தினால், ஒழுங்காக வாடகை செலுத்திக் கொண்டிருந்த சில பொதுமக்கள்கூட இன்றைக்கு வாடகையை ஒழுங்காக செலுத்தாத ஒரு நிலையை சில அரசியல் கட்சிகள் ஏற்படுத்தி இருக்கின்றன. மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம். அங்கே குடியிருப்பவர்கள் எல்லாம் ஒழுங்காக வாடகை பாக்கியை செலுத்துகிறபோதுதான் அங்கே இருக்கிற குறைபாடுகளை எல்லாம் சரி செய்யக் கூடிய வாய்ப்பு

(பிற்பகல் 1-20)

இருக்கும். ஆகவே, இன்றைக்கு அடிப்படை வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. வாடகை பாக்கிகளைப் பொதுமக்கள் சிலபேர்களுடைய தூண்டுதலின் பேரிலே கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். வாடகை பாக்கியைச் செலுத்த மறுப்பவர்களை கொஞ்சம் கடுமையாகவே தண்டித்து அந்தப் பாக்கிகளைச் செலுத்தச் செய்யவேண்டும். இன்றைக்கு வீடுகள் பழுதடைந்திருப்பதாகக் குற்றம் சொன்னார்கள். அந்தப் பழுதடைந்த வீடுகளையெல்லாம் சரி செய்வதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன.

குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் இருக்கின்ற பகுதிகளில் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் கட்டுகின்றபொழுதே பள்ளிக்கூடம், பூங்கா, விளையாட்டு மைதானம் என்று குறிப்பிட்ட இடங்களை ஒதுக்கீடு செய்கிறார்கள். அதைப்போலவே குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டுகின்றபொழுதே, பள்ளிக்கூடம், பூங்கா வசதி என்று அதிகமான வசதிகளோடு ஏழைமக்களுக்குத் தரவில்லை என்றாலும்கூட, சிறிய சமூக நலக் கூடம் கட்டுவதற்காவது இடத்தை ஒதுக்கீடு செய்து, குடியிருப்புகளைக் கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், சமூக நலக் கூடம் என்று நான் சொல்கிறபொழுது ஏழை எளிய மக்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு திருமணம் செய்ய வேண்டுமென்று சொன்னால், அதிகமான வாடகை கொடுத்து அவர்கள் திருமண மண்டபங்களைப் பிடித்துத் திருமணம் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, சில நேரங்களிலே ஆலயங்களிலே கொண்டு போய் வைக்கிறார்கள். குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் இருக்கின்ற பகுதியிலே சமூக நலக் கூடங்கள் கட்டுகின்றபொழுது, எப்படிக் குறைந்த வாடகைக்கு வீட்டை வாரியம் தருகிறதோ அதேமாதிரி குறைந்த வாடகைக்கு இந்தச் சமூக நலக் கூடத்தையும் ஏழை மக்களுக்குத் தரலாம் என்று நான் இந்த நேரத்திலே அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான மைலாப்பூர் தொகுதியிலே லஸ் பகுதி என்பது மிக முக்கியமான பகுதி. அந்த லஸ் பகுதியிலே லாலா தோட்டம், பூந்தோட்டம் என்ற குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதி பன்னெடுங்காலமாகவே குடிசைப் பகுதியாகவே இருந்து வருகிறது. அந்தப் பகுதியிலே இருப்பவர்களுக்கு எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லை. அது கால்வாய் ஓரமாக இருக்கிற பகுதியாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிகளில் குடிசை மாற்று வாரிய குடியிருப்புக் கட்டவேண்டும் என்கிற ஆணை பிறப்பிக்கப்பட்டு அந்த இடம் ஆலயத்திற்குச் சொந்தமாக இருக்கிற காரணத்தால் ஆலய நிர்வாகம் மனை ஒன்றுக்கு ஏழாயிரம் ரூபாய் கட்டினால்தான் நாங்கள் அந்த இடத்தை எடுத்துக்கொண்டு ஆலய நிர்வாகம் தடையில்லை சான்றிதழ் வழங்க முடியும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறது.



அது கொஞ்சம் பிரச்சினையாகவே நெடுங்காலமாக இருந்து வருகிறது. ஆலய நிர்வாகத்தோடு, குடிசை மாற்று வாரியமோ அல்லது மாண்புமிகு அமைச்சரவர்களோ பேசி அந்த இடத்திலே நீண்ட நாள் பிரச்சினையாக, தீராத பிரச்சினையாக இருக்கிற இந்தப் பிரச்சினை தீருகின்ற பொருட்டு அவர்களுக்கு மாடிவீடுகள் கட்டித் தருவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆலைய நிர்வாசத்தோடு நாங்கள் பேசுகின்ற நேரத்தில், ஏற்கனவே பணம் ஆலய நிர்வாகத்திற்குப் பாக்கியிருக்கிறது, பழைய பாக்கியைத் தந்தால் நாங்கள் குடிசை மாற்று வாரியத்திற்கு ஒப்படைப்போம் என்று எங்களிடத்திலே சொல்கிறார்கள். ஆகவே, பழைய பாக்கியைக் கட்டினாலும் சரி அல்லது அரசாங்கம் பேசினாலும் சரி, அவர்களுக்கு நீண்ட நாள் பிரச்சினையாக இருக்கின்ற அந்தப் பகுதியிலே வீடுகள் கட்டித் தருவதற்கு வழிவகைகள் செய்ய வேண்டும். அதுவும் கால்வாய் பகுதியாக இருக்கின்ற காரணத்தால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள், அந்த ஏழை மக்களை மனத்திலே வைத்துக்கொண்டு அதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இன்னொன்று. வெள்ளம், புயல் அடிக்கிறது; மழை வருகிறது என்று சொன்னால், இன்றைக்குக் குடிசை மாற்று வாரியம் இருக்கின்ற பகுதியிலே அதிகம் பாதிக்கப்படுகிறது. நிரந்தரமாகவே ஒரு இடம் வைத்திருக்கிறார்கள். வெள்ளம் வருகிறது என்று சொன்னால், நேராக அந்த இடத்திற்குப் போய்த்தான் நிவாரணம் பெறுகிறார்கள். இது வருஷாவருஷம், எந்த வெள்ளம் வந்தாலும் நடந்து வருகின்ற நிவாரணப் பணிகள். இதற்கு ஒரு தீர்வு காண்பதற்கு நிரந்தரமாகவே ஒன்று, தாழ்வாக இருக்கின்ற பகுதிகளை மேடான பகுதிகளுக்குக் கொண்டு வர வேண்டும்; இல்லையென்றால் அவர்களுக்குக் குடியிருப்புகளை, வீடுகளைக் கட்டிக் கொடுத்து, உயர்ந்த நிலைக்குக் கொண்டு வர வேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதி, கோவிந்தசாமி நகரில், வெள்ளம் வருகிறது என்று சொன்னால் (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஆரம்பிக்கவே இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரம் ஆகிவிட்டது. முடித்து விடுங்கள்.

திருமதி பா. வளர்மதி: இது தாழ்வான பகுதியாக இருக்கிற காரணத்தால் அந்தப் பகுதியிலே இந்த மாதிரி ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதையும் மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு வசதித் துறையைப் பொறுத்த அளவிற்கு, கொள்கை விளக்கக் குறிப்பிலே புதுப்புது நகரங்களை உருவாக்கியிருக்கிறார்கள். பாராட்டத் தகுந்த திட்டம். நான் மாண்புமிகு அமைச்சரவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டு ஒன்று கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது குதிரைப் பந்தய மைதானம் இருக்கிறது; அந்த மைதானத்தை எடுத்துக் கொண்டு, டெல்லி, பம்பாய் போன்ற நகரங்களைப் போல அந்த இடங்களைப் புது நகரமாக உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு என்னுடைய தொகுதியாக இருக்கின்ற மைலாப்பூர் தொகுதியிலே குடிசைப் பகுதி அதிகமாக இருக்கின்றது. வாரியம் எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதுவரை எடுக்கவில்லை. அதையும் குடிசை மாற்று வாரியம் கையகப்படுத்திக் கொண்டு, பட்டு நூல்காரன் தோட்டம், கைலாசபுரம், சிலேட்டர்புரம், கக்கன் காலனி, ஆதி ஆந்திரா காலனி இன்னும் ஏறத்தாழ இருபதுக்கும் மேற்பட்ட குடியிருப்புகள் குடிசை மாற்று வாரியம் எடுத்து இதுவரைக்கும் வீடு கட்டப்படாமல் இருக்கிறது. அந்த இடத்திலேயும் வீடு கட்டித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, இன்றைக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட்டிருக்கிற பட்டினப்பாக்கம் அரசு ஊழியர் குடியிருப்பு பழுதடைந்திருப்பது பற்றி ஏற்கெனவே இந்த மன்றத்தில் பேசியிருக்கிறோம். பழுதடைந்திருக்கிற அந்த குடியிருப்பை சீர் செய்ய தேவையான பணத்தை ஒதுக்கீடு செய்ய அரசுக்கு குறிப்பு அனுப்பினார்கள். இதுவரையிலும் சரி செய்யப்படவில்லை. அந்த அரசு ஊழியர் குடியிருப்பு இடிந்து விழக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறது. ஆகவே, அந்தக் குடியிருப்பை நிரந்தரமான நல்ல குடியிருப்புகளாக ஆக்கத் தேவையான பணிகளை மேற்கொள்ளுங்கள் அல்லது அத்தனையையும் இடித்துத் தள்ளிவிட்டு புதிதாகக் கட்டுங்கள் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அரசு ஊழியர் குடியிருப்பு சென்னை மாநகரில் மூன்று இடங்களில் இருக்கிறது. பீட்டர்ஸ் காலனி, லாயிட்ஸ் காலனி, பட்டினப்பாக்கம் ஆகிய மூன்று இடங்களில்தான் இருக்கிறது. இன்னும் அதிகமான குடியிருப்புகளைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எல்.ஐ.ஜி., எம்.ஐ.ஜி., எச்.ஐ.ஜி. என்று மூன்று வகைப்பட்ட குடியிருப்புகள் இருக்கின்றன. இந்தக் குடியிருப்புக்கு 13 சதவீதம் ஸ்டாம்ப் ட்யூட்டி கேட்கிறார்கள். இது எந்த வகையிலும் நியாயமில்லை. எல்.ஐ.ஜி., எம்.ஐ.ஜி., எச்.ஐ.ஜி. குடியிருப்புக்கு ஸ்டாம்ப் டியூட்டி கட்ட வேண்டுமென்று சொல்லு



கிறபோது, மக்கள் சங்கடப்படுகிறார்கள். மனைகளில் இருக்கிறவர்களுக்கு இந்த மாதிரி ஸ்டாம்ப் டியூட்டி வாங்கினால் பரவாயில்லை. குடியிருப்பில் இருக்கிறவர்களுக்கு வாங்கினால் அதனால் பாதிக்கப்படுபவர்கள் நடுத்தர மக்கள்தான். இதை மனதிலே வைத்து இந்த ஸ்டாம்ப் டியூட்டியைக் குறைப்பதற்கு வழிவகை செய்யுங்கள் இல்லை என்றால் மாற்றியமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறி பற்றி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இப்போது கோடைக்காலமாக இருப்பதால் தாய்மார்கள் எல்லாம் கைத்தறி சேலைகளை விரும்பி கட்டுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, கைத்தறித் துணிக்கு அளிக்கப்படுகின்ற தள்ளுபடி காலத்தை கொஞ்சம் நீட்டிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியான மைலாப்பூரில், திருவீதியம்மன் நகரில் ஆதி திராவிடர் வாழும் பகுதி இருக்கிறது. ஆதி திராவிடர் வாழும் அந்தப் பகுதியில் குடிசை மாற்று வாரியம் வீடு கட்ட 21 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள், ஆனாலும் இதுவரையில் அந்தப் பணி எடுத்துக் கொள்ளப்படவில்லை. தனியார் தலையீட்டினால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதை சரி செய்து குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற கைத்தறியும் நெசவுத் தொழிலும், வீட்டுவசதி, நகர்ப்பகுதி வளர்ச்சி ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது ஜனதாக் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இந்த நாட்டிலே கைத்தறி நெசவாளர்கள் சுமார் 30 இலட்சம் பேர் வாழ்கிறார்கள் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். 5,56,000 கைத்தறிகள் இருப்பதாகவும், அவற்றின் மூலமாக 480 கோடி ரூபாய் பெறுமான துணி உற்பத்தி செய்யப்படுவதாகவும், 3,89,000 கைத்தறிகளை கூட்டுறவின் கீழ் கொண்டு வந்திருப்பதாகவும் சொல்லியிருக்கிறீர்கள். அவற்றிலே பட்டு நெசவு 27,000 தறிகளில் செய்யப்படுகிறது. தறிகளை நவீனப்படுத்தும் திட்டம் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு மத்திய அரசும் மாநில அரசும் 50 : 50 என்ற அடிப்படையில் நிதி உதவி செய்வதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இப்படி பல்வேறு பிரச்சினைகளைச் சொல்லியிருக்கிற நீங்கள் கோவாப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட துணியின் மதிப்பு 66 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். 480 கோடி ரூபாய் அளவுக்கு நெசவாளர்கள் துணியை நெசவு செய்திருக்கிறார்கள் உங்களுடைய கணக்குப் பிரகாரம். அதிலே 66 கோடி

ரூபாய் மதிப்புள்ள துணிகளை மட்டும்தான் கோவாப்டெக்ஸ் கொள்முதல் செய்திருக்கிறது. மீதித் துணிகளை அவர்களே விற்பனை செய்கிற சாத்தியக்கூறு இருக்கிறதா என்று பார்க்கிறபோது அத்தகைய சூழ்நிலை தமிழ்நாடு முழுவதும் இல்லை. இந்தப் பிரச்சினை பற்றி தமிழ்நாடு முழுவதிலுமிருந்து நெசவாளர்கள் எங்களுக்குச்செய்தி அனுப்பியிருப்பதைப் பார்க்கும்போது ஆங்காங்கே இருக்கிற நெசவாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள். அதன் காரணமாக ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் செய்கிறார்கள்; உண்ணாவிரதம் இருக்கிறார்கள். பட்டினிப் பட்டாளம் சென்னைக்கு வந்து மனு கொடுத்திருக்கிறது. இவ்வளவெல்லாம் இருந்தும்கூட எந்தவிதமான பரிகாரத்தையும் இந்த அரசு செய்யவில்லை. எனக்கு வந்திருக்கிற தபால்கள்படி தமிழ்நாடு முழுவதும் இருக்கிற குறைபாடுகள் ரிபேட் பணம் சரியாகக் கிடைக்கவில்லை; அதைப்போல கூலி சரியாகக் கிடைக்கவில்லை; நூல் கிடைக்கவில்லை; தேங்கிக் கிடக்கிற துணியை கோவாப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்யவில்லை; ஏற்கெனவே கொள்முதல் செய்ததற்கு பணம் கொடுக்கவில்லை; கூட்டுறவுச் சங்கங்களுக்கு பல ஆண்டுகளாக தேர்தல் நடத்தாத காரணத்தால் பல்வேறு ஊழல்கள் நடக்கின்றன என்று பட்டியல் போட்டு வந்திருக்கிறது.

(பிற்பகல் 1–30)

ராஜபாளையத்திலிருந்து தபால்; ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து தபால்; எட்டையாபுரத்திலிருந்து தபால்; அருப்புக்கோட்டை நெசவாளர் சங்கத்திலிருந்து தபால்; சேலம் அம்மாபேட்டை அனைத்துப் பகுதி கைத்தறி நெசவாளர் பாதுகாப்புக் குழுவிலிருந்து தபால்; சேலம் அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் எண் 532-லிருந்து மனு; இப்படி நாடு முழுவதிலிருந்தும் கைத்தறி நெசவாளர்கள் படுகிற அவதியைப் பற்றி செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. இந்த அரசு என்ன செய்ய இருக்கிறது? இருக்கின்ற நிதர்சனமான உண்மையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படம் பிடித்துக் காட்ட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மழுப்பாதீர்கள். உற்சாகமாக இருங்கள் என்று கைத்தறி நெசவாளர்களைப் பார்த்துச் சொல்கிறீர்கள். எப்படி அவர்கள் உற்சாகமாக இருப்பார்கள்? பட்டினியாக இருக்கும்போது எப்படி உற்சாகமாக இருக்க முடியும்? நீங்கள் செய்ய வேண்டிய கடமை என்ன? துறை அவர்களுக்காக என்ன செய்திருக்கிறது?

22 ரகங்களைக் கொடுத்திருப்பதாகச் சொல்கிறீர்கள். பவர்லூமைச் சேர்ந்தவர்கள் தடை வாங்கியிருப்பதாகவும் சொல்கிறீர்கள். நீங்கள் என்ன செய்ய இருக்கிறீர்கள் என்பது தெரியாது. தமிழ்நாட்டிலே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அடுத்தபடியாக நெசவாளர்கள்தான் அதிகப்படியாக வாழ்கிறார்கள். எனவே ஒரு பெரிய ஜனத்தொகையுள்ள அமைப்பு இது. இந்த அமைப்புக்காக நீங்கள் என்ன செய்ய இருக்கிறீர்கள்?



இப்படிப்பட்ட நிலையில் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் ஆங்காங்கே இருக்கின்ற சங்கங்களில் முறையாகத் தேர்தல் நடத்தப்படவில்லை. தேர்தல் நடத்தப்படாததால் பல்வேறு புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. நான் ஏற்கனவே சொன்ன சேலம் அம்மாபேட்டை கைத்தறியாளர்கள் சங்கத்திலிருந்து புகார் கொடுத்திருக்கிறார்கள். இங்கே 32 புகார்கள் வந்திருக்கின்றன. பெயர்கள் குறிப்பிட்டுக்கூட வந்திருக்கிறது. நான் பெயர்களைச் சொல்ல விரும்பவில்லை. முன்னால் இருந்த தனி அதிகாரிகள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் எல்லாம் இலட்சக்கணக்கில், கோடிக் கணக்கில் பணத்தை ஊழல் செய்ததாகப் புகார் வந்திருக்கிறது. இந்தப் புகார்களில் 350-க்கு மேற்பட்டவர்கள் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. வி. வி. எஸ். அவர்களுக்கும் கூட புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது; கைத்தறி இயக்குநரிடமும் புகார் கொடுக்கப்பட்டு இருக்கிறது. சென்ற ஆண்டு 11 ஆம் மாதம் இந்தப் புகார் அரசுக்கு வந்திருக்கிறது. இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஏன் நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறீர்கள்? இதில் கூட அரசியல் இருக்கிறதா? தப்பு செய்தவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பதில் தயக்கம் ஏன் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரத்திலும் கைத்தறி நெசவுத் தொழில்களைப் பொறுத்தவரையில் விழாக்களை நடத்துகிறீர்கள். இந்த விழாக்களில் தலையான விழா சென்னையிலே நடைபெற்றது. நேற்று முன்தினம் சென்னையிலே ஒரு விழா நடைபெற்றது. அந்த விழாவிற்கு வரவேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் அழைப்பு கொடுத்திருக்கிறீர்கள். மகிழ்ச்சி, சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த விழாக்களுக்கு எப்படி வந்து போவது? இதுபற்றி கைத்தறித் துறை இயக்குநர் மரியாதைக்குரிய திரு. மலைச்சாமி அவர்களைக் கேட்டபோது, அவர்கள் இல்லை, அவருடைய பி.ஏ. தான் இருந்தார்கள். இது கோ-ஆப்டெக்ஸிலே கேட்க வேண்டிய கேள்வி என்று அவர்கள் சொன்னார்கள். கோ-ஆப்-டெக்ஸ் துறையைச் சேர்ந்த மரியாதைக்குரிய ரதிவினைஜாதேவி அவர்களுக்கு போன் செய்து கேட்டபோது அவருடைய பி.ஏ. இதற்குரிய செக்ஷன் இருக்கிறது, அந்த செக்ஷனுடன் தயவு செய்து பேசுங்கள் என்று சொன்னார். பேசினோம். பஸ் வசதி செய்யவில்லை என்று சொன்னார்கள். பிறகு என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்டபோது, வண்டி அனுப்புகிறோம் என்று சொன்னார்கள். 6–20 மணி வரையிலும் இருந்து பார்த்தேன். வண்டி வரவில்லை. பிறகு நாங்களாகப் புறப்பட்டு வந்தால் அதற்குள்ளாக விழா தொடங்கிவிட்டது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் வந்து விட்டார்கள். எங்களை யார் என்று தெரிந்துகொள்ளாமலேயே விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இப்படி என்றால் எதற்காக

அழைப்பு அனுப்புகிறீர்கள் ? இதுபற்றி எங்களுக்குத் தெரிந்து தான் ஆகவேண்டுமென்றால், நிகழ்ச்சி நடக்கிறது என்பதை உங்களுக்கு அறிவிக்கிறோம் என்று சொல்லி விடவேண்டியது தானே. வாருங்கள் என்று அழைப்பது, பிறகு உரிய ஏற்பாடு செய்யாமல் இருப்பது என்பது எந்த வகையில் நியாயம் என்று நான் கேட்க விரும்புகிறேன். எனவே இனியாவது நடைபெறுகின்ற இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையில் எங்களுக்கு அழைப்பு அனுப்பினால் முறையாகக் கூட்டிக்கொண்டு வருகின்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நகர்ப்புற வீட்டுவசதி. 1986—ஆம் ஆண்டில் ஜனவரி மாதத்தில் ஆளுநர் அவர்களின் உரையிலே நலிந்த பிரிவினருக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு 30 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படுவதாகச் சொல்லப்பட்டது. ஆளுநர் உரை என்பது அரசாங்கத்தினுடைய கொள்கை என்று தான் நான் கருதுகிறேன். நீங்களும் அதைத்தான் சொல்வீர்கள். அரசாங்கத்தின் கொள்கையைத்தான் ஆளுநர் உரையிலே சொல்கிறார் என்று நான் நினைக்கிறேன். ஆனால் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் ? 1986-87 ல் 2 இலட்சத்து மூவாயிரம் வீடுகளைக் கட்டுவதற்காகத் திட்டம் தீட்டியிருக்கிறீர்கள். ஆனால் அந்த 2 இலட்சத்து மூவாயிரம் வீடுகளை இன்னும் கட்டவில்லை. திட்டம் அறிவிக்கப்பட்டு ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுக்காலம் ஆகிவிட்டது. அதிலே சொல்லியிருப்பது என்னவென்றால் கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தில் மூலம் 40 ஆயிரம் வீடுகள் ; கிராமப்புறங்களிலே தற்போதுள்ள வீடுகளை புனரமைப்பு செய்கின்ற வகையில் 60 ஆயிரம் வீடுகள்——அதாவது 2 இலட்சம் வீடுகள் என்பதைப் பொறுத்தவரையில் அவ்வளவும் புதிதாகக் கட்டுவதில்லை, ஏற்கெனவே கட்டிய 60,000 வீடுகளை ரீமாடல் பண்ணுகிறார்கள். அதிலே ஆதித் திராவிடர்களுக்கு 3,000 என்று இப்படி 5, 6 இனங்களை கொடுத்து 2 இலட்சத்து 3 ஆயிரம் வீடுகளைக் கட்டப் போவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதிலே ஒவ்வொரு இடமாகக் குறிப்பிட்டு 40,000, 50,000 என்று கணக்குச் சொல்லுகிறீர்கள். ஆனால் இந்த 2 இலட்சத்து 3 ஆயிரம் வீடுகளே கட்டி முடிக்கப்படவில்லை. 30 இலட்சம் வீடுகளை எப்படி கட்டப்போகிறீர்கள். 1987 முடிவதற்குள் எத்தனை வீடுகளை கட்டப்போகிறீர்கள் என்ற விவரமும் இதில் இல்லை. ஆனால் எங்கெங்கே கடன் வாங்குவது, எந்த முறையில் கடன் வாங்குவது அதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து அனுமதி கிடைக்குமா என்று எதிர் பார்த்துக் கொண்டிருப்பது போன்ற இவைகளையெல்லாம் சொல்லியிருக்கிறீர்கள்.





இன்னொன்றும் கூட சொல்லியிருக்கிறீர்கள். வேடிக்கையான செய்தி.இந்திரா ஆவாஸ் யோஜனா திட்டமும் இந்த திட்டமும் இசைவாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்த திட்டத்தினுடைய பெயரே இந்தியில் இருக்கிறதே, இந்தி உங்களுக்கு பிடிக்காத மொழி ஆயிற்றே, இந்த திட்டம் மட்டும் எப்படி இசைவாக இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். மத்திய அரசு இந்த திட்டத்திற்கு தேவையான நிதி வசதிகளைச் செய்யுமா என்றும் உத்தரவுகள் பிறப்பிக்குமா என்றும் நம்பிக் கொண்டிருப்பதாக வேறு சொல்லியிருக்கிறீர்கள். எப்படி முடியும் ? இருக்கிற சூழ்நிலையில் 2 இலட்சம் வீடுகளே கட்ட முடியவில்லை. 30 இலட்சம் வீடுகளை எப்படி கட்டுவீர்கள்? ஆகவே, இந்த 30 இலட்சம் வீடுகளைக் கட்ட முடியவில்லை என்று சொல்லுங்கள். அல்லது அதில் இவ்வளவு தான் கட்ட முடிந்தது என்று சொல்லுங்கள் வரவேற்கிறோம்.

இன்னொன்று கூட சொல்லியிருக்கிறீர்கள். இந்த திட்டம் மிக நல்ல திட்டம். இதை அனைத்து மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்று கூட சொல்லுகிறீர்கள். இந்த திட்டத்தை செய்து முடித்து விட்டு, இந்த அளவுக்கு வெற்றிகரமாக நாங்கள் செய்திருக்கிறோம், அதனால், எல்லோரும் அதை பின்பற்றுங்கள் என்று சொன்னால், அது இந்த அரசுக்கும் மரியாதை, தமிழ்நாட்டு மக்களுக்கும் மரியாதை. அதை விட்டு விட்டு செய்ய முடியாத ஒன்றை, மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்று சொல்வது எந்த வகையில் நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கத்திலே வீடுகள் கட்டுவது பற்றிய விவரங்கள் எல்லாம் இதில் இருக்கின்றன. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஆரம்பத்திலேயிருந்து கட்டியதே 86 ஆயிரம் வீடுகள் தாம். இதிலே லட்சக் கணக்கில் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. 2 இலட்சம் வீடுகளே இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. 30லட்சம் வீடுகளை எங்கேயிருந்து கட்டப்போகிறீர்கள்?

அடுத்து நகர்ப்புற வளர்ச்சி. விருதுநகர் காமராசர் மாவட்டத்தினுடைய தலைநகரம் ஆகும். அந்த விருதுநகர், மாவட்டத் தலைநகரமாகி 2 வருஷம் ஆகிறது. மாவட்ட தலைநகரமாக இருப்பதினால் ப்ளோட்டிங் பாப்புலேஷன் என்று சொல்வார்களே. அந்த வகையில் வந்து போகிறவர்களே, அதிகமாக இருக்கிறார்கள். அது தவிர அங்கேயும் மக்கள் தொகை மிக அதிகமாக இருக்கிறது. அங்கே இருக்கிற பேருந்து நிலையம் மிகவும் நெரிசலாகவும் சீர்கேடாகவும் இருக்கிறது. அந்தப் பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று சொல்லி முறையாக நகராட்சி மன்றமும் முயற்சி எடுத்துக் கொண்டு

அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்திருக்கிறது. அதை சீர் படுத்தி நகராட்சியினுடைய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்; இன்னொரு பேருந்து நிலையத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல நகர்ப்புற வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் போது மாவட்ட தலைநகரங்களுக்கு அதிலும் புதியதாக பிரிந்த மாவட்ட தலைநகரங்களுக்கு முன் உரிமை கொடுத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது போன்று ஊர்களை, பெரும் தலைவர் காமராசர் பிறந்த ஊரை சிறப்பாக விளங்கச் செய்ய வேண்டியது உங்களுடைய கடமை அல்லவா? இந்த விருதுநகரை வளரச் செய்ய வேண்டும், அங்கிருக்கும் சாலைகளை நல்ல முறையில் நிர்வகிக்கச் செய்ய வேண்டும் நகராட்சிகளுக்கு புதிய கடைகளை கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி கடைசியாக ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

விருதுநகர் தொகுதியிலேயே பிறவிபட்டி என்ற ஊர் இருக்கிறது. அங்கே 18 கிராமங்கள் பூராவும் அரிசன மக்கள்தான் இருக்கிறார்கள். அந்த அரிசன மக்களுக்கு வீட்டு மனைகளை ஒதுக்கீடு செய்தார்கள். குடிசைகளை இடித்து விட்டுபேஸ்மெண்ட் போட்டுவிட்டு வாருங்கள் பணம் தருகிறோம் என்று கூட்டுறவுச் சங்கத்திலே சொல்லியிருக்கிறார்கள். இடித்து விட்டுப் போய் கேட்டால் பணம் கிடைக்கவில்லை. 2வருஷமாக இந்த நிலைமை இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் சொல்லியிருக்கிறோம். பார்த்து வாங்கித் தருகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் செய்யவில்லை. கூட்டுறவுச் சங்கத்திடம் கேட்டால் அங்கே பணம் இல்லை அங்கே இருப்பவர்கள் எல்லாம் பெரும் தலைவர் காமராசர் இருந்திருந்தால் இப்படியெல்லாம் கஷ்டப்படுவோமா என்று சொல்கிற நிலைமை இருக்கிறது அங்கே. அதை இந்த அரசு கவனிக்காமல் இருக்கிறது. அதையெல்லாம் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். பிறவிப்பட்டி என்ற ஊரிலே அந்த நிலைமை இருக்கிறது. குடிசைகளை இடித்து விட்டு பேஸ்மெண்ட் போட்டிருக்கிறார்கள். ஆனால் வீடுகள் கட்டப்படாமல் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதை குறித்துக் கொள்ள வேண்டும். அங்கே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகளைக் கட்டித்தரும்படி கட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)





(பிற்பகல் 1-40)

*மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப் பட்டிருக்கும் கைத்தறி நெசவுத் தொழில், வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சி மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை முன் வைக்க விரும்புகிறேன். தமிழ் நாட்டில் உணவுப் பஞ்சத்தைத் தீர்த்து, குழந்தைகளு டைய பசிப் பிணியையும் போக்கி, உணவுக்கும், உடைக்கும் அடுத்து மக்களுடைய அத்தியாவசியத் தேவையான வீட்டு வசதியை வழங்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர் களின் புனித ஆட்சி சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. முக்கியமான சமுதாயப் பிரச்சினையாக இருக் கிற வீட்டு வசதிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 30 இலட்சம் வீடுகளைக் கட்டுகிற உன்னதத் திட்டத்தை அறிவித்து மாண்பு மிகு புரட்சித் தலைவர் அவர்கள் சமுதாயத்தில் நலிவுற்ற மக்க ளுடைய தேவையை அரசு நிறைவேற்ற வேண்டுமென்ற கட மையை நமக்கு திட்டமாக வைத்து, அதை நிறைவேற்றுகிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிற வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களையும், வீட்டு வசதித் துறையையும் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சத்துணவு வழங்கிய போதும், ஏழை குழந்தைகளுக்குச் சீருடை வழங்க முற்பட்ட போதும், இவைகள் மிகுதியான செலவிற்கு ஆளாக்குகிற திட்டங் கள், எனவே இவைகளை நிறைவேற்ற முடியுமா என்ற ஐயப் பாட்டை எதிர்க் கட்சி வரிசையில் எழுப்பினார்கள். அதைப் போல வீடு கட்டுகிற திட்டத்திற்கும் எழுப்பப்படும் அவர்களின் ஐயங்களைப் போக்குகிற வகையிலும், அச்சத்தை நீக்குகிற வகையிலும் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களின் புனித ஆட்சியில் இந்த வீடு கட்டுகிற முயற்சி வெற்றி பெறும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, நினைத்ததை முடிக்கக் கூடிய புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தை முடிப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

வீட்டு வசதி வாரியம் எடுத்துக் கொண்டிருக்கிற நல்ல முயற்சி காரணமாக மட்டுமல்லாமல், ஏற்கனவே இருக்கிற வீட்டு வசதி சங்கங்களை வலுப்படுத்தி, அவற்றின் நிதியாதாரங்களை அதிகப் படுத்தி, கிராமக் கூட்டுறவுச் சங்கங்களை அதிகமாகப் பதிவு செய்து, அவற்றில் மக்களே பங்கு கொண்டு, கடன் தொகை அதிகமாக அதற்கு ஒதுக்கப்படுகிற காரணமாக கூடுதலாக வசதி களை ஏற்படுத்திக் கொடுக்க வாய்ப்பிருக்கிறது. அந்த வகை யில் வீட்டு வசதியை ஏற்படுத்துவதற்கு இருக்கிற சங்கங்கள் இன்றைக்கு தாலுகாவிற்கு ஒன்றாவது பதிவு செய்யப்பட வேண் டும். தற்போது சங்கங்கள் பதிவு செய்வதில் சில இடர்ப்பாடுகள் இருக்கின்றன. அந்த இடர்ப்பாடுகளை தவிர்த்து உடனடி யாக எங்கே வீட்டு வசதிச் சங்கங்களைக் கேட்டாலும் அதனைப்

பதிவு செய்து கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே
நேரத்தில் வீட்டு வசதி சங்கங்களுக்கு கூடுதலாக நிதியை கட
னாக வழங்குவதற்கு தகுந்த ஏற்பாடுகளையும் அரசு செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. உச்சி அவர்கள்
கூடலூரில் இருக்கிற தானேரி கிராமக் கூட்டுறவுச் சங்கம்
ஒன்று பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டு, நான்கு ஆண்டு
களாக அது பதிவு செய்யப் படாமல் பரிசீலனையில் இருப்பதாக
தெரிவிக்கிறார்கள். அதைப் போன்ற தாமதம் இல்லாமல் வீட்டு
வசதிச் சங்கங்களை ஏற்படுத்துவதற்கு, முயற்சி மேற்கொள்ள
வேண்டும். வீட்டு கட்டுமானப் பொருள்களை உற்பத்திச் செய்
கிற சங்கங்களை எங்கே ஏற்படுத்த விரும்பினாலும், கூட்டுறவுப்
பதிவாளர் மூலமாக அதைப் பதிவு செய்ய வேண்டுமென்ற நிலை
யிருப்பதால், அதிலே கால தாமதம் ஏற்படுகிறது, உதாரணத்
திற்கு சொல்ல வேண்டுமென்றால் 1983-ஆம் ஆண்டில் நம்
முடைய கைத்தறித் துறை இயக்குநர் அவர்கள் கோவை மாவட்ட
ஆட்சித் தலைவராக இருந்த போது எங்களுடைய பகுதியில் ஒரு
ஆதி திராவிடர் செங்கல் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு
அரசாங்கம் 'கிளஸ்டர் புரகிராமில்' ஆதி திராவிடர் நலத்
துறை மூலமாக உத்தரவை வழங்கியது. இன்று வரையில் அந்த
செங்கல் கூட்டுறவுச் சங்கம் நிறுவுவதற்கு, அதுவும் ஆதி திரா
விடர்களுக்காக அமைக்கப்பட்ட அந்தச் சங்கம் ஏற்படுத்து
வதற்கு, நிலம் ஆர்ஜிதம் செய்து அந்த முயற்சி வெற்றி பெற
முடியவில்லை. ஆகவே வீட்டு வசதிகளை ஏற்படுத்துவதற்கு
வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களும், வீட்டு கட்டுமானப்
பொருள்கள் உற்பத்திச் சங்கங்களும் விரிவு படுத்தப்பட வேண்
டும். அந்த வகையில் அதிக வேகத்தோடு இந்தச் சங்கங்களை
அமைப்பதற்கும், சங்கங்களின் பணிகளைத் தொடர்வதற்கும்,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையின் எல்லா
வீடு கட்டும் பணிகளையும் ஒருங்கிணைத்து செய்கிற முயற்சி
யில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோவை
நகரத்தின் வளர்ச்சி அங்கே இருக்கிற மக்களின் வீட்டு வசதித்
தேவையை பூர்த்தி செய்ய முடியாத அளவிற்கு அதிகமாக இருக்
கிறது. மக்கள் அவதிக்குள்ளாகிற நிலை இருக்கிறது. கோயம்
புத்தூர் நகரம், சென்னையைப் போல், வெகு விரைவிலே
மிகப் பெரிய மக்கள் தொகை கொண்ட நகரமாக வளர்ந்து
கொண்டு இருக்கிறது. தொழில் நகரமான இந்த கோவை நகரத்
தின், திட்டமிட்ட வளர்ச்சிக்காக, சென்னையில் இருப்பதைப்
போல், மெட்ரோபாலிட்டன் டெவலப்மெண்ட் அத்தாரிட்
டியை ஏற்படுத்த வேண்டும் என்று நான் பல முறை கோரிக்கை
யாக வைத்திருக்கிறேன். இதன் மூலம் திட்டமிட்ட வளர்ச்சியை
அந்தப் பகுதியிலே ஏற்படுத்துவதற்கு அது வாய்ப்பாக
அமையும் என்று சொல்லி, கோயம்புத்தூர் மெட்ரோபாலிட்டன்
டெவலப்மெண்ட் அத்தாரிட்டி என்பது அந்தப் பகுதியினுடைய
மிகச் சீரான வளர்ச்சிக்குத் தேவை என்பதை முதலிலே நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அதைப் போல் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு என்று
தனியாக நிலம் ஒதுக்கப்பட வேண்டும். தொழிற்சாலைகளில்,
தொழிலைத் துவங்க முன் வருபவர்கள், திட்டமிட்ட தொழில்
பகுதிகள் இல்லாத காரணத்தால், அந்த நிலத்தினுடைய விலை
காரணமாக, இந்தத் தொழில் முனைபவர்கள் நிலத்திற்கு டெட்
கேப்பிட்டலை அதிகமாகப் போட்டு விட்டு, தொழிலிலே
லாபத்தை அதிகமாக சம்பாதிக்க முடியாது. ஆகவே அந்த
வகையில் ஒரு பகுதியை, தொழில் பகுதியாக, நம்முடைய நகர
மேம்பாட்டுத் துறையிலே, நகர நிர்வாகத்திலே ஏற்பாடு செய்து
ஒரு பகுதியை தொழிற்சாலைகளுக்கான பகுதியாக, ஆயிரக்
கணக்கான ஏக்கர்கள் கொண்ட பகுதியாக, முழு அளவு
தன்னிறைவு பெற்ற, அடிப்படை வசதிகளைக் கொண்ட பகுதி
யாக ஆக்கித்தர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே
பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் இன்று கோவை நகரத்தில் இருக்கிற குடிசை
மாற்று வாரியத்திலே கட்டப்பட்ட வீடுகள் சில ஆண்டுகளுக்கு
முன்பு கட்டப்பட்ட வீடுகள் தான் இன்று இருக்கின்றன.
புதிதாக வீட்டு வசதி வாரியம் மூலமாக, குடிசை மாற்று
வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டுகிற பணி தாமதப்பட்டு
வருகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குடிசை
மாற்று வாரியத்தின் மூலம், சென்னையில் எடுக்கப்படுகிற
திட்டத்தைப் போல, கோவையிலும் புதிய குடிசை மாற்று
வாரியத் திட்டத்தின் மூலம் வீடுகள் கட்டுகிற பணியை விரைவு
படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கோவை மட்டுமல்லாமல், ஒரு இலட்சத்திற்கும் மேலே
மக்கள் தொகையைக் கொண்டிருக்கிற மேட்டுப்பாளையம் நகரத்
திலேயும் குடிசை மாற்று வாரியத்தினுடைய பணிகள் தொடர
வேண்டும் என்பது என்னுடைய மிகப் பெரிய ஆவலாகும். அதே
போல், திருப்பூரும், பொள்ளாச்சியும் வளர்ந்து வருகிற நகரங்
கள். இந்த நகரங்கள் வளர்ந்து வருகிறபோது, திட்டமிட்டு,
குடிசை மாற்று வாரியத்தினுடைய திட்டங்களை நிறைவேற்றி
னால், நிச்சயமாக வருங்காலத்திலே இந்த நகரங்களிலே ஏற்
படுகிற வீட்டுப் பிரச்சினையை, மற்ற நெரிசல்களைத் தவிர்க்க
முடியும். ஆகவே அந்த வகையிலே, இந்த 3 நகரங்களிலும்,
மக்களுடைய தேவைக்கேற்ப, குடிசை மாற்று வாரியத்தின் மூல
மும், வீட்டு வசதி வாரியத்தின் மூலமும் கூடுதலான வீடு
களைக் கட்டுவதற்கும் கோவையினுடைய நெரிசலைக் குறைப்
பதற்கும், கோவையில் மக்கள் தொகை கூடுகிற பிரச்சினையைத்
தவிர்ப்பதற்கும், அதையொட்டியிருக்கிற இந்த 3 நகரங்களிலும்
விரைவாக வீட்டு வசதித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்
என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தொழிலாளர்கள் நிறைந்திருக்கிற கோவை
மாவட்டத்தின் தொழில் பகுதியாக இருக்கிற பெரியநாய்க்கன்
பாளையம், காரமடை, சிங்காநல்லூர், பீளமேடு, போன்ற

பகுதிகளில் தொழிலாளர்களுக்கு என்று குடியிருப்புகளை மக்களுக்குத் தகுந்த முறையில், தவணை முறையில், எளிய முறையில் கட்டுகிற திட்டத்தை நிறைவேற்ற வேண்டும், கட்டிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கான வாடகைக் குடியிருப்புகள் இன்று கோவை நகரத்திலே உள்ள ஊழியர்களுடைய எண்ணிக்கைக்கு எந்த விதத்திலும் தொடர்பு இல்லாமல், மிகக் குறைந்த அளவிலேயே இருக்கின்றன. அடிக்கடி மாறுதலாகி வருகிற அதிகாரிகள், நம்மை எல்லாம் பார்த்து, அவுட் ஆப் டர்ன் பேசிசிலே வீடுகளை வாங்கித் தர வேண்டும் என்று வற்புறுத்துகிற அளவிற்கு, அங்கேயிருக்கிற தேவைகளுக்கு ஏற்ப அவர்களுக்கு வீடுகள் கிடைக்காத நிலைமை இருக்கிறது. ஆகவே இந்தக் குறையைத் தவிர்க்கிற வகையில், வீட்டு வசதி வாரியம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறித் துறை மீது ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். இன்று 120 இலட்சம் தொழிலாளர்கள்,..13இலட்சம் பேர்கள் ஆர்கனைஸ்டு செக்டார் என்று சொல்கிற மில்களிலும், 32 இலட்சம் பேர்கள் பவர் லூம்களிலும், 75 இலட்சம் தொழிலாளர்கள் கைத்தறித் தொழிலிலும்..இருக்கிற வகையில் மிகப் பெரிய தொழிலாளர்களை உள்ளடக்கியிருக்கிற வகையில் இந்த துறையிலே ஈடுபட்டு இருக்கிறார்கள். நம்முடைய இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் மட்டுமல்லாமல், நம்முடைய பொருளாதாரத்தை சீராக்குகிற மிகப் பெரிய தொழிலாக, டெக்ஸ்டைல் நூல் சம்பந்தமாக உள்ள இந்தத் தொழிலை மத்திய அரசாங்கம் தன்னுடைய கொள்கையின் மூலம் கட்டுப்படுத்தி வருகிறது. 1978-லும், 1981-லும், 1985-லும், ஆக மூன்று முறை மத்திய அரசாங்கத்தினுடைய டெக்ஸ்டைல் பாலிசி, அதனுடைய கொள்கை மாறியிருக்கிறது. 1978, 1981, மற்றும் 1985 ஆம் ஆண்டுகளில், ஒவ்வொரு தடவையும் மத்திய அரசாங்கத்தின் துணி நூல் கொள்கை, புதிதாக அறிவிக்கப்படுகிறபோதெல்லாம், ஏற்கனவே நடை முறையில் இருக்கிற கொள்கை நாட்டுக்கு, அல்லது டெக்ஸ்டைல்களுடைய வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கவில்லை என்றும், அல்லது நாம் எதிர்பார்த்த நல்ல ஆப்ஜக்ட்ஸ்சை, வெற்றிகளை அதன் மூலம் பெற முடியவில்லை என்ற கருத்தை அவர்கள் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். ஆகவே தொடர்ந்து 100-க்கும் மேற்பட்ட நூற்பாலைகள் இந்தியா முழுவதும் இன்று நலிவு அடைந்திருக்கின்றன, என்று சொல்கிறார்கள்.இதற்குக் காரணம் மத்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிற இந்த நூல் கொள்கை, நம்முடைய தேவைக்கு ஏற்ப, நம்முடைய பொருளாதாரக் கொள்கையைச் சீராக்குகிற அளவில், நலிந்த நூற்பாலைகள் நல்ல வலுபெற்று வளர்ச்சியடைகிற வகையில் அமையவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



(பிற்பகல் 1-50)

ஆகவே, அந்த வகையிலே புதிய கொள்கையின் அடிப்படையில் நவீனமாக்கி இயந்திரங்களை புதுப்பித்து இன்று நலிந்த நிலையில் இருக்கின்ற ஆலைகளை, மூடப்படவேண்டிய அபாயத்தில் இருக்கின்ற இந்த ஆலைகளை மூடப்பட இருக்கிற அபாயத்தைத் தடுக்கின்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கையில் இருக்கிற குறைபாடுகளை தமிழக அரசின் மூலம் எடுத்துச் சொல்லி, தமிழகத்தில் இன்று நலிந்திருக்கிற ஆலைகள் திறக்கப்படுகின்ற அதே நேரத்தில் வருங்காலத்திலே ஆலைகள் நலிவுற்ற நிலைக்குப் போய்விடாமல், மூடப்படுகின்ற அபாயத்தைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கோவையிலே மூடப்பட்ட 6 நூற்பாலைகளில், 2 நூற்பாலைகள் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசின் முயற்சியின் காரணமாக நாம் திறந்து இருக்கிறோம். அதில் ஒன்று பவானி நூற்பாலை ; இன்னொன்று ஸ்ரீஹரி நூற்பாலை. பவானி நூற்பாலையைப் பொறுத்த அளவிலே அது அரசாங்கத்தின் நிவாரண அடிப்படையில் ஓர் ஆண்டுக்கு திறக்கப்பட்டிருக்கிறது, திறக்கப்பட்ட அந்த நூற்பாலைக்கு அரசாங்கம் அறிவித்தது மின் வெட்டிலிருந்து சலுகை ; அதே போன்று விற்பனை வரிச் சலுகை. இந்த இரண்டு சலுகையும், அந்த பவானி நூற்பாலைக்கு, அது திறக்கப்பட்ட நாளிலிருந்து கொடுக்கப்படவில்லை. ஆனால், இப்போது இந்தச் சலுகைகள் கிடைக்காத காரணத்தினால் மீண்டும் அந்த ஆலை மூடப்பட வேண்டிய அபாயத்திலே இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, திறக்கப்பட்ட ஆலை, அரசாங்கம் கொடுக்க வேண்டிய, கொடுக்க ஒப்புக்கொண்ட இரண்டு சலுகையையும்,—மின்சார மும், விற்பனை வரி விலக்கும்—உடனடியாக வழங்கி, இன்னும் சில நாட்களிலே மூடப்பட வேண்டிய அபாயத்திலே இருக்கும் அந்த நூற்பாலை மூடப்படுவதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன், இந்தியாவிலே 103 ஆலைகளை தேசியமயமாக்கி 22 ஆலைகளை தன் நிர்வாகத்தின் கீழ் கட்டுப்பாட்டிலே வைத்து நடத்திக்கொண்டிருக்கிறது. இதனால் நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷனுக்கு 137.36 கோடி ரூபாய் 1983-84ல் மட்டும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். 103 நூற்பாலைகளை ஏற்கெனவே நிர்வகித்து 137 கோடி ரூபாய் நஷ்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கிற நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் கோவையிலே மூடியிருக்கிற இந்த 6 நூற்பாலைகளையும் எடுத்து நடத்துவதன் மூலம் கூடுதலான நஷ்டமோ அல்லது பெரிய பொருளாதார சரிவோ ஏற்பட்டு விடாது. ஆகவே,

நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் 103 ஆலைகளோடு
இருக்கிற இந்த 6 ஆலைகளையும் எடுத்து நடத்துவதிலே எந்த
வொரு இடர்பாடும் இருக்க முடியாது. ஆகவே, அவைகளையும்
நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷனே ஏற்று நடத்த வேண்
டும். நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் ஏற்று நடத்து
வதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதை தமிழக அரசு
தொடர்ந்து வற்புறுத்த வேண்டும் என்பதையும் சொல்லிக்
கொண்டு அப்படி நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன்
எடுத்து நடத்தவில்லையென்றாலும் கூட மூடிய ஆலைகளை
திறப்பதற்கான மாற்று முறைகளுக்கானமுயற்சியை அரசு எடுக்க
வேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. கே. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்
கொண்டு வந்துள்ள கைத்தறித் துறை மானியத்தையும், வீட்டு
வசதி மானியத்தையும் வரவேற்று என்னுடைய ஓரிரு கருத்துக்
களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்தத் தலைவர் அவர்களுக்கு நன்றி
கூறுகிறேன். தமிழகத்திலே நெசவாளர்களுக்கு, அவர்களுடைய
துயரைப் போக்குகின்ற வகையில் தமிழகத்திலே உற்பத்திச்
செய்யப்பட்ட கைத்தறித் துணிகளுடைய தேக்கத்தைப் போக்கு
கின்ற வகையில், பேரறிஞர் அண்ணா அவர்கள், கூட்டங்களில்
மாலைக்கு பதிலாக கைத்தறி துண்டுகளைப் போடுங்கள்;
அணியுங்கள் என்று சொல்லி அன்றைக்கே கைத்தறிக்கு ஒரு நல்ல
சூழ்நிலையை உருவாக்கித் தந்தார்கள். அந்த வகையிலேதான்
இன்றைக்கு தமிழகத்தின் முதல்வர், மாண்புமிகு இதய தெய்வம்,
டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் 1974-லே ஏற்பட்ட
கைத்தறியாளர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தையும்,
உணவிற்கே கஷ்டப்படுகின்ற நேரத்தில் நாடெங்கும் கஞ்சித்
தொட்டிகளை உருவாக்கி அன்று நெசவாளர்களுடைய துயரைப்
போக்கியவர்தான் இன்றைக்கு முதல்வராக இருந்து கொண்டு,
இந்தத் துறைக்கு தனியாக ஒரு செயலரையும், இந்தத் துறைக்கு
தனியாக ஒரு அமைச்சரையும் ஏற்படுத்தி, இன்றைக்கு
நெசவாளர்களுடைய பிரச்சினைகளைப் பெருமளவுக்குத்
தீர்த்திருக்கிறார்கள், கைத்தறி நெசவாளர்களிடம் உற்பத்தி
யாகின்ற பொருள்கள் தேக்கமடைவதால் ஆண்டுக்காண்டு பல
நெருக்கடிகள் ஏற்படுகின்றன. கைத்தறித் துணிகள் தேங்கி
விடுகின்றன. அப்படிப்பட்ட நெருக்கடியை ஆண்டுக்காண்டு
நாம் சந்தித்து வருகிறோம். இதை நிரந்தரமாகப் போக்கு
வதற்கு நல்ல வல்லுநர்களை கொண்ட ஒரு குழுவை அமைத்து,
எந்த எந்த முறையில் இரகங்களை உற்பத்திச் செய்ய வேண்டும்;
எந்தெந்த முறையிலே மக்கள் கேட்கின்ற அளவிற்கு நாம்
துணிகளை உற்பத்திச் செய்ய வேண்டுமென்ற ஒரு நல்ல
நிரந்தரமான நிலைமையை உருவாக்கினால்தான், நெசவாளர்
களுடைய பிரச்சினைகளை நாம் தீர்க்க முடியும்,





இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற நெசவாளர்களில்
50 சதவீதத்தினர் தான் கூட்டுறவில் வந்திருக்கிறார்கள். மீதம்
இருக்கிற 50 சதவீதத்தினரை நாம் கூட்டுறவில் கட்டாயம்
கொண்டு வரவேண்டும். முதலாளிகளிடத்திலே சிக்கிக் கொண்டு
இன்றைக்கு குறைந்தபட்ச கூலியை நாம் நிர்ணயம் செய்து இருந்
தாலும் கூட அப்படி நிர்ணயம் செய்யப்படுகிற அந்த கூலியை
3 ஆண்டுக்கு ஒரு முறை தான் மீண்டும் கேட்கவேண்டும் என்ற
ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்கினால்
தான் இங்கே வாங்குகிறவர்களுக்கும் நாம் நல்ல முறையில்
அந்த கைத்தறியை ஏற்றுக் கொள்ளுகிற ஒரு நிலைமையை
உருவாக்க முடியும்.

இன்றைக்கு நெசவாளர் குடும்பங்கள் அதிகமாக வாழ்கின்ற
பகுதியிலே நெசவாளர்களுடைய குழந்தைகளுக்கு என தனியாக
குழந்தைகள் காப்பகங்கள் அமைக்கப்பட வேண்டும்.

அதோடு மட்டும் அல்லாமல் இன்றைக்கு நெசவுத் தொழில்
புரிபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு வாத நோய்,
மார்பு வலி, காச நோய், போன்றவைகள் இயற்கையாக வரு
கின்றன. அவைகளை போக்குவதற்காக நாம் அந்த அந்த
பகுதிகளிலேயே மருத்துவ மனைகளை உருவாக்க வேண்டும்.
அந்த வியாதிகள் ஏற்படுகின்ற நிலைமையை நாம் ஆரம்பத்தி
லேயே தடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தர
வேண்டும்.

அதோடு மட்டும் அல்லாமல் இன்றைக்கு நெசவாளர்
களுடைய பிள்ளைகளுக்கென தனி சலுகையோடு அது மருத்துவக்
கல்லூரியாக இருந்தாலும் சரி, பொறியியல் கல்லூரியாக இருந்
தாலும் சரி அல்லது கால்நடை துறையாக இருந்தாலும் சரி,
இவைகளில் சேர்ப்பதற்கு ஒரு சதவீத இடங்களை ஒதுக்கி அந்த
பிள்ளைகள் படிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தர
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு உற்பத்தி ஆகின்ற பட்டாக இருந்தாலும் சரி
அல்லது நூலாக இருந்தாலும் சரி, உற்பத்தி ஆகின்ற ரகங்களை
நாம் துரிதமாக விற்பனை செய்ய வேண்டும் என்ற நிலைமை
களை எல்லாம் பரிசீலிக்கும் நேரத்தில் இன்றைக்கு நாம் தள்ளு
படி மானியம் கொடுத்தால்தான் அந்த துணிகளை அப்படிப்
பட்ட விழாக்களில் விற்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கிக்
கொண்டு வருகிறோம். அந்த தள்ளுபடி மானியம் கூட
இன்றைக்கு குறைக்கப்படுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது.
குறைந்தது வருடத்திற்கு 60 தினங்கள் அந்த தள்ளுபடி
மானியத்தை வழங்குகின்ற ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கி
ஆக வேண்டும்.

அதோடு மட்டும் அல்லாமல், கைத்தறித் துறைக்கு என்று ஒரு வாரியத்தை உருவாக்குகிறோம் என்று சென்ற ஆண்டு நாம் அறிவித்தோம். அந்த வாரியத்தை இந்த ஆண்டாவது அறிவித்து அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறித் துறையில் ஈடுபட்டுள்ள அந்த கூட்டுறவு சங்க பணியாளர்களாக இருந்தாலும் தனியாரிடத்தில் பணி செய் கின்றவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு விடு கட்டிக் கொடுப் பதற்கு பல்வேறு நிலையில் நாம் வாரியங்களை அமைத்து இருக் கிறோம். ஆசிரியர் வீட்டுவசதி வாரியம், கிராமத்தில் இருக் கின்ற மக்களுக்கு வீட்டு வசதி வாரியம் என்று எல்லாம் அமைத்து இருக்கிறோம். நெசவாளர்களுக்கு ஒரு வீட்டு வசதி வாரியத்தை நாம் உருவாக்கியாக வேண்டும்.

அதோடு மட்டும் அல்லாமல் இன்றைக்கு காஞ்சிமா நகரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நீண்ட நாள் விருப்பத்தோடு ஒரு சரிகை தொழிற்சாலை அங்கே நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. தமிழகத்திலே இருக்கின்ற பட்டு நெசவுக்கான சரிகையை சூரத்திலிருந்துதான் நாம் எதிர்பார்க்கிறோம். எதிர் காலத்தில் அப்படிப்பபட்ட நிலைமைகள் மாறி தமிழகத்தினுடைய தேவையை தமிழகத்திலேயே நாம் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்ற உணர்வோடு தான் ஓரிக்கையிலே அந்த சரிகை ஆலையை அன்றைக்கு நிறுவினோம். ஆனால் அன்றைக்கு எந்த நோக்கத்திற்காக அந்த ஆலை நிறுவப் பட்டதோ அந்தப் பணி அங்கே நடைபெறவில்லை. நாம் வெள்ளி இழைகளை சூரத்திலிருந்து பெற்று இங்கே தங்க முலாம் பூசுகின்ற வேலையை தான் அந்த சரிகை ஆலையிலே செய் கிறோம். அங்கேயே வெள்ளி இழையையும் இழைக்க வேண்டும், அங்கேயே தங்க முலாமும் நாம் பூசவேண்டும். அந்த அளவுக்கு அதை செய்து விட்டு வேறு இடங்களிலே ஆலையை துவக்குவதை நான் வரவேற்கிறேன்.

இன்றைக்கு நெசவாளர்களுக்காக நாம் பாதுகாப்பு இன் சூரன்ஸ் சலுகைகள் எல்லாம் செய்து இருக்கிறோம். இதை மேலும் சுராராக செய்வதற்கு நாம் நல்ல முறையில் அதற்குண் டான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இன்றைக்கு டிசைன் களை உருவாக்க, நெசவாளர்களுக்கு அவ்வப்போது பயிற்சி கொடுக்க நெசவாளர்கள் பகுதியிலேயே அந்த பயிற்சி கூடங் களை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





இன்றைக்கு நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் நடத்து கின்ற நேரத்தில் கடன்களை மைய வங்கியிலிருந்து பெறுகிறோம். அப்படி பெறுகின்ற அந்த கடனுக்கு வட்டி கொடுக்கிறோம்.

(பிற்பகல் 2-00)

ஆனால் எங்களிடத்திலிருந்து பெறப்படுகின்ற துணிகளுக்கு நம்முடைய தலைமைச் சங்கம் பெற்ற ஒரு ஆண்டு காலம், 6 மாதம் காலம் கழித்துத்தான் அதற்கான பணத்தை கொடுக்கிறார்கள். அப்படி கொடுக்கின்ற நேரத்தில் அதற்கு வட்டியை கொடுப்ப தில்லை. ஆனால் நாங்கள் வட்டியை கொடுக்கின்றோம். கச்சா பொருள்களை நாங்கள் வாங்குகின்ற நேரத்தில் அந்த கச்சா பொருள்களுக்கு 45 நாட்களுக்கு வட்டியைக் கொடுக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப் பெறுகிறது.

திரு. சே. பாலாஜி : தலைவர் அவர்களே, பெறுகின்ற அந்த துணிகளுக்கு பணத்தை உடனடியாக 45 தினங்களிலே கொடுக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இல்லை யென்று சொன்னால் அங்கே நாங்கள் கொடுக்கின்ற வட்டியை தலைமைச் சங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்கினால் நாம் நெசவாளர்களுக்கு மேலும் பல நன்மைகளை அளிக்கலாம் என்பதை இந்த நேரத் திலே நான் எடுத்துச் சொல்ல விழைகிறேன். இன்றைக்கு வீட்டு வசதிகள், நகர்ப்புறமானாலும் சரி, கிராமப்புறமானாலும் சரி 30 இலட்சம் வீடுகளைக் கட்ட வேண்டும் என்று மாண்புமிகு இதயத் தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் கூறி யிருக்கிறார்கள். அந்த வகையிலே தான் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் கிராம வீட்டு வசதி சங்கத்தின் சார்பாக 3 இலட்சம் வீடுகள் கட்டுகின்ற நேரத்தில் 7 கோடி ரூபாய்களை அந்த ஏழை விவசாய பெருங்குடி மக்கள் தரமுடியாத ஒரு சூழ் நிலை ஏற்பட்டு, தமிழகத்திலே வீடுகள் கட்டுவதற்கு கடன் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை சென்ற ஆண்டு இருந்தது. நம்முடைய இதயத் தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அந்த 7 கோடி ரூபாயைக் கொடுத்து தமிழகத்திலே வீடு கட்டுகின்ற ஒரு நல்ல பணியை தொடர்ந்து செய்கிறார்கள். அவர்களுக்கு நான் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு நகர்ப் புறத்திலே இருக்கின்ற அந்த வீட்டு வசதி சங்கங்கள் எல்.ஐ.சி. யிலிருந்துதான் கடனைப் பெற்று கிட்டத்தட்ட 16½ [illegible] வட்டியிலே நாம் கொடுக்கின்றோம். 80,000 ரூபாய் நாம் கொடுக் கிறோம் என்று சொன்னால் வட்டியோடு அந்த 15 ஆண்டு

களிலே திருப்பிச் செலுத்துகின்ற நேரத்தில் கிட்டத்தட்ட
1,91,000 ரூபாய் ஆகின்றது. ஆகவே நாம் அரசின் மூலமாக
15 கோடி ரூபாயை கொடுத்து, அரசு கொடுக்கின்ற அந்த
வட்டியை 9 சதவீதமாக கொடுத்து ஆக இரண்டையும் சேர்த்து
12 சதவீதத்திலே அந்த ஏழை எளிய மக்களுக்கு நாம் வட்டிக்கு
கொடுப்போமானால் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள்
30 இலட்சம் வீடு கட்டுகின்ற அந்த திட்டம் நிறைவேறுவ
தோடு மட்டுமல்லாமல், நாம் குறைந்த வட்டியை அந்த ஏழை
எளிய மக்களுக்கு உருவாக்கித் தருகிறோம் என்பதை இந்த நேரத்
திலே நான் எடுத்துக் கூறுகின்றேன். அதோடு இன்றைக்கு
லோக்கல் பிளானிங் அத்தாரிட்டி என்கின்ற அந்த நகர திட்ட
அமைப்பு குழுவில் மாவட்டத்திற்கு ஒரு சட்டமன்ற உறுப்பின
ரைப் போட்டு செயல்பட வேண்டும் என்று சென்ற ஆண்டே
முடிவுசெய்தார்கள். அதற்கு பல்வேறு மாவட்டங்களில் சட்ட
மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் இன்று
வரை அது போடப்படவில்லை. உடனடியாக அதை செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு தறிகளை
நவீனப்படுத்துவதற்கு அரசு 3-லே 2 பங்கை கடனாகவும், 3-லே
ஒரு பங்கை மானியமாகவும் கொடுக்கிறார்கள். தேவைப்படுகின்ற
அந்த 10,000-க்கு 50 சதவீதம் மானியமாக கொடுக்க வேண்டு
மென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு இந்த மானியக்
கோரிக்கைகளை வரவேற்று வாய்ப்பு அளித்த பேரவைத்
தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

*திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவர் அவர்களே,
கைத்தறி, வீட்டுவசதி மானிய கோரிக்கையின் மீது ஒரு சில
கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். இன்றைக்கு மத்திய
அரசு பின்பற்றும் தவறான ஏற்றுமதிக் கொள்கைகளின் காரண
மாக பஞ்சு ஏற்றுமதி பெருகியுள்ளது. தற்போது உற்பத்தியாவது
இங்குள்ள பஞ்சாலைகளுக்கு போதுமானதாக இல்லை. அப்படி
இருக்கும்போது பஞ்சு ஏற்றுமதி செய்வதால் இங்குள்ள பஞ்சாலை
களை எதிர்காலத்திலே மூடக்கூடிய அபாயம் இருக்கிறது.
மத்திய அரசு கொள்கை இன்றைக்கு ஏற்றுமதியை பிரதான
மாகக் கொண்டு இருக்கிறதே தவிர நமது தமிழகத்திலும்
இருக்கக்கூடிய பஞ்சாலைகளுக்குத் தேவையான நூல்களை
யும், பஞ்சுகளையும் கொடுப்பதற்கான கொள்கையாக இல்லை.
எனவே, தற்போது பஞ்சை அதிகமாக ஏற்றுமதி செய்வதாலும்
போதுமான பருத்தி உற்பத்தி இல்லாததாலும் பஞ்சாலைகளில்
பஞ்சு இன்றி தொழிலாளர்கள் வேலையை இன்றைக்கு இழந்து
வருகிறார்கள். இது நீடித்தால் தமிழ்நாட்டில் பல பஞ்சாலை
கள் மூடப்படுகின்ற அபாயம் இருக்கிறது. ஆயிரக்கணக்கான
தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்படும். இதை அரசு
உணர்ந்து தடுப்பு நடவடிக்கையை எடுக்க வேண்டும்.





அதுபோல, வீட்டு வசதி வாரியம் என்று சொல்லும்போது, திருப்பூர் பனியன் தொழிலாளர்களுக்கு குறைந்த வாடகையுள்ள குடியிருப்பு காலனிகளைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திருப்பூர் அண்ணா காலனியிலுள்ள எஸ். ஐ. ஜே. எஸ். குடியிருப்பு காலனி வீடுகளில் குடியிருக்கும் தொழிலாளர்களுக்குத் தவணை முறையில் பணம் செலுத்துகின்ற முறையில் சொந்தமாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எஸ். ஐ. ஜே. எஸ். காலனி மாதிரி அண்ணா காலனியில் வீடுகள் யாரும் பயன்படுத்தாமல் பாழடைந்து கிடக்கிறது. அதை சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி பி. ராமசாமி கேட்டு வருகிறார். அவருக்கு அதை ஒதுக்கித் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, மாநில அரசால் 30 இலட்சம் வீடுகள் கட்டுவதாக அறிவிக்கப்பட்டது. ஓராண்டுக்கு 10 இலட்சம் வீடுகள் என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்றைக்கு 10 இலட்சம் வீடுகள் கட்டுவதில் அரசு தோல்வி கண்டிருக்கிறது என்று சொல்லமுடியும். 10 இலட்சம் வீடுகள் கட்டுவதற்கான அடிப்படைத் திட்டம் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

அதுபோல, அரசு புறம்போக்கு இடங்களில் ஏழைகள் தாங்களே வீடு அமைத்துக் கொள்ள உதவுகிற முறையில் காலதாமதம் இல்லாமல் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு எளிய முறையை உருவாக்க வேண்டும். காரணம், இன்றைக்கு வீட்டுமனைப்பட்டா இருந்தால்தான் அரசு வீடுகளுக்கு கடன் கொடுக்கும் அந்தச் சலுகை கிடைக்கிறது. அதற்கு துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், தமிழ்நாட்டில் சொந்த வீடற்றவர்கள் எத்தனை பேர், என்பதை அறிந்து அவர்களுக்கு சொந்த வீட்டை உருவாக்கித் தர அரசு சிந்தித்துபொருத்தமான திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது போல், தமிழ்நாட்டில் தற்போது வீட்டு வாடகை அதிகமாக இருப்பதால் குறைந்த வருமானம் உள்ள தொழிலாளர்களுக்கு அரசு வாடகை குடியிருப்பு காலனிகளை கட்டித் தர ஒரு '' மாஸ்டர் பிளான் '' உருவாக்க வேண்டும். வீடற்ற தமிழ் மக்களுக்கு ஏற்ற காலவரம்பிற்குள் தமிழ்நாட்டில் வீடு கட்டித் தரப்படும் என்று அரசு உறுதி அளிக்க வேண்டும்,

அடுத்து, வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுகிறேன். இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, கோட்டூர், தலைஞாயிறு ஒன்றியப் பகுதிகளில் பணியாற்றக்கூடிய, ஊராட்சி ஒன்றியத்தில்

பணியாற்றக்கூடிய அதிகாரிகள், அலுவலர்கள், மருத்துவ இலாகா
வில் பணியாற்றக்கூடிய மருத்துவர்கள், மின்சாரத் துறை,
பொதுப்பணித்துறை ஆகியவற்றில் பணியாற்றக் கூடியவர்களுக்கு
வீடு இல்லாமல், அதற்காக பல மைல் தூரம் அவர்கள் வீடு தேடிப்
போகக்கூடிய அவல நிலை இருக்கிறது. ஆகவே, அதைப்போக்கு
கின்ற வகையில் அங்கேயே தங்கி வேலை செய்யக்கூடிய வகையில்
திருத்துறைப்பூண்டியில் 100 வீடுகள் வீட்டுவசதி வாரியத்தின்
மூலமாகக் கட்டி, குறைந்த வாடகைக்குக் கொடுக்க வேண்டும்
என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

1987-88-ஆம் ஆண்டில், பட்டுக்கோட்டையில் வீட்டு வசதி
வாரியத்தின் மூலமாக வீடு கட்ட முதலமைச்சர் அவர்கள் அடிக்கல்
நாட்டியிருக்கிறார்கள். அந்த வேலையை இந்த ஆண்டே
தொடங்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நகர்ப்புற வளர்ச்சி—திருப்பூர் நகர வளர்ச்சிக்காக பெரிதும்
உதவுகின்ற வகையில் ஒரு விளையாட்டு அரங்கம் ஒன்று கட்டிட
அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். திருப்பூர் நகர
வளர்ச்சிக்கு தடையாக உள்ள, அங்கீகரிக்கப்படாமல் உள்ள 56
மனைப் பிரிவுகளை உடனடியாக அங்கீகரிக்க அமைச்சர் அவர்கள்
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு கோடிக்கணக்கான கைத்தறித்
துணிகள் தேங்கி இருப்பதாக பல்வேறு துறைகள் மூலமாக அறி
விக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்களும் நேற்றையதினம்
தேங்கியுள்ளது பற்றி அறிவித்தார்கள். இன்றைக்கு 100-க்கு 25
சதவீதம், 15 சதவீதம் என்று தள்ளுபடி செய்கிறீர்கள்—
பொங்கல், தீபாவளி, வருஷப் பிறப்பிற்கென்று. தேங்கியுள்ள
துணிகள் அத்தனையும் விற்பனையாகிற வகையில் வருஷம்
முழுவதும் ஏழை எளிய மக்கள் வாங்குவதற்கு தள்ளுபடி
முறையை தொடர்ந்து கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதுபோல், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் தறிகளையும்
கூட்டுறவின் கீழ் கொண்டுவர, காலவரம்பு நிர்ணயித்து, நிறை
வேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டில்
தற்போது மூடப்பட்டுள்ள நலிந்த ஆலைகளை மாநில அரசே
எடுத்து நடத்தலாம் என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது.
அந்த அடிப்படையில் இன்றைக்கு மூடிய ஆலைகள் அனைத்தை
யும் மாநில அரசு எடுத்து, அதனால் பாதிக்கப்பட்ட இலட்சக்
கணக்கான தொழிலாளர்களுக்கு உடனடியாக வேலை கிடைப்ப
தற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.



அனைத்து மூடப்பட்ட ஆலைகளையும் எடுப்பதற்கு மாநில
அரசு சட்டம் இயற்றி, இந்த சட்டமன்றத்திலேயே ஒரு சட்டம்
கொண்டு வரவேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.
இறுதியாக, இன்றைக்கு வீடு கட்டுவதற்கு 6,000 ரூபாய் கடன்
வழங்கப்படுகிறது. அதில் ரூபாய் 1,500 வீட்டுக்கு சம்பந்தப்
பட்டவர் பங்கு. மீதி ரூபாய் 4,500ஐ மூன்று தடவையாக
அரசு கொடுக்கிறது. இப்படிக் கொடுக்கப்பட்டு, கட்டப்பட்ட
ஆயிரக்கணக்கான வீடுகள் இன்றைக்கு பாதியிலேயே நின்று
கொண்டிருக்கின்றன. அந்தத்தொகை போதாது. இன்றைக்கு
பல்வேறு பொருட்கள் விலை ஏறிவிட்டதால் அதை 10 ஆயிரம்
ரூபாய் ஆக்கி, நிறுத்தப்பட்ட வீடுகள் முழுமையும் கட்ட
அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு
அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

(பிற்பகல் 2-10)

* திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவையின் தலை
வர் அவர்களே, இன்றைய தினம் நடைபெறுகின்ற, குடிசை
மாற்று வாரியம், கைத்தறித் துறை, வீட்டு வசதி வாரியம் போன்ற
துறைகளுக்கான கோரிக்கைகளையொட்டி நான் சார்ந்திருக்
கிற காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய சார்பாக என்னுடைய
கருத்துக்களைச் சொல்லலாம் என்று எண்ணுகிறேன்.

விண்ணிலே பறக்கிற பறவைகளும், மண்ணில் ஊர்ந்து செல்
லுகிற ஜீவராசிகளும்கூட தம்முடைய இருக்கையைச் செம்மையாக
சொந்தமாகவைத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகின்றன.
அப்படி எண்ணிக் கொண்டிருக்கிற நேரத்தில் அதை மாற்றி
20 ஆம் நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்லுகிற இந்தியப் பேர
ரசினுடைய எழுச்சி நாயகன் எங்களுடைய இதய வேந்தன்
அருமைத் தலைவர் ராஜீவ் காந்தியினுடைய எழுச்சிச் சிந்தனை
யையொட்டி இந்தியா முழுவதும் இருக்கிற மாநிலங்களில் எல்
லாம் ஏழை மக்களுக்கு மிக அழகான வீடுகளைக் கட்ட வேண்டும்
என்று ஆர்ப்பரித்து அதன் அடிப்படையில் நம் தமிழக அரசினு
டைய குடிசைமாற்று வாரியத் திட்டத்தின் மூலமாக அதன்
தலைவர் என்னுடைய திருவொற்றியூர் தொகுதியில் ஒரு அழகான
திட்டத்தைத் தந்திருக்கிறார்கள்.

அந்தத் திட்டத்தைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால்—
விரைவுபடுத்தும் திட்டத்தின் மூலமாக ரூ. 62.23 லட்சமும், பெரு
மளவுக்கு வீடுகட்டும் திட்டம் என்ற அடிப்படையில் ரூ. 47
லட்சமும், பெருமளவில் வீடுகட்டும் திட்டத்திற்குக் கடன் வழங்
கும் வகையில் ரூ. 52 லட்சமும், ஆக மொத்தம் ரூ. 165 லட்சம்
வரை வாரி வழங்கி இருக்கிற தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்
தலைவர் அவர்களை நான் நெஞ்சாரப் பாராட்டக் கடமைப்

பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் 60 ஆண்டுகளாக 30 நகரங்களில் நல்ல சாலைகள் இல்லை. அங்கே சாதியாக இருந்த சாலைகளையெல்லாம் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக இன்றைக்குச் செம்மைப்படுத்தியிருக்கிறார்கள். இதற்காகவும் திருவொற்றியூர் பகுதியில் வாழ்கிற மக்கள் குடிசை மாற்றுத் தலைவரை நிச்சயமாகப் பாராட்டுகிறார்கள். மனம் திறந்த நிலையில் அவருடைய பணியைப் பாராட்டுகிறார்கள். அதைப் போலவே கத்திவாக்கத்தில் கூட 315 குடும்பங்களுக்கு ரூ. 13 லட்சம் கடன் தொகை வழங்கியிருக்கிறார்கள். மேலும் வீடு கட்டும் திட்டத்தில் 447 இடங்களில் ரூ. 50 லட்சம் வழங்கியிருக்கிறார்கள். இப்படி வழங்கியிருக்கிற குடிசை மாற்று வாரியத் தலைவரின் செயலை வஞ்சமிலா நெஞ்சால் பாராட்டுகிறேன்.

அதற்கு முன்பாக குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக சென்னையில் மாடி வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதைத் தான் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு அங்கத்தினர்கள் கூறினார்கள். பல இடங்களில் ஒட்டடைகூட அடிக்க முடியாது. வெள்ளை கூட அடிக்க முடியாது. கட்டிடங்கள் பிளவுபட்டு, கழிவு நீர் வெளியேற முடியாமல் மின்விளக்குகள் எரியாமல் இருக்கிற சூழ்நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். இத்தகைய சூழ்நிலையை முற்றிலு நீக்கிம் யாக வேண்டும்.

மேலும் வீடு வேண்டாம் என்று சொல்லுகிற அதிசயம் சென்யில் குடிசை மாற்று வாரியத்தில் ஏற்பட்டிருப்பதைக் கண்டு நான் வியப்படைகிறேன். திரு. அங்கமுத்து அவர்களுக்கு முன்னாலே குடிசை மாற்று வாரியத் தலைவராக இருந்தவர் காலத்தில் ஒரு சிஸ்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதுதான் சரண்டர் செய்யும் சிஸ்டம். சென்னையில் ஒருவர் தனக்கு வீடு வேண்டாம் என்று சொல்லுவார். உடனே ரூ. 500 அபராதம் கட்டச் சொல்லி வேறு ஒருவருக்கு அதைத் தந்து விடுவார்கள். இப்போது அந்த ரூ. 500 அபராதம் வேண்டாம் எப்படியாவது கொடுங்கள் என்று சொல்லிவிட்டதாகச் சொல்லுகிறார்கள். அப்போது ஒரு தவறான போக்கு நடந்துவிட்டதாகவும் சொல்லுகிறார்கள். குடிசை மாற்று வாரியத்திலே வீடு வேண்டாம் என்று சொல்லுகிற வியப்பு இருக்க முடியுமா? ஆனால் வேண்டாம் என்று சொல்லுகிற சூழ்நிலையை ஏன் உருவாக்கினீர்கள்? இத்தகைய நிலைமைகளைப் போக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்திரன் மாறினாலும், இந்திராணி மாற மாட்டார் என்பார்கள். அதைப் போல குடிசை மாற்று வாரியத் தலைவர்கள் மாறினாலும் அவர்களுக்கு வருகிற பி.ஏ.க்கள் மாறுவதே இல்லை. அந்தப் பி.ஏ.க்களை மாற்ற வேண்டும். ஊழலுக்கு உடந்தையாக ஊன்றிவிடக் கூடாது என்ற காரணத்திற்காக ஊழலுக்கு உரமூட்டக் கூடாது என்ற காரணத்திற்காக இதைச் சொல்லுகிறேன். ஒரு நல்ல முறையில் நிர்வாகத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, குடிசை மாற்று வாரியத்தின் எண்ணங்களையும் மாற்றிக் கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



மேலும், குடிசை மாற்று வாரியத்தில் பயிற்சி திட்டம் ஒன்று வைத்துள்ளார்கள். அந்தத் திட்டம் என்னவென்றால், டி.வி. மெக்கானிசம், ரேடியோ மெக்கானிசம், டைப்பிங் ஒயரிங் என்றெல்லாம் வைத்திருக்கிறார்கள். இவைகளை அவர்களாகவே வைத்து நடத்தலாம். ஆனால் அவர்கள் அதைச் செய்யாமல் தனியாரிடம் கொடுத்து விட்டிருக்கிறார்கள். அதனால் அந்த உழைப்போர் பல நோக்குக் கல்வி நிறுவனம் சிரோமணி வித்யாபீத் என்கிற நடுவண் அரசு திட்டத்தின் கீழ் இயங்குகிறது. அது ஏற்கெனவே வயது வந்தோர் பள்ளி சாராக் கல்வித் துறை மூலமாகப் பணத்தைப் பெற்றுக் கொண்டு வருகிறது. அத்துடன் குடிசை மாற்று வாரியத்தினிடமிருந்தும் பணம் வாங்குகிறார்கள். இப்படி இரண்டு பேரிடமும் பணம் வாங்குகிறார்கள். இது முறையல்ல. மேலும் அங்கே படித்துவிட்டு, செல்லுகிறவர்களுக்குக்கூட தகுதியான வேலை கொடுப்பதாகவோ அல்லது முறையான அரசு சான்றிதழ்கொடுப்பதாகவோ தெரியவில்லை. எனவே, இந்தச் சூழ்நிலையை மாற்ற வேண்டும். பயிற்சித் திட்டத்தை மேலும் செம்மையான ஒன்றாக உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வீடு கட்டும் வாரியத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திருவான்மியூரில் ஒரு நிகழ்ச்சி தற்போது எங்கே பார்த்தாலும் வீடு கட்ட தடை விதித்திருக்கிறார்கள். திருவான்மியூரில் ராஜாஜி நகரில் சர்வே எண் 86/7, 86/8, 10, 101/2, 6, 7, 8, 9 102/7 என்று சொல்லுகிற நிலங்களில் 1977 ஆம் ஆண்டிலேயே எம்.எம்.டி.ஏ. விடம் அப்ரூவல் வாங்கி வீடுகட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த தொழிலாளர்கள் தங்கள் நிலத்தில் வீடு கட்டி வாழும் நேரத்தில் நம்முடைய வீட்டுவசதி வாரியம் அந்த நிலத்தை கையகப்படுத்த வேண்டும் என்று ஒரு தாக்கீது அனுப்பியதால் அங்கேயுள்ளவர்கள் நீதிமன்றம் சென்று தடை வாங்கியிருக்கிறார்கள். அவர்கள் பிளானுக்கு அப்ரூவல் வாங்கி, கடன் வாங்கி வீடு கட்டி முடித்த பிறகு அவர்களுடைய நிலத்தை கையகப்படுத்த வேண்டுமென்று சொல்லுவது எவ்வாறு சரியான முறையாக இருக்கும்?

திருவான்மியூரில் கட்டிடம் கட்டக் கூடாது என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் சென்னை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்காக 400 வீடுகளை ஏன் அங்கே கட்டுகிறார்கள்? ஒருபுறம் அங்கே கட்டிடம் கட்டக் கூடாது என்று சொல்லிக் கொண்டு மறுபுறத்தில் சென்னைப் பல்கலைக் கழக ஊழியர்களுக்கு மட்டும் ஏன் கட்ட வேண்டும்? அவர்களுக்கு டு கட்டிக் கொடுப்பதை தவறு என்று நான் சொல்லவில்லை, வீ டித் தாருங்கள். அப்படி அவர்களுக்கு மட்டும் கட்ட அனுமதி வழங்குகின்றீர்கள். ஏன் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கொட்டி

வாக்கத்தில் கட்டுகிறார்கள். இது முரண்பாடாகாதா? இப்படி ஏன் முரண்பாடான சூழ்நிலைகளை உருவாக்குகிறீர்கள் என்று கேட்கிறேன்.

நம்முடைய அண்ணா நகர் (மேற்கு), வில்லிவாக்கம், பாடி, கொரட்டூர் போன்ற இடங்களில் அழகான வீடுகளை கட்டி வைத்திருக்கிறோம். என்றாலுங்கூட ஏன் பலருக்குக் கொடுக்கப்படவில்லை என்ற கேள்வி எழத்தான் செய்யும். மேலும், கட்டப்படுகிற வீடுகளில் பல வெடித்து விடுகின்ற காட்சியைப் பார்க்கிறோம். அதிலே சிமெண்ட் அதிகமாகச் சேர்ந்திருக்கிறதா, மணல் அதிகமாகச் சேர்ந்திருக்கிறதா என்று கேட்கும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, சிமெண்ட் கலவையைப் பொறுத்த வரையில் செம்மைப்படுத்த தகுதியான ஒப்பந்தக்காரர்களை பயன்படுத்தும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இல்லையென்றால் கட்டிடங்களைக் கட்டியும் குடியேற முடியாத சூழ்நிலை ஏற்படும் என்ற உணர்வாலே சொல்லுகிறேன்.

மேலும், இந்தக் கட்டிடங்களைக் கட்டித் தருகிற சூழ்நிலையில் நாம் சிலவற்றை நன்றாக எண்ணிப் பார்க்க வேண்டும். கட்டிடத்தின் வளர்ச்சியிலே ஒரு செம்மை புரிந்த சூழ்நிலையை உருவாக்க 12 ஆண்டுகளில் தவணை முறையில் தொகையை கட்ட வேண்டும் என்று சொல்லுவதை 20 ஆண்டுகளில் கட்டலாம் என்று மாற்றிக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் ஏழையெளியவர்கள் செம்மையாக பயன்பெற முடியும் என்று சொல்லுகிறேன்.

வட்டி 14 சதவீதம் என்று போட்டிருக்கிறார்கள். இதைக் குறைத்துக் கொடுத்தால் ஏழையெளியவர்கள், நடுத்தர மக்கள், பொருளாதார எல்லையில் தொல்லைப்படுகிறவர்கள் செம்மையாக வாழ முடியும் என்று சொல்லுகிறேன்.

நம்முடைய பத்திரிகையாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை ஏற்கெனவே நாம் தெரிவித்திருக்கிறோம். அவர்கள் கூட்டுறவுச் சங்கம் மூலமாக வீடு கட்டிக் கொடுக்க விண்ணப்பம் தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நிலத்தைத் தந்து, செல்வத்தைத் தந்து, அழகான எழில் மாளிகையை உருவாக்கினால் பயனுடையதாக இருக்கும். கேரளாவிலே இப்படி வைத்திருக்கிறார்கள். உத்திரப் பிரதேசத்திலே வைத்திருக்கிறார்கள், கர்நாடகாவிலே வைத்திருக்கிறார்கள். இன்னும் பல்வேறு மாநிலங்களில் உள்ள நிலைமைகளை எண்ணுகிறபோது நாமும் இதை நடைமுறைப்படுத்தி சிறப்பாக்க வேண்டும் என்று சொல்லுகிறேன்.

வில்லிவாக்கம் யூனியனைச் சேர்ந்த இராமாபுரம் பஞ்சாயத்தில் கொத்தாரி தொழிலாளர்களுக்கு 200 வீடுகள் கட்ட இடம் வாங்கி வைத்திருக்கிறார்கள். அந்த தொழிலாளர்கள் வீடு



கட்டுவதற்காக விண்ணப்பிக்கும்போது வீட்டு வசதி வாரியம் அந்த நிலத்தைக் கையகப்படுத்துகிறது. அந்த தொழிலாளிகள் வீடு கட்ட வேண்டும் என்று எண்ணும்போது அந்த இடத்தை மீண்டும் வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்த வேண்டும் என்று ஏன் எண்ணுகிறது? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இத்தகைய சூழ்நிலையை மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் என்னுடைய தொகுதியான மணலியில் அழகான வீடுகளைக் கட்டித் தந்திருக்கிறார்கள், மறுக்க முடியாது. ஆனால், அந்த வீடுகளில் தண்ணீர் வசதியில்லை. கழிப்பறைகளில் தண்ணீர் வசதியில்லை. இதற்குக் காரணம் மாரி பொய்த்துவிட்டதால் தண்ணீர் இல்லையென்று சொல்லுவார்கள். மாரி பொய்த்ததோ இல்லையோ, தண்ணீர் தருவதற்கு லாரிகள் தந்து சிறப்பான உணர்வை அந்த மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தெரு விளக்குகள் எல்லாம் செம்மையுற எரியாத சூழ்நிலை இருக்கிறது. அதையும் நீங்கள் மாற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், நம்முடைய வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகளை ஒதுக்குவது பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எல். ஐ. ஜி. வீட்டிற்கு ஒரு குறிப்பிட்டச் சான்றிதழ் பெற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால் திருமங்கலம் எல்.ஐ.ஜி.யில் ஒருவர் வீடு வாங்கியிருக்கிறார். இலட்சுமி சுந்தரம் என்பவர். அவர் வேலை செய்கிறார். அவருடைய மனையாளும் ஸ்டாப்பாக வேலை செய்கிறார். அவர்கள் இருவரும் பொய் சான்றிதழ்கொடுத்து அந்த வீட்டை வாங்கியிருக்கிறார்கள். சான்றிதழ்களை எப்படியாவது வாங்கிக் கொடுத்தால், அவர்களுக்கு வீடு கொடுக்கலாம் என்ற உணர்வை தடுத்தாக வேண்டும். யார் தவறு செய்தாலும், எந்த உச்சாணிக் கொம்பிலே இருந்து தவறு செய்தாலும், அவர்களைக் கண்டிக்கின்ற உணர்வோடு இருக்க வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 2–20)

மேலும் என்னுடைய தொகுதியிலே சாத்தாங்காட்டிலே இரும்பு மற்றும் எஃகு மொத்த அங்காடியை 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்க இருக்கிறார்கள். அதற்காக உள்ள படியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வளர்ச்சி பொருந்திய திட்டத்திற்கு முன்னோடியாக மணலி வீட்டு வசதி வாரிய வீடுகளுக்கு ஒரு பெயர் சூட்ட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். என்ன சொன்னார்கள் என்றால் ஒரு புது நகரை உருவாக்கி, அந்த நகருக்குஅன்னை இந்திரா காந்தி நகர் என்று பெயர் வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். மணலியில்

கட்டி வைத்திருக்கும் 3,000 வீடுகளுக்கு அன்னை இந்திரா நகர் என்று பெயர் சூட்ட வேண்டுமென்று இந்த இனிய நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அப்படிக் கட்டப் படுகின்ற வீடுகள் எல்லாம் செம்மையாகப் பராமரிக்கப்படுவதற்காக 50 சதவிகிதம் குடியிருப்பவர்களும், 50 சதவிகிதம் அரசாங்கமும் செலவிட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அவர்கள் கடன் அடைபடுகின்ற வரையில் பழுது பார்க்கின்ற செலவை அரசாங்கம் மேற்கொண்டால் சிறப்பாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். அப்படி அரசாங்கம் மேற்கொள்ளும் சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குடிசை மாற்று வாரியத்தால் அடுக்கு மாடி வீடுகள் கட்டப்படுகின்றன. திருவொற்றியூர் பகுதி கடற்கரைப் பகுதி. அங்கே மீனவர்கள் இருக்கிறார்கள். அந்த மீனவ மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அடுக்கு மாடி வீடுகளைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், வீட்டு வசதி வாரியத்தின் வீடுகளைப் பெரிய செல்வந்தர்கள்தான் பெற முடிகின்ற சூழ்நிலை இருக்கிறது. சாதாரண, நடுத்தரமானவர்கள் அவற்றைப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதையும் கருத்திலே கொண்டு, கட்டுகின்ற வீடுகளை நடுத்தர மக்களும், பொருளாதாரத்தில் நலிந்தவர்களும் பெறும் வகையில் எளிமையான திட்டத்தில் கட்டித் தர வேண்டும். குடிசை மாற்று வாரியத்தில் 22 ரூபாய் வாடகையாக வசூல் செய்கிறார்கள். 10 ஆண்டுகள் அப்படி வசூல் செய்தால்—அதனுடைய மதிப்பு 22,000 ரூபாய்தான்—22,000, 25,000 ரூபாய் வசூலாகிவிடுகிறது. எனவே அந்த வீட்டை அவர்களுக்கே கொடுத்துவிடலாம். உழைப்பவனுக்கு நிலம் சொந்தம் என்று சொல்கிறபோது, குடியிருப்பவனுக்கு வீடு சொந்தம் என்று சொல்லக்கூடாதா? அந்த அளவிலே அந்த வீட்டை அவர்களுக்குக் கொடுக்கலாம் என்று சொல்லிக் கொள்கிறேன் (மணி அடிக்கப்பெற்றது).

### 8. அரசினர் தீர்மானம் விதி 32—ஐந் தளர்த்தல்

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"ஒவ்வொருநாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரப் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப் பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி32-ஐ நாளை 7—5—1987 ஆம் தேதியன்று) தளர்த்த வேண்டும்."



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (7—5—1987) காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.24 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

### 9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

#### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

98. அழகப்பா பல்கலைக் கழகத்தின் ஆட்சிப் பேரவைக்கு உறுப்பினர்களை நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 29—9—1986-ஆம் நாளிட்ட 59282/என்.யு. 2/86—2—ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1985-ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1985) 66 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது'.

99. அழகப்பா பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவினை அமைப்பது குறித்து கல்வித் துறையின் 29-9-1986-ஆம் நாளிட்ட 65269/என்.யு.2/86 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1985-ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1985) 66 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

100. அழகப்பா பல்கலைக் கழகத்தின் ஆட்சிப் பேரவைக்கு உறுப்பினர்களை நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 29—9—1986-ஆம் நாளிட்ட 65270/என். யு. 2/86—2-ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1985) 66 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

101. பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 9—1—1987-ஆம் நாளிட்ட 1/என்.யு. 2/87-ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1981-ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1982) 65 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்

214. கோரிக்கை எண் 26—கைத்தறி மற்றும் துணிநூல் ஆகியவற்றின் கொள்கைகளும், திட்டங்களும் பற்றிய குறிப்பு, 1987–88. (தமிழ், ஆங்கிலம்).

215. கோரிக்கை எண்கள் 33 மற்றும் 34—வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987–88. (தமிழ், ஆங்கிலம்).

216. கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய சாதனைத் திட்டம், 1987–88. (தமிழ், ஆங்கிலம்)



## இணைப்பு I.

(.81-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

### கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் 1987-88—க்கான கொள்கையும் திட்டங்களும்.

தமிழ் நாட்டின் புராதன தொழில்களில் ஒன்றானதும், தீவிர வேலை வாய்ப்புடையதுமான கைத்தறித் தொழிலில் ஏறக்குறைய 5.56 லட்சம் தறிகள் (இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள மொத்தத் தறிகளின் எண்ணிக்கையில் 25 விழுக்காட்டுக்கு சற்று கூடுதல்) ஈடுபட்டுள்ளன. ஏறக்குறைய 30 லட்சம் மக்கள் இத்தொழிலினைச் சார்ந்துள்ளனர். ஏறக்குறைய ரூ. 480 கோடி மதிப்புள்ள 600 மில்லியன் மீட்டர் கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்யும் இத்தொழில் மாநிலத்தின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. சமுதாயத்தின் கணிசமான மக்களுக்கு தலையாய தொழிலாக நிலை பெற்றுள்ள கைத்தறித் தொழில் அரசின் தொடர்ந்த பல்வேறு உதவிகளின் காரணமாக நன்கு வளர்ந்து வருகிறது.

2. தமிழ் நாடு அரசு இத்தொழிலை மேம்படுத்துவதிலும், இதில் ஈடுபட்டுள்ளோரின் நல்வாழ்விலும் பெருத்த அக்கறை காட்டி வருகிறது. இத்தொழிலின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

#### கைத்தறிகள் :

3. கைத்தறித் தொழிலின் வளர்ச்சிக்காக மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் சில திட்டங்கள் பின்வருமாறு :

#### (1) தறிகளைக் கூட்டுறவின் கீழ் கொணருதல் :

மாநிலத்தில் உள்ள 5.56 லட்சம் கைத்தறிகளில் 3.89 லட்சம் தறிகள் கூட்டுறவின் கீழ் கொணரப்பட்டுள்ளன. 31—1—1987-ல் தமிழ் நாட்டில் 1,654 பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன 1986–87-ல் 20,000 நெசவாளர்கள் கூட்டுறவின்கீழ் கொணர இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அது எட்டப்பட்டுவிட்டது. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் பங்கு மூலதனத்தை வலுப்படுத்துவதற்காக அரசு பங்கு மூலதனம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 30 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 1987–88 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 50 இலட்சம் செலவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் 185 மில்லியன் மீட்டர் உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 31-1-1987 முடிய ரூ 148.28 கோடி மதிப்புள்ள 153.3 மில்லியன் மீட்டர் கைத்தறித் துணி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டு முடிவுக்குள் இலக்கு எய்தப்படும். 1987-88 ஆம் ஆண்டிற்கு 200 மில்லியன் மீட்டர் உற்பத்தி இலக்காக நிர்ணயிக்கப்

பட்டுள்ளது. 1987-88 ஆம் ஆண்டில் மேலும் 20,000 கைத் தறிகளை கூட்டுறவின் கீழ் கொணரவும் இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

(2) பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு பங்கு மூலதன உதவி :

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக சேரும் கைத்தறி நெசவாளர்களுக்கு சங்கத்தில் ஆரம்ப பங்கு மூல தனம் செலுத்துவதற்காக கடன் வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ் பருத்தித் தறிகளுக்கு ரூ. 200-ம், படுக்கை விரிப்பு, உல்லன், டெர்ரி டவல் போன்ற சிறப்பு வகைகளை நெய்யும் பருத்தித் தறிகளுக்கு ரூ. 300-ம் பட்டுத் தறிகளுக்கு ரூ. 350-ம் பாலியஸ்டர் தறிகளுக்கு ரூ. 1,000-ம் அதிகபட்ச அளவாக கடன் வழங்கப்படுகிறது. இக்கடன் தொகையில் 90 விழுக்காடு மத்திய மற்றும் மாநில அரசுகளினால் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தில் முதலீடு செய் வதற்கு வகுக்கப்பட்ட நெறி முறைகளின்படி தங்களுடைய வரு மானத்திலிருந்து பங்கின் முதல் மதிப்பின்படி 10 விழுக்காடு நெசவாளரால் செலுத்தப்படுகிறது. 1986—87-ம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 51.80 லட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. 1987-88-ம் ஆண்டிற்கு வரவு—செலவு திட்டத்தில் ரூ. 15 லட்சம் ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

(3) தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் :

தறி முதலாளிகள் மற்றும் இடைத்தரகர்கள் பிடியில் சிக்குண் டுள்ள தறியற்ற கைத்தறி நெசவாளர்களின் நல்வாழ்வுக்காக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த தறியற்ற கைத்தறி நெசவாளர்கள் சமூகத்தில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினைச் சார்ந்தவர்கள் என்பதால் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளுடன் செயல்படுவதற்கு இக்கைத்தறி வளர்ச்சி திட்டங்களுடன் ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தையும் சேர்க்கவேண்டிய முக்கியத்துவம் உணரப்பட்டது. 1986-87-ம் ஆண்டில் ஆதி திராவிடர்களுக்கென பிரத்தியேகமாகப் பதிவு செயயப்பட்ட 9 சங்கங்கள் உட்பட தற்போது தமிழ் நாட்டில் 179 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 1987-88-ம் ஆண்டில் இத்திட்டத்திற்கு மேலும் அதிக முக்கியத் துவம் அளிக்கப்படும். மாநிலத்திலுள்ள ஆதிதிராவிட நெசவாளர் களின் பொருளாதார நிலையை உயர்த்தும் பொருட்டு அவர் களுக்காக பிரத்தியேகமாக தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கம் அமைக்க மைய அரசு உதவியுடன் மாநில அரசு கடன் மற்றும் மானியம் வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர்களுக்கென 10 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க கைத்தறி வளர்ச்சி திட்டங்களின் கீழ்





ரூ. 18.20 லட்சம் கடனாக வழங்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டம் தேரூரில் பயிற்சியளிக்கப்பட்ட நெசவாளர்களுக்கு நெசவுத் தொழிலில் விருப்பமின்மையால் ஒரு தொழிலியல் நெச வாளர் கூட்டுறவு சங்கம் அமைப்பதை நிறுத்திவைக்க உத்தேசிக் கப்பட்டுள்ளது. எனவே 9 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கம் அமைப்பதற்கு சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் கீழ் மானியம் ரூ. 40.95 லட்சம் வழங்கப்பட்டது.

(4) பட்டு நெசவு :

மாநிலத்தில் குறிப்பாக காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம் மற்றும் சேலம் ஆகிய பகுதிகளில் 27,500 தறிகளைக் கொண்டு 104 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. 1985-86-ம் ஆண்டில் ரூ. 3,966.40 இலட்சம் மதிப்புள்ள பட்டுத்துணி உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 4,399.92 இலட்சம் மதிப்புள்ள பட்டுத்துணி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் 1987-88-ம் ஆண்டிற்கு கடனாக ரூ. 1.50 இலட்சமும், மானியமாக ரூ. 1.00 இலட்சமும் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(5) கைத்தறி நெசவாளர்கள் விடுவிப்புத் திட்டம் :

தறி முதலாளிகளின் பிடியில் சிக்குண்டு தவிக்கும் கைத்தறி நெசவாளர்கள் முதலாளிகளிடம் பட்ட கடனை திருப்பி செலுத்தி பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக சேரு வதற்கு வசதியாக 4 விழுக்காடு சலுகை வட்டி வீதத்தின் கீழ் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் கடனுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவோரை கைத்தறி மற்றும் துணி நூல் துறை தெரிவு செய்கிறது. இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பு பணியையும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை செய்கிறது. இதுவரை ரூ. 15.92 இலட்சம் கடன் உதவி பெற்று 2,323 நெசவாளர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

(6) கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சலுகை அடிப்படையில் நிதி உதவி வழங்கல் :

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சிக்கு தேவையான நடைமுறை மூலதனத்தை நியாயமான வட்டி விகிதத்தில் வழங்க வேண்டியது மிக முக்கியமான முன் தேவை யாகும். இது தொடர்பான தேவையை நிறைவேற்றுவதற்கு தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி முன் வந்துள்ளது. நிதி வழங்கும் வங்கிகளால் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி 7.5 சதவிகித சலுகை

வட்டியில் வழங்கும் நிதி உதவியை தொடக்க நிலை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் அளிப்பதற்கு, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு 3 சதவிகித வட்டி மானியமும், மாநில கூட்டுறவு வங்கிக்கு 1 சதவிகித மானியமும் வழக்கம் போல் அளிக்கப் படுகிறது. 1986-87-ம் ஆண்டில் இதற்கு ரூ. 424.64 இலட்சம் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 1987-88-ம் ஆண்டிலும் தொடரப்படும். அதற்கு தகுந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

| ஆண்டு. | ஒப்பளிக்கப்பட்ட கடன் விவரங்கள். | | | நடைமுறை மூல தனத்திற்காக கொடுக்கப்பட்ட மொத்த வட்டி மான்யம். |
|---|---|---|---|---|
| | மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கம். | தொடக்க நிலை நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள். | மொத்தம். | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் கோடியில்). | | | (ரூபாய் இலட்சத்தில்). |
| 1983-84 .. | 40.00 | 53.58 | 93.58 | 91.89 |
| 1984-85 .. | 50.00 | 56.25 | 106.25 | 100.00 |
| 1985-86 .. | 70.00 | 70.54 | 140.54 | 249.96 |
| 1986-87 .. | 75.00 | 80.78 | 155.78 | 424.64 (மதிப்பீடு). |
| 1987-88 .. (உத்தேசிக்கப் பட்டது.) | 80.00 | 109.61 | 189.61 | 125.00 (வரவு-செலவு திட்ட மதிப்பீடு.) |

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு மத்திய கூட்டுறவு வங்கி களால் வழங்கப்படும் நடைமுறை மூலதனக் கடன் வசூல் ஆகாத தினால் ஏற்படும் இழப்பில் 90 சதவிகிதத்தை சில நிபந்தனை களுடன் மாநில அரசு வழங்குகிறது. மீதமுள்ள 10 விழுக்காட் டினை சம்பந்தப்பட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளே ஏற்றுக் கொள்கின்றது. இத்தகைய நடவடிக்கையினால் தொடக்க நிலை நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் நடைமுறை மூலதனத்திற்கு தேவையான நிதியை பெற முடிகிறது. தேசிய விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியிடமிருந்து உயர்ந்தபட்ச கடனுதவியினை தமிழ்நாடு பெற்று வருகிறது என்பது குறிப்



பிடத்தக்கது. இவ்வங்கி இந்தியா முழுவதும் கைத்தறித் தொழி லுக்கு வழங்கும் கடனுதவியில் 58 சதவிகிதத்தை தமிழ்நாடு பெறுகிறது.

(7) நெசவாளர்களுக்கு பயிற்சி :

நெசவாளர் பயிற்சித் திட்டம் தொடர்ந்து நடத்தப்பெற்று வருகிறது. இத்திட்டத்திற்கு 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 3.60 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 1987-88-ம் ஆண்டு ரூ. 4.20 லட்சம் நிதியில் இத்திட்டம் தொடர்ந்து நடத்தப் படும். தற்போது நெசவாளர்களுக்கு, அவர்கள் இருப்பிடத் திலேயே முனைப்பாகவும், புத்தறிவு பெறுவதற்கும் பயிற்சி அளிக் கப்பட்டு வருகிறது. நெசவாளர்களை பிற மாநிலங்களுக்கு அனுப்பி, அம் மாநிலங்களில் பின்பற்றப்படும் நவீன தொழில் நுட்பம் மற்றும் பின்பற்றப்படும் நெசவு முறைகளை அவர்கள் தெரிந்து கொள்வதற்கான திட்டம் தற்போது பரிசீலனையில் உள்ளது.

கைத்தறி நெசவாளர்களுக்கு, நெசவாளர் சேவை மையங்கள் மூலமாக இரண்டாண்டு பயிற்சி அளிக்கும் முன்னோடித் திட்டம் ஒன்றை மத்திய அரசு வகுத்துள்ளது. இத்திட்டத்தை 1987-88 ஆம் ஆண்டு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(8) தொழில் நுட்ப அபிவிருத்தி மற்றும் தறிகளை நவீனப்படுத்தும் திட்டம் :

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆலைத் தொழிலால் ஏற்பட்டுள்ள போட்டியை சந்திக்க உற்பத்தி திறனை அதிகரிப் பதும் நெசவு முறைகளின் தொழில் நுட்பத்தை செழுமைப் படுத்துவதும், கவர்ச்சி மிகு ரகங்களை உற்பத்தி செய்வதும் இன்றியமையாததாகிறது.

கைத்தறித் தொழிலின் தொழில் நுட்பத் தரத்தை உயர்த்து வதற்கு தறிகளை சீரமைக்க, நவீனப்படுத்த மற்றும் புதிய தறிகளை வாங்குவதற்கு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. இதற்கு மத்திய, மாநில அரசுகள் 50 : 50 என்ற அடிப்படையில் நிதி உதவி செய்கின்றன. இந்நிதி உதவி 1/3 பகுதி மானியமாகவும் 2/3 பகுதி கடனாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டம் தொடரப்படுகிறது. 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 57.40 லட்சம் செலவு செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது. 1987-88-ம் ஆண்டு இத்திட்டத்திற்கு ரூ. 21.00 லட்சம் ஒதுக்கீடு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

சிறுபான்மையினர் நிறைந்த பகுதிகளில் உள்ள கைத்தறி களை நவீனப்படுத்துவதற்காக, மத்திய அரசு தனியாக ரூ. 10 லட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. இதில் ரூ. 6.67 லட்சம் கடன், ரூ. 3.33 லட்சம் மானியம்.

சாயத்தின் தரத்தை பாதுகாக்கும் பொருட்டு தொடக்கநிலை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சொந்த சாயச்சாலைகள் அமைத்துக் கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றன. இதற்கு மத்திய அரசு மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் 1987-88-ம் ஆண்டு வழங்கும் நிதி உதவியை பயன்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

**(9) துணிகள் பதனிடுதல் :**

தமிழ்நாட்டிலுள்ள தொடக்க நிலை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சாயமிடுதல் மற்றும் பதனிடும் வசதியை செய்து கொடுக்க 1973-ம் ஆண்டு ஈரோட்டில் தமிழ்நாடு கூட்டுறவு நூல் பதனிடும் ஆலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலையில் பருத்தி பாலியஸ்டர் துணிகளை சலவையிடவும் சாயமிடவும் வசதிகள் இருப்பதோடு துணிகளில் அச்சிடவும் வசதியுள்ளது. தொடக்க நிலை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகளை இந்த ஆலை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாததால் தென்ஆற்காடு மாவட்டத்தில் உள்ள புவனகிரியில் ரூ. 500 லட்சம் செலவில் ஒரு புதிய பதனிடும் ஆலை அமைக்க அரசு பரிசீலித்து வருகிறது. இவ்வாலை நாள் ஒன்றுக்கு சுமார் 60,000 மீட்டர் துணிகளை பதனிடும் திறன் கொண்டதாகும்.

**(10) கைத்தறி வளர்ச்சி திட்டங்கள் :**

மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியோடு காஞ்சிபுரம், ஈரோடு, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நான்கு கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டங்களும், கரூர், குறிஞ்சிபாடி ஆகிய இடங்களில் இரண்டு கூட்டுறவு கைத்தறி ஏற்றுமதி திட்டங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களின்கீழ் இதுவரை 18,393 தறிகள் வந்துள்ளன. 1-4-1986 முதல் 31-1-1987 வரையிலான காலத்தில் (10 மாதங்கள்) இத்திட்டங்கள் 6.80 மிலியன் மீட்டர் கைத்தறி துணிகளை உற்பத்தி செய்தன. இதன் மதிப்பு ரூ. 582.79 லட்சம். இத்துணிகள் ரூ. 580.58 லட்சம் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் ஒரு சில நலிவுள்ள மற்றும் செயலிழந்த கைத்தறிநெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை எடுத்துக் கொண்டு அச்சங்கங்களில் உறுப்பினராகவுள்ள நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு கிடைக்க உதவுகின்றன.

நான்கு தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டங்கள் மற்றும் இரண்டு ஏற்றுமதி உற்பத்தி திட்டங்களில் உள்ள அடிப்படை வசதிகளைப் பயன்படுத்தி மாறிவரும் நுகர்வோர் ரசனைக்கேற்ப உற்பத்தியாகும் ரகங்களை பன்முகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இவ்வாறு உற்பத்தியினை மாற்றியமைக்க எண்ணும்பொழுது அதிகமாக தேங்கும் போக்குடைய ரகங்களைத் தவிர்த்து, புதிய மற்றும் விரைவில் விற்பனையாகக்கூடிய ரகங்



களை உற்பத்தி செய்யவேண்டிய தேவையை மனதில் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக கரூர் மற்றும் ஈரோடு திட்டங்களின் உற்பத்தி இனங்களில் உல்லன் போர்வைகளும், சேலம் திட்டத்தில் செயற்கை இழை சால்வைகளும் (Acrylic Shawl) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதே போல் மதுரை திட்டத்திலும் ஏற்றுமதி இரக பூத்துவாலைகள் (Terry towel) உற்பத்தி செய்வதில் தனித்துவம் பெற்றுவருகிறது. காஞ்சிபுரம் திட்டத்தில் ஏற்றுமதி சந்தைக்காக (Double width) இரட்டை அகலமுள்ள பட்டுத்துணி உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**(11) கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் நெசவாளர்களுக்கு மூலப் பொருட்களை விநியோகித்தல் :**

தமிழ் நாட்டில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் உள்ளன. இவற்றில், 4.55 இலட்சம் கதிர்கள் உள்ளன. இவற்றில் 10 நெ. முதல் 120 நெ. வரையிலுள்ள சுமார் 16.5 இலட்சம் கிலோ எடையுள்ள நூல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாலைகள் சுமார் 10,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகிறது. தமிழ் நாட்டிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச்சங்கங்களுக்கு ஒவ்வொரு மாதமும் சுமார் 5,000 பேல் அளவில் நூல்கள் தேவைப்படுகின்றன. இதனால் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவை போக குறிப்பாக நல்ல ரக நூல்கள் உபரியாகவே உள்ளன. இருப்பினும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சிலவகை நூல்களின் தேவையை பூர்த்தி செய்வதில் கூட்டுறவு நூற்பாலைகள் சிரமப்படுகின்றன. எனவே கூட்டுறவு உற்பத்தி ஆலைகளில் நூற்பு திட்டத்தை (Pin plan) தேவைக்கேற்ப அவ்வப்போது மாற்றியமைக்க நடவடிக்கையெடுக்கப்படுகிறது.

உற்பத்தியை பன்முகப்படுத்தும் திட்டத்தின்கீழ் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பாலியெஸ்டர், பாலிவிஸ்கோஸ், பாலிஅக்ரிலிக் போன்ற இழைகளைக் கொண்ட நவீன துணி ரகங்களை உற்பத்தி செய்து வருகின்றன. செயற்கை நூலிழையின் தேவை நன்கு உள்ளது. எனவே, இத்தகு நூலிழைகளின் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு நூற்பு ஆலைகள் நிறுவ வேண்டியது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக 25,000 கதிர் திறனுடன் கலப்பு நூல் (Blended yarn) உற்பத்தி செய்வதற்கு கீழ்க்கண்ட இடங்களில் கூட்டுறவு நூற்பாலைகள் அமைக்க ஆராயப்பட்டு வருகிறது.

| கூட்டுறவு நூற்பாலை அமைக்க உத்தேசிக்கப் பட்ட இடம். | மாவட்டம். | உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்ட நூலின் வகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| இள்ளை | தென்னாற்காடு | பாலி-காட்டன் |
| பாப்பாரப்பட்டி | தர்மபுரி | பாலி-விஸ்கோஸ். |
| மண்டபம். | ராமநாதபுரம். | பாலி-அக்ரிலிக். |

(12) நலிவுற்ற ஆலைகளுக்கு மறு வாழ்வு :

மாநில அரசு பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் உள்ள சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலையை 14-8-1986 அன்று அரசுடைமையாக்கியது. கோயமுத்தூர் பவானி நூற்பாலையை ஓராண்டுக்கு நிவாரணம் பெறத்தக்கதாக அரசு அறிவித்து 16-10-1986 அன்று மீண்டும் திறப்பதை உறுதிப் படுத்தியது. மேலும் கோயம்முத்தூர் ஸ்ரீஹரி நூற்பாலை அரசு உதவியுடன், கூட்டு நிர்வாகத்தின்கீழ் 31-10-1986 அன்று மீண்டும் திறக்கப்பட்டது. மாநிலத்தில் உள்ள மூடப்பட்ட மற்ற நலிந்த ஆலைகளை மீண்டும் திறப்பதற்கான சாத்தியக் கூறுகளை பரிசீலனை செய்துவருகிறது.

(13) கைத்தறித் தொழிலுக்கு விற்பனை உதவி :

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச்சங்கம் (கோ-ஆப் டெக்ஸ்) அதன் 550 கிளை விற்பனை நிலையங்களின் மூலமாக அதனுடன் இணைக்கப்பட்டுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் துணிகளின் விற்பனைக்கு வசதி செய்து கொடுக்கிறது. இப்பொழுது இந்த உதவி கூட்டுறவுச் சங்கங்களின் 50 சத விகித உற்பத்தியின் விற்பனைக்கு உதவுகிறது. 1986-87 ஆம் ஆண்டில் 31-1-1987 முடிய உள்ள காலத்தில் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்த சரக்குகளில் ரூ. 66.85 கோடி மதிப்புள்ள சரக்குகளை கொள்முதல் செய்துள்ளது. தமிழ் நாடு மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 75.00 கோடி மதிப்புள்ள சரக்குகளை கொள் முதல் செய்ய திட்டமிட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் கோ-ஆப்டெக்ஸின் விற்பனை 31-1-1987 முடிய ரூ. 88.36 கோடி ஆகும். 1987-88 ஆம் ஆண்டுக்கான விற்பனை இலக்கு ரூ. 110 கோடி ஆகும்.

(14) ஜனதா துணி திட்டம் :

ஏழாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் இறுதிக்குள் கட்டுப்பாடு இரகத் துணியின் உற்பத்தியை கைத்தறிக்கு கொண்டு வருவதே புதிய ஜவுளிக் கொள்கையின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.



தற்போது மாநிலத்தில் சுமார் 35,000 கைத்தறிகள் ஜனதா ரக வேட்டி, சேலை, லுங்கி தயாரிப்பில் ஈடுபட்டுள்ளன. ஜனதா ரக துணி உற்பத்திக்கு 1987-88 ஆண்டிற்கு 55.000 மில்லியன் சதுர மீட்டர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(15) கோ-ஆப்டெக்ஸின் பங்கு மூலதன அடிப்படையை வலுப் படுத்துதல் :

கோ-ஆப்டெக்சின் பங்கு மூலதனம் அரசு முதலீடு ரூ. 19.66 உட்பட ரூ. 20.86 கோடியாக உள்ளது. இதன் கடன் வாங்கும் திறனை உயர்த்தி அதன் மூலம் தொடக்கநிலை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் விற்பனை வசதியை அதிகரிக்க மத்திய மாநில அரசுகள் இச்சங்கத்திற்கு நிதியுதவி அளித்து வருகிறன்ன. 1986-87 ஆம் ஆண்டு கோ-ஆப்டெக்ஸின் பங்கு மூலதனத்தை அதிகரிக்கவென கூடுதலாக ரூ. 2.09 கோடி நிதியுதவி அளிக்க உத்தேசித்துள்ளது. 1987-88 ஆம் ஆண்டிலும் தேவையான நிதியுதவி அளிக்கப்படும்.

(16) தள்ளுபடி :

கைத்தறித் துணி விற்பனையை அதிகரிக்க அரசால் மேற் கொள்ளப்பட்டுள்ள முதன்மையான நடவடிக்கைகளில் ஒன்றாக நுகர்வோருக்கு சில குறிப்பிட்ட காலங்களில் தள்ளுபடி வழங்கும் திட்டமும் ஒன்றாகும். இது மத்திய அரசின் திட்டமாகும். இதற்காகும் செலவு மத்திய, மாநில அரசுகளால் சமமாக பகிர்ந்து கொள்ளப்படுகின்றது. 1986-87ஆம் ஆண்டில் ரூ.37.46 கோடி இத்திட்டத்திற்காக அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது. இது நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும், கோ-ஆப்டெக்ஸ்க்கும் பேருதவியாக இருந்தது. இத்திட்டத்தை நீடிக்கும் விதமாக கடந்த ஆண்டை போலவே 1987-88 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்திலும் ரூ. 10.00 கோடி ஒதுக்குவதற்கு வகை செய்யப் பட்டுள்ளது.

நல்வாழ்வுத் திட்டங்கள் :

(17) சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம் :

கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாது காப்பு திட்டம், கூட்டுறவுத் துறையிலுள்ள கைத்தறி நெச வாளர்களுடைய நன்மைக்காக தமிழ் நாட்டில் நவம்பர் 15, 1975 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 1,23,168 கைத்தறி நெசவாளர்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். மார்ச் 31, 1987-க்குள் 1,25,000 நெச வாளர்களை இத்திட்டத்தின்கீழ் கொணர உத்தேசிக்கப்பட் டுள்ளது. இத்திட்டத்தில் சேரும் ஒரு நெசவாளர் அவர் ஊதிய மாகப் பெறும் ஒவ்வொரு ரூபாயிலும் 6 பைசா செலுத்த

வேண்டும். அரசு 3 பைசா செலுத்தும். இது தவிர, அரசு, இந்த நிதியில் குவிந்துள்ள தொகைக்கு ஒவ்வொரு ஆண்டும் 7 சதவீதம் வட்டி கொடுக்கிறது. இந்த வட்டித் தொகையும் அந்த நெசவாளரின் கணக்கில் வரவு வைத்துக் கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் உறுப்பினராகவுள்ள நெசவாளர் 55 வயதிற்குள் மரணம் அடைந்தால் அவரது வாரிசுதாரர் காப்புறுதி தொகையாக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து ரூ. 3,000 பெறுவார். மேலும் அவரது சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட கணக்கில் சேர்ந்துள்ள தொகையையும் பெறுவார். ஜூலை 1, 1984 முதல் உறுப்பினர் இறந்தால், கோ-ஆப்டெக்ஸ் நல்லெண்ண அடிப்படையில் ரூ. 2,000 வழங்குகிறது. சந்தாதாரர் ஓய்வு பெறும்பொழுது, கணக்கில் சேர்ந்துள்ள தொகை அவருக்கு திருப்பித் தரப்படும்.

(18) சிக்கன நிதி திட்டம் (Thrift Fund Scheme) :

மத்திய அரசு 1985-86-ஆம் ஆண்டிலிருந்து ''மத்திய சிக்கன நிதித் திட்டம்'' என்ற புதிய திட்டத்தை அறிமுகம் செய்தது. மத்திய அரசின் இத்திட்டத்தில் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தைப் போன்று நெசவாளர் பெறும் ஊதியத்தில் ரூபாய்க்கு 3 பைசா மானியமாக ஆண்டொன்றுக்கு ஒரு நெசவாளருக்கு அதிகபட்சமாக ரூ. 90 வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 1985-86 மற்றும் 1986-87-ஆம் ஆண்டுகளுக்கு முறையே ரூ. 8.26 இலட்சம் மற்றும் ரூ. 20.65 இலட்சம் வழங்கப்பட்டது.

(19) நெசவாளர் வீடு மற்றும் தொழிற்கூட திட்டம் :

1962 ஆம் ஆண்டிற்கு முன் நடைமுறைப்படுத்தப்பட்ட நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வீடு கட்டும் பழைய திட்டத்தின் கீழ், 35 குடியிருப்புக்களில் 2,683 வீடுகள் நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு கட்டப்பட்டன. இத்திட்டத்திற்கு ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் புத்துயிர் அளிக்கப்பட்டு, 1985-86ஆம் ஆண்டு வரை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி கழகத்தின் நிதியுதவி மற்றும் மாநில அரசு மானியத்துடன் 44 குடியிருப்புகளில் 3,027 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1986-87ஆம் ஆண்டில் 10 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 794 தொழிற் கூடத்துடன் கூடிய வீடுகளை கட்ட திட்டமிடப்பட்டு கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

மத்திய அரசின் புதிய துணிக் கொள்கையின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களில் நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வீட்டு வசதி திட்டத்தை முன் மாதிரியாக கொண்ட கைத்தறி நெசவாளர்களுக்கு வீட்டு வசதி திட்டமும் ஒன்றாகும்.



மத்திய அரசு கூட்டாண்மை அமைப்பில் (Corporate Section) உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு கீழ்க்கண்ட வீட்டு வசதி திட்டங்களை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி கழக (''ஹட்கோ'') உதவியுடன் செயல்படுத்த முன் வந்துள்ளது.

| திட்டத்தின் பெயர். | விலை உச்ச வரம்பு. | ஹட்கோ கடன். | மாநில அரசு மானியம். | மத்திய அரசு மானியம். | பயன் பெறுபவர் செலுத்தும் தொகை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1. நகர்ப்புற வீட்டு வசதி. | | | | | |
| (1) | 12,000 | 9,700 | 1,000 | 1,000 | 300 |
| (2) வீடு மற்றும் தொழிற் கூடம் | 15,000 | 9,700 | 2,500 | 2,500 | 300 |
| 2. கிராமப்புற வீட்டு வசதி : | | | | | |
| (1) வீடு | 6,000 | 3,000 | 1,500 | 1,500 | .. |
| (2) வீடு மற்றும் தொழிற் கூடம். | 9,000 | 3,000 | 3,000 | 3,000 | .. |
| 3. ஏற்கனவே உள்ள வீடுகளுக்கு தொழிற் கூடம். | 3,000 | .. | 1,500 | 1,500 | .. |

மேற்குறிப்பிட்ட திட்டங்களில் நகர்ப்புற வீடு மற்றும் தொழிற்கூட வசதி திட்டம் [எண். 1(2)] நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மற்ற இரு திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

1987-88ஆம் ஆண்டில் 750 வீடு மற்றும் தொழிற்கூட கட்டுவதற்கு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இவை கட்டுவத தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**(20) டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை :**

கைத்தறி நெசவாளர்களின் நல்வாழ்வுக்கென ''டாக்டர்'' எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை'' என்ற பெயரில் ஒரு அறக் கட்டளை அமைப்பதற்கு 1986-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் அரசு ஆணையிட்டது. இதன் மூலம் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் இதர நிறுவனங்கள் பொது நல நிதி மற்றும் பொதுநிதியிலிருந்து தரும் நன்கொடையிலிருந்து ஒரு நிதி உருவாக்கி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து கைத்தறி நெசவாளர் குழந்தைகளின் உயர் கல்விக்கு உதவித் தொகை வழங்கவும் உள்நாட்டு விற்பனை மற்றும் ஏற்றுமதிக்கு புதிய வடிவமைப்புக்களை கண்டுபிடிப்பவருக்கு பரிசுகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் பொதுநல நிதியிலிருந்து வழங்கப்பட்ட நன்கொடை ரூ. 6.50 இலட்சம் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக்கழகத்தில் ''டாக்டர் எம்.ஜி.ஆர். நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை'' என்ற கணக்கில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து பெறப்படும் வட்டி மேற்கூறிய காரியங்களுக்கு பயன்படுத்தப்படும்.

**விசைத்தறிகள் :**

4. இந்தியாவில் விசைத்தறி தொழிலில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டில் தற்போது 1,00,000 அங்கீகரிக்கப்பட்ட விசைத்தறிகளும், சுமார் 1,00,000 அங்கீகரிக்கப்படாத விசைத்தறிகளும் உள்ளன. இந்திய அரசின் புதிய துணிக் கொள்கையின்படி அனைத்து விசைத்தறிகளும் பதிவு செய்யப்பட வேண்டும். மேலும் புதிய விசைத்தறிகள் நிறுவ எந்த கட்டுப்பாடும் இல்லை. எனவே, ஏற்கனவே உள்ள அங்கீகரிக்கப்படாத விசைத்தறிகளுக்கு அங்கீகாரம் பெறுவது மட்டுமின்றி மேலும் 50,000 புதிய விசைத்தறிகளும் நிறுவப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

5. மத்திய அரசு விசைத்தறிகளுக்கு பதிவுச் சான்றிதழ் வழங்கும் அதிகாரத்தை மாநில அரசுகளிடம் ஒப்படைத்துள்ளது. அதன்படி விசைத்தறிகளுக்கு பதிவுச் சான்றிதழ்கள் சென்னை, கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரால் வழங்கப்படுகின்றன.

**கைத்தறி ஒதுக்கீடு உத்தரவு :**

6. மத்திய அரசு 1986 ஆகஸ்டு 5 ஆம் நாளன்று, 22 துணிரகங்களை கைத்தறியில் மட்டும் உற்பத்தி செய்ய ஒதுக்கீடு செய்து ஒரு அறிவிக்கை வெளியிட்டது. இந்த அறிவிக்கையின் செல்லத்தக்க நிலையினை எதிர்த்து விசைத்தறி உரிமையாளர்கள் சென்னை உயர்நீதி மன்றம் உட்பட பல உயர்நீதி மன்றங்களில் வழக்குத் தொடுத்ததன் அடிப்படையில் இவ்வறிவிக்கையின் செயற்பாடு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மத்திய மற்றும் மாநில அரசுகள் இத்தடை உத்தரவை நீக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.



7. மத்திய அரசு நாடு முழுவதும் ஒதுக்கீட்டு ஆணையை நிறைவேற்றுவதற்குத் தேவையான அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இப்பணிகளுக்கு மத்திய அரசு தமிழ்நாட்டில், கோயமுத்தூரில் அலுவலகம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. மத்திய அரசு, எல்லா மாநில அரசுகளையும், கைத்தறி ஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றுவது தொடர்பான பணிகளை கவனிக்க அமைப்புகளை ஏற்படுத்த கோரியுள்ளது. கைத்தறி ஒதுக்கீடு சட்டம் தொடர்பான பணிகளை கவனிப்பதற்கு தேவையான முக்கியமான இடங்களில் அமைப்புகளை ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**காஞ்சிபுரம் தமிழ்நாடு சரிகை ஆலைக்கு உதவிகள் :**

8. காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை ஆலை மாதம் ஒன்றுக்கு சராசரியாக 1,000 மார்க் தங்க சரிகை உற்பத்தி செய்து பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகம் செய்கிறது. 1986-87 ஆம் ஆண்டில், 31-1-1987 வரை 11,775 மார்க் தங்க சரிகை உற்பத்தி செய்யப்பட்டு, ரூ. 168.34 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆலை இலாபத்தில் இயங்கி வருகிறது. இவ்வாலையில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் வாங்கப்படும் பட்டு மற்றும் சரிகையை பரிசோதனை செய்ய உதவுவதற்காக ரூ. 2.20 இலட்சம் செலவில் பரிசோதனைக்கூடம் ஒன்றை இச்சரிகை ஆலை பெற்றுள்ளது.

9. பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக காஞ்சிபுரம் சரிகை ஆலையின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதோடல்லாமல், ஆரணி மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்களில் மேலும் இரண்டு சரிகை ஆலைகளை காஞ்சிபுரம் சரிகை ஆலையின் கட்டுப்பாட்டில் கீழ் துவக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்துக்கு உதவி :**

10. கூட்டுறவு அமைப்பிற்கு வெளியிலிருக்கும் நெசவுத் தொழிலின் வளர்ச்சிக்கும், இதற்கு நிதியுதவி அளிப்பதற்கும் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக்கழகம் ஒரு பொதுத்துறை நிறுவனமாக, 1964-ல் துவங்கப்பட்டது. இந்த நிறுவனம் தனியார் துறையிலுள்ள நெசவாளர்கட்கு கடன் வசதி அளிக்கிறது. இம்மாநில அரசு இக்கழகத்திற்கு ரூ. 1 00 கோடி பங்கு மூலதனமாக 1986-87 ஆம் ஆண்டில் வழங்கியுள்ளது. மத்திய அரசு மாநில அரசுக்கு இதற்கு உதவ ரூ. 50 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. 1986-87 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ரூ. 440 இலட்சத்தில் இக்கழகம் 1987 ஜனவரி 31 ஆம் நாள் முடிய ரூ. 279.37 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

## தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோயமுத்தூர் :

11. நலிவுற்ற பஞ்சாலைகளுக்கு நிதி உதவி அளிக்கவும் அவற்றை நிர்வகிக்கவும் தமிழ்நாடு பஞ்சாலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டது. தற்போது இக்கழகம், மாநிலத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தேவையான பருத்தியை விநியோகிக்கும் முகவராக செயல்படுகிறது. கூட்டுறவு நூற்பாலைகளுக்கான பருத்தி மற்றும் பருத்தி நூல்களை பரிசோதனை செய்ய ரூ. 10.00 இலட்சம் செலவில் பரிசோதனைக் கூடம் ஒன்றும் இக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ளது. இக்கழகம் 1,400 தொழிலாளர்களுக்கு வேலை வாயப்பு நல்கி வரும் 10 விசைத்தறிக் கூடங்களின் நிர்வாகத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள விசைத்தறிகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் துணியை கொள்முதல் செய்து உதவி செய்கிறது.

## பள்ளிச் சிறுவர்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் :

12. மாண்புமிகு முதலமைச்சரின் இலவச சீருடை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சீருடைகளுக்கு தேவையான துணிகளை கொள்முதல் செய்யும் பொறுப்பு கைத்தறி மற்றும் துணிநூல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன்படி ரூ. 10.05 கோடி மதிப்புள்ள 108.43 இலட்சம் மீட்டர் துணி கொள்முதல் செய்யப்பட்டு சமூக நலத் துறையிடம் குறித்த நேரத்திற்குள் வழங்கப்பட்டது.

## புதிய திட்டங்கள் :

13. மாவட்டத்திற்கு ஒன்று வீதம் வடஆற்காடு மற்றும் தென் ஆற்காடு மாவட்டங்களில் இரண்டு பாவு ஓடல் மற்றும் தோய்த்தல் சேவைக் கூட்டுறவு சங்கங்கள் 1987–88-ல் துவக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இது இத்துறையின் புதிய முயற்சிகளில் ஒன்றாகும்.

14. நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு புதிய சரக அலுவலகம் அமைக்கும் திட்டம் 1987–88-ல் ஒப்பளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## கைத்தறிக் கணக்கெடுப்பு :

15. தேசீய கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக தமிழ்நாட்டிலும் கைத்தறி கணக்கெடுப்பு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கணக்கெடுப்பிற்கு ஆகும் செலவை அலுவலர்களுக்கு வழங்கும் சம்பளம் நீங்கலாக மீதி செலவை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் இக்கணக்கெடுப்புப் பணி கைத்தறி மற்றும் துணிநூல் இயக்ககத்தால் மேற்கொள்ளப்பட உள்ளது.



## முடிவுரை :

16. சுருங்கக்கூறின், மிகத் தொன்மை வாய்ந்த, வேலை வாய்ப்பு மிக்க கைத்தறி தொழிலை ஆலைகள் மற்றும் விசைத்தறிகள் போட்டியிலிருந்து பாதுகாப்பதே அரசின் கொள்கையாகும். அதே நேரத்தில், விசைத்தறி மற்றும் ஆலைத் தொழில் அபிவிருத்திக்கும் அரசு நடவடிக்கை எடுக்கும். இம் மூன்று பிரிவுகளுக்கிடையே உள்ள ஆரோக்கியமற்ற போட்டியைத் தவிர்த்து ஒன்றுக்கொன்று இணையாக வளர தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் கடந்த ஆண்டுகளில் சில வளர்ச்சித் திட்டங்களில் அடைந்துள்ள முன்னேற்றங்கள் மற்றும் சில அடிப்படைத் தகவல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கைத்தறி மற்றும் துணிநூல் துறை.

**கைத்தறி** தொழிலின் அடிப்படை தகவல்கள் மற்றும்: ஆறாவது மற்றும் ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் இரண்டு ஆண்டுகளில் முன்னேற்றம்—ஒரு கண்ணோட்டம்.

| (1) | 1980-81 (2) | 1981-82 (3) | 1982-83 (4) | 1983-84 (5) | 1984-85 (6) | 1985-86 (7) | 1986-87 (31-1-87) (8) |
|---|---|---|---|---|---|---|---|
| **(1)** தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்: — | | | | | | | |
| 1. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை. | 1187 | 1312 | 1468 | 1556 | 1590 | 1606 | 1654 |
| 2. கைத்தறிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 2.63 | 3.00 | 3.33 | 3.56 | 3.75 | 3.82 | 3.89 |
| 3. ஆண்டொன்றுக்கு உற்பத்தி (ரூபாய் கோடியில்). | 72.27 | 86.77 | 115.24 | 139.97 | 157.36 | 162.47 | 148.28 |
| 4. ஆண்டொன்றுக்கு விற்பனை (ரூபாய் கோடியில்). | 75.41 | 96.26 | 112.28 | 117.74 | 155.29 | 182.43 | 156.42 |
| 5. நடைமுறை மூலதனம் (ரூபாய் கோடியில்). | 20.72 | 24.31 | 40.91 | 53.58 | 56.25 | 70.54 | 80.78 |
| 6. நவீனப்படுத்தப்பட்ட தறிகளின் எண்ணிக்கை. | 68.83 | 80.86 | 52·64 | 58.83 | 1,16.11 | 43.62 | 100.00 (இலக்கு). |
| 7. தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை. | 103 | 126 | 144 | 151 | 170 | 170 | 179 |
| **(2) கோ-ஆப்டெக்ஸ்—** | | | | | | | |
| 1. கொள்முதல் (ரூபாய் கோடியில்). | 30.27 | 62.56 | 70.46 | 72.12 | 55.00 | 81.00 | 66.85 |
| 2. விற்பனை (ரூபாய் கோடியில்). | 48.00 | 70.65 | 82.81 | 106.00 | 72.06 | 120.00 | 88 36 |
| 3. பயன்படுத்தப்பட்ட நடைமுறை மூலதனம் (ரூபாய் கோடியில்). | 15.00 | 22.00 | 40.00 | 40.00 | 50.00 | 70.00 | 75.00 |
| 4. விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை. | 475 | 525 | 626 | 626 | 630 | 570 | 550 |
| **(3) கூட்டுறவு நூற்பாலைகள்—** | | | | | | | |
| 1. கதிர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 3.14 | 3.24 | 3.32 | 3.33 | 3.35 | 4.50 | 4.55 |
| 2. முதலீடு (ரூபாய் இலட்சத்தில்). | 2250 | 2888 | 3210 | 3210 | 3210 | 5215 | 5215 |
| 3. உற்பத்தி (ரூபாய் இலட்சத்தில்). | 4007.89 | 4184 | 5810.22 | 5967.61 | 6472.36 | 7960.07 | 8196.34 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4. விற்பனை (ரூபாய் இலட்சத்தில்). | 3995.61 | 4773 | 6003.99 | 5844.07 | 6366.21 | 7862.86 | 9099.09 |
| 5. நடைமுறை மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்). | 1000 | 1845 | 1239 | 1292 | 1389 | 1948 | 2071 |

(4) தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை, ஈரோடு—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. துணிகளை வெளுத்தல், சாயமிடல் (இலட்சம் மீட்டரில்). | 40 | 45 | 41 | 35 | 36 | 32 | 30 |

(5) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. அனுமதிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை. | 2500 | 2700 | 1960 | 2028 | 2226 | 2879 | 1977 |
| 2. அனுமதிக்கப்பட்ட கடன் தொகை (ரூபாய் இலட்சத்தில்). | 262 | 305 | 166.78 | 196.55 | 287.75 | 441.17 | 279.37 |

(6) தமிழ்நாடு சரிகை நிறுவனம், காஞ்சிபுரம்—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. சரிகை உற்பத்தி (மார்க்குகளில்). | 4000 | 4500 | 10561 | 8330 | 5114 | 12453 | 11775 |
| 2. விற்பனை மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்). | 39.00 | 54.00 | 107.74 | 103.33 | 68.21 | 196.80 | 168.34 |



(7) நல்வாழ்வுத் திட்டங்கள்—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட நெசவாளர்கள். | 70000 | 81200 | 88500 | 102300 | 104331 | 116277 | 1,25,000 (இலக்கு). |
| 2. நெசவாளர் வீட்டுவசதி திட்டம் (வீடுகளின் எண்ணிக்கை). | 548 | 156 | 350 | 671 | 211 | 741 | 794 |

## இணைப்பு II.

(81-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

### கொள்கை விளக்கக் குறிப்பு.

### தமிழ் நாட்டில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி.

### மானியக் கோரிக்கை எண். 33.

### வீட்டு வசதி.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு, ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவர்களது திறனுக்கு ஏற்ற குடியிருப்புகளை அமைத்துத் தருவதே அரசின் வீட்டுவசதிக் கொள்கையாகும். இதற்கென பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள், வீடுகள், மேம்படுத்தப்பட்ட மனைகளை ஏற்படுத்தித் தர ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இது தவிர, பல்வேறு சமூக நலப் பிரிவு மக்களையும் தாங்களாகவே வீடுகள் கட்ட ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு நிதி நிறுவனங்கள் மூலம் நிதியுதவி பெற்றுத் தருவதற்கான வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தரப்படுகின்றன. வீடு கட்டும் துறையில் பொது நிறுவனங்கள் ஈடுபடுவது வீடுகள் மற்றும் மனைகளின் பொதுவான விலை நிலையை தனியார் துறையிலும் கட்டுப்படுத்த உதவுகிறது.

மேற்சொன்ன கொள்கையை நிறைவேற்றும் முகத்தான் கீழ்வரும் மிக முக்கியமான நடைமுறைகளை அரசு நிர்ணயித்துள்ளது :—

(அ) பல்வேறு வருமான வரம்பு உள்ளவர்கள், பயன் பெறும் வகையில், வீடுகளையும், மனைகளையும், '' உடனடி விற்பனை '' மற்றும் '' தவணை முறை விற்பனை '', அடிப்படையில் உருவாக்கித் தருவது.

(ஆ) நிலங்களை மேம்படுத்தி அத்தியாவசியமான அடிப்படை வசதிகளுடன் கூடிய வீட்டு மனைகளை ஏற்படுத்துவது.

(இ) தனிப்பட்டவர்களே தங்கள் தேவைக்கு ஏற்றவாறு வீடுகளைக் கட்டிக் கொள்ளத் தேவையான நிதி உதவிகளை நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்று உதவுவது.

(உ) குடிசைப் பகுதிகளை அகற்றி, அப் பகுதிகளில் அடுக்கு குடியிருப்புகளை அமைத்து குடிசை வாழ் மக்களுக்கு மறு வாழ்வளிப்பது.

(ஊ) குடிசைப் பகுதி வாழ் மக்கள் தங்கள் குடியிருப்புகளை மேம்படுத்திக் கொள்ள மேம்பாட்டுக் கடனுதவி அளிப்பது.



(எ) நகர்ப்புற மற்றும் கிராமப்புற வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது உறுப்பினர்கள் வீடு கட்டிக் கொள்ளத் தேவையான கடனுதவியை அளிக்கத்தக்க நிதி ஆதாரங்களுக்கு வழிவகை செய்து கொடுப்பது.

(ஏ) அரசு ஊழியர்களுக்கு வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதற்கென வீடுகளைக் கட்டுவது.

(ஐ) வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் குடும்பங்கள் தங்களுக்குத் தேவையான வீடுகளை அமைத்துக் கொள்ளும் வகையில் அரசு உதவி செய்வது.

மேற் கூறப்பட்ட திட்டங்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட கீழ் வரும் மூன்று பொது நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.—

(1) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.
(2) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்.
(3) தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்.

கடந்த வரவு-செலவு திட்டக் கூட்டத் தொடரில், வறுமைக் கோட்டில், குறிப்பாக, கிராமப் புறங்களில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு பெரிய அளவிலான வீட்டு வசதித் திட்டம் செயலாற்றப்படும் என அரசு அறிவித்தது, இத் திட்டம் பற்றி விரிவான அறிக்கை ஒன்று கொள்கை விளக்கக் குறிப்பின் பின் பகுதியில் தரப்பட்டுள்ளது.

மைய அரசு, அண்மையில் ரூ. 100 கோடி முதலீட்டில் ஒரு '' தேசிய வீட்டு வசதி வங்கி '' ரிசர்வ் வங்கியால் அமைக்கப்படும் என அறிவித்துள்ளது. இவ்வங்கி மண்டல மற்றும் வட்டார வீட்டு வசதி நிதி நிறுவனங்களுக்கு உதவி அளிக்கும் எனவும் அறிவித்துள்ளது. இது ஒரு வரவேற்கத்தக்க முயற்சியாகும். இவ்வங்கி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் போன்ற தமிழக அரசின் நிறுவனங்களுக்கு பெரிய அளவில் வீட்டு வசதித் திட்டங்களை மேற்கொள்ளத் தேவையான நிதி உதவிகளை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.

திட்டமிட்ட வீட்டு வசதித் திட்டங்களை நடைமுறைப் படுத்தும் பொருட்டு 1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் உருவாக்கப்பட்டது. மேம்படுத்தப்பட்ட மனைப் பிரிவில் தேவையான வசதிகளுடன், குறைந்த, நடுத்தர மற்றும் உயர் வருமானப் பிரிவினரான அனைத்து சமூகப் பிரிவினரும் வீடுகளைப் பெற வேண்டும் என்ற நோக்கில் வீட்டு வசதி வாரிய செயல் முறை வகுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் அதன் துவக்க காலத்திலிருந்து 1986–87-ஆம் நிதியாண்டு முடிய பல்வேறு வருமான வரம்பு அடிப்படையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கையும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ள வீடுகளின் தகவல்களும் இணைப்பு I-ல் கொடுக்கப்பட்டுள்ளன. 1987–88-ஆம் நிதியாண்டில் மொத்தம் 17,000 வீடுகள் மனைகள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் விவரங்கள் கீழ்வருமாறு :—

| | குடியிருப்புகள். |
|---|---|
| 1 (அ) பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்காக (தன்னிறைவு வீட்டு மனை திட்டம்) | 4,775 |
| (ஆ) வருவாயில் நலிந்த பிரிவினருக்கு நிதி உதவித் திட்டம். | 5,695 |
| 2 குடிசை மாற்றுத் திட்டங்கள் | 96 |
| 3 குறைந்த வருவாய்ப் பிரிவினருக்காக .. .. | 8,261 |
| 4 நடுத்தர மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினருக்காக | 2,011 |
| 5 தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகை குடியிருப்பு வீட்டு வசதித் திட்டங்கள். | 1,162 |
| மொத்தம் .. | 17,000 |

பல்வேறுபட்ட வருமான வரம்பினருக்கான திட்டங்கள் :—

வீட்டு வசதித் திட்டங்கள் பல்வேறு வருவாய்த் தொகுதியினருக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

குறைந்த வருவாய் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டங்கள் :

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குறைந்த வருவாய் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டங்களை ரூ. 8,401 முதல் ரூ. 18,000 வரை ஆண்டு வருமானம் பெறுபவர்களின் நலனுக்காக செயற்படுத்தி வருகின்றது. இப் பிரிவின் கீழ் கட்டப்படும் குடியிருப்பின் உச்ச வரம்பு விலை ரூ. 30,000 ஆகும். குடியிருப்பின் விலையில் 25 சதவீதம் முன் வைப்புத் தொகையாகவும், மீதத் தொகை 13 ஆண்டுகளில் (இரு ஆண்டு திட்டக் காலம் நீங்கலாக) மாதத் தவணைகளில் 9 சதவீதம் வட்டி விகிதத்தில், ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து பெறப்படும். வீட்டு வசதி வாரியம்



பிப்ரவரி 1987 வரை இத் திட்டத்தின் கீழ் 27,043 குடியிருப்புகளை கட்டியுள்ளது. 1987–88-ஆம் ஆண்டில் 2,261 குடியிருப்புகளை ஹட்கோ மற்றும் அரசின் உதவியுடன் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் அரசின் பங்கு ரூ. 100 இலட்சமாகும்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குறைந்த வருவாய் பிரிவினருக்கு ஹட்கோ நிதி உதவியுடன் வீடு கட்ட கடன் வழங்கும் திட்டத்தை இவ்வாண்டு அறிமுகப்படுத்த உள்ளது.

நடுத்தர வருவாய் மற்றும் உயர் வருவாய் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டங்கள் :

நடுத்தர வருவாய் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டங்களை ரூ. 18,001 முதல் ரூ. 30,000 வரை ஆண்டு வருமானம் பெறுபவர்களின் நலனுக்காக செயற்படுத்தி வருகின்றது. இப் பிரிவின் கீழ் கட்டப்படும் பிரிவு ச (எம். ஐ. ஜி. 1) மற்றும் பிரிவு II (எம். ஐ. ஜி. 2) குடியிருப்பின் உச்சவரம்பு விலை முறையே ரூ. 60,000 மற்றும் ரூ. 1,00,000 ஆகும். இப் பிரிவின் கீழ் கட்டப்படும் குடியிருப்பின் விலையில் 30 சதவீதம் முன் வைப்புத் தொகையாகவும், மீதத் தொகை 13 ஆண்டுகளில் (இரு ஆண்டு திட்ட காலம் நீங்கலாக) 11 சதவீதம் மற்றும் 120 சதவீதம் வட்டி விகிதத்தில் மாதத் தவணைகளில் ஒதுக்கீடுதாரர்கள் இடமிருந்து பெறப்படும். நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கும் ஹட்கோ உதவியுடன் சில குறிப்பிட்ட நகரங்களில் கடன் உதவி அளிக்கும் திட்டம் செயலாற்றப்படும்.

உயர் வருவாய் பிரிவினருக்கான வீட்டு வசதி திட்டங்களை ரூ. 30,000க்கு மேல் மாத வருமானம் பெறுபவர்களின் நலனுக்காக செயற்படுத்தி வருகின்றது. இப் பிரிவின் கீழ் கட்டப்படும் குடியிருப்பின் உச்சவரம்பு விலை ரூ. 2,50,000 ஆகும். இப் பிரிவின் கீழ் கட்டப்படும் குடியிருப்பின் விலையில் 30 சதவிகிதம் முன்வைப்புத் தொகையாகவும், மீதத் தொகை 13 ஆண்டுகளில் (இரு ஆண்டு திட்ட காலம் நீங்கலாக) 13½ சத விகிதம் வட்டி விகிதத்தில் மாதத் தவணைகளில் ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து பெறப்படும் . வீட்டு வசதி வாரியம் நடுத்தர மற்றும் உயர் வருவாய் பிரிவினருக்கு பிப்ரவரி 1987 வரை 28,227 குடியிருப்புகளை கட்டியுள்ளது. 1987-88-ஆம் ஆண்டில் இத்திட்டங்களின் கீழ் 3,011 குடியிருப்புகளை கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நிலம் கையெடுப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள்.

நிலம் கையெடுப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் முன்னதாகவே, பெரிய அளவில் நிலத்தை கையெடுப்பு செய்வதன் நோக்கம் நியாயமான விலையில் வீட்டு வசதிக்கு நிலம் கிடைக்வகை செய்வதும், நிலத்தின் விலையை நிலை நிறுத்தவு

மற்றும் வளரும் நகர்ப்புறங்களில் நெருக்கடியை குறைப்பதும் ஆகும். 1987—88-இல் வீட்டு வசதி வாரியம் சுமார் 1,300 ஹெக்டேர் நிலத்தை மேம்படுத்துவதற்காக கையகப்படுத்தும். 1987—88-ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் இதற்காக ரூ. 150 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாடு வீட்டுவசதி வாரியம் கட்டுமான திட்டங்களை மட்டும் செயல் படுத்தாமல் பெரிய அளவில் நிலமேம்பாட்டுத் திட்டங் களை செயல்படுத்தி எல்லா வசதிகளுடன்கூடிய வீட்டு மனை களை பொது மக்களுக்கு அளிக்க முயற்சி செய்து வருகிறது. குடியிருப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்க பொதுமக்களின் முயற்சியை ஊக்குவிக்கும் புதிய கடனுதவித் திட்டம் அனைத் துப் பிரிவினருக்கும் அறிமுகப்படுத்தி பொதுமக்கள் விரைவில் வீடுகளை கட்ட உதவ திட்டமிடப்பட்டுள்ளது.

## குடிசை மாற்று/அபிவிருத்தி திட்டங்கள்.

சென்னைப் பெருநகர் நீங்கலாக ஏனைய நகர்ப்புறங்களில் வீட்டுவசதி வாரியம் இத்திட்டத்தை 1961 முதல் செயற் படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 19,964 குடியிருப்பு களை தமிழகம் முழுவதும் வாரியம் கட்டிமுடித்துள்ளது. தற்பொழுது இத்திட்டம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வீட்டு வசதி வாரியம் எஞ்சியுள்ள திட் ங்களை மட்டும் தற்பொழுது நிறைவேற்றி வருகின்றது.

1987—88 ஆம் ஆண்டு ஈரோட்டில் 6 குடியிருப்புகளை இத்திட்டத்தின் கீழ் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தை செயல்படுத்த வரவு-செலவு திட்டத்தில் ரூ. 40.00 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகை வீட்டு வசதித் திட்டம் :

இத்திட்டத்தின் மூலம் சென்னை நகரம், அனைத்து மாவட்டங்கள் மற்றும் வருவாய்த்துறை பிரிவு தலைமை யகங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்களின் நலனுக்காக ஊக்குதவி வாடகையில் ( Subsidised Rent ) வாடகை குடியிருப்பு கட்டப்படுகிறது. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தமிழக அரசு சார்பில் இத்திட்டங்களை செயல் படுத்துவது மட்டுமின்றி, குடியிருப்புகளை கட்டி முடிந்தபின், அவைகளை பராமரித்தும் வருகின்றது. இக்குடியிருப்புகள் அரசுக்கு சொந்தமானதாகும். வீட்டுவசதி வாரியம் இத்திட் டத்தின் கீழ் பிப்ரவரி 1987 வரை 18,370 குடியிருப்புகளை கட்டி முடித்துள்ளது. இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாக பிரிக்கப்பட்டதினாலும், திருநெல்வேலி இரண்டாகப் பிரிக் கப்பட்டதினாலும் தோற்றுவிக்கப்பட்ட புதிய தலைநகரங்





களான சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் சிறப்பு வீட்டுவசதி திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. 1987—88 ஆம் ஆண்டில் ரூ.800 இலட்சம் மதிப்பீட்டில் மேலும் 1,162 குடியிருப்புகளை கட்டிமுடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் இச்சிறப்பு நில மேம் பாட்டுத் திட்டத்தை சென்னை நகர்ப்புற அபிவிருத்தித் திட் டத்தின்கீழ் செயற்படுத்துகின்றது. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் நகர்ப்புற ஏழை மக்களின் வீட்டு வசதி நிலையை மேம்படுத்தும் பொருட்டு எல்லா அடிப்படை வசதி களுடன் கூடிய வீட்டு மனைகளை அவர்களால் கொடுக்கக் கூடிய விலையில் அளிப்பதே ஆகும். பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு குறைந்த விலையில் மனைகள் வழங்கும் பொருட்டு மற்ற பிரிவினருக்கான மனைகள் கூடுதல் விலைக்கு விற்கப்பட்டு அவ்வாறு கிடைக்கும் தொகை இவர்களுக்கு மான்யமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. ( Cross Subsidisation ) மேலும் இத்திட்டத்தின் மூலம் ஒதுக்கீடுதாரர்களின் நிதி நிலையை பயன்படுத்தி அவர்களை வீடு கட்டும் பணியில் ஊக்குவித்து பங்கு பெறச் செய்வதும் முக்கிய நோக்கமாகும்.

## சென்னை நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் 1.

சென்னை நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் 1-ன் கீழ் தன்னிறைவு வீட்டு மனைத் திட்டத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அரும்பாக்கம், வில்லிவாக்கம் மற்றும் கொடுங் கையூர் ஆகிய பகுதிகளில் ரூ.1,517 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தி வருகிறது. திட்டப்பணிகள் முடியும் தறு வாயிலுள்ளது.

## சென்னை நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் 2—மொகப்பேர் திட்டம்.

இத்திட்டத்தின் மூலம் கிழக்கு மொகப்பேரில் 74.49 ஹெக்டேர் நிலத்தையும் மற்றும் மேற்கு மொகப்பேரில் 74.13 ஹெக்டேர் நிலத்தையும் மேம்படுத்தி 10,755 குடியிருப்புகள் ரூ. 1,724.43 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு திட்டம் முடியும் தறுவாயில் உள்ளது.

## மதுரவாயில் திட்டம்.

நெற்குன்றம் பகுதியில் நிலம் கையகப்படுத்த இயலாத தால், நெற்குன்றம் பகுதிக்கு மாற்றாக மதுரவாயில் பகுதி யிலும் 25.83 ஹெக்டேர் நிலம் நான் கையகப்படுத்த முடிந் தது. 1986—87 ஆம் ஆண்டுவரை 2,994 அடிப்படை வசதி களுடன் கூடிய குடியிருப்புகள் இப்பகுதியில் கட்டப்பட்டன. 1987—88 ஆம் ஆண்டு மேலும் 1,055 குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

[1987 மே 6

## மணலி திட்டம்.

மதுரவாயில் பகுதியில் தேவையான நிலம் கையகப் படுத்த இயலாததால், மணலி பகுதி மாற்று இடமாக தேர்ந்தெடுக்கப்பட்டு, சென்னை நகர்ப்புற அபிவிருத்தி திட்டம் 2 செயல் படுத்தப்படுகிறது. சென்னை நகர்ப்புற அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 1986–87 ஆம் ஆண்டில் 3,053 குடியிருப்புகள் கட்டப்பட்டன. 1987–88 ஆம் ஆண்டில் 3,720 குடியிருப்புகள் கட்டப்பட உள்ளன.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், 1987–88 ஆம் ஆண்டு பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு புதிய கடன் உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் ஹட்கோ நிதி உதவியுடன் 4,403 குடியிருப்புகளுக்கு, மொகப்பேர் (கிழக்கு) திட்டப் பகுதியில் நிதி உதவி செய்ய திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட மனைகளின் விபரங்கள் அடங்கிய பட்டியல் இணைப்பு-II-ல் தரப்பட்டுள்ளது.

## துணைப் பணித் திட்டங்கள்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் அபிவிருத்தி செய்யப்படும் திட்டங்களில், ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரிகள், கடைப்பகுதி, மற்றும் வணிக வளாகம், தபால் நிலையம், பெட்ரோல் பங்க், தொலைபேசி இணைப்பகம், காவல்நிலையம் அலுவலக வளாகம், சமூக கூடம், பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் ஆகியவற்றை அமைக்க இடம் ஒதுக்கப்படுகிறது. மேற் கூறிய சமூக வசதிகளுடன் நல்ல சாலைகள், குடிநீர் மற்றும் வடிகால் அமைப்பு திட்டங்களும் உடன் செயற்படுத்தப்படுகின்றன. மேற்கூறிய சேவைகள் பொது மக்களின் வீட்டு வசதி தேவையுடன் சமூக தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன.

வீட்டு வசதிக்கு தேவையான முக்கிய ஆதாரங்கள் நிலமும் நிதி வசதியுமாகும். இருக்கின்ற நிதி வசதிகளைக் கொண்டு, திறமையாக நிலங்களை பயன்படுத்தி குறைந்த விலையில் தரமான குடியிருப்புகளை கட்ட நிபுணர்களின் சிறப்பு அறிவுரை பெற்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செயற்பட்டு வருகிறது. வாரியம் இருக்கும் நிதியை திறம்பட பயன்படுத்தும் பொருட்டு வணிக கணக்குமுறை, இருப்பு நிலை குறிப்பு தயாரித்தல் ஆகியவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது. தவணைமுறை அடிப்படையில் வீடுகளை விற்பது தொடர்பான கணக்குகளை நிர்வகிப்பதில் பல நவீனமாக்கும் முயற்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக புகுத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய மாற்றங்களால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இன்னும் சிறப்பான முறையில் பொது மக்களுக்கு திருப்தி அளிக்கும் வகையில் திறமையாக செயல்படும்.



1987 மே 6]

## வீட்டு வசதித் திட்டங்களுக்கு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக்கழக (Hudco) நிதியுதவி.

வீட்டு வசதித் திட்டங்களுக்கென பல்வேறு வீட்டு வசதி நிறுவனங்களிலிருந்து பெறும் கடனுதவியில் "அட்கோ" வின் பங்கு மிகவும் முக்கியமானதாகும்; கணிசமானதும் ஆகும். அட்கோ கடனுதவி, அரசு உத்திரவாதத்தின் (பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர், குறைந்த வருவாய் பிரிவினர், மற்றும் இவை இணைக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பாக) அடிப்படையிலும், வாரியச் சொத்துக்களை அடமானம் வைப்பதன் மூலமும் பெறப்படுகிறது.

நிதி ஆதாரங்கள் பல்வேறு பிரிவினரிடையே கீழ்வரும் முறைப்படி பாகுபடுத்தப்படல் வேண்டும்:—

| பிரிவு. | நிதி ஒதுக்கீடு சதவீதம். |
|---|---|
| பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் கிராமப் புறம் (அடிப்படை வசதி திட்டம் உட்பட). | 15 |
| பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் (அடிப் படை வசதித் திட்டம் உட்பட) நகர்ப்புறம். | 15 |
| குறைந்த வருவாய் பிரிவினர் .. .. | 25 |
| மற்ற பிரிவினர் .. .. .. .. | 45 |

கீழ்வரும் பட்டியல், அட்கோ நிறுவனத்திடமிருந்து சில ஆண்டுகளில் பெறப்பட்ட நிதியுதவியைக் காட்டும்.

| வருடம். | கடனுதவி. ஒதுக்கீடு | கடனுதவி. பெறப் பட்டது. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் கோடியில்). | |
| 1980–81 .. .. | 11.91 | 13.39 |
| 1981–82 .. .. | 13.92 | 14.34 |
| 1982–83 .. .. | 23.56 | 19.37 |
| 1983–84 .. .. | 25.15 | [illegible] |

| வருடம். | கடனுதவி. | |
|---|---|---|
| | ஒதுக்கீடு. | பெற்றப்பட்டது. |
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் கோடியில்). | |
| 1984-85 .. .. | 26.75 | 30.25 |
| 1985-86 .. .. | 37.45 | 38.69 |
| 1986-87 .. .. | 36.45 | 45.03 |

1986-87 ஆம் ஆண்டில்தான் மிக அதிக அளவில் அட்கோவிலிருந்து நிதி உதவி பெறப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்.

1971 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் சென்னை மாநகரில் கீழ்க்காணும் மூன்று குறிப்பிடத் தக்க திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

1. குடிசைகளை அகற்றுதல் மற்றும் குடியிருப்புகளைக் கட்டுதல்.

2. விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டம்.

3. சென்னை பெருநகர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள்.

1983-84 ஆம் ஆண்டு வரை குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகள், சென்னை மாநகரத்தில் மட்டும் நடைபெற்றன. பின்பு, இவ்வாரியத்தின் பணிகளை கட்டம் கட்டமாக பிற நகர்ப்புற மையங்களுக்கு விரிவுபடுத்த முடிவெடுக்கப்பட்டது. தற்போது குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் சென்னையைத் தவிர 46 நகரங்களுக்கு விரிவுபடுத்தப் பட்டுள்ளன.

### குடிசைப் பகுதிகளை அகற்றுதல் மற்றும் குடியிருப்புகளைக் கட்டுதல்:

இத்திட்டத்தின் கீழ் குடிசைப் பகுதிகளை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு, அவைகளில் குடியிருக்கும் குடிசைவாசிகளுக்கென்று குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. இக் குடியிருப்புகள் வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. தற்போதுள்ள மாத வாடகை ரூ. 20 மட்டுமே. தகுதி வாய்ந்த-



வர்களுக்கு இக்குடியிருப்புகளை நீண்டகாலத் தவணை முறையில் அளிக்கலாம் என்று ஒரு கொள்கை முடிவும் எடுக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் 8,091 குடியிருப்புகள் நீண்ட காலத் தவணை முறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

1985-86 ஆம் ஆண்டு வரை, சென்னை மாநகரிலும், ஈரோட்டிலும் ரூ. 4,321.50 இலட்சம் செலவில் 46,492 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. சமீப ஆண்டுகளில் குடியிருப்பு கட்டும் திட்டத்திற்கு அரசு மானியம் மற்றும் அட்கோ கடன் உதவியும் பெறப்படுகிறது. 1985-86 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், அட்கோவிடமிருந்து ரூபாய் 646 இலட்சம் கடனாகப் பெற்றுள்ளது.

1986-87 ஆம் ஆண்டில், 688 குடியிருப்புகள் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பணி தற்போது முன்னேற்றத்தில் உள்ளது. இதற்கென அரசு மானியமாக ரூ. 175 இலட்சமும் அட்கோவிடமிருந்து கடனாக ரூபாய் 253.80 இலட்சமும் பெறப்பட்டுள்ளது.

1987-88ஆம் ஆண்டில் 1,000 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும். இத்திட்டத்திற்கான அரசு மானியம் ரூ. 200 இலட்சமாகும். அட்கோவிடமிருந்து கூடுதலாக ரூ. 300 இலட்சம் கடனாகப் பெறப்படும்.

### குறைந்த விலை வீட்டு வசதித் திட்டம் :

சமீப ஆண்டுகளில், குடியிருப்பின் விலை மிகவும் உயர்ந்துள்ளது. இந்தப் பிரச்சினையிலிருந்து மீள்வதற்கென நலிந்த பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் வெளியூர்ப் பகுதிகளில் உள்ள குடிசை வாசிகளுக்கு நன்கு திட்டமிடப்பட்டுள்ள வீட்டு மனைப் பிரிவு வசதி செய்யப்பட்ட பகுதிகளில் வீட்டு வசதியையும், அடிப்படை வசதிகளையும் அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். முடிந்தவரை உள்ளூரிலேயே கிடைக்கும் கட்டிடப் பொருட்களைப் பயன்படுத்தி, அதிகரித்துவரும் செலவைத் தடுத்து குறைந்த செலவில் கட்டுவதற்கான தொழில் நுட்பம் மேற்கொள்ளப்பட உள்ளது. இவ்வீடுகள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளைப் போல் வாடகை முறையிலோ அல்லது நீண்டகாலத் தவணை முறையிலோ ஒதுக்கீடு செய்யப்படும்.

1986-87ஆம் ஆண்டில் மதுரை பெரியார் நகரில், ரூபாய் 232 இலட்சம் செலவில் 2,010 வீடுகளை நலிவுற்ற குடிசைவாசிகளுக்கு கட்டுவதற்கான இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இத் திட்டம் 1987-88 ஆம் ஆண்டில் முடிவு பெறும். 1987-88 ஆம் ஆண்டில் சென்னை பெருநகர் பகுதியில் ரூ. 90 இலட்சம் செலவில் சுமார் 910 வீடுகளை ஏழை மக்களுக்கு அளிப்பதற்கென செயல்முறைகளை குடிசைப்பகுதி மாற்று வாரியம் வகுத்து வருகிறது.

[1987 மே 6

### தன்னிறைவு வீட்டு மனைகள் வழங்கும் திட்டம்:

குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் கைவசமுள்ள சில காலி நிலங்களில், தன்னிறைவு வீட்டு மனைகள் வழங்கும் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

1986–87 ஆம் ஆண்டில் ரூ. 46.17 இலட்சம் மதிப்பீட்டில் அட்கோ கடன் உதவியுடன் 1,026 மனைகள் மேம்படுத்தும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது.

### விரைவுபடுத்தப்பட்ட குடிசை மேம்பாட்டுத் திட்டம் :

இத் திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதியென அறிவிக்கை செய் யப்பட்ட குடிசைப் பகுதிகளில், சாலைகள், பொதுக் குடிநீர் வசதி, தெரு விளக்குகள் மற்றும் பொதுக் கழிப்பிடங்கள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. 1985–86 ஆம் ஆண்டுவரை, 68,018 குடும்பங்கள் பயனடையும் வண்ணம் ரூபாய் 495 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1986–87 ஆம் ஆண்டில், மேலும் 5,600 குடும்பங்கள் ரூ. 70 இலட்சம் செல வில் பயன் அடையும். 1987–88 ஆம் ஆண்டில் 6,400 குடும் பங்கள் பயனடையும் வண்ணம் இத் திட்டம் செயல்படுத்தப் படும். இதற்காக ரூ. 80 இலட்சம் நிதி ஒதுக்கீடு கோரப்பட் டுள்ளது.

### சென்னை பெருநகர் திட்டத்தின் கீழ் குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் (உலக வங்கி நிதியுதவித் திட்டம்):

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் முக்கியப் பகுதி குடிசைப் பகுதி மேம்படுத்தும் பணியாகும். இத் திட்டம் சுற்றுப்புற மேம் பாடு, நில உரிமை வழங்கல் மற்றும் குடிசைவாழ் குடும்பங்களின் வருமானத்திற்கேற்ப ரூ. 1,500 முதல் ரூ. 3,500 வரை மேம் பாட்டுக் கடன் வழங்குதல் முதலியவற்றை தன்னகத்தே கொண் டுள்ளது.

சென்னை பெருநகர் வளர்ச்சி திட்டம் பாகம் 1-ன் கீழ் ரூ. 403 இலட்சம் செலவில் 24,862 குடும்பத்தினர் பயனடையும் வகை யில் மேம்பாட்டுப்பணியை மேற் கொண்டது. 1977 ஆம் ஆண்டு தொடங்கிய இத்திட்டம் 1982 ஆம் ஆண்டு முடிவடைந்து. சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் பாகம் 2-ன் கீழ் ரூ. 2,780 இலட்சம் செலவில் தொடர்ந்து இத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. 1985–86-ஆம் ஆண்டு முடிய ரூ.1,741.68 இலட்சம்செலவில் 43,095 குடும்பங்கள் பயனடைந் துள்ளன.



1987 மே 6]

1985–86 வரை 37,408 குடும்பங்கள் நிலஉரிமை பெறுவதற் காக குத்தகை மற்றும் விற்பனை ஒப்பந்தப் பத்திரத்தை பெற் றுள்ளனர். அவர்களில் 28,153 குடும்பங்களுக்கு ரூ. 582.85 இலட்சம் வீட்டு மேம்பாட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

1986–87 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட் டுள்ள ரூ. 130 இலட்சத்தில் ரூ. 90 இலட்சம் மேம்பாட்டுப் பணிகளுக்காகவும் மீதியுள்ள ரூ. 40 இலட்சம் 7,500 குடும் பங்கள் பயனடைவதற்காக கடன் வழங்கவும் செலவிடப் படும். இத்திட்டத்தின் மூலம் சென்னைப் பெருநகரில் பெரும் வெள்ளம் ஏற்படும்போது குடிசைவாழ் மக்கள் வெள்ளத் தினால் பாதிக்கப்படாமலிருக்க சென்னை மாநகராட்சி சிறு வடிகால்களையும், பொதுப்பணித்துறை உட்புற வடிகால்களை யும் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் கட்டித் தரு கின்றன. 1985–86-ஆம் ஆண்டுவரை இத்திட்டத்தின் கீழ் ரூ. 437 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதற்கென,1986-87-ஆம் ஆண்டில் ரூ. 60.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியாலும், பொதுப்பணித் துறையினராலும் நிறைவேற்றப்படும் திட்டங்கள் முடிவடையும்போது தாழ்வான பகுதிகளில் வெள்ள அபாயத்தை எதிர் நோக்கி வாழும் பெரும் பாலான குடும்பங்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. இணைப்பு II-ல் கொடுக்கப்பட்டுள்ள விவரங் கள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் இந்நாள் வரையிலான சாதனைகளையும் மற்றும் 1987–88 ஆம் ஆண்டின் இலக்குகளையும் விளக்குகின்றது.

### வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டம் :

வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டமானது சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு உப பகுதியாகும். இத்திட்டமானது 1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல், தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திலுள்ள சமுதாய வளர்ச்சிப் பிரிவினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்குமுன் 1978-ஆம் ஆண்டு முதல் 1981 முடிய இத் திட்டம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் 1978ஆம் ஆண்டு முதல் 1987ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிய ரூ. 28.40 இலட்சம் செலவில் 5,855 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு தமிழக அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இப் பயிற்சித் திட்டமானது தானாகவே செயல்படும் நிறுவனங்கள் வணிக கூடங்கள் மற்றும் அரசு தொழில்நுட்பப் பள்ளிகள் ஆகியவை

களின் கூட்டு முயற்சியுடன் செயல்படுத்தப்படுகிறது. இதற்கென தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் போதனைப் பணியாளர்களுக்கு ஊதியம், கச்சாப் பொருட்கள், வாடகை மற்றும் நிர்வாக செலவு ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு, பயிற்சி பெறுபவர்களுக்கு பயிற்சிக்கால உதவித் தொகையும் வழங்குகிறது.

இந்த வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டம் பற்றி அண்மைக் காலத்தில் ஒரு ஆய்வு மேற் கொண்டபோது பயிற்சி பெற்றதன் விளைவாக பயிற்சி பெற்றவர்களில், சுயவேலை வாய்ப்பு பெற்றவர்களோடு சேர்த்து 59.3 சதவீத நபர்கள் வேலை வாய்ப்பு பெற்றதாக தெரிய வருகிறது. 29 சதவீத நபர்கள் சுய வேலையில் ஈடுபட்டு தீர்வு கண்டுள்ளனர். முன்னுரிமை பிரிவு கடன் வசதித் திட்டமானது இவர்களுக்கு ஓரளவு உதவியுள்ளது.

1987–88ஆம் ஆண்டில் ரூ. 12.94 இலட்சம் செலவில் 1,272 நபர்களுக்கு பயிற்சி வழங்க கருதப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தற்போதைய வேலைவாய்ப்பு நிலையைக் கருத்திற்கொண்டு புதிய பயிற்சிப் பிரிவுகளைத் தொடங்கிடவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது.

## வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள்.

### கிராமப்புற வீட்டுவசதித் திட்டம் :

கிராமப்புற வீட்டுவசதித் திட்டம் மாநிலம் முழுவதிலும் உள்ள 104 வட்ட மற்றும் கோட்ட அளவிலான பிரதம கிராமக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் வாயிலாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பிரதம கிராமப்புற வீட்டு வசதி சங்கங்கள் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் மூலம் பயனடைவோருக்கு வீடுகள் கட்டுவதற்காக கடன் வழங்குவதற்குத் தேவையான நிதியை மாநிலத்தின் தலைமை நிறுவனமான தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திடமிருந்து பெறுகின்றன. சமீபகாலம் வரை மாத வருமானம் ரூபாய் 350-க்கு மிகாமல் உள்ள கிராமப்புறங்களில் உள்ள பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்குக் கடனுதவி வழங்கப் பட்டு வந்தது. 1986–87 ஆம் நிதியாண்டு முதல் கடனுதவி பெற நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான வரம்மை ரூபாய் 350 லிருந்து ரூ. 700-க்கு அரசு உயர்த்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்ட வீடுகளில் உயர்ந்த பட்சம் மதிப்பு சமவெளிகளில் ரூ. 6,000 எனவும், மலைப்பகுதிகளிலும் இராமேஸ்வரம் தீவிலும் ரூ. 7,500 எனவும் மதிப்பிடப்பட்டு கீழ்க்கண்ட வகையில் நிதியுதவி வழங்கப்படுகிறது:—



| நிதி ஆதாரம். | சமவெளிகளில் (உயர்ந்த பட்ச மதிப்பீடு ரூ. 6,000). | மலைப் பகுதிகள் மற்றும் இராமேஸ்வரம் தீவில் (உயர்ந்த பட்ச மதிப்பீடு ரூ. 7,500). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூபாய். | ரூபாய். |
| அட்கோ நிறுவனக் கடன் .. | 3,000 | 3,000 |
| மாநில அரசுக் கடன் .. | 1,500 | 2,625 |
| பயனடைவோரின் பங்கு (உழைப்பாகவோ அல்லது கட்டிடப் பொருளாகவோ) | 1,500 | 1,875 |
| மொத்தம் .. | 6,000 | 7,500 |

தமிழ்நாடு ஆதி திராவிட வீட்டு வசதிக் கழகம் செயல்படுத்தும் வீட்டு வசதித் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புறுதித் திட்டம் ஆகியவற்றின் மூலம் ஆதி திராவிடர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தரப்படுவதனால், 1985–86 ஆம் ஆண்டு முதல் கிராமப் புற வீட்டு வசதித் திட்டத்தின் வாயிலாக ஆதி திராவிடர் அல்லாதவர்களுக்கு மட்டும் கடனுதவி வழங்க அரசு முடிவு செய்தது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவுவரை தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் வாயிலாக ரூ. 7,1[illegible] இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு 2,04,055 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. அவற்றில் 1,62,941 வீடுகள் ஆதி திராவிடர்களுக்காகவும் 41,114 வீடுகள் மற்றவர்களுக்காகவும் கட்டப் பட்டன.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு 5,000 வீடுகள் வீதம் மொத்தம் 25,000 வீடுகள் கட்ட ஆதி திராவிடரல்லாத பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு நிதியுதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டான 1985–86 ஆம் ஆண்டில் 5,000 வீடுகள் கட்ட நிதியுதவி வழங்கப் பட்டது. இது தவிர, முந்தைய ஆண்டுகளில் விடுபட்ட இரு[illegible]

களில் நிதியுதவி பெற்று கட்டி முடிக்கப்பட்ட வீடுகளையும் சேர்த்து 1985–86 ஆம் ஆண்டில் மொத்தம் 14,051 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. 1985–86 ஆம் ஆண்டு வரை கடனாகவும் முதலீட்டு மானியமாகவும் வழங்கப்பட்ட நிதியுதவி மற்றும் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை விவரங்கள் இணைப்பு IV-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

1986–87 ஆம் ஆண்டில் கிராமப்புற வீட்டு வசதித்திட்டத்தின் மூலம் வழக்கமாக நிதியுதவி வழங்கப்படும். 5,000 வீடுகள் தவிர பெருமளவு வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கூடுதலாக 35,000 வீடுகள் கட்ட நிதியுதவி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. 40,000 வீடுகள் கட்டுவதற்கு நிதியுதவி வழங்கத் தேவையான திட்ட முதலீடு ரூ. 24.06 கோடியாகும். இத்திட்டத்திற்கான 50 சதவிகிதம் கடனுதவி ரூ. 12.00 கோடியை வழங்குவதற்காக அட்கோ நிறுவனம் அணுகப்பட்டுள்ளது. வழக்கமாக கிராமப் புற வீட்டு வசதித் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்தும் இவ்வாண்டு பெருமளவு வீட்டு வசதித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இத்திட்டத்திற்காகப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள நிதியிலிருந்தும் மாநில அரசு பங்குக் கடனாக வழங்கப்பட வேண்டிய ரூ. 6.06 கோடியை அரசு வழங்கும். அட்கோ நிறுவனம் தவணை முறையில் வழங்கும் கடன் தொகை விடுவிப்பதற்காகக் காத்திராமல் 40,000 வீடுகள் கட்டும் பணியைத் துவக்க ஏதுவாக அவர்களுக்கு முதல் மற்றும் அடுத்த தவணைக் கடன் வழங்கும் பொருட்டு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்கு அரசு ரூ. 6.06 கோடி ஏற்கெனவே விடுவித்துக் கொடுத்துள்ளது.

<u>நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம் :</u>

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் மாநிலத்தில் உள்ள 406 பிரதம நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்கும் நிதியுதவி செய்யும் நிறுவனமாகச் செயல்படுகிறது. இதற்காக தலைமைச் சங்கம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து நிதியுதவி பெறுகிறது. தலைமைச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ள இப்பிரதம நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர், குறைந்த வருவாய் பிரிவினர், நடுத்தர வருவாய்ப் பிரிவினர் மற்றும் உயர்ந்த வருவாய் பிரிவினர் ஆகியோருக்கு ரூ. 10,000 முதல் ரூ. 80,000 வரை வீடு கட்டக் கடனுதவியளித்து வருகின்றன. தலைமைச் சங்கம் தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல் 1985–86ஆம் ஆண்டு வரை இச்சங்கம் பிரதம சங்கங்களுக்கு ரூ. 173.82 கோடியளவிற்குக் கடன் வழங்கியுள்ளது. 1986–87ஆம் நிதியாண்டில் 31–12–1986 வரை தலைமைச் சங்கத்தின் மூலம் அதன் பிரதம சங்கங்களுக்கு 2,857 வீடுகள் கட்ட ரூ. 12.56 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம் துவங்கப்பட்ட நாளிலிருந்து 31–12–1986 வரை ரூ. 186.38 கோடியளவிற்குக் கடன் வழங்கப்பட்டு மொத்தம் 86,087 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதன் விவரங்கள் இணைப்பு V-ல் கொடுக்கப்பட்டுள்ளன.



1986–87 ஆம் ஆண்டிற்கு பிரதம சங்கங்களுக்குக் கடன் வழங்குவதற்காக தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூ. 14.00 கோடி கடன் வழங்கியுள்ளது.

<u>கூட்டுறவுச் சங்கங்களின் சீரமைப்பு :</u>

தற்போது 12 விதமான வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை ஏறக்குறைய ஒரே மாதிரியான பணியை செய்து வருகின்றன. இதனால் மக்கள் உள்ளங்களில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமையத் தவிர்க்கும் பொருட்டு 4 அல்லது 5 விதமான சங்கங்களாகக் குறைக்கலாமென்று கருதப்படுகிறது.

பல நகரங்களிலும் மாநகரங்களிலும் தற்போது ஒன்றுக்கு மேற்பட்ட வீட்டு வசதிச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இது பல சங்கங்கள் பொருளதார ரீதியில் பலவீனமான முறையில் செயல்பட காரணமாக உள்ளது. எனவே, இத்தகைய் பல்வேறுபட்ட சங்கங்கள் ஒரே நகரம் அல்லது மாநகரத்தில் தொடர்ந்து செயல்பட வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது பற்றி ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகிறது.

கிராமப்புறங்களில் உள்ள பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு வீடு கட்டுவதற்கு நிதி வழங்கும் பொருட்டு 104 வட்ட மற்றும் கோட்ட அளவிலான கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டதனால் ஏற்கெனவே இயங்கி வந்த பல கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் தங்களின் பணி இன்றி தற்போது செயல் இழந்துள்ளன. இவ்வாறு செயலிழந்துள்ள சங்கங்களை மீண்டும் புதுப்பிப்பதா அல்லது அவற்றில் சிலவற்றைத் தற்போதுள்ள வட்ட அளவிலான கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைப்பதா என்பது குறித்து ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகிறது, அவ்வாறு சங்கங்களை இணைப்பதினால் தற்பொழுது சங்கங்கள் இல்லாத பகுதிகளில் புதிதாக வட்ட அளவிலான கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களை ஏற்படுத்தும் சாத்தியக்கூறு உண்டாகலாம். இதனால் கிராமப்புற வீட்டு வசதி சங்கங்களின் மூலம் மேலும் பரந்த அளவில் மக்கள் பயன்பெறுவது உறுதியாகும்.

பெருமளவு வீட்டு வசதித்திட்டத்திற்கெனப் புதிதாகக் கூறப்பட்டுள்ள முன் மொழிவுகளின் அடிப்படையில் கட்டிடப் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக பெருமளவிலான கூட்டுறவுச் சங்கங்களை நிறுவ வேண்டிய அவசியம் நேரிடும். இச்சங்கங்கள் வட்ட அல்லது மாவட்ட அளவில் அதிகாரப் பங்கீடு செய்யப்பட்டு செயல்பட வேண்டி இருக்கும் தற்போதுள்ள கிராமப்புற வீட்டு வசதி சங்கங்களின் அமைப்புடன் எந்த அளவிற்கு புதிதாக ஏற்படுத்த உத்தேசித்துள்ள இச்சங்கங்களை இணைத்து செயல்பட வைக்க இயலும் என்பதை அரசு ஆராய உத்தேசித்துள்ளது.

[1987 மே 6

கிராமப்புற வீட்டு வசதி திட்டத்திற்குத் தனிக் கவனம் செலுத்தும் பொருட்டு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகத் தனியாக தலைமை நிதி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறு பற்றி அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று பலதரப்பிலுமிருந்தும் கோரிக்கைகள் வந்துள்ளன. கிராமப்புற வீட்டுவசதிக்கான அமைப்புகள் மேலும் செம்மையாகச் செயல்படவும் அவை கிராமப்புற ஏழைமக்களின் தேவையை மேலும் அதிக அளவில் பூர்த்தி செய்யுமாறு செய்யவும் 1987--88-ல் அரசு இதில் அடங்கியுள்ள பல்வேறு பிரச்சினைகளையும் ஆராய்ந்து வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் சீரமைப்பு குறித்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

## வீடு கட்ட முன்பணம்.

அரசு ஊழியர்களுக்கு வீடுகட்ட முன் பணம் வழங்கும் விதிகளின்படி வீடுகட்ட/வாங்க ரூபாய் 1,75,000 வரை மற்றும் ஏற்கெனவே உள்ள வீட்டை விரிவு படுத்த மேம்படுத்த ரூபாய் 75,000 வரை தகுதிக்கேற்ப கடன் வழங்கப்படுகிறது.

## அகில இந்திய பணி அலுவலர்கள் :

1986--87 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. கடன் மனுக்கள் ஒப்பளிப்பதில் தேக்கம் இல்லை. 1987--88 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1986--87 ஆம் ஆண்டு டிசம்பர் 1986 முடிய ரூபாய் 17.37 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## மற்ற அரசு ஊழியர்கள் :

1986--87 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 1,200 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1986--87 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 200 இலட்சம கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1986--87 ஆம் ஆண்டு கீழ்க்காணும் வண்ணம் ஒப்பளிப்பு வழங்க ஒப்பளிப்பு அதிகாரிகளுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது:

(அ) மனை வாங்கி வீடுகட்ட .. 31--12--1985 வரை கிடைக்கப் பெற்ற மனுக்களுக்கு.

(ஆ) வீடு கட்ட .. .. 31--12--1985 வரை கிடைக்கப் பெற்ற மனுக்களுக்கு.

(இ) தனியாரிடமிருந்து கட்டிய வீடு/அங்கணம் வாங்க. 30--6--1986 வரை கிடைக்கப் பெற்ற மனுக்களுக்கு.



1987 மே 6]

(ஈ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடமிருந்து கட்டிய வீடு/அங்கணம் வாங்க. 31--12--1986 வரை கிடைக்கப் பெற்ற மனுக்களுக்கு.

(உ) கூடுதல் கடன் .. .. 31--12--1985 வரை கிடைக்கப் பெற்ற மனுக்களுக்கு.

(ஊ) வீட்டை விரிவுபடுத்த/ மேம்படுத்த. 31--12--1985 வரை கிடைக்கப் பெற்ற மனுக்களுக்கு.

1986 டிசம்பர் முடிய ரூபாய் 1,213.72 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1987--88 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 1,200 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஊராட்சி ஒன்றிய பள்ளி ஆசிரியர்கள் :

1986--37 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1986--87 ஆம் ஆண்டு கீழ்க்காணும்படி ஒப்பளிப்பு வழங்க ஒப்பளிப்பு அதிகாரிகளுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது:—

(அ) மனை வாங்கி வீடு கட்ட .. 31--12--1984 வரை கிடைக்கப் பெற்ற மனுக்களுக்கு.

(ஆ) வீடு கட்ட .. .. ஷை

(இ) கட்டிய வீடு/அங்கணம் வாங்க. 30--6--1986 வரை கிடைக்கப் பெற்ற மனுக்களுக்கு.

(ஈ) கூடுதல் கடன் .. .. 30--9--1985 வரை கிடைக்கப் பெற்ற மனுக்களுக்கு.

(உ) வீட்டை விரிவுபடுத்த/ மேம்படுத்த. 30--6--1985 வரை கிடைக்கப் பெற்ற மனுக்களுக்கு.

1986--87 ஆம் ஆண்டு டிசம்பர் 1986 முடிய ரூபாய் 27.72 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1987--88 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 80 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## புதிய இருபது அம்சத் திட்டம்.

புதிய இருபது அம்சத் திட்டம் கிராமப்புற மக்களுக்கு வீட்டு மனையும் வீடுகட்ட நிதி வசதியும், பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கு வீட்டு வசதியும் குடிசைப்பகுதியின் சுற்றுப்புறத்தை மேம்படுத்துதலும் கட்டாயத் தேவை என்பதை வலியுறுத்துகிறது. இந்த இருபது அம்சத் திட்டத்தின் கீழ் நமது சாதனைகள் இலக்குகளை எய்தக் கூடிய அளவுக்கு அமைந்துள்ளன.

| வரிசை எண்ணும் இனமும். | 1986–87-க்கான இலக்குகள். | சனவரி 1987 வரை உள்ள சாதனைகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 9(அ) வீட்டு மனை ஒதுக்கீடு .. | 2,18,750 | 2,01,785 |
| 9(ஆ) வீடுகட்ட நிதியுதவி வழங்குதல். | 40,000 | 40,432 |
| 10 (அ) பயன்பெறும் குடிசை வாழ் மக்கள். | 52,865 | 62,854 |
| 10 (ஆ) பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு வீட்டு வசதி வழங்குதல். | 12,200 | 9,292 |

தமிழகம், மற்ற மாநிலங்களைவிட புதிய இருபது அம்சத் திட்டத்தை விரிவாக செயல்படுத்தி, அதன் இலக்கீட்டினை எய்தி சாதனைகள் செய்துவருகிறது என்பதில் துளிஅளவும் சந்தேகம் இல்லை. மேலும் 1987–88 ஆம் ஆண்டிற்கான இலக்கீட்டை கீழே காண்போம்.—

**14. மக்களுக்கு வீட்டு வசதி செய்தல்:—**

| | 1987–88. | |
|---|---|---|
| | செலவினம். (ரூபாய் கோடியில்.) | இலக்கீடு. |
| (1) | (2) | (3) |
| (அ) வீட்டுமனை ஒதுக்கீடு .. | 1.00 | 1,70,000 |
| (ஆ) வீடுகட்ட நிதியுதவி வழங்குதல் | 0.78 | 5,020 |

**15. குடிசைவாழ் மக்களை மேம்படுத்துதல்.—**

| | | |
|---|---|---|
| (அ) குடிசைவாழ் மக்களை மேம்படுத்தல். | 4.06 | 58,000 |



(ரூபாய் கோடியில்.)

| (1) | (2) | (3) |
|---|---|---|
| (ஆ) (1) பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களுக்கான வீடு (E.W.S.) .. .. | 9,265 | 6,999 |
| (2) ஜனதா வீடுகள் .. | .. | .. |
| 3. குறைந்த வருவாய்ப் பிரிவினர் வீடு (L.I.G.) | 1.00 | 610 |
| 4. நடுத்தர வருவாய்ப் பிரிவினர்க்கான வீடு (M.I.G.) | 20.00 | 5,240 |

**பெருமளவில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம்.**

பொருளாதார நிலையில் நலிந்த பிரிவினருக்கும் வறுமைக் கோட்டிற்குக் கீழேயும் உள்ள 30 இலட்சம் மக்களுக்கு 1986–87 ஆம் ஆண்டில் தொடங்கி மூன்றாண்டு காலத்திற்குள் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று 1986 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் சட்டமன்ற இரு அவைகளின் கூட்டத்தில் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் அறிவித்ததையடுத்து இம்மாநிலத்தில் நடைபெற்றுவரும் பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களுக்காகச் செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் குறித்து அரசு பரிசீலனைசெய்து, முதல் ஆண்டு காலத்தில், 2.03 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டு வசதிகள் செய்து கொடுக்க அரசு தீர்மானித்தது.

உள்ளூரில் கிடைக்கக்கூடிய பொருள்கள், தொழிலாளர்கள் ஆகியவற்றை முழு அளவில் பயன்படுத்தி வீட்டுவசதி செய்து கொடுக்கும் கொள்கைக்கு முழு அளவில் ஆதரவளிப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆராய்வதற்காக, அண்ணா மாவட்டத்தில் முன்னோடி ஆய்வுத் திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கு அரசு தீர்மானித்து, புதிய முறைகளைக் கண்டறிந்து, பெருமளவில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டப்பணியை வெற்றியடையச் செய்வதற்குத் தேவைப்படும் உரிய முறையிலான நிறுவன அமைப்பு முறையைக் கண்டறியவும் அரசு கருதியுள்ளது. இதற்கிணங்க, அண்ணா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த, கட்டிடக்கலைத் திட்டமிடல் நிறுவனத்தின் பணியாளர்களும், மாணவர்களும், அண்ணா மாவட்டத்தில் ஆய்வுப் பணியை மேற்கொண்டனர். மேற்சொன்ன ஆய்வுப் பணியை மேற்கொள்வதற்காக அண்ணா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கட்டிடக் கலைத் திட்டமிடல் நிறுவன இயக்குநருக்கு ரூ. 63,500-க்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்த ஆய்வுப்பணி தற்போது முடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வை அடிப்படையாகக் கொண்டு புதிய அணுகு முறைகளைப் பயன்படுத்தியும், மாநில அளவில் இப்புதிய திட்டத்தை விரிவுபடுத்துவதற்கும் தேவையான நடைமுறை நூல், வழிகாட்டி நெறிமுறைகளை ஏற்படுத்தவும் ஒரு முன்னோடித் திட்டத்தை அண்ணா மாவட்டத்தில் மேற்கொள்ள கருதப்பட்டுள்ளது.

பெருமளவில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட இலக்குகளின் விவரம் வருமாறு.—

| தொடர் எண்ணும் திட்டப் பணியின் பெயரும். | கட்டப்பட வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை. | தேவையான நிதியுதவி. | செயல்படுத்தும் முகவரமைப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) (ரூபாய் கோடியில்.) | (4) |
| 1. கிராமப்பகுதி நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம். | 25,504 | 16.80 | கிராமப்பகுதி வளர்ச்சித் துறை. |
| 2. கிராமப் பகுதி தேசிய வேலை வாய்ப்புத் திட்டம். | 25,026 | 23.80 | ஷை |
| 3. கிராமப்பகுதி வீட்டு வசதித் திட்டம். | 40,000 | 18.00 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி). |
| 4. (i) மேம்பாட்டு ரொக்கக் கடன் உதவித் திட்டம் | 50,000 | 26.60 | தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம். |
| (ii) தற்போதுள்ள வீடுகளைத் தரம் உயர்த்துதல்/ மேம்படுத்துதல். | 60,000 | 9.00 | ஷை |
| 5. ஆதிதிராவிடர் வீட்டு வசதித் திட்டம். | 3,222 | 1.93 | தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம். |
| மொத்தம் .. | 2,03,752 | | |

திட்டப் பணிகளின் விவரம் வருமாறு :

**கிராமப் பகுதி நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம், கிராமப்பகுதி தேசிய வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின்கீழ் தொகுதிகளாக வீடுகள் கட்டுதல்.**



இத்திட்டப் பணிகள் இந்திய அரசின் நிதி உதவிபெற்று நிறைவேற்றப்படும். கிராமப் பகுதி நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின்கீழ் 25,504 வீடுகள் கட்டு வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை ரூ. 13.10 கோடி வழங்கப்பட்டுள்ளது. 1986 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களன் றுள்ளவாறு 20,863 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

கிராமப் பகுதி தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 25,026 வீடுகள் கட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 1986 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களன்றுள்ளவாறு 17,157 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. தொகுதிகளாக வீடுகள் கட்டுவதற்காக ரூ. 23.80 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

<u>தமிழ்நாடு வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் ஆதிதிராவிடர் வீட்டு வசதித் திட்டம்.</u>

ஆதிதிராவிடர் வீட்டு வசதித் திட்டப் பணியில் ரூ. 193.22 இலட்சம் செலவில் 3,222 வீடுகள் கட்டுவதற்காக அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளன. மேற்சொன்ன வீடுகள் கட்டுவது தவிர, இத்திட்டத்தின்கீழ் மேலும் 1,778 வீடுகள் கட்டுவதற்காக, சமூக நலத்துறையில் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

<u>கிராமப்பகுதி வீட்டுவசதித் திட்டப்பணி.</u>

தற்போதுள்ள திட்டத்தின்படி ஆதிதிராவிடரல்லாதவர் களுக்கு 5,000 வீடுகள் இத்திட்டத்தின்கீழ் 1986–87-ல் கட்டப்படும். இவற்றைத் தவிர, மாநில அரசின் நிதி உதவியுடன் நிறுவன நிதியைப் பெறுவதன் மூலம் மேலும் 35,000 வீடுகள் பெருமளவில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் கட்டப் படும்.

ரூ. 12 கோடி மதிப்பில் 8 திட்டப் பணிகளுக்கு அனுமதி அளிக்குமாறு கோரி, சென்னை தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம், புதுடில்லி வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்திற்குச் செயற் குறிப்புகளை அனுப்பியுள்ளது. ரூ. 939.00 இலட்சம் மதிப்புள்ள 6 திட்டப் பணிகளுக்கு வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் அனுமதி அளித்துள்ளது. இதன்மூலம் சுமார் 31,300 பேர் பயன் பெறுவர், எஞ்சியுள்ள இரு திட்டப் பணிகளுக்கும் கூடிய சீக்கிரம் அனுமதி வழங்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாநில அரசின் நிதியைப் பொறுத்த மட்டில், 1986–87 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் பெருமளவில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் ரூ. 4 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 40,000 வீடுகள் கட்டுவதற்கான கடன் தொகையின் முதல் தவணைத் தொகையை வழங்க வகை செய்யும் பொருட்டு, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திற்கு மேற்சொன்ன தொகை வழங்கப்பட்டுள்ளது.

## குடிசைப் பகுதி மேம்பாடு—குடிசை மாற்று வாரியத்தின் ரொக்கக் கடன் வழங்கல் திட்டம்.

50,000 குடும்பங்களுக்குப் பயனளிக்கக்கூடிய ரூ. 7 கோடி செலவிலான குடிசைப் பகுதி மேம்பாட்டு விரைவுத் திட்டப் பணியை, சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் பணிகள் மேற்கொள்ளப்படும் முறையில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மேற்கொள்ளும்.

இவற்றுடன், நகர்ப்புற வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் (ஹட்கோ) உதவியுடன் 50,000 குடிசைப் பகுதி வாழ் மக்களுக்கு ரொக்கக் கடன் வழங்கவும் குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஏற்பாடு செய்யும். ரொக்கக் கடன் வழங்கும் திட்டங்களுக்காக, 1986–87 ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட 7 கோடி ரூபாய் நிதியொதுக்கீட்டில் முதல் தவணையாக அரசு 2 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட 45 நகரங்களில், குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களைக் கண்டறியும் பணியும் தொடக்க ஆய்வுப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. பல திட்டங்களில் மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரொக்கக் கடன் திட்டங்களுக்கான விண்ணப்பப் படிவங்களை சரிபார்த்த பின்னர், குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு ரொக்கக் கடன் வழங்கப்படும்.

## பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினரின் வீடுகளின் நிலையை உயர்த்துதல்.

மண் சுவர்களை தேவையான அளவிற்கு செங்கல் சுவர்களாக மாற்றுவதன் மூலம் அல்லது அவ்வீடுகளின் கூரைகளை ஓட்டு வீடுகளாக மாற்றுவதன் மூலம் தற்போதுள்ள வீடுகளை மேம படுத்துவதற்காக ஒவ்வொருவருக்கும் ரூ. 1,500 வீதம் 60,000 பேருக்கு உதவித்தொகை வழங்கப்படும். குடிசைப்பகுதி மாற்று வாரியம் மாநில நிதியிலிருந்து ரூ.9 கோடி மதிப்பீட்டுச் செலவில் இத்திட்டத்தைச் செயற்படுத்துகிறது. நிலை உயர்த்தும் பணியை மேற்கொள்வதற்காக ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 1986–87 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 20 கோடி நிதி ஒதுக்கீட்டில் ரூ.9 கோடி இத்திட்டத்திற்காக செலவு செய்யப்படும்.

பெருமளவில் வீடுகட்டித் தரும் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக ரூ. 13.2 கோடி அளவிற்கு ஹட்கோ நிறுவனத்திடமிருந்து நிதியுதவியை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியம் எதிர்பார்க்கிறது.





## மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்ட புதிய அணுகுமுறைத் திட்டம்.

பெருமளவில் வீடு கட்டித்தரும் திட்டத்தின்கீழ் புதிய அணுகுமுறை தற்போது உருவாகிவருகிறது. இத்திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை வீடுகட்டும் பணிக்கு நேரடியாகப் பயன்படுத்தக் கூடாது; ஆனால், செங்கற்கள், ஓடுகள், சுண்ணாம்புநீர் முதலியன போன்ற தேவையான கட்டுமானப் பொருள்களை உற்பத்தி செய்யும் பணியை மேற்கொள்ளும் வட்டம் அல்லது கிராம அளவில் அதிகாரங்களைப் பரவலாக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி செய்ய பயன்படுத்த வேண்டும் என்று தற்போது அமைக்கப்பட்ட இத்திட்டம் தெரிவிக்கிறது. அரசுக்குச் சொந்தமான தொழிற் பிரிவுகளால் அல்லது பல்வேறு வட்டங்களிலுள்ள பல்வேறு சிறிய உருக்கு கட்டுமான அமைப்புக் கடைகளால் தயாரிக்க இயலக்கூடிய கூரை உத்திரங்களுக்கு மரத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக உருக்குக் கட்டுமானத்தை பயன்படுத்துவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. அவ்வாறு அமைக்கப்பட்ட கட்டிடப் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள், இத்திட்டத்திற்குத் தேவையான கட்டிடப் பொருள்கள் தயாரிக்கும் பணியை மேற்கொள்ளும். வரவு-செலவுத் திட்டத்தில் கிடைக்கக்கூடிய நிதி ஒதுக்கீடு (கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்திரவாதத்திட்டம், தேசிய கிராமப்பகுதி வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின்கீழ் வீட்டுவசதி செய்து கொடுக்கப்படும் திட்டம் உட்பட) அக்கூட்டுறவுச் சங்கங்களின் மூலதனப் பங்குத் தொகையாகப் பயன்படுத்தப்படும். எஞ்சிய தொகைக்கு நிதி உதவி நிறுவனங்களிடமிருந்தும், வணிக வங்கிகளிடமிருந்தும் கடனாகப் பெற இச்சங்கங்கள் அனுமதிக்கப்படவேண்டும். வட்டியில்லா கடன் பங்குவீதமான 1 : 3 என்ற அடிப்படையில், வணிக வங்கிகளிடமிருந்தும், நிதி உதவி நிறுவனங்களிடமிருந்தும் நிதி பெற இயலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் தயாரித்த கட்டிடப் பொருள்கள், பயனடைவோருக்கு வழங்கப்படும். புதிய வீட்டை அமைக்கும் பொருட்டு அல்லது கூரையை சிறந்த கூரையாக மாற்றுவதற்கு இப்பயனைப் பெறும் தனிப்பட்டவர் தங்களது உழைப்பை அளிக்க வேண்டுமென்று கேட்கப்படலாம்.

இத்திட்டம் பல அணுகுமுறைகளின்மூலம் மேற்கொள்ளப்படும். இதனால், அனைத்து கிராமங்களும் இத்திட்டத்தினால் பயனடைந்து மேம்பாடு அடையும். மாவட்டத்தில் ஏனைய கிராம வளர்ச்சித் திட்டங்களுடன் ஒருங்கிணைப்பு ஏற்படும்; இதனால் இப்பகுதிகளில் குடிநீர் வழங்கல், துப்புரவு, சுற்றுப்புற மேம்பாடு, சமூகக்காடு வளர்ப்பு ஆகியவற்றிற்கான திட்டப் பணிகளை ஒரே நேரத்தில் மேற்கொள்ள இயலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பெருமளவில் வீடுகட்டித்தரும் திட்டத்தைச் செயற்படுத்தும் இந்தப் புதிய அணுகுமுறையால், 3 ஆண்டுகளுக்குள் தீவிரத் திட்டத்தின்மூலம், வீடற்றோர் எண்ணிக்கை

குறைக்கப்படும். கிராமப்பகுதிகளில் பெருமளவில் வேலை வாய்ப்பை உருவாக்கும்; உள்ளூரில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்துதல், கட்டுமானத் திட்டத்தின்மூலம் பயன் அடைவோரைப் பங்குபெறச் செய்தல், போன்றவற்றை உறுதி செய்யும்.

7. மாநில அரசு, இச் செயற்குறிப்பிற்கு, ஒப்புதல் பெறவும் குறிப்பாக பின்வருவனவற்றை ஏற்பதற்காகவும் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளது:—

(அ) தற்போது எதிர்நோக்கும் விதத்தில், தேசிய கிராமப் பகுதி வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழும், கிராமப்புற நில மற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின்கீழும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்துதல் ;

(ஆ) நிதி உதவி நிறுவனங்களிடமிருந்தும், வணிக வங்கிகளிடமிருந்தும் போதுமான அளவிற்குக் கடன் திரட்டுவதை உறுதி செய்தல் ;

(இ) கடன்களுக்கு அளிக்கப்படவேண்டிய 4 சதவீத சலுகை வட்டி வீதமும் கடன் தொகை திருப்பிக் கொடுப்பதற்கான கால அளவை மூன்றாண்டுகள் நீட்டித்தலும்.

இந்த அணுகு முறையுடன் நம்முடைய நோக்கங்களை எய்தும் பொருட்டு, கணிசமான அளவிற்கு இந்த வீட்டுவசதித் திட்டத்தைப் பெருமளவில் விரிவு படுத்த இயலும். இச்செயற் குறிப்பிற்கான அனுமதி மத்திய அரசிடமிருந்து தற்போது எதிர் பார்க்கப்படுகிறது. அப்போதுதான் இத்திட்டம் விரிவாக உருவாக்கப்பட்டு, 1987—88 ஆம் ஆண்டிலிருந்து, செயற்படுத்துவதற்காக எடுத்துக்கொள்ள இயலும்.

8. இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மத்திய அரசின் அறிவிப்பில் கிராமப்பணி வீட்டுவசதித் திட்டத்திற்காக திருத்த அணுகுமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்படி, ''இந்திரா ஆவாஸ் யோஜனா'' என்ற திட்டத்தின்கீழ், வீடுகள் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட நிதியை தொடக்க மூலதனமாகக் கொண்டு ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட நிதியுதவியுடன் கிராமப்புறங்களில் வீடுகள் கட்டப்படும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கருத்து மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட திட்ட அறிக்கையில் மாநில அரசு தெரிவித்துள்ள அணுகுமுறையுடன் இயைந்து காணப்படுகிறது. ஆகவே, நமது திட்ட அறிக்கையில் நாம் கருத்து தெரிவித்த புதிய அணுகுமுறைக்கு மத்திய அரசு ஆதரவளிக்கும் என்றும், தொடக்க நிதி வழங்கும் வகையில் ''கிராமப்பகுதி வீட்டு வசதித் திட்டம்'' என்பதன்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன் படுத்துவதிலும் முக்கியமான இத்திட்டத்திற்கு நிதி உதவி அளிப்பதற்காக சலுகை வீதத்தில் வட்டிக்கு கணிசமான தொகையைக்



கடனாக வழங்கும்படி நிதி நிறுவனங்களுக்கும் வணிக வங்கிகளுக்கும் தனி உத்தரவுகள் பிறப்பிப்பதிலும் மத்திய அரசு தேவையான உதவியைச் செய்யும் என்றும், நாம் உறுதியாக நம்பத் தோன்றுகிறது. ஏழை எளியவர்களுக்கு இருப்பிட வசதி அளிப்பதில் தற்போதுள்ளதைக் காட்டிலும் மிக அதிக அளவுக்கு வீடுகள் கட்டித்தரும் பொருட்டு நாம் கருத்து தெரிவித்துள்ள முன்மாதிரியை நாடு முழுவதும் பின்பற்றலாம். இவ்வாறு செய்வதால், ஏழை எளியவர்களுக்கு வீடு கட்டித்தருவது பற்றிய பெரும் பிரச்சினைக்கு, வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டித் தரும் உலக ஆண்டான இந்த ஆண்டில், வீடுகள் கட்டித் தந்து தீர்வு காண இயலும்.

## இணைப்பு III.

(81 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### மானியக் கோரிக்கை எண் 34.

### நகர்ப்புற வளர்ச்சி.

### தமிழ்நாட்டில் நகர்ப்புற வளர்ச்சி.

மாநிலத்தில் உள்ள 48 மில்லியன் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியான 16 மில்லியன் மக்கள் நகர்ப்பகுதிகளில் வாழ்கின்றனர். இந்தியாவில் உள்ள மாநிலங்களில் தமிழ்நாட்டில்தான் மிக அதிகமாக 434 நகர மையங்கள் உள்ளன. இவைகள் 34 நகரக் கூட்டுத்தொகுதிகளாகவும், மற்றும் 211 நகர்ப் பகுதிகளாகவும் உள்ளன. இவைகளில் 21 நகரங்கள் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்டுள்ளன. சென்னைப் பெருநகரம் 3.4 மில்லியன் மக்கள் தொகையும், ஏனைய நான்கு பெருநகரங்களான மதுரை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் சேலம் 2.9 மில்லியன் மக்கள் தொகையினைக் கொண்டுள்ளன. இவ்வைந்து பெருநகரங்களில், நகரப் பகுதியில் வாழும் மக்களில் 40சதவீதம் வாழ்கின்றனர். எனவே, இவ்வைந்து பெரு நகரங்களில் பெருகி வரும் மக்கள் தொகைக்கு அடிப்படை வசதிகளைச் செய்திட தனிக் கவனம் செலுத்தி திட்டமிட வேண்டியுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதின் மூலம் இவ்வைந்து பெருநகரங்களில் பெருகி வரும் மக்கள் தொகையினைக் கட்டுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கிராமப்புறங்களிலிருந்து பெருநகரங்களை நோக்கி வரும் மக்களை கட்டுப்படுத்தி மாநிலம் முழுவதும் பரவலான வளர்ச்சிக்கு வழிகோலும்.

மண்டல வளர்ச்சி முனைகள் மற்றும் வளர்ச்சி மையங்களை தேர்ந்தெடுத்து ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சிக் கொள்கையை உருவாக்கி மேற்படி நகர்ப்புற மையங்கள் வளர்ச்சியுறும் வகையில் திட்டமிடுதலும், முதலீடு செய்தலும் வேண்டும். இதற்காக மண்டலங்கள் அளவிலும், நகரங்கள் அளவிலும் பல்வேறு வகையான திட்டங்களை உருவாக்குதல் இன்றியமையாததாகிறது. இதே சமயத்தில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் பெருகிவரும் மக்கள் தொகையின் அடிப்படை வசதிகளின் வளர்ச்சிக்கு நிதியுதவியும் செய்வது அவசியமாகும். மேலும் நகரங்களின் வளர்ச்சிகளை ஒழுங்கு படுத்த வேண்டி கட்டுப்பாட்டு முறைகளை நிர்ணயித்து தக்க விதிகளின் மூலம் அவைகளை அமுலாக்குவதும் அவசியமாகிறது. சென்னைப் பெருநகரத்தைப் பொறுத்தவரை மேற்படி கடமைகளை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமும், மாநிலத்தின் இதர பகுதிகளுக்கு நகர் ஊரமைப்பு இயக்ககமும் செய்து வருகின்றன. நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களை திட்டமிட்டு செயற்படுத்த அடிப்படை செயல் திட்டம் தீட்ட மாநில அரசு, மாநில நகர்ப்புற கொள்கை



யொன்றினை உருவாக்கி வருகிறது. 1987–88 ஆம் ஆண்டில் முடிவடையவிருக்கும் இந்தக் கொள்கைக் குறிப்பானது நகர்ப்புற வளர்ச்சி விரும்பத்தக்க வகையில் செயற்படுத்த திட்டங்களைத் தீட்டுவதற்கு வழிவகை செய்யும்.

### நகர்-ஊரமைப்பு இயக்ககம் (கொள்கையும், நோக்கமும்):

நகரங்களின் திட்டமிட்ட சீரான வளர்ச்சி, தூய்மை மற்றும் சுகாதாரமான சூழ்நிலையில் மக்கள் வாழ வகை செய்யும். நோக்கத்துடன் மாநிலத்திலுள்ள திட்டக் குழுமங்கள், நகர ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்து அமுலாக்குவதற்கு வேண்டிய உதவிகள் புரிவதும், 1971 ஆம் ஆண்டின் நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தை நிர்வகிப்பதும், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் பெரும் கொள்கையும் நோக்கமுமாகும். இது தவிர, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம், கிராமச் சட்டம் மற்றும் பொது சுகாதார சட்டத்தில் உள்ளபடி, தனியார் நிலங்களை வீடு மற்றும் தொழிற்சாலை உபயோகங்களுக்காக அபிவிருத்தி செய்வதற்குரிய தேவையான கட்டுப்பாடுகள், குடியிருப்புப் பகுதிகள், தொழிற்சாலைக்கான பகுதிகள் ஆகியவற்றை நிர்ணயிப்பது, கட்டிட விதிகளின் மூலம் கட்டிடங்களை ஒழுங்கு படுத்துதல் போன்ற அம்சங்களை நிர்வகிக்கும் பொறுப்பும் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் பொறுப்பிலுள்ளது.

### குறுகிய மற்றும் நீண்ட கால செயல் திட்டங்கள்:

மண்டலத் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள், புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் விரிவு வளர்ச்சித் திட்டங்கள் தயாரித்து அமுலாக்குவதின் மூலம், 1971 ஆம் ஆண்டு நகர ஊரமைப்புச் சட்டத்தின் பெரும் நோக்கங்களை நிறைவேற்றலாம்.

மண்டலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்ட மண்டல திட்டப் பகுதிகளுக்கு மண்டலத்திட்டத்தில் வளர்ச்சி மையங்களின் வரிசை (Hierarchy of Settlements) பெரிய போக்குவரத்துத் தடங்கள், தொழில் மற்றும் விவசாயத்திற்கு உகந்த பகுதிகள் மற்றும் ஏனைய மேம்பாடு இனங்கள் இடம் பெறும்.

### மண்டலத் திட்டங்கள்:

பின்தங்கிய பகுதியான இராமநாதபுரத்திற்கு மண்டலத் திட்டம் தயாரிக்கும் பணி முன்னமே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. நில அளவைகளும், ஆராய்வுகளும் முடிவடைந்து இராமநாதபுரம் மண்டலத்திட்டத்தின் வரைவுப் பணி குறுகிய காலத்தில் முடிவடையும். மண்டலத் திட்டங்களுக்கான கொள்கை மற்றும் செயலாக்கத் திட்டங்கள் தீட்டும்பொழுது சரியான அளவில் இடம் விட்டு திட்டங்கள் தீட்டுதல் மற்றும் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் தீட்டுதல் அரசின் கருத்தாகும்.

[1987 மே 6

## முழுமைத் திட்டங்கள்

ஒரு புற வளர்ச்சி, போக்குவரத்து நெரிசல்கள் போன்ற நகர்ப்புற மையங்களின் துரிதமான வளர்ச்சியினால் ஏற்படும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை தவிர்க்க முழுமைத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இம்முழுமைத் திட்டங்கள் எதிர்காலத்தில் நகரங்கள் ஒழுங்கான முறையில் வளர வழி வகை செய்யும்.

முழுமைத் திட்டங்களைத் தயாரிக்கும் பணி இரண்டு கட்டங்களில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. முதல் கட்டத்தில் குடியிருப்பு, வாணிபம், தொழில் மற்றும் வேறு பயன்பாடுகளுக்குத் தேவையான விரிவான நிலப் பயன் திட்டங்கள் தயாரிக்கப்படும். இதனால் செழுமை வாய்ந்த மற்றும் விலை மதிப்புள்ள விவசாய நிலங்கள் நகர்ப்புற வளர்ச்சிக்கு எல்லை மீறி பயன்படுத்தாமல் இருக்க உறுதி செய்கிறது. இரண்டாம் கட்டத்தில் நகரங்களின் வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறுபட்ட உள்ளமைப்புகளான பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், அங்காடிகள், மருத்துவமனை வசதிகள், பொது/போக்குவரத்து வசதித் திட்டங்கள், குடிநீர் வடிகால் மற்றும் மழைநீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகள் குறித்த ஆய்வுகள் செய்ய திட்டமிடப்படும். இவைகளின் அடிப்படையில் நிறைவேற்றுவதற்கான செயல் திட்டங்கள் உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் 112 உள்ளூர் திட்டப்பகுதிகளும், 8 புது நகர்ப்பகுதிகளும் உள்ளன. முதற்கட்டத்தில், 1986–87 ஆம் ஆண்டின் இறுதி வரை, 81 உள்ளூர் திட்டப்பகுதிகளுக்கு முழுமைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 1987–88 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள உள்ளூர் திட்டப் பகுதிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் முழுமைத் திட்டங்கள் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முழுமைத் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின்கீழ், எடுத்துக் கொள்ளப்பட்ட செய்யத்தக்கமைக்கான ஆராய்வின் அடிப்படையில் 26 நகரங்களுக்கும், ஒரு புதுநகர் வளர்ச்சிப் பகுதிக்கும் செயல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. செயல்முறைத் திட்டங்களில் குறிக்கப்பட்டுள்ள திட்டங்கள், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் மத்திய அரசின் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேலும் 9 நகரங்களுக்கான செயல் முறைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 1987–88 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள நகரங்களில் முன்னுரிமையின் அடிப்படையில் முழுமைத் திட்டங்களின் இரண்டாவது கட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.



1987 மே 6]

## விரிவு வளர்ச்சித் திட்டம்:

தற்பொழுது வளர்ச்சிப் பாதையில் இருக்கும் மற்றும் எதிர்காலத்தில் வளர்ச்சியடையவிருக்கும் நகர்ப்புற மையங்களின் குறிப்பிட்ட பகுதிக்கான திட்டமே விரிவு வளர்ச்சித் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் குடியிருப்புப் பகுதிகள், வாணிபப் பகுதிகள், சாலைகள், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், பள்ளிகள், மற்றும் வேறுபட்ட நிலப் பயன்பாட்டிற்கான விரிவான செயற் குறிப்புகள் தயாரிக்கப்படும்.

1986–87 ஆம் ஆண்டில் இருபது விரிவு வளர்ச்சித் திட்டங்களுக்கு இசைவு மற்றும் ஒப்பளிப்பு வழங்கவும், அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. 31-12-1986 ஆம் தேதி வரை, 14 விரிவு நிர்ணயித்து திட்டங்களுக்கு இசைவு அளிக்கப்பட்டும், 12 விரிவு வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒப்பளிப்பும் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள ஆறு விரிவு வளர்ச்சித் திட்டங்களுக்கான இசைவும், மற்றும் எட்டு விரிவு வளர்ச்சித் திட்டங்களுக்கான ஒப்பளிப்பும் 31-3-1987க்கு முன் வழங்கப்படும். 1987–88 ஆம் ஆண்டில் இருபது திட்டங்களுக்கான இசைவும், ஒப்பளிப்பும் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள்:

தொழில் மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் பெற்ற புதியதாக வளர்ச்சியடைந்து வரும் பகுதிகளுக்கு இவ்வகைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அரசின் மிகப் பெரிய முதலீட்டுடன் தொழில் மற்றும் சுற்றுலா மையங்களாக வளர்ச்சி பெற்று வரும் ஒசூர், மாமல்லபுரம், பல்கலைநகர் (மதுரை), நாவல்பட்டு, குறிச்சி, சித்தோடு, அரூர், மானாமதுரை ஆகிய நகரங்களை புதுநகர்ப் பகுதிகளாக அரசு அறிவித்துள்ளது. 1986–87 ஆம் ஆண்டுவரை, ஒசூர், மாமல்லபுரம், பல்கலைநகர், குறிச்சி, சித்தோடு மற்றும் அரூர் ஆகியவற்றிற்கு புதுநகர் வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு விட்டது. ஒசூர் புதுநகர் வளர்ச்சித் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 1987–88 ஆம் ஆண்டில் நாவல்பட்டு, மானாமதுரை ஆகிய நகரங்களுக்கு புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்படும்.

## ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்:

மத்திய அரசின் உதவியுடன் செயற்படுத்தப்படும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்.

நகர்ப்புறப் பகுதிகளை சுற்றியுள்ள கிராமப் பகுதிகளின் தேவைகளுக்காக சேவை மையமாக செயல்பட, சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வண்ணம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் உதவி

யுடன் செயற்படுத்தப்படும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இருபத்தெட்டு சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் வளர்ச்சிக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஒவ்வொரு நகரமும் ரூ. 80 இலட்சம் வரை நிதியுதவி பெற தகுதி பெற்றுள்ளது. இத்தொகை மாநில அரசு மற்றும் மத்திய அரசினால் 50 : 50 விகித அடிப்படையில் அளிக்கப்படுகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதிவரை அதாவது 1984–85 ஆம் ஆண்டு வரை நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களின் கீழ், பேருந்து நிலையம் கட்டுதல், அங்காடித் தொகுதிகள் மேம்படுத்தப்பட்ட தன்னிறைவு வீட்டுமனைகள் குறைந்த செலவிலான துப்புரவு வசதிகள் போன்றவற்றிற்காக ரூ. 1,789.95 இலட்சம் கடன் வழங்கப் பெற்று 171 ஒப்புதலளிக்கப்பட்ட திட்டங்களை 28 நகரங்களில் நிறைவேற்றுவதற்கு ரூ. 1,473.55 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் ரூ. 313.44 இலட்சம் வழங்கப்பட்டு, இருபத்தெட்டு, நகரங்களுக்கு ரூ. 313.64 இலட்சம் அளிக்கப்பட்டது. 1986-87–ஆம் ஆண்டில், 31–12-1986 வரை இத் திட்டங்களை முடிவுக்குக் கொண்டுவர ரூ. 45.84 இலட்சம் வழங்கப்பட்டு தற்பொழுது 28 நகரங்களில் செயற்படுத்தப்படும் திட்டங்களுக்காக ரூ. 142.87 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. 31–12–1986 அன்றுள்ள நிலவரப்படி, ஒப்புதல் அளிக்கப்பட்ட 171 திட்டங்களில் 129 திட்டங்கள் முடிவடைந்துள்ளன. எஞ்சியுள்ள திட்டங்கள் முடிவடையும் நிலையில் உள்ளன. அத் திட்டங்கள் குறுகிய காலத்தில் பயன்படும் வண்ணம் செயற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அரசின் உதவியுடன் செயற்படுத்தப்படும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்த அரசு ஒன்பது நகரங்களை தேர்வு செயதுள்ளது. இத்திட்டங்களை செயற்படுத்த இராமநாதபுரம், அருப்புக்கோட்டை, அறந்தாங்கி, பட்டுக்கோட்டை மதுராந்தகம், ஆண்டிப்பட்டி, பொன் அமராவதி, இராமேஸ்வரம், சித்தையன் கோட்டை ஆகிய நகரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இத் திட்டத்தினை செயற்படுத்த 1986–87 ஆம் ஆண்டில் மத்திய அரசினால் ரூ. 152.14 இலட்சமும் மாநில அரசினால் ரூ. 152.14 இலட்சமும் சமபங்கு அடிப்படையில் வழங்கப்பட்டது. 1987–88 ஆம் ஆண்டில் ரூ. 600 இலட்சம் சமபங்கு அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நகரத்திற்கும் மாநில அரசின் சமபங்கு உதவியுடன் சேர்த்து ரூ. 120 இலட்சம் கடன் வழங்கப் பெறும். இத் தொகையில் ரூ. 28 இலட்சம் குறிப்பாக குறைந்த செலவிலான துப்புரவுப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்படும்.



இத் திட்டங்களை செயற்படுத்தும் நகரங்கள், ஆறாவது மற்றும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகள் சமபங்கு அடிப்படையில் வழங்கியுள்ள மொத்தக் கடன் உதவி பற்றிய விவரங்கள் இணைப்பு VI-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## மாநில அரசின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள்:

மாநில அரசின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், உள்ளாட்சி நிறுவனங்களுக்கு கட்டண கழிப்பிடங்களையும் உள்ளடக்கி ஆதாயம் தரும் திட்டங்களைச் செயல்படுத்த மாநில அரசு கடன் வழங்குகிறது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் துவக்கப்பட்ட இந்தத் திட்டம் உள்ளாட்சி நிறுவனங்களின் நிதிநிலை ஆதாரங்களை பெருக்க பெரிதும் வழிவகை செய்துள்ளது. இத்திட்டம் ஏழாவது ஐந்தாண்டு திட்டக் காலத்திலும் தொடர்ந்து செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ரூ. 900 இலட்சம் மதிப்பீட்டில் 172 திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது 1985 ஆம் ஆண்டு, மார்ச் மாதக் கடைசி வரை இத்திட்டத்தினை செயற்படுத்த பல்வேறுபட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ரூ 744.28 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் 1985–86 ஆம் ஆண்டில், ரூ. 203.29 இலட்சம் அரசிடமிருந்து கடனாகப் பெற்று ரூ 181.18 இலட்சம் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயற்படுத்த பல்வேறு உள்ளாட்சி நிறுவனங்களுக்கு 1986-87 ஆம் ஆண்டில், டிசம்பர் மாதக் கடைசியில் ரூ. 152.14 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. 172 திட்டங்களில், 157 திட்டங்கள் 31–12–1986 வரை முடிவடைந்துள்ளன. எஞ்சியுள்ள திட்டங்கள் முடிவடையும் நிலையில் உள்ளன. இத் திட்டங்கள் குறுகிய காலத்தில் பயன்படும் வண்ணம் செயற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இத்திட்டத்தின் கீழ் திட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ: 600 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 600 பேரூராட்சிகள் நம் மாநிலத்தில் உள்ளன. அவைகளில் பொது மக்களுக்குத் தேவையான பேருந்து நிலையங்களை மேம்படுத்துதல், நாள் மற்றும் வாரச் சந்தைக்கான கட்டிடங்கள் கட்டுதல் போன்ற திட்டங்களுக்கு நிதியுதவி தேவைப்படுகிறது. ஆதலால் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இந்தத் திட்டத்தின்கீழ் பெரும்பாலான பேரூராட்சிகள் பயன்படும் வண்ணம் முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ், திட்ட காலத்தில் ஒவ்வொரு பேரூராட்சியும் அதிகபட்சக் கடனாக ரூ. 20 இலட்சம் பெறலாம். அரசு இத் திட்டத்தினை செயற்படுத்த 41 பேரூராட்சிகளின் செயற்குறிப்பு களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்

டத்தில் நிறைவேற்றப்படாமல் எஞ்சியுள்ள திட்டங்களையும், புதிய திட்டங்களையும் செயற்படுத்த 1986–87 ஆம் ஆண்டில் ரூ. 183 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பேரூராட்சிகள் தவிர, தஞ்சாவூர், திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, வாலாஜாபேட்டை, விருதுநகர் நகராட்சிகளிலும் ஆதாயம் அளிக்கும் திட்டங்களை செயற்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 1987–88 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயற்படுத்த ரூ. 63 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து தொடர்பான ஆய்வுகள் :

மாநிலத்தின் போக்குவரத்து மற்றும் சரக்கு போக்குவரத்தில் உள்ள குறைபாடுகளையும், தொடர்பின்மைகளையும் கண்டுபிடிப்பதற்காக ஆய்வு செய்யும் பணி தொடங்கப்பட்டது. சரக்குகள் நடமாட்டத்தின் அடிப்படையில் மாவட்ட வாரியாக இவ்வாய்வு எடுத்துக் கொள்ளப்பட்டது. மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, சிவகாசி, புதுக்கோட்டை, மற்றும் வேலூர் ஆகிய நகரங்களுக்கு நகர ஊரமைப்பு இயக்ககத்தால் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதே போன்று பூங்கா வசதிகள், நெடுஞ்சாலைகளில் செல்லுகின்ற பேருந்துகள் மற்றும் பார உந்துகள் பயன்பெறுவதற்கான தங்கும் மையங்கள் குறித்து ஆய்வு நகர ஊரமைப்பு இயக்ககத்தால் தொடங்கப்பட்டு மாமண்டூர், உளுந்தூர்பேட்டை, கொட்டம்பட்டி, கோவில்பட்டி, வள்ளியூர், சுங்குவார்சத்திரம், இராணிப்பேட்டை, ஓசூர், கருமத்தான்பட்டி மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் வாகனம் நிறுத்தும் மையங்கள் அமைக்கப்படுவது குறித்து திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பணி 1987–88 ஆம் ஆண்டு தொடங்கும். நகர ஊரமைப்பு இயக்ககத்தால் மேற்கொள்ளப்பட்ட பரந்த ஆய்வின் அடிப்படையில் திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத் தூர், மதுரை ஆகிய நகரங்களில் பார உந்துகள் நிறுத்துமிடங்களை அமைப்பதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. இந்தப் போக்குவரத்து ஆய்வின் அடிப்படையில் போக்குவரத்து மற்றும் சரக்கு போக்குவரத்தினை மேம்படுத்துவதற்கான வளர்ச்சித் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படும்.

உள்ளூர் திட்ட கூட்டுக் குழுமங்கள் அமைத்தல் :

1971 ஆம் ஆண்டு, நகர் ஊரமைப்பு சட்டத்தின் கீழ், தமிழ்நாடு அரசு 14 உள்ளூர் திட்ட கூட்டுக் குழுமங்களை அமைத்துள்ளது. கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, உள்ளூர்த் திட்ட கூட்டுக் குழுமங்களுக்கு தேவையான தொழில் நுட்பப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 1987–88 ஆம் ஆண்டுகளில் திருநெல்வேலி, சேலம், மற்றும் வேலூர் உள்ளூர்த் திட்டக் கூட்டுக் குழுமங்களுக்கு தொழில் நுட்பக் பணியாளர்களை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் :

சென்னைப் பெருநகர்ப் பகுதி என்பது சென்னை மாநகராட்சி 4 நகராட்சிகள், 6 நகரியங்கள், 21 பேரூராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்டு 1,167 சதுர கி. மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள பகுதியாகும். இப்பகுதியில் நீண்ட கால திட்டமைப்பு மற்றும் வளர்ச்சியின் பொறுப்பு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971-ன் கீழ் உருவாக்கப்பட்ட சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விரிவாகக் கூறினால், சென்னைப் பெருநகர்ப் பகுதியில் வசிக்கும், குறிப்பாக, பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு வேலை வாய்ப்பு, வீட்டு வசதி, குடிநீர் வசதி, கழிவுப் பொருட்கள் அகற்றல், போக்குவரத்து, சுகாதாரம், சமூகம், மற்றும் சமூகப்பணி முதலிய துறைகளில் ஒரு குறிப்பிட்ட அளவு வசதி செய்து தரும் பொருட்டு ஒருங்கிணைந்த வழியில் திட்டங்கள் தீட்டுவதும் செயல்படுத்துவதும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

குறிக்கோளை அடையும் பொருட்டு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கு முதன்மைத் திட்டம்மற்றும் உருவமைப்புத் திட்டங்களைத் தயாரித்துள்ளது. மேலும் விரிவான வளர்ச்சித் திட்டங்கள் சென்னைப் பெருநகர்ப் பகுதியில் உள்ள குறிப்பிட்ட பகுதிகளுக்குத் தயாரித்துள்ளது. சென்னைப் பெருநகர்ப் பகுதியில் அடங்கும் மனைப் பிரிவுகளையும், கட்டிடங்களையும், வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகள் சிலவற்றின் மூலமாக முறைப்படுத்தப்படுகிறது.

1. முதன்மைத் திட்டத்தைச் செயல்படுத்தல் மற்றும் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளை நடைமுறைப்படுத்தல் அத்துடன் நில உபயோகப்பகுதிப் பிரிவு மற்றும் மறுபகுதிப் பிரிவுதொடர்ந்து செய்தல், விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயாரித்தல், அனுமதியில்லாத வளர்ச்சிகளை கட்டுப்படுத்தல், உள்ளாட்சிகள் வழங்கிய திட்ட அனுமதிகளை மறுபார்வையிடல்.

2. உருவமைப்பு திட்டத்தில் (Structure plan) உள்ள பரிந்துரைகளைச் செயல்படுத்தல் ;

3. வீட்டு வசதி, போக்குவரத்து மற்றும் போக்குவரத்து வசதிகளில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முக்கிய வளர்ச்சி நிதிக்கு உதவும் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டங்களுக்குத் திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் உருவாக்குதல்.

4. கோயம்பேடு மொத்த அங்காடி, சாத்தங்காடு எஃகு மற்றும் இரும்பு சாமான் மொத்த அங்காடி மற்றும் பேருந்து மற்றும் கனரக வாகனங்கள் முடிவிடம் அமைத்தல் ஆகிய பெரும் பான்மையான வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்தல் ; மற்றும்

5. வளர்ச்சிப் பணிக்கு முக்கியமாக உதவும் உருவமைப்பு மற்றும் முதன்மை திட்டங்கள் தற்போதைய நிலைக்கேற்றவாறு மாற்றியமைத்தல்.

வளர்ச்சிக் கட்டுப்பாடு மற்றும் திட்ட அனுமதி :

பல்வேறு கட்டிட விதிகளை மக்கள் அறியும் பொருட்டும் மேலும் திட்ட அனுமதிகள் விரைவில் வழங்கவும் 1986–87 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அனேக நடவடிக்கைகள் எடுத்துள்ளது. எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பச்சை வழி முறை :

பச்சை வழி முறை என்ற புதிய முறையினை 2–1–1986 முதல் திட்ட அனுமதிகளை விரைவாக வழங்க நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இம்முறையின் கீழ் விண்ணப்பதாரர்கள் அல்லது அவர்/அவளது கட்டிடக் கலைஞர், கட்டிடங்களை அனுமதியளித்தபடி கட்டிமுடிக்க, விதிக்கப்படும் கூடுதலான நிபந்தனைகளுக்கு உட்பட்டால் திட்ட அனுமதிக்கான விண்ணப்பங்கள் 10 நாட்களுக்குள் அனுமதி வழங்கப்படுகிறது. இம்முறையின் கீழ் இதுவரை 55 விண்ணப்பதாரர்கள் பயன் அடைந்துள்ளார்கள்.

கலந்தாய்வு மற்றும் ஆலோசனைப் பிரிவு;—

கட்டிடங்கள் மனைப் பிரிவு வரைபடம் தயாரிப்பதில் பொது மக்கள் கலந்தாய்வு செய்யவும் ஆலோசனைகளைக் கூறவும் ஒரு பிரிவு 14–7–1986 முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளை நடைமுறைப்படுத்துவதின் அவசியத்தைப் பொது மக்களுக்கு விளக்கிக்கூறல், அறிவு புகட்டுவதோடு மட்டுமல்லாமல் அனுமதியில்லாத மனைப் பிரிவு திட்டங்களில் மனைகளை வாங்க வேண்டாமென்று அறிவுரையும் செய்கிறது. சுமார் 300 பார்வையாளர் இப்பிரிவிற்கு ஒவ்வொரு மாதமும் வந்து போகிறார்கள்.

திட்ட அனுமதி முறையீடுகளை பரிசீலிக்க திருத்திய நடைமுறை :

கோப்புகளை அனுப்புவதில் ஒரு புதிய முறை 1–12–1986 முதல் சோதனை முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது இம்முறையின் கீழ் திட்ட அனுமதி முறையீடுகள் ஏற்றுக் கொள்ளும் கால அளவு ஒரு வார காலமாக குறையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இம்முறையின் முக்கியத்துவம் என்னவென்றால் திட்ட அனுமதிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படுபவைகளாக இருந்தால் 8 தினங்களுக்குள் அவர்களுக்குத் தெரியப்படுத்தப்படுகிறது. திட்ட அனுமதி மறுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட துணைத் திட்டமைப்பாளரை விண்ணப்பம் செய்த 8 ஆவது நாளில் தங்களது திட்டம் பற்றிக்



கூற சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. சிலவற்றில் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளுக்குள் திட்டங்களை மாற்றி கொண்டுவரக் கூடுமானால் அந்த விண்ணப்பதாரர்களுக்கு நேரிடையாக விளக்கிக்கூற உயர்மட்ட அளவில் அதாவது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவர் அளவில் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது.

உருவமைப்புத் திட்டப் பரிந்துரைகள் :

சென்னை பெருநகர்ப் பகுதிக்கான உருவமைப்பு திட்டம் 1986-ல் தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி நகரில் அனேக வளர்ச்சிப் பணிகள், குறிப்பாக வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாடு பல்வேறு முகவைகளின் துணையோடு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. உருவமைப்புத் திட்டத்தின் பரிந்துரைகளின் கருத்திற் கொண்டு உலக வங்கி நிதியுதவியுடன் செயல் படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வளர்ச்சிப் பணிகள் தெரிந்தெடுக்கப்பட்டன. இருப்பினும், நகர மக்களின் அடிப்படை வசதிகளுக்கான கட்டுமானப் பணிகளுக்கும் தேவைகளுக்கும் உள்ள இடைவெளியைக் கண்டுகொள்ள உருவமைப்புத் திட்டத்தின் பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு ஒரு விரிவான மறு ஆய்வு செய்ய வேண்டியதின் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது. இது சம்பந்தமாக ஒரு விரிவான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒரு தனி அலுவலர் சென்னை மாநகரத்திற்கு திட்டங்கள் உருவாக்கவும் செயல்படுத்தவும் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள இதர பணிகளுடன் இது குறித்து ஒரு விரிவான ஆய்வு நடத்தி அரசின் கவனத்திற்கு பரிந்துரைகள் செய்வார்.

உலக வங்கி நிதியுதவித் திட்டம் (சென்னைப் பெருநகர்) வளர்ச்சித் திட்டம்:

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்—1 :

இத்திட்டம் உலக வங்கியின் உதவியுடன் 1977-ல் ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள் மலிவு விலை வீடுகள் மூலம் ஏராளமான நகர்ப்புற ஏழைகளின் முன்னேற்றத்திற்கு வழி காண்பதாகும். இத்திட்ட மூல மதிப்பீடு

ரூபாய் 46.82 இலட்சமாகும். அதில் உலக வங்கியின் நிதியுதவி ரூ. 21.60 இலட்சமாகும். சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 1-ல் கீழ்க்காணும் திட்டங்கள் உள்ளன :—

| திட்டத்தின் பெயர். | திட்ட மதிப்பீடு. | திட்ட இலக்கு. |
|---|---|---|
| (1) | (2) (ரூபாய் இலட்சத்தில்.) | (3) |
| 1 தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம். | 933 | 12,200 மனைகள்/ வீடுகள். |
| 2 குடிசை பகுதி மேம் பாடு. | 606 | 25,000 குடும்பங்கள். |
| 3 சிறுதொழில் வளர்ச்சி | 285 | 150 சிறு தொழிற் கூடங்கள்.<br>47 குடிசைத் தொழிற் சாலைகள்.<br>9,000 பேருக்கு வேலை வாய்ப்பு. |
| 4 தாய்சேய் நலம் | 85 | 129 குழந்தை நல மையங்கள்.<br>7,000 குழந்தைகள்.<br>3,000 தாய்மார்கள்.<br>15,000 முதிய பெண்கள் கல்வி. |
| 5 குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் | 1,125 | 36,000 மீட்டர்கள்.<br>15 கழிவு நீரேற்று நிலையங்கள் அபி விருத்தி. |
| 6 சாலை மற்றும் போக்குவரத்து மேம்பாடு | 918 | 11.75 கி.மீ. உள் வட்டச் சாலை.<br>9 சுரங்கப்பாதை.<br>சாலைப் பிரிவுகள்.<br>200 கி. மீ.நடைபாதை<br>50 கி.மீ. மிதி வண்டிப் பாதை. |
| 7 பெருந்து போக்கு வரத்து. | 658 | 305 பேருந்துகள்.<br>3 பணிமனைகள்.<br>8 பேருந்து நிற்குமிடங்கள்.<br>400 பயணிகள் நிழற் குடைகள். |
| 8 தொழில் நுட்ப உதவி | 72 | பயிற்சியும் ஆய்வுப் பணிகளும். |
| மொத்தம் | 4,682 | |





இத்திட்டத்தின் தற்போதைய மதிப்பீடு ரூபாய் 57.08 கோடி. இதில் 51.66 கோடி இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் திட்டங்கள் 1982-ம் ஆண்டு இறுதிக்குள் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம், கட்டுமானப் பொருட்கள் கிடைக்காமை, வேலையை முடிப்பதில் தவறிய ஒப்பந்தக்காரர்கள் போன்ற காரணங்களால் சில சிறிய பணிகள் இன்னும் முடிக்கப்பட வேண்டியுள்ளன. உலக வங்கியின் நிதியுதவியான ரூபாய் 21.6 கோடியும் ஏற்கனவே பெறப்பட்டு விட்டது. நடைபெற்றுக்கொண்டிருக்கும் திட்டங்கள் மாநில நிதியுதவி கொண்டு முடிக்கப்பெறும். சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 1-ன் கீழ் ஒவ்வொரு திட்டத்திற்கு செலவழித்துள்ள தொகை மற்றும் திட்டங்கள் முன்னேற்றம் பற்றிய விபரங்கள் இணைப்பு VII-ல்கொடுக்கப்பட்டுள்ளன.

சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம்—2 :

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 1-ன் கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை மேலும் விரிவுபடுத்தவும், தன்னிறைவு வீட்டுமனைத் திட்டம் மற்றும் குடிசைபகுதி மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்துதலும் ஆகும்.

இத் திட்டத்தின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு. | திட்ட இலக்கு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் கோடியில்.) | |
| அ. மனைகளும் பணிகளும் | 23.80 | 15,000 குடும்பங்கள். |
| ஆ. குடிசைப் பகுதி மேம்பாடு. | 27.80 | 50.000 குடும்பங்கள். (சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 1-ன் கீழ் 50,000 வீடுகளடங்கிய குடிசைப் பகுதிகளை மேம்படுத்துதல் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம் 1-ன் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட குடிசைப் பகுதிகளில் உள்ள குடிசைகளுக்கு வீட்டு அபிவிருத்திக்கடன் வழங்கல்). |

| (1) | (2) (ரூபாய் கோடியில்) | (3) |
|---|---|---|
| இ. போக்குவரத்து | 17.90 | 555 பேருந்துகள் விடுதல் 6 கி. மீட்டர் நீள உள் வட்டச் சாலை அமைத்தல் மற்றும் இதரபோக்குவரத்து மேம்பாட்டுப் பணிகள். |
| ஈ. திடக்கழிவுப் பொருட்களைச் செவ்வையாகப்பயன்படுத்தல். | 03.10 | கழிவுப் பொருட்களை மேம்படுத்துவதற்குச் சாதனமும் கட்டிடப் பணிகளும். |
| உ. தொழில் நுட்ப உதவி | 01.30 | பயிற்சியும் ஆய்வுப் பணிகளும். |
| மொத்தம் .. | 73.90 | |

இத்திட்டத்தின் தற்போதைய பொருளாதாரம் மற்றும் திட்ட முன்னேற்ற விபரங்கள் இணைப்பு VIII-ல் கொடுக்கப்பட்டு உள்ளன. இரண்டாவது சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் II-ன் திருத்திய மதிப்பீடு ரூபாய் 75.98 கோடி. இதில், ரூபாய் 57.86 கோடி இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் :

ஒரு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ''தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்'' என்ற பெயரில் இவ்வரசால் தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் நிதியுதவி பெறும் பொருட்டு மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் உலக வங்கியின் நிதியுதவிக்கு மத்திய அரசால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 428 கோடி. ரூ. 200 கோடியிலிருந்து ரூ. 220 கோடி வரை உலக வங்கியிடமிருந்து நிதியுதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் முக்கியமாக சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகர்ப்பகுதிகளில் செயல்படுத்தப்படும். இது தவிர, நகர்ப்புற வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டு ரூ. 2 இலட்ச ம்க்கட் தொகைக்கு மேற்கொண்ட தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பூர், ஈரோடு மற்றும் வேலூர் ஆகிய நகர்ப்பகுதிகளில் உள்ள குறிப்பிட்ட திட்டங்களைச் செயல்படுத்த உள்ளாட்சிகளுக்கு நிதியுதவியளிக்கக் கூடும். இத் திட்டச் சுருக்கம்



இணைப்பு IX-ல் கொடுக்கப்பட்டுள்ளது. ரூ. 428 கோடியில் ரூ. 219 கோடி சென்னைப் பெருநகர்ப் பகுதியில் வளர்ச்சிப் பணிகளுக்கும் மீதியுள்ள ரூ. 209 கோடி மற்ற நகரங்களுக்கும் செலவழிக்கப்படும். இத்திட்டம் பற்றி மதிப்பீடு செய்ய உலக வங்கிக் குழு சமீபத்தில் வந்து சென்றுள்ளது. வரும் நிதியாண்டில் உலக வங்கியுடன் மேலும் விவாதம் நடக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தை செயல்படுத்தும் பணி வரும் நிதியாண்டில் ஆரம்பமாகும்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நேரடியாக செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகள் :

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சென்னை மாநகரத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு திட்டமிடுவதோடு கோயம்பேடு மொத்த அங்காடி, சாத்தாங்காடு எஃகு மற்றும் இரும்பு சாமான் மொத்த அங்காடி மற்றும் பேருந்து மற்றும் கனரக வாகனங்கள் முடிவிடம் அமைத்தல் ஆகிய சில முக்கிய வளர்ச்சிப் பணிகளையும் செயல் படுத்தி வருகிறது.

மணலி புதுநகரம் :

மணலி தொழிற்சாலை பகுதிகளில் பணிபுரியும் பல்வேறு வருமானமுடையவர்களின் வீட்டு வசதித் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு 230 ஏக்கர் நிலத்தைச் சாலைகள், குடிநீர் வசதி, சாக்கடை, மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் கொண்டதாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. 1,800 திறந்த வெளி வீட்டு மனைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும் ரூ. 478 இலட்சம் செலவில் 1,760 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. சுமார் 1,300 குடும்பங்கள் அங்கு குடியேறியுள்ளனர். 1987–88 ஆம் ஆண்டு 61 ஏக்கர் நிலத்தை ரூ. 150 இலட்சம் செலவில் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2,000 குடும்பங்களுக்கு வீட்டு வசதி தரப்பட இருக்கிறது.

மறைமலை நகர் புது நகரம் :

கிராமப்புறங்களிலிருந்து சென்னை நகருக்கு மக்கள் குடி பெயர்ந்து வருவதைத் தடுக்கும் பொருட்டு சென்னைக்கருகே புது நகரங்கள் உருவாக்கும் விதத்தில் மறைமலை நகர் வீட்டு வசதித் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை 209 ஏக்கர் நிலம் ரூ. 232 இலட்சம் செலவில் அபிவிருத்தி செய்யப் பட்டுள்ளது. 1,282 திறந்த வெளி மனைகளும், பொருளாதாரத் தில் நலிவுற்றோர்களுக்கு 288 திறந்த வெளி மனைகளும், ரூ. 438 இலட்சம் செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும் 511 ஏக்கர் நிலம் 1,344 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. தொழிற் கூடங்களுக்காக அபிவிருத்தி ரூ. 112 இலட்சம் செலவில்

செய்யப்பட்டு 120 தொழிற்கூட மனைகள் வழங்கப்பட்டுள்ளன. 60 தொழிற் கூடங்கள் செயல்பட ஆரம்பித்துள்ளன. 1987–88 ஆம் ஆண்டு மேலும் 60 ஏக்கர் நிலம் ரூ. 80 இலட்சம் செலவில் 787 வீட்டு மனைகளை உடையதாக அபிவிருத்தி செய்யப்படவிருக்கிறது. சுமார் 500 ஏக்கர் நிலம் நில எடுப்பு நடவடிக்கை மூலம் எடுக்கப்பட்டு பணி வசதிகள் கொண்டதாக 1987–88 ஆம் ஆண்டு அபிவிருத்தி செய்யப்படவிருக்கிறது. இதற்காக, ரூ. 100 இலட்சம் 1987–88 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி :

தற்போதுள்ள கொத்தவால்சாவடியை நவீன மற்றும் அதிக இடவசதி கொண்ட இடத்தில் மாற்றியமைக்கும் பொருட்டு சென்னைக்கருகே சுமார் 15 கி. மீ. தூரத்தில் சுமார் 296 ஏக்கர் நிலத்தில் கோயம்பேட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் 204 ஏக்கர் நிலம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் உள்ளது. மீதியுள்ள நிலம் 1987–88 ஆம் ஆண்டு கையகப்படுத்தப்படவிருக்கிறது. இந்தப் புது மொத்த அங்காடியில் சுமார் 3,000 கடைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சாலைகள் மற்றும் மழை நீர் வடிகால் வசதிகள் முடிக்கப்பட்டுள்ளன. குடிநீர் வசதி மற்றும் சாக்கடைப் பணிகளுக்குத் தேவையான பொருட்கள் வாங்கப்பட்டுள்ளன. கீழ்ப்பாகம் நீர் நிலையத்தில் இருந்து அங்காடி வளாகத்திற்கு தேவையான தண்ணீர் கிடைக்க குழாய்கள் போடும் பணி முடியும் நிலையில் உள்ளது. இதுவரை ரூ. 607.15 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 1987–88 ஆம் ஆண்டு குடிநீர் மற்றும் சாக்கடை மற்றும் கடைகள் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்படும். இத்திட்டம் 1988–89-ல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1987–88 ஆம் ஆண்டு வரவு - செலவு மதிப்பீட்டில் ரூ. 425 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புறநகர் பேருந்து மற்றும் சுமை வண்டிகள் நிலையங்கள் :

பேருந்து மற்றும் சுமை வண்டிகள் நிலையங்கள் சென்னையிலிருந்து செல்லும் மூன்று முக்கிய போக்குவரத்து சாலைகளில் புறநகர்ப் பகுதியில் ஆலந்தூர், கோயம்பேடு மற்றும் மாதவரம் ஆகிய இடங்களில் ரூ. 750 இலட்சம் செலவில் சென்னை மாநகரத்தின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும் சென்னைக்கு உள்ளும் வெளியிலும் செல்லும் போக்குவரத்து திட்டமிட்டபடி செல்லவும் அமைக்கப்படவிருக்கிறது.

இத்திட்டத்திற்கு தேவையான 200 ஏக்கர் நிலத்தில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியத்திற்குச் சொந்தமான 36 ஏக்கர் நிலத்தை சென்னைப்



பெருநகர் வளர்ச்சிக் குழுமம் எடுத்து கொண்டுள்ளது. சுமார் 60 ஏக்கர் நிலம் பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமானதாகும் மீதியுள்ள நிலம் தனியார்களுக்குச் சொந்தமானது. மாதவரத்தில் 60 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதியுள்ள நிலம் 1987–88 ஆம் ஆண்டு கையகப்படுத்தப்பட உள்ளது. மாதவரம் சுமை வண்டி நிலையம் கிட்டங்கி மற்றும் இதர வசதிகள் கொண்டதாக 1987-88 ஆம் ஆண்டு அமைக்கப்படவிருக்கிறது. இதுவரை ரூ. 122.23 இலட்சம் செவழிக்கப்பட்டுள்ளது. 1987 88 ஆம் ஆண்டு திட்டத்தில் ரூ. 133 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இரும்பு மற்றும் எஃகு மொத்த அங்காடி—சாத்தாங்காடு :

சென்னை ஜார்ஜ் டவுன் பகுதியில் இரும்பு மற்றும் எஃகு மொத்த வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் வியாபாரிகளுக்கு ஒரு நவீன கிட்டங்கி வசதி இத்திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 206 ஏக்கர் பரப்பளவில் 700-க்கும் அதிகமான கடைக்களுக்கான மனைகள் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. தொழில் துறைக்குச் சொந்தமான 43 ஏக்கர் நிலம் ஏற்கெனவே எடுத்துக் கொள்ளபட்டுள்ளது. 143 ஏககர் அரசு புறம்போக்கு நிலத்தில் நுழைவதற்கும் அரசு அனுமதி அளித்துள்ளது. இந் நிலத்திலும் அபிவிருத்திப் பணிகள் வேகமாக முன்னேற்றம் அடைந்து வருகிறது. சுமார் 20 ஏக்கர் தனியார் நிலம் தேவைப்படுகிறது. இத்திட்டம் நில அபிவிருத்திப் பணியை மட்டுப் கொண்டதாகும். சாலை அமைத்தல், வடிகால் அமைத்தல், தடுப்புச் சுவர் அமைத்தல் ஆகிய வேலைகள் மேற்கொள்ளப்பட்டு 1987–88 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல் படுத்தப்படும். இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 35 கோடியாகும். இதுவரை 203 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. 1987–88-ம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில் ரூ. 200 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அலுவலக வளாகம் :

எழும்பூர் இரயில் நிலையம் அருகில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கும் மற்ற பொதுத்துறை நிறுவனங்களின் அலுவலகங்களுக்கும் பல அடுக்கு மாடி அலுவலக வளாகத்தைக் கட்ட சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு சுமார் ரூ. 1,250 இலட்சம். 1988 ஆம் ஆண்டு மத்தியில் இக்கட்டிடம் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1987 மே 6

இக்கட்டிடத்தின் கட்டுமானப் பணி தமிழ்நாடு கட்டுமானப் பணிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அடித்தள பணிகள் முடிந்து விட்டன. இதுவரை ரூ. 107 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. 1987–88 ஆம் ஆண்டு திட்டத்தில் ரூ. 250 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் :**

சென்னை துரித இரயில் போக்குவரத்து திட்டம் சென்னை கடற்கரையிலிருந்து மைலாப்பூர் லஸ் வரை 8.45 கி. மீ. தூரம் இருக்கும். இதில் 2.95 கி. மீ. தூரம் தரை மட்டத்திலும் மீதமுள்ள 5.52 கி. மீ. தூரம் 18 அடி உயர மேல் மட்டத்திலும் அமையும். ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட அறிக்கையின்படி, இத்திட்டம் 1989–90 ஆண்டிற்குள் முடிவடைய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான வேலை 1983-84 ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது. துரித இரயில் போக்குவரத்துத் தடத்தில் வரும் அரசு நிலங்களை இனாமாக இரயில்வே துறைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத் தடத்தில் வரும் தனியார் நிலங்களையும சென்னைப் பெருநகர் போக்குவரத்துக்கு (இரயில்வே) இனாமாக கொடுக்கும் பொருட்டு கையகப்படுத்தப்பட்டு வருகிறது. மாற்றம் செய்யப் பட்ட நிலத்தின் மதிப்பீடு ரூ. 20 கோடிக்கு மேல் இருக்கும். இத்திட்ட அறிக்கையின்படி 1989 90-ல் முடிவடைய வேண்டு மானால், ஆண்டுத் திட்டத்தில் ஒவ்வொரு வருடமும் ரூ. 25 கோடி நிதி ஒதுக்கீடு செயயப்பட வேண்டும். ஆனால் மத்திய அரசு 1985–86 ஆம் ஆண்டு வரை ரூ. 13.95 கோடி மட்டும் 1983-84 முதல் 1986-87 முடிய நான்கு ஆண்டு களுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்திற்கு இதுவரை மத்திய அரசால் ஒதுக்கீடு செயத நிதி போதுமானதாக இல்லை. இத்திட்டத்தை 1990-க்குள் முடிக்கும் பொருட்டு 1987-88 ஆம் ஆண்டிற்கு ரூ. 25 கோடியை ஒதுக்கீடு செய்யும்படி மத்திய அரசை இவ்வரசு வற்புறுத்தியுள்ளது. இத்திட்டத்திற்கான செலவைப் பகிர்ந்து கொள்ள இவ்வரசின் விருப்பத்தை மத்திய அரசு சமீபத்தில் கேட்டுள்ளது. இருப்பினும் ஆறாவது திட்டத்தி லேயே இத்திட்டம் மத்திய அரசு துறைத் திட்ட மாக சேர்க்கப்பட்டுள்ளதால் இத்திட்டத்திற்கு நிதி வழங்கு முறையை இக்கட்டத்தில் மாற்றுவது நியாயமாகாது. மேலும் இத்திட்டச் செலவின் எந்தப் பகுதியினையும் இவ்வரசால் ஏற்றுக் கொள்ள இயலாது என்று இவ்வரசு கருதுகிறது. இத் திட்டத்திற்கு சுமார் 20 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தை ஏற்கெனவே இனாமாக இவ்வரசு கொடுத்துள்ளது. மாநிலத்தின் முக்கிய திட்டங்களுக்கு அதிக அளவு நிதி தேவைப் படுவதால் இத்திட்டத்திற்கு இம்மாநிலத்தின் சார்பில் பொருளாதார ஈடுபாடு என்பது மிகவும் சிரமமானதாகும். இது குறித்து மத்திய அரசுடன் இவ்வரசு மேலும் தொடர்பு கொள்ள இருக்கிறது.



1987 மே 6]

இணைப்பு

தமிழ்நாடு வீட்டு வசதி

| வரிசை எண்ணும் விவரமும். | குறைந்த வருவாய் பிரிவின ருக்கான குடி யிருப்பு. | நடுத்தர மற்றும் உயர் வருவாயி னருக்கான குடி யிருப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை— | | |
| 1960-61 ஆம் ஆண்டு முதல் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிய (1979-80) .. | 12,974 | 8,164 |
| 2 ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கட்டப்பட்ட வீடுகளின் எண் ணிக்கை (1980-85) .. | 10,891 | 11,917 |
| 3 1985-86 ஆம் ஆண்டில் கட்டப் பட்ட வீடுகளின் எண்ணிக்கை .. | 2,514 | 4,741 |
| 4 1986-87 (பிப்ரவரி வரை) கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் .. | 664 | 3,405 |
| 5 1987-88-ல் கட்ட உத்தேசிக்கப் பட்டவை .. | 2,261 | 3,011 |
| 6 ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட குறியீடு | 17,984 | 23,797 |

தற்போது இத்திட்டம் தொடரப்படவில்லை.

*ஏழாவது திட்டத்தில் காவலர் குடியிருப்புத் திட்டம் காவலர் வீட்டு வசதி நிறுவனத்தால் செயற்படுத்தப்படுகிறது.

[1987 மே 6

I :

வாரியம்—சாதனை விவரம்.

| தமிழ் நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்பு. | குடிசைப் பகுதி மாற்றுக் குடியிருப்பு. | தொழிலாளர்* மலிவு வாடகை குடியிருப்பு. | பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் குடியிருப்பு. | காவலர் குடியிருப்பு. | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 10,731 | 14,956 | 2,494 | 9,046 | 657 | 39,022 |
| 4,733 | 4,576 | 636 | 21,656 | 2,479 | 56,888 |
| 2,310 | 432 | .. | 5,803 | .. | 15,800 |
| 596 | .. | .. | 8,945 | .. | 13,610 |
| 1,162 | 96 | .. | 10,470 | .. | 17,000 |
| 6,125 | 2,332 | .. | 53,212 | .. | 1,03,450 |



1987 மே 6]

சென்னை பெருநகர்

| இடத்தின் பெயர் | தமிழ்நாடு வீட்டு திட்டத்தின் படி. | | |
|---|---|---|---|
| | நில அளவு (ஹெக்டேர்). | வீடுகளின் எண்ணிக்கை. | திட்டச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
| (1) | (2) | (3) | (4) |
| அரும்பாக்கம் .. | 34.20 | 2,304 | 184.20 |
| வில்லிவாக்கம் .. | 71.55 | 3,750 | 294.26 |
| கொடுங்கையூர் பகுதி 1 | 30.83 | 2,013 | 454.42 |
| கொடுங்கையூர் பகுதி 2 | 51.61 | 4,470 | |
| சென்னை பெருநகர் | | | |
| மொகப்பேர் (கிழக்கு) .. | 74.49 | 5,082 | 803.45 |
| மொகப்பேர் (மேற்கு) .. | 74.13 | 5,673 | 920.98 |
| நெற்குன்றம் மதுரவாயல் .. | 64.00 | 4,760 | 999.12 |
| மணலி .. .. | 41.69 | 3,053 | 702.30 |

வளர்ச்சித் திட்டம் 1.

[illegible] நகர்ப்புற வீட்டுமனைத் திட்டம்.

| சாதனை. | | |
|---|---|---|
| நில அளவு. (ஹெக்டேர்). | வீடுகளின் எண்ணிக்கை. | செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
| (5) | (6) | (7) |
| 34.20 | 2,334 | 200.00 |
| 71.55 | 3,751 | 459.91 |
| 30.83 | 2,013 | |
| 51.61 | 4,105 | 857.31 |
| வளர்ச்சித் திட்டம் 2 | | |
| 74.49 | 5,062 | 803.46 |
| 74.13 | 5,638 | 887.53 |
| 25.83 | 2,994 | 749.39 |
| 41.89 | 3,053 | 651.75 |





தமிழ்நாடு குடிசைப் பகுதி

சாதனை மற்றும்

| வரிசை எண். | ஆண்டு. | (குடிசைகளை அகற்றி குடியிருப்புக்கள் கட்டும் திட்டம். | |
|---|---|---|---|
| | | சாதனை (குடியிருப்புகள்). | நிதி (இலட்சத்தில்). |
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 5-ஆம் ஐந்தாண்டு திட்டம் முடிய (1979-80 வரை). | 34,974 | 3,085.36 |
| 2 | 6-ஆம் ஐந்தாண்டு திட்ட இறுதி வரை (1980-85). | 11,006 | 1,083.73 |
| 3 | 7-ஆம் ஐந்தாண்டு திட்டம்— | | |
| | (அ) 1985-86 .. .. | 512 | 152.41 |
| | (ஆ) 1986-87 .. .. | 688 | 175.00 |
| | (இ) 1987-88 .. .. | 1,000 | 200.00 |
| | (ஈ) 7-ஆம் ஐந்தாண்டு திட்ட இலக்கு. | 4,000 | 1,500 |

III

மாற்று வாரியம்.

நிதி இலக்கு விவரங்கள்.

| விரைவு படுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டம். | | சென்னை பெருநகர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள். | | நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் கூடுதல் மேம்பாட்டுத் திட்டம் (மத்திய அரசு வழங்கும் மானிய தொகை). | |
|---|---|---|---|---|---|
| சாதனை (குடும்பங்கள்). | நிதி (இலட்சத்தில்.) | சாதனை (குடும்பங்கள்.) | நிதி (இலட்சத்தில்). | சாதனை (குடும்பங்கள்). | நிதி (இலட்சத்தில்). |
| (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 28,700 | 163.35 | 18,338 | 274.33 | .. | .. |
| 35,738 | 261.29 | 39,619 | 1,500.35 | 343.24 | 56.00 |
| 3,570 | 70.88 | 10,000 | 370.00 | 7,255 | 17.00 |
| 5,600 | 70.00 | 7,500 | 130,00 | .. | .. |
| 6,400 | 80.00 | .. | .. | .. | .. |
| 3,88,250 | 1,000 | .. | .. | .. | .. |



## இணைப்பு IV.

### கிராமப்புற வீட்டுவசதித் திட்டம்.

1985-86 ஆம் ஆண்டு முடியவரை கட்டப்பட்ட வீடுகள் மற்றும் வழங்கப்பட்ட கடன்களின் விவரங்கள்.

| ஆண்டு. | கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | | | வழங்கப்பட்ட நிதியுதவி (ரூபாய் கோடியில்). | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆதி திராவிடர். | மற்றவர். | மொத்தம். | அளிக்கப்பட்ட கடன். | ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட கூடுதல் மானியம். | மொத்தம் வழங்கப்பட்ட தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1978–79 .. | 1,287 | 1,864 | 3,151 | 2.21 | .. | 2.21 |
| 1979–80 .. | 8,201 | 6,180 | 14,281 | 16.40 | 0.33 | 16.73 |
| 1980–81 .. | 34,238 | 7,844 | 42,082 | 8.35 | 1.63 | 9.98 |
| 1981–82 .. | 31,835 | 4,491 | 36,326 | 10.41 | 2.55 | 12.96 |
| 1982–83 .. | 32,845 | 7,247 | 40,092 | 8.28 | 2.68 | 10.96 |

| ஆண்டு. | கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | | | வழங்கப்பட்ட நிதியுதவி (ரூபாய் கோடியில்). | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆதி திராவிடர். | மற்றவர் | மொத்தம் | அளிக்கப் பட்ட கடன். | ஆதி திராவிடர்களுக்கு வழங்கப் பட்ட முதலீட்டு மானியம் | மொத்தம் வழங்கப் பட்ட தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1983–84 .. | 33,233 | 6,733 | 40,016 | 7.44 | 3.51 | 10.95 |
| 1984–85 .. | 21,392 | 6,705 | 28,097 | 8.46 | 1.57 | 10.03 |
| ஏழாவது ஐந்தாண்டு திட்டம் 1985–86 .. | 4,705 | 9,346 | 14,051 | 6.29 | 0.64 | 6.63 |
| மொத்தம் .. | 1,67,646 | 50,460 | 2,18,106 | 67.84 | 12.91 | 80.75 |



## இணைப்பு V.

### நகர்ப்புற வீட்டுவசதி திட்டம்.

31–12–1986 வரை வழங்கப்பட்ட கடன் மற்றும் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை விவரம்.

| ஆண்டு. | வழங்கப்பட்ட கடன் தொகை. (ரூபாய் கோடியில்.) | கடனுதவி வழங்கப் பட்ட வீடுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1). | (2) | (3) |
| ஜூன் 1976 வரை .. .. .. | 29.91 | 22,601 |
| 1976–77 .. .. .. .. | 5.61 | 2,945 |
| 1977–78 .. .. .. .. | 2.27 | 4,631 |
| 1978–79 .. .. .. .. | 8.24 | 6,631 |
| 1979–80 .. .. .. .. | 14.32 | 7,954 |
| மொத்தம் .. | 30.44 | 22,161 |

| ஆண்டு. | வழங்கப்பட்ட கடன் தொகை. (ரூபாய் கோடியில்). | கடனுதவி வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம்— | | |
| 1980–81 .. .. .. .. | 8.47 | 3,630 |
| 1981–82 .. .. .. .. | 14.78 | 6,670 |
| 1982–83 .. .. .. .. | 17.43 | 7,177 |
| 1983–84 ... .. .. .. | 16.00 | 5,457 |
| 1984–85 .. ... .. .. | 25.76 | 7,472 |
| மொத்தம் .. | 82.44 | 30,406 |
| ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம்— | | |
| 1985–86 .. .. .. .. | 31.03 | 8,062 |
| 1986–87 (31-12-1986 வரை) .. ... | 12.56 | 2,857 |
| மொத்தம் .. | 43.59 | 10,919 |
| மொத்த கூடுதல் ... | 186.38 | 86,087 |



| காலம். | வழங்கப்பட்ட கடன் (ரூபாய் கோடியில்). | நிதியுதவி பெற்ற வீடுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவு வரை ... ... | 60.35 | 44,762 |
| ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் .. ... .. | 82.44 | 30,406 |
| ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் 31-12-86 வரை .. | 43.59 | 10,919 |
| மொத்தம் .. | 186.38 | 86,087 |

## இணைப்பு VI.

மத்திய அரசின் உதவியுடன் செயற்படுத்தப்படும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்.

| வரிசை எண் மற்றும் நகரத்தின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை. | மத்திய அரசும், மாநில அரசும் சம பங்கு அடிப்படையில் வழங்கிய தொகை. ஆறாவது திட்டம். | ஏழாவது திட்டம். 1985–86 மற்றும் 1986–87 (31–12–1986 அன்றுள்ளபடி). | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1 உதகமண்டலம் .. .. | 78.99 | 78.98 | .. | 78.98 |
| 2 கரூர் .. .. .. .. | 79.38 | 68.00 | 11.38 | 79.38 |
| 3 தருமபுரி .. .. .. | 79.46 | 78.74 | 0.72 | 79.46 |
| 4 புதுக்கோட்டை .. .. .. | 79.54 | 61.54 | 18.00 | 79.54 |
| 5 திருச்செங்கோடு .. .. | 77.20 | 48.00 | 28.00 | 76.00 |
| 6 கோபிசெட்டிப்பாளையம் .. | 80.60 | 70.00 | 10.00 | 80.00 |
| 7 மன்னார்குடி .. .. .. | 63.06 | 53.50 | 9.56 | 63.06 |
| 8 மேட்டுப்பாளையம் .. .. | 66.00 | 61.00 | 5.00 | 66.00 |
| 9 செங்கல்பட்டு | 78.85 | 63.10 | 16.74 | 78.84 |
| 10 கூனூர் .. | 84.60 | 46.00 | .. | 46.00 |
| 11 தாராபுரம் .. .. .. | 75.60 | 75.60 | .. | 75.60 |
| 12 பழநி .. .. .. .. | 62.60 | 46.40 | 16.20 | 62.60 |
| 13 ஆத்தூர் .. .. .. | 79.17 | 75.28 | 3.90 | 79.18 |
| 14 திருவண்ணாமலை .. .. | 81.19 | 74.00 | .. | 74.00 |
| 15 உடுமலைப்பேட்டை .. .. | 77.59 | 72.75 | 5.08 | 77.83 |
| 16 நாமக்கல் . .. .. | 78.48 | 52.00 | 26.48 | 78.48 |
| 17 கோவில்பட்டி .. .. .. | 81.59 | 68.00 | .. | 68.00 |
| 18 இராணிப்பேட்டை, வாலாஜா கூட்டுத் தொகுதி. .. | 96.87 | 74.00 | 6.00 | 80.00 |
| 19 பொள்ளாச்சி .. .. .. | 90.83 | 75.54 | 4.46 | 80.09 |
| 20 தேனி—அல்லிநகரம் .. .. | 85.65 | 66.00 | 10.00 | 76.00 |
| 21 ஓசூர் .. .. .. .. | 69.97 | 69.92 | 0.50 | 70.42 |
| 22 நாகப்பட்டினம் .. .. | 80.24 | 46.50 | 33.50 | 80.00 |

## இணைப்பு VI—தொடர்ச்சி.

மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்—தொடர்ச்சி.

| மாவட்டம் மற்றும் நகரத்தின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை. | மத்திய அரசும், மாநில அரசும் சமபங்கு அடிப்படையில் வழங்கிய தொகை. ஆறாவது திட்டம் | ஏழாவது திட்டம் 1985-86 மற்றும் 1986-87 (31-12-1986 அன்றுள்ளபடி) | மொத்தம் |
|---|---|---|---|---|
| (1) | (2) (ரூபாய் இலட்சத்தில்) | (3) | (4) | (5) |
| 23 காரைக்குடி .. .. .. | 69.00 | 20.00 | 31.00 | 51.00 |
| 24 கள்ளக்குறிச்சி .. .. .. | 80.00 | 38.00 | 42.00 | 80.00 |
| 25 பண்ருட்டி .. .. .. | 78.00 | 68.00 | .. | 68.00 |
| 26 ஆரணி .. .. .. | 78.00 | 52.00 | 8.00 | 60.00 |
| 27 சிவகங்கை .. .. .. | 76.00 | 30.00 | 12.80 | 42.80 |
| 28. அரக்கோணம் .. .. | 85.56 | 33.00 | 41.00 | 74.00 |
| | 2,191.04 | 1,665.85 | 339.32 | 2,005.17 |



குறைந்த செலவின துப்புரவுத் திட்டம்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 1 அரக்கோணம் .. .. | 26.81 | 18.76 | .. | 18.76 |
| 2 ஆரணி .. .. .. | 21.00 | 14.70 | .. | 14.70 |
| 3 காரைக்குடி .. .. .. | 26.78 | 18.74 | .. | 18.74 |
| 4 சிவகங்கை .. .. .. | 25.00 | 17.50 | .. | 17.50 |
| 5 மேட்டுப்பாளையம் .. .. | 25.41 | 17.78 | .. | 17.78 |
| 6 மன்னார்குடி .. .. .. | 25.00 | 17.50 | .. | 17.50 |
| 7 ஓசூர் .. .. .. .. | 10.40 | 7.20 | .. | 7.20 |
| 8 கள்ளக்குறிச்சி .. .. .. | 17.00 | 11.92 | .. | 11.92 |
| மொத்தம் .. | 177.40 | 124.10 | .. | 124.10 |
| பெருமொத்தம் .. .. | 2,371.44 | 1,789.95 | 339.32 | 2,129.27 |

## இணைப்பு—VII.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்-1.**

(பொருளாதார நிலை 31—12—1986.)

| வரிசை எண்ணும், திட்டத்தின் பெயரும். (1) | முகவை. (2) | திட்ட முடிவு மதிப்பீடு. மூல மதிப்பீடு. (3) | திட்ட முடிவு மதிப்பீடு. நடப்பு மதிப்பீடு. (4) | 31-12-1986 முடிய செலவழிக்கப்பட்ட தொகை. (5) | இதுவரை அடைந்த திட்ட முன்னேற்றம். (6) |
|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்). | | | |
| அ. தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம். | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். | 932.88 | 1,517.22 | 1,440.38 | 12,200 மனைகள்/வீடுகள். |
| ஆ. குடிசைப்பகுதி மேம்பாடு. | தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம். | 606.00 | 509.25 | 390.33 | 25,000 குடும்பங்கள். |
| | சென்னை மாநகராட்சி | .. | 53.62 | 53.33 | |
| இ. தொழில் வளர்ச்சி— | | | | | |
| (அ) சிறு தொழிற்சாலை .. | சிறு தொழில் வளர்ச்சிக் கழகம். | 188.40 | 218.01 | 194.58 | 150 சிறு தொழிற்சாலைகள், 4,000 பேருக்கு வேலை வாய்ப்பு. |
| (ஆ) குடிசைத் தொழில் .. | தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம். | 96.19 | 55.90 | 47.84 | 47 குடிசைத் தொழிற்சாலைகள், 5,000 பேருக்கு வேலை வாய்ப்பு. |
| ஈ. தாய்சேய் நலம் .. .. | சமூக நலத்துறை .. | 84.93 | 84.93 | 151.73 | 120 குழந்தை நல மையங்கள், 7,000 குழந்தைகள். 3,000 தாய்மார்கள், 15,000 வயதான பெண்களுக்கான கல்வி |
| உ. குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வசதி. | குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம். | 1,125.00 | 1,181.66 | 1,224.88 | 36,000 அளவைகள் 15 கழிவு நீரேற்று நிலையங்கள் அபிவிருத்தி. |
| ஊ. சாலை மற்றும் போக்குவரத்து மேம்பாடு. | நெடுஞ்சாலை .. | 659.71 | 1,238.39 | 848.46 | 9 கி.மீ. உள் வட்டச் சாலை. |
| | சென்னை மாநகராட்சி. | 220.39 | 220.39 | 190.94 | 9 சுரங்கப்பாதை, 2 சாலை பிரிவுகள். |
| | காவல் துறை .. .. | 38.10 | .. | .. | 200 கி.மீ. நடைபாதை 50 கி.மீ. மிதி வண்டிப்பாதை. |
| எ. பேருந்து போக்குவரத்து .. | பல்லவன் போக்குவரத்துக் கழகம். | 658.50 | 571.33 | 566.73 | 305 பேருந்துகள், 3 பணிமனைகள், 8 பேருந்து நிற்குமிடங்கள், 400 பயணிகள் நிழற்குடைகள். |
| ஏ. தொழிற் நுட்ப உதவி .. | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம். | 72.00 | 57.78 | 57.78 | பயிற்சிகளும் ஆய்வுப் பணிகளும். |
| | மொத்தம் .. | 4,682.10 | 5,708.48 | 5,166.98 | |

## இணைப்பு—VIII.

### சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்-2.

(பொருளாதார நிலை 31—12—1986).

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். | முகவை. | திட்ட முடிவு மதிப்பீடு. மூல மதிப்பீடு. | திட்ட முடிவு மதிப்பீடு. நடப்பு மதிப்பீடு. | 31-12-1986 முடிய செலவழிக்கப்பட்ட தொகை. | இதுவரை அடைந்த முன்னேற்றம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| அ. தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம். | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். | 1,900.93 | 2,549.00 | 1,740.89 | 15,800 மனைகள் 23 குழந்தை நல மையங்கள். |
| | சிறு தொழில் வளர்ச்சிக் கழகம். .. .. | 477.13 | 477.13 | 37.82 | 162 சிறு தொழில் மனைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. |
| ஆ. குடிசைப் பகுதி மேம்பாடு. | தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியம். | 2,587.30 | 2,110.91 | 1,874.10 | 49,000 குடும்பங்கள் 39,155 குத்தகை விற்பனை ஒப்பந்தங்கள். |
| | சமூக நலத்துறை .. | 156.34 | 83.30 | 82.83 | 60 குழந்தை நல மையங்கள். |
| | ஆரம்ப சுகாதார நிலைய இயக்குநர். | 38.50 | 38.50 | .. | 18 மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. |
| இ. போக்குவரத்து .. .. | நெடுஞ்சாலை துறை .. | 532.10 | 626.00 | 532.16 | 1.5 கி.மீ. உள் வட்டச் சாலை முடிக்கப்பட்டுள்ளது. 4.3 கி.மீ. உள்வட்டச் சாலை உருவாக்கப்பட்டு வருகிறது. |
| | பல்லவன் போக்குவரத்துக் கழகம். | 12,60.40 | 1,291.08 | 1,291.08 | 555 பேருந்துகள் 1 மாற்று நிலையம். |
| ஈ. திடக்கழிவுப் பொருள் அகற்றல் மற்றும் நகராட்சிப் பணிகள் பராமரிப்பு. | சென்னை மாநகராட்சி. | 308.00 | 260.00 | 122.53 | கருவிகள் வாங்குவது செயல்பாட்டில் உள்ளது. |
| உ. தொழில் நுட்ப உதவி .. | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம். | 126.00 | 162.00 | 10,5.20 | 10 ஆய்வுகள் முடிக்கப்பட்டன. 8 ஆய்வுகள் செயல்பாட்டில் உள்ளன. |
| | மொத்தம் .. | 7,386.70 | 7,597.92 | 5,786.11 | |

## இணைப்பு—IX.

### தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டச் சுருக்கம்.

| திட்டத்தின் பெயர். | செயல்படுத்தும் முகவைகள். | எல்லா நகரங்கள். திட்ட இலக்கு. | எல்லா நகரங்கள். பொருளாதார மதிப்பீடு. | சென்னை. திட்ட இலக்கு. | சென்னை. பொருளாதார மதிப்பீடு. | மற்ற நகரங்கள். திட்ட இலக்கு. | மற்ற நகரங்கள். பொருளாதார மதிப்பீடு. | கருத்து. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | | | | | | (ரூபாய் கோடியில்) | | |
| தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம். | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். | 85,000 | 189 | 40,000 | 99 | 45,000 | 90 | முக்கியமாக சென்னை மற்றும் 4 (நான்கு) இரண்டாந்தர நகரங்களாக மதுரை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் சேலம். |
| குடிசைப் பகுதி மேம்பாடு. | தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம். | 100,000 | 40 | 50,000 | 20 | 50,000 | 20 | |
| சாலை மற்றும் போக்குவரத்து— | | | | | | | | |
| பேருந்து .. | பல்லவன் போக்கு வரத்துக் கழகம். | 1,200 எண்ணிக்கை. | 36 | 1,200 எண்ணிக்கை. | 36 | .. | .. | சென்னையில் மட்டும். |
| சாலை .. | நெடுஞ்சாலைத் துறை. | .. | 56 | .. | 26 | .. | 30 | சென்னை மற்றும் நான்கு இரண்டாந்தர நகரங்கள். |
| * நகராட்சி திட்டங்கள். | சென்னை மாநகராட்சி மற்றும் உள்ளாட்சித் துறை. | .. | 100 | .. | 35 | .. | 65 | 200,000 மக்கட் தொகைக்கு மேலுள்ள சென்னை மற்றும் நான்கு இரண்டாந்தர நகரங்கள் உட்பட எல்லா நகரங்களிலும். |
| தொழில் நுட்ப உதவி. | சென்னைப் பெரு நகர் வளர்ச்சி குழுமம். | .. | 7 | .. | 3 | .. | 4 | |
| | | | 428 | | 219 | | 209 | |

* நகராட்சி திட்டங்களுக்கு நகர்புற வளர்ச்சி நிதியிலிருந்து நிதியுதவியளிக்கப்படும். இத்திட்டங்கள் சாலைகள், குடிநீர் வசதி, சுகாதாரம் திடக்கழிவு பொருள் அகற்றல், வருமான நோக்குத் திட்டங்கள் ஆகிய திட்டங்களை கொண்டதாக சென்னை மற்றும் நான்கு இரண்டாம்தர நகரங்கள் உட்பட எல்லா நகரங்களிலும் படிப்படியாகச் செயல் படுத்தப்படும்.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras 5
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1
11 S. M. Jegannatham Book House, 55, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A K Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No 461, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore 1
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthagahalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras

வெளியீடு 19-2-1988

Issued 19-2-1988

2987

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மே 7, 1987-தொகுதி 43-எண் 2

Thursday, the 7th May 1987-Volume 43-No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat Fort St. George,**
**Madras-600 009**

விலை ரூ.3.00 காசுகள்]

[Price Rs-3.00 paise

## உள்ளடக்கம்.

### 7–5–1987.

பக்கங்கள்


1. வினாக்கள்—விடைகள்—

    உடுக்குறியிடாத வினாக்கள் .. .. .. 221—241

2. அறிவிப்புகள் —

    (அ) அரசு உறுதி மொழிக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம். 242—243

    (ஆ) அவைக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம் 234

    (இ) நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1987. 330

3. கவன ஈர்ப்பு —

    (அ) மேட்டுப்பாளையம் யுனைடெட் பிளீச்சர்ஸ் ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம். 242—245

    (ஆ) எண்ணூர் துரித சாலையில் புதிய மின் விளக்குகள் போடுவதில் தாமதம். 245—247

    (இ) காட்டுமன்னார் கோயில் ஒன்றிய ஆணையாளர் மக்கள் குறை தீர்ப்புக் கூட்டத்திற்கு வராமை. 247—248

    (ஈ) புதுக்கோட்டை மாவட்டத்தில் தட்டம்மை நோய். 258

    (உ) பட்டினப்பாக்கம் அரசு அலுவலர் குடியிருப்புக்களை சீர் செய்யும் பணி. 249—250

    (ஊ) தொழிற்பேட்டை குடியிருப்புகளைத் தொழிலாளர்க்கே சொந்தமாக்குதல். 250—253

    (எ) மறைமலை நகரில் ஒதுக்கப்பட்டுள்ள வீடுகளின் விலையை உயர்த்தியிருப்பது. 253—255

    (ஏ) திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோயில் திருப்பணி செய்வதில் தாமதம். 255—258

பக்கங்கள்

(ஐ) சின்னசேலம் ஒன்றியம் தெங்கியாநத்தம் ஆதி திராவிடர்காலனியில் பாதிக்கப்பட்ட வீடு களைப் புதுப்பித்தல். 258—260

(ஒ) பெரியார் மாவட்டம் அனந்தசாகர் ஏரியைத் தூர் வாரும் பணி. 261—262

4. அறிக்கை அளித்தல் —

மனுக்கள் குழு .. .. .. .. .. 262

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) வேளாண் வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1987. 263

(ஆ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு, 1987. 263

(இ) இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வேலை நிறுத்தம் அல்லது ஆர்ப்பாட்டம் அல்லது கண்டனத்தின் போது வேண்டுமென்றே போக்கு வரத்திற்கு இடையூறு விளைவிக் கின்றமைக்காக ஊர்தியோட்டும் உரிமங் களை நீக்கம் (ரத்து செய்தல்) சட்ட முன் வடிவு, 1987. 264—265

(ஈ) திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங் களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன் வடிவு, 1987. 265—266

(உ) நிதி ஒதுக்கு (எண்2) சட்ட முன்வடிவு, 1987. 111

6. வரவு-செலவுத் திட்டம், 1987–88, வாக்கெடுப்பு—தொடர்ச்சி (தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும்.

(ஆ) கோரிக்கை எண் 33—வீட்டு வசதி.

(இ) கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி தொடர்ச்சி. } 266—288

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு 288

(ஈ) கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்

(உ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள் .. .. 289—29



2987

பக்கங்கள்

(ஊ) கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்.

(எ) கோரிக்கை எண் 43—பல்வகை .. ..

(ஏ) கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச் செலவு.

(ஐ) கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். } 290—330

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் 68,69,70,71, 72,73,101–108

திரு. எஸ். பி. மணவாளன் .. .. 293—298

திரு. கே. குப்புசாமி .. .. .. 298—305

திரு. கி. மனோகரன் .. .. 305—317

திரு. மா. சின்னராசு .. .. .. 317—320

7. அரசினர் தீர்மானம்—

இல குழுக்களுக்குக் கூடுதலாக உறுப்பினர்களை நியமித்தல். 331—332

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 332—333

## 1987 மே 7, வியாழக்கிழமை

சித்திரை 24, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்.''

அவையின் தன்மை அறியாமல் சொல்லுதலை மேற்கொள்கின்றவர், சொற்களின் வகை அறியாதவரே; அவர் சொல்ல வல்லதும் இல்லை.

### 1. வினாக்கள்—விடைகள்

#### உடுக்குறியிடாத வினாக்கள்

#### விவசாய பம்புசெட்டு மற்றும் குடிநீர் பம்பு செட்டுகளுக்கு மின்வெட்டிலிருந்து விதிவிலக்கு

1—வினா 60—திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாய பம்ப் செட்டுகளுக்கும், குடிநீர்ப் பம்ப் செட்டுகளுக்கும் மின் வெட்டிலிருந்து விதி விலக்கு அளிக்கப்படுமா?

**விடை—**

விவசாய பம்ப் செட்டுகளுக்கும் குடிநீர் வழங்கு பம்ப் செட்டுகளுக்கும் தற்போது மின்வெட்டு ஏதும் இல்லை.

#### அனல் மின் நிலையங்களுக்கு வாங்கப்படும் நிலக்கரியின் அளவு

2—வினா 85—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழகத்தில் உள்ள அனல் மின் நிலையங்களுக்கு ஒரு வருடத்திற்கு வாங்கப்படும் நிலக்கரியின் அளவு என்ன?

(ஆ) எங்கிருந்து வாங்கப்படுகிறது?

விடை—

(அ) சராசரியாக 28.35 லட்சம் டன்.

(ஆ) ராணிக்கஞ்ச், ஜகனாத், சாந்தா, தாமக்கியா மற்றும் சிங்கரேணி நிலக்கரி சுரங்கங்களிலிருந்து வாங்கப்படுகிறது.

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல்

3—வினா 97—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதி, சுந்தரபாண்டியம் கிராமம் புதூரிலும், குன்னூர் கிராமம் வெண்ணீர் கொண்டான் கண்மாயின் மேற்குப் பகுதியில் குடியிருக்கும் ஆதி திராவிட மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

ஆம். திருவில்லிப்புத்தூர் தொகுதி, சுந்தரபாண்டியம் கிராமத்தைச் சார்ந்த புதூர் மற்றும் குன்னூர் கிராமம் வெண்ணீர் கொண்டான் கண்மாய் உள்வாயில் குடியிருக்கும் 55 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்குத் தேவையான புன்செய் நிலங்களை கையகப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

சேலம் இரும்பாலையிலிருந்து தாரமங்கலம் வரையுள்ள தார்ச்சாலையை அகலப்படுத்துதல்

4—வினா 180—திரு. செ. செம்மலை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் இரும்பாலையிலிருந்து தாரமங்கலம் வரை உள்ள தார்ச் சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது தொடங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



காளப்பநாய்க்கன்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தும் திட்டம்

5—வினா 235—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் காளப்பநாய்க்கன்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையமொன்று ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

மேட்டூர் அணைக்கு வரப்பெற்ற உபரி தண்ணீர்

6—வினா 286—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

1974 ஆம் ஆண்டில் இருந்து மேட்டூர் அணைக்கு இதுவரை ஆண்டுவாரியாக உபரியாக வந்த தண்ணீர் அளவு என்ன?

விடை—

1974 ஆம் ஆண்டில் இருந்து மேட்டூர் அணைக்கு இது வரை, ஆண்டுவாரியாக வந்த உபரி நீரின் அளவு என்ன என்று கணக்கிட இயலாது.

முன்னாள் இராணுவத்தினருக்கு அளிக்கப்பட்டு வரும் சலுகைகள்

7—வினா 322—திரு. செ. செம்மலை: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) முன்னாள் இராணுவத்தினருக்கு (Ex-servicemen) அளிக்கப்பட்டு வரும் சலுகைகளை அவர்களது வாரிசுகளுக்கும் நீட்டிக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு வரும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): முன்னாள் இராணுவத்தினருக்கு அளிக்கப்பட்டு வரும் சலுகைகள் அவர்களுக்கு மட்டுமின்றி அவர்களது வாரிசுதாரர்களுக்கும் பயனடையும் வகையிலேயே அமைந்துள்ளன.

[1987 மே 7

### ஜெயங்கொண்டம் பகுதியில் தேங்கிக்கிடக்கும் கைத்தறி துணிகள்

8—வினா 411—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் பகுதியில் தேங்கிக் கிடக்கும் கைத்தறி துணிகளை அரசு கொள்முதல் செய்து நெசவாளர்களின் துயர் துடைக்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா ?

விடை—

ஜெயங்கொண்டம் பகுதியில் ரூ. 1.92 கோடி மதிப்புள்ள தேங்கி இருந்த கைத்தறி துணிகளில் கோ-ஆப்டெக்ஸ் ரூ. 67.41 இலட்சம் மதிப்புள்ள கைத்தறி துணிகளை கொள்முதல் செய்துள்ளது. மேலும் 25–4–1985 முதல் 9–5–1985 வரை நடைபெற்ற 31-வது அகில இந்திய கைத்தறி இருவார விழாவின் போது இப்பகுதியில் ரூ. 61.55 இலட்சம் மதிப்புள்ள கைத்தறி துணிகள் விற்பனையாகியுள்ளன.

### சைதை மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு அருகிலுள்ள காலியிடத்தை விளையாட்டுத் திடலுக்காக கையகப்படுத்தல்

9—வினா 414—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சைதை மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள தனியாருக்குச் சொந்தமான காலி இடத்தை விளையாட்டுத் திடலுக்காக கையகப்படுத்தும் திட்டம் காலதாமதம் ஆவதற்கான காரணம் என்ன ?

விடை—

சென்னை கோடம்பாக்கம் கிராம புல எண். 62-ல் சுமார் 32 கிரவுண்டு நிலத்தை பள்ளி அபிவிருத்திக்கும் விளையாட்டுத் திடலுக்குமாக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அந்நிலத்திற்கான மதிப்புத்தொகை ரூ. 90,260.63 நில ஆர்ஜித அதிகாரியிடம் செலுத்தப்பட்டது. நில ஆர்ஜித அதிகாரி அவர்டு பிறப்பித்து நிலத்தை கையகப்படுத்தும் முன், மேற்படி நிலத்திற்கு உரிமையாளர்கள் உயர்நீதி மன்றத்தில் மேற்படி நில ஆர்ஜிதத்திற்கு எதிராக தடை உத்திரவு பெற்றுள்ள படியால், அந்த நிலத்தினை கையகப்படுத்தும் வேலை காலதாமதத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. மேலும், இது குறித்து உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு பெறும்வரை அரசு எந்தவித மேல் நடவடிக்கையும் எடுக்க இயலாது.



1987 மே 7]

### நெய்வேலி நிலக்கரி கார்ப்பரேஷனுக்கு மின்வாரியம் செலுத்தவேண்டிய பாக்கித்தொகை.

10—வினா 427—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்வாரியம் மின்சாரம் வாங்கிய வகையில் நெய்வேலி நிலக்கரி கார்ப்பரேஷனுக்கு ஏதேனும் பாக்கித்தொகை செலுத்த வேண்டியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மின் வாரியத்தின் கூற்றுப்படி 1–4–1985 வரையில் மின் வாரியம் நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பரேஷனுக்கு ரூபாய் 46.03 கோடி செலுத்த வேண்டியுள்ளது.

### கடலூரில் அனல் மின் நிலையம் அமைத்தல்

11—வினா 428—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடலூரில் அனல் மின் நிலையம் அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதா ?

விடை—

இல்லை.

### வேடசந்தூர் புகையிலை ஆராய்ச்சி நிலையத்தை அபிவிருத்தி செய்தல்

12—வினா 433—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லை அடுத்துள்ள வேடசந்தூரில் உள்ள புகையிலை ஆராய்ச்சி நிலையத்தை அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### சர்க்கரை உற்பத்தியைப் பெருக்க விசேட திட்டம்

13—வினா 436—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சர்க்கரை உற்பத்தியைப் பெருக்க அரசு ஏதேனும் விசேட திட்டம் வகுத்துள்ளதா ?

(ஆ) 1984–85 ஆம் ஆண்டு எத்தனை டன் சர்க்கரை உற்பத்தியை அரசு எதிர்பார்க்கிறது ?

விடை—

(அ) சர்க்கரை உற்பத்தியைப் பெருக்க தனியார் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் மேலும் புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. மேலும் அதிக அளவு சர்க்கரைச் சத்துக் கொண்ட சி.ஓ.சி. 671 ரக கரும்பினை ஆலைப்பகுதியில் அதிக அளவு பயிரிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைப்பகுதியில் கரும்புப் பெருக்கத் திட்டங்களை அதிக அளவில் மேற்கொண்டு ஏக்கர் சராசரி மகசூலை அதிகப்படுத்தவும் அதன் மூலம் அதிக அளவு ஏக்கர் அளவில் சர்க்கரை உற்பத்தியைப் பெருக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) 5.76 லட்சம் டன்கள்.

### திண்டுக்கல் அருகே கியூபா நாட்டு உதவியுடன் சுருட்டு தொழிற்சாலை துவங்கும் திட்டம்

14—வினா 439—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் அருகே கியூபா நாட்டு உதவியுடன் சுருட்டு தொழிற்சாலை துவங்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இங்கு தயாரிக்கப்படும் சுருட்டுகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



### தென் மாவட்டங்களில் ரயில் பாதையை அகல ரயில் பாதையாக மாற்றல்

15—வினா 443—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு தென் மாவட்டங்களில் உள்ள ரயில் பாதையை பிராட்கேஜ் பாதையாக மாற்றம் செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது ?

(இ) மத்திய அரசு அளித்துள்ள பதில் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பல அகல இரயில் பாதைத் திட்டங்களைச் செயல் படுத்த இவ்வரசு மத்திய அரசிற்கு கோரிக்கை அனுப்பியது.

(இ) இதில் கரூர்-திண்டுக்கல் மீட்டர்கேஜ் இரயில் பாதையினை அகல இரயில் பாதையாக மாற்றும் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம்

16—வினா 445—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் எதுவும் தமிழக அரசு வசம் தற்போது இல்லை.

### பிளவக்கல் அணை சுற்றுலாப்பகுதியில் பூங்காக்கள், பயணிகள் தங்குவதற்கு வசதிகள் செய்தல்

17—வினா 446—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிளவக்கல் அணை சுற்றுலாப் பகுதியில் பூங்காக்கள், பயணிகள் தங்குவதற்கு இடங்கள் அமைக்க பாண்டியன் போக்குவரத்துக் கழகம் நிதி உதவி செய்துள்ளதா ?

[1987 மே 7

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பாண்டியன் போக்குவரத்துக் கழகம் அளிக்க வேண்டிய ரூ. 3.00 இலட்சத்தில் ரூ. 1.00 இலட்சம் கொடுத்துள்ளது.

வறுமையில் வாடும் விளையாட்டு வீரர்களுக்கு உதவித் தொகை வழங்கல்

18—வினா 447—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் வறுமையில் வாடும் விளையாட்டு வீரர்களுக்கு உதவித்தொகை வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) : வறுமையில் வாடும் தலைசிறந்த வயது முதிர்ந்த விளையாட்டு வீரர்/வீராங்கனைகளுக்கு மாதம் ரூ. 75 வீதம் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நவீன இயந்திரத்தால் இயக்கப்படும் நெல் இருப்பு கிடங்கு கட்டும் திட்டம்

19—வினா 644—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் நவீன இயந்திரத்தால் இயக்கப்படும் நெல் இருப்பு கிடங்கு கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

கன்னியாகுமரியில் சுற்றுலா வளர்ச்சிக்கென பத்து ஆண்டுக்கால விசேஷ திட்டம்

20—வினா 651—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மீன்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் சுற்றுலா வளர்ச்சிக்கென 10 ஆண்டு கால விசேஷ திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?



1987 மே 7]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ரூ. 16.00 கோடி செலவில் பெருந்திட்டமொன்று தீட்டப்பெற்று சில முக்கிய பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

பாலிடெக்னிக், பொறியியல் கல்லூரி மாணவர்கள் தேர்வுகளை தமிழில் எழுதுதல்

21—வினா 661—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலிடெக்னிக், பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் தேர்வுகளை தமிழில் எழுதும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயலுக்கு வரும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : பாலிடெக்னிக்குகளைப் பொறுத்த வரை "வாரியத் தேர்வுகளை" மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப ஆங்கிலத்திலோ அல்லது தமிழிலோ எழுத அனுமதிக்குமாறு பாலிடெக்னிக் முதல்வர்கள் தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பாலிடெக்னிக்குகளுக்கு இம்முறை 1984–85 ஆம் கல்வி ஆண்டு முதற்கொண்டு செயல்படுத்தப்படுகிறது. பொறியியல் கல்லூரிகளில் தமிழில் தேர்வு நடத்துவது குறித்து செயற்குறிப்பு ஏதுமில்லை.

மதுரை மாநகருக்கு குடிநீர் வழங்க கல்லாறு திட்டம்

22—வினா 789—திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகருக்கு நிரந்தரமாக குடிநீர் பஞ்சத்தைப் போக்க அரசால் அறிவிக்கப்பட்ட கல்லாறு திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

விடை—

இத்திட்டம் அரசு பரிசீலனையில் இல்லை. ஆயினும் மதுரை மாநகருக்கு நிரந்தரமாகக் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க வைகை அணையிலிருந்து நாள் ஒன்றுக்கு 90 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் உலக வங்கி உதவித் திட்டம் தொடங்கப்பெற்றுள்ளது.

### ஒட்டப்பிடாரம், கயத்தாறு ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல்.

23—வினா 801—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரம், கயத்தாறு ஆகிய இரு ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து, வீரவாஞ்சிநாதன் ஊராட்சி ஒன்றியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஒட்டப்பிடாரம், கயத்தாறு ஆகிய இரு ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து வீரவாஞ்சிநாதன் ஊராட்சி ஒன்றியம் அமைக்கக் கோரும் பிரேரணை இல்லை.

### மின்சார வாரியத்திற்காக நிலக்கரி இறக்குமதி

24—வினா 899—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் [பேரவைத் துணைத் தலைவர்]: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சார வாரியத்திற்கு உள்ள நிலக்கரி பற்றாக்குறையைப் போக்க, நிலக்கரி இறக்குமதி செய்ய மாநில அரசு, மைய அரசை கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 5 இலட்சம் டன் நிலக்கரியை இறக்குமதி செய்ய அனுமதி கோரியதில் ஒரு இலட்சம் டன் நிலக்கரியை இறக்குமதி செய்ய அனுமதி கிடைத்துள்ளது.

### சூரிய ஒளியில் மின்சார பம்பு செட்டுகளை இயக்கும் கருவிகள் கண்டுபிடித்தல்.

25—வினா 900—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் [பேரவைத் துணைத் தலைவர்]: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும்மின் துறை அமைச்சர்கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூரிய ஒளியில் மின்சார பம்பு செட்டுகளை இயக்கும் கருவிகளைக் கண்டுபிடிக்க மின் துறையினரோ அல்லது தனியார்களோ மாநிலத்தில் திட்டமிட்டுள்ளனரா ?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) சூரிய ஒளியினை மின்னாற்றலாக மாற்றி பம்பு செட்டுகளை இயக்கும் கருவிகளைத் தமிழக மாநிலத்தில் மின் துறையோ அல்லது தனியார்களோ தயாரிப்பதற்கான எந்தவிதத் திட்டமும் இல்லை.

### வெளியாருக்கு போக்குவரத்துக் கழகங்கள் மூலம் பேருந்து கூடுகட்டும் பணி.

26—வினா 906—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் [பேரவைத் துணைத் தலைவர்]: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் உள்ள போக்குவரத்துக் கழகங்கள் பேருந்து கூடு கட்டும் (Body Building) பணியினை வெளியாருக்கும் செய்து கொடுக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சேரன் பொறியியல் கழகம் மட்டும் மாநில மற்றும் வெளி மாநில தனியார் துறை நிறுவனங்களுக்கு 1982—83 ஆம் ஆண்டில் 4 கூண்டும், 1983—84-ல் 8 கூண்டும், 1984—85-ல் 3 கூண்டும் கட்டுமானம் செய்து கொடுத்திருக்கின்றது.

### விவசாயிகள் பயன்படுத்தும் மின்சார பம்பு செட்டின் வடிவமைப்பை சீர்படுத்துதல் பற்றி ஆய்வு.

27—வினா 907—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் [பேரவைத் துணைத் தலைவர்]: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகள் பயன்படுத்தும் மின்சார பம்பு செட்டின் வடிவமைப்பை சீர்படுத்துவதன் மூலம் மின்சாரம் பெரும் அளவில் மிச்சப்படுத்தலாம் என்பது குறித்து மின்துறை ஆய்வு மேற்கொண்டதா ?

(ஆ) ஆம் எனில், ஆய்வின் மீது மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இந்திய அரசின் கிராம மின்வசதிக் கழகத்திடமிருந்து (Rural Electrification co-operation Ltd., Govt. of India) பண உதவி பெற்று மின்சார பம்பு செட்டுகள் நிறுவுவதில் மாற்றங்கள் செய்வதற்காக ஒரு திட்டத்தை தமிழ்நாடு மின்சார வாரியம் எடுத்துக்கொண்டுள்ளது.

### தொழிற்சாலைகள், விவசாயத்திற்கு மின் பற்றாக்குறையைப் போக்க மாற்று ஏற்பாடு

28—வினா 928—திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மின் பற்றாக் குறையால், தொழிற்சாலைகளும், விவசாயமும் பாதிக்காமல் இருக்க அரசு மாற்று ஏற்பாடு ஏதாவது செய்திருக்கிறதா ?

விடை—

விவசாயத்திற்கும், குறைவழுத்த தொழிற்சாலைகளுக்கும், மின் வெட்டு இல்லை. உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கு மட்டுமே மின்வெட்டு உள்ளது. அதற்கு மாற்று ஏற்பாடுகள் எதுவும் இல்லை.

### மேமாத்தூர் மற்றும் விருத்தாசலம் அணைகளுக்கு சாத்தனூர் அணையிலிருந்து பாசன நீர்விடல்.

29—வினா 935—திரு. ஆர். தியாகராஜன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணையிலிருந்து மேமாத்தூர் மற்றும் விருத்தாசலம் அணைகளுக்கு பாசன நீர் விடப்படுவது கால தாமதமாவதை அரசு அறியுமா ?

(ஆ) காலதாமதத்தை தடுக்க அரசு முயற்சி ஏதும் எடுத்துள்ளதா ?

விடை—

(அ) சாத்தனூர் அணையிலிருந்து மேமாத்தூர் மற்றும் விருத்தாசலம் அணைகளுக்கு தண்ணீர் விடப்படுவதில்லை. ஏனென்றால் இவைகள் வெவ்வேறு ஆற்றுப் படுகைகளை உடையது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.





### சாலைகளில் மா, பலா, புளி போன்ற மரங்களை வளர்க்கும் திட்டம்.

30—வினா 995—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாலைகளில் நடும் மரங்களில் பலன் தரும் மா, பலா, புளி, தென்னை முதலிய மரங்களை நட்டு அரசு வருவாயை பெருக்குவதோடு உற்பத்தி பெருக்கும் மரங்களாக தரும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

ஆம்.

### புன்னப்பட்டி கிராமத்தில் புதிய தாய்—சேய் நல விடுதி அமைக்கும் திட்டம்

31—வினா 1107—திரு. பெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம் புன்னம்பட்டி கிராமத்தில் புதிய தாய்—சேய் நல விடுதி அமைக்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா ?

விடை—

இல்லை.

### திருப்பூர், பிச்சாம்பாளையம், புதூர் அருகில் ஆசிரியர் குடியிருப்பு ஆழ்துளை கிணற்று தண்ணீரில் சாயம் கலந்து வருவது பற்றிய புகார்

32—வினா 1178—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், பிச்சாம்பாளையம், புதூர் அருகிலுள்ள ஆசிரியர் குடியிருப்புப் பகுதி போர் வெல் தண்ணீரில் சாயம் கலந்து வருவதாகப் புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தொழிற்சாலை வேறு மாற்றிடத்தை தேர்ந்தெடுக்குமாறு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

**திருப்பூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து நெடுஞ்சாலைகளையும் தார் போட்டு சமப்படுத்தும் திட்டம்**

33—வினா 1179—திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து நெடுஞ்சாலைகளையும் தார் போட்டு சமப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இத்திட்டம் பரிசீலனையில் இல்லை.

**திருப்பூர் நகர கூட்டுறவு அர்பன் வங்கி சீனியர் ஆடிட்டர் மீதான வழக்கு**

34—வினா 1185—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர கூட்டுறவு அர்பன் வங்கியில் சீனியர் ஆடிட்டராக இருந்த ஒருவர் வரதட்சனைத் தகராறு காரணமாக மனைவி தற்கொலை செய்து கொண்டது குறித்த வழக்கில் கடந்த அக்டோபர் 1984-ல் கைது செய்யப்பட்டாரா ?

(ஆ) ஆம் எனில், 48 மணி நேரத்திற்கு மேல் சிறை இருந்தவர் மீண்டும் சிந்தாமணி (கோவை)-யில் வேலையில் அமர்த்தப்பட்டது உண்மையா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அவர் 48 மணி நேரத்திற்கு மேல் காவலில் வைக்கப்படவில்லை. ஆகையால் அவரது தற்காலிக வேலை நீக்கம் ரத்து செய்யப்பட்டு, மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டார்.

**திருப்பூரில் உற்பத்தி செய்யப்படும் பனியன்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்**

35—வினா 1196—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—



திருப்பூரில் தயாராகும் பனியன்களுக்கு மாநில அரசு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி வாய்ப்புக்களை பெற்றுத்தர நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

விடை—

ஆம். ஏற்றுமதி தரத்திற்கான பனியன்கள் மற்றும் உள்ளாடைகளைத் தயாரித்து, ஏற்றுமதி செய்யும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு எல்லா உதவிகளையும் செய்கிறது.

**வைகை அணையிலிருந்து மதுரைக்கு குழாய் மூலமாக தண்ணீர் கொண்டுவரும் திட்டம்.**

36—வினா 1256—திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வைகை அணையில் இருந்து மதுரைக்கு குழாய் மூலமாக நேரடியாக தண்ணீர் கொண்டுவரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) நிலம் கையகப்படுத்தும் பணியும், வடிவமைப்பு மற்றும் மதிப்பீடுகள் தயாரிப்புப் பணியும் நடைபெற்று வருகின்றன.

(ஆ) மேற்படி திட்டத்தின்படி மதுரை நகரில் இருந்து சுமார் 70 கி.மீ. தொலைவில் உள்ள வைகை அணையிலிருந்து கான்கிரிட் குழாய் மூலம் நீர் எடுக்கப் பெற்று சுத்திகரிக்கப்பட்டு, மதுரை நகருக்கு வழங்கப் பெறும் திட்டம் முடிய ஐந்தாண்டுகள் வரை ஆகும்.

**உச்சநீதி மன்றத்தின் பிரிவு ஒன்றை சென்னையில் அமைத்தல்**

37—வினா 1330—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் [பேரவைத் துணைத் தலைவர்]: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உச்ச நீதிமன்றத்தின் (Supreme Court) பிரிவு ஒன்றை சென்னையில் அமைக்கக்கோரி மைய அரசை மாநில அரசு கோரியுள்ளதா ?

விடை—

ஆம்.

[1987 மே 7

வெங்காய பயிரில் விழும் நோய்களை தடுக்கும் ஆராய்ச்சி,

38—வினா 1334—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் [பேரவைத் துணைத் தலைவர்]: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் வெங்காயப் பயிரில் விழும் நோய்களை தடுக்க தனியாக ஆராய்ச்சி ஏதேனும் வேளாண்மை துறையில் மேற்கொள்ளப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் முடிவு என்ன ?

விடை—

(அ) வெங்காயப் பயிரில் விழும் நோய்களை தடுக்க தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் ஆராய்ச்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன.

(ஆ) டைதேன் 2.78 என்ற மருந்தை தெளித்து இலை புள்ளி நோயினையும் குமான் போன்ற மருந்துகளையும் தெளித்து இலைக்கருதல் நோயினையும் கட்டுப்படுத்தலாம்.

ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்படும் வீட்டுமனைப்பட்டா.

39—வினா 1339—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் [பேரவைத் துணைத் தலைவர்]: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்து வீட்டு மனைப்பட்டா வழங்கும்போது, திருமணம் ஆகாத ஆதிதிரா விடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இதனை நிவர்த்திக்க அரசு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதா ?

விடை—

(அ) மற்றும் (ஆ): ஆதி திராவிடர்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்து குடும்பத் தலைவருக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப் படுகிறது. அதில், அவர் திருமணம் ஆனவரா அல்லது ஆகாத வரா என பாகுபடுத்தப்படுவதில்லை.





இரவு நேரங்களில் காவல் ரோந்துப் பணிக்காக முன்னாள் இராணுவத்தினரின் நியமனம்

40—வினா 1356—திரு. கு. ரமணி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இரவு நேரங்களில் காவல் ரோந்துப் பணிக்காக முன்னாள் இராணுவத்தினர் 400 பேர் நியமிக்கப்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அவர்கள் எந்த இடங்களில் இப்பணி செய்து வருகிறார்கள் ?

(இ) கோவை மாநகரத்தில் எத்தனை பேர்கள் இப்பணிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம் புத்தூர், மற்றும் செங்கல்பட்டு மேற்கு, கிழக்குப் புறநகர் பகுதி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் முறையே 100 முன்னாள் இராணுவத்தினர் வீதம் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

கோதையாறு பாசன திட்டத்தில் புதிய அணைகள் கட்டும் திட்டம்,

41—வினா 1388ஏ—திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

கோதையாறு பாசன திட்டத்தில் புதிய அணைகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

போபாலில் 30 மெகாவாட் திறன்கொண்ட சூரிய ஒளியில் மின்சாரம் உற்பத்தி செய்தல்.

42—வினா 1412—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் [பேரவைத் துணைத் தலைவர்] : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) போபாலில் 30 மெகாவாட் திறன் கொண்ட சூரிய ஒளியில் மின்சாரம் உற்பத்தி செய்யும் மின்நிலையம் அமைக்கப் பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இதுபோன்ற மின் உற்பத்தி நிலையம் ஒன்றை தமிழகத்தில் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

(அ) இது பற்றிய விவரம் அரசுக்கு தெரியாது. மத்தியப் பிரதேச சக்தி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரைக் கேட்டதில் அவர் இத்தகைய மின் உற்பத்தி நிலையம் மத்தியப் பிரதேசத்தில் எங்குமே அமைக்கப்படவில்லை என்று கூறியுள்ளார்.

(ஆ) இத்தகைய பெரிய அளவு (30 மெகாவாட்) மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

### அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வு தமிழில் எழுதுதல்

43—வினா 1419— மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மைய அரசு நடத்தும் ஐ.ஏ.எஸ். போட்டித் தேர்வில் எல்லா பாடங்களுக்கான தேர்வையும் தமிழில் எழுத அனுமதிக்கப்படுகிறார்களா ?

(ஆ) இல்லை எனில், மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

விடை—

(அ) அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வுகளில் வினாத்தாள்கள் ஆங்கிலத்திலும், இந்தியிலும் தயாரிக்கப்படுகின்றன. தேர்வுகளில் பங்கு கொள்பவர்கள் ஆங்கிலம் நீங்கலாக மற்றத் தேர்வுத் தாள்களைத் தமிழில் எழுதலாம்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை

44—வினா 1421 மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு கொடுக்கப்படுகின்ற உபகாரச் சம்பளத்திற்கு அவர்களுடைய பெற்றோர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வருமான வரம்பை உயர்த்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?



விடை—

பிற்படுத்தப்பட்டோர் மாணவர்கள் படிப்பு உதவித் தொகை பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பெற்றோர் ஆண்டு வருமான வரம்புத் தொகை ரூபாய் 5,000-ஐ உயர்த்துவதற்கு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

### அரசுப் பணியிலிருந்து இறப்பவர்களின் வாரிசுகளுக்கு அரசுப்பணி அளிக்கும் திட்டம்

45—வினா 1433—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் [பேரவைத் துணைத் தலைவர்] : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுப் பணியில் இருந்து இறப்பவர்களின் வாரிசுகளுக்கு அரசுப் பணி கொடுக்கும் திட்டத்தின் கீழ் பணி அமர்த்தப்பட்ட பலர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

விடை—

ஆம்.

### கொள்ளிடத்திற்கு இடையே பாலம் அமைக்கும் திட்டம்

46—வினா 1476—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடந்தை தாலுக்கா நீலத்த நல்லூரையும், திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்டம் தாலுக்கா மதனத்தூர் கிராமத்தையும் இணைக்க கொள்ளிடத்திற்கு இடையே பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### சைதை 146-வது வட்டம் ஆலந்தூர் சாலையை விரிவு படுத்தும் திட்டம்

47—வினா 1479—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை 146-வது வட்டம் கிண்டி—கத்திப்பாரா சாலையைப் போன்று, ஆலந்தூர் சாலையை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் பணிகள் துவக்கப் படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**சைதை மேற்கு ஜோன்ஸ் சாலை, மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி பகுதியிலுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான காலிமனை**

48—வினா 1482—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சென்னை சைதை மேற்கு ஜோன்ஸ் சாலையில் உள்ள மாநகராட்சி மேல் நிலைப்பள்ளியின் பகுதியில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான ஒரு கிரவுண்ட் காலி மனையை புதிய நூலகம் கட்ட மாவட்ட ஆணைக் குழுவிற்கு வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டும் இதுவரை வழங்காமல் உள்ளதற்கான காரணம் என்ன

விடை—

நூலக ஆணைக்குழு காலியிடத்தை வழங்க எந்தவித கோரிக்கையும் அனுப்பவில்லை. எனவே, சென்னைமாநகராட்சி மன்றம் தீர்மானம் ஏதும் நிறைவேற்றவில்லை.

**கரிசல்பட்டியில் மின் இணைப்பு துண்டித்தது சம்பந்தமாக வரப்பெற்ற மனு**

49—வினா 1518—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : [பேரவைத் துணைத் தலைவர்] மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகா கரிசல்பட்டியைச் சார்ந்தவர்களிடமிருந்து இலவச மின்சக்தி வழங்கும் அடிப்படையில் மின் கட்டணம் கட்டாதவர்களின் மின் இணைப்பை துண்டித்தது சம்பந்தமாக மனு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.



(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**கொழுமடை மயானப் பகுதியருகிலுள்ள குளத்தை சீரமைத்தல்**

50—வினா 1537—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : [பேரவைத் துணைத் தலைவர்] மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலச்செவல் நகர பஞ்சாயத்தைச் சார்ந்த கொழுமடை பகுதிவாழ் மக்களிடமிருந்து தங்களின் மயான பகுதிக்கு அருகில் உள்ள குளத்து நீரால் பாதிப்பினைச் சீரமைக்கக் கோரி மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கொழுமடை கிராமத்தில் புதியதாக அமைந்திருக்கும் குளத்தின் உள் வாயில் வரும் மயான இடத்திற்கு பதிலாக மேற்படி கிராமத்தில் சர்வே நெம்பர் 28/5, 28/6, 28/7, 28/8, 28/9 ஆகியவற்றில் 0.68 செண்ட் இடம் ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

**(அ) அரசு உறுதிமொழிக் குழு உறுப்பினர்கள் நியமனம்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 248 (1)-வது விதியின் கீழ் பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1987–88-ஆம் ஆண்டிற்கான அரசு உறுதி மொழிக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:

1. திரு. துரை அன்பரசன்.
2. திரு. எஸ். புருசோத்தமன்.
3. திரு. அ. வெங்கடாசலம்.
4. திரு. ஏ. பாலுச்சாமி.
5. திரு. ஆ. சிவக்குமார்.
6. திரு. எஸ். பாலசுப்பிரமணியன்.
7. திரு. எம். சிவக்குமார்.
8. திரு. மா. மீனாட்சிசுந்தரம்.
9. திரு. சி. பழனிமுத்து.
10. திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்.
11. திரு. ப. தீர்த்தராமன்.
12. திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்.

பேரவையின் 249 (1)-வது விதியின் கீழ் திரு. சி. பழனிமுத்து அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

### (ஆ) அவைக் குழு—உறுப்பினர்கள் நியமனம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 253 (1)-ன் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை, 1987–88 ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்.

1. திரு. வே. குப்புசாமி.
2. திரு. க. நரசிம்மபல்லவன்.
3. திருமதி பி. லட்சுமி.
4. திரு. சு. ஜெகதீசன்.
5. திரு. எல்ல. இராசமாணிக்கம்.
6. திரு. கோ. பெருமாள் பிள்ளை.
7. திரு. அ. பாலுசாமி.
8. திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்.
9. திரு. டி. எம். வெங்கடாசலம்.
10. திரு. என். சண்முகம்.
11. திரு. அ. மலர்மன்னன்.
12. திரு. ஆர். கோவிந்தசாமி.
13. திருமதி த. இராசாம்பாள்.
14. திரு. கே. கல்லன்.
15. திரு. ஆர். ஈஸ்வரன்.
16. திரு. எஸ். டேனியல்ராஜ்.
17. திரு. கே. முத்துவேல்.
18. திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம்.

பேரவை விதி 253 (1)-ன் கீழ், திரு. எல்ல. இராசமாணிக்கம் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கின்றேன்.

## 3. கவன ஈர்ப்பு

### (அ) மேட்டுப்பாளையம் யுனைடெட் பிளீச்சர்ஸ் ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் கே. சுப்பராயன், மா. சின்னராசு ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.





**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மேட்டுப்பாளையம், யுனைடெட் பிளீச்சர்ஸ் தொழிற்சாலையில் பணியாற்றும் சுமார் 700 தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி கடந்த 11–4–1987 முதல் வேலை நிறுத்தம் செய்து வருவது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத் திற்கு கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

கோவை மாவட்டம் மேட்டுப் பாளையத்திலுள்ள யுனை டெட் பிளீச்சர்ஸ் ஆலையில் சுமார் 400 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். இத் தொழிலாளர்கள் தேசிய பஞ்சாலைத் தொழி லாளர் சங்கம் (டி.என்.டி.யு.சி.), கோவை ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் (எச்.எம்.எஸ்.), கோவை ஜில்லா தேசிய பஞ்சாலை தொழிலாளர் எம்ப்ளாயீஸ் யூனியன் (ஐ.என்.டி.யு.சி.) பஞ்சாலை அண்ணா தொழிலாளர் சங்கம் (அ.தொ.பே.), கோவை பெரியார் மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் (யு.டி.எல்.ஏ.), கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்கம் (ஏ.ஐ.டி.யுசி.) ஆகிய தொழிற் சங்கங் களால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர்.

2. இந்த நிறுவனம் மாநில அளவில் எழுப்பப்பட்ட பஞ் சாலைத் தொழிலாளர்களின் பொதுக் கோரிக்கைகள் பற்றிய தொழிற் தகராறில் சேர்க்கப்பட்டு அந்த வழக்கில் சென்னை சிறப்பு தொழில் நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் யுனைடெட் பிளீச்சர்ஸ் நிறுவனத்தை ஒரு பஞ்சாலையாகக் கருத முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதனால் இந்தத் நிறு வனத் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகள் தொடர்பாக தனியாக தொழிற் தகராறு எழுப்பி நிவாரணம் காண வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே ஊதிய உயர்வு, பஞ்சப்படி உள்ளிட்ட பொதுக் கோரிக்கைகளின் பேரில் 28–3–1987 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக கோவை ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் (எச்.எம்.எஸ்) நிருவாகத் திற்கு ஒரு வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தது. அதே கோரிக்கைகளின் பேரில் ஏ.ஐ.டி.யு.சி., டி.என்.டி.யு.சி., யு.டி. எல்.ஏ., தொ.மு.ச.பே., ஆகிய தொழிற்சங்கங்கள் 11–4–1987 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக தனித்தனியாக வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தன. அதன்படி தொழி லாளர்கள் 11–4–1987 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள் ளனர்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 மே 7

3. இத் தொழில் தகராறில், கோவை, தொழிலாளர் துறை அலுவலர் இரு தரப்பினருடனும் நடத்திய பேச்சு வார்த்தைகளில் முடிவு ஏற்படவில்லை. மேற்கொண்டு பேச்சு வார்த்தைகள் கோவைத் தொழிலாளர் துறை ஆணையர் முன்பு தொடர்ந்து நடைபெறவுள்ளது. இப் பேச்சு வார்த்தைகளின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது. நிலைமை அமைதியாக உள்ளது.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே குறிப்பிடப்பட்டிருக்கிற தொழிற்சாலை கடந்த 13-3-1987 ஆம் தேதி, கோவை தொழிலாளர்களுடைய உதவி ஆணையாளரிடம் தங்களுடைய 22 அம்ச கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கொடுத்து அதன் அடிப்படையிலே பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள். அந்த மனு கொடுக்கப்பட்ட அடிப்படையில் கோவை தொழிலாளர் உதவி ஆணையாளர் அவர்கள் நிர்வாகத்தை 4 முறை தொடர்ந்து வலியுறுத்தி அழைத்திருக்கிறார்கள், பேச்சு வார்த்தைக்கு. ஆனாலும் கூட, நிர்வாகம்பேச்சு வார்த்தைக்கு வர மறுத்து விட்டது. மறுத்து விட்டதோடு தொழிலாளர்கள் அனுப்பியிருக்கிற 22 கோரிக்கைகளில் எந்த கோரிக்கை மீதும் தாங்கள் தொழிற்சங்கத் தலைவர்களோடு பேச்சு நடத்தத் தயாராக இல்லையென்று தெளிவாக, திட்டவட்டமாக அறிவித்து இருக்கிறார்கள் இந்த நிலையில் இங்கே அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பது. . . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. கே. சுப்பராயன் : கேள்வி தான் கேட்கிறேன். கேள்வி கேட்டு முடிப்பதற்கு முன்னாலேயே சொன்னால் எப்படி? நிர்வாகம் மிகத் தெளிவாக, தொழிற்சங்கத் தரப்போடு பேச்சு வார்த்தையை நடத்தத் தயாராக இல்லையென்று தெரிவித்து இருக்கிறது. இன்றைய நிலையில் அரசாங்கம், குறிப்பாக, அமைச்சர் அவர்கள், தன்னுடைய செல்வாக்கைச் செலுத்தி நிர்ப்பந்தித்து, நிர்வாகத்தைத் தொழிற்சங்கத் தரப்போடு பேச்சு வார்த்தை நடத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த தகவல் வேறு. எனக்குத் தந்திருக்கிற தகவல் ''இத்தொழில் தகராறுகளில் துறை அலுவலர் இரு தரப்பினருடனும் நடத்திய பேச்சு வார்த்தைகளில் முடிவு ஏற்படவில்லை. மேற்கொண்டு பேச்சுவார்த்தை கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு தொடர்ந்து நடைபெறவுள்ளது'' என்பது தான். ஆகையினால் நிர்வாகத்தினர் வரவில்லையென்ற தகவல் நிச்சயமாக இல்லை. பேச்சு வார்த்தை என்பது இரு தரப்பாரையும் வைத்து தான் நடத்தப்படும்.



1987 மே 7]

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தகவல் உண்மைச் சார்ந்ததாக இல்லை. பேச்சு வார்த்தைக்காக நான்கு முறைகள் ஏ.சி.எல் அழைத்தும் அவர்கள் வரவில்லை. பேச்சு வார்த்தைக்கு நாங்கள் வர மாட்டோம் என்று அவர்கள் தெளிவாக அறிவித்திருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கு வரைக்கும் பேச்சு வார்த்தை நடைபெறவில்லை. இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் நேரடியாகவே அவர்களை சென்னைக்கு அழைத்து பேச்சு வார்த்தைகளைத் தொடர இனியாவது முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சு வார்த்தை நடத்துவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். ஆனால் அமைச்சர் அவர்கள் தான் அதைச் செய்ய வேண்டுமென்ற அவசியம் நிச்சயமாக இல்லை.

## (ஆ) எண்ணூர் துரித சாலையில் புதிய மின் விளக்குகள் போடுவதில் தாமதம்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருவொற்றியூர் தொகுதியில் கத்திவாக்கம் முதல் எண்ணூர் வரையில் சுமார் 19 குப்பங்களில் எண்ணூர் நெடுஞ்சாலை முழுவதும் விளக்கு எரியாத காரணத்தினால் பல விபத்துக்கள் ஏற்படும் நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

### அறிக்கை.

திருவொற்றியூர் நகராட்சி எல்லையில் உள்ள எண்ணூர் துரித சாலையில் புதிய மின் விளக்கு கம்பங்கள் அமைத்து விளக்கு வசதி செய்வதற்காக நகர மன்றத் தீர்மான எண். 322-ல் நாள் 22-7-1980 மற்றும் தீர்மானம் எண். 408, நாள் 18-1-82-ல் 220 புதிய மின் விளக்குகள் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டு அதன் தொடர்பாக மின்சார வாரியத்திற்கு ரூ. 12,780 25-1-1982-ல் செலுத்தப்பட்டுள்ளது.

அரசு ஆணையின்படி நகராட்சி 1 + 1 அடிப்படையில் பழைய பாக்கியையும் நடப்பு மின் கட்டணத்தையும் ஒழுங்காக செலுத்தி வந்த போதிலும், மின் கட்டண பாக்கி சுமார் இரண்டு இலட்ச ரூபாய் உள்ளது. மின்சார வாரியத்திற்கு நிலுவை இருப்பதால், மின்சார வாரியத்தால் புதிதாக விளக்குகள் போட இயலவில்லை.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவையின் தலை நாயகர் அவர்களே, இந்த அறிக்கையில் நகராட்சித் தீர்மானம் 22-7-1980 அன்று போடப்பட்டு இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். 13-1-1982 இல் கூட 12,220 ரூபாய் கட்டியிருப்பதாகவும் சொல்லியிருக்கிறீர்கள். பணம் கட்டியது 1982, இப்போது நடைபெறுவது 1987. இடைப் பட்ட காலத்திலே விளக்குகள் எரியாத காரணத்தினால் அங்கே 17 குப்பங்களிலே இருக்கிற மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு செய்திகளைச் சேகரித்துத்தருகிறார்களே தவிர, விளக்குகள் எரிவதற்கு விளக்கங்களைக் கொடுக்காமல் இருப்பது முறையா? இந்த விளக்கங்களை நானே ஆணை யாரிடம் சென்று கேட்டு விடலாம். விளக்கங்களைத் தெரிவிப்ப தோடு நின்று விடுகிறார்களே தவிர விளக்குகள் எரிவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எரிகிற விளக்கு களுக்கு மின்சாரக் கட்டணம் கட்டாத நிலையில் புதிதாக விளக்குகள் போடுவது பொருளற்ற செயல் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஆகவே மின்சார வாரியம் அந்த நிலுவையைக் கட்டியதற்குப் பிறகு அந்த வேலையை எடுத்துக் கொள்ளலாம் என்று உறுதியாகத் தெரிவித்திருக் கிறது.

திரு. ஜி. கே ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலை நாயகர் அவர்களே, கட்டண நிலுவை என்று சொன்னார்கள், அவர்கள் தவணை முறையில் அதைக் கட்டிக் கொண்டு வரு கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிய வேண்டும். கட்டிக் கொண்டு வருகிறபோது அது தேவை யற்றது என்று எண்ணுவது விபரீதமான உணர்வாகும். விடு தலை பெற்று இருபதாம் நூற்றாண்டினை எட்டிக் கொண் டிருக்கிற இந்த நேரத்திலே விளக்குகள் எரியாமல் அவதிப்படுகிற அந்த மக்களிடத்திலே இந்த விளக்கம் தருவது முறையல்ல. ஆகவே விளக்கு எரியச் செயவதற்கு ஆக்க பூர்வமான பணிகள் என்ன செய்ய போகிறீர்கள்? குறிப்பாக மீனவ மக்கள் ஆட்சி [illegible] யினுடைய அன்புக்குரியவர்கள். மேலும் [illegible]



கட்சியின் அன்புக்குரியவர்கள். அந்தப் பகுதிகளிலே இருக்கிற கிட்டத்தட்ட 35 ஆயிரம் மக்களுடைய வாழ்வில் விளக்கு இல்லாமல் இருப்பது முறையாகுமா? விரைவாக அதைச் செய்து ஆக்க பூர்வமான நடவடிக்கையை எடுக்க வேண்டுமே தவிர, விவரக் குறிப்பைத் தருவதில் பயன் ஒன்றும் இல்லை என்று எண்ணுகிறேன். அமைச்சர் அவர்கள் விளக்கு எரி வதற்கு ஆக்கபூர்வமான செய்திகளை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, விளக்கு எரிய வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு தான் வீட்டிற்கு ஒரு விளக்குத் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இங்கே பிரச் சினை விளக்கு எரிய வைக்க வேண்டியது அந்த நகராட்சி யினுடைய கடமை. அந்த நகராட்சிக் கட்டண நிலுவையை பாக்கி வைத்து இருக்கிற காரணத்தினால் மின் வாரியம் மேற் கொண்டு விளக்குகள் போடுவதை மேற்கொள்ள வில்லை கட்டணத்தைக் கட்டி விட்டால் விளக்குகள் தானாக வந்து விடும். இதற்கும் சுதந்திரத்திற்கும் ஒன்றும் சம்பந்தம் இல்லை.

(இ) காட்டுமன்னார் கோயில் ஒன்றிய ஆணையாளர் மக்கள் குறை தீர்ப்புக் கூட்டத்திற்கு வராமை :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பை திரு. சா. ஜெயச்சந்திரன் அவர்களுக்குப் பதிலாக டாக்டர் ந. மாசிலாமணி அவர்கள் மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காட்டுமன்னார் கோயில் தொகுதியைச் சேர்ந்த கிராமங்களில் மக்கள் குறைகளை நேரடியாகக் கேட்பதற்கு காட்டுமன்னார் கோயில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரை அழைத்தும் அவர் வராதது குறித்த" அவசரப் பொது முக்கி யத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோயில் ஒன்றிய ஊராட்சி ஆணையாளர், "மக்கள் குறை தீர்ப்பு கூட்டம்" தொடர்பாக, சட்ட மன்ற உறுப்பினர் தனக்கு வாய் மூலமாகவோ

எழுத்து மூலமாகவோ எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை என்று அறிக்கை அளித்துள்ளார். ஆயினும் இது பற்றி முழுமையாக விசாரணை நடத்தும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுவார்.

**(ஈ) புதுக்கோட்டை மாவட்டத்தில் தட்டம்மை நோய் பரவியிருத்தல்**

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' புதுக்கோட்டை மாவட்டத்தில் தட்டம்மை நோய் ஏற்பட்டுள்ளது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை**

புதுக்கோட்டை மாவட்டத்தில் 1987-ஆம் வருடம் சனவரி பிப்ரவரி, மார்ச்சு ஆகிய மூன்று மாதங்களில் தட்டம்மை (Measles) நோயினால் 26 நபர்களும், சின்னம்மை நோயினால் (Chicken pox) 34 நபர்களும் பாதிக்கப்பட்டனர். இறப்பு ஏதும் இல்லை. தட்டம்மை நோய் பரவாமல் இருக்க 10,000 நபர்களுக்கு மேல் தட்டம்மை தடுப்பூசி போடப்பட்டு, இதர தடுப்பு நடவடிக்கைகளும் மற்றும் கண்காணிப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்சமயம் நிலைமை கட்டுக்குள் அடங்கியுள்ளது.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் தடுப்பு ஊசிகள் போடப் பட்டு இப்போது அம்மை நோய் பரவாமல் இருக்கிற அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அறந்தாங்கி ஒன்றியத்திலே மேற்புனைக்காடு, ஆயங்குடி, செட்டூர், திருவரங்கம் ஒன்றியத்தில் பலக்கவிடுதி, ஆலங்காடு, கொத்தமங்கலம், வேப்பங்குடி, திருக்கட்டளை ஆகிய பகுதிகளிலும், கரம்பக்குடி ஒன்றியத்திலேயும் பரவலாக அம்மை நோய் பரவி மக்கள் அவதிக்காளாகக் கூடிய நிலைமை இருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்திலே அம்மை நோய் கடுமையாக இருப்பதால் அனைத்துப் பகுதிகளுக்கும் அதிகாரி களை அனுப்பி தடுப்பு ஊசிகளைப் போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்ட அத்தனை ஊர்களிலும் தடுப்பு ஊசிகள் போடுவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும்.



[முற்பகல் 10-10.]

**(உ) பட்டினப்பாக்கம் அரசு அலுவலர் குடியிருப்புகளைச் சீர் செய்யும் பணி.**

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' பட்டினப்பாக்கம் அரசு அலுவலர் குடியிருப்பில் அரசால் கட்டப்பட்ட குடியிருப்புகள் இடிந்து மோசமான நிலை யில் இருப்பதாலும், அது சரியான முறையில் பராமரிக்கப்படா ததாலும், அங்கு வாழும் மக்களுக்கு எந்த நேரத்திலும் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலை உள்ளது குறித்து '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறி துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இதுவரை பட்டினப்பாக்கத் தில் 1,172 குடியிருப்புகள் அரசு அலுவலர் வாடகை குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டி முடித்துள்ளது. இதில் 668 குடியிருப்புகள் 1958-ஆம் ஆண்டும், 42 குடியிருப்புகள் 1960-ஆம் ஆண்டும், 112 குடியிருப்புகள் 1972-ஆம் ஆண்டும், 290 குடியிருப்புகள் (ஏற்கெனவே கட்டப்பட்ட குடியிருப்புகளுக்கு மேல் இரண்டாம் தளமாக கட்டப்பட்டுள்ளது) 1974-ஆம் ஆண்டும் மற்றும் 60 குடியிருப்புகள் 1986-ஆம் ஆண்டும் கட்டப்பட்டன.

2. இத்திட்டம் கடலோரத்தில் அமைந்துள்ளதால் கடலின் உப்புக் காற்றாலும், குடியிருப்புகளில் உபயோகிக்கப்படும் நிலத் தடி நீரின் அரிப்புத் தன்மையாலும் சுவற்றின் சிமெண்டு அதிக மாக பாதித்து பூச்சு விழுந்துவிட ஏதுவாகிறது. இரும்பு கம்பி களில் அரிப்பு ஏற்படுதலும் மற்றும் சாளர விதானத்தில் வளைவு ஏற்படுவது ஆகியவை ஏற்பட்டுள்ளது. கட்டிடத்தில் ஏற்பட் டுள்ள சிதைவை சீர் செய்ய 1985-ஆம் ஆண்டில் ரூபாய் 15.96 இலட்சம் மதிப்பீட்டிற்கு அரசு ஏற்பளிப்பு வழங்கியது. அதன் பின் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு சீர் செய்யும் பணிகள் துவங்கப்பட்டு தற்பொழுது நடைபெற்று வருகிறது. சுமார் 40 விழுக்காடு வேலைகள் முடிந்துள்ளன. எல்லாவித பழுதுபார்ப்பு வேலைகளும் ஏப்ரல் 1987-க்குள் முடிந்துவிடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் 40 விழுக் காடு பணிகள் நடந்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றையதினம் நடந்த மானியக் கோரிக்கையில் கூட அது
பற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணி செய்கிற
பொழுது நிரந்தரமான பரிகாரம் காண முடியாது. சில வருடங்
களுக்கு மட்டுமே ரூபாய் 15 இலட்சம் என்று செலவழிக்கும்
போது அரசுக்கு ஏகப்பட்ட நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே,
அதற்குச் சரியான முறையில் தீர்வு காண்பதற்கு நிரந்தரமாக
ஏதாவது வழி உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே சொல்லப்பட்
டிருப்பது போல ஏறக்குறைய ரூபாய் 16 இலட்சம் ரிப்பேர் செய்
வதற்காக அரசால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதிலேதான் 40
சதவீதம் வேலைகள் முடிந்திருக்கின்றன ; மீதி வேலைகள்
நடந்து கொண்டிருக்கின்றன ; அடுத்த மாதத்திற்குள்ளாக
வேலைகள் முடிந்துவிடும்—ரிப்பேருக்காக மட்டும் ஒதுக்கப்பட்ட
தொகையைத் தவிர, வேறு பணிகளும் அவ்வப்போது செய்யப்படு
கின்றன. நிரந்தரமாகப் பரிகாரம் என்றால், அதை இடித்து
விட்டு வேறு கட்டினால்தான் நிரந்தரமான பரிகாரமாக இருக்கும்.
அது குறித்து, இப்பொழுது ஏதும் செயற்குறிப்பு அரசிடத்திலே
இல்லை. இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற பழுதுகளை முழுமை
யாகச் சீர் பார்த்து அதைச் சரிப்படுத்தித் தர அரசு வேண்டிய
நிதியை ஒதுக்கி வீட்டு வசதி வாரியத்திற்கு அறிவுறுத்தி அந்தப்
பணிகளைச் செய்யும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த வீடுகள் எல்லாம் 1958 ஆம் வருடத்திலே
யிருந்து 1974 ஆம் ஆண்டு வரை கட்டப்பட்ட வீடுகள். ஆக,
பல வருடங்களுக்கு முன்னால் கட்டப்பட்ட வீடுகளாக இருக்கிற
காரணத்தால் அமைச்சர் சொன்னதைப் போலவே அங்கே இருப்ப
வர்களை வேறிடத்திற்கு மாற்றிவிட்டு, அவற்றை இடித்துவிட்டு,
புது வீடுகளை வரும் ஆண்டிலாவது கட்டுவதற்கு அரசு முயற்சிக்
குமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, சென்னையிலே அரசு ஊழியர்
களுக்கான வாடகைக் குடியிருப்பு 3 இடங்களில்தான் இருக்கின்
றன. எனவே, உடனடியாக இடிக்கின்ற பிரச்சினை இப்பொழுது
இல்லை. தேவையை முன்னிட்டு மேற்கொண்டும் குடியிருப்பு
களைக் கட்ட அரசு முயற்சிக்கும்.

(ஊ) தொழிற்பேட்டை குடியிருப்புகளைத் தொழிலாளர்க்கே
சொந்தமாக்குதல்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, '' தமிழ்நாடு தொழிற்பேட்டை குடி
யிருப்புக்களை தொழிலாளர்களுக்குச் சொந்தமாக்கி தரப்படும்
என்று அறிவிக்கப்பட்டும் இன்னும் அமுல்படுத்தாததால்



ஏற்பட்டுள்ள நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம்
வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறி
துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை
ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

தொழிலாளர் மலிவு வாடகை வீட்டு வசதி திட்டத்தின் கீழ்
தனியார், பொதுத்துறை, கூட்டுறவுத் துறையின் கீழ் இம்மாநிலத்
தின் பல்வேறு பகுதிகளில் கீழ்க்கண்ட எண்ணிக்கையுள்ள வீடுகள்
இந்நாள்வரை கட்டப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| 1. தனியார் துறை .. .. .. .. | 1,206 |
| 2. வீட்டு வசதி வாரியத்தால் பராமரிக்கப்படுபவை | 3,046 |
| 3. ' சிட்கோ ' நிறுவனத்தால் பராமரிக்கப்படுபவை | 1,111 |
| 4. கூட்டுறவுத் துறை .. .. .. .. | 2,459 |

2. இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகள் தொழிலாளர்
களுக்கு வாடகை முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டன. தொழி
லாளர்கள் ஓய்வு பெறும்பொழுது அல்லது அவர்களது வருமான
வரம்பு மாதம் ரூபாய் 500-க்கு மேல் உயரும்பொழுது தொழி
லாளர்கள் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளை காலி
செய்ய வேண்டும். ஆனால் நடைமுறையில் இதை பின்பற்ற
இயலவில்லை. தற்பொழுது மிக அதிக எண்ணிக்கையில், ஓய்வு
பெற்ற மற்றும் வருமான உயர்வு பெற்ற தொழிலாளர்கள்
தொடர்ந்து வீடுகளில் இருந்து வருகின்றனர். ஆகவே, மைய
அரசு 1978 மற்றும் 1979 ஆம் ஆண்டுகளில் பொதுத்துறை,
தனியார் துறை, கூட்டுறவுத் துறை ஆகியவற்றின்கீழ் கட்டப்
பட்ட வீடுகளை, அவ்வீடுகளில் குடியிருக்கும் தொழிலாளர்
களுக்கே விற்று விடலாம் என்று மாநில அரசிற்குப் பரிந்துரை
செய்தது. மேலும் அவ்வீடுகளில் குடியிருக்கும் தொழிலாளர்கள்
அவ்வீடுகளை தமக்கே உடைமையாக்கித் தர வேண்டும் என்று
திரும்பத் திரும்ப கோரிக்கையை வலுவாக எழுப்பி வந்ததால்,
அரசு அவர்களின் கோரிக்கையை பரிவுடன் பரிசீலனை செய்து,
இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை அங்கு குடியிருக்கும்
உண்மையான தகுதியுடைய தொழிலாளர்களுக்கு விற்று விடலாம்
என்று முடிவு செய்யப்பட்டது.

இத்திட்டம் சம்பந்தமாக சில கூடுதல் விவரங்கள் சேகரிக்கப்
பட்டு வருகிறது. அவை கிடைத்தவுடன் விரைவில் ஆணை
வெளியிடப்படும்.

[1987 மே 7

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையில் 4 துறைகளின் சார்பாக ஏறத்தாழ 8,000 வீடுகள் சொந்தமாக்கித் தரப்படும் என்கின்ற குறிப்பு இருக்கிறது. அதிலே, சிட்கோவில் மாத்திரம் 1,111 வீடுகள் என்ற எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. அவை, அம்பத்தூர், கிண்டி இன்னும் மற்றும் தமிழகத்தில் வேறு எந் தெந்த இடங்களில் உள்ள குடியிருப்புகள் என்ற விவரத்தையும், இவ்வளவு சிறந்த திட்டத்தினை அறிவித்தும், கொள்கை முடி வினை எடுத்த பிறகும் காலதாமதம் இல்லாமல், உழைத்து வியர்வை சிந்திக் கொண்டிருக்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர் கள் அறிவித்த அந்தத் திட்டத்தினை நிறைவேற்ற ஒரு குறைந்த பட்ச காலத்திற்குள்ளாக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டு ஆணை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, சிட்கோவின் சார்பிலே இருக்கிற 1,111 வீடுகளும் கிண்டி, அம்பத்தூர், காட்பாடி, ஈரோடு, தஞ்சாவூர், மதுரை, புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, காரைக் குடி, விருதுநகர், இப்படி ஏறக்குறைய 17, 18 இடங்களிலே இருக்கின்றன. அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பதைப் போல ஏறக்குறைய 8,000 வீடுகள் இருக்கின்றன. அரசு ஏற்கெனவே கொள்கை ரீதியாக முடிவெடுத்தது. ஆனால், நிதித் துறையிலே சில விளக்கங்களைக் கேட்டிருக்கின்றார்கள். விளக்கங்கள் தரப் படக் கூடிய நிலையிலே இருக்கின்றன. விரைவிலே அரசு முடி வெடுக்கும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையில் தொழிலாளர்கள் குடியிருக்கின்றார்கள்; சில பேர் இல்லை என்ற விவரம் இருக் கின்றது. தொழிலாளர்களுக்கு மாத்திரம்தான் கொடுக்கப் படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி 'சிட்கோ' குடி யிருப்புகளில், தொழிலாளர்களைத் தவிர்த்து வேறு யாராவது குடியிருக்கின்றார்கள் என்று விவரக் குறிப்பில் இருக்கின்றதா ? அப்படி இருந்து அந்த இடத்திற்கு புதிதாகப் பதிவு செய்திருக் கின்ற தொழிலாளர்களுக்கு அந்த வீட்டு மனைகளைச் சொந்தம் ஆக்கித் தர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல நிதித்துறை விவரங் கள் பெற்று அடுத்த சட்டமன்ற தொடருக்குள்ளாக வீடுகளைச் சொந்தமாக்கும் ஆணையை வழங்க, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களை ஆண்டவனை வழிபடுவதுபோல வணங்கி, நம்பிக்கொண்டு இருக்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு விரைவாக ஆணைவழங்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1987 மே 7]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பரவைத் தலைவர் அவர்களே, இந்த எட்டாயிரத்து சொச்சம் டுகளும் ரூ. 500 மட்டும் சம்பளம் உள்ளவர்களுக்கு, அதற்கு டட்பட்டவர்களுக்கு கொடுக்கப்படுவது. சில இடங்களில் ந. 500-க்கும் மேலே சம்பளம் வாங்குகின்றவர்கள் இருக்கின் றார்கள். சிலயிடங்களில் தொழிலாளர்கள் சிலர் ஓய்வுபெற்றதற்குப் பின்னாலேயும் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் அல்லது ஓய்வு பெற்றவர்கள் அங்கு இருக்கின்றார்கள். எட்டாயிரம் டுகளில் இருப்பவர்கள் பற்றி ஒவ்வொன்றாக சொல்வது என் றால் நீண்ட பட்டியல் ஆகிவிடும். ஆகவே, அங்கே அப்படி இருக்கின்ற காரணத்தினாலே இங்கே தரப்பட்டிருக்கின்ற திலிலே 'அப்படி இருக்கிறது' என்று நிலைமையை எடுத்துக் கொடுத்திருக்கிறோம். அப்படி இருக்கின்ற இடங்களிலே அவற் றில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரியவர்களுக்கு டு கிடைக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

(எ) மறைமலை நகரில் ஒதுக்கப்பட்டுள்ள வீடுகளின் விலையை உயர்த்தியிருப்பது.

திரு. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''குறைந்த வருவாய் பிரிவினருக்கு ரூ. 18,000 விலையில் வீடு வழங்கப்படும் என்று அறிவித்துவிட்டு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், வீடு ஒதுக்கீடு செய்த பின் விலையை ரூ. 34,482 என உயர்த்திவிட்டதால், பொதுமக்கள் கோரிக்கை யின் பேரில் பேச்சுவார்த்தை மூலமோ அல்லது நடுவர் தீர்ப்பு மூலமோ விலை நிர்ணயம் செய்ய முன்வராதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், மறைமலை நகர் புது நகரில் வளர்ச்சிப் பணிகள் செய்து வீடுகள் கட்டி முடித்து அதை பலதரப்பட்ட வருவாய்ப் பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்து வருகின்றது. இப் புது நகரின் ஒரு பகுதியில் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு வீடுகள் ரூ. 18,000 தோராய விலையில் ஒதுக்கீடு செய்ய முதன் முதலில் 1979-ல் விளம்பரம் செய்யப்பட்டு மனுக்கள் கேட்கப்பட்டன. அப்போது குறிப்பிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 504. இதில் 470 வீடுகளுக்கு ரூ. 18,000 தோராய விலை என 2-8-1979-ல் மனுக்கள் கேட்கப்பட்டன. மீதமுள்ள 34 வீடுகளுக்கு 2-3-1981-ல் அதே தோராய விலையான ரூ. 18,000-க்கு மனுக்கள் கேட்கப்பட்டன.

மனுக்கள் பெறப்பட்டு 216 வீடுகளுக்கு 5–6–1981-ல் ரூ. 18,000 தோராய விலையில் ஒதுக்கீடு ஆணைகள் அனுப்பப் பட்டன. இதன் பிறகு, முடிவான செலவினங்களுக்கான தொகை வீட்டு வசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் கழிவு நீரகற்று வாரியம் ஆகியோரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டபின், வீட்டின் விலை ரூ. 34,482 என்று முடிவு செய்து ஒதுக்கீடு ஆணைகள் 12–5–1982-ல் 254 வீடுகளுக்கும், 27–5–1983-ல் 34 வீடு களுக்கும் அனுப்பப்பட்டன. இதன் அடிப்படையிலேயே முதலில் குறிப்பிட்ட 216 வீடுகளுக்கான முடிவான விலையும் ரூ. 34,482 என்று தெரிவிக்கப்பட்டது.

22–6–1982-ல் மேற்குறிப்பிட்ட வீடு ஒதுக்கீட்டுதாரர் களின் சங்கப் பிரதிநிதிகள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் முதன்மை நிர்வாக அதிகாரியை சந்தித்து விலையை குறைக்கும்படி கேட்டுக்கொண்டனர். இக்கோரிக்கை பரி சீலனையில் இருக்கும்போதே, 28–6–1982-ல், மேற்கூறிய சங்கம் நீதிமன்றத்தில் உயர்த்தப்பட்ட விலையை ஆட்சேபித்து உயர்த்தப்பட்ட விலையின் அடிப்படையில் மாதத் தவணைகள் வசூலிப்பதற்கு எதிராக இடைக்கால தடை வாங்கினர். இவ் வழக்கு நீதி மன்றத்தில் இன்றும் நடைபெற்று வருகிறது. நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து நடைபெறுவதால்தான் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் குறிப்பிட்ட பிரச்சினையை நடுவர் தீர்ப்பிற்கு விட இயலாமல் உள்ளது.

விலை உயர்விற்கான காரணங்கள் கீழ்வருமாறு:

1. இப்புது நகருக்குத் தேவையான குடிநீர் பாலாற்றுப் படுகையிலிருந்து கொண்டு வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் உத்தேச மதிப்பீட்டிற்கு மாறாக பெருமளவில் அதிக செலவு செய்யப்பட வேண்டியதாயிற்று (ரூ. 4.5 கோடி).

2. பல்வேறு பணிகள் பொறுத்து ஒப்பந்தக்காரர்களிடம் பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளி கோரிக்கை மதிப்பீட்டிற்கு அதிக மாகவே இருந்தன.

3. சிமெண்டு மற்றும் எஃகு ஆகிய அலுவலக வழங்கு பொருட் களின் விலை உயர்வு.

4. மேலும், எல்லா குடிநீர் இணைப்புகளும் மீட்டர் பொருத் தியே வழங்கப்பட வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தினால் ஒரு மீட்டர் பொறியும் அதற்கிணையாக ஒரு தொட்டியும் ஒவ்வொரு வீட்டிற்கும் கூடுதலாக அமைக்கப்பட வேண்டியதாயிற்று.

திரு. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையினைப் பார்க்கிறபோது, சிமெண்ட் மற்றும் எஃகு ஆகிய வழங்கு பொருட்களின் விலை உயர்வு முன்னிட்டு விலை உயர்ந்திருப்பதாகச் சொல்லப்பட்டு இருக் கின்றது. இருப்பினும் இந்த நிலையினைப் போக்குவதற்கு மறு பரிசீலனை செய்ய, புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே விலை ஏற்றுவதற் கான காரணங்கள் என்ன என்ன என்பது தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்டவர்கள் வழக்கு மன்றத்திற்கு, நீதிமன்றத்திற்கு போயிருக்கின்ற காரணத்தினாலே நடுவர் குழு விற்கு விடவோ மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் மூலமாக தீர்க்கவோ முடியவில்லை. வழக்கு முடிந்த பிறகு இதுகுறித்து அரசு ஆலோசிக்கும்.

திரு. தமிழ்மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு இப்போது பொற்கால அரசாங்கமாக, பொதுமக்கள் நம்புகின்ற, ஏழையெளிய மக்கள் பல சலுகைகளைப் பெற்றிருக்கின்ற அளவில் இருக்கின்றது. இந்தத் தருணத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து வழக்கு மன்றத்திலே இருக்கின்ற வழக்கை விரைவில் முடிக்கவும் அதிலே ஒரு நல்லதொரு முடிவினை எடுப்பதற்கும் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு மன்றத்திற்கு அரசாங்கம் செல்லவில்லை. அந்த வீடுகளைப் பெற்ற பயனீட்டாளர்கள் தான் சென்று இருக்கின்றார்கள். அந்த வழக்கு துரிதப்படுத்தப் பட்டு முடிக்கப்படும். அதற்குப் பின்னர் பேச்சு வார்த்தை மூல மாக எந்த அளவுக்கு உதவி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு அரசு கருணையோடு பரிசீலிக்கும்.

## (ஏ) திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோயில் திருப்பணி செய்வதில் தாமதம்

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் திருக்கோயிலில் பழுதடைந்த கோபுரத்தைப் புதுப்பிக்க வல்லுநர் குழு அமைக்கப் பட்டும், ஓராண்டுக்கு மேலாகியும் இதுவரை அக்குழு திருப் பணிக்குச் செலவாகும் தொகை மதிப்பீட்டை அளிக்காமல் இருப்பதால், கோயில் திருப்பணி தாமதப்படுவது குறித்து மக்கள் மத்தியில் ஏற்படும் நிலை குறித்த, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள அருள்மிகு வடபத்ரசயனர் கோயில் கோபுரத்தின் ஸ்திரத் தன்மையை அறியும் பொருட்டு திருவரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி கோயில் கோபுரத்தின் ஸ்திரத் தன்மையை அறியும் பொருட்டு அமைந்த கீழ்க்காணும் நபர்களைக் கொண்ட வல்லுநர் குழுவையே இதற்கும் நியமித்து 11–9–1986 அன்று அரசாணை எண். 933-ல் ஆணைகள் வெளி யிடப்பட்டது.

1. தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) சென்னை .. .. .. .. தலைவர்.
2. இயக்குநர் (Director) நெடுஞ்சாலை ஆய்வு நிலையம், சென்னை-29 .. உறுப்பினர்.
3. கண்காணிப்புப் பொறியாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-34. உறுப்பினர் செயலர்.
4. இயக்குநர் (Director) அல்லது அவர் நிய மிக்கும் முதுநிலை விஞ்ஞானி கட்டுமானப் பணி பொறியாளர் ஆராய்ச்சி நிலையம் உறுப்பினர்.
5. கண்காணிப்புப் பொறியாளர் (வரைபடங் கள்) பொதுப்பணித் துறை, கட்டிடங்கள் மையம், சென்னை-5 .. .. .. உறுப்பினர்.
6. டாக்டர் பி. எஸ். மணிசுந்தரம், முன்னாள் துணை வேந்தர், பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி .. .. உறுப்பினர்.
7. பேராசிரியர் நாகரத்தினம், முதல்வர், பிராந்திய பொறியியல் கல்லூரி, துவாக் குடி, திருச்சி .. .. .. உறுப்பினர்.

இக்குழுவின் தலைவராக இருந்த பொதுப்பணித் துறை கட்டிடங்கள் தலைமைப் பொறியாளர், திரு. பாலசுப்பிர மணியன் அவர்கள் 31–12–1986 அன்று பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். அவர் ஸ்ரீரங்கம் இராஜ கோபுர ஸ்திரத் தன்மை பற்றிய வல்லுநர் குழுவின் முடிவான அறிக்கையை அளிப்பதில் தீவிரமாக இருந்ததால், மேற்படி ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில் கோபுரம் சம்பந்தமான வல்லுநர் குழுவின் அறிக்கையை பெற முடியவில்லை. எனவே அவருக்குப் பதிலாக ஆலயங்கள் மற்றும் ஆலய திருப்பணி போன்றவைகளில் ஈடுபாடு உள்ள நெடுஞ் சாலைத் துறை தலைமைப் பொறியாளர் திரு ஆர். சுப்பிர மணியன் அவர்களை தலைவராக வைத்து, தற்போது பொதுப் பணித்துறை (கட்டிடங்கள்) தலைமைப் பொறியாளராக பதவி



வகிப்பவரையும் சேர்த்து ஏனைய ஏழு அங்கத்தினர்களுடன், முந்தைய குழுவை திருத்தி அமைத்து அரசாணை எண். 58, வ.வ. மற்றும் அ.நி. துறை, நாள் 28–1–1987 ஆணை வெளி யிடப்பட்டது. மேலும், இவ்வல்லுநர்குழு தனது அறிக்கையினை 27–4–1987-க்குள் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அறிக்கைப் பெற்ற பின்னர் அதனை அரசு பரிசீலித்து அருள்மிகு ஆண்டாள் திருக்கோயில் திருப்பணி வேலைகள் தொடங்கப்படும்.

(முற்பகல் 10–20)

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோயிலின் கோபுரம் தமிழக அரசின் முத்திரைச் சின்னத்தினை மாடலாக கொண்டது. இந்தக் கோயில் கோபுரத்தின் அடித்தளம் கீறிப் போயிருக்கிறது. அதுபோல மேல் தளமும், அங்கேயுள்ள கலசமும் கீழே விழுந்திடும் நிலையில் மிகவும் ஆபத்தாக இருக் கின்றன. ஆகவே உத்தேச மதிப்பீடாக அரசு அதிகாரிகள் சுமார் 55 லட்சம் ரூபாயில் எஸ்டிமேட் போட்டிருப்பதாகவும், 25 லட்சம் ரூபாயில் பொதுப்பணித் துறையின் மூலம் மெயின் டெனன்ஸ் வேலையை ஆரம்பிக்க வேண்டுமென்றும், அரசு அதி காரிகளைக் கொண்ட வல்லுநர் குழு கருதுகிறது. ஆகவே, மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் முறையிட்டு 25 லட்சம் ரூபாயைத் திருப்பணிக்கு ஒதுக்கி, அந்த வேலையைத் துரிதப்படுத்த உடனடியாக நடவடிக்கையை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வல்லுநர் குழு 11–9–1986 அன்று போடப்பட்டது. இன்னும் ஓர் ஆண்டு கூட ஆகவில்லை. ஏற்கனவே திரு. பாலசுப்பிரமணியன் என்பவர் குழுவின் தலைவராக இருந்தார். 31–12–1986 அன்று அவர் ஓய்வு பெற்றுவிட்டார். ஆகவே, புதிய தலைவரைப் போட்டு, அந்த வல்லுநர் குழுவானது தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்னும் இரு வாரங்களில் அந்த அறிக்கை பெறப்பட்டவுடன் மாண்புமிகு உறுப்பினரு டைய கருத்து நிறைவேற்றப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோயிலின் கோபு ரத் திருப்பணியை ஸ்ரீபெரும்புதூர் எத்திராஜ வரதராஜ ஜீயர் சுவாமிகள் நான் முடிக்கிறேன் என்று சபதம் ஏற்றிருக்கிறார்கள். அரசும் அவர்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது. அங்கே திருப்பணி வேலையைத் துவங்கும்போது 11 நிலைகள் மொத்தம் இருக் கின்றன. ஜீயர் சுவாமி அவர்களே இந்த 11 நிலைகளுக்கும்

நானே ஆட்களை வைத்து வேலையை முடிக்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்துள்ளார்கள். அதன்படியே சுவாமி அவர் களை அந்தத் திருப்பணி கமிட்டியின் தலைவராகவும், பொரு ளாளராகவும் ஏற்று, அந்த வேலையை உடனடியாகத் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் திருப்பணியைச் செய்வதற்கு தகுதியான ஆட்கள் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே சுவாமியின் பொறுப்பில் அந்த திருக்கோயில் திருப்பணியை ஒப்படைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களைக் கலந்து கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற பணியை ஜீயர் சுவாமிகள் மூலம் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

(ஐ) சின்னசேலம் ஒன்றியம் தெங்கியாநத்தம் ஆதிதிராவிடர் காலனியில் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புதுப்பித்தல்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சின்னசேலம் ஒன்றியத்திலுள்ள தெங்கியாநத்தம், ஆதி திராவிடர் காலனி ஐந்து ஆண்டுகட்கு முன் முழுவதும் தீ விபத்தில் பாதிக்கப்பட்டதால், புதிதாக வீடு கட்ட அரசிடம் கடன் கோரி அது கிடைக்காததால் அந்த மக்கள் வீடு கட்டாமல் குடிசையில் வாழ்ந்து வரும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

கள்ளக்குறிச்சி வட்டம், தெங்கியாநத்தம் கிராமத்தில் 19-8-1982 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் அக்கிராமத்தைச் சேர்ந்த 157 வீடுகள் (176 ஆதி திராவிட குடும்பங்கள்) எரிந்து போயின என்றும், மேற்படி தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 176 ஆதி திராவிட குடும்பங்களில், 173 ஆதி திராவிடர்களது பெயர் விவரங்களையும், அவர்களது வருட வருமானம் மற்றும் அவர்கள் வைத்துள்ள வீட்டு மனை அளவு ஆகிய விவரங் களையும் கொடுத்து, அந்த 173 ஆதி திராவிடர்களுக்கும் சொந்த மாக வீடு கட்டிக் கொள்ளக் கிராம கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலம் முன்னுரிமை கொடுத்து, கடன் வழங்கக் கோரி, தென்னாற்காடு மாவட்ட ஆட்சியர் 29-6-85-ல் பரிந்துரை செய்திருந்தார்.





2. கிராமிய வீட்டு வசதி திட்டம் நிதி நிறுவனங்களிட மிருந்து பெறப்படும் கடன் தொகையை எதிர்நோக்கி செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான மூலதனம் பின் வருமாறு சரிகட்டப்படுகிறது:—

| | |
|---|---|
| அட்கோ நிறுவனக் கடன் .. .. | 50 சதவீதம். |
| தமிழ்நாடு அரசுக் கடன் .. .. | 25 சதவீதம். |
| பயனீட்டாளர் பங்கு (உழைப்பாகவோ மூலதனமாகவோ அல்லது கட்டிடப் பொருளாகவோ) .. .. | 25 சதவீதம். |

தமிழ்நாடு அரசின் பங்கான 25 சதவீதம் கடன் தொகை பொரதுக் காப்பீட்டுக் கழகத்திடமிருந்தும், ஆயுள் காப் பீட்டுக் கழகத்திடமிருந்தும் அரசு கடனாகப் பெற்று தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் வாயிலாக இத்திட்டத்தின் பயனீட்டாளர்களுக்குக் கடன் வழங்குகிறது. அரசு உத்திர வாதத்துடன், அட்கோவிடமிருந்து நேரடியாகப் பெறும் கடன் தொகையையும் அரசு மேற்சொன்ன நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற இத்திட்டத்திற்காக தலைமைச் சங்கத்திற்கு வழங்கும் கடன் தொகையையும் தலைமைச் சங்கம் உரிய காலத்திற்குள் வட்டியுடன் பத்தாண்டில் திருப்பிச் செலுத்த வேண்டும். இது தலைமைச் சங்கத்திற்குப் பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய கடன் தவணைகளை உரிய முறையில் செலுத்தினால் தான், சாத்தியமாகும். கிராமிய வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கடனுதவி பெற்று வீடு கட்டியவர்களில் ஆதி திராவிடர்களும் அடங்குவர். ஆதி திராவிடர்களுக்கு தற்போது தாட்கோ, ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு காப்புறுதி திட்டம் மற்றும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு உதவி அளிப்பதால், 1985-86-ம் நிதி ஆண்டு முதல் கிராமிய வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களி லுள்ள பொருளாதாரத்தில் நலிவுற்ற, ஆதிதிராவிடரல்லாத பிரிவினருக்கு மட்டும் வீடுகள் கட்டக் கடன் உதவி வழங்குவது என்று முடிவெடுத்து அரசு, நிலை ஆணை எண் 615, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 19-6-85-ல் ஆணை பிறப்பித்தது.

3. மேற்படி அரசு ஆணையின்படி கிராமிய வீட்டுவசதி திட்டத் தின் கீழ் புதிய வீடு கட்ட ஆதி திராவிடர்களுக்குக் கடனுதவி செய்ய வழி வகை இல்லாத காரணத்தால் மாவட்ட ஆட்சி யர்களால் பரிந்துரை செய்யப்பட்டு தீ விபத்தில் வீடிழந்த ஆதி திராவிடர்களுக்கு புதிய வீடுகள் கட்ட கடனுதவி செய்யக் கிராமிய வீட்டு வசதி திட்டத்தின்கீழ் வழிவகை இல்லை. எனவே,

தென்னாற்காடு மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்த மேற்படி தெங்கியாநத்தம் கிராமத்தைச் சேர்ந்த 173 நபர்களும் ஆதி திராவிடர்களாக இருப்பதால் அவர்களுக்குக் கிராமிய வீட்டு வசதி திட்டத்தின்கீழ் புதிய வீடு கட்டக் கடனுதவி செய்ய இயலாது என்பதையும் மேற்படி நபர்களுக்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம், தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு காப்புறுதி திட்டம் மூலம் வீட்டு வசதி செய்து தர தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும், 9–7–86-ல் தென்னாற்காடு மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

4. தென்னாற்காடு மாவட்ட ஆட்சியர் அனுப்பியுள்ள தாட்கோ மூலம் வீடுகள் கட்டும் செயற்குறிப்பில் 1986–87ஆம் ஆண்டுக்கான ஆதிதிராவிடர் வீட்டு வசதி திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டுவதற்காக மானியம் வழங்க உள்ள கிராமங்களின் பட்டியலில் சின்ன சேலம் ஒன்றியத்திலுள்ள தெங்கியாநத்தம் ஆதிதிராவிடர் காலனி இடம் பெறவில்லை.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வீடுகள் அழிந்து 5 ஆண்டுகள் ஆகிறது. மாவட்ட ஆட்சித் தலைவரால் 1985 ஆம் ஆண்டில் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. நான் இது குறித்து அதிகாரிகளிடம் பேசியும் காரியம் நடக்காததால்தான் இங்கே கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இனிமேல் இம்மாதிரித் தவறுகள் நடைபெறாமல் இருக்கவும், கடன் தொகை உடனடியாகக் கிடைக்கவும் உண்டான நிலைமைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரால் 29–6–1985 அன்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு முன்னாலே வீடு கட்டுகின்ற கிராமிய சங்கத்தின் மூலமாக அவர்களுக்குக் கடன் கொடுப்பதாக இருந்தாலும், 1985–86ல் கிராமிய வீடுகள் கட்டுகிற சங்கத்தின் மூலமாக அது ஆதி திராவிடர் அல்லாதாருக்கு கொடுக்கப்பட வேண்டும். ஆதி திராவிடர்களுக்கு ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி. போன்ற திட்டங்களின் மூலமாக வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்றிருக்கின்ற நியதியின் காரணமாக, அந்த தீயினால் பாதிக்கப்பட்ட இடங்களை எடுத்துக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அதனால்தான் வருகிற ஆண்டுகளிலும் எடுத்துக்கொள்ளப் படவில்லை. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்யும்போது, வீடு கட்டும் திட்டத்தின்கீழ் அது எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



(௭) பெரியார் மாவட்டம் அனந்தசாகர் ஏரியைத் தூர் வாரும் பணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கு. அ. செங்கோட்டையன், பு. கோ. நாராயணன், டாக்டர் அ. பொன்னுசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பெரியார் மாவட்டம், பி. மேட்டுப் பாளையத்திலுள்ள அனந்தசாகர் ஏரி தூர் அதிகமாகி விட்டதால், பாசனத்திற்கு தண்ணீரின் கொள்ளளவு குறைவதால், அப்பகுதி விவசாயிகளின் கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

பெரியார் மாவட்டம், பி. மேட்டுப்பாளையத்திலுள்ள அனந்தசாகர் ஏரியை தூர்வாரி ஆழப்படுத்தும் கோரிக்கை ஏதும் அரசிற்கு இதுவரை கிடைக்கப் பெறவில்லை. ஆதலால், இதற்கான திட்டம் ஏதும் ஆய்வில் இல்லை. ஆயினும் இதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஸ்தல அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளனர். இப்பணி தூர் வாரி புனரமைக்கும் திட்டத்திற்கான விதிமுறைகளுக்கு உட்படுமானால் ஸ்தல அதிகாரிகளால் தீவிர ஆய்வு செய்து திட்டம் தீட்டி அதற்கு அரசு ஒப்புதல் அளித்தபின் செயலாக்கப்படும்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே கோரிக்கை ஏதும் அரசிற்கு வரவில்லையென்றும், ஆதலால் திட்டம் ஏதும் ஆய்வில் இல்லையென்றும் கூறப்பட்டிருக்கிறது. அனந்தசாகர் ஏரியில் தூர் அதிகமாகி விட்டதால் பாசனத்திற்கு தண்ணீரின் கொள்ளளவு குறைந்துள்ளது. இந்த ஏரியின் கீழ் பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இன்றைய தினம் பாசன

வசதி பெற வேண்டிய நிலை இருக்கிறது. இதை இந்த ஆண்டே தூர் எடுத்து, இதனுடைய கொள் அளவை அதிகப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய உணர்வைப் புரிந்து கொண்டு இந்த அரசாங்கம் உடனடியாக அதிலே தீவிர ஆய்வுகளை மேற்கொள்ளும்.

**திரு. பு. கோ. நாராயணன் :** பேரவைத் தலைவரவர்களே, இந்த ஏரியில் ஆக்கிரமிப்புகள் நிறைய இருக்கின்றன. இந்த ஆக்கிரமிப்புகளை நீக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முன்வருமா என்பதைப் பற்றியும், தூர் எடுக்கின்ற இந்தத் திட்டம் ஆய்விலே இல்லாவிட்டாலும், வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள அந்தப் பகுதி விவசாயிகளினுடைய அவசர அவசியத்தை உணர்ந்து, வறட்சி நிவாரணமாக இந்த வறட்சிக் காலத்திலேயே, உடனடியாக அதை எடுக்க அரசு உத்தரவு பிறப்பித்து, அந்தப் பகுதி விவசாயிகளுக்கு உதவ முன்வருமா என்பதைப் பற்றியும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ளும். தூர் வாருகின்ற பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும் எவ்வளவு பணமாகும் என்று நாம் எஸ்டிமேட் போட்டுத்தான் செய்ய முடியும். வறட்சி என்று வருகின்ற நேரத்தில் ஒரு கண்மாய்க்கு 50,000 ரூபாய், 70,000 ரூபாய் என்று ஒதுக்கினால் காணாது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டிய அவ[சிய]மில்லை. இது சம்பந்தமாக ஒரு சரியான ஆய்வை நடத்தி வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4. அறிக்கை அளித்தல்.

### மனுக்கள் குழு.

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் மனுக்கள் குழுவின் மூன்றாவது அறிக்கையை அளிக்கிறேன்.



## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) வேளாண் வருமான வரி திருத்த சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செயய அனுமதி அளிக்க வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்பு[மிகு] டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இச்சட்ட முன்வடிவை [பேர]வை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### (ஆ) மாவட்ட நகராட்சிகள் திருத்த சட்டமுன்வடிவு 1987.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம்செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வேலை நிறுத்தம் அல்லது ஆர்ப்பாட்டம் அல்லது கண்டனத்தின்போது வேண்டுமென்றே போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கின்றமைக்காக ஊர்தியோட்டும் உரிமங்களை நீக்கம் (ரத்து) செய்தல் சட்டமுன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" 1987 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் (மோட்டர் வண்டிகள்) வேலை நிறுத்தம் அல்லது ஆர்ப்பாட்டம் அல்லது கண்டனத்தின் போது வேண்டுமென்றே போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கின்றமைக்காக ஊர்தியோட்டும் உரிமங்களை நீக்கம் (ரத்து) செய்தல் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்." (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: You can record your objection பிறகு ஆய்வுக்கு வரும்பொழுது எடுத்துக்கொள்ளலாம். எனவே, அதைமட்டும் சொல்லுங்கள்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு வார்த்தைதான். இந்தச் சட்ட முன்வடிவு தொழிலாளர்களின் வேலைநிறுத்த உரிமையைப் பறிக்கக் கூடியதாக இருக்கின்ற காரணத்தினாலே இதை ஆரம்ப நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவரவர்களே' தோற்றத்தில் மக்களின் நலனுக்காக என்றாலும்கூட, உள்ளடக்கத்தில் ஜனநாயக விரோதமான இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிற ஆரம்ப நிலையிலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆட்சேபிக்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன்.

திரு. எஸ். ரெத்தினராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை ஆரம்ப நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

" 1987 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வேலை நிறுத்தம் அல்லது ஆர்ப்பாட்டம் அல்லது கண்டனத்தின் போது வேண்டுமென்றே போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கின்றமைக்காக ஊர்தியோட்டும் உரிமங்களை நீக்கம் (ரத்து) செய்தல் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ".



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. வி. வி சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களை கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ".

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்தினுடைய கருத்திலே எனக்கு உடன்பாடு இருந்தாலும்கூட, தணிக்கை என்பது மத்திய பாராளுமன்றத்தினுடைய அதிகார வரம்புக்கு உட்பட்ட காரணத்தினாலே இதில் தமிழக சட்டமன்றத்திற்கு உரிமையிருக்கிறதா என்ற சட்டப்பிரச்சினை காரணமாக இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, மைய அரசின் அனுமதியை எதிர்பார்த்துத்தான் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

திரு. அ. மலர்மன்னன்: தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவினை நான் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

" தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களை கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. வரவு-செலவுத் திட்டம் 1987-88 வாக்கெடுப்பு— (தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண் 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும்
(ஆ) கோரிக்கை எண் 33—வீட்டுவசதி
(இ) கோரிக்கை எண் 34—நகர்ப் பகுதி வளர்ச்சி
} தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு கொண்டுவரப் பட்ட வீட்டுவசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சி மானியக் கோரிக்கைகளின் மீது 72 வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்திருந்தார்கள். அதைப் போன்று கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற மானியக் கோரிக்கையின்மீது ஏறத்தாழ 69 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர் கள் இந்த மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். உரையாற்றியபோது அரசு கொண்டு வந்திருக் கிற திட்டங்களைப் பாராட்டிய, வாழ்த்திய சட்டமன்ற உறுப் பினர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் போலவே தங்களுக்குத் தரப்பட்ட விவரங்கள் அடிப்படையிலே விமர்சனங்கள் செய்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், எங் கேனும் குறைபாடு இருப்பின் அவற்றைத் திருத்திக்கொள்ள அந்த விமரிசனங்கள் உதவியாக இருக்கும் என்ற அடிப்படையில் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

முதல் மானியக் கோரிக்கை கைத்தறியும் நெசவுத் தொழிலும் பற்றியதாகும். தமிழகத்தைப் பொறுத்தவரை விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிகமான மக்கள் ஈடுபட்டிருக்கிற ஒரு புராதன மானத் தொழில் கைத்தறித் தொழிலாகும். அதிலும் குறிப்பாக இந்தியா முழுவதிலும் இருக்கிற கைத்தறிகளில் ஏறத்தாழ கால் பங்கு, அதாவது 25 சதவீதம், சுமார் 5.56 இலட்சம் தறிகள் தமிழகத்தில் இருக்கின்றன. தனியாரிடையே சிக்கித் தவிக் கின்ற நெசவாளர் பெருமக்களை கூட்டுறவுத் துறையின் கீழ்



கொண்டுவர வேண்டுமென்பது அனைத்திந்திய அளவிலே மேற் கொள்ளப்பட்டிருக்கிற முயற்சியாகும். அதிலே தமிழகத்தைப் பொறுத்தவரையில் இங்கே இருக்கிற 5.56 இலட்சம் தறிகளில் சுமார் 3,89,000 தறிகள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இதை அனைத்திந்திய அளவில் ஒப் பிட்டுப் பார்க்கிறபோது தமிழகம் நெசவாளர் பெருமக்களை கூட்டுறவுத் துறையின்கீழ் கொண்டுவருவதில் முதலிடத்திலே இருக்கிறது. ஏறத்தாழ 69 சதவீதம் நெசவாளர் பெருமக்களை கூட்டுறவுத் துறையில் கொண்டுவந்து, தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்குச் சுட்டிக்காட்டுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஏறத்தாழ 1,680 பிரதம நெசவாளர் சங்கங்கள் தமிழ கத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஏறத்தாழ 104 பட்டு நெசவாளர் சங்கங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. 1987-88 ஆம் ஆண்டிலே இங்கே பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் பேசும்போது கூட சொன் னார்கள்.

நெசவாளப் பெருமக்கள் அனைவரையும் கூட்டுறவுத் துறைக் குள்ளே கொண்டுவர வேண்டுமென்று இங்கே கேட்டுக் கொண் டார்கள். இந்த ஆண்டு மேலும் 20,000 நெசவாளப் பெரு மக்களைக் கூட்டுறவுத் துறையின் கீழ் நாம் கொண்டு வருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிடப் பெரு மக்களுக்கென்று பிரத்தியேகமாகப் பதிவு செய்யப்பட்ட 9 சங்கங்கள் உட்பட ஏறக்குறைய 180 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன.

கைத்தறித் துறையைப் பொறுத்த வரையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு எல்லா விதத்திலும் சிறப்பாகச் செயல்படுகிறது என் பதை நான் சொல்லவில்லை ; சமீபத்திலே தமிழ்நாட்டிலே வந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட மத்திய கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் பாராட்டி, அது எல்லா பத்திரிகைகளிலேயும் வந்ததை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பார்த்திருப் பார்கள் என்று நான் கருதுகிறேன். எனவே மத்திய அரசாலும், மத்திய அமைச்சர்களாலும் பாராட்டத்தக்க அளவுக்கு கைத் தறித் துறையினைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் நெச வாளப் பெருமக்களுக்கு எல்லாவிதமான ஊக்கமும், உதவியும் தந்து தமிழ்நாடு அரசு சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக் கிறது. நபாட் என்று சொல்லப்படுகிற தேசிய, விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியிலே இருந்து நெசவாளப் பெரு மக்களின் சங்கங்களுக்கு அதாவது நெசவுத் தொழிலுக்குக் கடன் வழங்கப்படுகிறது. இந்தக் கடனைப் பொறுத்த வரையில் இதனை அனைத்திந்திய அளவில் ஒப்பிடுகிற போது, மொத்தம் கொடுக்கப்பட்டதில் ஏறக்குறைய 58 சதவீதத்தைப் பெற்று அதிலும் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது என்பதை மன்றத் திற்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அது போல் சிறப்புத் தள்ளுபடி என்பதைப் பொறுத்த வரையிலும் இந்தியா முழுமைக்கும் வழங்கப்பட்ட தொகை ஏறக்குறைய 26 கோடி ரூபாய் ஆகும். அதிலும் சுமார் 10 கோடி ரூபாயை அதாவது $9\frac{1}{2}$ கோடி ரூபாயைத் தமிழகம் பெற்று இவ்வாறு ரிபேட் பெறுவதிலும் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது என்பதை நான் மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். 1,600-க்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதாவது கூட்டுறவின் கீழ் கொண்டு வரப்பட்ட நெசவாளப் பெருமக்களுக்கு தமிழ்நாட்டில் இயங்கிக் கொண்டு இருக்கிற சுமார் 18 நூற்பாலைகளிலிருந்து நூல் வழங்கப்படுகிறது. நூல் விலையை நிர்ணயம் செய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு கூடி, வெளிச் சந்தையில் இருக்கின்ற விலையை விட குறைவான விலையை நிர்ணயம் செய்து கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற நெசவாளப் பெருமக்களுக்குப் பயன் அளிக்கிற வகையில் நூல் வழங்கப்படுகிறது. ஏறக்குறைய 4.55 இலட்சம் கதிர்களைக் கொண்ட 18 நூற்பாலைகள் தமிழகத்தில் கூட்டுறவுத் துறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆண்டிற்கு $16\frac{1}{2}$ இலட்சம் கிலோ எடையுள்ள நூல்கள் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்பட்டு இங்குள்ள நெசவாளர்கள் உபயோகப்படுத்த போதுமான அளவு போக மீதியுள்ளவை வெளிச் சந்தையில் விற்கப்படுகிறது. இப்படி நூல் வழங்கப்பட்டதற்குப் பின்னால் அவர்கள் உற்பத்தி செய்கிற துணிகளைப் பொறுத்த வரையில் கோ-ஆப்-டெக்ஸ் என்ற தலைமை நிறுவனம் 50 சதவீதத்தைக் கொள்முதல் செய்கிறது. கோ-ஆப்-டெக்ஸின் மூலமாக ஏறக்குறைய 550 கிளை விற்பனை நிலையங்கள் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் இந்திய நாடு முழுவதும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அந்தத் துணிகள் அவற்றின் வாயிலாக விற்பனை செய்யப்படுகின்றன. இந்தியாவிலே இருக்கின்ற இது போன்ற பல்வேறு அமைப்புக்களில் அதிகமான அளவுக்கு விற்பனையை மேற்கொண்டு இருக்கிற அமைப்பாக கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனம் இயங்கிக் கொண்டு இருக்கிறது. ஆக அதிலேயும் தமிழகம் முதலிடத்தில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏறக்குறைய, 1986–87 ஆம் ஆண்டில், கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்தின் விற்பனை சுமார் $88\frac{1}{2}$ கோடி ரூபாயாகும். இந்த ஆண்டின் அதாவது 1987–88 ஆம் ஆண்டின் விற்பனை இலக்கு ஏறக்குறைய 110 கோடியாக நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறது, இங்கே உற்பத்தி செய்கிற துணிகளை இந்தியாவில் மட்டுமல்லாமல் வெளி நாடுகளுக்கும் விற்பனைக்காக அனுப்ப வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகுதான் கோ-ஆப்-டெக்ஸ் இன்டெர்னேஷனல் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு அதன் மூலமாக ஏறத்தாழ இரண்டரைக் கோடி ரூபாய் பெறுமானம் உள்ள துணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.



இங்கே உரையாற்றும் போது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கோவிந்தசாமி அவர்களும், திரு. ஆறுமுகம் அவர்களும், திரு. ரமணி அவர்களும், திரு. உத்திராபதி அவர்களும், திரு. நடராஜன் அவர்களும் தமிழ்நாட்டிலே துணித் தேக்கம் அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். பிரதான சங்கங்களிலே தேங்கி கிடக்கிறது. அவற்றை எல்லாம் அரசு கொள்முதல் செய்யவில்லை என்று சுட்டிக் காட்டினார்கள். கோ-ஆப்-டெக்ஸ் 1985-86-லே ஏறக்குறைய 71 கோடி ரூபாய்க்கு கொள்முதல் செய்து இருக்கிறது. 1986–87 ஆம் ஆண்டிலே 8 மாதத்திற்கு 60 கோடி ரூபாய்க்கு கொள்முதல் செய்திருக்கிறது. இப்போது இருக்கிற பிரதான சங்கங்களிலே யும் கையிருப்பு 2, $2\frac{1}{2}$ மாத உற்பத்தி ஒவ்வொரு சங்கங்களிலேயும் இருக்கிறது. இது இப்போது மட்டும் அல்ல. எப்போதுமே நடைமுறையில் இருக்கிற ஒன்று தான். ஏதோ வரலாறு காணாத தேக்கம் என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியது அவ்வளவு பொருத்தமானது அல்ல என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். பிரதம சங்கங்களிலே உற்பத்தி ஆகிற துணிகளை 50 சதவீதம் கோவாப்டெக்ஸ் வாங்குகிறார்கள். மீதியை வெளியிலே விற்பனை செய்கிறார்கள். பொதுவாக பொங்கல், தீபாவளி போன்ற சிறப்புக் காலங்களிலே அதிகமான விற்பனை நடக்கும். இப்போது எல்லா மாவட்டங்களிலேயும் தள்ளுபடி விற்பனை நடக்கிறது. சென்னையிலே 2 வாரமும் மாவட்ட தலைநகரங்களிலே ஒரு வாரமும் விசேஷ, சிறப்பு கண்காட்சி, கைத்தறி கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 10-40.)

மாண்புமிகு உறுப்பினர்கள் ஊருக்கு திரும்பும் போது ஓரளவிற்கு பிரதம சங்கங்களிலே இருக்கிற தேக்கம் குறைந்திருப்பதை ஒரு வார காலம் ரிபேட் அரசாங்கத்தாலே அறிவிக்கப்பட்டிருக்கிற காரணத்தாலே காண முடியும். இதையும் மீறி அப்போதைக்கப்போது எங்காவது பிரதம சங்கங்களிலே அதிகமான அளவுக்கு தேக்கம் இருக்கிறது என்று கோவாப்டெக்ஸுக்கு செய்தி வருகிற போது, இயக்குநருக்கு தகவல் வருகிற போது, அல்லது அரசுக்கு தகவல் வருகிற போது அதிகமான அளவிலே கொள்முதல் செய்து நெசவாளப் பெருமக்களுக்கு கோவாப்டெக்ஸ் உதவிக் கொண்டிருக்கிறது, அரசும் உதவிக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய ஆறுமுகம் அவர்கள் சொன்னது போல பசியாலும் பட்டினியாலும் கூட்டுறவுத் துறையிலே இருக்கிற சங்கங்களிலே இருக்கிற நெசவாளப் பெருமக்கள் வாடித் துடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் அவர் சொன்னது அவருடைய கற்பனையும் கலந்து இங்கே

சொல்லப்பட்ட செய்தியாகும். அதிலே உண்மை ஏதும் இல்லை. அப்படி எங்காவது குறிப்பிட்ட இடத்தில் தேக்கம் இருக்கிறது என்ற செய்தி அரசினுடைய கவனத்திற்கு வருமேயானால் உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து கொள்முதல் செய்யும். எப்படி விவசாயிகள் மத்தியிலே பல்வேறு விதமான போராட்டங் கள் அரசியல் உத்தியாக நடக்கிறதோ அது போன்று இதிலேயும் கொஞ்சம் அரசியல் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள். சமீபத்திலே காஞ்சி புரத்திலே ஒரு மாநாடு நடந்தது. அதைப் பற்றிய விவரங் களுக்குள்ளே நான் செல்ல விரும்பவில்லை. சில இடங்களிலே சிலரால் தூண்டி விடப்பட்டு கூட உண்ணாவிரதம் போன்றவை கள் எல்லாம் நடைபெறுகின்றன. எனவே நியாயமாக உண்மை யிலேயே பிரச்சினை இருந்து அரசினுடைய கவனத்திற்கு வருகிற போது அதிலே அரசு உடனடியாக நிச்சயமாக கவனிக்கும்; நெசவாளப் பெருமக்களின் துயரத்தை கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கிற கஷ்டத்தை அரசு தீர்க்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ரிபேடை பொறுத்த வரையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் கள் அனைவரும் சிறப்பு தள்ளுபடியை தொடர்ந்து நீடிக்க வேண் டும் என்று வற்புறுத்தினார்கள். மத்திய அரசு ஏற்கெனவே 60 நாள் என்று இருந்ததை 30 நாளாக குறைத்திருக்கிறது. தமிழக அரசின் சார்பிலே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலை வர் அவர்கள் ஏற்கெனவே கடிதம் எழுதியிருக்கிறார்கள். 30 நாள் என்று குறைத்ததை மாற்றி தொடர்ந்து 60 நாளாக சிறப்பு தள்ளுபடி இருக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டு இருக் கிறோம். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தோடு இந்தத் திட்டங்கள் கைவிடப்படும் என்று மத்திய அரசு சொன்னதைக் கூட இந்த மாநில அரசைப் பொறுத்த வரையில் ஒப்புக் கொள்ள தயாராக இல்லை. நெசவாளப் பெருமக்களைப் பொறுத்தவரையில் ஒரு நல்ல மாற்று ஏற்பாடு ஏற்படுகிற வரையில் இந்த 'ரிபேட்' திட்டம் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று தமிழக அரசு, தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்துமென்று இங்கே 'ரிபேட்' கொடுப்பதைப் பற்றி குறிப்பிட்டு பேசிய மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும், இந்த மன்றத்திற்கும் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். 'ரிபேட்'-ஐ பொறுத்த வரையில் அந்தப் பணம் அரசாங்கம் தரவேண்டியதை கொடுக் காமல் இருக்கிறது, அதனால் கோ-ஆப்டெக்ஸ் பிரதம சங்க களுக்குப் பணம் வழங்கவில்லையென்றெல்லாம் இங்கே மாண்பு மிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். 1986—87-ஆம் ஆண்டில் ஏறக்குறைய 37 கோடி ரூபாய் தமிழக அரசு வழங்கி யிருக்கிறது. எனவே கடந்த ஆண்டு வரையில் அரசாங்கத்தி லிருந்து 'ரிபேட்டாக' தரவேண்டிய பணம் எதுவும் நிலுவையில் இல்லை. அரசு அவ்வப்போது தரவேண்டிய பணத்தைத் தந்து கொண்டிருக்கிறது, கோ-ஆப் டெக்ஸ் நிறுவனம் அதற்கு கீழே இருக்கிற சங்கங்களுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



22 ரகங்களை மத்திய அரசு சட்டத்தின் வாயிலாக கைத்தறிக் கென்று ஒதுக்கி அது வழக்கு மன்றங்களில் மற்றவர்களால் வழக்கு தொடரப்பட்டு, விசைத்தறி மில் உரிமையாளர்களால் வழக்கு தொடரப்பட்டு எல்லா மாநிலங்களிலும் அந்த வழக்கு இருந்தது. அதை மத்திய அரசு ஒட்டுமொத்தமாக தீர்க்க வேண்டுமென்று எல்லா வழக்குகளையும் சுப்ரீம் கோர்ட்டிற்கு மாற்றியிருக்கிறது. எனவே விரைவில் அந்த வழக்கு முடிந்த தற்குப் பிறகு, ஒதுக்கப்பட்ட 22 ரகங்கள் முழுமையாக கைத் தறிக்கு வருகிற போது கைத்தறித் துறை புதுவாழ்வு பெறு வதற்கு, புத்துணர்ச்சியோடு நெசவாளப் பெருமக்கள் செயல் படுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்த வழக்கை துரிதமாகத் முடிக்க தமிழக அரசு வேண்டிய நடவடிக்கைகளை யெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் தேர்தல் நடத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் நடராசன் அவர்களும், கோவிந்தசாமி அவர்களும் மற்றவர்களும் வலியுறுத்தினார்கள். தமிழ்நாடு புது கூட்டுறவுச் சட்டம், 'காம்ரஹென்சிவ் ஆக்ட்' புதியதாக இயற்றப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் அதற்கு விதிகள் வகுக்கப்பட்டு, அந்த விதிகள் அமலுக்கு வருகிற போது, கூட்டுறவுத் துறையில் இருக்கும் அமைப்புகள் அனைத் திற்கும் தேர்தல் நடத்துகிற போது கைத்தறித் துறையில் இருக் கிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிச்சயமாக தேர்தல் நடக்கு மென்பதை மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் பேசுகிறபோது சேலத்தில் இருக்கிற அம்மாப்பேட்டை சங்கத்தில் தவறுகள் நடந்திருக்கின்றன என்று இங்கே சுட்டிக்காட்டினார்கள். அவர் களுக்கு நான் தெரிவித்துக் கொள்வேன். அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று கருதுகிறேன். பெறப்பட்ட செய்திகள் அடிப்படையில் ஏற்கெனவே இயக்குநர் நடவடிக்கைகளை மேற் கொண்டிருக்கிறார், விசாரணை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது தவறுகள் நடந்திருந்தால், தவறு செய்தவர்கள் மீது உரிய நடவடிக்கைகளை அரசு கண்டிப்பாக எடுக்குமென்பதை மாண்பு மிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரி வித்துக் கொள்கிறேன்.

நெசவாளப் பெருமக்களைப் பொறுத்தவரையில் அவர் களுடைய நல்வாழ்வில் இந்த அரசு இதற்கு முன்னால் இல்லாத அளவிற்கு கவனம் செலுத்துகிறது. மாண்புமிகு உறுப்பினர் நடராசன் அவர்கள் பேசுகிறபோது கூட சொன்னார்கள். நெச வாளப் பெருமக்களுக்கு அரசு தந்திருக்கிற வாக்குறுதிகள் நெச வாளர்களிடத்தில் தேங்கியிருக்கிற துணிகளைப் போல தேங்கிக் கிடக்கின்றன என்று சொன்னார்கள். நான் இப்போது துணித் தேக்கம் அவ்வளவாக இல்லையென்று சொன்னேன். அதைப் போல அரசு தந்திருக்கிற வாக்குறுதிகளும் எதுவும் நிறைவேற்ற

படாமல் இல்லையென்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். இந்த அரசு பொறுப்பேற்றபோது அல்லது அதற்கு முன்னால் பணி நேரத்தில் நெசவாளப் பெருமக்களில் யாரேனும் இறந்தால் அவருடைய குடும்பத்திற்கு 500 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. காருண்யம் கொண்ட, இரக்க மனம் கொண்ட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அதை 500 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக மாற்றினார்கள். கோ-ஆப் டெக்ஸ் நிறுவனம் 2,000 ரூபாய் சேர்ந்து இப்போது சுமார் 5,000 ரூபாயாக வழங்கப்படுகிறது.

அதைப் போல வீடு கட்டுகிற திட்டத்தைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். வீடுகள் கட்டிக் கொடுப்பதைப் பொறுத்த வரையில் 15,000 ரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இந்த ஆண்டு சுமார் 800 வீடுகள் கட்டப்படவிருக்கின்றன. இதுவரையில் ஏறக் குறைய 4,000 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மாண்பு மிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் பேசுகிற போது அவருடைய மாவட்டத்தில் நெசவாளப் பெருமக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதை அரசு நிச்சயமாக கவனிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–50)

நெசவாளர் பெருமக்களுடைய குழந்தைகளை உற்சாகப் படுத்துகிற விதத்திலேயும், நெசவாளர்களுக்கு உதவுகின்ற விதத் திலேயும் டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை என்ற ஒரு டிரஸ்ட் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது அந்த டிரஸ்டின் மூலமாக நெசவாளர் பெருமக்களுடைய குழந்தை கள், எஸ். எஸ். எல். சி., பிளஸ் 2 ஆகிய தேர்வுகளிலே முதலிலே வருகிற குழந்தைகளுக்கு ரூ. 1,000 வீதம் ஆண், பெண் இரு வருக்கும் வழங்கப்படும். அதுபோன்று, இரண்டாவது இடத்திலே வருகின்ற குழந்தைகளுக்கு 500 ரூபாய் வழங்கப்படும்.

அதேபோல், மெடிக்கல் கல்லூரியில் படிப்பவர்கள், என்ஜினி யரிங் கல்லூரியில் படிப்பவர்கள், பாலிடெக்னிக் மற்றும் சட்டக் கல்லூரியில் படிப்பவர்கள் என்று இப்படி தொழில் நுட்பக் கல்லூரி களில் படிக்கிற மாணவர்களுக்கு 1,500 ரூபாய் வீதம், இதிலே நன்றாக படிக்கிற சில மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர் களுக்குக் கொடுத்து, அரசு ஊக்குவிக்கும், இந்த டிரஸ்டிலேயிருந்து வழங்கப்படும்.

அதேபோல், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., மற்றும் ஐ.எப்.எஸ்., என்று இருக்கிற பாரின் சர்வீஸ் அல்லது அட்மினிஸ்ட்ரேடிவ் சர்வீசிலே சேருவதற்காக டிரெயினிங் போகிற மாணவர்களுக்கு, அதிலே சிலரைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு



இரண்டு ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். இது தவிர, உள்நாட்டு விற்பனை மற்றும் ஏற்றுமதிக்கு புதிய வடிவமைப்புகளை கண்டு பிடித்துத் தருபவர்களுக்கு, அதிகமாக விற்பனை செய்கிற கிளை அமைப்புகளுக்குப் பல்வேறு வகையிலே, நெசவாளர்களை, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை உற்சாகப்படுத்துகிற விதத் திலே, இந்தச் சங்கத்தின் வாயிலாக உற்சாகப்படுத்தி, இந்தச் சங்கம், இந்த டிரஸ்ட் ஊக்குவிக்கும் என்பதை மாண்புமிகு உறுப் பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் நடராசன் அவர்கள் பேசுகிறபோது, இந்த டிரஸ்டுக்கு எம். ஜி. ஆர். அவர்களுடைய பெயரை வைக்க லாமா, எம். ஜி. ஆர். டிரஸ்ட் என்று வைக்கலாமா என்று கேட் டார்கள். இந்த டிரஸ்ட் எந்த விளம்பர நோக்கத்திற்காகவும் ஆரம்பிக்கப்பட்டதல்ல. ஏன் என்றால் , மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுக்குப் புதிதாக விளம்பரம் இனி மேல் தேவையில்லை. அவர்களுடைய பெயர் டிரஸ்டுக்கு இருக்கிறபோது, காமன் குட்பண்டிலேயிருந்து, ஒவ்வொரு பிரதம சங்கத்திற்கும் பணம் தருவதிலே, அவர்கள் பெயர் இருக்கிற காரணத்தால் கொஞ்சம் அட்ராக்சன் இருக்கும், ஆகவே அவர்கள் மனமுவந்து தருவார்கள், ஏற்கெனவே 6¾, 7 லட்சம் ரூபாய் பெறப்பட்டிருக்கிறது. மேலும் அவர் பெயரிலே இருக்கிற டிரஸ்டாக இருப்பதாலே, மற்றவர்களும் இதற்கு உதவி செய்ய, நிதி வழங்க இது வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத் தாலே, கூட்டுறவுத் துறையிலே இருக்கிற இந்த டிரஸ்டுக்கு பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. நான் சிலவற்றைச் சொன்னால் பிரச்சனைகள் ஏற்படும். இருந்தாலும் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். புதுக்கோட்டையில் ஒரு கல்லூரி இருந்தது. அது பெண்கள் கல்லூரி, அதற்குப் பெயர் கலைஞர் கருணாநிதி மகளிர் கலைக் கல்லூரி என்று இருந்தது. அதுபோல் பாசிப் பயிர், நெல் என்று இப்படி விளம்பர நோக்கத்திற்குப் பல்வேறு வகையிலே பெயரை வைத்து விளம்பரம் செய்யப்பட்டதே தவிர, விமர்சனத்திற்கு அதுதான் மூல காரணமே தவிர, இதுபோன்ற நல்ல காரியங்களுக்காக செய்யப்படுகிறபோது, அறக்கட்டளைக்கு பெயர் வைப்பதிலே, நிச்சயமாக எந்தவிதமான தவறும் இருக்க முடியாது என்பதை திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் மாண்புமிகு அன்புக்குரிய நடராசன் அவர்களுக்கு நான் தெரிவித்து கொள்ளக்கடமைப்பட்டு இருக்கிறேன்.

கூட்டுறவு ஆலைகளைப் பொறுத்தவரைக்கும், ஏற்கனவே பஞ்சு நூல் நூற்கிற கூட்டுறவு நூற்பாலைகள் 18 இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும் 3 இடங்களில். ஒவ்வொன்றும் சுமார் 10½ கோடி ரூபாய் மதிப்பிலே, தென் ஆர்க்காடு மாவட்டம் கிள்ளை, தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி, ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் ஆகிய இடங்களிலே பிளன்டட் யார்ன் தயாரிக்கும் கூட்டுறவு நூற்பாலைகளை, 25 ஆயிரம் கதிர்த் திறன் கொண்ட நூற்பாலைகள் அமைக்கப் படும் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவிப்பதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதேபோல் ஒரு நாளைக்கு 60 ஆயிரம் மீட்டர் துணிகளை பதனிடும் திறன் கொண்ட, சுமார் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே புதிய பதனிடும் ஆலை ஒன்று, தென் ஆர்க்காடு மாவட்டம் புவனகிரியிலே ஆரம்பிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்வதிலே மகிழ்ச்சி அடைகிறேன்.

அதுபோல் கூட்டுறவு நூற்பாலைகளை வட ஆர்க்காடு, மற்றும் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இரண்டு பாவு ஓடல் மற்றும் தோய்த்தல் சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், ஏறக்குறைய 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே துவக்கப்பட இருக்கின்றன.

நாகர்கோவிலைத் தலைமையிடமாக வைத்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒரு ஏ.டி. அலுவலகம், அதாவது ஒரு புதிய சரக அலுவலகம் ஆரம்பிக்க அரசு அனுமதித்து இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். கும்பகோணத்தில் ஜாரி யூனிட் ஒன்றை, அதாவது சரிகை தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் நடராசன் அவர்கள் பேசும்போது இங்கே சொன்னார்கள். ஏற்கனவே காஞ்சீபுரத்தில் உள்ள ஆலையை விரிவாக்கம் செய்வதா அல்லது புதிதாக ஒன்றை ஆரம்பிப்பதா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஒன்று காஞ்சீபுரத்தில் உள்ள ஆலை விரிவாக்கம் செய்யப்படும் அல்லது கும்பகோணத்தில் புதிய தொழிற்சாலை துவங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வதிலே மகிழ்ச்சி அடைகிறேன்.

இதுதவிர, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது மிகப் பெரிய பிரச்சினையாக மூடியிருக்கிற ஆலைகளைத் திறக்க வேண்டுமென்று சொன்னார்கள். திரு. ரமணி அவர்களும், திரு. சின்னராசு அவர்களும் மற்றும் பேசிய சட்டமன்ற உறுப்பினர்களும் அதை வலியுறுத்தினார்கள். ஏற்கெனவே மூடியிருக்கிற நூற்பாலைகளைப் பொறுத்தவரைக்கும், ஏற்கெனவே இரண்டு ஆலைகள், அதாவது பவானி நூற்பாலை, ஸ்ரீஹரி நூற்பாலை ஆகியவை திறக்கப்பட்டு விட்டன. ஒன்று ரிலீப் அண்டர் டேக்கிங்-ஆலும் மற்றொன்று ஜாயின்ட் மேனேஜ்மெண்டாலும் எடுக்கப்பட்டிருக்கின்றன. சோமசுந்தரா சூப்பர் நூற்பாலை ஏற்கெனவே இந்த அரசால் நேஷனலைஸ் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போதைக்கு இருக்கிற பிரச்சினை ஏறக்குறைய 10 நூற்பாலைகள் மூடிக் கிடக்கின்றன. அதைத் திறக்க வேண்டுமென்று பிரச்சினை வருகிறபோது குறைந்தது 60 கோடி ரூபாய் இருந்தால்தான் அந்த 10 நூற்பாலைகளும் திறக்க முடியும். அந்த அளவிற்கு நிதி ஆதாரத்திலே பலவிதமான சிக்கல்களோடு இந்த ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதற்குப் பல்வேறு காரணங்கள், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப் போல உள்ளன. மத்திய





அரசாங்கத்தைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். தெளிவாக, புதிதாக மூடப்பட்ட, நலிவுற்ற எந்த ஆலையையும் தேசியமயமாக்கப்போவதில்லை என்று திட்டவட்டமாக அறி வித்து இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் நடத்திக் கொண்டிருக் கிற, நலிவுற்ற சில ஆலைகளை மூடுகின்ற சூழ்நிலை இருக் கிறது என்ற செய்திகளையெல்லாம் பத்திரிகையில் மாண்பு மிகு உறுப்பினர்கள் பார்த்து இருப்பீர்கள். அதற்கு முன்னாலே, குஜராத் திட்டத்தின் கீழ் அரசு தேசிய மயமாக்க லாமே, அதற்கு மத்திய அரசு உதவுமே என்று விமர்சனங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. குஜராத் திட்டத்தைப் பொறுத்த வரையில் அதில் புதுமையானது ஒன்றுமில்லை. மத்திய அரசு மாநிலத்திற்கு தருகிற நிதியிலிருந்து, தருகிற கடனை பின்னாலே கழித்துக் கொள்கிறது. உதாரணமாக, 50 கோடி ரூபாய் வாங்கினோம் என்று சொன்னால், பின்னாலே ஆண்டுத் திட்டம் வருகிறபோது இந்தத் திட்டத்திலேயிருந்து கொடுக் கப்படுகின்ற பணத்திலிருந்து 50 கோடி ரூபாய் கழிக்கப் படும். ஆகவே 5 ஆயிரம் பேருக்கு உதவி செய்வதற்காக, 5 கோடி மக்களுக்கு செய்யப்படுகிற வளர்ச்சிப் பணிகள் நின்று போகிற விதத்தில் எந்த அரசும் திட்டங்களைக் கொண்டு வர முடியாது; செயல்படுத்த முடியாது. இதனால்தான் தமிழ கத்திலே மட்டுமல்ல, மற்ற மாநிலங்களிலும் இந்தத் திட்டத் திற்கு அவ்வளவு அதிகமான வரவேற்பு இல்லை. இருந்தாலும் மூடியிருக்கிற இந்த ஆலைகள் திறக்கப்படவேண்டும். நெச வாளர்களுடைய, அங்கே இருக்கிற தொழிலாளர்களுடைய நலனிலே அக்கறை கொண்டிருக்கிற இந்த அரசு தொடர்ந்து அதற்கு ஒரு டைரக்டர் தலைமையிலே ஒரு குழுவை அமைத்து ஒவ்வொரு மூடியிருக்கிற ஆலை வாரியாக பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அந்த விவரங்கள் எல்லாம் கொள்கைக் குறிப்பிலே தரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களும் நானும் சேர்ந்து, சம்பந் தப்பட்ட அதிகாரிகளும், அந்தந்த ஆலைகளுக்கு நிதி உதவி செய்திருக்கிற வங்கிகளையும் அழைத்துப் பேசி எந்தவகை யிலே அவற்றையெல்லாம் அரசினுடைய குறைந்த நிதி உதவி யோடும், மற்ற மின்சாரம் போன்றவற்றிலே ஓரளவிற்கு கருணை காட்டியும் அரசு எந்த அளவிற்கு அவற்றையெல் லாம் திறக்க முயற்சி செய்ய முடியுமோ அந்த அளவிற்கு அவற்றையெல்லாம் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் ஏற்கெனவே தெரிவித்து இருக்கிறேன். இருந் தாலும் இப்போதும் இந்த மன்றத்திலே இருக்கிற மாண்பு மிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

இது தவிர, இந்தத் துறையைப் பொறுத்தவரை மாண்பு மிகு உறுப்பினர்கள் சொல்லிய மேலான கருத்துக்களை அரசினுடைய கவனத்திலே எடுத்துக்கொண்டு நெசவாளர்

களுடைய கஷ்டங்களைப் போக்கவும், நெசவாளர்களுக்கு பல்வேறு வகைகளிலே உதவவும் இந்த அரசு ஏற்கெனவே நடைமுறைப்படுத்துகிற திட்டங்களைத் தொடர்ந்து சிறப்பாகவும், செம்மையாகவும் நடைமுறைப்படுத்தும் என்பதை மாண்புமிகு மன்ற உறுப்பினர்களுக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

அடுத்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற துறைகள் மானிய கோரிக்கைகளைப் பொறுத்தவரையில் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது வீட்டு வசதி செய்து தருவதிலே தமிழ்நாடு அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு முனைப்போடு முதல் வரிசையில் நின்று செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதை நான் சொல்ல இருக்கிற ஆதாரங்களைக் கொண்டு இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்ள முடியும்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் திரைப்படத்தில் நடித்தக் காலத்திலேயே, மலைக்கள்ளன் திரைப்படத்தில் "ஆளுக்கு ஒரு வீடு கட்டுவோம்'' என்று அன்றைக்கே அறிவித்தார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். ஒரு மனிதனுடைய அத்தியாவசிய தேவைகள் உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்று ஆகும். எனவே இந்த உறையுள் என்று சொல்லப்படுகின்ற வீடு ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவரவர்கள் திறமைக்கு ஏற்ப அமைத்துத் தரவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த அரசு சிறப்பாக செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்திந்திய அளவில் மாநிலங்களுக்கு வீடு கட்டுவதற்கு கடன் வழங்குவதற்கு இந்த மத்திய அரசினுடைய அமைப்பாக 'அட்கோ' நிறுவனம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த 'அட்கோ'—விடம் கடன் பெற்றுத்தான் எல்லா மாநிலத்திலும் இருக்கிற அவுசிங் போர்டு, சிலம் கிளியரன்ஸ் போர்டு மற்றும் உள்ள எல்லா அமைப்புகளும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த அட்கோவிடமிருந்து கடன் பெறுவதில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அவுசிங் போர்டு, சிலம் கிளியரன்ஸ் போர்டு மற்றும் இருக்கிற அமைப்புகள் வாயிலாக பெறப்பட்டு இருக்கிற கடன் 1986—87-ல் ஏறக்குறைய 46 கோடி ரூபாய் ஆகும். இது மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது குஜராத் பெற்ற கடன் 40 கோடி ரூபாய் ஆகும். ஆந்திரா பெற்ற கடன் 39 கோடி ரூபாய் ஆகும். கேரளா பெற்ற கடன் 37 கோடி ரூபாய் ஆகும். கர்நாடகா பெற்ற கடன் 29 கோடி ரூபாய் ஆகும். எனவே பக்கத்தில் இருக்கிற மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும் சரி அல்லது அனைத்திந்திய அளவில் உள்ள மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும் சரி, வீடு கட்டுவதற்கு அட்கோவிட



மிருந்து அதிகமாகக்கடன் பெற்று முதலிடத்தில் இருப்பது சுமார் 60 கோடி ரூபாய் பெற்று இருப்பது நம்முடைய தமிழ்நாடுதான் என்பதை சொல்லும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாக மகிழ்ச்சி அடைவார்கள். எனவே தமிழ்நாட்டில் வீடு கட்டுகிற பணிகள், வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் பணிகள் அதிகமாக நடந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு ஆகும்.

வீட்டு வசதி வாரியம் 1961-ல் ஆரம்பிக்கப்பட்டது. 1961-லிருந்து 1977 வரை 16 ஆண்டுகளில் அட்கோவிலிருந்து கடன் பெற்றது சுமார் 27 கோடி ரூபாய் ஆகும். 1977-லிருந்து 1987 வரை 10 ஆண்டுகளில் பெற்று இருக்கிற கடன் ஏறக்குறைய 120 கோடி ரூபாய் ஆகும். எவ்வளவு வேகமாக பணிகள் நடைபெறுகிறது என்பதை சுட்டிக்காட்டுவதற்காக இதை நான் இங்கே கோடிட்டுக் காட்டுகிறேன்.

அதேபோல் வீடுகள் கட்டியது 1961-லிருந்து 1977 வரை 16 ஆண்டுகளில் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள் 43 ஆயிரம் தான். ஆனால் 1977-லிருந்து 1987 வரை இந்த 10 ஆண்டுகளில் ஏறக்குறைய 1 லட்சத்து 5 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த 16 ஆண்டுகளில் கட்டப்பட்ட வீடுகளை விட $2\frac{1}{2}$ மடங்கு அதிகமாக வீடுகள் இந்த 10 ஆண்டு காலத்தில் கட்டப்பட்டு இருக்கின்றன.

அதேபோல் மனைகள் ஒதுக்கீடு செய்வது பொறுத்த வரையில் 1961-லிருந்து 1977 வரை 17 ஆண்டுகளில் 16 ஆயிரம் மனைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால் இப்போது 1977-லிருந்து 1987 வரை இந்த 10 ஆண்டுகளில் ஏறக்குறைய 50 ஆயிரம் வீட்டு மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மொத்தத்தில் நடந்த வேலையின் மதிப்பு 1961-லிருந்து 1977 வரை 16 ஆண்டுகளில் 95 கோடி ரூபாய்க்கு பணிகள் நடைப் பெற்று இருக்கின்றன. ஆனால் 1977-லிருந்து 1987 வரை 10 ஆண்டுகளில் 313 கோடி ரூபாய்க்கு வீட்டு வசதி வாரியத்தாலே பணிகள் நடைப்பெற்று இருக்கின்றன.

வீட்டு வசதி வாரியத்தின் சார்பிலே முன்பை விட எப்படி 2 மடங்கு 3 மடங்கு அதிகமாக வேகத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே பணிகள் நடைபெற்று இருக்கின்றன, காரியங்கள் நடைப் பெற்று இருக்கின்றன என்பதற்கு இந்த ஆதாரங்கள் எல்லாம் எடுத்துக் காட்டாக அமைகின்றன. வருகின்ற ஆண்டுகளிலே ஒரு புதுத் திட்டம், ஏற்கனவே வீட்டு மனை ஒதுக்கப்பட்டவர்களுக்கு வசதியில்லாமல் இருக்கிற காரணத்தால் உதவுகிற விதத்தில், 'ஹட்கோ' மூலம் கடன் பெற்று, 'கேஷ் லோன்' வழங்கப்படவிருக்கிறது. அதன் முதல் கட்டமாக, திருச்சி, கோவை, மதுரை, புதுக்கோட்டை, சென்னை— சென்னையிலே 'ஈ.டபிள்யூ.எஸ்-க்கு' மட்டும் அனுமதி அளிக்கப் பட்டிருக்கிறது. பொருளாதாரத்திலே நலிவுற்றவர்களுக்கு

சுமார் ரூ. 7 கோடிக்கு அந்தக் 'கேஷ் லோன்'-கடன் வழங்கு கின்ற திட்டம் இந்த ஆண்டிலிருந்து அமல்படுத்தப்படவிருக் கிறது.

சென்னையைப் பொறுத்தவரைக்கும், 'எம். ஐ. ஜி., ஹெச்.ஐ.ஜி.' வீட்டு மனைகளை வைத்திருப்பவர்களுக்குக் கூட கடன் வழங்குவதற்கு 'ஹட்கோ' வோடு ஹவுசிங் போர்டு பேசிக் கொண்டிருக்கிறது. பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக் கிறது. அவர்களுக்கும் கடன் வழங்க வீட்டுவசதி வாரியம் நட வடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வீடுகள் கட்டித்தருவதோடு, அரசு ஊழியர்களுக்கு வீடுகள், பொதுமக்களுக்குத் தவணை முறையிலே, இதில் 'அவுட்ரைட் பர்சேசில்' வீடுகள், மனைகள் மட்டுமல்லாமல், இன்னும் காவல் நிலையங்கள், சமுதாய நலக் கூடங்கள், கமர்ஷியல் கட் டிடங்கள், காம்ளக்ஸ்கள், இப்படி வீட்டுவசதி வாரியம் கட்டிக் கொண்டிருக்கிறது. சென்னையிலே சுமார் 13 மாடி கொண்ட ஒரு கட்டிடம், கமர்ஷீயல் காம்ப்ளக்ஸ் ஒன்று ஏறக்குறைய ரூ. 6 கோடி மதிப்பில் கட்டப்பட இருக்கிறது என்று வீட்டுவசதி வாரியம் சார்பிலே மன்றத்தினுடைய உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

8 மாடியிலே 'ரெசிடென்ஷியல் டவர் ப்ளாக்' ஒன்று சென்னை யில் கட்டப்பட இருக்கிறது. பொதுவாக வீட்டுவசதி வாரியத் தைப் பொறுத்த வரைக்கும் பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள், சில இடங்களில் கட்டப்பட்டிருக்கின்ற வீடுகள் தரமுடையதாக இல்லை என்றும், ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகள் மோசமான நிலையில் இருந்து வருவதாகவும், சட்டமன்ற உறுப்பினர்களான திருமதி வளர்மதி மற்றும் சென்னையைச் சார்ந்த பாரதி அவர் களும் இங்கே பேசும்போது சுட்டிக்காட்டினார்கள். அவையெல் லாம் தரம் குறைந்ததாக இருக்கிறது, ரிப்பேர் செய்யப்படாமல் இருக்கிறது என்றெல்லாம் சுட்டிக் காட்டினார்கள். எனவே அவற்றையெல்லாம் அரசு உரிய முறையில் நடவடிக்கை எடுத்து, கவனிக்கும் என்பதை நான் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், பத்திரிகையாளர் களை நேசிக்கிறவர்கள். புரட்சித் தலைவர் அவர்கள் சென்னை யிலே வாழ்கிற பத்திரிகையாளர்களுக்கு தவணை முறையிலே விலைக்கு வீடுகளை கட்டித்தரவேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. நேற்றும் பேசிய மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினார்கள். இதை புரட்சித் தலைவர் அவர்கள் ஒத்துக்கொண்டு, முதல் தவணையாக இந்த ஆண்டு 100 வீடுகள் சென்னையிலே பத்திரிகையாளர்களுக்கு கட்டித்தரப்பட இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையை தட்டும் ஒலி). இடம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டி



லேயே பணி துவங்கும். இதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். இதைத் தவிர, மாவட் டத் தலைநகர்களிலே அரசு ஊழியர்களுக்காக கட்டப்பட்டிருக் கின்ற வாடகை வீடுகளும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படு கிறது. அவை போதுமான அளவில் இல்லை. எனவே வீடுகளின் எண்ணிக்கையை அதிகரித்துத் தரவேண்டுமென்ற கோரிக்கை பத் திரிகையாளர்கள் மத்தியில் இருக்கிறது. ஆகவே சென்னையில் வழங்கப்படுகிற 50 வீடுகளுக்குப் பதிலாக 60 வீடுகள் சென்னை யிலே வழங்கப்படும். அதுபோன்று ஒவ்வொரு மாவட்டத்திலே யும், மதுரையிலே 7 ஆக இருப்பது 15 ஆக, திருச்சியிலே 4 ஆக இருப்பது 15 ஆக, கோவையிலே 7 ஆக இருப்பது 15 ஆக, ஊட்டியிலே 3 ஆக இருப்பது 10 ஆக, ராமநாதபுரத்திலே 5 ஆக இருப்பது 15 ஆக, விருதுநகரிலே 5 ஆக இருப்பது 15 ஆக, சிவ கெங்கையிலே 5 ஆக இருப்பது 15 ஆக, திண்டுக்கல்லிலே 7 ஆக இருப்பது 15 ஆக உயர்த்தித் தரப்படும். இது தவிர, மற்ற மாவட்டத் தலைநகர்களிலேயும் சராசரியாக 10 வீடுகள் என்று இவை இல்லாத மாவட்டங்களில் வாடகை வீடுகள் பத்திரிகை யாளர்களுக்கென்று ஒதுக்கித் தரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவிக்கச் சொன்ன செய்தியை சட்டமன்றத்திற்கு நான் தெரி விப்பதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

(முற்பகல் 11-10.)

அதற்கடுத்து குடிசை மாற்று வாரியம். குடிசை மாற்று வாரியம் சென்னையிலே மட்டும் முதலில் 'சிட்டி இம்ப்ரூவ் மெண்ட் டிரஸ்ட்டாக' இருந்து, அதற்குப் பிறகு 1971-லே குடிசை மாற்று வாரியமாக மாற்றப்பட்டு, அந்த வாரியம் தன் னுடைய பணிகளைச் சென்னையிலே மட்டும் செய்துகொண் டிருந்தது. குடிசைகள் சென்னையிலே மட்டும் இல்லை. தமி ழகம் முழுவதும் இருக்கின்ற பெரிய நகரங்களிலே கூட, வளர்ச்சி பெற்றிருக்கக் கூடிய நகரங்களிலேயும் உள்ள குடிசைகளை மாற்றி வீடுகள் கட்டித்தரவேண்டுமென்ற உணர்வோடு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் ஏறக்குறைய 46 நகரங்களை தேர்வு செய்து அந்த 46 நகரங்களிலும் குடிசைமாற்று வாரியத்தினு டைய பணிகள் நடக்கும் என்று கடந்த ஆண்டு அறிவித்தார்கள். அந்தப் பணிகள் 46 நகரங்களிலும் நடைபெற்று வருகின்றன. ஏற்கனவே இருக்கின்ற வீடுகளை இருக்கின்ற இடத்திலேயே பட்டா தந்து அல்லது பட்டா இருப்பின் அவர்களுக்கு 1,500 ரூபாய்—சமுதாயத்திலே நலிவுற்ற பிரிவினர் ரூ. 300-க்குள்ளே வருமானம் உள்ளவர்களுக்கு— மானியமாக வழங்கப்படுகிறது ஓடு மாற்றிக்கொள்ள அல்லது ஏற்கனவெ ஓடு போட்டிருப்ப வர்கள்சுவர் மண் சுவராக இருந்தால் கல் சுவராக்கிக் கொள்ள, முழுவதுமாக பக்கா வீடாக கட்டிக்கொள்வதற்கு 1,500 ரூபாய், மானியம் வழங்கப்படுகிறது. அதற்கு மேல் வருமானம் உள்ளவர்

களுக்கு ஏறக்குறைய 3,000 ரூபாய் வீடு கட்டிக்கொள்ள அபிவிருத்தி செய்து கொள்ள கடனாக வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் 46 நகரங்களிலே தமிழ்நாட்டிலே சென்னையும் சேர்த்து அமுல்படுத்தப்படவிருக்கிறது. அது தவிர இன்னும் 15 நகரங்களையும் இந்த திட்டத்திலே சேர்த்துக்கொள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே மன்ற உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். 15 நகரங்கள்—ராஜபாளையம், கோவில்பட்டி, சிவகாசி, அறந்தாங்கி, பழனி, ஸ்ரீவில்லிப்புத்தூர், பெரியகுளம், சங்கரன்கோயில், ஆம்பூர், சூரமங்கலம், பரமக்குடி, நெல்லிக்குப்பம், ஆரணி, புளியங்குடி, திருப்பூர் ஆகும். ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கின்ற நகரங்களோடுஇந்த 15நகரங்களிலேயும் குடிசைமாற்று வாரிய பணிகள் நடைபெறும். அதற்கான உத்திரவு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இட்டிருக்கிறார்கள் என்பதை மன்றத்து உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிசைமாற்று வாரிய வீடுகளைப் பொறுத்தவரைக்கும் கட்டப்பட்டு இருக்கின்ற வீடுகள் சரியாக பழுதுபார்க்கப்படவில்லை. இருந்த நிலையிலேயே இருக்கின்றது என்று சுட்டிக்காட்டினார்கள். குடிசைமாற்று வாரிய வீடுகளிலே குடியிருக்கின்ற பெரும்பாலானோர், மொத்த வாடகை ரூ. 20 என்றாலும் அந்தப் பணத்தை பெரும்பாலான இடங்களிலே கட்டுவதில்லை. வசூலுக்கு போனால் தகராறு நடக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பாக சென்னையிலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்த பகுதியிலே உள்ள, அவர்களுடைய தொகுதியிலே உள்ள குடிசை வாழ் மக்களுக்கு ஆங்காங்கே போகின்றபோது அறிவுரை வழங்கவேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன். வசூல் செய்யப்படுகின்ற பணத்திலிருந்துதான் ரிப்பேர் செய்ய முடியும். வசூல் ஆகாத நிலையில், இடிந்த நிலையில் இருக்கின்ற குடிசை மாற்று வாரிய வீடுகளை ரிப்பேர் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்போதைக்கப்போது புரட்சித் தலைவர் அரசாங்கம் நிதி ஒதுக்கம் செய்து மிக மோசமாக இருக்கின்ற குடியிருப்புகளை செப்பனிட்டு, பழுதுபார்த்து வருகிறது என்பதை மன்றத்து உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அந்த குடிசை மாற்று வாரிய வீடுகளிலே வாழ்ந்துகொண்டு இருப்பவர்கள் தாங்களே சொந்தமாக அந்த வீட்டை வாங்கிக்கொள்ள விரும்பினால் தவணை முறையில் வாங்கிக்கொள்ளலாம் என்றும் அரசு அறிவித்து இருக்கிறது. அப்படி 8,000 குடியிருப்புகள் வாடகை வீடாக இருந்தவை சொந்த வீடுகளாக தவணை முறையிலே மாற்றித்தரப்பட்டு உள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



வீடு கட்டுகின்ற பணியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற இன்னொரு அமைப்பு கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் ஆகும். இந்த கிராமிய சங்கங்களை பொறுத்தவரைக்கும் சுமார் 104 பிரதம கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டிலே இயங்கிக்கொண்டு இருக்கின்றன. தமிழ்நாட்டிலே மொத்த தாலுக்கா 168 இருக்கிறது. இந்த 104 பிரதம சங்கங்களும் வட்ட அளவிலே சில இடங்களில் டிவிஷன் அளவிலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. எனவே மீதம் இருக்கின்ற 64 தாலுக்காவிலே—168லே 104 போக மீதி 64 தாலுக்காவிலேயும் வட்ட அளவிலான கிராமியச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படும். இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும். அதற்கான அனுமதியை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தந்திருக்கிறார்கள் என்பதை மன்றத்து உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்ள மகிழ்ச்சியடைகிறேன். ஏற்கனவே இயங்கிக்கொண்டிருக்கின்ற சங்கங்களிலே சுமார் 6,000 ரூபாய் வரை வழங்கப்படுகிறது. அதிலே 4,500 ரூபாய் அரசு தருகிறது. 1,500 ரூபாய் அவர்கள் உழைப்பாக நல்க வேண்டும். இந்தப் பணம் போதாது. விலைவாசியெல்லாம் கூடியிருக்கிறது. எனவே இந்த 6,000 ரூபாய் போதாது அதை 10,000 ஆக உயர்த்த வேண்டும் என்று இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

அதையும் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அந்த 6,000 ரூபாயை, 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்துவதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விரைவிலே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அதற்கான ஆணையை இடுவார்கள் என்பதை மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வதிலே மகிழ்ச்சி அடைகிறேன்.

இதுவரை, 'ஹட்கோ, எல்.ஐ.சி. மற்றும் ஜி.ஐ.சி. போன்ற இன்சூரன்ஸ் நிறுவனங்களுடைய கடன் உதவி ஏறக்குறைய 74 கோடி ரூபாய் தமிழகத்திலே கடன் வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த 5 ஆண்டுகளில் ஏறக்குறைய 2 இலட்சத்து 5 ஆயிரம் வீடுகள் தமிழகத்திலே கிராமிய சங்கங்களின் வாயிலாக கட்டப்பட்டிருக்கின்றன என்பதை மன்றத்தினுடைய உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதைப்போல, நகர்ப்புற வீட்டு வசதிச் சங்கங்களின் சார்பில் ஏறக்குறைய 406 பிரதம நகர்ப்புற கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஏறக்குறைய 10 ஆயிரத்திலிருந்து 80 ஆயிரம் ரூபாய் வரை வீடு கட்ட கடனாக நகர்ப்புறத்திலே வழங்கப்படுகிறது. 31—12—1986 வரை, ஏறக்குறைய 200 கோடி ரூபாயை இந்தச் சங்கங்களின் வாயிலாக வீடு கட்டுவதற்குக் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டிலே ஏறக்குறைய 12 சங்கங்கள் — 12 வகையான சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதனாலே, பொது மக்களுக்குக் கடன் பெறுவதிலே குழப்பங்கள் ஏற்படுகின்றன. இவற்றையெல்லாம் குறைத்து 4 அல்லது 5 வகையான சங்கங் களாக சீரமைக்கவேண்டும் என்கிற அந்தத் திட்டமும் அரசி னுடைய பரிசீலனையில் இருக்கிறது. இங்கே பேசியபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் வீட்டு வசதிச் சங்கங்களுக்குத் தேர் தல் நடத்தவேண்டும் என்று கேட்டார்கள். ஏற்கனவே, நான் சொன்னதைப் போல, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், அதுபோல் வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அரசாலே காம்பரஹென்சிவ் ஆக்ட் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கூட்டுற வுத் துறையிலே, விதிகள் அமல்படுத்தப்படுகிறபோது, கூட்டுற வுத் துறையில் மற்ற பிரிவுகளுக்குத் தேர்தல் நடக்கிறபோது, இந்த அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்தப்படும் என்பதை மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம்.எம்.டி.ஏயைப் பொறுத்தவரைக்கும், அது செய்து வரு கிற பணிகளை எல்லாம் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத் தில் தெளிவாகக் கொடுத்து இருக்கிறோம். சமீபத்திலே செய்யப் படுகிற மாறுதல் என்பதை மட்டும் சொல்கிறேன். வீடு கட்டு வதாக இருந்தாலும், கமர்ஷியல் பில்டிங்-ஆக இருந்தாலும் சரி, அவற்றை எல்லாம், எம்.எம்.டி.ஏ.வுக்கு மனுச் செய்த வுடனே பிளான் பெர்மிஷனைப் பொறுத்தவரைக்கும் 10 நாட் களுக்குள் விரைவுபடுத்தி, அவர்களுக்கு உரிய பதில் அனுப்பப் படுகிறது. அந்த வகையிலே மிகக் குறுகிய காலத்திற்குள்ளாக, அதனுடைய உத்தரவை, அனுமதியை, தகவலை அவர்களுக்கு அனுப்பி எம்.எம்.டி.ஏ. சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக் கிறது.

ஏற்கனவே உலக வங்கியினுடைய உதவியோடு சுமார் 58 கோடி ரூபாயில் பெருநகர் வளர்ச்சித் திட்டமொன்று ஏறக் குறைய முடிவடையும் தருவாயில் இருக்கிறது. இரண்டாம் பெரு நகர் வளர்ச்சித் திட்டம் சுமார் 90 கோடி ரூபாயிலே செயல் பாட்டில் இருக்கிறது. வருகிற ஆண்டு அது முடிவடையும்.

சென்னைப் பெருநகரம் மட்டுமல்லாமல், வளர்ச்சி பெற்று வருகிற மற்ற நகரங்கள்—மதுரை, திருச்சி, கோவை, சேலம் ஆகிய நகரங்களிலேயும் உலக வங்கி உதவியோடு அந்த நகரங் களில் பல்வேறு விதமான வசதிகளைச் செய்து தர புரட்சித் தலைவர் அவர்கள் அரசு திட்டமிட்டு, ஏறக்குறைய 428 கோடி ரூபாயிலே அதற்கான வளர்ச்சிப் பணிகளை எல்லாம் அதற்கான திட்டத்தை எல்லாம் இட்டு, இப்போது உலக வங்கியின் அனுமதிக்காக அனுப்பியிருக்கிறது. நிச்சயமாக உலக வங்கி உதவும். வருகிற ஆண்டில் அந்தத் திட்டம் நடைமுறைப்படுத் தப்படும் என்பதை நான் மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.





எதிர்காலத்திலே—ஜார்ஜ் டவுனிலே இயங்கிக் கொண்டு இருக்கிற இரும்பு—எஃகு சந்தைக்குப் பதிலாக, சாத்தாங்காடு பகுதியில் ஒரு நவீன சந்தையை 30 கோடி ரூபாயிலே எம்.எம். டி.ஏ. கட்டிக்கொண்டு வருகிறது.

சுமார் 700 மொத்த வியாபாரக் கடைகள் அங்கே அனுமதிக் கப்படும். 1988 இலே அந்தப் பணி முடியும். அதுபோல், கொத்த வால்சாவடி காய்கறி மார்க்கட்டிற்குப் பதிலாக, இங்கே இருக்கிற நெருக்கடியை—லாரிகளாலே, சந்தைகளாலே ஏற்படுகிற நெருக் கடியைக் குறைக்கவேண்டும் என்கிற உணர்வோடும், சென்னை நகரத்திற்கு உதவுகிற விதத்திலேயும், பக்கத்திலே, அதற்குப் பதி லாக கோயம்பேடு பகுதியில் சுமார் 3,000 கடைகள் கட்டப்பட்டு வருகின்றன. அதற்கான மார்க்கெட் கட்டப்பட்டு வருகின்றது. 45 கோடி ரூபாயிலே நடக்கிற இப்பணி 1989-இலே முடிவு பெறும்.

அதோடு மட்டுமல்லாமல், அதுபோல் ஃபுட்கிரெயின்ஸ் — உணவு தானியங்கள், பார்சல்கள் கொண்டுவருகிற லாரிகள் எல் லாம் இறக்குவதற்கு, பார்சலுக்காக தனியாக ஒரு காம்ப்ளக்ஸ் —இப்படி இதற்காக தனியாக வளாகங்கள் அமைக்கிற அந்தத் திட்டமும் எம்.எம்.டி.ஏ—யினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது தவிர, சென்னை நகரில், இங்கே வந்து சேருகிற நெருக் கடியைத் தீர்க்கும் விதத்தில் துணை நகரங்களாக, மணலி— புதிய நகரம், மறைமலை நகர்—புதிய நகரம் ஆகிய நகரங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் அரசால் ஏற்படுத்தப்பட்டு வருவதை மன்ற உறுப்பினர்கள் அறிவீர்கள். அதுபோல், திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி, மீஞ்சூர் ஆகிய பகுதிகளிலேயும் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு நிலம் ஒதுக்கித் தரப்பட்டு புதிய துணை நகரங்கள் உருவாக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சென்னையைப் பொறுத்தவரைக்கும், இன்னொரு பிரச்சினை துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், அந்தத் திட்டம் ரயில்வேயினுடைய திட்டம் ஆகும். ஏறக் குறைய 110 கோடி ரூபாயிலே ஆரம்பிக்கப்பட்டது அந்தத் திட்டம்.

(முற்பகல் 11-20)

இதற்கு, தமிழக அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டு ரூ. 20 கோடிக்கான நிலத்தை ஒதுக்கியிருக்கிறது. இந்தத் திட்டம் சீக்கிரத்திலே முடிக்கப்பட வேண்டிய திட்டம். 1990 ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம். ஆண்டுக்கு ரூ. 25 கோடி இதற்கு மத்திய அரசு தர வேண்டும். ஆனால் 1983 முதல் 1987 வரை சுமார் ரூ. 14 கோடியை மட்டுமே மத்திய அரசு இத்திட்டத்திற் காகத் தந்துள்ளது.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] 1987 மே 7]

இந்தியாவைப் பொறுத்த வரையில், டெல்லி, பமபாய், கல்கத்தா மற்றும் சென்னை 4 நகரங்கள் மாநிலத் தலைநகர்கள் என்று மட்டுமல்ல தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மற்ற நகரங் களுக்குச் செய்யப்படுகிற அளவுக்குக் கூட வசதிகள் சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் இது வரை செய்யப்பட வில்லை. எனவே ஏற்கெனவே மத்திய அரசு ஏற்றுக் கொண்டு அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டத்தை ஆண்டுக்கு ரூ. 25 கோடி ஒதுக்கி முடித்து தர வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயி லாக நான் மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏற்கெனவே மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்தி வருகிறது. தொடர்ந்து வற்புறுத்தும் என்று தெரி வித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே நகர்ப்புற வளர்ச்சியைக் பொறுத்த வரை யில் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல் நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் அடிப்படையில் 28 நகரங்களை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு நகரத்திற்கும் சுமார் 80 லட்சம் ரூபாய் செலவில் வளர்ச்சிப் பணிகள் செய்ய திட்டமிடப்பட்டு அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இது 6வது ஐந்தாண்டு திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டம். இப்போது 7வது ஐந்தாண்டு திட்டத்தில் அதைப் போலவே 40 நகரங்களை நாம் தேர்வு செய்து ·மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். ஆனால் அதில் 9 நகரங்களைமட்டுமே அதாவது இராமநாதபுரம், அருப்புக் கோட்டை, பட்டுக்கோட்டை, மதுராந்தகம், அறந்தாங்கி, ஆண்டிப்பட்டி, இராமேஸ்வரம் பொன்னமராவதி, சித்தையன் கோட்டை ஆகிய 9 இடங்களை மட்டும் மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நகரங்களில் சுமார் ரூ. 120 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறுவிதமான வளர்ச்சிப் பணிகள் நடைபெறும். எனவே ஏற்கெனவே 6வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அறிவித்த ததைப் போல் குறைந்தது 28 நகரங்களையாவது மத்திய அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசிடம் வற்புறுத்தியுள்ளது. தொடர்ந்து வற்புறுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இது வரை தமிழ்நாடு அரசின் சார்பில் நடக்கிற ஒருங் கிணைந்த வளர்ச்சி திட்டத்தின்கீழ் 7வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 47 பேரூராட்சி நகரங்களைப் புரட்சித் தலைவர் அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறேன். பெரிய நகரங்கள் மட்டுமல்ல. சின்ன சின்ன கிராமங்கள் சின்ன சின்ன டவுன் பஞ்சாயத்துக்கள் கூட எல்லாவிதமான வசதிகளையும் பெற்று தன்னிறைவைப் பெற வேண்டும் என்று புரட்சித் தலைவரின் அரசு விரும்புகிறது. அதற்காகத்தான் முதல் கட்டமாக இதுவரை இல்லாத அளவுக்கு தமிழகத்தில் 47 பேரு ராட்சி டவுன் பஞ்சாயத்துக்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு ஒவ் வொன்றிலும் ரூ. 20 லட்சத்திற்கு வளர்ச்சித் திட்டங்கள் தீட்டப் பட்டு இந்தப் பணிகள் நடைபெறும் என்பதை மன்ற உறுப்பினர் களுக்கு நான் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்,



1987 மே 7] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

அடுத்து இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் பொதுவாக ஒன்றைப்பற்றி விமர்சனம் செய்தார்கள். அவர்கள் குறிப்பாகச் சொன்னது, அதிலும் ஜனதா கட்சியைச் சார்ந்த திரு. ஆறுமுகம் அவர்களும், திரு. உத்திராபதி அவர்களும், திரு. ரமணி அவர்களும் திரு. நடராசன் அவர்களும் சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்ட முதல்வரின் பெருமளவு வீடுகட்டும் திட்ட மான அதாவது மாஸ் ஹவுசிங் ஸ்கீம் அதைப்பற்றி அவர்கள் விமர்சித்தார்கள். ஓராண்டு ஆகி விட்டதே 10 லட்சம் வீடு களைக் கட்டி முட்டித்துவிட்டீர்களா ஏன் நடக்காததை எல்லாம் சொன்னீர்கள். நடக்க முடியாததை எல்லாம் ஏன் சொல்கிறீர் கள்? 10 லட்சம் வீடுகள் கட்ட முடியுமா என்றெல்லாம் இங்கே சந்தேகத்தை எழுப்பினார்கள். மன்ற உறுப்பினர்களுக்கு நான் அதைக் குறித்து ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இதைப் போலத்தான் புரட்சித் தலைவரவர்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்த போதும் ஆண்டுக்கு ரூ. 200 கோடி செலவாகுமே, 88 முதல் 90 லட்சம் பேர்களுக்குத் தினந்தோறும் உங்களால் உணவு வழங்க முடியுமா? இதெல்லாம் நடக்கக்கூடிய காரியமா? 100 நாளைக்குத்தான் நடக்கும். அதற்கு மேலே நடக்காது என்று விமர்சித்தார்கள். இங்கே சட்டமன்றத்திலும் பேசினார்கள். வெளியேயும் பேசினார்கள். ஆனால் இந்தத் திட்டம் பல ஆண்டுகளாகச் செயல்பட்டு வருவதை நாம் அறி வோம். ஆண்டுக்கு ரூ. 200 கோடிக்குமேல் செலவழித்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களும் ஐக்கிய நாடுகள் உட்பட அனைவரும் பாராட்டுகிற வகையில் இந்தத் திட்டம் மிகச் சிறப் பாக நடைபெற்று வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறி வார்கள்.

அதைப் போலத்தான் தன்னிறைவுத் திட்டம் கொண்டுவரப் பட்டபோதும் அதற்காக ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ. 60 லட்சம் ஒதுக்கப்படும் என்று அறிவித்து முதல் கட்டமாக 40 ஊராட்சி ஒன்றியங்களுக்கு இந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்ட போதும் சொன்னார்கள். இந்த 40 ஊராட்சி ஒன்றியங்களோடு சரி, அதற்கு மேலே முடியாது. 378 பஞ்சாயத்து யூனியன் களுக்கும் இவ்வளவு பணம் ஒதுக்க முடியுமா? எப்படி இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்றெல்லாம் விமர்சித்தார் கள். ஆனால் அந்தத் தன்னிறைவுத் திட்டமும் ஏறத்தாழ ரூ. 250 கோடி செலவில் எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசால் நடைமுறைப்படுத்தப் பட்டது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

அதைப் போலவே வீடு கட்டும் திட்டத்தைப் பொறுத்த வரையில் நேற்றைக்குக் கூட பத்திரிகையில் சில செய்தி வந்தது. 2 லட்சம் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்று செய்தி வந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் கூட ஒவ்வொன் றாகக் கூட்டி கணக்குப் போட்டு கஷ்டப்பட்டார்கள். வீடு

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1987 மே 7]

கட்டுகிற பணியை-வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம், கூட்டுறவு சங்கங்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தாட்கோ, ஆசிரியர் வீட்டுவசதிக் கழகம், காவலர் வீட்டு வசதிக் கழகம் இந்த இரண்டும் புரட்சித் தலைவர் ஆட்சியில் ஏற்பட்ட புதுக் கழகங்கள் ஆகும்— ஆகியவை மேற்கொண்டிருக்கின்றன.

அதற்குப் பிறகு ஆர். எல். ஈ. ஜி. பி., என். ஆர். ஈ. பி மற்றும் மீனவர்களின் குடியிருப்புகள், நெசவாளர்கள் குடியிருப்புகள் போன்ற 12, 13 பிரிவுகளின் கீழ் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆண்டுக்கு 10 இலட்சம் வீடுகள் என்றால் 300 கோடி ரூபாய் ஆண்டுக்குச் செலவாகும். சமீபத்தில் இந்த திட்டத்தை மத்திய அரசு கூட அறிவித்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபை இந்த ஆண்டை உலக அளவிலே வீடு கட்டுகிற ஆண்டாக அறிவித்திருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு ஐக்கிய நாட்டுச் சபை அறிவிப்பதற்கு முன்னாலேயே தொலைநோக்கு பார்வை கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள் சென்ற ஆண்டே இந்த திட்டத்தை, பெருமளவில் வீடு கட்டும் திட்டத்தை அறிவித்தார்கள். பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் இந்த ஆண்டு இதற்காக தனியாக தேசிய அளவில் 100 கோடி ரூபாய் அளவில் வங்கி ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்திருப்பது வரவேற்கத்தக்க செய்தியாகும். இந்த வங்கி மாநில அளவில் துவக்கப்படும்போது அந்த வங்கியிலேயிருந்து அதிகமான கடன் வசதி பெற்று இந்த வீடு கட்டும் திட்டத்தை இன்னும் அதிகமாக, சிறப்பாகச் செய்ய முடியும் என்று தமிழக அரசு நம்புகிறது.

அதைப் போல ஆர். எல். ஈ. ஜி. பி., என். ஆர். ஈ. பி., போன்ற திட்டங்களுக்கு ஏற்கெனவே மத்திய அரசிலிருந்து பணம் வருகிறது. இந்த திட்டங்களின் வாயிலாக 70 கோடி ரூபாய் அளவிற்கு பணம் வருகிறது. அந்தப் பணத்தை நேரிடையாக வீடு கட்ட ஈடுபடுத்தாமல் அதை மூலதனமாகக் கொண்டு, தேசிய வங்கிகளிலிருந்தும், மற்ற பல நிதி நிறுவனங்களிடமிருந்தும் 210 கோடி ரூபாய் அளவிற்கு கடன் பெற்று அவற்றின் வாயிலாக கூட்டுறவுச் சங்கங்களை ஒவ்வொரு தாலுக்கா அளவிலும், ஒன்றிய அளவிலும் ஏற்படுத்தி தமிழகம் முழுவதும் வீடு கட்டும் பணியைச் சிறப்பாகச் செய்ய முடியும். இப்படி பல்வேறு துறைகளின் கீழே இப்பணி நடைபெற்று வருகிறது. ஆண்டுக்கு பத்து இலட்சம் வீடு கட்டும் திட்டத்தை நிச்சயமாக இந்த அரசு செயல்படுத்த முடியும். செய்யக்கூடியதைச் சொல்பவர் புரட்சித் தலைவர். சொன்னால் அதைச் செய்து காட்டுபவர் புரட்சித் தலைவர். இந்த 30 இலட்சம் வீடுகளும் கட்டி முடிக்கப்படும். சொன்ன காலத்திலே இல்லையென்றாலும், மூன்றாண்டுகள் என்றால், மூன்றரை ஆண்டுகளிலே செய்து முடித்தால் தமிழக மக்கள் அதற்காக கோபித்துக்கொள்ளப் போவதில்லை. ஆண்டுக்கு பத்து இலட்சம் என்று சொன்னார்களே, குறைவாக இருக்கிறதே என்று கணக்குப் போட்டுப் பார்த்து மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்கள் வருத்தப்பட்டார்கள். 9,99,999 வீடுகள் கட்டிமுடித்து ஒரு வீடு குறைவாக



1987 மே 7] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தையும்,
ஜனதா கட்சியையும் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் உரை
யாற்றும்போது, "நீங்கள் சொன்னதை செய்யவில்லை, ஒரு
வீடு பாக்கியிருக்கிறது, பத்து இலட்சம் வீடுகள் கட்டவில்லை"
என்று சொல்லி வருத்தப்படுவார்கள் என்பது எனக்குத் தெரியும்.
இவர்களைத் திருப்தி செய்வது மட்டும் அரசாங்கத்தின் நோக்கம்
அல்ல. பத்து இலட்சம் வீடுகள் கட்டும் திட்டம் நிச்சயமாக
நிறைவேறும் என்று தமிழக மக்கள் நம்புகிறார்கள். எனவே அந்த
நம்பிக்கை வீண் போகாத அளவிலே ஏற்கெனவே அறிவித்தவாறு
வீடுகளைக் கட்டித் தருவோம். அதற்கான பல்வேறு முயற்சிகள்
மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்
பினர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, இன்னும்
ஏராளமான விவரங்கள் இருந்தாலும், நேரம் கருதி, ஒரு மணிக்கு
கில்லட்டின் செய்ய வேண்டியிருப்பதால், சட்டமன்றம் பற்றிய
மானியக் கோரிக்கை விவாதத்திற்கு இருப்பதால் இந்த அளவோடு
நிறுத்திக்கொண்டு உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு
நன்றி தெரிவித்து, அவர்கள் சொன்ன மற்ற கருத்துக்களுக்கு
பதில் சொல்லாமல் இருந்தாலும், அவைகளை கவனத்திலே
எடுத்துக்கொண்டு அரசு பரிசீலிக்கும், வேண்டிய காரியங்களை
நிச்சயமாக புரட்சித் தலைவர் அரசு செய்யும் என்று தெரிவித்து,
கொடுக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்
கொண்டு, மானிய கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்ற மானியக்
கோரிக்கையின் விவாதம் இருப்பதால் கிளாரிபிகேஷன் வேண்
டாம். விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 26— கைத்தறியும் நெசவுத் தொழிலும்

திருவாளர்கள் எ. எஸ். ஏ. ஆறுமுகம், கோ. வீரய்யன்,
பி. கே. எம். முத்துராமலிங்கம், கே. சுப்பராயன், சி. பழனிமுத்து
ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதி
யுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள
கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத்
தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 19,58,69,000-க்கு
மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று
நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்
பெற்றது.

கோரிக்கை எண் 33—வீட்டு வசதி.

திருவாளர்கள் எ. எஸ். ஏ. ஆறுமுகம், சா. ஜெயச்சந்திரன்,
கோ. வீரய்யன், கே. சுப்பராயன், பி.கே. எம். முத்துராம
லிங்கம், எஸ். ரெத்தினராஜ் ஆகியவர்களுடைய வெட்டுத் தீ

மர்னங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' மானியக் கோரிக்கை எண் 33—வீட்டுவசதி என்ற தலைப் பின்கீழ் ரூபாய் 30,27,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

[முற்பகல் 11—30]

கோரிக்கை எண் 34 நகர்ப் பகுதி வளர்ச்சி

திருவாளர்கள் எ. எஸ். ஏ. ஆறுமுகம், பி.கே.எம். முத்து ராமலிங்கம், சோ. மா. இராமச்சந்திரன், கே. சுப்பராயன், எஸ். பி. மணவாளன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண் 34 நகர்ப் பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ரூ. 34, 20,78,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஈ) கோரிக்கை எண் 7 — மாநிலச் சட்டமன்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,69,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் .''

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, மாநில சட்டமன்றக் கூட்டம் நடைபெறும் நாட்கள் ஆண்டுக்கு ஆண்டு குறைந்துகொண்டே வருவதால் மக்களின் நலன்குறித்து விவாதிப்பதற்குரிய வாய்ப்பு குறைவதால் அது குற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,69,47,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''



திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, தங்கள் பணியினைச் செய்வதற்கு உதவும்படி, மோட்டார் வாகன கடன் (ஒரு பகுதி மானியமாகவும், ஒரு பகுதி திருப்பிச் செலுத்தும் கடனாகவும்) வழங்குவது என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,69,47,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எ, எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிருபர்களுக்கு நாட்டுடைமையாக்கப்பட்ட கழக பேருந்தில் செல்ல இலவச அனுமதிச் சீட்டு வழங்கி யுள்ளது போல் சட்டமன்றக் கட்சி அலுவலக செயலாளர்களுக்கு இலவசப் பேருந்து அனுமதிச் சீட்டு வழங்குவது என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,69,47,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. சோ. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிருபர்களுக்கு நாட்டுடைமையாக்கப்பட்ட கழகப் பேருந்தில் செல்ல இலவச அனுமதி சீட்டு வழங்கி யுள்ளது போல் சட்டமன்ற கட்சி அலுவலகச் செயலாளர்களுக்கு இலவச அனுமதி சீட்டு வழங்குவது என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,69,47,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(உ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப் பின்கீழ் ரூ. 70,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 70,86,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

[1987 மே 7

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, வாக்காளர் பட்டியல் தயாரிக்கும்போதே, போலி வாக்காளர்கள் பெயர்களை தவிர்ப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 70,86,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வாக்காளர்களுக்கு அடையாளச் சீட்டு அளிப்பது என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 70,86,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ."

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, வாக்காளர் பட்டியல் தயாரிப்பில் உள்ள குறைகளை நீக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 70,86,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

(ஊ) கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,12,27,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, ஓய்வு ஊதியம் பெறுபவர்கள் பழைய, புதிய ஓய்வு ஊதிய விகிதங்களிலுள்ள பாகுபாட்டை நீக்கி சமமாக்குவது என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மா னத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 42— ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,12,27,37,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



1987 மே 7]

திரு. எம். ரெத்தினராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் உள்ள மொழிப் போர் தியாகிகளுக்கு வழங்கி வந்த பென்ஷன் நிறுத்தப்பட்டதை மீண்டும் அவர்களுக்கு வழங்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறு கின்ற ரூ. 1,12,27,37,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்கு நிபந்தனையில்லா மல் 58 வயது ஆனவுடன் மாதம் 50 ரூபாய் ஓய்வு ஊதியம் கொடுப்பதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறு கின்ற ரூ. 1,12,27,37,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் லற்வரவர்களே, ஓய்வூதியம் பெறுவதில் உள்ள தாமதங்கள் றை விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெற கின்ற ரூ. 1,12,27,37,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(எ) கோரிக்கை எண் 43—பல்வகை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,18,89,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலை ரவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,18,89,17,000 இல் ரூ. 10 குறைக்க வேண்டும்."

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,18,89,17,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

(ஏ) கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச் செலவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச்செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,50,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச்செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 12,50,84,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

டாக்டர் ஜ. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச்செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 12,50,84,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள கல்வெட்டுகளையும், பழைய கோட்டைகளையும் (புதை பொருள், ஏட்டுச்சுவடி) ஆராய்ச்சி மையம், குமரி மாவட்டத் தில் வ க் வேண்டிய அவசியம்பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச் செலவு ன்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 12,50,84,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஐ) கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:



''மானியக் கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,79,61,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,79,61,94,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

டாக்டர் ஐ. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில் ஜெயங்கொண்டம், தா. பழூர் ஒன்றியங்களில் முறையாக ஐ.ஆர்.டி.பி. கடனுதவி களை வழங்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,79,61,94,000இல் ரூ. 100 குறைக்கவேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை களும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

பேரவையின் விதிகளின்படி இன்று விவாதமும் மாண்பு அமைச்சர் அவர்களின் பதில் உரையும் ஒரு மணிக்கு முடிந் மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்புக்கு எடுத்துக் கொள்ளப்ப வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள்* மாண்புமிகு உறுப்பினர்கள் முன்னால் வைக்கப்பட்டிருக்கின்றன.* மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துரைக்குப் பிறகு இறுதி உரையை ஆற்றுகிறேன் என்று கூறி அமைகிறேன்.

*திரு. எஸ். பி. மச்சைவாளன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, சட்டமன்றத் தேர்தல்கள், ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் மற்றும் மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற மானியக் கோரிக்கைகளின் மீது நான் சார்ந்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார் பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

தமிழகத்தினுடைய ஐந்து கோடி மக்களின் எதிர்காலத்தை உருவாக்குவதற்கு, அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வ தற்குத் தேவையான சட்டங்களை இயற்றக்கூடிய ஜனநாயக அமைப்பாகச் சட்டமன்றம் திகழ்கிறது.

* 333 முதல் 360 வரையுள்ள பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

தமிழக சட்டமன்றத்திற்கு வசதியான, விசாலமான புதிய கட்டடம் அமைப்பதாக பல ஆண்டுகளாகச் சொல்லி வருகிறீர் கள். புதிய கட்டடங்கள் கட்டப்படுமா அல்லது கட்டக்கூடிய சூழ்நிலை இல்லையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர் கள் தெளிவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப் படி புதிதாகக் கட்டவில்லை என்றால், இப்போது இருக்கின்ற சட்டமன்றத்திற்கு இன்னும் வசதிகள் அதிகமாக செய்து இந்த சட்டமன்றத்தில் குளிர்சாதன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மானியக் கோரிக்கைகள் மீது கொடுக்கப்படுகின்ற வெட்டுத் தீர்மானங்களுக்கு அந்தந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் அந் தந்த மானிய வெட்டுத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர்களுக்கு நேரடியாக பதில் கொடுக்க வேண்டும் என்றும், அந்த வெட்டுத் தீர்மானங்கள் சட்டசபை நடவடிக்கைக் குறிப்பிலே இடம் பெற வேண்டும்—அதாவது அவர்கள் வெளியிடுகின்ற புத்தகத்திலே அந்த வெட்டுத் தீர்மானங்கள் அச்சடிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல சட்டமன்ற உறுப்பினர் கள் மன்றத்திலே பேசிய பின் தட்டெழுத்துப் பிரதிகள் கொடுக்க வேண்டும். குறைந்த பட்சம் 10 பிரதிகள் தர வகை செய்யப் படவேண்டும். அந்தப் பிரதிகளைக் கொடுத்து உதவ வேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்றத்தில் ஒரு பொருளைப்பற்றி தகவல் வேண்டுமென் றால், சட்டமன்றத்தில் ஒரு பொருளைப் பற்றிப் பேச வேண்டு மென்றால் நூலகத்திலே அதற்கான வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாராளுமன்றத்தில் ஒரு பொருளைப் பற்றிக் கேட்டால் அத்தனை தகவல்களையும் ஒரு சேர நூலகத்திலே எடுத்துக் கொடுக்கிறார்கள். அந்த வகையான வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். அதே போல நூலகத்திலே அதிகமான தமிழ்ப்புத்த கங்களை வாங்கி வைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதுபோலவே நூலகத்திலே சில முக் கிய குறிப்புகளை நகல் எடுக்க வேண்டுமென்றால் அந்த நூலகத் திலேயே ஒரு ஜெராக்ஸ் மெஷின் வைக்க வேண்டும், அது உறுப் பினர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதால் கேட்டுக்கொள் கிறேன். இப்போது இருக்கின்ற நிலை செயலாளர் அவர்களிடம் ஒரு ஜெராக்ஸ் மெஷின் இருக்கிறது. ஒவ்வொரு முறையும் நேரடி யாக உறுப்பினர்கள் அவர்களைக் கண்டு அந்த ஜெராக்ஸ் பிரதி எடுக்க வேண்டும் என்று அனுமதி கேட்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆனால், அங்கு இருக்கின்ற ஜெராக்ஸ் மெஷின் கூட பழுதடைந்து வேலை செய்யாமல் இருக்கின்றது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்த படியாக இருக்கின்ற தட்டச்சுப் பொறிகள் எல்லாம் பழையனவாக இருக்கின்றன. தட்டச்சுப் பொறிகளை புதிதாக வாங்கி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடந்துகொண்டிருக்கையில் மின்தடை ஏற்பட்டு சட்ட மன்ற நடவடிக்கைகளை சிறிது நேரம் நிறுத்தி வைக்கின்ற நிலைமை ஏற்பட்டது. சட்டமன்றத்திற்கு என்று தனியாக ஒரு ஜெனரேட்டர் பொருத்தப்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அது தவிர சட்டமன்றம் வருடத்தில் குறைந்தபட்சம் 150 நாட் களாவது கூட்டப்பட வேண்டும். ஒரு அரசு சிறந்த முறையில் செயல்பட வேண்டுமானால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் யோச னைகளைச் சொல்ல, அபிப்பிராயங்களைச் சொல்ல, அதிகமாகப் பேச வாய்ப்பு அளிக்க வேண்டும். அப்படியானால் தான் ஓர் அரசு சிறப்பாக செயல்பட முடியும். ஆகவே, சட்ட மன்றம் வருடத்தில் 150 நாட்களாவது அவசியம் கூட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–40)

அடுத்து, சட்டமன்றம் கூடாத நாட்களில் கூட உறுப்பினர் களின் வசதிக்காக இங்கே ஒரு தட்டெழுத்து உதவியாளர் இருந் தால் சட்டமன்ற உறுப்பினர்களின் கடிதங்களை டைப் பண்ண வசதியாக இருக்கும். அதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்றச் செயலகத்திலும், உறுப்பினர் விடுதி களிலும் 10, 15 ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் தற்காலிக ஊழியர்கள் அனைவரையும் நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் தலைமைச் செயலகத்தை எடுத்துக் கொண்டால் 5 வருடம் தற்காலிகமாகப் பணியாற்றி னால் உடனே நிரந்தரப்படுத்தப்படுகிறார்கள். அந்த வகையில் சட்டமன்றத்தில் பணியாற்றுகின்ற தற்காலிக ஊழியர்களையும் நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்ற நூலகத்தில் குறைவான ஊழியர்கள் இருக்கிறார்கள். ஆகவே, நூலகத்தில் ஊழியர் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்ற கட்சி அலுவலக மேலாளர்களுக்கு எல்லாம் பஸ் பாஸ் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, சட்டமன்றக் கட்டடத்தின் மூன்றாவது மாடியிலே மேற்கூரை சிமெண்ட் ஷீட்டால் அமைக்கப்பட்டிருக்கிறது. 7, 8 ஆண்டுகளாக அந்த சிமெண்ட் ஷீட்டுகளை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சிமெண்ட் ஷீட்டிற்குப்பதிலாக கான்கிரீட் தளம் அமைக்க வேண் டும் அல்லது அந்த இடத்தையாவது வேறு இடத்திற்கு மாற்றிட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த நல்ல நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்
உணவு விடுதியைப்பற்றி நான் சொல்லியாக வேண்டும். அங்கே
கொடுக்கப்படுகின்ற உணவும், கவனிக்கப்படுகின்ற கவனிப்பு
முறையும் இருக்கிறதே, அதுமாதிரி இந்தியாவில் இருக்கிற எந்த
சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலும் இருக்காது. அவ்வளவு
அங்கே உறுப்பினர்களுக்கு வரவேற்பும் சிறப்பும் இருக்கிறது
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அந்த உணவு
விடுதியை இன்னும் அதிகமாகப் பாராட்ட வேண்டுமென்றால்,
மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டமன்றப்
பேரவைத் தலைவர் அவர்களும் ஒருமுறை அங்கே நேரில் சென்று
பார்த்தால் போதும். இதை நான் ஏற்றத் தாழ்வுக்காக சொல்ல
வில்லை. உண்மையிலேயே அங்கே தரப்படுகின்ற உணவு மிகவும்
மோசமாக இருக்கிறது. எங்கள் விதியின் காரணமாகவோ என்ன
வோ, என்ன தண்டனையோ என்று சொல்லும் அளவுக்கு அங்கே
உணவு வழங்கப்படுகிறது. நாங்கள் வேறு இடங்களிலே உணவு
சாப்பிடச் செல்வதும் இல்லை. ஆகவே, அந்த உணவு விடுதியை
உடனடியாக மாற்றி செம்மையாக அதனைச் செயல்பட வைக்க
ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அங்கே தண்ணீர் பஞ்சம் இருக்கிறது. அங்கே
உறுப்பினர்களுக்கு 24 மணி நேரமும், கேட்ட நேரத்திலே,
வேண்டிய தண்ணீர் வசதி கிடைக்கக் கூடிய வகையிலே வழிவகை
செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது
போல அங்கே வரவேற்பு அறை ஒன்று அமைக்கப்பட வேண்டும்.
மேலும் நிரந்தரமாக ரெயில் டிக்கெட் ரிசர்வேசன் செய்
வதற்கான கவுண்டரும், அஞ்சல் நிலையமும் அமைவதற்குரிய
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
அதேநேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான
சில வசதிகளைப் பற்றியும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நான் சொல்லுகின்றவை
களை கனிவோடு கேட்டு, கோரிக்கைகளை ஏற்று, முடிவான
பதிலை இங்கேயே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கி
றேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற தொலை
பேசிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலாகட்டும்
அல்லது தொகுதியிலுள்ள தொலைபேசிக்காகட்டும் உள்ளூர்
கால்கள் அனைத்தையும் இலவசமாக அரசு ஏற்று அதனை
நடைமுறைப்படுத்த வேண்டும். அதுபோல வாகனங்கள் வாங்
குவதற்கும், வீடுகள் கட்டுவதற்கும் அரசு வட்டியில்லாக் கடன்
வசதி செய்து தர வேண்டும். பஞ்சாப், அரியானா போன்ற
மாநிலங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த வகையில்
2 லட்சம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதுபோல இங்கேயும்
சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வட்டியில்லாக் கடன் கொடுக்க
ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சென்னையைப்
பொறுத்தவரையில் வீடு கட்ட பிளாட்டுகளை அரசு ஒதுக்கித்தர
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல பயணப்



படியை பொறுத்தமட்டில் 4,600 ரூபாய் கொடுக்கிறார்கள்.
இது போதுமானதா என்று நான் கேட்க விரும்புகிறேன். இது
சம்பந்தமாக குறிப்பாக ஒன்றை இங்கே சொல்ல ஆசைப்படு
கிறேன். இன்றைக்கு தென் மாவட்டங்களில் இருந்து வருகிற
சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னைக்கு வர வேண்டுமென்றால்
முதல் வகுப்பு ரெயில் சார்ஜ் ரூபாய் 450 ஆகிறது.

இதில் பத்துதடவை தான் அவர் சென்னைக்கு வந்துசேர
முடியும். உ. பி. மாநிலத்திலே அவர்கள் வருஷத்திற்கு 25,000
ரூபாய்க்கு இரயில்வே கூப்பன்கள் கொடுக்கிறார்கள். இதை
மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் சிந்திக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, லெட்டர் பேட்களெல்லாம் கொடுப்பது
போதுமானதாக இல்லை. அந்த லெட்டர்பேட்கள் அதிக
மாக, பெரிய அளவிலே கொடுக்கப்பட வேண்டும். அதிலே
பெயர்கள் அச்சிடப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில்
கேட்டுக்கொள்கிறேன்.

டி.ஏ.,—தினப்படி உ. பி. அசெம்பிளியிலே ரூபாய் 100
கொடுக்கப்படுகிறது. அந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி
யிலே ரூம் வாடகையே வாங்குவதில்லை. அது தவிர
உத்தரப் பிரதேச மாநிலத்திலே சம்பளமாக 2,500
ரூபாய் கொடுக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நிதி
அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவசமாக பஸ்
களிலே பயணம் செய்கின்ற பஸ் பாஸ்களை வழங்க வேண்டும்.
ஓய்வூதியத்தை ரூ. 500 ஆகக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்றும்,
அவர்களுக்கு வைத்தியச் செலவுக்காக தற்போது ரூ. 500
கொடுப்பதை ரூ.2,000 ஆக உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்றும்
கேட்டுக்கொள்கிறேன். 1947 ஆம் வருஷம் முதல் 52 ஆம் ஆண்டு
வரை எம்.எல்.ஏ.-க்களாகப் பணியாற்றியவர்களுக்கு 80 ஆம்
ஆண்டு முதலே ஓய்வூதியம் கொடுக்கப்பட வேண்டும் என்று
இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

யூனியனிலே எம்.எல்.ஏ.-க்கள் ஜீப்புகளை எடுத்துக் கொள்ள
லாம், அவர்களுக்கு ஐம்பது லிட்டர் பெட்ரோல் வசதியிருக்கிறது
என்று சொல்கிறார்கள். ஆனால் பெரும்பாலான ஊராட்சி
ஒன்றியங்களிலே கேட்டபொழுது, ஜீப்புகள் கிடைப்பதில்லை.
பழுதடைந்திருக்கிறது என்று சொல்கிறார்கள்; அல்லது கலெக்
டருக்கு டெபுடேஷனிலே போயிருக்கிறது என்று சொல்கிறார்கள்
அல்லது ஊராட்சி ஒன்றியத் தலைவர் வெளியே எடுத்துச் சென்றி
ருக்கிறார் என்று சொல்கிறார்கள். பலமுறை கேட்டும்
ஒரு தரம்கூட கொடுப்பதில்லை. இந்த ஐம்பது லிட்டருக்குப்
பதிலாக அதற்கான பெட்ரோல் பணத்தைஎங்களுக்கு வழங்க
வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். பி. மணவாளன்] [1987 மே 7

அரசுத் துறையிலேயிருந்து, பழைய கார்களை புக்
வேல்யூவிற்கு உறுப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டும்.
மத்திய அரசாங்கத்திலே மிலிடெரி ஜீப்புகளையெல்லாம்
புக் வேல்யூவிற்குக் கொடுக்கிறார்களே, அதேபோல இங்கே
யிருக்கின்ற பழுதடைந்த பழைய கார்களை புக் வேல்யூவிற்கு
உறுப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில்
கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
காட்டுமன்னார்கோவில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
ஜெயச்சந்திரன் அவர்கள் தொகுதியிலே மக்கள் குறை தீர்ப்
பதற்கு காட்டுமன்னார்கோவில் ஒன்றிய ஆணையர் சோம
சுந்தரம் அவர்களை ஏற்கனவே வரச் சொல்லியும், கடிதம்
எழுதியும் அவர் மறுத்து விட்டார். இன்று அவர் எம்.எல்.ஏ.
அவர்கள் கேட்கவில்லை என்று தவறான தகவல்களைத்
தந்து இருக்கின்றார்கள். அந்த ஊராட்சி ஒன்றிய ஆணையர்
மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில்
கேட்டுக் கொள்கிறேன்.

ஒய்வூதியத்தைப்பற்றி ஒருசில வார்த்தைகளைச் சொல்ல
விரும்புகிறேன். ஒய்வூதியத்தைக் கொடுப்பதிலும், புதிதாக
அனுமதி வழங்குவதிலும் மிகக் காலதாமதமாகிறது. இதைத்
தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தலைப்பற்றி ஒருசில கருத்துக்களை மட்டும் சொல்ல
விரும்புகிறேன். தேர்தலிலே வாக்களிக்கின்ற வாக்காளர்
களுக்கு அடையாள அட்டையைக் கொடுங்கள்; அதே நேரத்
தில் தேர்தல் பந்தோபஸ்துகளை இன்னும் அதிகமாகச் செய்து
தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினுடைய வேட்பாளர்
களுக்குத் தேர்தல் செலவில் ஒரு பகுதியைத் தேர்தல் கமி
ஷனே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு,
இந்த நேரத்திலே இந்த வாய்ப்பை அளித்ததற்காக என்னு
டைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, மாநிலச் சட்டமன்றம் குறித்த மானியக்
கோரிக்கைமீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கி
றேன் என்று சொல்வதைவிட, இந்த மன்றத்திலேயிருக்கின்ற
பெரும்பான்மையான உறுப்பினர்களுடைய ஒட்டுமொத்தக்
கருத்துக்களை நான் எடுத்து வைக்கிறேன் என்று சொல்லிக்
கொள்வது மிகப் பொருத்தமாக இருக்கும் என்று கருதி, ஒரு
சிலவற்றை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய
கவனத்திற்கும், நிதியமைச்சரவர்களுடைய கவனத்திற்கும்
கொண்டு வருவது என்னுடைய கடமை என்று நான் கருது
கிறேன்.



1987 மே 7] [திரு. கே. குப்புசாமி]

ஜனநாயகத்தில் மக்களுக்கு நம்பிக்கை அழுத்தமாக,
ஆழமாக ஏற்பட வேண்டுமாயின், சமுதாயத்தின் பிரதிநிதிகளான
சட்டமன்ற உறுப்பினர்களின் பணியும் அதற்கேற்ப அமைய
வேண்டுமென்பதோடு, அரசினுடைய பங்கும், செய்தித் தாள்
களினுடைய பங்கும் அதிலே கணிசமாக அமைந்தாக வேண்டு
மென்பதை நான் வற்புறுத்திச் சொல்ல வேண்டிய அவசிய
மில்லை.

குறிப்பாக, பத்திரிகைத் துறையைச் சேர்ந்த நண்பர்கள்
இங்கே நிறைய இருக்கிறார்கள். ஒன்றை அவர்களுடைய கவனத்
திற்கு நான் கொண்டு வரும்பொழுது அதை அவர்கள் தவறாகக்
கருத மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். சட்டமன்ற
உறுப்பினர்களினுடைய பணியைப் பற்றியும், மாண்புமிகு
அமைச்சர்களுடைய பணிகளைப் பற்றியும் பத்திரிகையிலே நல்ல
முறையிலே விமர்சனம் செய்வது அவர்களுடைய அடிப்படை
உரிமை. அதை நாங்கள் அனைவருமே வரவேற்கிறோம். ஆனால்
அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, தனிப்பட்ட விருப்பு
வெறுப்புகளின் காரணமாக, எந்தவித ஆதாரங்களும் இல்லாமல்,
உண்மைக்கு மாறான செய்திகளைப் பத்திரிகைகளிலே எழுதும்
பொழுது அதைப் படிக்கின்ற சாதாரண மக்களெல்லாம்
ஜனநாயகத்தின்மீது நம்பிக்கையிழக்க வேண்டிய ஒரு சூழ்நிலை
ஏற்படும் என்பதல், எதிர்காலத்திலே, நம்முடைய சட்ட
மன்றத்திலே பணியாற்றுகின்ற மாண்புமிகு அமைச்சர்களுக்கும்,
சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பத்திரிகைத் துறைக்கும் ஒரு
இணக்கமான, ஒரு சுமுகமான உறவு ஏற்படுகின்ற வகையில் அவர்
களின் செயல்பாடுகள் அமைய வேண்டுமென்று நான் இந்த
நேரத்தில் அன்போடு அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

காரணம் சமுதாயத்தில் பத்திரிக்கைத் துறையின் பங்கு
மிகக் கணிசமானது என்பது அனைவருக்கும் தெரியும். அந்த
வகையில் நீங்கள் ஆற்றுகிற பணியும் நாங்கள் ஆற்றுகிற பணி
யும் ஜனநாயகம் வேரூன்றப்பயன்பட வேண்டுமே தவிர வேறு
வகையில் திசை திருப்பி விடக் கூடிய வகையில் வளர்ந்து விடக்
கூடாது என்பதால் செய்திகளை வெளியிடும்போதும் விமர்சனங்
களை எழுதும்போதும் தார்மீக அடிப்படையில் நிதர்சனமான
உண்மைகளை, யதார்த்த நிலைமையில் உங்களுடைய கருத்துக்
களை எடுத்து வைத்தால் நிச்சயமாக நாங்கள் வரவேற்போம்
என்பதை உங்களுடைய அன்பான கவனத்திற்குக் கொண்டு
வருவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களின் பணிகள் சிறக்க சில அடிப்
படை வசதிகளைச் செய்து கொடுக்க அரசு கடமைப்பட்டிருக்
கிறது என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு
வர விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய சட்டமன்ற
உறுப்பினர் இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசு ஆற்ற
வேண்டிய சில அடிப்படையான கடமைகளைப் பற்றி, ஒரு
சிலவற்றைச் சொன்னார்கள். அதோடு சேர்த்து நானும் சில

வற்றை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

பாராளுமன்றத்தில் ''கன்சல்டேடிவ் கமிட்டி' என்று ஒவ்வொரு அமைச்சகத்திலும் கலந்துரையாடுவதற்கு என்று ஒரு கமிட்டி இருக்கிறது. அது நல்ல முறையில் பயன்படுகின்ற வகையில் பணியாற்றுகிறது; அதனால் சமுதாயத்திற்கு நல்ல பயன் விளைகிறது என்பதைக் கண்டு வருகிறோம். இங்கே கூட நீர்ப்பாசனத் துறையில் சில ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு 'கன்சல்டேடிவ் கமிட்டி' இருந்து நல்ல முறையில் பணியாற்றி வந்தது ; பின்னால் அது கலைக்கப்பட்டு விட்டது. அப்படி ஒவ்வொரு அமைச்சகத்திற்கும் ஒரு கன்சல்டேடிவ் கமிட்டி இருந்தால் சட்டமன்றத்தில் எடுத்து வைக்கின்ற கருத்துக்கள் சிறந்தவையாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அந்த, அந்தத் துறையில் வருகிற திட்டங்கள், கொண்டு வருகிற கொள்கைகள், கருத்துக்களை எல்லாம் அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொல்லுகிற வாய்ப்பு ஏற்படும். சட்டமன்ற உறுப்பினர்கள் சமுதாயத்திற்கு அவை பற்றி விளக்குவதற்கு நல்ல வாய்ப்புக்கிடைக்கும் என்பதால் பாராளுமன்றத்தில் கடைப்பிடிப்பது போன்று ஒவ்வொரு அமைச்சகத்திற்கும் தனித் தனியாக கன்சல்டேடிவ் கமிட்டி அமைக்கிற ஒரு குறிப்பை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போன்று இங்கே இருக்கிற நூலகத்தை நவீனப் படுத்த வேண்டியது மிக அவசியமான ஒன்று. வட மாநிலங் களிலே பல நூலகங்களில் கம்ப்யூட்டர் இருக்கிறது. நம்முடைய நூலகம் ஓரளவு நல்ல வசதியோடு அமைந்திருந்தாலும் இங்கே நவீன முறையில் வசதிகள் அமையவில்லை. இங்கே கம்ப் யூட்டர் ஒன்று இருந்தால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிக அளவில் பயன் தரக் கூடும் என்ற காரணத்தால் நம்முடைய நூலகத்திலே ஒரு கம்ப்யூட்டர் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போன்று தமிழ்நாட்டில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட வாக்காளர்களைக் கொண்ட தொகுதிகள் ஏராளமாக இருக்கின்றன. 234 தொகுதிகளில் கிட்டத்தட்ட முக்கால் பங்கு தொகுதிகள் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வாக்காளர் களைக் கொண்ட தொகுதிகளாக இருக்கின்றன. சில மாநிலங் களை எடுத்துக் கொண்டால், வட மாநிலங்களை எடுத்துக் கொண்டால் ஒரு இலட்சம் வாக்காளர்கள் கூட அல்ல; 2,000 வாக்காளர்களைக் கொண்ட சட்டமன்றத் தொகுதிகள் கூட இருக்கின்றன. ஆனால் நம்முடைய மாநிலத்திலே இவ்வளவு அதிகமான வாக்காளர்களைக் கொண்ட பெரிய தொகுதிகளாக இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர் களுடைய தொகுதி கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் வாக்காளர் களைக் கொண்டதாக இருக்கிறது ; அங்கே மூன்று ஒன்றியங்கள் இருக்கின்றன. ஆக, ஒரு சட்டமன்ற உறுப்பினர் இரண்டு இலட்சம் வாக்காளர்களைச் சந்தித்து, மூன்று ஒன்றியங்களி



லுள்ள மக்களைச் சந்தித்து, அவர்களுடைய குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்வது என்பது இயலாத காரியமாக இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட வாக்காளர்களைக் கொண்டிருக்கிற தொகுதிகளை எல்லாம் பிரித்து, ஒரு தொகுதியிலே அதிக பட்சம் ஒரு இலட்சம் வாக்காளர்கள் இருக்கிற அளவுக்கு தொகுதிகளைப்பிரித்து அமைக்க மைய அரசு 'டி லிமிடேஷன் கமிட்டி'யைப்போட நம்முடைய தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு நம்முடைய தொகுதிகளின் எண்ணிக்கையையும் கூட்டவேண்டும். சில மாநிலங்களில் தொகுதிகளை அதிகமாக்கியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் 235 தொகுதிகள் இருந்தன ; இப்போது அவை 234 ஆகக் குறைந்திருக்கின்றன. ஒரு இலட்சம் வாக்காளர்களுக்கு மேற்படாத தொகுதிகளாகப் பிரித்து அமைத்தால் தொகுதிகளின் எண்ணிக்கை கூடும்; சட்டமன்ற உறுப்பினர்களின் பணியும் சிறப்பாக அமையும் என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இரயில்வே ரிசர்வேஷன் பற்றி ஒன்று சொன்னார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் பாராளுமன்றக் கட்டிடத்திலேயே இரயில்வே ரிசர்வேஷன் செய்வதற்கு வசதி இருக்கிறது. ஆனால் இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாளர்கள் கூட இல்லை. நாங்களே ஸ்டேஷனுக்குச் சென்று க்யூவிலே நின்று ரிசர்வ் செய்ய வேண்டி இருக்கிறது. அதன் பின்னர் எமர்ஜென்சி கோட்டாவிற்காக அப்ளிகேஷன் கொடுக்க வேண்டி இருக்கிறது. அதன் பின்னர் சென்று டிக்கெட் வாங்கி கன்பார்ம் செய்ய வேண்டி இருக்கிறது. இத்தனையும் நாங்களே செய்ய வேண்டி இருக்கிறது. சட்டமன்றக் கூட்டங்கள் நடைபெறுகிறபோது கூட நாங்களே இரயில்வே ஸ்டேஷனுக்கு அலைய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே பாராளுமன்றத்தில் இருப்பது போல் இங்கே சட்டமன்றப் பேரவைச் செயலகத்திலோ அல்லது சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலோ ஒரு இரயில்வே ரிசர்வேஷன் கவுண்டரைத் திறப்போமேயானால் சட்டமன்ற உறுப்பினர்களின் பணி சிறப்பாக அமைவதற்கு சௌகரியமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இது பற்றி ஏற்கெனவே நாவலர் அவர்களுடைய கவனத்திற்கும், முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும் நாங்கள் கொண்டு சென்றிருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதாக நேற்றே சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நிச்சயமாக பலன் கிடைக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இப்போது 7 நாட்களுக்கு ஒரு முறை வெளியூர்களுக்குச் சென்று வர அனுமதி இருக்கிறது. 7 நாட்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் வந்திருந்தால், வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்டிருந்தால், இரண்டு, மூன்று நாட்கள் ஊர்களுக்குச் சென்று

வர அனுமதி இருக்கிறது. இப்போது சட்டமன்றத்திலுள்ள பி பணியே வாரத்தில் 6 நாட்கள்தான் நடக்கிறது. எனவே 6 நாட்களுக்கு ஒரு முறை ஊருக்குச் சென்று வருகின்ற வகையில் இதனை மாற்றியமைக்க வேண்டுமென்று சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து ஒரு உதவியாளர் தேவை என்று நீண்ட நெடிய நாட்களாக நாங்கள் கோரிக்கை வைத்து வருகிறோம். பல மாநிலங்களில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாளர் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 2 இலட்சம் வாக்காளர்களையும், 3 ஒன்றியங்களையும் கொண்ட தொகுதியில் சட்டமன்ற உறுப்பினருக்கு ஒரு உதவியாளர் கூட இல்லாத நிலைமையில் எப்படி சட்டமன்ற உறுப்பினர்களின் பணி சிறப்பாக அமையும் என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். தொகுதிகளுக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் செல்லும்போது அங்கே நாங்கள் பெறுகிற மனுக்களைப் பரிசீலித்து அதிகாரிகளோடு கலந்து பேசி பின்னர் அரசுக்கு அனுப்ப வேண்டிய கடிதங்களை எல்லாம் அனுப்புவதற்குரிய வகையில் குறைந்த பட்சம் ஒரு உதவியாளராவது இருக்க வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்துதான் மற்ற மாநிலங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக உதவியாளர்கள் நியமித்திருக்கிறார்கள். அதாவது டெபுடேஷனில் நியமித்திருக்கிறார்கள்.

Similarly an Assistant from a Panchayat Union may be deputed for each and every M.L.A. during his period of office. அவர்களுடைய பீரியட் முடியும் வரையில் டெபுடேஷனில் கொடுத்தால் பின்னர் அந்த பீரியட் முடிந்தவுடன் அவர்கள் திரும்ப ஒன்றியத்திற்குச் சென்றுவிடக் கூடிய நிலைமை ஏற்படும். இதனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், வாக்களித்த பெருமக்களுக்கும் இடையே தொடர்புகள் ஏற்படுவதற்கும், மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் நல்ல வாய்ப்பு ஏற்படும் என்பதால் இந்த நீண்ட கால கோரிக்கையை, நியாயமான கோரிக்கையை நம்முடைய நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கருணையோடு நிச்சயமாகப் பரிசீலித்து ஒரு சாதகமான பதிலை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இங்கே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களின் இதயத்திலும் இருக்கிறது என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன்.

அதே போன்று பென்ஷன், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிக பட்ச பென்ஷன் இப்போதிருக்கின்ற சட்ட விதிகளின்படி 600 ரூபாய் தான் வருகிறது. ஆனால் கடைநிலை ஊழியர்கள் ரிட்டயர் ஆகும்போது கூட அவர்களுக்கு 600 ரூபாய், 700 ரூபாய் பென்ஷன் வருகிறது. சட்டமன்ற உறுப்பினர்களாக ஆனவுடனே எல்லோருமே வசதி வாய்ப்பு உள்ளவர்களாக இருப்பதில்லை. பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் இதனை முழு நேரப் பணியாக வைத்திருக்கிறார்கள். சட்டமன்ற



உறுப்பினர் பணியை முழு நேரப் பணியாக வைத்து ஆற்றிக் கொண்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகமானபேர் இங்கே இருக்கிறார்கள். ஆகவே சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களாக ஆகின்ற போது அவர்களுடைய நிலை, மிகவும் பரிதாபகரமாக, கேவலமாக ஆகி விடக் கூடாது. தொடர்ந்து அவர்களுடைய பொதுப் பணி நடக்க வேண்டுமென்றால் இந்தப் பென்ஷன் தொகையைக் குறைந்த பட்சம் 500 என்றும், அதிக பட்சம் ஆயிரம் என்று ஆக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியது நியாயமான ஒன்று என்பதை நம்முடைய நாவலர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். நம்மை விடச் சிறிய மாநிலங்களிலே எல்லாம், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சேலரியும், சலுகைகளும், படிகளும், அதிகமாக இருக்கின்றன. நமக்கு ஒட்டு மொத்தமாக 1,450 ரூபாய்தான் தரப்படுகிறது. சின்னச் சின்ன மாநிலங்களில் கூட 2,450 ரூபாய் வரை தரப்படுகிறது. காஷ்மீர், பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களில் இந்த வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு இருக்கிற விலைவாசி ஏற்றம் பற்றியும், பண வீக்கம் பற்றியும், தங்க விலை பற்றியும் நம்முடைய நாவலர் அவர்களுக்கு நாம் சொல்ல வேண்டியதில்லை. புள்ளி விவரங்கள் அவரிடம் ஏராளமாக இருக்கின்றன. எனவே இவற்றை எல்லாம் கொஞ்சம் பரிசீலித்து எங்களுடைய பென்ஷன், சம்பளம் ஆகியவற்றை உயர்த்தினால் எங்களுடைய பணி சிறப்பாக இருக்கும் என்பதை நான் அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஹவுஸிங் போர்ட் அலாட்மென்டினைப் பொறுத்த வரையில் நகரத்திலே இருந்தாலும், தொகுதியிலே இருந்தாலும். ப்ளாட்டாக இருந்தாலும், Flate ஆக இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற விதி தற்போது இல்லை.

[நண்பகல் 12-00]

அப்படி பல உறுப்பினர்கள் தொகுதியிலே அலுவலகம் இல்லாமல் இருக்கிறார்கள். சொந்த வீடு இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, ஹவுஸிங் போர்டு மூலமாக கட்டப்படுகின்ற ஃபிளாட்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன் உரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல ஆந்திர மாநிலத்திலும் மற்ற வட மாநிலங்களிலேயும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு 2 இலட்சம் ரூபாய் இன்டிரஸ்ட் ஃப்ரீ லோன் என்று வட்டி இல்லாத கடன் கொடுக்கிறார்கள். கர்நாடகத்திலும் அப்படி வட்டி இல்லாத கடன் 2 இலட்சம் கொடுக்கிறார்கள். அதேபோல வாகனங்கள் வாங்குவதற்கும் கர்நாடக மாநிலத்திலேயும், ஆந்திர மாநிலத்திலேயும் மற்ற மாநிலங்களிலேயும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வட்டி இல்லாத கடன் இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை அதே முறையில் இங்கேயும் கொடுக்கப்பட வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களின் இன்ஸ்டால்மெண்ட் பேசிஸில் சம்பளத்திலிருந்து அல்லது பென்ஷனிலிருந்து பிடித்துக் கொள்

ரும் வகையில் வீடுகள் கட்டுவதற்கும் வாகனங்கள் வாங்குவதற்கும் உதவி செய்யும் வகையில் இன்ட்ரஸ்ட் ஃப்ரீ லோன் கொடுப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார் என்று நிச்சயமாக நம்புகிறோம்.

அதேபோன்று டெய்லி அலவென்ஸ் 50 ரூபாய் என்று இருக்கிறது. அதைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நாவலர் அவர்கள் அந்த 50 ரூபாய்க்கு என்னிடம் கணக்கு கேட்பார்கள். உனக்கு என்ன செலவு, 1½ ரூபாய்க்கு தயிர் சோறு கிடைக்கிறதே என்று சொல்லுவார்கள். இருந்தாலும் 50 ரூபாய் என்பது இப்போதெல்லாம் மிகவும் அற்பமான, சொற்பமான தொகையாகப் போய்விட்டது. சட்டமன்ற உறுப்பினர்கள் அடுத்தவர்களிடம் கடன் கேட்கின்ற நிலைமை ஏற்பட்டு விடக் கூடாது. பாராளுமன்றத்திலே இருப்பதைப் போல ரூபாய் 100 என்றாவது உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல மற்ற மாநிலங்களிலே, மேகாலயா, அஸ்ஸாம், மிசௌரம், அருணாசலப் பிரதேசம் போன்ற சின்னச் சின்ன மாநிலங்களிலே கூட சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கு வாடகை வசூல் செய்வதில்லை. இங்கே தினமும் 2½ ரூபாய் வாங்குகிறோம். அங்கேயெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால் ஃப்ரீ லாட்ஜிங், ஃப்ரீ லோக்கல் போன் கால்ஸ் கொடுக்கிறார்கள். போன் கால்களுக்கு இங்கே தான் சார்ஜ் செய்கிறோம். மற்ற மாநிலங்களிலே தங்குகிற விடுதிக்கும், லோக்கல் போன் கால்களுக்கும் ஃப்ரீ என்ற நிலைமை இருக்கிறது. அதை இங்கேயும் கொண்டுவர வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல சென்னை மாநகரத்திலே இருக்கிற உறுப்பினர்களுக்கு மற்ற உறுப்பினர்களுக்கு இருக்கும் வசதி இல்லை. வெளியூர்களில் இருக்கும் உறுப்பினர்களுக்கு ஜீப் கொடுக்கிறார்கள். ஆபீஸ் என்று ஒரு ரூம் இருக்கிறது. போன் இருக்கிறது. ஆனால் இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த வசதி இல்லை. அதை கார்ப்பொரேஷன் மூலமாக செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று. நம்மைப் பொறுத்த வரையில் மேலவையை எடுத்து விட்டோம். அதிலே கூட ஆண்டுக்கு 25 இலட்சம் ரூபாய் மிச்சமாகின்றது. அரசு கொறடா என்று ஒருவர் தான் இருக்கிறார். துணை கொறடா கிடையாது. ஆனால் கொறடாக்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்களை விட குறைவான சம்பளம் இங்கே தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மற்ற இடங்களில் எல்லாம் சட்டப் பேரவைத் துணைத் தலைவர், மேலவைத் துணைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் எல்லாம் சமமாக மதிக்கப்பட்டு வந்தார்கள், இதற்கு முன்னாலே. ஆனால் என்ன காரணத்தினாலோ இப்போது நாங்கள் வாங்கும் சம்பளத்தை விட மிகவும் குறைவாக அவர்கள் வாங்கிக் கொண்டி



ருக்கின்றார்கள். சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு சம்பளம் கொடுப்பதிலேயும், மற்ற வசதிகள் கொடுப்பதிலேயும் ஒரு நல்ல நிலைமை உருவாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பப்ளிக் டிபார்ட்மெண்டிலேயிருந்து மற்ற எல்லா வசதிகளையும் செய்து விட்டு, சம்பளத்தை மட்டும் அசெம்பிளியிலேயிருந்து கொடுக்கிறார்கள். அதையும் பப்ளிக் டிபார்ட்மெண்டிலேயே கொடுக்கும்படி செய்து கொடுத்தால் நல்லது. பிற மாநிலங்களுக்கு கொறடா செல்லும்போது, அந்த மாநிலங்களிலே கொறடாக்கள் எப்படி மதிக்கப்படுகிறார்களோ அதே போன்று இவர்களும் மதிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

அதேபோன்று இங்கே பணிபுரியும் காவலர்களைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். பல ஆண்டுகள் தற்காலிகமாக வேலை செய்து வருகிற அந்தக் காவலர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று சொன்னார்கள். அவற்றையெல்லாம் அரசு பரிசீலிக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொண்டு மெடிக்கல் ரீ—இம்பர்ஸ்மெண்ட் என்ற ஒன்று இருக்கிறது. ஆனால் யாரும் போய் டாக்டரிடம் சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து பணம் வாங்குவதில்லை. சொந்தச் செலவிலேயே செய்து கொள்கிறார்கள். ஆகவே, அதற்கென்று ஒரு குறிப்பிட்ட தொகையை மெடிகல் ரீ—இம்பர்ஸ்மெண்ட் என்பதற்கும் பதிலாக மருத்துவச் செலவிற்கு என்று ஒரு குறிப்பிட்ட தொகையினை ஒதுக்கித் தருவீர்களேயானால் அது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்று எடுத்துச் சொல்லி நல்ல வேளையாக நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இப்போது இங்கே வந்திருக்கிறார்கள். அவர்கள் வந்திருக்கின்ற வேளையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பல சலுகைகளை அறிவிப்பார்கள்; அறிவிக்கவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொண்டு வாய்ப்புக் கொடுத்த தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. டி. மனோகரன் : மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின் முன்னால் மாநிலச் சட்டமன்றம், தேர்தல்கள், ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும், பல்வகை, பல்வகை மூலதனச் செலவு, மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் போன்றவை மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் போன்றவைகளை உள்ளடக்கிய மானியக் கோரிக்கைகள் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது கருத்துக்களை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்து வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்னால் பேசிய இரண்டு மாண்புமிகு உறுப்பினர்களும், உறுப்பினர்களின் நேரடித் தேவைகளைப் பற்றி விளக்கமாக

எடுத்துச் சொன்னேன். அருமை ஆணைத்திறம் பெயர் பெற்ற முதல் அமைச்சர் அவர்கள் அதுமாதிரியான அவர்களை வைத்துக் கொண்டு பேரவையை நடத்திக் கொள்கிற முயற்சியில் ஈடுபட்டதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்ட மன்றம் எந்தளவுக்கு என்பதைப் பற்றி பொதுவாக குறிப்பிட்டு இங்கே பேசிய நண்பர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். இது ஜனநாயகத்தின் இதயம் என்றும், இந்த மன்றத்தில் மக்களின் இதயத் துடிப்புகள் பதிவு செய்யப்படுகின்றன என்றும், அவர்களுடைய மகிழ்வு இங்கே தான் நிர்ணயிக்கப்படுகிறது என்றும் எடுத்துச் சொன்னார்கள். ஆங்கிலத்தில் சொல்வதானால், Legslature is place whee the will of the peple is expessed and the heat-throbs of the Nain are recorded. அத்துணை பெருமை வாய்ந்த இந்தச் சட்டமன்றத்தில் அங்கம் வகிக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று தனிப்பட்ட கடமைகள் ஏராளமாக இருக்கின்றன என்பதை அனைவரும் மிக நன்றாக அறிவார்கள். இந்தச் சட்ட மன்றத்தில் தான் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளும், மக்களின் தேவைகளும் அலசப்படுகின்றன, ஆராயப்படுகின்றன. அமைச்சர்களாக இருக்கிறவர்கள் உறுப்பினர்கள் கேட்கிற கேள்விகளுக்கு பதில் சொல்லி அதன் மூலம் செய்ய வேண்டிய காரியங்களை செய்ய கடமைப்பட்டிருக்கிறார்கள், செய்கிறார்கள். நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, சட்டசபை என்று எடுத்துக் கொள்கிறபோது ஆட்சிக்கட்சி என்று ஒன்று மட்டுமல்லாமல் எதிர்க்கட்சி என்ற ஒன்று இருக்கிறது என்ற உணர்வோடு பணியாற்றினால் தான் ஜனநாயகம் முறையாக இயங்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு, உங்களுக்கு இருப்பதைப் போல, ஜனநாயகத்தில் எதிர்க்கட்சி என்பது கிட்டத்தட்ட ஒரு Lubicating oil என்பதைப் போல. It is the lubricating oil for the wheels of the Democratic machinery. அந்த அடிப்படையில் தான் இங்கே எதிர்க்கட்சிகள் இயங்குகின்றன. இயங்க வேண்டும். குறிப்பாக சபாநாயகர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, நீங்கள் கருணை உள்ளத்தோடு அல்லது நியாய உணர்வோடு அல்லது தவிர்க்க முடியாத பொறுப்புணர்ச்சியோடு, எதிர்க்கட்சிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், அந்த எண்ணிக்கையைப் பற்றி கவலைப்படாமல், எடுத்து வைக்கிற எண்ணங்களுக்கு மரியாதை தந்து, மதிப்பு தந்து முடிந்தால் ஏற்றுக் கொள்கிற வகையில் எதிர்க்கட்சிகளை நீங்கள் அணைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் நிச்சயமாக நான் நம்புவதெல்லாம், Legisl ture is s p eme. எந்த அமைப்பானாலும் சரி, இந்தியத் துணைக்கண்டத்தில் பாராளுமன்றத்தைப் பொறுத்தவரையில், Parliament is supreme அதைப்போல அந்த பாராளுமன்றத்தின் சபாநாயகராக இருப்பவரானாலும் சரி, அல்லது சட்டமன்ற சபாநாயகராக இருப்பவரானாலும் சரி, அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இயங்கவேண்டுமென்ற கருத்தை முன்னாள் மராட்டிய மன்றத்தில் மேலவைத் தலைவரைத் தலைவராகக் கொண்டு நியமிக்கப்பட்ட ஒரு குழு 1968-ஆம்



ஆண்டு திருவனந்தபுரத்தில் கூடிய Presiding Officer's Conference லே சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்திருக்கின்ற கருத்தை உங்களுடைய அனுமதியோடு படிக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

"Commenting on the duties and responsibilities of the Speaker in India and his relations with the House the Committee of the Presiding Officers headed by Sri V. S. Page, Chairman of the Maharashtra Legislative Council observed in its report submitted to the Conference of Presiding Officers of Legislative Bodies in India held in October 1968. The principal duty of the Speaker is to regulate the proceedings of the House and to enable it to deliberate on and decide the various matters coming before it. Thus in considering the various notices or points raised before him or adjournment of the sittings or placing the matter before the House and the like the Speaker should always bear this in mind and where in doubt he should act in favour of giving an opportunity to the House to express itself. The Speaker should not so conceive his duties or interpret his powers as to act independent of the House or to over ride its authority or to nullify its decisions. The Speaker is a part of the House drawing his powers from the House for the better functioning of the House and in the ultimate analysis a servant of the House and not its master." A Servant of the House என்று குறிப்பிடுகிறபோது, நாம் தாழ்ந்த வார்த்தை என்றோ, அல்லது சபாநாயகரின் மதிப்பை இறக்குகின்ற முறையிலே சொல்லப்பட்டது என்றோ இல்லை. நான் விளக்கமாகச் சொல்வது என்றால், ஜனநாயகத்திலே நாம் போகவும், நடைமுறைப்படுத்துகின்ற அளவிற்கு எடுத்துக் கூறுவதும், மக்கள் மத்தியிலே தொடுத்து வைப்பதும், நீங்கள், இந்த அவையின் Servant of the House. Chief Minister is the servant of the State என்ற அளவிற்கு தரம் தாழ்ந்தது அல்ல அது. உயர்ந்த அளவிற்கு, உற்றுழி உதவுகின்ற அளவிற்கு நீங்கள் இரண்டு பேர்களும் இருக்கிறீர்கள் என்ற கருத்திலேதான் இந்தக் கருத்து அங்கே சொல்லப்பட்டது என்பதை நான் உங்களது கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், சபாநாயகர் அவர்களே, உங்களுக்கு
என்று தனி மரியாதை உண்டு. நான் அந்த மரியாதையை எப்
போதும் மதிப்பவன்; அந்த மரியாதை எந்த அளவிற்குக் காப்
பாற்றப்பட்டு இருக்கிறது என்பதை, ஒரு சிறு உதாரணத்தின்
மூலம் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒரு முக்கியமான சந்தர்ப்பத்தில், "The Prime Minister
Nehru sent a Note to the Speaker Mavlankar requesting him
to come over to his Chambers to discuss an important matter."
மவுலாங்கருக்கு, பண்டித ஜவஹர்லால் நேரு, இந்தியத் துணைக்
கண்டத்தின் ஆபிரகாம் லிங்கன் என்று வர்ணிக்கப்பட்ட பண்டித
ஜவஹர்லால் நேரு, சபாநாயகருக்குக் கடிதம் தீட்டி, "எனது
அறையிலே வந்து என்னைச் சந்தியுங்கள். மிக முக்கியமான
பிரச்சினை பற்றி விவாதிக்க வேண்டும்" என்ற குறிப்பை
அனுப்பினார்கள். "Mavlankar wrote thereon that the Speaker
did not go to anyone's Chambers and that the Prime Minister
would be welcome to come over and meet him".
சபாநாயகர் செல்ல வேண்டியதில்லை, பிரதமரின் அறைக்கு.
மாறாக, பிரதம அமைச்சரின் அறைக்கு சபாநாயகர் வருவதை
விட, சபாநாயகரின் சேம்பருக்கு பிரதம அமைச்சர் வரவேண்டும்
என்று அவர்கள் பதில் தீட்டினார்கள். அடுத்தாற்போல
சொல்கிறார்கள், "Nehru graciously apologised for his,
lapse and offered to go to the Speaker's Chambers"
பண்டித ஜவஹர்லால் நேரு, அதற்காக தனது மன்னிப்பைத்
தெரிவித்து, சபாநாயகரின் அறைக்குச் சென்று, விவாதித்தார்கள்
என்ற செய்தியை நான் அங்கே பார்க்கிறேன். இதை நான்
குறிப்பிடுவதற்குக் காரணம், Legislature is Supreme and the
Speaker is Supreme. அந்தக் காரணத்தினாலேதான், அவையை
நடத்துகிற சபாநாயகர் முறையாக நடந்து கொள்பவராக
இருந்தால், அப்படிப்பட்ட தகுதி பெற்றவராக அவர்
அமைவாரேயானால், அப்படிப்பட்ட ஒரு சபாநாயகர்
நமக்குக் கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் நாட்டு
மக்களுக்கு வருமேயானால், அனைத்து அரசியல் கட்சி
யைச் சேர்ந்த தலைவர்களுக்கு வருமேயானால், அந்தத் தொண்
டர்களுக்கு உருவாகுமேயானால், சபாநாயகரை சுயேட்சை
யாக நிறுத்தி, எல்லா கட்சியைச் சேர்ந்தவர்களும் அந்தச்
சபாநாயகருக்குப் போட்டியின்றி, அவர்களைத் தேர்ந்தெடுக்
கின்ற அளவிற்கு ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும் என்று
மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய நீலம் சஞ்சீவ ரெட்டி
அவர்கள், சபாநாயகராக இருந்த நேரத்தில், திருவனந்தபுரத்
திலே நடைபெற்ற பிரசைடிங் ஆபீசர்ஸ் மாநாட்டிலே தெரி
வித்திருக்கிறார்கள்.





இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். 38
அல்லது 40 ஆண்டுக்கால இந்தியத் துணைக் கண்டத்தின் விடு
தலை வரலாற்றில், தேர்ந்தெடுக்கப்பட்ட சபாநாயகர்களிலே
தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பிறகு, அந்தக் கட்சியிலேயிருந்து
ராஜினாமா செய்துவிட்டு, நான் கட்சிக்கு அப்பாற்பட்டவன்.,
கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டவன் என்ற கருத்தை
வலியுறுத்தி, கட்சியிலேயிருந்து ராஜினாமா செய்த பெருமை
நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்களைச் சாரும். நான் இதைச் சொல்
கிற காரணத்தாலே இதை நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ளக்
கூடாது. அந்த அடிப்படையிலே சபாநாயகர் இயங்கவேண்டும்
என்ற கருத்திற்காக, நான் இதைச் சொல்கிறேனே தவிர,
வேறு அல்ல என்பதையும் நீங்கள் நினைவிலே வைத்துக்கொள்
வது நல்லது. அதற்குப் பிறகு இன்னொன்றைச் சொன்னால்
நீங்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. உங்களுக்கென்று சகல
அதிகாரங்களும் இருக்கின்றன. அந்த அதிகாரங்களை நீங்கள்
பயன்படுத்தினாலே போதும். ஆனால், சில சந்தர்ப்பங்களில்
நீங்கள் 312-ஆவது விதியை அடிக்கடி பயன்படுத்துகிறீர்கள்.
என்னுடைய வேண்டுகோள் அந்த விதியை நீங்கள் துஷ்பிரயோகம்
செய்கிறீர்கள் என்றல்ல நான் சொல்கிறேன்; அந்த விதி உங்
களை துஷ்பிரயோகம் செய்கிற அளவிற்கு நிலைமைகள் வந்து
விடாமல் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான்
மெத்த பணிவன்போடு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுக்கு அதிகாரம் உண்டு. அந்த அதிகாரத்தை நீங்கள்
செயல்படுத்துகிறபோது, அதை தட்டிக்கேட்பதற்கு நான் தயாராக
இல்லை. நான் வரிசைப்படுத்தும்போது, முதலாவதாக வரிசைப்
படுத்துவது லெஜிஸ்லேச்சர்; இரண்டாவதாக நான் வரிசைப்
படுத்துவது ஜுடிசியரி; மூன்றாவதாக நான் வரிசைப்படுத்துவது
எக்சிகியூடிவ்; நான்காவது, போர்த் எஸ்டேட் என்று கருதப்
படுகின்ற பத்திரிகை. அவர்களுக்கென்று வரையறுக்கப்பட்ட
அதிகாரங்கள் உண்டு. அந்த வரையறுக்கப்பட்ட அதிகாரங்
களை Riding over others rights என்ற அளவிற்கு
நிலைமைகள் வளருமானால் நிச்சயமாக ஜனநாயகம் இயங்காது
என்ற கருத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் இந்த அவைக்குத்
தெரிவிக்க விரும்புகிறேன். அதற்குப் பிறகு உங்களது மேலான
கவனத்திற்கு நான் கொண்டு வரவேண்டுமென்று விரும்புகிற
ஒன்று, இங்கே நாம் விவாதிக்கிறோமே இந்த விவாதத்தில்
தேர்தல்கள் பற்றி செய்திகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.
இன்றைய இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநிலத்தை
எடுத்துக் கொண்டாலும் சரி. தேர்தல்கள் எந்த அடிப்படையிலே
நடைபெறுகின்றன என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. இன்
னும் இந்த நிலை தொடருமேயானால், பணம்தான் தேர்தல்
காலங்களில் பேசுமே தவிர, பண்பாடோ அல்லது தியாக
உணர்வோ அல்லது விழுப்புண்களோ நிச்சயமாக மக்கள் சார்பிலே
பேசாது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அந்த அபாய
விளக்கு நம் கண் முன்னே தெரிகிறது. சிலபேர் அதற்கு பச்சை
விளக்கு காட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான்
அறியாமல் இல்லை. ஆகையினாலே, பணபலத்தைக் குறைத்து

தியாகம் செய்தவர்கள், நாட்டிற்காக உழைத்தவர்கள்,
அவர்களைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ்
நிலைகளை உருவாக்க வேண்டுமே தவிர பணம் இருக்கிற
காரணத்தினாலே என்னால் சுலபமாக தேர்தலிலே வெற்றி
பெற்றுவிட முடியும்; அள்ளி, பணத்தை கொடுக்கிற காரணத்
தினாலே நான் துள்ளி வருவேன் சட்டமன்றத்திற்கு, நாடாளு
மன்றத்திற்கு என்கின்ற கருத்து அடியோடு மாற்றப்படுகின்ற
அளவிற்கு, ஒழிக்கப்படுகின்ற அளவிற்கு இந்த மாநிலம் முன்
மாதிரியாக விளங்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். தேர்
தலில் யார் யார் நிற்க வேண்டுமென்பதற்காக அரசியல் சட்டத்
தில் விதி இருக்கிறது. யார் யார் நிற்கக்கூடாது என்பதற்காக
விதி இருக்கிறது. 25 வயது நிரம்பியவர்கள் தேர்தலில் நிற்க
லாம்; விதி இருக்கிறது. undischarged insolvent நிற்கக்
கூடாது; விதி இருக்கிறது; Persons of unsound mind நிற்கக்
கூடாது; விதி இருக்கிறது. திறமை வாய்ந்தவர்கள்; தகுதி
வாய்ந்தவர்கள் நிற்கலாம்; விதி இருக்கிறது. பணம் இவ்வளவு
இருந்தால்தான், வங்கி பேலன்ஸ் இவ்வளவு இருந்தால்தான்,
பயணம் செய்வதற்கு மோட்டார் கார்கள் இவ்வளவு இருந்தால்
தான் நிற்கவேண்டுமென்ற விதி நமது ஜனநாயகத்தில் இல்லை.
ஆகவே, அவர்கள் தாராளமாக நிற்கலாம்.

ஆனால், எனக்குஅண்மைக் காலத்திலே ஏற்பட்டிருக்கிற பயம்,
ஒரு புதிய சக்தியின் ஆக்கிரமிப்பு அல்லது படையெடுப்பு அரசியல்
உலகத்தை நோக்கி விரைந்து கொண்டிருப்பதாக நான் நம்பு
கிறேன். மக்களின் வரிப் பணத்தை உறிஞ்சி, மக்களின் பணத்தை
எந்த அளவிற்கு சுரண்ட முடியுமோ சுரண்டி, எந்த விதமான
தியாகமும் செய்யாமல், மக்களுக்கும் தங்களுக்கும் எந்தவிதமான
தொடர்பும் இல்லாமல் சுடைசிவரை அனுபவித்துவிட்டு, அதற்குப்
பிறகு தங்களுக்கு மார்க்கெட் இல்லையென்று தெரிந்தவுடன் சில
தாரகைகள், மின்னுகின்ற நட்சத்திரங்கள் ஒரு படையெடுப்பை
நடத்திக் கொண்டிருப்பதை தமிழக அரசியலிலே மட்டுமல்லா
மல், இந்தியத் துணைக் கண்ட அரசியலிலும் நான் பார்க்கிறேன்.
பெருமையோடு நான் தெரிவிக்க விரும்புகிறேன், சினிமாவிலே
நடித்து, நாடகத்திலே நடித்து அதற்குப் பிறகு முதலமைச்சராக
ஆகி இருக்கிறார் நமது முதலமைச்சர் அவர்கள் என்பதை நான்
மறந்துவிட மாட்டேன்; நீங்களும் மறந்துவிடக் கூடாது.
தொடர்ச்சியாக அவர் அரசியலிலும் தன்னை ஈடுபடுத்திக்
கொண்டு வாழ்ந்தவர் என்பதை மறந்துவிடக் கூடாது. இன்
றைக்குப் புதிதாக வருகின்ற நடிகர்களோ, நடிகைகளோ எந்த
அளவிற்கு அரசியலோடு தொடர்பு வைத்தவர்கள் என்று பார்த்
தால், திடீரென்று அவர்களுக்கு கண்ணீர் வருகிறது. ஐயோ,
இவர்கள் கஷ்டப்படுகிறார்களே என்ற துடிப்பு வருகிறது;
அதற்கு முற்றிலும் முதற் காரணம் என்று நான் கருதுவது
தாங்கள் தேடி வைத்திருக்கிற கருப்புப் பணத்திற்கு பாதுகாப்பு
தேடிக் கொள்வதற்காகவும், தங்களை அந்தக் கோரப் பிடியி
லிருந்து விடுவித்துக் கொள்வதற்காகவும், இன்கம் டாக்ஸ்
அதிகாரிகள் தங்களது வீடுகளை ரெய்டு செய்யாமல் இருப்பதற்
காகவும் இப்படிப்பட்ட ஒரு பாதுகாப்புக் கவசம் நமக்குக்



கிடைக்க வேண்டும்: அப்படி கிடைக்க வேண்டுமென்றால்
நாம் அரசியல் கட்சியிலே ஈடுபடவேண்டும்; அதுதான் சரியாக
இருக்கும் என்ற காரணத்தினால் அவர்கள் அப்படி செய்கிறார்
கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த விஷயத்
தில் நமது அரசியல் கட்சிகள் கொஞ்சம் தெளிவாக இருந்து
செயல்பட வேண்டுமென்று மெத்த பணிவன்போடு நான் கேட்டுக்
கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

தேர்தல் பற்றி இன்னும் ஒன்றை நான் தெரிவிக்க விரும்புவது,
உங்களுக்கு எல்லாம் தெரியும், நாம் விரும்புவது, அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் விரும்புவது....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. நாஞ்சில் மனோகரன்
அவர்கள் பேசும் போது அவர்களுடைய கருத்தோட்டத்தைத்
தடுக்க வேண்டும் என்பதற்காக அல்ல— நான் அவரிடமிருந்து
கேட்டுக் கொள்ள விரும்புவது ஒட்டு மொத்தமாக இப்படி சினிமா
நடிகர்கள் என்று மொத்தமாக சேர்த்துப் வைத்து பேசுவது
முறைதானா? சரி தானா? இப்படி அவையில் இல்லாதவர்களைப்
பற்றி எல்லாம் பேசுவது சரி அல்ல. கருப்புப் பணம் வைத்து
இருப்பவர்கள் சினிமாவில் இருப்பவர்கள் மட்டும் அல்ல,
வெளியில் இருக்கிற பல முதலாளிகள், சில அரசியல்வாதி
களிடம் கூட கறுப்புப் பணம் இருக்கக் கூடும். வேறு தொழில்
செய்பவர்களும் வைத்து இருக்கக் கூடும். கருப்புப் பணம்
வைத்து இருப்பவர்கள் யார், யார் என்று சந்தேகப்படுபவர்கள்
எல்லாம் தேர்தலில் நிற்கக் கூடாது என்று சட்டம் போடலாமா?
இப்படி ஒட்டு மொத்தமாக ஒரு துறையைக் குறை சொல்லுவது
சரி தானா? என்பதை தங்கள் மூலம் தெரிந்து கொள்ள
விரும்புகிறேன்.

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஒட்டு மொத்தமாக, ஒட்டு மொத்தமாக என்று
சொல்லியே சில பேர் பொழுதை போக்கிக் கொண்டு இருக்
கிறார்கள் என்றுஎனக்குத் தெரியும். நான் எந்த உணர்வோடு பேசு
கிறேன் என்பதைப் பற்றி மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டுமே
தவிர யாராவது பெயர் சொன்னேனா நான்? இந்த நடிகர்,
நடிகை இங்கே வரக்கூடாது என்று சொன்னேனா நான்?
இந்தக் கட்சி இவர்களை எப்படி சேர்த்துக் கொண்டது என்று
கேட்டேனா நான்? அந்த உரிமையை நான் பெறவில்லை என்
பதை நிச்சயமாக ஒத்துக்கொள்கிறேன். ஆனால் என்னுடைய
உணர்வைப் பிரதிபலிப்பதற்கு இந்த அவை என்னை நிச்சயம்
தடை செய்யாது என்று மட்டும் நான் நம்ப விரும்புகிறேன்;
சொல்லவும் விரும்புகிறேன்.

[திரு. கி. மனோகரன்] [1987 மே 7

அதைத் தான் நான் சொல்லிக் கொண்டேர்.
வந்தேன். இடையில் அருமை மாண்புமிகு
திரு. ப.உ.ச. அவர்கள் இடைமறித்த காரணத்தால் அமைச்சர்
கருத்தோட்டம் நல்லவேளை தடுத்து நிறுத்தப்பட வில்லை.
நான் தெரிவிக்க விரும்புவது, தேர்தலில் அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகம் விரும்புவதும், திராவிட முன்
னேற்றக் கழகம் விரும்புவதும், இன்னும் சொல்லப் போனால்
காங்கிரஸ் கட்சி விரும்ப வேண்டும் என்று நான் விரும்புவதும்
(Proportional Represent tion) என்ற அளவுக்கு தேர்தல்
நடத்தப்பட்டால்தான் அந்த தேர்தல் ஜனநாயக தேர்தலாக
அமையும் என்ற கருத்தை நான் இங்கே வலியுறுத்த விரும்பு
கிறேன். ஏன் என்றால் உங்களுக்குத் தெரியும் சட்டசபை
தேர்தலிலே போட்டியிடுகின்றவர்கள், போட்டியிடுகின்ற கட்சிகள்
அவர்கள் எப்படிப்பட்ட பர்சன்டேஜ் பெற்று இருக்
கிறார்கள் என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்த்தால் நிலைமை
புரியும் என்று நான் நம்புகிறேன். மொத்த வாக்குகளில் 45
சதவீதத்திலிருந்து 48 சதவீதம் வாக்குகள் பெற்ற கட்சிக்கு
சட்டமன்றத்தில் சில நேரங்களில் 70 சதவீத உறுப்பினர்களும்
அதேபோல் 48 சதவீதம் அல்லது 49 சதவீதம் என்று பெற்ற
வர்களுக்கு ஆளுகின்ற ஆட்சிப் பொறுப்பு கிடைக்கின்ற வாய்ப்பும்
இந்த தேர்தல் அமைப்பு முறைகளில் இருக்கிற காரணத்தால்
42 அல்லது 43 சதவீதம் பெற்றவர்கள் 20, 22 உறுப்பினர்களோடு
சட்டமன்றத்திற்கு மக்களால் அனுப்பப்படுகின்ற ஒரு துர்பாக்கிய
மான சூழ்நிலை இருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்
காட்டி Electoral Reforms தேவை என்ற கருத்தை
வலியுறுத்தி அந்த கருத்தை மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் செல்கிற நேரத்
தில் பிரதம அமைச்சரிடத்திலும், தேர்தல் கமிஷனரிடமும்
சொல்லி Pr portiona Repre ent tion ஒன்று தான்
ஜனநாயகத்துக்கு பாதுகாப்பாக இருக்க முடியும் என்ற
கருத்தை வலியுறுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் நான்
தெரிவிக்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

…ண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று சபையை 1
… முடிக்கவேண்டும். இன்னும் 7 பேர் பேச வேண்டி
யிருக்கிறது.

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நான் சீக்கிரம் முடித்து விடுகிறேன். நான் ஏற்கனவே
இந்த மாமன்றத்திலே பேசும் போது குறிப்பிட்டேன். அதை
வேண்டும் குறிப்பிட விரும்புகிறேன் Right to recall அது
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்
துக்கும் ஏற்புடைத்தான கருத்து. திராவிட முன்னேற்றக்
கழகத்துக்கும் ஏற்புடைத்தான கருத்து. இது டெல்லி பாராளு
மன்றத்தில் அல்லவா பேச வேண்டும் என்று சபாநாயகர் அவர்
களே நீங்கள் அப்போது சொன்னீர்கள். சொல்லிவிட்டு சென்று



1987 மே 7] [திரு. கி. மனோகரன்]

என்னால் விளக்கம் சொல்லமுடியவில்லை.
விட்டீர்கள். அரசியல் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் தான் அதை செய்ய
முடியும் என்று எனக்குத் தெரியும். அந்த அரசியல் சட்டத்தை
திருத்துவதற்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
பொறுப்பு எடுத்துக்கொள்வார்களானால், பொறுப்பு எடுத்து
தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அவர்கள் நாடாளுமன்ற
உறுப்பினர்களானாலும் சரி, சட்டப் பேரவை உறுப்பினர்
களானாலும் சரி, அல்லது நமது மாண்புமிகு அமைச்சர் திரு.
பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்ததைப் போல
ஒன்றியத் தலைவர்கள் ஆனாலும் சரி, நகராட்சி மன்றத்
தலைவர்கள் ஆனாலும் சரி அவர்களை திருப்பி அழைக்கின்ற
உரிமை, இதை பொறுத்தவரையில் மாநிலத்திற்கு உண்டு.
மற்றவற்றைப் பொறுத்தவரையில் பாராளுமன்றத்திற்கு உண்டு.
அதை செய்யவேண்டும் என்றும், வற்புறுத்த வேண்டும் என்றும்
இந்த சந்தர்ப்பத்தில் மிகவும் பணிவன்போடு கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தாற்போல் பல கோரிக்கைகள்............

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, 'Right to recall' எல்லோ
ருக்கும் வேண்டும் என்பது தான் அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள். அதற்காக
1972 ஆம் ஆண்டே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் கூட திரும்ப
அழைக்கப்பட வேண்டும் என்பதற்கு கையெழுத்து இயக்கம்
நடத்தி ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரிடத்திலும் கொடுத்
தார்கள். இன்னும் சொல்லப் போனால், அதை ஏற்றுக்
கொண்டிருந்தால், 76-லே சேர்ந்திருந்த மாண்புமிகு நாஞ்சி
லாரும், எல்லோரும், நானும் சேர்ந்து, 72-ஆம் ஆண்டு
கருணாநிதியை அனுப்பியிருப்போம். விடிவு காலம் 72-லேயே
பிறந்திருக்கும்.

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டி
இராமச்சந்திரன் அவர்கள் 72-ஐப் பற்றிப் பேசினார்.
அவருக்கும் அப்போதிருந்த அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத்திற்கும் சம்பந்தமில்லை.. இது ஊருக்கும் தெரியும்.
உலகத்திற்கும் தெரியும். இன்னும் சொல்கிறேன். இந்தத்
திட்டத்தை, இந்தக் குறிக்கோளை எழுதுவதற்கு ஒரு குழு
போட்டபோது, என்னைக் குழுத் தலைவராக நியமித்தவரே
இங்கே உட்கார்ந்திருக்கின்ற நமது முதலமைச்சர் தான். அதற்குப்
பிறகு எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு நீங்கள் வந்தீர்கள்.
சில விஷயங்கள் புரியாமல் இருக்கலாம். சில விஷயங்கள் புரிந்து
கொள்ளக் கூடும். சில விஷயங்களைப் புரிந்து கொள்ள
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். புரிந்து கொள்வது
உங்களது கடமை. புரிய வைப்பது எங்களது......... (குறுக்
கிடுகள்).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எழுதியிருப்பீர்கள்.
நாங்கள் அதைப் புரிந்துகொண்டு, செயலாற்றிக்கொண்டிருக்
கிறோம். நீங்கள் புரிந்தும் புரியாததுபோல் பேசிக்கொண்டிருக்
கிறீர்கள். எது நியாயம்? (குறுக்கீடு) மாண்புமிகு ரகுமான்
கானுக்கு நான் பதில் சொல்ல விரும்புகிறேன்.

Mr .Spe ker :I h.ve not permitted him.

திரு. கி. மனோகரன் : நமது மதிப்பிற்குரிய முதலமைச்ச
ரவர்கள் அதிலே கொஞ்சம் அனுதாப உணர்ச்சியோடு அமைச்
சரைப் பார்த்து விட்ட காரணத்தாலே, அதைப் பற்றி
எதையும் அதிகமாகத் தெரிவிக்கவிரும்பவில்லை. எனக்கென்று
இருக்கின்ற சில யோசனைகளை இங்கே தெரிவிக்க விரும்பு
கிறேன். அவை எப்படி நடந்துகொண்டிருக்கிறது என்பதை
ஊர் மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும். காலரியில் உள்ள
மக்களும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இங்கே நடக்கின்ற
நிகழ்ச்சிகளை கவனிக்கிறார்கள் என்பது உண்மை. அதைவிட
தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இந்தச் சட்டமன்றத்
தில் எப்படிப் பேசுகிறார், எப்படி நடந்துகொள்கிறார், என்பதைத்
தெரிந்துகொள்ளவும், மொத்தமாக சட்டமன்றம் எப்படி
நடந்துகொண்டிருக்கிறது, என்பதைத் தெரிந்துகொள்ளவும்
குறிப்பாக சட்டமன்றத்திலே அமளி துமளி ஏற்படுகின்ற
போது எப்படி சபாநாயகர் அதில் ஈடுபட்டு அதைத் தவிர்க்க
முயற்சிக்கிறார் என்பதும், ஆக உங்களது பணியை 50 சதவீதம்
குறைப்பதற்கு டி.வியில் நமது செய்தியைக் கொண்டுவருவதன்
மூலம் நாட்டு மக்கள் உணர்வதற்கு வழிவகை செய்ய முடியும்
என்றுநான் நம்புகிறேன். அதை முதல் அமைச்சரவர்கள் கவனத்
தைத்திற்கு நான் வைக்க விரும்புகிறேன்.

இரண்டாவது 1977-ஆம் ஆண்டிலே இங்கே பேசிய நண்
பர்கள் அத்தனைபேரும் சொன்னார்கள். இங்கே எப்படித்
தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உட்கார்ந்து
இந்த வேதனையைத் தாங்குகிறார் என்று தெரியாது.
தாங்க முடியாத அளவு தாங்கிக் கொண்டிருக்கிறேன். வெயிலின்
கொடுமைகள் அவ்வளவு. இது உறுப்பினர்களுக்குத் தெரியும்.
அப்போதே நாங்கள் தெரிவித்தோம். புதியதாக, நவீன
வசதிகளோடு கூடிய கருவிகளை அமைத்துக் கொள்கின்ற
ஒரு சட்டமன்றத்தைக் கட்டவேண்டுமென்று அப்போதே
தீர்மானித்தோம். எனக்கு நினைவு இருக்கிறது. முதலமைச்ச
ருக்கும் நினைவு இருக்கும். நாங்கள் இரண்டு பேரும் அங்கே
இருக்கின்ற அதிகாரிகளோடு மிலிடரி கிரவுண்டிற்குப் பக்கத்
திலே இருந்த இடத்தைப் பார்த்தோம் கட்டிடம் கட்டுவதற்கு.
கட்டலாம் என்று அவர்கள் சொன்னார்கள். சொல்லி 10
ஆண்டுகளாயிற்று. கட்டிடம் எழுப்பப்படவில்லை. அதை
எழுப்புவதற்கு உடனடியாக சிரமங்களை மேற்கொள்ள
வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்
கிறேன். ஆக தயவு செய்து இந்த ஏற்பாடுகளைக் கருத்திலே
வைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்



கடைசியாக நான் உங்களது கவனத்திற்குக் கொண்டுவர
விரும்புவது, இங்கே பேசிய மதிப்பிற்கும், மரியாதைக்கும்
உரிய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள்,
முதலமைச்சரின் சார்பாக வரும் கேள்விகளுக்கு நான் பதில்
சொல்வேன் என்று குறிப்பிட்டார்கள். கேள்விகள் இன்றைக்கு
நிலுவையிலே இருக்கின்றவை மட்டும்** என்பதை நான்
அவர்களது கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.
அதற்குப் பதில் இதுவரையில் இல்லை. உடனடியாக
நீக்கப்பட வேண்டிய குறைகளுள் ஒன்று என்பதற்
காகச் சொல்கிறேன். ஒரு பொதுவான கருத்தை தெரிவிக்
கிறேன். குற்றச்சாட்டாக அல்ல என்பதை தெரிவிக்க விரும்பு
கிறேன். அதோடு இன்னுமொன்றையும் இணைத்துச் சொல்ல
விரும்புகிறேன். சட்டசபை நடக்கின்றபோது ** என்று
நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு பிறகு அவர் அவையி
லிருந்து போகலாம். அதைப்பற்றி நான் கவலைப்படமாட்
டேன். ஏனென்றால் it may be construed as an insult to the
intelligence of the House. என்ற காரணத்தினால். (குறுக்கீடு)

[பிற்பகல் 12-30]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர்
அவர்களே, தங்கள் மூலமாக மாண்புமிகு நாஞ்சில் மனோ
கரன் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புவது, சட்ட
மன்றம் நடக்கின்றபோது, சட்டமன்றத்தில் உட்கார்வது மட்டும்
அல்ல, மேலே உட்கார்ந்துகொண்டு அவை நடவடிக்கை முழு
வதையும் கவனிக்கின்றார். தேவைப்பட்டால் கீழே வருகிறார்
கள். தேவைப்பட்டால் அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி
பதில் சொல்லச் சொல்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, நான் அன்றே பதில் சொன்னேன். மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் தனக்கு வருகின்ற கேள்விகளுக்கு பதி
லுரைக்கலாம் என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே பல கேள்வி
களுக்கு நானே கையெழுத்து போட்டு அனுப்பியிருக்கிறேன்.
சில பல கேள்விகளுக்கு நானும் பதிலுரைத்துக்கொண்டு இருக்
கிறேன். தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் என்பதையும் இந்த
அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு நாஞ்சிலார்
அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருவதைப்
பற்றிச் சொன்னார்கள். எப்போதும் மற்றவர்களைப் பற்றிச்
சொல்லும்போது நாமும் கொஞ்சம் அந்த நிலையிலேயிருந்து

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள் இங்கே நிதியமைச்சராக இருந்தார்கள். அவர்களுக்கே அப்போது எவ்வளவு கஷ்டங்கள் இருந்தன என்பது தெரியும். சில நாட்களிலே சபைக்கு வர முடியாமல்கூட போய் இருக்கிறது. அதையெல்லாம் நாங்கள் பார்த்து இருக்கிறோம். ஆகையால் மற்றவர்களைச் சொல்கின்றபோது இதையும் அவர்கள் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் எழுந்தேனே தவிர வேறு அல்ல.

**திரு. கி. மனோகரன்** : தலைவர் அவர்களே, முதலமைச்சரின் சார்பாக பேசும்போது இப்படி வழிமாறி பேசவேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகின்றேன். நான் எதுவும் தவறாகச் சொல்லவில்லை. ** என்ற மனநிறைவு உறுப்பினர்களுக்கு ஏற்படும் என்பதற்காகத் தான் சொல்கிறேன். அவர் உடலை வருத்திக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்பவில்லை. இது மிக முக்கியமான ஒன்று என்பதற்காக சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவர் அவர்களே, நான் தங்கள் மூலமாக நாஞ்சில் மனோகரன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முதலமைச்சர் உடல் நிலையைப்பற்றி அக்கறை எடுத்துக் கொண்டதற்கு நன்றி. முதலமைச்சர் மிகவும் நன்றாக இருக்கிறார்கள். எந்தவிதமான கோளாறும் கிடையாது. நிச்சயமாக வருகின்றார்கள். இல்லையென்றால்மேலே உட்கார்ந்து கொண்டு அவை நடவடிக்கையை கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். நானே சொன்னேன். தேவைப்பட்டால் அமைச்சர்களைக் கூப்பிட்டு சொல்லச் சொல்லி, சொல்கிறார்கள். தேவைப்பட்டால் அவர்களே வந்து சொல்கிறார்கள்... (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இன்னும் 28 நிமிடங்கள் தான் இருக்கின்றன. ஏழு பேர்கள் பேச வேண்டும். ஒவ்வொருவருக்கும் 4 நிமிடங்கள் கூட வரவில்லை.

**திரு. கி. மனோகரன்** : தலைவர் அவர்களே, முதலமைச்சரே வருவதற்குத் தயாராக இருக்கும்போது இடையிலே குறுக்கிட்டு சில பேர்கள் பேசி அதை கெடுத்துவிட வேண்டாம் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்......... (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவர் அவர்களே முதலமைச்சர் பற்றி தவறான கருத்தை நாட்டிற்குப் பரப்ப வேண்டாம் என்று நாஞ்சிலார் அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்கி அகற்றப்பெற்றது.



**திரு. கி. மனோகரன்** : தலைவர் அவர்களே, அதற்கு பிறகு கடைசியாக ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே இருக்கின்ற காவலர்கள் நீண்ட காலமாக பணி புரிந்தும் 10, 15 வருடங்களாக பணி புரிந்தும் அவர்கள் தற்காலிகமாகவே இருக்கிறார்கள் என்ற பெரும் குறை ஒன்று இங்கே என்னிடம் எடுத்துச் சொல்லப்பட்டது. அந்த பெரும் குறையை நீக்குவதற்கு — அட்டெண்டன்ட்ஸ், பியூன்ஸ், காவலர்கள் எல்லோரையும் சேர்த்துச் சொல்கிறேன்—அவர்களையும் கொஞ்சம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.. (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். அப்பொழுதுதான் ஸ்பீச் பெர்ஃபெக்ட் ஆகும். கடைசியாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, நமது பென்ஷனைப் பற்றி இங்கே பேசினார்கள். 52 ஆம் ஆண்டிலிருந்து கடுமையாக உழைத்து, சுதந்திர போராட்டத்தில்ஈடுபட்டு, அப்போதெல்லாம் நாட்டுமக்களுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் இன்றைக்கு குறைச்சலான அளவிற்கு பென்ஷன் பெற்று வறுமையில் வாடிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களின் மொத்த எண்ணிக்கை தமிழ்நாடு முழுவதிலும் நான் கேள்விப்படுகிறேன், 1,200. அரசு தரப்பிலே பேசிய நண்பர் ஒருவர் கூட பேசும்போது சொன்னார். இப்போது 600 ரூபாய் கொடுக்கின்றோம். அதை ஆயிரம் ரூபாயாக உயர்த்தினால் நன்றாக இருக்கும் என்ற கருத்தை வெளியிட்டார்கள். இரண்டுக்கும் இடையே 780 என்ற ஒன்று இருக்கிறது. அதையாவது நிதியமைச்சர் அவர்கள் செய்வார் என்று நான் எதிர்பார்க்கிறேன். நிதியமைச்சரை செய்யுங்கள் என்று சொல்கின்ற உரிமை முதலமைச்சருக்கு உண்டு. முதலமைச்சர் அந்தக் காரியத்தில் நிச்சயம் ஈடுபடுவார் என்று நான் நம்புகிறேன். இந்த உறுதிமொழியை நான் அவர்களுக்கு கொடுத்துவிட்டுத்தான் இங்கே பேசிக்கொண்டு இருக்கிறேன் என்று சொல்லி என் பேச்சை முடிக்கின்றேன்.

***திரு. மா. சின்னராசு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் மற்றைய மானிய கோரிக்கைகளை வரவேற்று மாண்புமிகு உறுப்பினர் மதிப்பிற்குரிய குப்புசாமி அவர்கள் வலியுறுத்திய அனைத்து கோரிக்கைகளையும் நானும் இங்கே வழி மொழிந்து அவைகளை எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வதற்கு காரணம் நம்முடைய மதிப்பிற்குரிய நாஞ்சிலார் அவர்கள் சொன்னதைப் போல் புரட்சித் தலைவர் அவர்கள் இயக்கத்தைப் பொருத்தளவில் பண பலத்திற்கு என்றும் அவர் இடம் கொடுத்தது கிடையாது.

எங்களைப் போன்ற பாமர மக்கள், சாதாரணமாக இருக்கிற தொழிலாளர்கள், இங்கே பல பேர் உறுப்பினர்களாக வந்து தங்களுடைய வாழ்க்கையை நடத்தக்கூடிய அளவிற்கு அடிப்படை வசதிகளைத் தேடி இருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தால், அந்த வசதிகள் எல்லாம் ஏதோ நாம் மக்களுக்காக

பணியாற்ற வந்தவர்கள் கூடுதலாகக் கோட்பதாக யாரும் கருதி விடவேண்டியதில்லை. மிக அவசியமான, அத்தியாவசியமான தேவையை மட்டுமே அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் என்பதை முதலிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில், அவருடைய செல்வமும், செல்வாக்கும் கோடானு கோடி ஏழை இதயங்களைத் தொட்டிருக்கிறதே யொழிய, எந்தச் செல்வாக்கும், யாருடைய செல்வமும் அவரை வந்து அணுகுவதற்கு — அவர் நெருப்பாக இருந்து, அதை அனுமதித்தது இல்லை என்பதை மாண்புமிகு நாஞ்சிலார் அவர்களுக்கு நான் இங்கே நினைவூட்ட வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன்.

நம்முடைய சட்டமன்றக் குழுக்கள் — அவைக் குழு என்று ஒன்று நாம் தொடர்ந்து வைத்து வருகிறோம். அந்த அவைக் குழுவிலே சட்டமன்றத்திற்கும், சட்டமன்ற விடுதிக்கும் தேவைப் படுகிற பல்வேறு தேவைகளை நாம் தொடர்ந்து தீர்மானங் களாக நிறைவேற்றிக் கொடுத்து வந்திருக்கிறோம். நானும் ஓராண்டுக் காலம் இந்த அவைக் குழுவினுடைய தலைவராக இருந்திருக்கிறேன். ஆனால் நாங்கள் நிறைவேற்றிய எந்தத் தீர்மானமும், பொதுப்பணித் துறையினால் சட்டமன்ற வளா கத்திலே செயல்படுத்தப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவை முன்னவர் அவர் களுடைய கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு, சட்டமன்ற விடுதியைச் சுற்றியிருக்கிற அந்தப் பூங்கா, சில ஆண்டுகளுக்கு முன்னால், அழகாக, சினிமா ஷூட்டிங் எடுக்கிற அளவிற்கு இருந்த அந்தப் பூங்கா, இன்று பராமரிப்பு இல்லாமல் இருக்கிறது. அதைப்போல் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் இருக்கிற சுற்றுப்புறச் சூழ்நிலையும், சுகாதாரமும் முதலிலே நல்ல முறையிலே பாதுகாக்கப்பட வேண்டும், பராமரிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, அங்குள்ள உணவு விடுதிகள் இரண்டும் சுகா தாரத் தன்மை இல்லாமல், சுகாதாரக் கேடுகளுக்கு இடமாக இருக்கின்றன. அதையும் தவிர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று தண்ணீர் பற்றாக்குறை இருந்தாலும், ... ர்களே தாலும், பல்வேறு இடங்களிலே ... முயற்சி ... பரப்ப தண்ணீரை நாம் நகர மக்களுக்குக் கொடுத்து வேண்டிக் ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே லிருந்து வருகிற கிணற்றிலே ஊற்றாக இருக் குடிநீரோடு கலந்து அதைத்தான் நாம் குடி... ஆணைக்கிணங்கி இருக்கிறது. ஆக, அந்த அளவுக்கு அங்கே ப



யும் குறைவாக இருக்கிறது என்பதை முன்னவர் அவர்களின் கவனத்திற்கும், பேரவைத் தலைவர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன். இன்னும் கூட ஒரு சிறப் பான இடமாக, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியை ஆக்க முடியும் என்று கருதுகிறேன்.

நம்முடைய சட்டமன்றத்திலே இருக்கிற நூலகம், பல இலட்சக்கணக்கான நூல்களைக் கொண்டிருக்கிற ஒரு சிறந்த நூலகம். அந்த நூலகத்தைப் பயன்படுத்துவதற்கு வகை யில்லாமல் ஒரு சிறிய, குறுகிய இடத்தில் உட்கார்ந்து படிப் பதற்கான வசதியில்லாமல் இருக்கிற இந்த நூலகத்தை விரி வாக்கி நூலகத்திற்குப் போய் ஒரு குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினர் . . . . . . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள் பேசும்போது **இலாகாவில் நிலுவையாக இருப்பதாகச் சொன்னார்கள். இருபத்தெட்டே கேள்விகள் தான் போடப் பட்டிருக்கின்றன. அவ்வளவுதான். (குறுக்கீடு) அவையிலே இருக்கிறது. (குறுக்கீடு) குறிப்பு அல்ல. நான் கொடுப்பதுதான் குறிப்பு. 28 கேள்விகள் தான் (குறுக்கீடு) அது அல்ல. மொத்த மாக 617 கேள்விகள் தான் எல்லாத் துறைகளிலும் சேர்த்து நிலுவையாக இருக்கிறது. (குறுக்கீடு) அல்ல, நேற்று வரை உள்ளது வேறு (குறுக்கீடு) 28 கேள்விகள் தான். என்னுடைய அலுவலகத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட குறிப்பு. (குறுக்கீடு) உண்மைக்குப் புறம்பாக இருக்கக் கூடாது. நீங்கள் பேசும்போது ** என்ற வார்த்தையை எல்லாம் சொன்னீர்கள். அது பத்திரிகை யிலே வெளி வந்தால் நல்லதாக இருக்காது. **அது அவைக் குறிப்பில் இருப்பது நல்லதல்ல. (குறுக்கீடு).

திரு. கி. மனோகரன்: முதலமைச்சர் தினசரி அவைக்கு வந்து போக வேண்டும் என்று நான் அவரைக் கேட்டுக்கொள் கிறேன். **என்பதை வேண்டுமானால் எடுத்துவிடுங்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வருகிறார்கள். அது அவைக் குறிப்பில் இருப்பது நல்லதல்ல. அது நல்ல முறையல்ல. (குறுக்கீடு) கேள்விகள் சம்பந்தப்பட்டதையும், **அந்த நிலை பற்றியும் பேசிய அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பில் இருப்பது தவறல்ல. ஆகவே, அதை நீக்குகிறேன். (குறுக்கீடு) கேள்வி கிடையாது... முதலமைச்சர் சம்பந்தப்பட்ட கேள்விகள் **என்று சொன் ஆனால் 28 கேள்விகள் தான். (குறுக்கீடு) ஆகவே, எங்கள்... நிதியையும் நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடு) அது முறை ...றுக்கீடு) **என்பதை நீக்குகிறேன்.

தொழிலாளர்

தங்களுடைய ...

படை வசதிக... பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் காரணத்தால், ...

(பிற்பகல் 12–40) [1987 மே 7

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு தலைவர் அவர்களே,
நான் சுருக்கமாகப் பேசி முடித்துக் கொள்கிறேன். நம்முடைய
நூலகத்தை இன்னும் சிறந்த முறையில் பயனுடையதாக ஆக்க
வேண்டும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில், சட்ட மன்ற உறுப்
பினர் அல்லது முதலமைச்சர் அல்லது அமைச்சர் ஒருவர் உரை
யிலிருந்து குறிப்பிட்ட ஒரு கருத்தை எடுத்துச் சொல்லி அதை
எடுத்துத் தாருங்கள் என்று கேட்டால் உடனடியாக அதை
எடுத்துக் கொடுக்கிற வகையில் கம்ப்யூட்டர் சிஸ்டம் அமைத்துத்
தர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பஸ் பாஸ் ஓய்வு பெற்ற சட்ட மன்ற
உறுப்பினர்களுக்கும் வழங்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன். ஓய்வூதியத்தைப் பொறுத்த வரை ரூ. 300
என்றிருப்பதை உயர்த்தி ரூ. 500 ஆக ஆக்க வேண்டும்.
டேர்ம் இருப்பவர்களுக்கு ரூ. 1,000 ஆக ஆக்கித் தர வேண்டு
மென்றும் கேட்டுக் கொள்கிறேன். இரண்டு

சம்பளம் மற்ற கோரிக்கைகளைப் பொறுத்தவரையில் மாண்பு
மிகு உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள் சொன்னதை நானும்
ஆதரித்து வழிமொழிகிறேன். சட்ட மன்றத்திற்கு என்று புதிய
தாகக் கட்டிடம் கட்டவில்லை என்றாலும் கூட இருப்பதை
யாவது ஏர்-கண்டிஷன் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். தற்காலிக ஏற்பாடாகவாவது இதைச் செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் பெரும்
பாலும் கோடை காலத்தில்தான் நாம் அதிக நாட்களுக்கு அவை
யில் உட்கார்ந்து பணியாற்ற வேண்டியிருக்கிறது. சட்டமன்ற
கூடத்தை மட்டுமல்லாமல், அமைச்சர்களின் அறையையும்
ஏர் கண்டிஷன் செய்வது அவசியம் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். வெயில் காலத்தில் இது மிகவும் தேவையாக
இருக்கிறது. அப்போதுதான் அமைதியாக நீண்ட நேரம் அவை
யில் உட்கார்ந்து பணியாற்ற வசதியாக இருக்கும் என்பதை
இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்றத் துறையில் பணியாற்றுகிறவர்கள்
சட்டப் படிப்பில் அனுபவம் பெற்றவர்களாக இருப்பது அவசியம்.
சட்டப் பேரவைத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு சட்டப்
படிப்பு எந்த அளவுக்கு அவசியம் என்பதை நீங்களே ஒப்புக்
கொள்வீர்கள். ஆனால், சட்டப் பேரவைத் துறையில் பணி
யாற்றுகிறவர்கள்—அவர்கள் துணைச் செயலாளராக இரு
லும் மற்றவர்களாக இருந்தாலும் சட்டக் கல்லூரிக்கு மனுகொ
தால் இடம் கிடைப்பது என்பது அரிதாக இருக்கிறது. பிரப்ப
மாலை நேர சட்டக் கல்லூரியில் சட்டமன்றத்தில் பணியாற்று
கிறவர்கள் விண்ணப்பித்தால் ஒரு குறிப்பிட்ட சதவீதம் அவர்
களுக்காக என்றே ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். காரணம் சட்டப் பேரவைத் துறையில் பணி
யாற்றுகிறவர்கள் எல்லோருக்கும் சட்ட அறிவு இணைக்கிணங்கி
துறைக்கும் அது வசதியாக இருக்கும்.......



1987 மே 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்
கள் சார்பில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசிவிடுவார்
கள். ஆகவே, அவரை நேரடியாக அழைக்கிறேன். அதுவும்
20 நிமிஷம்தான். நான் எல்லா உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்
கொள்கிறேன், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைப் பேசும்
படி கேட்டுக் கொள்கிறேன். 20 நிமிஷம். உங்களுக்காக அதிக
மாக அவர்கள் பேச இருக்கிறார்கள். தற்போது மாண்புமிகு
நிதியமைச்சர் அவர்கள் பேசுவார்கள். (குறுக்கீடு). ஒரு மணிக்
குள் முடிக்க வேண்டும் என்கிற காரணத்தால்தான் கேட்டுக்
கொள்கிறேன். எல்லா உறுப்பினர்களும் இந்த வேண்டுகோளை
ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உங்
கள் சார்பில் நான் அவரிடம் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு
நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் பற்றிய மானியக்
கோரிக்கை குறித்தும் பிற துறைகளைப் பற்றிய மானியக் கோரிக்
கைகளைக் குறித்துமான விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்
கள் அத்தனை பேரும் பேசுவதற்குப் போதுமான அளவு நேர
மில்லை என்றாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய அளவுக்
குத் தங்களுடைய உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் இங்கே
தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். என்றாலும்
ரூ. 723 கோடியே 69 இலட்சத்து 65 ஆயிரத்திற்கு மேற்பட்ட
தொகையை இவ்வளவு சீக்கிரத்தில் எனக்குத் தருகிற ஏற்பாட்
டை நீங்கள் எல்லாம் சேர்ந்து செய்ததற்காக மன்ற உறுப்பினர்
கள் அத்தனை பேருக்கும் இந்த இறுதி நாளில் நான் நன்றியைத்
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக இந்த
இறுதி நாளில்—சட்டமன்றம் குறித்த மானியக் கோரிக்கை வரு
கிற நாள்—மானியக் கோரிக்கைகளின் கடைசி நாளில்—மாண்பு
மிகு உறுப்பினர்களெல்லாம் பல கருத்துக்களையும் இங்கே சிறப்
பாக எடுத்து தெரிவித்து, சட்டமன்ற நடவடிக்கையைப் பற்
றியும், சட்டமன்றம் எப்படி இயங்க வேண்டும் என்பதைப் பற்
றியும் சட்டமன்றம் பற்றிய மற்ற வசதி வாய்ப்புக்களைப் பற்றி
யும் இங்கே கோடிட்டுக் காட்டிப் பேசினார்கள்.

ஆக, சட்டமன்றத்தினுடைய பெயரும் புகழும், இதனுடைய
பெருமையும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதற்கான இலக்
கணங்களையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள்.
மாண்புமிகு உறுப்பினர் திரு. நாஞ்சிலார் அவர்களும் இங்கே
சுட்டிக்காட்டினார்கள். அப்படிப்பட்டவைகளையெல்
தளவில் மனதில் இருத்தி, இந்த மன்றத்தினுடைய பெருமையையும்,
கிடையும் காப்பாற்றுகிற அளவுக்கு எல்லா உறுப்பினர்களும்
மன்றத்தின் முக்கியமான நோக்கங்கள், அதன் குறிக்கோள்
எங்கள் கோட்பாடுகள், அதனுடைய நடைமுறைகள் ஜன
தொழிலாளர்கள் ஆகியவற்றைக் காப்பாற்றுகிற முறையில் தமி
தங்களுடைய உரிய புகழோடு அதன் பெருமையை நிலைநாட்டு
படை வசதிகள் முறையில் அந்த வேண்டுகோளை ஏற்று கடமையாற்று
காரணத்தால், அது ஏற்பட வேண்டும் என்பதையும் எல்லோரும்
ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நம்மை நாடு பூராவும் கவனித்துக்கொண்டிருக்கிறது என் பதையும் நாம் நன்கு அறிய வேண்டும். சட்டமன்றத்தில் பொறுப்பேற்றுக் கொண்டு வந்திருக்கிற, உறுப்பினர்கள் சட்டமன்ற நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து தங்கள் கருத்துக்களை எடுத்துத் தெரிவிக்கவும் மற்ற கருத்துக்களோடு பொருத்திப் பார்க்கவும், எடுக்கப்படுகிற முடிவுகளை மக்களுக்கு தெளிவுபடுத்தி விளக்கிக் காட்டவும் அதன் அடிப்படையில் எடுக்கிற நடவடிக்கை களை நடைமுறைப்படுத்தவும் தங்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் தரவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

அந்த வகையிலே இந்த தொடர் கூட்டங்களைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் கூடுமானவரையில் பெரும் ஒத்துழைப்போடு நடத்திச் செல்வதற்கு உறுதுணை புரிந்ததற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை, அவை முன்னவர் என்ற முறையில், தெரிவித்துக் கொள்ளவும் நான் கடமைப் பட்டிருக்கிறேன். ஆளுங்கட்சி கூட இதிலே கொஞ்சம் அக்கறையோடும், ஆர்வத்தோடும், சட்டமன்றத்திலே எந்த அளவிற்கு பொறுப்புக்களை ஏற்று நிறை வேற்ற முடியுமோ அந்த அளவுக்கு தங்கள் தங்கள் நிலையை உணர்ந்து, கருத்துக்களுக்கு அதிக முக்கியத்துவம் தந்து, தங்கள் கட்சியின் கொள்கையை வைத்து அதன் அடிப்படையில் வாதாடி சிலபல பிரச்சினைகளுக்கு உறுதுணை தருவார்களேயானால் நமக்கு மேலும் நல்லதொரு சூழ்நிலை ஏற்படும். அதைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். எதிர்க்கட்சி இருக்க வேண்டும், ஆளும் கட்சியும் இருக்க வேண்டும். ஆளும் கட்சி மாப்பிள்ளை என்றால் எதிர்க் கட்சி மாப்பிள்ளைத் தோழ னாக இருக்க வேண்டும் என்று எடுத்துச் சொன்னார். ஆளும் கட்சி மாப்பிள்ளையாக இருந்தால், மாப்பிள்ளையின் தோழன் மாப்பிள்ளைக்கு உறுதுணை புரிய வேண்டும். சில சமயங்களில் மாப்பிள்ளையாக இருக்கிறவருக்கு உறுதுணையாக இருந்து உதவி புரிகிற அளவிற்கு மாப்பிள்ளை தோழனாக எதிர்க் கட்சி இருக்க வேண்டும். அதற்காக மாப்பிள்ளை உட்கார வேண்டிய மனையில் எதிர்க் கட்சியான மாப்பிள்ளைத் தோழன் உட்காரக் கூடாது என்று அண்ணா சொன்னார். மனையில் மாப்பிள்ளை தான் உட்கார வேண்டும். மனையில் மாப்பிள்ளையின் தோழன் உட்கார்ந்து விடக் கூடாது என்று தெரிவித்திருக்கிறார்கள்.

அதைப் போலவே மற்றொரு உதாரணத்தையும் அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். உள்ளபடியே எல்லோரும் சேர்ந்து சோறு ஆக்க வேண்டுமென்று சொன்னால், பானை யாக இருந்து சோறு ஆக்குவது ஆளுங்கட்சி என்றால், அகப்பை யாக இருப்பது எதிர்க்கட்சியாக இருக்கிறது. பானையில் உள்ள சோறு வெந்திருக்கிறதா, வேகவில்லையா, என்று சொல்ல வேண்டியது அகப்பையின்கடமை. அதிலிருந்து எடுத்துப் பார்த்து பதம் பார்த்துச் சொல்ல வேண்டியது எதிர்க் கட்சியின் கடமை. பதம் பார்த்துச் சொல்லும் அளவிற்கு எதிர்க்





கட்சி நடக்க வேண்டும். அகப்பையைக் கொண்டு பானையை உடைத்துவிடக் கூடாது. ஆனால் பதம் பார்க்கலாம் என்று எடுத்துச் சொன்னார்கள். அந்த அளவிற்கு நல்லதொரு உறவு நிலைமை, சூழ்நிலைமை இருந்து, அவர்கள் எடுத்துச் சொன்ன மாதிரி 234 பேர் உள்ளடங்கிய வகையில் நடத்திச் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வகையிலே உறுதுணையை தொடர்ந்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்றத்தின் புதிய கட்டிடத்தைப் பற்றி எடுத்துச் சொன் னார்கள். அதற்கான வரை படங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அதற்கான வரைபடங்கள் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு தீட்டப் பெற்று முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாவது பரிசு கூட வழங்கப்பட்டன. இதற்கான இடத்தைத் தேடுவதில், இடத்தைப் பெறுவதில் சங்கடங்கள் வந்தன. கோட்டைக்குள் பொருத்தமான இடம் இல்லை. கோட்டைக்கு எதிரிலே கட்டலாமா என்ற முயற்சி இருந்தது. அரசினர் தோட்டத்திலே கட்டலாமா அல்லது செட்டி நாட்டு அரசரின் இல்லத்திற்கு எதிரில் உள்ள பெரிய இடத்திலே கட்டலாமா அல்லது குதிரைப் பந்தய திடலில் கட்டலாமா என்ற நிலைமைகள் இருப்பதால், மற்ற வரை படங்[கள்] மற்ற முயற்சிகள் தனியாக இருந்து, இடம் தேர்ந் தெடுக்கப்பட்ட பிறகு உடனடியாக வேலையைத் தொடங்கலாம். சில ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கி இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது போன்று வசதியான சட்டமன்றம் அமைந்திருக்கக் கூடும். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியது மாதிரி இந்த மண்டபத்தையே குளிர்ச்சாதனம் பொருந்திய மண்டபமாக ஆக்குவது நல்லதுதான். புதியதொரு கட்டிடத்தைக் கட்டினாலும் குளிர்ச் சாதனம் பொருந்திய மண்டபமாக அமை யும். பலவேறுபல வகையான கூட்டங்கள் நடத்துவதற்கு இந்த மண்டபம் பயன்படும். இதைவிட பெரிய மண்டபம் குளிர்ச் சாதனம் பொருந்திய அளவிற்கு, தியேட்டரைப்போல் மண்டபம் அமையும். இப்போது இந்த மண்டபத்தையே குளிர்ச்சாதனம் பொருந்தியதாக ஆக்குவது என்றாலும் அதிகம் செலவாகாது. அதிக நாட்களுக்கு கூட்டம் நடைபெறுவதில்லை. ஆண்டு முழு வதும் 365 நாட்களுக்கு நடைபெறுவதாக இருந்தால் செலவு அதிகம் ஆகும். இதையும் இந்த அரசு யோசிக்கும். இதை குளிர்ச் சாதனம் பொருந்தியதாக ஆக்கும் முயற்சியை மேற்கொண்டு, தனியாக கட்டிடம் கட்டும் முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

நூலகத்தை மேம்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். இட நெருக்கடி காரணமாக இருக்கிறது. நூலகத்திலே வைக்கப்பட வேண்டிய நூல்கள் அத்தனையும் வைக்கப்படவில்லை. பல்வேறு இடங்களில் தலைமைச் செயலகத்திலே சிதறி கிடக் கின்றன. பெரும்பான்மையான பழைய நூல்கள், ரெஃபரென்ஸ் பார்க்க வேண்டிய நூல்கள் இராஜாஜி மண்டபத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. உள்ளபடியே இந்தியாவிலே உள்ள சட்டமன்றத்திற்காக உள்ள நூலகங்களில் மிகச் சிறந்த நூலகம் என்பெயர் பெற்றிருப்பது இந்த நூலகம்தான்.

அதை நடைமுறைப் படுத்துவதற்கு இந்த மாநில அரசே திட்டவட்டமான தெளிவான சிலபல முடிவுகளை நாமே மேற்கொள்ளலாம். அதை இந்த அரசு கொள்கை அளவிலே மேற்கொண்டிருக்கின்றது என்பதை இந்த வாய்ப்பிலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் சில வசதி வாய்ப்புகளை செய்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்குகிற விடுதி பொறுத்தவரையிலே சொல்வார்கள். அந்த விடுதியை வேறு பல மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்குவதற்கு ஏற்ற அளவுக்கு வசதியுடையான என்று சொல்ல முடியாதுதான். வேறு பல மாநிலங்களிலே பார்க்கின்றபோது, அங்கு வரக்கூடிய உறுப்பினர்களுக்காக, அந்த உறுப்பினர்களைப் பார்ப்பதற்காக வருகின்றவர்கள் தங்குவதற்கு லௌன்ஞ் ரூம், படுக்கை அறை என்றெல்லாம் இருக்கும்போது, நம்முடைய அமைப்பு கட்டப்பட்ட தன்மைகள் எல்லாமே கோளாறிலே அமைந்த ஒன்றுதான். சாதாரணமாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் கட்டும்போது தெற்கு பார்த்து கட்ட வேண்டும் என்றுதான் சொல்வார்கள். இங்கே தெற்குப் பார்த்து கட்டியிருக்க வேண்டும். வடக்கு தெற்கு பார்த்து கட்டியிருக்க வேண்டும். காலை வெயில் முழுவதும் உறுப்பினர்கள் அறையிலே தான் விழும். மாலை வெயில் முழுவதும் உறுப்பினர்கள் அறையிலேதான் விழும். கட்டடம் கிழக்கு மேற்காக அமைந்ததே தவறு, அதைவிட பெரிய தவறு ஏழு அடுக்கு மாடியாக வைத்து கட்டியது. அதைவிட தவறு 4 அடி வராண்டா வைத்திருப்பது. உள்ளே வருவதில் தவறில்லை. தனித்தனியாக இருக்க வேண்டும். எப்படி பிளாக் சிஸ்டம் வைத்திருக்கின்றார்களோ, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அங்கே வைத்திருக்கின்றார்களோ அது மாதிரி கட்ட வேண்டும் என்று செயல் குறிப்பும் இருக்கிறது. அதையும் அரசு தனியாக ஆராயும் என்பதை எடுத்து நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிறபோது, அடிக்கடி எல்லோரும் வறட்சியைப் பற்றி எடுத்துச் சொல்லியிருப்பதன் காரணமாக இந்த ஆண்டு எதையும் கேட்க மாட்டார்கள் என்றுதான் நான் கருதினேன். அவர்கள் அதைப் பற்றி வற்புறுத்த மாட்டார்கள் என்றுதான் சொன்னேன். இருந்தாலும் கூட இருக்கின்ற நிலைமைகளைப் பொறுத்து மாண்புமிகு முதல்வர் அவர்களோடு நான் கலந்து பேசியபோது, அவர்களுடைய இசைவைப் பெற்று மாண்புமிகு உறுப்பினர்களுடைய நிலை, மற்ற தன்மைகளை, அவர்களுக்கு ஏற்படுகின்ற செலவுகள் மற்றவைகளை எல்லாம் கணக்கிட்டுப் பார்க்கிற போது, மற்ற மாநிலங்களுடைய தன்மைகளைப் பார்க்கிறபோது, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே எடுத்துத் தெரிவித்தேன். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் எளவுக்கு நாம் ஆரம்பத்திலே இருந்து உறுப்பினர்களுடைய செலவினத்திற்கு கட்டு



படியாகின்ற அளவுக்கு 1978லே ரூ. 550 ஆக இருந்ததை, பிறகு ரூ. 750 ஆக்கி பிறகு ரூ. 800 ஆக்கி, பிறகு ரூ. 850 ஆக்கி, ரூ. 900 ஆக்கி, ரூ. 950 ஆக்கி, பிறகு ரூ. 1,050 ஆக்கி, பிறகு ரூ. 1,250 ஆக்கி, பிறகு ரூ. 1,450 ஆக்கி அதில் வந்து நிற்கிறது. ஆனால் இப்போது இருக்கின்ற சூழ்நிலையில், மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்து தெரிவித்ததன் காரணமாகவும், செலவினங்கள் மற்றவைகள் வளர்ந்ததன் காரணமாகவும், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இசைவோடு உறுப்பினர்களுடைய நாட்படி—1979 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது என்று நான் அவர்களிடத்திலே சொன்னேன்—ஆகவே இப்போது புதுப்பித்துத் தரலாம் என்று சொன்ன பிறகு, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் மாண்புமிகு உறுப்பினர்களுடைய நாட்படி ரூ. 100 ஆக உயர்த்தப்படுகிறது. ஆகவே ரூ. 50 ஆக இருந்தது ரூ. 100 ஆக உயர்த்தப்படுகிறது. தொலைபேசிக் கட்டணம் ரூ. 350 ஆக இருந்தது 1–4–1987 முதல் ரூ. 450 ஆக உயர்த்தப்படுகிறது என்பதையும் இந்த வாய்ப்பிலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ரெயில்வே கூப்பன்களுக்குப் பதிலாக நாம் கட்டணமாக ஒவ்வொரு உறுப்பினர்களுக்குத் தந்து விடுகிறோம். ஏனென்றால் கூப்பன்களை மாற்றும்போது சில பல இடர்ப்பாடுகள் வருகின்றன என்பதையும் அந்த ரெயில்வே பயணத்தை நடத்த முடியாமல் போனால் அதைத் திருப்பி வாங்குவது மற்றவைகளில் எல்லாம் பல சங்கடங்கள் வருகின்றன என்று சொன்னதற்குப் பிறகுதான் அந்தக் கூப்பன்களுக்கு உரிய தொகையை கையிலேயே கொடுத்து விடுவது என்ற முடிவுக்கு வந்து இரண்டு பிரிவாக, ஆண்டுக்கு இரண்டு தடவையாகக் கொடுப்பது என்ற முடிவுக்கு வந்து, ரூ. 4,600 என்று இதுவரையிலே கொடுத்துக் கொண்டு வந்ததை, 1–4–1987 முதல், ரூ. 5,650 ஆக உயர்த்துவது என்றும் இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது.

ஆக இந்த வருடம் அவ்வளவுதான் என்பதையும் எடுத்துச் சொல்லி, இந்த அளவுக்கு இருக்கின்ற சூழ்நிலைகளை மற்றவைகளை கருத்தில் கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். வேறு பல சூழ்நிலைகளை மற்றவைகளை கருதுகிறபோது, ஆண்டுக்கு ஆண்டு ஏதாவது கொஞ்சம் வைத்துக் கொள்ள வேண்டுமே என்பதற்காகவும் சொல்கிறேன். மற்றவைகளை ஒப்பிடும்போது, மிக மிக குறைந்த சம்பளம் வாங்குவது மேற்கு வங்காளம் தான். அங்கே ரூ. 650 தான் மொத்தத்திலே வாங்குகிறார்கள். அடுத்தபடி கேரளாவிலே ரூ. 950 தான் வாங்குகின்றார்கள். மற்ற மற்ற மாநிலங்களிலே கூடுதலாக குறைவாக இருக்கின்றது. இதையெல்லாம் மனதிலே வைத்து, எவ்வளவு கொடுத்தாலும், 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, பென்ஷன் பற்றி சொல்ல வேண்டும்.

[1987 மே 7

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்ஷன் பற்றி தனியாக ஆராய வேண்டும். மத்திய அரசை பொறுத்து. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ரூ. 600 தான் உச்ச வரம்பு வைத்திருக்கின்றார்கள். ஆகவே அதனுடைய தன்மைகளைப் பார்க்கிறபோது, ரூ. 600 என்ற அந்த அளவுக்குத்தான் மாற்றினோம். ஆக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உயர்த்தப்படுமேயானால், அந்த நிலைமையையொட்டி நாமே அதைப் பற்றி யோசிக்கலாம். அதுவரையிலே நாமும் அந்த அளவிலேதான் வைப்போம். அதுதான் முறை என்று சொல்லி இந்த அளவோடு என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன். ஆக இந்த மானிய கோரிக்கைகளை எல்லாம் ஏற்கும்படியாக மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களை கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00'

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது ஒரு மணி. விவாதம் முடிவுற்றது ; இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்.**

திருவாளர்கள் கோ. வீரய்யன், பி.கே.எம். முத்துராமலிங்கம் எ.எஸ்.ஏ. ஆறுமுகம், சோ.மா. இராமச்சந்திரன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்கிற தலைப்பின் கீழ் ரூ. 1,69,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண் 8—தேர்தல்கள்.**

திருவாளர்கள் கே. சுப்பராயன், கோ. வீரய்யன், பி.கே.எம். முத்துராமலிங்கம், டாக்டர் ந. மாசிலாமணி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.



1987 மே 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 70,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.**

திருவாளர்கள் கோ. வீரய்யன், எஸ். ரெத்தினராஜ், பொ. உத்திராபதி, பி.கே.எம். முத்துராமலிங்கம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 1,12,27,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

**கோரிக்கை எண் 43—பல்வகை.**

டாக்டர் ந. மாசிலாமணி, திரு. கே. சுப்பராயன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,18,89,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச் செலவு.

திரு. கே. சுப்பராயன், டாக்டர் ந. மாசிலாமணி, திரு. எஸ். ரெத்தினராஜ் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,50,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.

திரு. கே. சுப்பராயன், டாக்டர் ந. மாசிலாமணி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 3,79,61,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1987 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.



5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(அ) நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1987-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

7. அரசினர் தீர்மானம்.

பேரவைக் குழுக்களுக்குக் கூடுதலாக உறுப்பினர்களை நியமித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, மதிப்பீட்டுக் குழு, சட்ட விதிகள் குழு ஆகியவற்றில் இந்தச் சட்டமன்றப் பேரவையின் சார்பாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஏற்கனவே சட்ட மன்ற மேலவை சார்பாகவும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு அதிலே இடம் பெற்றிருந்தார்கள். இப்பொழுது சட்ட மன்ற மேலவை இல்லாததன் காரணமாக, உறுப்பினர்களுடைய எண்ணிக்கை ஓரளவிற்குக் குறைந்திருக்கிறது. ஆக, குறைந் திருப்பதன் காரணமாக ஓரளவுக்கு இங்கேயே உறுப்பினர் களுடைய எண்ணிக்கையைக் கூட்டலாம் என்கின்ற ஒரு உணர்வு வந்து, அதற்கேற்றபடி நாம் சட்டமன்ற விதிகளைத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அந்த வகையிலே ஒவ்வொரு குழுவிலேயும் இன்னும் ஐந்து உறுப்பினர்களைக் கூடுதலாகப் போடலாம் என்கின்ற ஒரு எண்ணத்தினுடைய அடிப்படையிலே ஆய்வுக் குழுவிலே நாம் எடுத்த எண்ணத்திற்கிணங்க தீர் மானத்தை இந்த அவை நிறைவேற்ற வேண்டும். எனவே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987—88 ஆம் ஆண்டு பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, மதிப்பீட்டுக் குழு மற்றும் சட்ட விதிகள் ஆய்வுக் குழு ஆகிய குழுக்களில் முறையே ஒவ்வொன்றிலும் ஐந்து உறுப்பினர்களைக் கூடுதல் உறுப்பினர்களாகப் பேரவைத் தலைவரவர்கள் நியமிக்கலாம்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (8—5—1987) காலை 10—00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—06 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

102. 1985—86 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வணிகம்) அறிக்கை. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.) (ஆங்கிலம்).

103. 1979—80 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

217. கோரிக்கை எண் 8—தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987—88. (தமிழ், ஆங்கிலம்).

218. கோரிக்கை எண் 42—ஓய்வூதியம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987—88. (தமிழ், ஆங்கிலம்).

219. கோரிக்கை எண் 43—பல்வகை-அகதிகள், தாயகம் திரும்பியோர், குடி பெயர்ந்தோர் துயர் தணிப்பும் மறுவாழ்வும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987—88. (தமிழ், ஆங்கிலம்).

220. சிறுசேமிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987—88. (தமிழ், ஆங்கிலம்).

221. தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987—88. (தமிழ், ஆங்கிலம்).



222. கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987—88 (தமிழ், ஆங்கிலம்).

223. மறுவாழ்வுத் துறை பற்றிய சாதனைத் திட்டம், 1937—88. (தமிழ், ஆங்கிலம்).

224. மனுக்கள் குழுவின் மூன்றாவது அறிக்கை (தமிழ்).

225. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை).

### கோரிக்கை எண். 8—தேர்தல்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே,

மானியக் கோரிக்கை எண். 8 தேர்தல்கள் என்பதின்கீழ் 1987-88 ஆம் நிதியாண்டின் செலவுகளுக்காக ரூ. 70,86,000 அரசுக்கு வழங்கவேண்டுமென்று நான் முன்மொழிகிறேன். இம் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்படும் நிதி பெரும்பாலும் முறையான தேர்தல் அமைப்பில் உள்ள அலுவலர் மற்றும் பணியாளர்களின் ஊதியம், பயணப்படிச் செலவுகளுக்கும், தேர்தல் நிர்வாகத்தில் சீரான நடைமுறைக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

2. 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நாடாளுமன்றத்திற்கும் தமிழக சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் பொதுத தேர்தல்கள் நடைபெற்றன. எனவே, நாடாளுமன்றத்திற்கும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கும் அடுத்த பொதுத் தேர்தல் 1989 ஆம் ஆண்டில் நடைபெற வேண்டும.

3. 1986 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1986 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நீக்குதல் சட்டம் அமுலுக்கு வந்தது. அதன்படி, 1—11—1986 முதல் தமிழ்நாட்டில் சட்டமன்ற மேலவை நீக்கப்பட்டுவிட்டது.

4. தேர்தல் மானியக் கோரிக்கையைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் சுருக்கத்தைத் தந்துள்ளேன். இதனையேற்று மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 1987-88 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம்—கோரிக்கை எண் 8 கொள்கை விளக்கக் குறிப்பு—தேர்தல்கள்.

"மானியக் கோரிக்கை எண். 8 —தேர்தல்கள்" என்பதின்கீழ் 1987-88 ஆம் ஆண்டில் கீழ்குறித்த இனங்களுக்குச் செலவிட தேவைப்படும் தொகை ரூ. 70,86,000 (அனுமதிக்கப்பட வேண்டியவை) ஆகும்.

2015.00 தேர்தல்கள் (திட்டத்தில் சேராதது).

| | | ரூபாய் |
|---|---|---|
| 102. | தேர்தல் அதிகாரிகள்—(எஎ) சட்டமன்றப் பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள் | 67,99,000 |
| | (எபி) மேலவைத் தொகுதிகள் | .. |
| 103. | வாக்காளர் பட்டியலைத் தயாரித்து அச்சிடுதல் :— | |
| | (எஎ) சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள் | 68,000 |
| | (எசி) மேலவைத் தொகுதிகள் .. | .. |
| 104. | நாடாளுமன்ற மக்கள் அவைக்கும் மாநிலச் சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறுகையில் அவற்றை நடத்துவதற்கான செலவுகள் | 1,32,000 |
| 105. | நாடாளுமன்றத்துக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கு ஆகும் செலவுகள்— | |
| | (எஎ) இடைத் தேர்தல்கள் | 13,000 |
| | (எபி) நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல் | 14,000 |
| 106. | மாநிலச் சட்டமன்றத்திற்குத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள்— | |
| | (எஎ) மாநில சட்டமன்றப் பேரவை .. | 60,000 |
| | (எபி) மேலவைத் தொகுதிகள் .. | .. |
| | மொத்தம் .. | 70,86,000 |



2. மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள், கீழே விளக்கமாக கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்குச் செலவு செய்யப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது :—

### 102. தேர்தல் அதிகாரிகள் :

எஎ. சட்டமன்றப் பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள் : மதிப்பீடு ரூ. 67,99,000.

தலைமைச் செயலகத்தில், பொது (தேர்தல்கள்) துறைக்குத் தலைமை தேர்தல் அதிகாரியும், இணை தலைமைத் தேர்தல் அதிகாரியும் (இணைச் செயலாளர்), பொறுப்பு வகிக்கின்றனர். அவர்களுக்கு உதவும் பொருட்டு பிரிவு அலுவலர்கள், உதவிப் பிரிவு அலுவலர்கள், இன்னும் மற்ற ஊழியர்களும் நிலையான அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளியூர் பகுதிகளில் எல்லா மாவட்ட (சென்னை நீங்கலாக) ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்கள், வட்ட ஆட்சியர் அலுவலகங்கள், தேர்தல் பதிவு அதிகாரிகளாகப் பொறுப்பு வகிக்கும் வருவாய் கோட்ட அதிகாரிகளின் அலுவலகங்கள், சேலம், திருச்சிராப்பள்ளி நகராட்சிகளின் ஆணையர் அலுவலகங்கள் மற்றும் கோயம்பத்தூர், மதுரை மாநகராட்சிகளின் ஆணையர் அலுவலகங்கள் ஆகியவற்றில் தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகளைக் கவனிப்பதற்கென நிலையான அடிப்படையில் ஓர் உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் சென்னை மாநகராட்சி ஆணையர் அலுவலகத்தில், வட்ட ஆட்சியர் ஒருவர், உதவியாளர் மூவர், தட்டச்சர் ஒருவர், இளநிலை பணியாளர் ஒருவர், சிற்றெழுத்தர் ஒருவர், அலுவலக உதவியாளர் ஒருவர் ஆகியோர் நிலையான அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலே குறிப்பிட்ட நிலையான அலுவலர்கள், ஊழியர்களின் சம்பளச் செலவுகள் தவிர, மாவட்டத் தேர்தல் அதிகாரிகள், தேர்தல் பதிவு அதிகாரிகள், உதவித் தேர்தல் பதிவு அதிகாரிகள் ஆகியோரின் பயணச் செலவுகளும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். அவர்களின் அலுவலகச் செலவுகள் எதிர்பாராத செலவினங்கள், தபால், தந்தி, தொலைபேசிக் கட்டணங்கள் தேர்தல் சார்பான சிறப்புப் பணிகளுக்காக வழங்கப்படும் ஊதியங்கள் போன்றவையும் இக்கணக்குத் தலைப்பின்கீழ் அடங்கும்.

மேலே விவரிக்கப்பட்டுள்ள செலவினங்களுக்காக நிதி ஒதுக்கும் தேவை. எனவே, மேற்குறித்த அளவில் செலவு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் ஐம்பது விழுக்காட்டினை மத்திய அரசு பகிர்ந்து கொள்ளுகிறது.

**102. தேர்தல் அதிகாரிகள்.**

**எபி. மேலவைத் தொகுதிகள்—மதிப்பீடு இல்லை.**

1986 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1-ம் தேதி முதல் 1986-ம் ஆண்டின் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நீக்குதல் சட்டம் நடைமுறைக்கு வந்து, அதன்படி தமிழ்நாட்டில் சட்டமன்ற மேலவை நீக்கப்பட்டதால், இத்தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கம் கோரப்படவில்லை.

**103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல் : மதிப்பீடு ரூ. 68,000.**

இம்மாநிலத்திலுள்ள சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுவதற்கான எல்லாவிதமான செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப்படும். இப்பணிக்காகத் தற்காலிகமாக நியமிக்கப்படும் அலுவலர்கள், பணியாளர்களின் சம்பளம், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்தலைப்பின்கீழ் அடங்கும்.

1987-88 ஆம் நிதியாண்டில் வாக்காளர் பட்டியல்களைத் தீவிரமாக திருத்துவதைப் பற்றி தகவல் இல்லை. எனினும், சென்னை ஆவணக் காப்பகத்தில் வாக்காளர் பட்டியல்களைக் காப்பதற்காக நிலையாக நியமிக்கப்பட்டுள்ள ஓர் உதவியாளர் ஒரு சிற்றெழுத்தர் ஆகியோரின் சம்பளச் செலவுகளுக்காக மேலே குறித்த அளவில் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது.

இச்செலவினங்களை மாநில அரசும் மைய அரசும் சரிபாதியாகப் பகிர்ந்து கொள்ளுகின்றன.

**103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல் : ஏ.சி. மேலவைத் தொகுதிகள் : மதிப்பீடு : இல்லை.**

1986 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் தேதி முதல் 1986 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நீக்குதல் சட்டம் நடைமுறைக்கு வந்து, அதன்படி தமிழ்நாட்டில் சட்டமன்ற மேலவை நீக்கப்பட்டதால், இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கம் கோரப்படவில்லை.



**104. நாடாளுமன்ற மக்கள் அவைக்கும், மாநில சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறுகையில் இவற்றை நடத்துவதற்கான செலவுகள் மதிப்பீடு ரூ. 1,32,000.**

நாடாளுமன்றத்திற்கும் சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இதன்கீழ் அடங்கும். 1984 ஆம் ஆண்டில் தான் நாடாளுமன்றத்திற்கும் தமிழ்நாடு சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. எனவே, நாடாளுமன்றத்திற்கும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கும், வரும் 1989 ஆம் ஆண்டில் அடுத்த பொதுத் தேர்தல்கள் நடைபெறும். மாவட்டங்களில் வாக்குப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள தனியார் கட்டடங்களுக்கான வாடகை, அதற்கான காவலர்களின் சம்பளம், வாக்குப் பெட்டிகளைப் பராமரிக்கும் செலவுகள், பொதுத் (தேர்தல்) துறையில் உள்ள மோட்டார் வாகனங்களின் பராமரிப்பு, பெட்ரோல்செலவுகள் போன்ற ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய செலவினங்களும் இதன்கீழ் அடங்கும். மேற்குறித்த செலவினங்களுக்கான இத்தலைப்பின்கீழ் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் ஐம்பது விழுக்காட்டினை மத்திய அரசு பகிர்ந்து கொள்ளுகிறது.

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள் என. இடைத்தேர்தல்கள் மதிப்பீடு : ரூ. 3,000**

நாடாளுமன்றத் தொகுதிகளில் இடைத் தேர்தல்கள் நடைபெற்றால் அதற்காகும் அனைத்து செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். தற்சமயம், நாடாளுமன்றத் தொகுதிகள் ஏதும் இம்மாநிலத்தில் காலியாக இல்லை. எனவே, இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது.

இச்செலவினங்கள் முழுவதையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளுகிறது.

**105. நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் எபி. நாடாளுமன்றத் தேர்தல்கள். மதிப்பீடு : ரூ. 14,000.**

நாடாளுமன்றத்திற்குத் தனியே பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் எல்லாம் முதலில் இத்தலைப்பின்கீழ் பதியப் பெற்று பின்னர் மைய அரசினரால் திருப்பித் தரப்படும்.

1984 டிசம்பர் திங்களில் நாடாளுமன்றத்திற்கும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. எனவே, 1987-88ல் நாடாளுமன்றத்திற்குத் தனியே பொதுத் தேர்தல்கள் நடப்பதற்கு வாய்ப்பேதுமில்லை. எனவே, இத்தலைப்பின்கீழ் அடையாள நிதி ஒதுக்கம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது.

இச்செலவினங்கள் அனைத்தையும் மத்திய அரசே மேற்கொள்ளுகிறது.

**106. மாநில சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :**

**ஏஏ. மாநிலச் சட்டமன்றப் பேரவை :**

**மதிப்பீடு : ரூ. 60,000.**

தனியாக மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குப் பொதுத் தேர்தலோ இடைத்தேர்தலோ நடைபெற்றால் அதன் தொடர்பான செலவினங்கள் இதன்கீழ் அடங்கும்.

1984 டிசம்பர் திங்களில், நாடாளுமன்றத்திற்கும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. எனவே, சட்டமன்றப் பேரவைக்குத் தனியே பொதுத் தேர்தல்கள் நடப்பதற்கு வாய்ப்பேதுமில்லை. பொதுத் தேர்தல் துறையில் ப்ளெயின்பேப்பர் காப்பியர் ஒன்று வாங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதற்கான காகிதம் மற்றும் உதிரி உறுப்புகள் வாங்குவதற்கு இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

இத்தலைப்பின்கீழான செலவினங்கள் அனைத்தையும் மாநில அரசே மேற்கொள்ளுகிறது.

**106. மாநில சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :**

**ஏபி. சட்டமன்ற மேலவை :**

**மதிப்பீடு : இல்லை.**

1986 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் தேதி முதல் 1986 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நீக்குதல் சட்டம் நடைமுறைக்கு வந்து, அதன்படி தமிழ்நாட்டில் சட்டமன்ற மேலவை நீக்கப்பட்டதால், இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கம் கோரப்படவில்லை.



## நிதி (ஓய்வூதியம்) துறை

**கோரிக்கை 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.—**

இக்கோரிக்கையில் கீழ்க்காணும் பெருந்தலைப்புகள் அடங்கியுள்ளன :

| | | ரூ. |
|---|---|---|
| 2071 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் .. .. .. | 105,60,96,000 |
| 2235 | சமூகப் பாதுகாப்பு நலனும் சமூகப் பாதுகாப்பு குறித்த ஏனைய திட்டங்களும் .. .. .. | 1,86,41,000 |
| | | 107,47,37,000 |

அரசுப் பணியாளர்கள், மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள், நகராட்சிப் பணியாளர்கள் முதலியோர் தொடர்பாக ஓய்வூதியத்தின் ஒரு பகுதியினை மொத்தத் தொகையாக்குதல் உட்பட ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள், வருங்கால வைப்பு நிதிக்கான பங்குத் தொகை அல்லது அவர்களுடைய குடும்பங்கள் தொடர்பாக குடும்ப ஓய்வூதியம் முதலியவை குறித்த செலவுகளை செய்வதற்காக இக்கோரிக்கை ஏற்பட்டுள்ளது.

**ஓய்வூதியம், இறப்பு—ஓய்வூதியம் பணிக்கொடை :**

தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகள் 1-7-1960 முதல் செயலுக்கு வந்தன. இந்த விதிகளின் படி 1-10-1979 வரை அரசுப் பணியாளர் ஒருவர் 25 ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்திருந்தால், அவர் ஓய்வு பெறும்போது சராசரி ஊதியத்தில் 30/80 என்ற வீதத்தில் ஓய்வூதியம் பெற்றார். 25 ஆண்டுகளுக்கு மேல் அவர் தகுதிப்பணி புரிந்திருந்தால், சில நிபந்தனைகளுக்குட்பட்டு, சராசரி ஊதியத்தில் 33/80 வரை அதிக ஓய்வூதியம் வழங்கப்பட்டது. இந்திய அரசிடமிருந்து

பெறப்பட்ட நடைமுறைக்கேற்ப, ஓய்வூதியம் கணக்கிடும் நடை
முறையை 1–10–1979 முதல் அரசு பின்வருமாறு மாற்றி
அமைத்துள்ளது :—

| | |
|---|---|
| 1. ஓய்வூதியத்திற்காகக் கணக்கிடப்படும் சராசரி ஊதியத்தில் முதல் 1,000 ரூபாய்வரை. | மாதாந்திர ஓய்வூதியம் சராசரி ஊதியத்தில் 50 சதவீதம். |
| 2. ஓய்வூதியத்திற்காகக் கணக்கிடப்படும் சராசரி ஊதியத்தில் அடுத்த 500 ரூபாய் வரை. | மாதாந்திர ஓய்வூதியம் சராசரி ஊதியத்தில் 45 சதவீதம். |
| 3. ஓய்வூதியத்திற்காகக் கணக்கிடப்படும் சராசரி ஊதியத்தில் எஞ்சிய தொகைக்கு. | சராசரி ஊதியத்தில் 40 சதவீதம். |

ஓய்வு பெறும் வயது 55 ஆண்டுகள் என்பதிலிருந்து 58
ஆண்டுகள் உயர்த்தப்பட்டதைக் கருத்தில் கொண்டு, மேற்
சொன்னபடி நிலைகளின் அடிப்படையில் கணக்கிடப்படும்
ஓய்வூதியம், உயர்ந்த அளவு பணிக்கால அளவான 33
ஆண்டுக்குத் தொடர்புடையதாயிருக்கும். ஓய்வூதியத்தின்
உச்ச வரம்பு நீக்கப்பட்டிருக்கிறது.

இருபது ஆண்டுகளே பணி புரிந்திருந்தாலும் ஓய்வுக்கால
கூடுதல் நன்மைகளுடன் அரசுப் பணியாளர்கள் தாங்களாகவே
ஓய்வு பெற அரசு அனுமதி வழங்கியுள்ளது. உயரளவு 5
ஆண்டுகள் வரையில் ஓய்வூதிய கணக்கில் கூடுதலாகச் சேர்த்துக்
கொள்ளப்படுகிறது. இவ்வாறாக, அரசுப் பணியாளர்கள் 20
ஆண்டுகள் பணிபுரிந்து தாமாகவே ஓய்வு பெற்றால் அவர்களும்
நிதித்துறையின் (ஓய்வூதியம்) 2–2–1980 நாளிட்ட 57 ஆம் எண்
அரசாணையில் குறிப்பிடப்பட்டவீதங்களில் ஓய்வூதியம் பெறுவர்.
இத்துடன் முடிவு பெற்ற ஒவ்வோர் ஆறு மாத பணிக்கும்
ஊதியத்தில் ¼ பங்கு என்ற வீதத்தில் இறப்பு ஓய்வூதியப் பணிக்
கொடையும் அனுமதிக்கப்படுகிறது. இது ஊதியத்தில் 16½
மடங்கு என்ற உயரளவிற்கு உட்பட்டதாகும். உயரளவு பணிக்
கொடை 31–3–1985 முதல் ரூ. 36,000-லிருந்து ரூ. 50,000 ஆக
மேலும் உயர்த்தப்பட்டுள்ளது.

1–10–1979-க்கு முன்னர் ஓய்வு பெற்ற எல்லா அரசு ஊழியர்
களுக்கும் தளர்த்தப்பட்ட ஓய்வூதியத்தின் பயன்கள் நீட்டிக்கப்
பட்டுள்ளன.





1–4–1978க்கு முன்னர் ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர்
ஒருவரின் குறைந்த அளவு ஓய்வூதியம், மாதம் ஒன்றுக்கு
50 ரூபாயாக இருந்தது. தமிழ்நாடு மூன்றாவது சம்பளக் குழு
செய்த பரிவுரைகளின் அடிப்படையில் 1–4–1978 முதல் குறைந்த
அளவு ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாயாக உயர்த்தப்
பட்டுள்ளது. பின்னர் 1–4–1982 முதல் குறைந்த அளவு
ஓய்வூதியம் மாதம் 125 ரூபாயாக உயர்த்தப்பட்டு இது தமிழ்நாடு
நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரையின்படி 1–10–1984
முதல் மேலும் ரூ. 235 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரையின்படி ஓய்வூதிய
தாரர்களுக்கு பணியாளர்களுக்கு வழங்கும் அகவிலைப்படியைப்
போலவே வழங்கப்பட்டு வருகிறது.

ஓய்வூதியத் தொகை மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய்க்கு
மேற்படாதிருந்தால், அத்தொகை பண அஞ்சல் மூலமாக அரசுச்
செலவில் அனுப்பப்படுகிறது. மேற்படி தொகை 300 ரூபாய்க்கு
மேற்பட்டால், அவரவர் விரும்புகிற வங்கி மூலமாக அனுப்பப்
படுகிறது.

ஒரு நபர் குழுவின் சிபாரிசின் பேரில் ஓய்வூதியம்/குடும்ப
ஓய்வூதியம் பெறுபவர்கள் அவர்கள் பெற்றுவரும் மருத்துவ
ஈட்டுச் செலவுக்குப் பதிலாக மருத்துவப் படியாக மாதம் ரூ.15
கிடைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

மாதம் ஒன்றுக்கு 750 ரூபாய் வரை ஓய்வூதியம் பெறுபவர்கள்
பண்டிகை முன்பணம் ஒரு மாத ஓய்வூதியம் அல்லது ரூ. 100
இதில் எது குறைவோ அதைப் பெறத் தகுதியுடையவர் ஆவர்.

28–2–1978 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெறும்
அரசுப் பணியாளர்களைப் பொறுத்தவரை, தங்களுடைய
ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுக்க
வேண்டும் என அவர்கள் ஓய்வுபெற்ற நாளிலிருந்து ஓராண்டிற்குள்
விண்ணப்பித்துக் கொண்டால், மருத்துவச் சோதனை இன்றியே
அவர்களுடைய ஓய்வூதியத்தில் ஒரு பகுதி அவர்களுக்கு மொத்த
மாக்கிக் கொடுப்பது அனுமதிக்கப்பட்டு வருகிறது. தாமாகவே
முன்வந்து ஓய்வு பெற்று தங்களுடைய ஓய்வூதியத்தில் ஒரு
பகுதியை மொத்தமாக்கிக் கொடுக்க வேண்டுமென தாம் ஓய்வு
பெற்ற நாளிலிருந்து ஓராண்டுக்கால அளவிற்குள் விண்ணப்பித்து.
கொண்டால், அவர்களுக்கும் இச்சலுகை நீட்டிக்கப்பட்டுள்ளது.
1–4–1981 முதல் ஓய்வூதியம் பெறும் அரசு அலுவலர்களுக்கு
அவர்கள் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகள் நிறைவு
பெற்றவுடன் அவர்கள் ஓய்வூதியத் தொகையில் முன்பு ஒரு
பகுதியை மொத்தமாகப் பெற்றுக் கொண்டதை முழுமையாக்கி
முழு ஓய்வூதியம் பெற ஆணை பிறப்பித்துள்ளது.

நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரைப்படி இடைக்கால
நிவாரணமாக ரூபாய் 20 எல்லா ஓய்வூதிய தாரர்களுக்கும்
அளிக்கப்பட்டுள்ளது. இத்துடன் 1-10-1984 முதல் அடிப்படை
ஓய்வூதியத்தில் 7-லிருந்து 30 சதவீதம் வரை உயர்வு அளிக்கப்
பட்டுள்ளது. 1-1-1984 முதல், ஓய்வூதியத்திற்கு தகுதியுடைய
பணிகாலத்தைத் தீர்மானம் செய்ய, 3 மாதங்களுக்கும் அதற்கு
மேலும் சமமாக உள்ள ஒரு வருடத்தின் ஒரு பகுதி ஒரு முழு
அரையாண்டாகக் கருதப்பட்டு கணக்கிடப்படுகிறது.

குடும்ப ஓய்வூதியம் :

அரசுப் பணியாளர் ஒருவர் பணியாற்றும்போதோ, ஓய்வு
பெற்ற பின்னரோ, இறந்துவிட்டால், அவரது குடும்பம்
ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஆனால், அவர்
இறக்கும்போது ஓராண்டு காலமாவது பணியாற்றியிருக்க
வேண்டும். அலுவலர் இறக்கும்போது அல்லது பணியிலிருந்து
ஓய்வு பெறும்போது அவர் பெற்று வந்த சம்பளத்தின் அடிப்
படையில் இந்த குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இறந்த
அலுவலரின் மனைவிக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம்
வழங்கப்படும். அவர் இறந்த பிறகு கூட உரிய வயதடையாத
அவரது குழந்தைகளுக்கு அந்த ஓய்வூதியம் வழங்கப்படும்.
1-4-1979-க்கு முன்னர் குடும்ப ஓய்வூதியத்திட்டத்தின்கீழ்
வராத குடும்பங்கள் அனைத்திற்கும் 1-4-1979-லிருந்து அத்
திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. குடும்ப ஓய்வூதியம் கணக்கிடும்
அளவை, அலுவலர் ஓய்வு பெறும் நாளில் கடைசியாகப் பெற்று
வந்த சம்பளத்தின் 30 சதவிகிதமாக மேலே குறிப்பிட்ட
நாளிலிருந்து மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. இந்த குறைந்த
அளவு குடும்ப ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 125 ஆக
1-4-1982 முதல் உயர்த்தப்பட்டு, மேலும் அதை ரூ. 235 ஆக
1-10-1984 முதல் தமிழ்நாடு நான்காவது சம்பளக்குழுவின்
பரிந்துரைப்படி உயர்த்தப்பட்டு உள்ளது. தற்போதுள்ள
விதிகளின்படி, தொடர்ந்து ஏழாண்டுகளுக்குக் குறையாமல்
பணியாற்றியுள்ள அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்
போது இறக்க நேரிடின் அவருடைய குடும்பத்திற்கு, அவர்
இறந்த பிறகு ஏழாண்டுக்காலம் அவர் உயிருடன் இருந்திருந்தால்
ஆண்டு முதிர்வு காரணமாக அவர் ஓய்வு பெற்றிருக்கலாகும்
நாள் இவற்றில் எது குறைவோ அக்காலம் வரையில் அதிக
வீதத்தில் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும். அரசுப் பணியாளர்
கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவீதம்
குறிப்பிட்டுள்ள விதிகளின்படி, அனுமதிக்கத் தக்க குடும்ப
ஓய்வூதியத்தைப் போல இரு மடங்கு இவற்றில் எது குறைவோ
அத்தொகை குடும்ப ஓய்வூதியத் தொகையாக இருக்கும். முன்பு
உயர்த்தப்பட்ட உயரளவு குடும்ப ஓய்வூதியம் ரூபாய் 300 ஆகும்.
தமிழ்நாடு மூன்றாவது சம்பளக் குழு பரிந்துரைத்த அடிப்
படையில் 1-4-1979-லிருந்து அனுமதிக்கத்தக்க உயர்த்தப்பட்ட



குடும்ப ஓய்வூதியம் திங்கள் ஒன்றுக்கு ரூ. 500 என்றும் வரம்புக்
குட்பட்டு பணியாளர் கடைசியாக வாங்கிய சம்பளத்தில் 50
சதவீதமாக இருக்கிறது. உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம்,
பணியிலிருக்கும்போது இறந்த நாளுக்குப் பிறகு ஏழாண்டுக்கால
அளவு, ஆண்டு முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றிருக்கலாகும்
நாள் இவற்றுள் எது குறைவோ அதுவரையில் அனுமதிக்கப்படும்.
தமிழ்நாடு நான்காவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்
அடிப்படையில் குடும்ப ஓய்வூதியத்தின் வரம்பு ரூ. 800 ஆக
உயர்த்தப்பட்டுள்ளது.

1956 ஆம் ஆண்டின் மாநிலங்கள் சீரமைப்புச் சட்டத்தின்படி
மாநிலங்கள் பிரிக்கப்படாமலிருந்த சென்னை மாநிலத்தில்
எந்த இடத்திலிருந்தும் ஓய்வு பெற்று இறந்த அரசு ஊழியர்களின்
குடும்பங்களுக்கு 1-4-1979 முதல் ஓய்வூதியம் பெறத் தகுதி
யுடையவர் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.
அத்தீர்ப்பின்படி, முன்பு பிரிக்கப்படாத சென்னை மாநிலத்தி
லிருந்து ஓய்வு பெற்று பின்னர் இறந்த அரசு ஊழியர்களின்
குடும்பங்களுக்கும் ஓய்வூதியம் பெற அரசு வகை செய்துள்ளது.

குடும்ப ஓய்வூதியம் தொடர்ந்து அளிக்கும் சலுகை, அரசுப்
பணியாளர்களின் மகன்கள், திருமணமாகாத மகள்கள் முறையே
18, 21 வயது அடைகின்ற வரையில் என்பதற்குப் பதிலாக,
21, 24 வயது அடைகின்ற வரையில் அவர்களுக்கு அளிக்கப்
டலாமென்றும், அரசு ஆணையிட்டுள்ளது. திருமணமாகாத
மகள்கள் பொறுத்தவரை, அவர்கள் மேலும் 30 வயது அடையும்
வரை குடும்ப ஓய்வூதியம் பெற அரசு ஆணையிட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் :

தனியார் (மான்யம் பெறும், உள்ளாட்சி மன்றம்) பள்ளி
களிலிருந்து 1-6-1970-ல் அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு
பெற்ற ஆசிரியர்களுக்கு மான்யம் பெறும் பள்ளிகளிலிருந்து
1-4-1972-ல் அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெற்ற
ஆசிரியல்லாத பணியாளர்களுக்கும், மாநில அரசுப் பணியாளர்
களுக்குப் பொருந்துகிற தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகள்
பொருந்தும். குறிப்பிட்ட பல்வேறு தேதிகளுக்கு முன்னர் ஓய்வு
பெற்றவர்களுக்கும் ஓய்வூதியத் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.
மாநில அரசுப் பணியாளர்களுக்கு நிகராக ஓய்வூதியம், பணிக்
கொடை, குடும்ப ஓய்வூதியம் ஆகியவற்றை அவர்கள் பெறு
கின்றனர். ஓய்வூதியத்திற்கு இறுதி அமைதி கிடைப்பதில்
தாமதம் ஏற்பட்டால், தற்காலிக ஓய்வூதியம், பணிக்கொடையும்
பெற அவர்களுக்குத் தகுதியுண்டு.

தனியார் (உள்ளாட்சி மன்றத் தனிப்பட்ட) கல்வி நிறுவனப் பணியாளர்களுக்கு குறிப்பிட்ட பல்வேறு தேதியிலிருந்து குடும்ப ஓய்வூதிய நன்மைகள் அனுமதிக்கப்பட்டன. அதாவது, தனியார் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கு 1–4–1962-லிருந்தும், தனியார் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு 1–4–1972-லிருந்தும் இந்த நன்மைகள் வழங்கப்பட்டன. குடும்ப ஓய்வூதியம் குறித்த நிர்ணயிக்கப்பட்ட தேதிகளுக்கு முற்பட்ட நேர்வுகளிலும் குடும்ப ஓய்வூதிய நன்மைகள் வழங்குவதற்கு 13–3–1980-ல் அரசு ஆணை பிறப்பித்தது.

நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் :

14–1–1970-க்கு முன்னர் ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 தனி ஓய்வூதியம் பெற்று வந்தனர். இந்த ஓய்வூதியத்தை அரசு 16–4–1980-லிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 100 ஆக உயர்த்தியுள்ளது. இது மேலும் 1–4–1982 முதல் 125 ரூபாயாக உயர்த்தப்பட்டிருந்தது. இக்குறைந்த அளவு ஓய்வூதியத்தினை ரூபாய் 235 ஆக 1–10–1984 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு தனி ஊதியம் பெற்று வந்தவர்களை மற்ற முறையான நகராட்சி ஓய்வூதியம் பெறுபவர்களைப் போல, முறையாக நகராட்சி ஓய்வூதியம் பெறுபவர்களாக மாற்ற அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்பட்டு வரும் அகவிலைப்படியினையும் வழங்கப்பட்டு வருகிறது.

பிற ஓய்வூதியப் பயன்கள் :

(1) 1–10–1984 அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் பல்கலைக் கழக மான்யக் குழுவின் ஊதிய விகிதங்கள் பெறும் ஆசிரியர்களுக்கு, 528 பள்ளிகளுக்கு கொடுக்கப்பட்ட அகவிலைப் படி மற்றும் கூடுதல் அகவிலைப்படி ஆகியவற்றை ஓய்வூதியப் பயன்கள் மற்றும் ஓய்வு பெறும்போது ஈட்டிய விடுப்பை சரண் செய்து பெறும் விடுப்பு சம்பளத்திற்குக் கணக்கிட அகவிலை சம்பளமாக மாற்றி அரசு ஆணையிட்டுள்ளது.

(2) 1–10–1987 அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு, 30–9–1987 வரை ஏற்பளிக்கப்படும் அகவிலைப்படியை, ஓய்வூதியப் பயன்களுக்கு கணக்கிட அகவிலை சம்பளமாக மாற்றி அரசு ஆணையிட்டுள்ளது.



(3) மறு நியமனம் செய்யப்படும் படைத்துறை ஓய்வூதியர்களுக்கு, அவர்களுடைய மறுநியமன சம்பளம், நிர்ணயம் செய்யப்படும் போது, படைத்துறைப்பணி ஆணை பெற்றவர்களுக்கு ஓய்வூதியத் தொகையில் முதல் ஐநூறும், படைத்துறை பணி ஆணையை பெற்றவர்களின்படி நிலைக்குக் கீழே உள்ளவர்களுக்கு முழு ஓய்வூதியத் தொகையையும் தவிர்த்து கணக்கிட அரசு ஆணையிட்டுள்ளது.

ஓய்வூதியர்களின் மனக்குறைகள் மற்றும் சிக்கல்களைத் தீர்க்க அரசால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் :

(1) பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறையில் ஓய்வூதியர்களின் மனக்குறைகளைத் தீர்க்க ஓய்வூதியர்களின் மனக்குறைகளைத் தீர்க்கும் பிரிவு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது.

(2) மேலும் ஓய்வு பெற்றவர்களின் சிக்கல்களை விவாதித்து தீர்த்து வைப்பதற்கு ஓய்வு பெற்ற அலுவலர்களின் சங்கத்துடன் காலாண்டு கூட்டம் நடத்தி வருகிறது.

(3) ஓய்வூதியர்களின் பிரச்சினைகளை விவாதிக்க கருவூலக் கணக்குத் தலைவர் மற்றும் துணை மாநிலக்கணக்காய்வுத் தலைவரைக் கொண்ட ஒரு ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப் பட்டுள்ளது.

கொள்கைக் குறிப்பு.

1987-88 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம்—கோரிக்கை எண் 43 பல்வகை—கடல் கடந்த நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கும், குடிபெயர்ந்தோர்களுக்கும் துயர் தணிப்பும் மறுவாழ்வும்.

இலங்கை, பர்மா, வியட்நாம் நாடுகளிலிருந்து தாயகம்
திரும்புவோரை வரவேற்று குடியமர்த்தும் பொறுப்பினை 1969
ஆம் வருடம் முதற்கொண்டு மறுவாழ்வுத் துறை ஏற்றுக்கொண்
டுள்ளது. 1986-87 ஆம் வருடத்தில் பர்மாவிலிருந்தோ, வியட்
நாமிலிருந்தோ தாயகம் திரும்புவோர் யாரும் வரவில்லை.
இலங்கையில் இனக்கலவரத்தின் காரணமாக தலைமன்னாருக்
கும் இராமேசுவரத்துக்கும் இடையே உள்ள கப்பல் போக்கு
வரத்து 1984 ஆம் வருடம் அக்டோபர் மாதம் முதல் நிறுத்தப்
பட்டுள்ளது. 1986-87 ஆம் வருடத்தில் (31-1-1987 வரை

91 நபர்களைக் கொண்ட 46 குடும்பங்கள் இலங்கையிலிருந்து இந்தியா வந்துள்ளனர். எதிர்பாராத அளவில் 5-2-1985 முதல் இலங்கையிலிருந்து வரத்தொடங்கிய தமிழ் அகதிகள் 1986-87 ஆம் வருடத்திலும் வந்துள்ளனர். மறுவாழ்வுத் துறை இந்தப் புதிய பொறுப்பினையும் ஏற்றுக்கொண்டு வருபவர்களுக்கு குடியிருப்பு வசதிகள், அடிப்படைத் தேவைகள் ஆகியவற்றை வழங்கி வருகிறது. இம்மறுவாழ்வுத் துறை, அகதிகளின் துயர் துடைப்புக்காக 1986-87 ஆம் வருடம் முழுவதும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது.

1964 ஆம் வருடம் மற்றும் 1974 ஆம் வருடங்களில் செய்து கொண்ட இந்திய—இலங்கை ஒப்பந்தங்களின்படி 6 இலட்சம் இந்திய வம்சா வழியினரை இந்தியா ஏற்றுக் கொள்ள வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. ஆனால் 1983 ஆம் வருடம் ஜூலை மாதத்திலிருந்து நடைபெற்ற வன்முறை சம்பவங்களினால் இலங்கை அரசு இந்திய அரசுடன் 1986 ஆம் வருடம் ஜனவரி மாதம் மீண்டும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி இலங்கை அரசு மேலும் 94,000 இந்திய வம்சாவழியினருக்கு குடியுரிமை வழங்க ஒப்புக் கொண்டது. இதன் பயனாக இந்தியாவின் பொறுப்பு ஓரளவு குறைந்து 6 இலட்சம் இந்திய வம்சாவழியினர் என்ற குறியீடு 5.06 இலட்சம் நபர்களாக உள்ளது. இதுவரை 4.59 இலட்சம் நபர்களைக் கொண்ட 1,15,487 குடும்பங்கள் (அதாவது 3.34 இலட்சம் இந்திய வம்சாவழியினரும் 1.25 இலட்சம் பேர் அவர்களது இயற்கையாக ஏற்பட்ட சந்ததியினரும்) இந்தியாவிற்கு வந்துள்ளனர். இன்னமும் 1.72 இலட்சம் இந்திய வம்சாவழியினர் அவர்களது இயற்கையான சந்ததிகளுடன் இந்தியாவுக்கு குடி பெயர வேண்டும்.

தாயகம் திரும்புவோர் இராமேஸ்ரம் வந்ததும் அவர்களுக்கு இலவச உணவு வழங்கப்படுகிறது. சுங்கத் துறை குடிபுகல் சட்டம் ஆகிய சோதனைகளுக்குப் பின் நகைகள் வீட்டுப் பொருட்கள் அல்லாமல் ரூ. 5,000-க்கு மேற்படாமல் இதர சொத்துக்களைக் கொண்டு வரும் குடும்பங்கள் மண்டபம் முகாமில் அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு பணக்கொடையும் 1 கிலோ அரிசி 0.57 பைசாவிற்கு மலிவு விலையிலும் நிரந்தர உதவி அளிக்கும் வரை கொடுக்கப்படுகிறது. ரூ. 10,000-க்கு குறைவாக சொத்துக்கள் கொண்டு வரும் தாயகம் திரும்புவோருக்கே துயர் துடைப்பு உதவிகள் வழங்கப்படுகின்றன.

<u>தாயகம் திரும்புவோருக்கு அளிக்கப்படும் நிவாரண உதவிகள்.</u>

<u>1. மலைத் தோட்ட திட்டங்கள் :</u>

நீலகிரி மாவட்டத்தில் தமிழக அரசுக்குச் சொந்தமான தமிழ் நாடு தேயிலைத் தோட்ட வாரியம் (டான் டீ) 2,413 ஹெக்டேர்



பரப்பளவில் தேயிலைத் தோட்டம் அமைத்து 4,652 தாயகம் திரும்பியோருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு ரப்பர் தோட்டங்களில் 285 தாயகம் திரும்புவோரை குடியமர்த்தியுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் வால்பாறை சின்கோனா தோட்டத்தில் 125 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

<u>2. விவசாயம் மற்றும் நிலக் காலனி குடியமைப்புத் திட்டங்கள் :</u>

நிலமற்ற, இரண்டுக்கும் குறைவாக உழைக்கும் திறன் கொண்ட நபர்கள் கொண்ட குடும்பங்கள் இத்திட்டங்களின் கீழ் குடியமர்த்தப்படுகின்றனர். ஒவ்வொரு குடும்பத்துக்கும் 3 ஏக்கர் புன்செய் நிலம் கொடுக்கப்படுகிறது. அரசு புறம்போக்கு நிலங்கள் இனாமாகத் தரப்படுகின்றன. விவசாயம் செய்யவும் கிணறு வெட்டவும், மாடுகள், உழவு கருவிகள், விதைகள் வாங்குவதற்கும் ரூ. 6,850 வரை கடன் தரப்படுகிறது. இதுவரை 2,161 குடும்பங்கள் இத்திட்டங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளன.

<u>3. தனியாரிடம் விவசாய நிலம் வாங்கி குடியமர்த்தும் திட்டம்..</u>

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோரில் சொந்த நிலம் இல்லாமலும், ஆனால் விவசாயத்தில் ஈடுபட விரும்புவோருக்கு ரூ. 5,000-க்கு குறைவாக சொத்து மதிப்புள்ள பொருட்கள் கொண்டு வரும் குடும்பங்களுக்கு தனியாரிடமிருந்து விவசாய நிலங்கள் வாங்கி உழவுத் தொழிலில் ஈடுபட கடன் வழங்கப்படுகிறது. ஒரு ஏக்கர் ரூ. 2,000 என்ற மதிப்பீட்டில் 3 ஏக்கருக்கு மேற்படாமல் வாங்க கடன் வழங்கப்படுகிறது. விவசாய நிலக்காலனித் திட்டங்களில் குடியமர்த்தும் குடும்பங்களுக்கு வழங்கப் படுவதைப்போலவே இவர்களுக்கும் விவசாயக் கடன், குடும்ப பராமரிப்புத் தொகை , வீட்டுவசதிக் கடன், தொழில் செய்ய கடன் போன்றவை வழங்கப்படுகின்றன.

தனி நபர் குடும்பங்கள் நீங்கலாக, முதன்மை மறுவாழ்வு உதவி பெறும் அனைத்து தாயகம் திரும்பும் குடும்பங்களுக்கும் வீட்டு வசதிக்காக நகர்ப்புறங்களில் ரூ. 10,000 மும் கிராமப் புறங்களில் ரூ. 6,000 என்ற அளவிலும் வீட்டுவசதிக் கடன் வழங்கப்படுகிறது. வருவாய்த்துறை கோட்ட ஆட்சியாளர்கள் அல்லது தனித்துணை ஆட்சியாளர்களால் இந்தக் கடன் பயன்படுத்தியமை சரிபார்த்து நான்கு தவணைகளில் வழங்கப்படுகிறது.

<u>4. சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள் மற்றும் தொழில் திட்டங்கள் :</u>

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்குடன் பால்பண்ணை அமைத்தல், விசை

சைக்கிள் ரிக்ஷா முதலிய சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத் திட்டத்தின்கீழ் வணிகக் கடனாக வழங்கப்படும் ரூ. 7,500-ம் மற்றும் வாணிபம் நடத்தும் இடத்திற்காக வழங்கப்படும் கடன் (நகர்ப்புறங்களில் ரூ. 2,500-ம் கிராமப்புறங்களில் ரூ. 1,000-ம்) ஆகியவற்றைக் கொண்டு திட்டங்கள் தீட்டப்பட்டு, இத்திட்டங்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுபோல் இதுவரை இத்திட்டங்களில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் விபரங்கள் பின்வருமாறு :—

| திட்டத்தின் பெயர். (1) | குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| **சேலம் மாவட்டம் :** | |
| 1 கைலாசபாளையம் பால்பண்ணைத் திட்டம் | 60 |
| 2 தம்மநாயக்கன்பட்டி பால்பண்ணைத் திட்டம். | 52 |
| 3 சிக்கம்பட்டி பால்பண்ணைத் திட்டம் | 44 |
| **காமராஜர் மாவட்டம் :** | |
| 4 சாத்தூர் பால்பண்ணைத் திட்டம் .. | 77 |
| **தஞ்சாவூர் மாவட்டம் :** | |
| 5 மாத்தூர் பால்பண்ணைத் திட்டம் .. | 25 |
| **பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் :** | |
| 6 குன்னக்குடி பால்பண்ணைத் திட்டம் .. | 20 |
| **சிதம்பரனார் மாவட்டம் :** | |
| 7 கோவில்பட்டி தீப்பெட்டி தொழிற்சாலையில் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு .. .. .. .. | 23 |
| **சென்னை நகரம் :** | |
| 8 விசை சைக்கிள் ரிக்ஷா திட்டம் .. | 50 |

மதுரை மாவட்டத்தில் 400 குடும்பங்களையும் திருச்சி மாவட்டம் கரூரில் 30 குடும்பங்களையும் விசை சைக்கிள் ரிக்ஷா திட்டத்தில் குடியமர்த்த மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



5. தொழில் திட்டங்கள் :

தமிழகத்தில் உள்ள பல்வேறு கூட்டுறவு நூற்பாலைகளில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தாயகம் திரும்புவோரைக் குடியமர்த்தும் பணி சிறந்த மறுவாழ்வுத் திட்டங்களில் ஒன்றாகும். இதுவரை பல்வேறு கூட்டுறவு நூற்பாலைகளில் 3,871 இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதற்காக கூட்டுறவு நூற்பாலையில் குடியமர்த்தப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஈடாக ரூ. 20,000 என்ற விகிதத்தில் பங்கு முதலீடு செய்ய மாநில அரசுக்கு மைய அரசு நேரடிக் கடன் வழங்குகின்றது. இவ்வாண்டில் கீழ்க்கண்ட கூட்டுறவு நூற்பாலைகளிலும், தமிழ்நாடு நெசவாலைக் கழகத்திலும் மொத்தம் 140 தாயகம் திரும்பிய குடும்பங்களை குடியமர்த்த ரூ. 28 இலட்சம் நேரடிக் கடனாக வழங்க மாநில அரசுக்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

| | |
|---|---|
| (i) ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலை. | ரூ. 10 இலட்சம் (50 தாயகம் திரும்பிய குடும்பங்கள்). |
| (ii) மிஸோரியர் கூட்டுறவு நூற்பாலை திருநகர், மதுரை. | ரூ. 10 இலட்சம் (50 தாயகம் திரும்பிய குடும்பங்கள்). |
| (iii) தமிழ்நாடு நெசவாலைக் கழகம், கோவை. | ரூ. 8 இலட்சம் (40 தாயகம் திரும்பிய குடும்பங்கள்). |

1987-88 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்.

1987-88 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோரைக் குடியமர்த்தக் கீழ்க்கண்ட புதிய திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

பால் பண்ணைத் திட்டம் :

1. கொண்டப்பநாயக்கன்பட்டி, சேலம் மாவட்டம்.
2. கோவில்பட்டி (மந்திதோப்பு கிராமம்), சிதம்பரனார் மாவட்டம்.
3. ஆண்டிப்பட்டி, சேலம் மாவட்டம்.
4. ஆலங்குடி, தஞ்சாவூர் மாவட்டம்.
5. வலங்கைமான், தஞ்சாவூர் மாவட்டம்.

[1987 மே 7

1987–88 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்—தொடர்ச்சி.]

பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டம் :

6. வடக்கு வள்ளியூர், சிதம்பரனார் மாவட்டம்.
7. கம்பனூர், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.
8. எடயப்பட்டி, சேலம் மாவட்டம்.

மற்ற திட்டங்கள் :

9. அம்பர் சர்க்கா திட்டம், திருச்செங்கோடு, சேலம் மாவட்டம்.
10. 13 நகராட்சிகளில் பங்க் கடைகள் வைத்தல்.
11. பால்பண்ணை மற்றும் கோழி வளர்ப்புத் திட்டம், தாழம்பூர் கிராமம், செங்கற்பட்டு மாவட்டம்.
12. பனைபொருள் திட்டங்கள், மானாமதுரை, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.
13. கொளச்சல் பனை பொருள் தொழில் திட்டம்.
14. விசை சைக்கிள் ரிக்ஷா திட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.
15. விசை சைக்கிள் ரிக்ஷா திட்டம், சேலம் மாவட்டம்.
16. கயிறு மற்றும் ஆட்டுப்பண்ணை, மேச்சேரி.
17. நேபாளி தறிதிட்டம், டி. கல்லுப்பட்டி, மதுரை.
18. ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர் தொழிற் கூட்டுறவு சொசைட்டி, சேலம்.
19. கூட்டுறவு நூற்பாலை, இராமநாதபுரம்.

சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோரை வணிகக் கடன் திட்டத்தை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்துடன் இணைத்து குடியமர்த்தும் திட்டம் :

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் குடும்பங்களில் பெரும்
பான்மையோர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். எனவே,
அவர்கள் தமிழ்நாட்டிலேயே குடியேற விரும்புகிறார்கள். பல
திட்டங்களில் வணிகக் கடன் திட்டம் தான் பெரிய திட்டமாகும்.
மொத்தம் இதுவரையில் 91,000 குடும்பங்களில் 75,650 குடும்பங்
களுக்கு வணிகக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை ஏற்பட்ட
அனுபவங்களிலிருந்து மிகுதியான குடும்பங்கள் வணிகத்தில்
பயிற்சியும், சரியான ஆலோசனையும் தொடர் நடவடிக்கையும்
இல்லாததால் வணிகத்தை சரியாக நடத்த இயலவில்லை எனத்
தெரிய வருகிறது. ஆகையால் இவர்களுக்கு தகுந்த முறையில்



1987 மே 7]

உதவி அளிப்பதற்காக வணிகக் கடனைக் கொண்டு செயல்படுத்தும் சுயவேலை வாய்ப்புத் திட்டங்களை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் தாயகம் திரும்பியவர்கள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானியம் பெற தகுதியானவர் ஆகிறார்கள். அதன்மூலம் ஊராட்சி ஒன்றிய கமிட்டியின் உதவிகளையும் பெற இயலும். இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 6,000 குடும்பங்களை குடியமர்த்த வாய்ப்பு உள்ளது. இது தொடர்பாக மறுவாழ்வுத் துறை இயக்குநரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

இந்திய அரசு, இந்திய வம்சாவழியினரை இனி இலங்கையிலிருந்து ஏற்றுக்கொள்வதென்றால் இலங்கையிலிருந்து வன்செயலில் பாதிக்கப்பட்டு இந்தியா வந்துள்ள அகதிகள் மீளவும் இலங்கைக்குத் திரும்பிய பிறகுதான் ஏற்றுக்கொள்ள இயலும் என முடிவெடுத்துள்ளது. இதுவரை 96,000 தாயகம் திரும்பிய குடும்பங்கள் தமிழ்நாட்டில் மலைத் தோட்டம், விவசாயம், தொழில் திட்டங்கள், சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள், கடன் வசதிகள் ஆகியவைகளில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் :

பர்மாவிலிருந்து தாயகம் திரும்புவோர் 1-6-1963 லிருந்து இந்தியா வரத் தொடங்கினர். இதுவரை 1,44,305 நபர்கள் இந்தியா வந்துள்ளனர். 50,215 குடும்பங்களுக்கு, வணிகக் கடன், வேலைவாய்ப்பு, நிலக்காலனித் திட்டத்தில் குடியமர்த்துதல் ஆகிய முதன்மை உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வியட்நாமிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் :

2,055 நபர்களைக் கொண்ட 501 குடும்பங்கள் வியட்நாமிலிருந்து 1975 முதல் 1981 வரை தாயகம் திரும்பியுள்ளனர். 416 குடும்பங்களுக்கு வணிகக் கடன் வழங்கி குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இலங்கை அகதிகள் :

31-1-1987 வரை 1,29,564 நபர்கள் இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு இந்தியா வந்துள்ளனர். இதில் 34,429 நபர்கள் ஆதரவற்றவர்களாக அகதிகள் முகாம்களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்பக் கட்டத்தில் இவர்கள் மண்டபம், கொட்டப்பட்டு முகாம்களில் அனுமதிக்கப்பட்டனர். இந்த முகாம்கள் பொதுவாக இலங்கையிலிருந்து ஒப்பந்தத்தின்படி இந்தியாவுக்குத் திரும்பும் தாயகம் திரும்புவோருக்குகாக ஏற்படுத்தப்பட்டவை.

ஆனால் மிக அதிக அளவில் அகதிகள் வராதல் இந்த முகாம் களில் உள்ள இடவசதி போதுமானதாக இல்லை என்பதால் இவர்கள் பல்வேறு மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட தற்காலிக முகாம்களுக்கு மாற்றப்பட்டனர். இவ்வாறு மொத்தம் 171 தற்காலிக முகாம்கள் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டன. மைய அரசு நிதி உதவியினால் அரசு 1986 ஆம் வருடம் மதுரை மாவட்டம் விளாங்குடியில் உள்ள 792 வீடுகளை அகதிகளைச் குடியமர்த்த தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து வாங்கியது. மேலும் 1,400 வீடுகள் மண்டபம் முகாமில் கட்டியதுடன், திருச்சி மாவட்டம் கொட்டப் பட்டு முகாமில் 100 வீடுகளும், சிதம்பரனார் மாவட்டம் மாப்பிள்ளை ஊரணியில் 100 வீடுகளும் கட்டப்பட்டன. இவை பூர்த்தியானவுடன் பல்வேறு சிறிய முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ள இலங்கை அகதிகள் இந்த நிரந்தர முகாமிற்கு மாற்றப்பட்டனர். தற்போது 69 அகதிகள் முகாம்களே, இராம நாதபுரம், திருச்சி, மதுரை, தென்னாற்காடு, செங்கல்பட்டு, தர்மபுரி, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், காம ராஜர், நெல்லை கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட் டங்களில் உள்ளன.

31-1-1987 வரை சுமார் 9,350 இலங்கை அகதிகள் முகாம் களிலிருந்து தன்னிச்சையாக வெளியேறி உள்ளனர். தற்போது சுமார் 25,000 நபர்கள்தான் அகதிகள் முகாம்களில் உள்ளனர் அகதிகள் முகாம்களில் அகதிகளுக்கு கீழ்க்கண்ட உதவிகள் வழங்கப்படுகின்றன :—

1. இலவச தங்குமிடம்.

2. மாதம் ஒன்றுக்கு குடும்பத் தலைவருக்கு ரூ. 110, மற்ற வயது வந்தவர்களுக்கு தலா ரூ. 82.50, முதல் குழந்தைக்கு ரூ. 55-ம், மற்ற குழந்தைகளுக்கு ரூ. 27.50-ம் பணக்கொடை வழங்கப்படுகிறது.

3. நாள் ஒன்றுக்கு வயது வந்தவர்களுக்கு தலா 400 கிராம் மற்றும் குழந்தைகளுக்கு தலா 200 கிராம் என்ற அளவில் அரிசி கிலோ ஒன்றுக்கு 57 பைசா என மலிவு விலையில் வழங்கப் படுகிறது.

4. ஒரு ஜதை துணிகள் ஒவ்வொரு நபருக்கும், மற்றும் சமைக்கும் பாத்திரங்கள், பாய், போர்வைகள் வழங்கப்படு கின்றன.

5. இத்துடன் மருத்துவ உதவி, சிறுவர்களுக்கு இலவசக் கல்வி, விடுமுறை காலப் பயிற்சி ஆகியவை இலவசமாக அளிக்கப் படுகின்றன. துணிகளும், பாயும் வருடத்திற்கு ஒரு முறையும், சமையல் பாத்திரங்களும், போர்வையும் இரண்டு வருடத்திற்கு ஒரு முறையும் வழங்கப்படுகின்றன.



## கொள்கை விளக்கக் குறிப்பு.

### மானியக் கோரிக்கை எண். 59—மாநில அரசு வழங்கும் கடன் களும், முன்பணங்களும்.

பல்வேறு நிறுவனங்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் கடன் கள் முன் பணங்கள் குறித்த நிதி ஒதுக்கீடுகள் கோரிக்கை 59-ல் சேர்க்கப்பட்டுள்ளன. பல்வேறு நோக்கங்களுக்காக நிதி உதவி அளிப்பதற்குரிய பொது கோட்பாடு பல்வேறு துறைகளுக்கான வருவாய் செலவு கோரிக்கைகளை வைக்கையில் விளக்கப்பட் டுள்ளது. இம்மானியக் கோரிக்கையில் செய்துள்ள முக்கிய நிதி ஒதுக்கீடுகளை மட்டும் இக்குறிப்பு எடுத்துக் காட்டுகிறது. பல்வேறு துறைகளும் தத்தம் பணிகளைப் பற்றிய முழு விவரத்தை யும் அளிக்கும்போது இந்த நிதி ஒதுக்கீடுகளைக் கணக்கில் கொண்டுள்ளன. துறை வாரியான செலவு விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

| வளர்ச்சித் துறை. | 1986-87 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 1986-87 திருத்த மதிப்பீடு. | 1987-88 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| வேளாண்மை, சிறு பாசனம், மண் வளப் பாதுகாப்பு-பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள். | 5,36.27 | 5,72.88 | 6,54.65 |
| மீனளம் .. .. | 8.92 | 8.92 | 8.42 |
| உணவுத் துறை .. | .. | 15,00.00 | |
| கூட்டுறவு .. .. | 18,08.35 | 18,58.44 | 2,62.01 |
| உணவு சேமிப்பு - கிடங்கு வசதி. | .. | .. | 11,38.54 |
| தொழில்கள் .. .. | 14,31.19 | 49,96.04 | 20,99.04 |
| வீட்டுவசதி .. .. | 9,49.28 | 9,45.57 | 9,20.89 |
| நகர்ப்பகுதி வளர்ச்சி .. | 12,18.02 | 16,15.05 | 19,38.02 |
| மருத்துவம் .. .. | 0.15 | 1.60 | 0.15 |

| வளர்ச்சித் துறை. (1) | 1986–87 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. (2) | 1986–87 திருத்த மதிப்பீடு. (3) | 1987–88 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல். | 36,90.08 | 35,27.82 | 45,23.56 |
| மின்சக்தி .. .. | 2,40,00.00 | 2,40,00.00 | 2,00,00.01 |
| பொதுக் கல்வி .. | 25.02 | 25.01 | 25.00 |
| தொழில் நுட்பக் கல்வி .. | 3.92 | 6.28 | 3.08 |
| ஆதி திராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்பட்ட வகுப்பினர் நலன். | 61.58 | 63.21 | 59.08 |
| மறுவாழ்வுத் திட்டங்கள்.. | 6,07.31 | 3,19.79 | 4,92.91 |
| சாலைகளும், பாலங்களும். | 1,25.01 | 1,35.50 | 1,45.02 |
| சாலைப் போக்குவரத்து-சுற்றுலா. | 0.18 | 2,00.16 | 0.18 |
| அரசுப் பணியாளர்களுக்கு வழங்கும் கடன்கள் | 49,92.60 | 52,45.53 | 50,35.89 |
| ஏனைய கடன்கள் .. | 6,75.04 | 15,61.62 | 7,45.49 |
| மொத்தம் .. | 4,01,22.92 | 4,65,83.42 | 3,79,61.94 |

2. இந்தக் கோரிக்கையின் கீழ், 1987-88 ஆம் ஆண்டிற்காகச் செய்யும் நிதி ஒதுக்கீட்டில் பெரும்பகுதி, மின்சார வாரியத்தின் மின்விசைத் திட்டங்களுக்கு அளிக்கும் நிதி உதவியாகும். இந் நோக்கத்திற்காக ரூ. 200.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

3. பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக 1987-88 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 45.24 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. முக்கியமான நிதி ஒதுக்கீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—



| | 1987-88 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| **சென்னை மாநகராட்சி—** | |
| மழைநீர் வடிகால் திட்டம் ஒருங்கிணைந்த நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம். | 2,50.00 |
| **நகராட்சிகள்—** | |
| வடிகால் திட்டங்கள் .. .. .. | 68.00 |
| குடிநீர் வழங்கு திட்டங்கள் .. .. | 16,33.28 |
| கோயம்புத்தூர் நகராட்சிக்கு சிறுவாணி குடிநீர் வழங்கு திட்டம். | 0.01 (அடையாளம்) |
| **தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்—** | |
| வடிகால் திட்டங்களுக்கான ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் வழங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுத்த உள்ளாட்சி மன்றங்களுக்கு கடன்கள் வழங்கல். | 95.54 |
| குடிநீர் வழங்கு திட்டங்களுக்காக ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் வழங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்த உள்ளாட்சி மன்றங்களுக்கு கடன்கள் வழங்கல். | 7,00.00 |
| வீராணம் திட்டம் குறித்த கடனுக்குரிய வட்டி செலுத்தக் கடன்கள். | 0.01 (அடையாள ஒதுக்கீடு). |
| **சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கு—கழிவு நீரகற்று வாரியம்—** | |
| கழிவு நீரகற்று திட்டங்கள் .. .. | 4,15.12 |
| கூடுதலாக குடிநீர் வழங்கு திட்டங்கள் .. | 11,58.87 |
| சென்னை குடிநீர் வழங்கல் செயல் திட்டம் .. | 1,00.00 |

உள்ளாட்சி மன்றங்களுக்கு குடிநீர் வழங்கு திட்டங்களின்
செலவில் (33 1/3 சதவீதம்) மூன்றில் ஒரு பகுதிச் செலவை,
குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்று திட்டங்கள் குறித்து தனது கடன்
உதவியாகத் தமிழ்நாடு அரசு கொடுப்பதற்கு இத்தொகை ஒதுக்
கப்பட்டுள்ளது. ஏனைய மூன்றில் இரு பகுதித் தொகை
(66 2/3 சதவீதம்) இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து
கடனுதவியாக தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்தால் பெற்றுக்
கொள்ளப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டிலிருந்து பேரூராட்சி
களின் குடிநீர் வழங்கு திட்டங்களுக்குக் கிடைக்கும் நிதி உதவி,
50 சதவீதம் அரசு மானியமாகவும், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக்
கழகத்திடமிருந்து 50 சதவீதம் கடனுதவியாகவும் கிடைக்
கிறது; இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திற்குத் திருப்பிக்
கொடுக்க வேண்டிய கடன் தொகையை முதற்கண் மாநில அரசு
கொடுத்துவிட்டு பின்னர் உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து வசூ
லித்துக் கொள்கிறது. 1987-88 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர்
நகராட்சி குடிநீர் வழங்கல் திட்டத்திற்காக ரூ. 91.75 இலட்சம்
கடன் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

4. 1987-88 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் கழிவு நீர
கற்று திட்டங்களுக்காக 8,28.68 இலட்சம் ரூபாயும், குடிநீர்
வழங்கு திட்டங்களுக்காக 36,94.88 இலட்சம் ரூபாயும் சேர்க்
கப்பட்டுள்ளது. மேற்சொன்ன திட்டங்களை தற்போது தமிழ்
நாடு குடிநீர்-வடிகால் வாரியமும், சென்னைப் பெருநகர் குடிநீர்
வழங்கு-கழிவு நீரகற்று வாரியமும் செயற்படுத்தி வருகின்றன.
சென்னைக் குடிநீர் வழங்கு செயல் திட்டத்திற்கான 1,00.00
இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கமும் இதில் அடங்கும்.

5. தொழில் துறையில் கடன் கொடுக்க 20,14.04 இலட்சம்
ரூபாய் மொத்த நிதி ஒதுக்கம் இந்த மானியக் கோரிக்கையில்
சேர்க்கப்பட்டுள்ளது. இத்துறையில் முக்கிய நிதி ஒதுக்கீடுகள்
பற்றிய விவரம் பின்வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் (சிப்காட் நிறுவனம்). | 13,75.00 |
| தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் .. | 4,50.00 |

6. வீட்டுவசதி, நகர்ப்பகுதி வளர்ச்சிக்காக, 1987-88
வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 28,58.91 இலட்சம் ரூபாய்
ஒதுக்கப்பட்டுள்ளது. வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ்
வீடுகள் கட்டுவதற்கு அரசுப் பணியாளர்களுக்கு ரூ. 8,00 இலட்
சம் ரூபாயும், குறைந்த வருமானத் தொகுதியின் வீட்டு வசதித்
திட்டத்திற்காக 1,00 இலட்சம் ரூபாயும் கடனாக வழங்க நிதி
ஒதுக்கப்பட்டுள்ளது.



7. அரசுப் பணியாளர்களுக்குப் பல்வேறு வகை முன்பணங்
கள் வழங்க வரவு-செலவுத் திட்டத்தில் 50,35.89 இலட்சம்
ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் பெரும் பகுதி, அதாவது
ரூ. 25,00 இலட்சம் அரசுப் பணியாளர்களுக்குப் பண்டிகை
முன்பணம் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுப் பணி
யாளர்களுக்கு வீடுகள் கட்ட முன் பணம் வழங்க 1987-88 வரவு-
செலவுத் திட்டத்தில் 13,10.00 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்
பட்டுள்ளது. இது தவிர 1987-88 வரவு செலவுத் திட்ட
மதிப்பீட்டில் காவலருக்கு வீடு கட்டுவதற்காக ரூ. 1,00.00
இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

8. மானிய உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரி
யர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்களுக்கும் வழங்
கும் பல்வகை முன்பணங்களுக்காக 4,14.50 இலட்சம் ரூபாய்
நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1987-88 வரவு-செலவுத்
திட்ட மதிப்பீட்டில் நகராட்சிப் பணியாளர்களுக்கு வீடுகள்
கட்டுவதற்காக ரூ. 50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்
ளது.

9. 1987-88 ஆம் ஆண்டில் மொத்தம் 3,79.62 கோடி ரூபாய்
வரை கடன் வழங்கப்படலாமென்று எதிர்பார்க்கையில் கடந்த
ஆண்டுகளில் கொடுத்த கடன் தொகையில் 90.59 கோடி ரூபாய்
வசூலாகுமென்றும் மதிப்பிடப்படுகிறது. முக்கிய கடன் ஒதுக்
கீடுகளின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு.

1987-88 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.

(ரூபாய் இலட்சத்தில்.)

| | | |
|---|---|---|
| 1. | **வேளாண்மை—** | |
| | மண்வளப் பாதுகாப்பு .. .. | 3,97.69 |
| 2. | **பால் பண்ணை—** | |
| | கூட்டுறவு நிறுவனங்களுக்கும், வங்கிகளுக்கும் கடன்கள். | 16.5 |
| 3. | **தொழில்கள்—** | |
| | தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் (சிப்காட்). | 13,75.00 |
| | மாவட்டத் தொழில் மையங்கள் .. | 1,22.00 |
| | தனியார் துறையில் சிறுதொழில் தொடங்குவதற்கு உதவியாகக் கடன்கள். | 10.00 |
| | தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் .. | 4,50.00 |
| | தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (எல்காட்) | 50.00 |

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| **4. கைத்தறி—** | |
| நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி. | 15.00 |
| கைத்தறிகளை நவீனப்படுத்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள். | 14.00 |
| நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள். | 39.70 |
| கைத்தறித் துணிகளை வாங்க அரசுப் பணியாளர்களுக்கு கொடுக்கப்படும் முன் பணங்கள். | 5,00.00 |
| **5. கதர்—** | |
| கடன் அடிப்படையில் கதர்த் துணிகளை வாங்க அரசுப் பணியாளர்களுக்கு முன் பணங்கள். | 1,50.00 |
| **6. வீட்டு வசதி-நகர்ப்பகுதி வளர்ச்சி—** | |
| வீடு கட்ட அரசுப் பணியாளர்களுக்குக் கடன்கள். | 13,10.00 |
| தமிழ்நாடு அரசுப் பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டங்கள். | 8,00.00 |
| மொத்தமாக நில எடுப்பும், நில அபிவிருத்தியும். | 1,50.00 |
| குடிசை மாற்றுத் திட்டங்கள் .. .. | 20.00 |
| துணை நகரங்கள், பிற நகர்கள் ஏற்படுத்த, சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்திற்குக் கடன்கள். | 2,50.00 |
| கோயம்பேடு அங்காடித் தொகுதி அமைக்க சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்திற்குக் கடன்கள். | 4,25.00 |
| கிராம வீட்டு வசதிக்காகக் கடன்கள் .. | 75.00 |



| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| **7. மின் சக்தி—** | |
| தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ஏனைய கடன்கள். | 2,00,00.01 |
| **8. கல்வி, கலை, பண்பாடு—** | |
| தேசிய கடன்—படிப்புதவித் திட்டங்கள் .. | 25.00 |
| நிதியுதவி பெறும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களுக்குக் கடன்கள். | 9.01 |
| வீடுகட்ட முன்பணம் குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்குக் கடன்கள். | 15.00 |
| **9. ஆதி திராவிடர் நலனும், பிற்பட்ட வகுப்பினர் நலனும், ஆதி திராவிடர் பழங்குடியினர் நலன்—** | |
| சிறுதொழில் நடத்த வணிகக் கடன்கள் .. | 3.50 |
| தொழில் படிப்பு பயில அளிக்கப்படும் கடன்கள் | 50.00 |
| **10. மறுவாழ்வுத் திட்டங்கள்—** | |
| பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோர் வீட்டு வசதிக் கடன்கள். | 1.35 |
| ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியோர்— | |
| தொழில் கடன்கள் .. .. .. | 1,00.00 |
| வீட்டு வசதிக் கடன்கள் .. .. | 3,80.00 |
| **11. உள்ளாட்சி மன்றங்கள் (குடிநீர் வழங்கல்-வடிகால் திட்டங்கள் அல்லாத ஏனைய திட்டங்கள் நகராட்சிகள்—** | |
| நகராட்சிச் சாலைகள் .. .. | 30.00 |
| சாலைகள் போடுதலும், பாலங்கள் கட்டுதலும் | 25.00 |

(ரூபாய் இலட்சத்தில்.)

12. கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பல்வகைக் கடன்கள்—

| | |
|---|---|
| கிடங்குகள் கட்ட, கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள். | 1.50 |
| வேளாண்மைக் கடன் சமன் நிதிக்கு மேலும் நிதி சேர்க்க தமிழ்நாடு மாநில நிளவள வங்கிக்கு கடன்கள். | 0.01 |

13. அரசுப் பணியாளர்களுக்கு வழங்கும் கடன்கள்—

| | |
|---|---|
| மோட்டார் வண்டிகள் வாங்கக் கடன்கள் .. | 1,75.00 |
| ஏனைய வண்டிகள் வாங்கக் கடன்கள் | 1,00.00 |
| பண்டிகை முன்பணங்கள் .. .. | 25,00.00 |
| திருமணக் கடன்கள் .. .. | 85.00 |
| கல்லூரிகள்/பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் உயர் கல்வி பயிலக் கடன்கள். | 72.00 |
| வெப்ப (கம்பளி) ஆடைகளை வாங்கக் கடன்கள். | 40.00 |

14. ஏனைய கடன்கள்—

| | |
|---|---|
| தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குக் கடன்கள். | 0.01 |

600 008
136532
D
Y211,31 N87
N87. 43-1 42